உ

# திருக்கேதீச்சரம்

## இலக்கியப் பெட்டகம்

தொகுப்பு

கலாநிதி ஆறு. திருமுருகன்



இலங்கைத்தமிழியற் கழகம்

இலங்கைத்தமிழியற் கழகம்

உ

சிவமயம்

# திருக்கேதீச்சரம்
## இலக்கியப் பெட்டகம்

தொகுப்பு

**கலாநிதி ஆறு. திருமுருகன்**

இலங்கைத்தமிழியற் கழகம்

2023

இலங்கைத்தமிழியற் கழக வெளியீடு இல - 04

திருக்கேதீச்சரம் இலக்கியப் பெட்டகம் / இலங்கைத்தமிழியற் கழகம் / 2023 /
தொகுப்பு: கலாநிதி ஆறு. திருமுருகன் / யாழ்ப்பாணம் / ISBN: 978-624-6211-03-5 /
பக்கம்: xii+490/ அச்சுப்பதிப்பு: மிக்கி பிறிண்டிங் ஸ்பெசலிஸ்ற், பலாலி வீதி, திருநெல்வேலி.
விலை: 2000/=

Tirukkēcīccaram Ilakkiyap peṭṭakam / Socity of Sri Lankan Tamilology / 2023/
Compiled by: Dr.Aru.Thirumurugan / Jaffna / ISBN: 978-624-6211-03-5 /
Pages:xii+490 / Printed by: Mickey Printing Specialist, Palaly Road, Thirunelvely,
Prize:2000/=

# சமர்ப்பணம்



திருக்கேதீஸ்வர கருங்கற் திருப்பணியை நிறைவேற்றுவதற்கு
தன்னலம் கருதாது பணியாற்றிய பெருந்தகை
அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வளர்ச்சியில்
அயராது தொண்டாற்றிய திருத்தொண்டன்
அறநெறிக்காவலர்

**அமரர் கந்தையா நீலகண்டன் (சட்டத்தரணி)**

(முன்னாள் தலைவர், திருக்கேதீஸ்வரத் திருப்பணிச்சபை)
(முன்னாள் தலைவர், அகில இலங்கை இந்துமாமன்றம்)
அவர்களை

**நீள நினைந்து**
**இந்நூலை காணிக்கை செய்கிறோம்**

# பொருளடக்கம்


தொகுப்புரை v

வெளியீட்டுரை viii

*1) திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த திருக்கேதீச்சரத் திருப்பதிகம். (உரைகளோடு) **01***

*2) சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த திருக்கேதீச்சரத் திருப்பதிகம் (உரைகளோடு) **18***

*3) அப்பர் சுவாமிகள் தேவாரத்தில் திருக்கேதீச்சரம் **28***

*4) திருவாசகத்தில் திருக்கேதீச்சரம் **29***

*5) திருத்தொண்டர் புராணத்தில் திருக்கேதீச்சரம் **29***

*6) திருக்கேதீஸ்வரர் பதிகம் **30***

– க. சோமசுந்தரப்புலவர்

*7) ஸ்ரீ கேதீச்சுவர க்ஷேத்திர வைபவமும் தமிழ் மொழிபெயர்ப்பும் **35***

*8)* திருக்கேதீச்சரநாதர் கிள்ளைவிடு தூது *70*

– சி.இ. சதாசிவம்பிள்ளை

*9)* திருக்கேதீச்சரப் புராணம் *80*

– பண்டிதர் ச. இராமச்சந்திரன்

*10)* திருக்கேதீச்சர நாதன் ஊஞ்சல் *104*

– புலவர் த.குமாரசுவாமிப்பிள்ளை

*11)* கேதீசநாத ஸூப்ரபாதம் *109*

– தி. கி. சீதாராமசாஸ்திரிகள்

*12)* திருக்கேதீச்சரப்புராணம் *121*

– சிவஸ்ரீ ச. கு. வைத்தீசுவரக் குருக்கள்

*13)* திருக்கேதீச்சரத்துக் கௌரிநாயகி பிள்ளைத்தமிழ் *157*

– சி. இ. சதாசிவம்பிள்ளை

*14)* திருக்கேதீச்சரநாதர் வண்டுவிடு தூது *208*

– வித்துவான் சி. ஆறுமுகம்

*15)* திருக்கேதீச்சர மான்மியம் : புராதன காண்டம் *224*

– பண்டிதர் மு. கந்தையா

*16)* திருக்கேதீச்சர மான்மியம் : பொற்பொளிர் காண்டம் *338*

– பண்டிதர் மு. கந்தையா

*17)* திருக்கேதீச்சரநாதன் பேரில் தோத்திரப் பாமாலை *445*

– பெ.சின்னப்பு ஆச்சாமி

*18)* திருக்கேதீஸ்வரக் குறவஞ்சி நாடகம் *455*

– பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணிஜயர்

*19)* திருக்கேதீச்சரம் திருப்பள்ளியெழுச்சி *482*

– சோ. நடராஜன்

*20)* திருக்கேதீச்சரநாதர் தோத்திரம் *485*

– சோ. நடராஜன்

*21)* திருக்கேதீஸ்வர கௌரி அம்மை தோத்திரம் *486*

– க. இராமச்சந்திரன்

*22)* திருக்கேதீச்சரத் தோத்திரம் *487*

– க. இராமச்சந்திரன்

# தொகுப்புரை

தமிழில் எழுந்த மரபுவழி இலக்கியங்களுள் பெரும்பாலானவை சமயச்சார்பானவை சிற்றிலக்கியங்கள், புராணங்கள், காவியங்கள், கீர்த்தனங்கள் என்று பலதரப்பட்டனவாக அவை காணப்படுகின்றன. இவை சமயச்சார்பு உடையனவாயினும் சமய நோக்கு ஒன்றின் அடிப்படையில் மாத்திரம் பேணத்தக்கன அல்ல. தமிழ் மொழியின் வளர்ச்சி, இலக்கியப் போக்கு, பண்பாடு, சமுதாய வரலாறு என்று பன்முகநோக்குகளில் இவை பயன்கொள்ளத்தக்கன.

தமிழ் சமுதாயத்தின் பல்வேறு காலகட்டத்து இருப்பையும், அது காலந்தோறும் பெற்றுவந்த மாற்றங்களையும் அறிவதற்கும் அவற்றை வரலாறாக வரைவதற்கும் இத்தகு இலக்கியங்கள் சான்றாதாரங்களாகின்றன. எனினும் துரதிர்ஷ்டவசமாக அவற்றுட் பெரும்பாலானவற்றை நாம் இழந்து விட்டோம். அன்னியர் அழித்தவை போக நம் அலட்சியத்தால் அழிந்தவை பல. இனிமேலும் அவ்வாறான தவறுகளுக்கு நாம் காரணமாய் இருந்து விடலாகாது. எதுவாக இருந்த போதிலும் எத்தரத்ததாக இருந்த போதிலும் அவையெல்லாம் எம்மாற் பேணத்தக்கனவே. இன்றைக்குச்

சாதாரணமான ஒன்றாகத் தெரிவது, எதிர்காலத்தில் கிடைத்ததற்கரிய திரவியமாகத் தென்படக்கூடும்.

ஈழத்தின் தொன்மை வாய்ந்த சிவத்தலங்களுள் ஒன்றாக விளங்கும் திருக்கேதீச்சரம் தொடர்பில் எழுந்த இலக்கியங்களாக கைக்கு எட்டியவற்றையெல்லாம் அத்தகைய நோக்குடனேயே தொகுக்க முயன்றேன். அதன் பலனாகவே இந்த 'திருக்கேதீச்சர இலக்கியப் பெட்டகம்' உருவாகியது.

ஈழத்து இலக்கியங்கள் போலவே ஈழம் தொடர்பான கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயங்கள், ஓலைச்சுவடிகள், புழங்கு பொருட்கள் முதலான தொல்பொருள்களுள்ளும் கணிசமானவை அழிந்தும் தொலைந்தும் போயின. அண்மைக்காலத்து ஆராய்ச்சி முயற்சிகள் மூலம் கிடைத்த இவ்வாறான தொல்பொருட்களுள்ளும் சில மேலதிக ஆய்வுகளுக்கு என்று வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு, இருந்த இடம் தெரியாதவாறு மாயமாகிவிட்டன. முறையாக திட்டமிடப்பட்ட நிறுவனங்கள் இல்லாமையும் இருக்கும் நிறுவனங்களின் செயல்திறன் இன்மையும் காரணமாகவே இத்தகு அனர்த்தங்கள் நிகழ்ந்தேறின. இலங்கையின் வடக்கு, கிழக்கு பிராந்தியங்களில் முழுமையான நான்கு பல்கலைக்கழகங்கள் உள்ளன. அவை அமைந்த பிரதேசத்து மண்ணையும் அதிலே வேர் பதித்த மக்களையும் பற்றிய நெறிமுறையான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியது அப்பல்கலைக்கழகங்களின் கடமை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகத்துக்கு என்று தனிப்பீடம் நிறுவப்பட்டுள்ளது. தமிழ்த்துறை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழியாக வருகின்ற பணத்துக்கு அப்பால், சமூக உணர்வு மிக்க பெருமக்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட பெருந்தொகைப் பணத்தைப் பெற்று, பொருளாதார ரீதியில் மிகுந்த வளத்தோடு உள்ளது. மறுபுறம் இப்பல்கலைக்கழகம், பீடங்கள், துறைகள் சமுதாய நோக்கோடு ஆற்ற வேண்டிய கடமைகள் பலவாக விரிந்து கிடக்கின்றன.

இத்தகு சூழ்நிலையில் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் இயன்றவரையில் முயன்று, திருக்கேதீச்சரம் தொடர்பாக எழுந்த

*இலக்கியங்கள் திரட்டப்பட்டு ஒரு நூலாக வெளிப்படுத்தப்படுகின்றன. தமிழில் எழுந்தவற்றோடு சமஸ்கிருத மொழியில் அமைந்த சில இலக்கியங்களும் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. திருக்கேதீச்சரத் திருப்பதிகங்களுக்கு வேறுவேறு அறிஞர்கள் எழுதிய உரைகளும் இப்பெட்டகத்துள் அடங்குகின்றன.*

*இந்த ஆவணப்படுத்தல் முயற்சிக்கு அருந்துணையாய் அமைந்தோர் பலர். இலக்கியங்களைத் தேடியெடுப்பதிலும் தொகுப்பதிலும் நூலாக்கப் பணியிலும் சம்பந்தப்பட்டவர்களுக்கு இடையில் தொடர்பாடலை மேற்கொள்வதிலும் காத்திரமான பங்களிப்பினை நல்கியவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் தகவல் உதவியாளராக கடமை ஆற்றுகின்ற திரு.இ.தனஞ்சயன் அவர்கள், பிரதிகளை ஒப்புநோக்கி நூல் செவ்விதாக அமைய உதவியவர்கள் திரு பா. பாலமுரளி (ஆசிரியர்), பா. மகாலிங்கசிவம் (முதன்மை ஆசிரியர்), திருமதி கு.விஜயரகுநாதன் (இளைப்பாறிய அதிபர்) ஆகியோர். திருக்கேதீச்சர ஆவணப் பெட்டகம் போலவே இந்த இலக்கியப் பெட்டகத்தையும் இலங்கைத்தமிழியற் கழகமே வெளியிடுகின்றது. அந்த அமைப்பின் தலைவரும் தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளருமான கலாநிதி க. இரகுபரன் அவர்கள், நூலைச் செவ்விய முறையில் அச்சேற்றித் தந்த மிக்கி அச்சகத்தார் அனைவருக்கும் நன்றி. எல்லாவற்றுக்கும் மேலாக இப்பெட்டகத்தை நன்கு பயன்படுத்தவும் எதிர்காலத்தில் அதை மேலும் வளப்படுத்தவும் உள்ள தமிழ் ஆர்வலர் அனைவருக்கும் நன்றி!*

246/4A, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

**கலாநிதி ஆறு. திருமுருகன்.**
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.
உப தலைவர், திருக்கேதீச்சர திருப்பணிச் சபை.
தலைவர், சிவபூமி அறக்கட்டளை, இலங்கை.

# வெளியீட்டுரை

திருக்கோவில்களின் சிறப்பு, அவ்வவற்றின் மூர்த்தி தல தீர்த்த விசேடங்களில் மட்டும் அல்லாது, அவற்றால் உண்டாகிய கீர்த்தியிலும் தங்கியுள்ளது. திருக்கோயில்களின் கீர்த்தி, அக்கோவில்களைப் பேசுபொருளாக கொண்டெழுந்த இலக்கியங்களூடாகவே பெரிதும் வெளிப்படுகிறது.

சைவசமயம் சார்ந்தனவாய் எத்தனையோ திருக்கோவில்கள் இருப்பினும், தேவார முதலிகளால் திருப்பதிகம் பாடிச் சிறப்பிக்கப்பட்ட கோவில்களுக்கு தென்னிந்திய சைவ மரபில் தனியான முக்கியத்துவம் உண்டு. அத்திருக்கோயில்கள் 'பாடல் பெற்ற தலங்கள்' என்று பெருமைப்படுத்தப்படுகின்றன. வைணவ மரபிலும் ஆழ்வார்களால் திருப்பாசுரம் பாடிச் சிறப்பிக்கப் பெற்ற தலங்கள் 'மங்களா சாசனம் பெற்ற தலங்கள்' என்று மதிக்கப்படுகின்றன.

தேவார முதலிகள் திருப்பதிகம் பாடிப் பரவிய சைவத் திருத்தலங்கள், வடக்கே இமாசலம் முதல் தெற்கே இலங்கை வரையில் பரவியுள்ளன. எனினும் 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுக'த்துள்ளேயே அவற்றுள் பெரும்பாலானவை விரவியுள்ளன. இலங்கையைப் பொறுத்தவரையில் திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் என்னும் இரண்டுமே அத்தகு சிறப்பை பெற்றவை. அவற்றுள் திருக்கேதீச்சரம் திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய இருவராலும் பாடப்பெற்ற சிறப்பினை உடையது. கி.பி ஏழாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் திருக்கேதீச்சரத்தின் கீர்த்தி கடல் கடந்து பரவியிருந்தமை அப்பதிகங்களால் புலனாகிறது. பன்னிரண்டாம் நூற்றாண்டினரான சேக்கிழாரும் ஈழத்துத் திருத்தலங்களான இந்த இரண்டினையும் மறவாது குறித்துச் சென்றார்.

ஈழத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி நிலவிய காலப்பகுதியில் எழுந்த இலக்கியங்களுள் கணிசமானவை திருக்கோணேச்சரம் தொடர்பானவையாக கிடைக்கப்பெறுகின்றன. பதினைந்தாம் நூற்றாண்டு காலப்பகுதியில் தமிழ்நாட்டில் வாழ்ந்தவரான அருணகிரிநாதர் கதிர்காம யாத்திரை செய்த போது, வழியிலே திருக்கோணேச்சரத்தைத் தரிசித்துப் பாடியவையாகக் கொள்ளப்பெறும் திருப்புகழ்ப் பாக்களும் கிடைக்கப் பெறுகின்றன. ஆனால் திருக்கேதீச்சரத்தை பொறுத்தவரையில் அக்காலப்பகுதிகளில் எழுந்த இலக்கியங்களாகக் கொள்ளத் தக்கன என்று எவையும் இல்லை என்றாகிவிட்டது.

திருகோணேச்சரம் தொடர்பில் திருகோணமலைப் பிராந்தியங்களில் சோழப் பேரரசர் காலத்தில் பெருந்தொகையான சிலாசாசனங்கள் கிடைக்கப் பெறுகின்றன. திருக்கேதீச்சரம் தொடர்பில் அத்தகைய சிவாசாசனங்கள் மிகச் சிலவே கிடைத்தன. அவையும் கிலமடைந்த நிலையிலேயே கிடைத்தன. திருக்கேதீச்சரம் அமையப்பெற்ற மன்னார்ப்

*பிராந்தியம் கருங்கற்களுக்கு வாய்ப்பற்ற மணற்பாங்கான நிலவமைப்பைக் கொண்டதாக விளங்குவது அதற்கான முக்கிய காரணமாகலாம். அதற்கு மேலாக, அந்நியர் ஆட்சிக் காலத்தில் சமய ரீதியிலான அதிக முரண்பாடுகளையும் அழிவுகளையும் எதிர்கொண்டதும் அப்பிராந்தியமே. திருக்கேதீச்சரம் தொடர்பான பழைய இலக்கியங்களும் அத்தகைய அழிவை எதிர்கொண்டன போலும்.*

*திருக்கேதீச்சரம் தொடர்பில் தேவாரப் பதிகங்கள், திருவாசகம் நீங்கலாக இன்று கிடைக்கின்ற இலக்கியங்கள் பிற்பட்ட காலத்தனவே. திருக்கேதீச்சர மீள் கண்டுபிடிப்பின் பின் எழுந்தனவே.*

*தமிழ்நாட்டில் சோழப்பெருமன்னர் காலத்தில் நம்பியாண்டார் நம்பிகளால் மேற்கொள்ளப்பட்ட பேரெடுப்பிலான ஆவணப்படுத்தற்பணி காரணமாகவே தேவாரத் திருப்பதிகங்கள் தப்பிப் பிழைத்தன. ஏனைய இலக்கியங்களையும் அழிவிலிருந்து காப்பாற்றுவதாயின் ஆவணப்படுத்தற் பணி தொடர வேண்டும். அப்பணி தலைக்கொண்ட கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் ஏலவே 'திருக்கேதீச்சரஆவணப் பெட்டகம்' தந்தார். இப்போது 'திருக்கேதீச்சரம் இலக்கியப் பெட்டகம்' தருகிறார். உத்தர நம்பியாண்டராக அவர் தொகுத்த இந்த நூலை வெளியிடுவதில் இலங்கைத்தமிழியற் கழகம் பெருமகிழ்வெய்துகிறது. இப்பணி இலங்கைத் தமிழர் வரலாறு விளக்கமுற உதவுவதாக!*

**கலாநிதி க. இரகுபரன்,**
தலைவர்,
இலங்கைத்தமிழியற் கழகம்.

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

## அருளிச்செய்த

# திருக்கேதீச்சரத் தேவாரத் திருப்பதிகம்

## வித்துவ சிரோமணி ந.ச.பொன்னம்பலப்பிள்ளை, காஞ்சிபுரம் க. வச்சிரவேலு முதலியார், வித்துவான் ந. சுப்பையாபிள்ளை ஆகியோர் எழுதிய உரைகளுடன்

விருது குன்றமா மேருவில் நாணர வாஅனல் எரிஅம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே. 1

**ந.ச.பொன்னம்பலம்பிள்ளை உரை:**

*(இ-ள்) திரிபுரத்திலுள்ளோர்கள் தாங்கொண்ட வெற்றி கெட மகாமேருவில்லாகவும், சேக்ஷன் நாணாகவுங் கொண்டு சுடுகின்ற அக்னியாகிய அம்பினாலே போர்செய்து அவற்றை அழித்த சிவபெருமான் விரும்பி வீற்றிருக்கும் இடமாக என் நாளும் நினைக்கப்படுகின்ற ஊராகிய முழங்குகின்ற கடல் சூழ்ந்த வாசனை கமழுஞ் சோலை செறிந்த மாதோட்டத்திலே எவரும் மதிக்கும்படி உள்ள திருக்கேதீச்சரமென்னும் தலத்தை வணங்க, அங்ஙனம் வணங்கினோரைத் தீவினைகள் சேரா. எ-று.*

**க.வச்சிரவேலு முதலியார் உரை:**

*(இதன் பொருள்): விருது குன்ற - (திரிபுரத்து அசுரர்களுடைய) வெற்றி கெடும்படி; மாமேருவில் அரவு நாண் ஆ(க) அனல் எரி அம்பா(க) பொருது மூவெயில் செற்றவன் - பெரிய மேருமலையை வில்லாகவும், ஆதிசேடனை நாணாகவும், சுடும் நெருப்பை அம்பின் முனையாகவும் கொண்டு போர் செய்து (பறந்து திரியவல்ல) முப்புரங்களையும் நீறாகும்படி அழித்தருளிய சிவபெருமான் பற்றி நின்று உறைபதி- இடமாகக் கொண்டு என்றும் உறைகின்ற தலமும் எந்நாளும் கருதுகின்ற ஊர் கனைகடல் கடிகமழ் பொழில் அணி மாதோட்டம் - (போகம் வேண்டுவோர்) நாடோறும் நினைக்கின்ற ஊருமாகிய ஒலிக்கும் கடல் சூழ்ந்த நறுமணம் பொருந்திய சோலைகள் அழகைச் செய்கின்ற மாதோட்டத்தில் உள்ள; கருத நின்ற கேதீச்சரம் - (வீடுபேற்றை விரும்புவோர் ) எண்ணும்படி*

நிலைத்துள்ள திருக்கேதீச்சரத்தைக் கைதொழக் கடுவினை அடையாவே - கைகூப்பித் தொழுதால் (அங்ஙனம் தொழுவாரை) அடை தற்குரிய கொடிய வினைகள் காரியப்பட்டு வருத்த மாட்டா என்பது நிச்சயம் என்றவாறு.

ஆகையால், யாம் கைகூப்பித் தொழுவோமாக' என்பது இசையெச்சத்தால் வருவித்துரைக்க நின்றது.

**ந.சுப்பையாபிள்ளை உரை:**

இறைவன் உறையும் பதியும் மக்கள் எந்நாளும் கருதுகின்ற ஊரும் ஆகிய மாதோட்டம் என்க. மாதோட்டம் என்பது ஊரின் பெயர்: சோலைகளின் மிகுதிபற்றி வந்த பெயர் எனப் பொருத்தம். மகாதுவட்டாபுரம் என்பதன் திரிபு எனப் புராணம் கூறும். கேதீச்சரம் - திருக்கோயிலின் பெயர்: கேது வழிபட்டு மக்களுக்கு மெய்யுணர்வும் வீடுபேறும் செய்விக்கும். கோள் நிலைமை பெற்றமையால் வந்த பெயர். திரிபுரங்களை நீறுபட்டழியச் செய்த முதல்வனிடம் ஆதலின் அதனை வழிபடுவோர்க்குப் பகையாக உள்ள வினை நீறுபடுதல் நிச்சயம் என்பது கருத்து. முப்புரம் எரித்த வரலாற்றால் 'சிவபிரான் ஒருவனே முழு முதல்வன்: ஏனைய கடவுளர் அவனால் செலுத்தப்படும் கருவிகளே என்பதும், சிவவழிபாடு உள்ளவர் என்றுங் காக்கப்பெறுவர் என்பதும் பிறவும்' ஆகிய சமய உண்மைகள் உணரத்தக்கவை.

பாடல் வீணையர் பலபல சரிதையர் எருதுகைத் தருநட்டம்
ஆடல் பேணுவர் அமரர்கள் வேண்டநஞ் சுண்டிருள் கண்டத்தர்
ஈட மாவது விருங்கடற் கரையினில் எழில்திகழ் மாதோட்டம்
கேடி லாதகே தீச்சரந் தொழுதெழக் கெடுமிடர் வினைதானே. 2

**ந.ச.பொன்னம்பலம்பிள்ளை உரை:**

(இ-ள்) பாடுகின்ற வீணையை உடையவரும், பலபல ஒழுக்கத்தை உடையவரும், தருமதேவதையாகிய இடபத்தைச் செலுத்திப் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்கிற ஐந்தொழிலாகிய அரிய நடனத்தை விரும்புகின்றவரும், தேவர்கள் முறையிட நஞ்சையுண்டு இருண்ட கண்டத்தையுடையவருமாகிய சிவபெருமானுக்கு இடமாவது பெரிய

கடற்கரையிற் பொருந்திய அழகு விளங்குகின்ற மாதோட்டத்திலுள்ள கேடில்லாத திருக்கேதீச்சரமென்னுந் தலமாம். அதனை வணங்கி எழ வருத்தத்தைச் செய்யும் தீவினைகளெல்லாங் கெடும். எ-று.

தமெக்கென ஓரொழுக்கமில்லாராயினும் ஆன்மாக்கட்கருளுமாறு பற்பல ஒழுங்குகளை மேற்கொண்டமையிற் பல பல சரிதையர் என்றும், பயன்றராவேனை நடனங்கள் போலாகாது ஆன்மாக்களை முத்தியிற் சேர்த்தலாகிய பெரும்பயன்றரும் நடனமாதலின் அரு நட்டமென்றுங் கூறினார்.

**க. வச்சிரவேலு முதலியார் உரை:**

*(இ-ள்): பாடுதலோடு வீணையை இசைப்பவரும், பற்பல வரலாற்றை உடையவரும், தரும தேவதையாகிய விடையைச் செலுத்துபவரும், பிறரால் செய்தற்கரிய பஞ்சகிருத்திய நடனத்தை ஆன்மாக்களின் ஈடேற்றத்தைக் குறித்துச் செய்பவரும், தம் திருவருளின் துணையைத் தொடக்கத்திற் கருதாத தேவர்கள் பின்னர் உணர்ந்து வணங்கி வேண்டிக் கொள்ள அதற்கு இரங்கி ஆலகாலம் என்னும் நஞ்சை உட்கொண்டு கழுத்தில் நிறுத்தினமையால் அந்நஞ்சின் நிறமாகிய கருமையைப் புலப்படுத்தாநிற்கும் கழுத்தை உடையவரும் ஆகிய சிவபிரானுக்கு எந்நாளும் உறையுமிடமாயுள்ளது. பெரிய கடலின் கரையில் அமைந்துள்ள அழகு விளங்கும் மாதோட்ட நகராகும் அந்நகரத்தில் உள்ள அழிவில்லாத திருக்கேதீச்சரத்தைத் தொழாநின்று எழுந்தால் துன்பங்களைத் தரும் வினை தானே கெடும் எ-று.*

**ந. சுப்பையாபிள்ளை உரை:**

*எருது உகைத்து எனப்பிரிக்க. உகைத்தல்- செலுத்துதல் அஃதாவது, ஊர்தியாகக் கொண்டும் கொடியாக உயர்த்தியும் நடத்துதல். ஈடம் - இடம் என்பதன் நீட்டல் விகாரம்.*

*உயிர்கள் போகமும் வீடும் வினை நீக்கமும் பெற்று உய்தற் பொருட்டு இறைவன் முறையே போகவடிவு, யோகவடிவு, வீரவடிவு என்னுந் திருக்கோலங்களைக் கொண்டு நிகழ்த்திய செயல்களை வேதமும் புராணமும் பலவாகக் கூறுதலின், பல பல சரிதையர் என்றார். ஈண்டுத் திருநடனம் என்றது தூல, சூக்கும, அதிசூக்கும ஐந்தொழில்களையும் பர நடனத்தையும்*

*குறித்தலின், அதனைச் செய்தல் சிவபிரானுக்கன்றி ஏனைய உயிர்களுக்குக் கூடாமையின் அருநட்டம் என்றார். திருநீலகண்டம் உயிர்கள் செய்யும் வினையால் விளையும் தீமையை நீக்கித் தன்னை நினைத்தலால் வரும் பரபோக விளைவைத் தருவது. 'எழின்' என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம் 'எழ' எனத் திரிந்தது; "ஊனுண்ண, அண்ணாத்தல் செய்யாதளறு" என்ற திருக்குறளிற்போல, துயிலப்புகும்போது திருக்கேதீச்சரம் தொழுது துயின்று, பின் உணர்வு தெளிந்து எழும்போது தொழாநின்று எழுக என்பார் "தொழுதெழ" என்றருளிச் செய்தார்.*

*சிவபெருமான் நஞ்சுண்ட நிகழ்ச்சி விபரத்தினைக் கந்த புராணம் - ததீசியுத்தரப்படலம் **334-359** செய்யுள்களிற் பார்க்க.*

பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ் சடையினர் அறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ண மாதரித் தாடுவர் பாடுவர் அகந்தொறும் இடுபிச்சைக்
குண்ண லாவதோர் இச்சையி னுழல்பவர் உயர்தரு மாதோட்டத்
தண்ணல் நண்ணுகே தீச்சரம் அடைபவர்க் கருவினை யடையாவே. 3

**ந.ச.பொன்னம்பலம்பிள்ளை உரை:**

*(இ-ள்) தமது திருவருளாகிய சக்தியை ஒரு பாகத்திலுடையவரும் சுத்த ஞானமாகிய இளம்பிறை தவழும் சடையையுடையவரும், நான்கு வேதங்களாகிய வீரக்கழலும் சிலம்பும் ஒலிக்க விபூதியை விரும்பி அணிபவரும், பற்பல கீதங்களைப் பாடுகின்றவரும், நிரீச்சுரவாதிகளாகிய முனிவர்களுக்கு ஈசன் ஒருவர் உண்டென்னும் உண்மையைப் புலப்படுத்தும் அருள் காரணமாக அவர்கள் வீடுகள் தோறும் இடுகின்ற பிச்சையை உண்ண வேண்டுமென்னும் விருப்பமுடையவர்போலச் சென்றவரும் ஆகிய சிவபெருமான் வீற்றிருக்கின்ற உயர்ந்த மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சரமென்னுந் தலத்தை அடைபவர்களைத் தீவினையடையா. எ-று.*

**க.வச்சிரவேலு முதலியார் உரை:**

*(இ-ள்) தமது திருமேனியில் ஒரு பாகத்தைத் திருவருளாகிய பெண் உருவாகக் காட்டி நிற்பவரும், பிறைமதி தவழும் சடை*

*முடியினரும், தமது வீரத்தைச் சொல்லும் கழலும் சிலம்பும் ஒலிக்கும்படி திருநீற்றையும் அன்பர்கள் சாத்தும் பொற்சுண்ணத்தையும் விரும்பிப் பூசிக்கொண்டு திருக்கூத்து ஆடுவோரும், கீதங்களைப் பாடுவோரும், தாருகாவனத்துப் பெண்டிர் இடுகின்ற பிச்சையை ஏற்று உண்ணுதற்கு விருப்பம் உடையவர்போல அவர்தம் வீடு தோறும் சென்றவரும் ஆகிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள, உயர்ந்த மரங்களையுடைய மாதோட்டத்தின் கண்ணதாகிய திருக்கேதீச்சரத்தை அடைக்கலமாகப் புகுந்து வழிபடுவோரைக் காணுதற்கு அரியனவாய் வந்து விளையும் இரு வினைகளும் வந்து பொருந்தமாட்டா; அன்னோர் வினையின் நீங்கி வீடுபேறடைவர் எ-று.*

**ந. சுப்பையாபிள்ளை உரை:**

*உரையில் உள்ள இறுதி வாக்கியம் குறிப்பெச்சத்தால் வருவித்துரைக்க நின்றது. கழல் - வீரத்தையும் கொடையினையும் புலப்படுத்தும் கால் அணி. சிலம்பு - ஒரு நெறிய மனமுடைய யோகியர்க்கு முதல்வன் திருவடியைக் காட்டும் ஒலி தோன்றுதற்குக் காரணமாகிய வித்து. சுண்ணம் - திருநீற்றையும் பொற்சுண்ணத்தையும் இரட்டுற மொழிதலாற் குறிக்கும். உயர் தரு: வினைத்தொகை. தரு - மரம் உயர்தரு-உயரும் எனினும் பொருந்தும். ஆதரித்து - விரும்பி. அஃது உபசார வழக்குப்பற்றிப் பூசுதல்மேல் நின்றது. ஆடுவர்- நடனஞ் செய்வார். இனி 'சுண்ணம் ஆதரித்து ஆடுவர்- சுண்ணத்தை விரும்பிப் பூசுவர்' என உரைப்பினும் பொருந்தும். அண்ணல் - தலைவன், இங்குச் சிவபிரான் அண்ணல் நண்ணு கேதீச்சரம், மாதோட்டத்துக் கேதீச்சரம் எனக் கூட்டுக.*

*சிவபிரான் பிறையை அணிந்த வரலாற்றினைக் கந்தபுராணம் - சந்திரசாபப் படலத்துக் காண்க.*

பொடிகொள் மேனியர் புலியத ளரையினர் விரிதரு கரத்தேந்தும்
வடிகொள் மூவிலை வேலினர் நூலினர் மறிகடல் மாதோட்டத்
தடிக ளாதரித் திருந்தகே தீச்சரம் பரிந்தசிந் தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல் லார்தம்மேல் மொய்த்தெழும் வினைபோமே. 4

**ந.ச.பொன்னம்பலம்பிள்ளை உரை:**

*(இ-ள்) விபூதியை அணிந்த திருமேனியை உடையவரும், புலித்தோலை உடுத்த அரையை உடையவரும் விரிந்தகையிலேந்துகின்ற கூரிய இச்சை, ஞானம், கிரியை என்னும் முத்தலைச் சூலத்தை யுடையவரும், உபவீதத்தை உடையவருமாகிய சிவபெருமான் விரும்பி வீற்றிருந்த திரைபொருகின்ற கடல் சூழ்ந்த மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சரத்திலே அன்புகொண்ட மனத்தையுடையராகித் தலைகளைச் சாய்த்து அப்பெருமானுடைய பாதங்களை வணங்கவல்ல தொண்டர் மேலே திரண்டெழுகின்ற தீவினைகள் கெடும். எ-று.*

**க.வச்சிரவேலு முதலியார் உரை:**

*(இ-ள்) திருநீற்றைக்கொண்டு விளங்கும் திருமேனியையுடையவரும், புலித்தோலை உடுத்த அரையினரும்,ஒன்று மூன்றாய்க் கிளைத்துள்ள, கூரிய முத்தலை வேலைக் கையிற் கொண்டவரும், பூணூல் அணிந்தவரும் ஆகிய முதலாசிரியர் விரும்பி எழுந்தருளியுள்ள, அலைகள் கீழ் மேலாகப் புரளும் கடலின் கரையில் உள்ள மாதோட்டத்தின் கண்ணதாகிய திருக்கேதீச்சரத்தை அன்பு கொண்ட நெஞ்சுடன் தலையால் வணங்கி அம்முதல்வனது அருள்வழி நிற்க வல்லார்மேல் கூடித் தாக்கவரும் வினைகள் தம்வலி கெட்டு அழியும் எ-று.*

**ந.சுப்பையாபிள்ளை உரை:**

*விரிதரு மூவிலை எனக் கூட்டுக. திரோதான சக்தி ஒன்றே சனனி, உரோதயித்திரி, ஆரிணி என மூன்றாக விரிந்து முறையே அயன், மால், உருத்திரன் என்னும் மூவரிடத்துத் தங்கிப் படைத்தல், காத்தல், அழித்தல்களைச் செய்கின்றது என்பதன் அடையாளமே மூவிலைச்சூலம்: "மூன்று மூர்த்தியுள் நின்றியலுந் தொழில்- மூன்றும் ஆயின மூவிலைச் சூலத் தன்" என்பது அப்பர் அருள்வாக்கு. "மூவிலை ஒருதாட் சூலம் ஏந்துதல் - மூவரும் யான் என மொழிந்த வாறே" என்னும் பட்டினத்துப்பிள்ளையார் திருவாக்கும் சிந்தித்தற்கு உரியது.*

*முடிகள் சாய்த்தல்-யான் எனது என்னும் செருக்கற முதல்வனோடு ஒற்றுமைப்பட்டு நிற்றலையும், அடிபேணல் - அங்ஙனம் நின்று அவன் அருளால் அன்றி ஒன்றையும் அறிந்தியற்றிடாமையினையும் குறித்து நின்றன. இங்ஙனம் 'சார்பு உணர்ந்து சார்பு கெட ஒழுகுவார்க்குச்*

*சார்தரு நோய் சார்தரா' எனத் திருவள்ளுவரும். "மலமாயை தன்னொடு வல்வினை இன்றே' என மெய்கண்ட முதல்வரும் அருளிச் செய்தமை ஒப்பு நோக்குதற்கு உரியது.*

*புலித்தோல் உடுத்த விபரத்தைக் கந்தபுராணம் - ததீசி யுத்தரப்படலம்* ***100 - 101*** *ஆம் செய்யுள்களிற் காண்க.*

நல்ல ராற்றவும் ஞானநன் குடையர்தம் மடைந்தவர்க் கருளீய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர் மலிகடல் மாதோட்டத்
தெல்லை யில்புக ழெந்தைகே தீச்சரம் இராப்பகல் நினைந்தேத்தி
அல்லல் ஆசறுத் தரனடி யிணைதொழும் அன்பராம் அடியாரே. 5

**ந.ச.பொன்னம்பலம்பிள்ளை உரை:**

*(இ-ள்) மிகவும் நன்மையை உடையவரும், ஞானத்தை மிகவுடையவரும் தம்மையடைந்த அன்பர்களுக்கு அருளைச் செய்ய வல்லவரும், உலகத்திலுள்ள பெரிய பிறப்பிறப் பில்லாதவரும் ஆகிய அளவிறந்த புகழையுடைய சிவபெருமானது வளங்கள் நிறைந்த கடல்சூழ்ந்த மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சர மென்னுந் தலத்தை இரவும் பகலுஞ் சிந்தித்துத் துதித்து துக்கத்தை முழுதும் கெடுத்து அப்பெருமானது இருபாதங்களையும் வணங்கும் அன்பர்களே சிவனடியார் என்று சொல்லப்படுவர். எ-று. ஏனையர் அன்பராகாரென்பதாம்.*

**க.வச்சிரவேலு முதலியார் உரை:**

*(இ-ள்): மலிகடல் மாதோட்டத்து முத்து முதலிய வளங்கள் மிகுந்த கடற்கரையின்கண்ணதாகிய மாதோட் டம் என்னும் ஊரில் உள்ள, எல்லை இல் புகழ் எந்தை கேதீச்சரம் முடிவில்லாத புகழையுடைய எமக்குத் தந்தையாகிய சிவபெருமான் விளங்கி நிற்கும் திருக்கேதீச்சரத்தை, இராப் பகல் நினைந்து ஏத்தி அல்லல் ஆசு அறுத்து - இரவும் பகலும் சிந்தித்துத் துதித்தலால் துன்பத்திற்குக் காரணமாகிய மலமாயை கன்மங்களை முற்றிலும் கழுவி, அரன் அடி இணை தொழும் அன்பராம் அடியார் - சிவபிரானது ஞான சத்தி கிரியாசத்திகளாகிய இரண்டு திருவடிகளைத் தம்முடைய ஞானக் கிரியாசத்திகளுக்கு வியாபகமாகக் கொண்டு தாடலைபோல்*

*அடங்கி நின்று மெய்யன்பால் இன்புறு நிலையைப்பெற்றுள்ள அடியார்கள், ஆற்றவும் நல்லர். உலகிற்கு உறுதியைக் கூறுதலில் மிகவும் நல்லர், ஞானம் நன்கு உடையர் குற்றமற்ற மெய்யுணர்வினை உடையர், தம் அடைந்தவர்க்கு அருள் ஈய வல்லர் தம்மைப் புகலாக அடைந்த பக்குவர்க்கு முதல்வன் திருவருளை விளங்கச் செய்ய வல்லர், பார் மிசை வான்மிசை பிறப்பு இறப்பிலர் நிலவுலகத்திலும் விண்ணுலகத்திலும் பிறந்து இறப்பார் அல்லர் எ-று.*

**ந.சுப்பையாபிள்ளை உரை:**

*இப்பாட்டுச் சிவஞானிகளது தன்மையினையும் அவர் பிறப்பறுத்து வீடு பேறெய்துமாற்றையும் கூறிற்று. மேலைப்பாட்டு சிவஞானபோதத்தின் பத்தாஞ் சூத்திரப்பொருளையும், இஃது அதன் பதினொன்று பன்னிரண்டாஞ் சூத்திரப்பொருளையும் கருக்கொண்டு நிற்குந்தன்மை உணர்ந்து ஏத்துதற்கு உரியது. அன்பராம் அடியார் என்னும் தொடரில் அன்பு என்றது அயரா அன்பையும் அதன் விளைவாகிய பேரின்பத்தையும் குறித்து நின்றது.*

பேழை வார்சடைப் பெருந்திரு மகடனைப் பொருந்தவைத் தொருபாகம்
மாழை யங்கயற் கண்ணிபா லருளிய பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம்பொழின் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீள் மார்பர்கே தீச்சரம் பிரியாரே. 6

**ந.ச.பொன்னம்பலம்பிள்ளை உரை:**

*(இ-ள்) பரந்து உயர்ந்த பெட்டிபோன்ற சடாமுடியிலே பெரிய கங்கையைப் பொருந்தும்படி வைத்து, ஒரு பாகத்தை அருட்சக்திக்குக்கொடுத்த கொள்கையையுடைய வரும், விஷ்ணுவாகிய பன்றியினது எயிற்றை அணிந்த மார்பையுடையவருமாகிய சிவபெருமான், தமது இருப்பிட மாகிய வாழைச்சோலைகளிலே மந்திகள் மகிழ்ச்சி பெருக இருக்கின்ற மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சர மென்னுந்தலத்தை ஒருகாலத்தும் பிரியார். எ-று.*

**க.வச்சிரவேலு முதலியார் உரை:**

*(இ-ள்) பெருந்திருமகள்தனை - பெரிய திருவை உலகிற்குப் பயக்கும் மகளாகிய கங்கையை, வார்சடைபேழைபொருந்த வைத்து - தமது*

*நீண்ட சடையாகிய பெட்டியுள் அடங்கி நிற்கும்படி வைத்து, ஒரு பாகம் மாழை அம் கயல் கண்ணிபால் அருளிய பொருளினர் - தமது இடப்பாகத்தைக் கயல்மீன் போன்ற மிகுந்த அழகுள்ள கண்ணையுடைய உமையம்மைக்குக் கொடுத்தருளிய பொருண்மையினை உடைய வரும், கேழல் வெண் மருப்பு அணிந்த நீள் மார்பர் திருமாலின் பிறப்பாகிய பன்றியின் வெண்மையாகிய எயிற்றை அணியாகக் கொண்ட அகன்ற மார்பினை உடையவரும் ஆகிய சிவபிரானார், (கடலிடத்தார் கண்டு பூசித்து விரும்பிய பேறுபெறுதற்குத் திருவுளங்கொண்டு) மந்திகள் களிப்புற மருவிய வாழை அம்பொழில் மாதோட்டக் கேதீச்சரம் குரங்குகள் மகிழ்ச்சியோடு வாழும் அழகிய வாழைகளையுடைய சோலைகள் நிறைந்த மாதோட்டத்தில் உள்ள திருக்கேதீச்சரத்தை, குடி வாழ்க்கை பிரியார்தேவி குமாரர்கள் அடியார்களுடன் தாம் வாழுமிடமாகக் கொண்டு என்றும் பிரியாது தங்குவர் எ - று.*

**ந. சுப்பையாபிள்ளை உரை:**

** பின்வரும் 7ஆம் பாடலில் உள்ள "கடலிடங் கைதொழ" என்ற தொடர் சிங்க நோக்காக நின்று முற்பாடலிலும் பிற்பாடலிலும் இயைந்து பொருள் தரும் பான்மையால், 'வட கயிலையிலுள்ள சிவபிரான் மானுடர் அங்குச் சென்று பூசித்து வழிபட்டு விரும்பிய பேறு பெறுதற்கு இயலாமை கருதி, அம் மானுடர்க்கு எளி வந்து அருளும் பொருட்டாக வடகயிலையிற் போலவே திருக்கேதீச்சரத்திலும் குடிவாழ்க்கை மன்னி என்றும் பிரியாது உறைவாராயினார்' எனக் 'குடிவாழ்க்கை பிரியாமை'க்கு ஏதுவை விளக்கி நின்றது; அதனால், "கடலிடங் கைதொழ" என்ற அத்தொடர் ஈண்டும் அவாய் நிலையால் வருவித்து உரைக்கப்பட்டது. அவாய் நிலையாற் சொல் வருவித்து முடித்தலை வடநூலார் 'அத்தியாகாரம்' என்பர்.*

*கங்கையைச் செருக்கடக்குதலும் உமையம்மையை உடன் இருத்தி உலகிற்கு அறக்கருணை வழங்குதலும் கருதினார் ஆதலின், "வைத்து அருளிய பொருளினர்" என்றார்; இறைவன் செயல்கள் எல்லாம் பயன் குறித்தவை என்பது கருத்து. இறைவனது பெருவடிவில் (விசுவஷரூபத்தில்) ஆகாயமே முடியும், அங்குள்ள செவ்வொளியே சடையும், நீராவியே கங்கையும் ஆம் எனக்கொள்க. அந்நீராவியே மழையாகவும் ஆறாகவும் வந்து வளந்தருதலின் "பெருந்திருமகள்" என்றார்.*

*இனி, "அருளிய பொருளினர் குடிவாழ்க்கை கேதீச்சரம்; நீள்மார்பராகிய அவர் அதனைப்பிரியார்" என இரு தொடராக வைத்து முடித்தலும் பொருந்தும். மாழை -அழகு.*

*கேழல் வெண் மருப்பணிந்த வரலாற்றைக் கந்தபுராணம். 'ததீசியுத்தரப்படலம் **16-21** ஆம் செய்யுள்களிலும், கங்கையைச் சடையில் வைத்த விபரத்தை **363-377** ஆம் செய்யுள்களிலும், உமாதேவியை இடப்பாகம்வைத்த வரலாற்றைத் ததீசியுத்தரப்படலம் **378-388** ஆம் செய்யுள்களிலும் காண்க.*

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல் லுலகினில் உயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக் காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழின்மஞ்ஞை நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுந் துதிசெய வருள்செய்கே தீச்சர மதுதானே. 7

**ந.ச.பொன்னம்பலம்பிள்ளை உரை:**

*(இ-ள) முற்காலத்திலே சனகாதி நால்வருக்கும் தருமங்களை உபதேசித்தருளி, பலவுலகங்களிலுமுள்ள ஆன்மாக்கள் அத்தருமங்களை மேற்கொண்டொழுகும்படி செய்த சிவபெருமான் உலகத்துள்ளார் வணங்க விரும்பி வீற்றிருக்குங்கோயில், வண்டுகள் கீதங்களைப்பாடப் பூஞ்சோலைகளில் மயில்கள் கூத்தாடுகின்ற மாதோட்டத்திலுள்ள அடியார்கள் நாடோறும் தோத்திரஞ்செய்ய அப்பெருமான் அவர்களுக்குத் திருவருள் செய்கின்ற திருக்கேதீச்சரமென்னுந் தலமாம். எ-று.*

**க.வச்சிரவேலு முதலியார் உரை:**

*(இ-ள்): தேனீக்கள் பண்களை எழுப்பும் சிறந்த மலர்ச் சோலைகளில் மயில்கள் நடம் ஆடுகின்ற மாதோட்டத்தில் உள்ளதாகிய, திருத்தொண்டர்கள் நாள்தோறும் (இறைவரது) திருப்புகழைப் பாட (அதற்கு அவர் உவந்து ) அருள் செய்யுந் தலமாகிய திருக்கேதீச்சரமானது மிகப் பழைய காலத்தில் சநகாதி நான்கு முனிவர்களுக்கு அறமுதற் பொருள்களை முதற்கண் உணர்த்தியருளி, அதனால் பல பிரிவுகளையுடைய நிலவுலகத்தில் மக்கள் அவ்வுறுதிப் பொருள்களைக் குறிக்கொண்டு வாழ்தலை மேற்கொண்டு*

ஒழுகச்செய்த தலைவராகிய சிவபிரான் கடலாற் சூழப்பெற்ற உலகத்தார் கைகூப்பித் தொழும்பொருட்டு விரும்பி (எப்பொழுதும் விசேட சாந்நித்தியமாகி ) உறைகின்ற திருக்கோயில் ஆகும் எ-று.

**ந. சுப்பையாபிள்ளை உரை:**

*சிவபிரான், தம்மைக் கடலிடங் கைதொழுது உய்யும் பொருட்டு மற்றும் பல தலங்களின் ஆலயங்களிலும் காதலித்து உறைவாராயினும், வடகைலையிற் போலவே தென்பாலுலகிற்கு அருளும் பொருட்டுத் தமது சகல பரிவாரங்களோடும் எப்பொழுதும் விசேட சாந்நித்தியமுடையராய் உறையுமிடம் இத்திருக்கேதீச்சரமே' என்னுங் கருத்தினை உள்ளடக்கி நின்றது இச்செய்யுள் என்க. இக்கருத்து, மேலைச்செய்யுளிலே "கேதீச்சரம் குடி வாழ்க்கை பிரியார்" என்று கூறி, அதனைச் சார வைத்து இங்ஙனம் கூறிய வகையாற் பெறப்பட்டது. அதனால் "குடி வாழ்க்கை பிரியார்' என்னுந் தொடர் அவாய்நிலையால் ஈண்டும் வருவித்து, 'எப்பொழுதும் விசேட சாந்நித்தியராகி, என்று உரைக்கப்பட்டது. 'மாதோட்டம்' என்னும் பதம் 'மாதோட்ட நகரிலுள்ளது' என்னும் பொருளை இலக்கணையா லுணர்த்தி, 'கேதீச்சரம்' என்பதற்கு அடையாய் நின்றது; 'கேதீச்சரம்' என்ற ஆலயத்தின் பெயர், இக்காலத்தில் அதனைத் தன்னகத்தே கொண்டுள்ள மாதோட்டப்பகுதிக்குப் பெயராகி வழங்குவதும் ஆகுபெயரெனப்படும் இவ்விலக்கணை நெறி வழக்கின்பாற்பட்டதேயாகும்; அதுபோல என்றுணர்க. கேதீச்சரம் அது-கேதீச்சரம் எனப்படும் அவ்வாலயம்; அவ் வாலயம் தமக்கு அண்மையில் இல்லாமற் கடலிடையிட்ட தூர தேயத்தேயிருத்தல்பற்றி, 'அது' என்னுந் தூரச் சுட்டுப் பெயராற் குறித்தார். தான், ஏ : அசை நிலைகள்.*

* *இனி இவ்வாறன்றி, 'கோயில்' என்பதனை எழுவாயாகவும், 'மாதோட்டம்' என்பதனை அதற்குப் பயனிலையாகவும் முதல் வாக்கியமாக்கி, 'அதுவே கேதீச்சரம் என்பதனை இரண்டாம் வாக்கியமாக்கி, இரு வாக்கிய நிலைகொண்டு வட கைலையில் என்றும் பிரியாது விசேட சாந்நித்தியராய் உறையும் நாதனார் கடலிடங் கைதொழுது உய்யும்பொருட்டுக் காதலித்து வடகைலையிற்போலவே என்றும் மன்னிக் குடி வாழ்க்கை பிரியாது உறைகோயில் மாதோட்டத்தில் உள்ளது; அந்தக் கோயிலே கேதீச்சரம்' என யாற்று நீர்ப் பொருள் கோளாக உரைப்பினுமாம். அதுவே-*

*அத்தன்மையதே; இப் பொருட்டு, 'அது': குறிப்புவினையாலணையும் பெயர்; ஏ: தேற்றப்பொருட்டு.*

** இச்செய்யுளிலும் மேலைச்செய்யுளிலும் முதலீரடிகளிலும் சிவபிரானுக்கு எடுத்தோதப்பட்ட அடைமொழிகள், "தேவர்களும் தெய்வத்தன்மை வாய்ந்த முனிவராதியரும் எந்தக் காலத்திலுஞ் சென்று தம்மை தஞ்சமென்றடைந்து வேண்டும் போதெல்லாம் விரும்பிய பேறுபெற்று உய்யும்படியாக வடகைலையிற் சதாகாலமும் சாந்நித்தியராய் உறையுந் தன்மையராகிய சிவபிரான்" என்னுங் கருத்தினை உட்பொதிந்து ஓர்ந்துணர நின்றன; 'அவ்வடை மொழிகளாற் குறிக்கப்பட்ட வரலாறுகள், வடகைலையில் நிகழ்ந்த திருவருட்செயல்களாகிய நிகழ்ச்சியாய், இக்கருத்தினை ஓர்ந்துணரத்தக்க ஏதுவாகுஞ் சூசகமாய் நின்றன' என்க.*

தென்னி லங்கையர் குலபதி மலைநலிந் தெடுத்தவன் முடிதிண்தோள்
தன்ன லங்கெட அடர்த்தவற் கருள்செய்த தலைவனார் கடல்வாயப்
பொன்னி லங்கிய முத்துமா மணிகளும் பொருந்திய மாதோட்டத்
துன்னி யன்பொடு அடியவ ரிறைஞ்சுகே தீச்சரத் துள்ளாரே. 8

**ந.ச.பொன்னம்பலம்பிள்ளை உரை:**

*(இ-ள்) கைலாசமென்னும் மலையை வருந்தி எடுத்த தெற்கின்கணுள்ள இலங்கையிலுள்ளார்க்கரசனாகிய இராவணனுடைய தலைகளும் வலிய புயங்களும் தத்தம் நிலைகெட நெரித்துப் பின் அவன் வேண்டுதல் செய்ய அருள் புரிந்த முதல்வர், கடலின்கணுள்ள பொன்னும் பிரகாசிக்கின்ற முத்துக்களும் மாணிக்கங்களும் செறிந்த மாதோட்டத்திலுள்ள சிந்தித்து அன்போடுமடியார்கள் வணங்குகின்ற திருக்கேதீச்சரமென்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே. எ-று.*

**க.வச்சிரவேலு முதலியார் உரை:**

*(இ-ள்) திருக்கைலை மலையைப் பெயர்த்து எடுக்க முயன்ற தெற்கில் உள்ள இலங்கையில் வாழ்ந்தவர்க்கு அரசனாகிய இராவணனுடைய தலைகளையும் வலிய தோள்களையும் அவன்றன் செருக்கு அழியும்படி நெரித்து, பின் பிழையை உணர்ந்து பணிந்து இரந்து வேண்டிய அவனுக்கு*

*நீண்ட ஆயுளும் வாளும் அருளிய முதல்வராகிய சிவபிரானார், கடலின்கண் உள்ள அப்பொன்னும், ஒளியுள்ள முத்தும் மணியும் பொருந்திய மாதோட்டத்தில் உள்ள, அடியவர்கள் தியானித்து அன்போடு தாழ்ந்து வணங்குதற்கு ஏதுவாகிய திருக்கேதீச்சரத்தில் என்றும் பிரியாது உள்ள னர் எ-று.*

**ந.சுப்பையாபிள்ளை உரை:**

*'கடல்வாய பொன்-என்பது பாடமாயின் கடலின்கண் உள்ள பொன் என உரைக்க. ஒற்றுமிக்க பாடத்திற்குப் பண்டறி சுட்டைக் கொள்ளுதல் வேண்டும்.*

பூவு ளானுமப் பொருகடல் வண்ணனும் புவியிடந் தெழுந்தோடி
மேவி நாடிநின் அடியிணை காண்கிலா வித்தக மென்னாகும்
மாவும் பூகமுங் கதலியும் நெருங்குமா தோட்டநன் னகர்மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகே தீச்சரத் திருந்தளம் பெருமானே. ௯

**ந.ச.பொன்னம்பலம்பிள்ளை உரை:**

*(இ-ள்) மாமரங்களும் கமுகுகளும் வாழைகளும் நெருங்கிய மாதோட்டமென்னும் நல்ல ஊரிலுள்ள திருக்கேதீச்சரமென்னுந் தலத்திலே நிலையாய கௌரியம்பிகை என்னும் அருட்சக்தியோடு வீற்றிருக்கின்ற நமதுகடவுளே! பிரமாவும் விஷ்ணுவும் முறையே அன்னமும் பன்றியுமாய் மேலே பறந்தும் பூமியைக் கிழித்தும் தேடித் தேவரீருடைய முடியையும் அடியையுங் காண்கின்றிலர். அவர்களுடைய கடவுட்டன்மை எவ்வாறாகும்? எ-று.*

**க.வச்சிரவேலு முதலியார் உரை:**

*(இ-ள்): மாவும் கமுகும் வாழையும் நெருங்கியுள்ள மாதோட்டம் என்னும் நல்ல நகரில் கௌரியம்மையோடு திருத்தமாகிய திருக்கேதீச்சரத்தில் நிலையாக எழுந்தருளியுள்ள பெருமானே ! (நீ இங்ஙனம் வெளிப்பட இருத்தலால்) மலரவனாகிய பிரமன் அன்னப்பட்சி வடிவு கொண்டு ஆகாயத்து எழுந்து பறந்து சென்று தேடியும், அலைகள் வீசும் கடல்போன்ற நீலவண்ணத்தனாகிய திருமால் பன்றி வடிவாகிப் பூமியைத் தோண்டிச்*

*சென்று நாடியும் அவ்விருவரும் முறையே உனது முடியினையும் இணையடிகளையும் காணமாட்டாதபடி கடந்து நின்ற உன் சாதுரியம் யாது ஆகும்? எ-று.*

**ந.சுப்பையாபிள்ளை உரை:**

*திருமால் பிரமனுக்குக் காணப்படாத நீ தேவியோடு யாவருங் காணத் திருக்கேதீச்சரத்தில் பிரியாது எழுந்தருளுதல் உன் அருமைக்கு இழுக்கு அன்றோ என வினவுகிறார். தேவர்க்கும் அரியன் ஆயினும் திருந்திய அன்பர்க்கு எளியன் என்பது கருத்து. "அருமையில் எளிய அழகே போற்றி" என்னுந் திருவாசகம் ஈண்டு ஒப்பிட்டு நோக்குதற்கு உரியது.*

*பூவுளான் எழுந்தோடியும், அப்பொரு கடல் வண்ணன் புவி இடந்தும் மேவி நாடிக் காண்பிலாமைக்குக் காரணமாகிய (உன்) வித்தகம் என் ஆகும்? என்க. முதலாமடி 'எதிர் நிரல் நிறைப்பொருள்கோள்' வகையால் மொழிமாற்றிக் கூட்டிப்பொருள் கொள்ள நின்றது. வித்தகம் - சாதுரியம். சாமர்த்தியம். 'நீ இங்ஙனம் வெளிப்பட இருத்தலால்' என்பது ஆற்றலால் வருவித்துரைக்க நின்றது.*

*பிரம விட்டுணுக்கள் அடி முடி தேடிய விபரத்தைக் கந்த புராணம் - அடிமுடி தேடு படலத்திற் காண்க.*

புத்த ராய்ச்சில புனைதுகி லுடையவர் புறனுரைச் சமணாதர்
எத்த ராகிநின் றுண்பவ ரியம்பிய ஏழைமை கேளேன்மின்
மத்த யானையை மறுகிட வுரிசெய்து போர்த்தவர் மாதோட்டத்
தத்தர் மன்னுபா லாவியின் கரையிற்கே தீச்சரம் அடைமின்னே. 10

**ந.ச.பொன்னம்பலம்பிள்ளை உரை:**

*(இ-ள்) உலகத்தீரே, புத்தசமயிகளாகிய சில தைத்த வஸ்திரங்களை அணிபவரும், புறங்கூறிப் பலரைவஞ்சித்து நின்று புசிக்கும் சமணர்களாகிய மூடர்களும் போதிக்கின்ற அறியாமையாகிய போதனையைக் கேளாதொழியுங்கள். மதயானையை அஞ்சும்படி யுரித்து, அதன்றோலைப்போர்த்த சகத்பிதாவாகிய சிவபெருமான் வீற்றிருக்கின்ற*

மாதோட்டத்திலுள்ள பாலாவியென்னுந் தீர்த்தக் கரையிலிருக்கின்ற திருக்கேதீச்சரமென்னுந் தலத்தையடையுங்கள். எ-று.

**க. வச்சிரவேலு முதலியார் உரை:**

(இ-ள்): (நல்லோர்களே,) புத்த சமயத்தவராய்ச் சில ஆய்வுரைகளைப் படைத்துக் கூறும் மஞ்சள் உடையை உடுப்பவரும், வேதாகமங்களை ஒப்பாத (அங்கீகரியாத) புறச் சமயம் பற்றி நின்று நம்மனோரை இகழ்ந்து கூறும் உரைகளைக் கொண்ட சமண் சமயத்து மூடர்களாகிய, வஞ்சனையுடையராய்த் தெருவில் நின்று உண்பவரும் ஆகிய இவர்கள் ஆரவாரமாகப் பேசும் அறிவின்மையைப் புலப்படுத்தும் பேச்சுக்களைப் பொருட்படுத்திக் கேளாதீர்கள். கயாசுரனாகிய மதமயக்கத்தையுடைய யானையைக் கலங்கும் படி கொன்று அதன் தோலை உரித்துத் தம் திருமேனிமேற் போர்த்துக்கொண்ட நம் தந்தையாகிய சிவபிரான் நீங்காது எழுந்தருளியுள்ள, மாதோட்டத்திலே பாலாவி தீர்த்தக் கரையில் பொருந்திய திருக்கேதீச்சரஞ் சென்று தொழு மின்கள் எ-று.

**ந. சுப்பையாபிள்ளை உரை:**

தொழுதால் இகபரத்துயர் நீங்கி இன்புறலாம்- என்னும் முடிவுரையைக் குறிப்பெச்சத்தாற் கொள்க.

* இனி, பின் ஈரடிகளுக்கும் "மாதோட்டத்து அத்தர் மத்த யானையை மறுகிட உரிசெய்து போர்த்தவர்; (அன்னார்) மன்னு பாலாவியின்கரையிற் கேதீச்சரம் அடைமின்' என இரண்டு வாக்கியமாகக்கொண்டு,

"மாதோட்ட நகரில் எழுந்தருளிய உலகுயிர்கட்கெல்லாம் பரமபிதாவாயுள்ள சிவபெருமானானவர். காசியிலிருந்த முனிவர் கூட்டத்தைக் கொல்லக் கருதிக் கயாசுரனாகிய மதமிக்க யானை செருக்குற்றுச் செல்லுதலும், அம்முனிவர்கள் அஞ்சியோடிக் "காசி விசுவநாதா, அபயம்'' என்று ஓலமிட்டு அங்கேயுள்ள தமது ஆலயத்துட் புகுந்து தம்மைச் சரணமடைந்தாராக, அப்பொழுதும் அவ்யானை அங்கும் விடாது தொடர்ந்து கொல்ல நெருங்கியமையால், சரணாகதர்களாகிய அம்முனிவர்களை அவ்வாபத்தினின்றும் நீக்கிக் காத்தற் பொருட்டாக, தாம் வெளிப்பட்டு அசுரனாகிய அவ்யானையைக் கொன்று அதன் தோலைத் தம் திருமேனியிற் போர்த்தருளிய பெருங்கருணையாளராவர்; அத்தகைய பெருமானது அநுக்கிரகத்தை இலகுவிற் பெறவேண்டின், அவர் மன்னிய

*கேதீச்சரத்தை அடைந்து அவரை அன்புடன் வழிபடுங்கள்; வழிபட்டால், அவர்தம் பெருங்கருணையால் உங்கள் பிறவித் துன்பங்களையெல்லாம் நீக்கி, இம்மை மறுமையின்பங்களையும், முத்தியின்பத்தையும் உங்களுக்குத் தந்து காத்தருளுவர்'*

*என்று இங்ஙனம் பொருள் உரைப்பினும் அமையும். இதற்கு இடையிலே வருவிக்கப்பட்டவை இசையெச்சத்தாலும், இறு தியில் வருவிக்கப்பட்டதாய் அடைதலின் பயனைக் குறிப்பதாயுள்ள தொடர் குறிப்பெச்சத்தாலும் வருவித்துரைக்க எஞ்சி நின்றன.*

**மத்த - மதவெறிகொண்ட, போர்த்தவர்- தெரிநிலைவினை யாலணையும் பெயர்: இது 'அத்தர்' என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய், அப்பெருமான் சர்வவல்லமையும் சரணடைந் தாரைக் காக்கும் பெருங்கருணையுமாகிய இயல்புகளையுடையவர் என்பதைப் புலப்படுத்தி நின்றது. இவ்வாக்கியப் பொருளானது பின்வரும் வாக்கியப்பொருள்களை உறுதிப்படுத்தும் ஏதுப்பொருளாந் தன்மையைத் தன்னகத்தே பொதிந்திருத்தலும் ஓர்ந்துணரற்பாலது*

*யானையுரி போர்த்த விபரத்தைக் கந்தபுராணம் - ததீசியுத்தரப்படலம் 128-159 செய்யுள்களிற் காண்க.*

மாடெ லாமண முரசெனக் கடலின தொலிகவர் மாதோட்டத்
தாட லேறுடை யண்ணல் கேதீச்சரத் தடிகளை யணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன்சொல் நவின்றெழு பாமாலைப்
பாட லாயின பாடுமின் பத்தர்கள் பரகதி பெறலாமே. 11

**ந.ச.பொன்னம்பலம்பிள்ளை உரை:**

*(இ-ள்) பக்கங்களிலெல்லாம் மணமுரசைப்போலக் கடலோசை பிறவோசைகளை அடக்கும் மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சரம் என்னும் தலத்தில் வீற்றிருக்கின்ற இடபாரூடராகிய சிவபெருமானைச் சீர்காழித் தலைவனாகிய திருஞானசம்பந்தன் பாடிய இப்பதிகத்தையே அன்பர்களே! நீங்கள் பாடுங்கள் மோக்ஷத்தைப் பெற்றுக் கொள்ளலாம். எ-று.*

*நவின்று என்னும் வினையெச்சங்காரணப்பொருட்டு மாதோட்டத்தி லுள்ளார் விரகநோயுடையரன்றி என்றுஞ் சிவத்தியானஞ் செய்யுஞ் கற்சனராதலின் மணமுரசெனக் கடலின தொலிகவர் மாதோட்டம் என்றும், வீரசக்தியாகிய விட்டுணுவே இடபமாதலின் ஆடலேறென்றுங் கூறினார்.*

**க. வச்சிரவேலு முதலியார் உரை:**

*(இ-ள்): அன்பர்களே ! பக்கமெங்கும் கடலொலியானது மணமுரசின் ஒலிபோலப் பிற ஓசைகளை அடக்கி எழுகின்ற மாதோட்ட நகரில் உள்ள வெற்றியையுடைய விடையை ஊர்தியாகவும் கொடியாகவும் கொண்ட முதல்வனாகிய, திருக்கேதீச்சரத்தில் விளங்கி நிற்கும் முதலாசிரியனை, நிலவுலகிற்கு அணியாகவுள்ள சீர்காழி நாட்டுள்ளார்க்குத் தலைவனாகிய ஞானசம்பந்தனானவன், புகழைச் சொல்லி ஏத்துதலால் உண்டாகிய பாமாலையாகிய இத்திருப்பதிகப் பாடல்களைப் பாடுங்கள். மேலான பதவியையும் முத்தியையும் பெறுதல் இம்மையிலும் கைகூடும் எ-று.*

**ந. சுப்பையாபிள்ளை உரை:**

*கவர்தல் - உள்ளத்தைக் கவர்ந்து இன்புறுதலும் ஆம். சொல் புகழ். நவின்று எழு - நவிலுதலினால் எழுந்த;*

** 'நவின்று' என்னுஞ் செய்தென் வாய்பாட்டு வினையெச்சம் காரணப் பொருட்டு, நவிலுதல் - சொல்லித் துதித்தல். ஆடல் - வெற்றி, வீரம். 'சொல் நவின்று' என்னும் இரண்டாம் வேற்றுமைத் தொகை ஒரு சொன்னீர்மையாய் நின்று 'அடிகளை' என்பதற்கு முடிபாயிற்று; அடிகளது புகழை நவின்று என்பது கருத்து. பரகதி-மேலான பதவி - மேலான நிலைமை-துன்ப நீக்கமும் இன்ப வாழ்வும் குறித்தது:) முத்தி: (இரட்டுற மொழிதல்) பதிகத்தின் பயன் முதலியன கூறிய பாடல் இது.*

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்

## அருளிச்செய்த

# திருக்கேதீச்சரத் தேவாரத் திருப்பதிகம்

### வித்துவ சிரோமணி ந.ச.பொன்னம்பலப்பிள்ளை, காஞ்சிபுரம் க. வச்சிரவேலு முதலியார், வித்துவான் ந. சுப்பையாபிள்ளை ஆகியோர் எழுதிய உரைகளுடன்

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே 1

**ந.ச.பொன்னம்பலம்பிள்ளை உரை:**

*(இ-ள்) பாஞ்சசன்னியமென்னும் சங்கையேந்திய ஞானியாகிய விக்ஷ்ணுவென்னும் இடபத்திலேறினவரும், மதத்தால் நனைகின்ற கதுப்புப்பொருந்திய வாயையுடைய யானைத்தோலை உரித்துப்போர்த்த நித்திய கல்யாணரும், இறந்த விஷ்ணு முதலியோர்களுடைய எலும்பு மாலைகளை அணிபவரும் யாவரென்றால், அன்பையுடைய அடியார் வணங்குகின்ற பாலாவியென்னுந் தீர்த்தக்கரையிலுள்ள திருக்கேதீச்சரமென்னும் தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே. எ - று.*

*ஐம்படைகளுட் சங்கமும் ஒன்றாதலின், நத்தார் படை யென்றும், தமோகுண வயத்தராய் என்றுந் துயில்புரிவோர் போலாகாது என்றுஞ் சிவயோகதுயில் புரியு மகா ஞானியாதலிற் பசுவாய்த் தாங்கும் பேறடைந்த பெரியர் என்பார், நத்தார்படை ஞானன்பசு என்றுங் கூறினார். பத்தாகியதொண்டர் என்பதற்குச் சிவ புண்ணியம் பத்தையும் உடைய தொண்டர் என்றலும் ஒன்று. பசு ஏறுதலும் யானையுரி போர்த்தலும் எலும்பணிதலும் தாமே முழுமுதற் கடவுள் என்பதற்கேதுவாய் நின்றன. மணவாளன் என்பதும் உடம்போடு புணர்த்தலால் அவ்வாறாயிற்று. மத்தம் - களிப்பு.*

**க.வச்சிரவேலு முதலியார் உரை:**

*(இ-ள்): உயர்ந்தோர் தம்முடைய உள்ளத்தே அன்பு நிறைந்து ( மிகு பக்தி கொண்டு) அதனால் அடையப் பெறும் அறிவு உருவினனும்,*

*விடையை ஊர்பவனும், மத நீரால் நனைந்த தொங்குகின்ற வாயினையும் மதிமயக்கத்தினையும் உடைய செருக்குள்ள (கயாசுரனாகிய ) யானையினது தோலை உரித்துப் போர்த்துக்கொண்ட உமை மணாளனும், திருமால் முதலிய இறந்தவர்களுடைய எலும்பை அணிபவனும் ஆகிய சிவபெருமான் அன்பர்களாகிய அடியவர்கள் தொழும் பாலாவி யாற்றங்கரைமேல் திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியுள்ளான் (எ-று).*

**ந.சுப்பையாபிள்ளை உரை:**

*நத்தார்படை என்னுந் தொடரை நத்து ஆர்பு அடை எனப் பிரிக்க. நத்து - அன்பு: எழுவாய் அவாய் நிலையான் வந்தது. 'நத்து ஆர் படை' எனப் பிரித்து, 'அன்பு பொருந்திய சேனை யையுடைய' என்றுரைத்து, 'நத்து ஆர்' என்ற அடையைப் பூதப்படைக்கு ஏற்றினும், 'சங்கு (கரத்தில்) பொருந்திய படைக்கலம்' எனப்பொருள் கொண்டு, முப்புரம் எரித்தபோது கொண்ட அம்பாகிய திருமாலுக்கு ஏற்றினும் பொருந்தும். பத்து- பற்று. 'நனைகவிழ், வாயையுடைய யானை, மத்தயானை, மதயானை என அடைகள் தனித்தனி வியைந்து பொருள் பயக்கும். ஏறிந் நனை, "மத்தம் மத' என்ற தொடர்களின் இடையேயுள்ள மெய்கள் விரித்தல் விகாரம்.*

சுடுவார்பொடி நீறுந்நல் துண்டப்பிறை கீழும்
கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாஉறை கின்றான்திருக் கேதீச்சரத் தானே 2

**ந.ச.பொன்னம்பலம்பிள்ளை உரை:**

*(இ-ள்) விபூதியையும் இளம்பிறையையும் யானைத் தோலையும் அணிந்த நீலகண்டரும், உமாதேவியாரோடு பிரியா திருப்பவரும் யாரென்றால், பாலாவியென்னுந் தீர்த்தக்கரையிலுள்ள திருக்கேதீச்சரமென்னும் தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே. எ - று.*

*சுடுவார் என்பது சுடுதலார்ந்த என விரியும். ஏர்உவம உருபு.*

**க.வச்சிரவேலு முதலியார் உரை:**

*(இ-ள்) சுடப்பட்ட நுண் பொடியாகிய திருநீற்றையும், களங்கமில்லாத பிறைத்துண்டையும், கிழிக்கப்பட்ட சீலைக் கச்சையும், மதம் நிறைந்த*

*செருக்கினையுடைய யானையினது தோலையும் அணிந்த ஆலகால நஞ்சாகிய கறையைத் தோற்றுவிக்கும் கழுத்தையுடைய சிவபெருமான் பட மெடுத்த நாகம்போலும் இடையினையுடைய உமையம்மையோடு பாலாவியாற்றின் கரைமேல் திருக்கேதீச்சரத்தானாய் நிலையாகத் தங்கியிருக்கின்றான் எ-று.*

**ந.சுப்பையாபிள்ளை உரை:**

*வார்-நுட்பம்;ஏர்-உவம உருபு; படம்-ஆகுபெயர்; உம்மையைப் பிறை, உரி என்பவற்றேடுங் கூட்டுக.*

அங்கம்மொழி யன்னாரவர் அமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்திருக் கேதீச்சரத் தானே 3

**ந.ச.பொன்னம்பலம்பிள்ளை உரை:**

*(இ-ள்) இளம்பிறையைச் சூடினவரும் சிவந்த கண்களையுடைய சர்ப்பகச்சையையணிந்தவரும் யாரென்றால் வேதவேதாகமங்களையறிந்த பிராமணர்களும் தேவர்களும் வணங்கித் துதிக்கத் தோணிகள் நிறைந்த கடல்சூழ்ந்த மாதோட்டமென்னும் நல்ல ஊரிலுள்ள பாலாவியென்னுந் தீர்த்தக்கரையிலிருக்கின்ற திருக்கேதீச்சரமென்னுந் தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே எ - று.*

*அங்கத்தை ஒழித்த அத்தன்மையனாய மன்மதனுந் தேவரும் வணங்க எனப்பொருள் கொண்டு மன்மதன் முற்காலத்தில் திருக்கேதீச்சரத்திற் பூசித்தான் என்பாரும் உளர்.*

**க.வச்சிரவேலு முதலியார் உரை:**

*(இ-ள்) தக்கனால் கலைகள் குறைந்தழியச் சாபமிட்டு மானபங்கஞ் செய்யப்பட்ட சந்திரன் தஞ்சமென்றடைந்து வணங்கி வேண்ட அவனது ஒரு கலையாயின பிறையைச் சூடினவனும் சிவந்த கண்ணையுடைய*

*பாம்பைக் கச்சாகக் கட்டிக்கொண்டவனுமாகிய சிவபிரான் வேதத்தின் அங்கங்களை ஓதுகின்ற அந்தணர்களும் மற்றும் அவர் போன்ற இயல்புகளையுடையவர்களும் தேவர்களும் வணங்கித் துதிக்கும்படி - மரக்கலம் நிறைந்த கடற்கரையிலுள்ள மாதோட்டம் என்னும் நல்ல நகரில், பாலாவியின் கரைமேல் திருக்கேதீச்சரத்தில் உளன் எ-று.*

**ந.சுப்பையாபிள்ளை உரை:**

*இறைவன் தன்னையடைந்தாருடைய குறை குற்றங்களை நீக்கி அருளுதல் குறிக்கப்பட்டது. செய்த - செய்யப்பட்ட கருத்தா வருவிக்கப்பட்டது.*

கரியகறைக் கண்டன்நல்ல கண்மேல்ஒரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ்செயும் மாதோட்டநன் னகருள்
பரியதிரை யெறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியும்மறை வல்லான்திருக் கேதீச்சரத் தானே 4

**ந.ச.பொன்னம்பலம்பிள்ளை உரை:**

*(இ-ள்) நீலகண்டரும், நெற்றிக்கண்ணரும், அறிஞராலறியப்படும் வேதத்தில் வல்லவரும் யாரென்றால், வண்டுகள் கீதங்களைப் பாடுகின்ற மாதோட்டமென்னும் நல்ல ஊரிலுள்ள பெரிய திரையை வீசிப் பெருகும் பாலாவியென்னுந் தீர்த்தக்கரையிலிருக்கின்ற திருக்கேதீச்சர மென்னும் தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே எ-று.*

*கரியகறை என்பது கருங்கண்ணன் என்பதுபோல நின்றது.*

**க.வச்சிரவேலு முதலியார் உரை:**

*(இ-ள்): கருநிறமுள்ள நஞ்சை அணிந்த கழுத்தினனும், இரு கண்களுக்கு மேலாக ஒரு கண்ணை நெற்றியிலே உடையவனும், ஆராயப்படும் வேதங்களை அருளியவனும் ஆகிய சிவபிரான் இரேகைகளையுடைய சிறகுகள்கொண்ட வண்டுகள் யாழின் இசைபோன்ற இசையைச் செய்யும் மாதோட்ட நன்னகருள் பருத்த அலைகளை வீசிக்கொண்டுவரும் பாலாவியின் கரைமேல் திருக்கேதீச்சரத்தை இடமாகக் கொண்டு உளன் எ-று.*

**ந. சுப்பையாபிள்ளை உரை:**

*நெற்றிக்கண் விருபாக்கமாகலின், ஏனையவை நல்ல கண் எனப்பட்டன.*

அங்கத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே 5

**ந. ச. பொன்னம்பலம்பிள்ளை உரை:**

*(இ-ள்) அடியார்களுக்குச் சரீரத்திலுள்ள நோய்களை நீக்கியருளுகின்றவர் யாவரென்றால், தமது இடப்பாகத்திலுள்ள கௌரியம்பிகையென்னும் அருட்சக்தியோடு தோணிகள் நிறைத்த கடல் சூழ்ந்த மாதோட்டமென்னும் நல்ல ஊரிலுள்ள பாலாவியென்னுந் தீர்த்தக்கரையிலிருக்கின்ற தென்னஞ்சோலை சூழ்ந்த திருக்கேதீச்சரமென்னும் ஸ்தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே எ-று.*

*பங்கஞ்செய்த என்பதற்கு ஒரு பாகத்தை வேறுபடுத்திய எனினும் அமையும்.*

**க. வச்சிரவேலு முதலியார் உரை:**

*(இ-ள்) தன் அடியார்மேல் அவர்தம் உடம்பில் பொருந்தும் நோய்களை நீக்கியருளும் சிவபிரான் தன் இடப்பாகத்தில் உள்ள உமையம்மையுடன் மரக்கலங்கள் நிறைந்த கடற்கரையிலுள்ள மாதோட்ட நன்னகரில் பாலாவியின் கரைமேல் தென்னஞ்சோலை சூழ்ந்துள்ள திருக்கேதீச்சரத்தை இடங்கொண்டுளன் எ-று.*

**ந. சுப்பையாபிள்ளை உரை:**

*அங்கம் - உடம்பு. அருளி - வினைமுதற் பொருளையுணர்த்திய இகரவீற்று வினைப்பெயர்.*

வெய்யவினை யாயவடி யார்மேலொழித் தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத் தானே 6

**ந.ச.பொன்னம்பலம்பிள்ளை உரை:**

*(இ-ள்) அடியார்மீது வருந்தீவினைகளை நீக்கியருளுகின்றவர் யாவரென்றால்பூமியை விருத்திசெய்கின்றகடல்சூழ்ந்தமாதோட்டமென்னும் நல்ல ஊரிலுள்ள பாலாவி யென்னுந் தீர்த்தக்கரையிலிருக்கின்ற திருக்கேதீச்சரமென்னும் ஸ்தலத்தில் கௌரியம்பிகையோடு வீற்றிருக்கின்ற சிவந்த சடாமுடியையுடைய சிவபெருமானே எ-று.*

**க.வச்சிரவேலு முதலியார் உரை:**

*(இ-ள்): அடியார் மேல் வரும் கொடிய பிராரத்த வினையை உயிரைத்தாக்கி வருத்தாது உடல் ஊழாய்க் கழியும்படி அருள்பவனும் சிவந்த சடைமுடியானுமாகிய சிவபிரான் படத்தையுடைய நாகம்போலும் இடையினையுடைய உமையுடன் உலகில் உள்ளார் நினைந்து மகிழ்ச்சி நிறைகின்ற கடற்கரையில் உள்ள மாதோட்ட நன்னகரில், பாலாவியின் கரைமேல் உள்ள திருக்கேதீச்சரத்தை இடமாகக் கொண்டுளன் எ-று.*

**ந.சுப்பையாபிள்ளை உரை:**

*பை-படம்: அஃது ஆகுபெயராய்ப் பாம்பை உணர்த்திற்று அருளி:- வினைப்பெயர்; முற்செய்யுளிற்போலவே கொள்க; வருஞ் செய்யுளிலும் அதுவே.*

ஊனத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடல் மாதோட்டநன் னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்திருக் கேதீச்சரத் தானே 7

**ந.ச.பொன்னம்பலம்பிள்ளை உரை:**

*(இ-ள்) அடியார்மீது வருகின்ற குற்றம் மிகுந்த நோய்களை நீக்கியருளுகின்றவர் யாவரென்றால், வெண்மையாகிய சங்குகள் மிகுந்து நிறையுங் கடல் சூழ்ந்த மாதோட்டமென்னும் நல்ல ஊரிலுள்ள பாலாவியென்னும் தீர்த்தக் கரையிலிருக்கும் திருக்கேதீச்சரமென்னும் தலத்திலே பாலுஞ் சுவை மிகுதியை யவாவுஞ் சொற்களையுடைய கௌரியம்பிகையோடு வீற்றிருக்கின்ற பன்றியினெயிற்றை யணிந்த சிவபெருமானே எ-று.*

*ஒழித்தருளிகள் ஒடுங்கி என்பதுபோற் பெயராய் நின்றன. பாலுஞ் சுவைகுன்றுதற்கேதுவாய மொழியெனினும் அமையும்.*

**க.வச்சிரவேலு முதலியார் உரை:**

*(இ-ள்): அடியார் மேல் உவ்விடத்து (நிலவுலகத்து) வந்து பொருந்துவனவாகிய துன்பங்களை நீக்கியருள்வோனாகிய, பன்றியின் கொம்பை அணிந்த சிவபிரான் வெண்மையான சங்குகள் பொருந்திய நீர் நிறைந்த கடற்கரையில் உள்ள மாதோட்ட நன்னகரில் பாலாவியின் கரைமேல் தன் இனிமைத் தன்மையைப் பெறுதற்குப் பாலும் அவாவுதற் கேதுவாகிய இனிய மொழியையுடைய உமையம்மையுடன் திருக்கேதீச்சரத்தை இடமாகக்கொண்டு வீற்றிருக்கின்றான் எ-று.*

**ந.சுப்பையாபிள்ளை உரை:**

*ஊன்-உவ்விடம்; அத்து: சாரியை. 'ஊனம்' குறைவு எனக் கொண்டு குறையறிவு பொருந்திய நிலைமையாகிய சகலநிலையில் உறும் எனினும் பொருந்தும். வானத்துறு; வால் + நத்து +உறு; வால்-வெள்ளிய. நத்து-சங்கு; 'நந்து' என்பது 'நத்து' என வலித்தல் விகாரமாயிற்றுத் தொடை நோக்கி. பானத் துறு- (பால் + நத்துறு) பால் அவாவுகின்ற. திருமாலின் பிறப்புக்களுள் ஒன்றாகிய வராகத்தின் செருக்கை அழித்துக் கைக்கொண்ட எயிற்றை அணிந்தான் என்பது வரலாறு.*

அட்டனழ காகவரை தன்மேலர வார்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்டநன் னகரில்

பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்நமை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே 8

**ந.ச.பொன்னம்பலம்பிள்ளை உரை:**

*(இ-ள்) அட்டமூர்த்தியாயுள்ளவரும், மேலானவரும், அழகாகத் திருவரையில் சுத்தமாயை ஆகிய சர்ப்பகச்சையணிந்து நம்மை யடிமைகொள்பவரும் யாவரென்றால், தேனையுண்டு வண்டுகள் சுழலுகின்ற சோலைசூழ்ந்த மாதோட்டமென்னும் நல்ல ஊரிலுள்ள பாலாவியென்னுந் தீர்த்தக்கரையிலிருக்குந் திருக்கேதீச்சரமென்னும் தலத்திலே கௌரியம்பிகையென்னும் அருட்சத்தியோடு வீற்றிருக்கின்ற சிவபெருமானே எ-று.*

**க.வச்சிரவேலு முதலியார் உரை:**

*(இ-ள்): அட்டமூர்த்தம் எனப்படும் எண்வகை வடிவங்களையுடையவனும் மேலோனும் நம்மை ஆள்வோனுமாகிய சிவபிரான், வண்டுகள் தேனையுண்டு ஒலிக்கும் பொழில் சூழ்ந்த மாதோட்ட நன்னகரில் பாலாவியின் கரைமேல் அரையில் பாம்பினை நாணாக அழகுறக் கட்டிக்கொண்டு, பட்டத்தை அணிந்த இரேகை பொருந்திய நெற்றியையுடைய உமையம்மையுடன் திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியுளன் எ-று.*

**ந.சுப்பையாபிள்ளை உரை:**

**அட்டன் - அட்டமூர்த்தங்களையுடையவன்; அட்டம்- எட்டு; 'அஷ்ட' என்ற வடசொல்லின் திரிபு: இது தொகைக்குறிப்பு மொழியாக நின்று சிவபிரானுக்குச் சொல்லப்படும் எண் வகைவடிவங்களையுணர்த்தியது; அவ்வடிவங்களாவன: நிலம், நீர், தீ, காற்று, வெளி என்னும் பஞ்ச பூதங்களும், சூரியனும், சந்திரனும், இயமாநனுமாம்; இயமாநன்- ஆன்மா; திருக்கேதீச்சரத்தான்: குறிப்புவினைமுற்று.*

*அட்டன் சிட்டன் நமை ஆள்வான் ஆர்த்து நுதலாளொடு திருக்கேதீச்சரத்தான் எனக் கூட்டுக.*

மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டநன் னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்எனை ஆள்வான்திருக் கேதீச்சரத் தானே 9

**ந.ச.பொன்னம்பலம்பிள்ளை உரை:**

*(இ-ள்) பிரமா விஷ்ணு உருத்திரர் எனவும் சத்தி சிவமெனவும் பேசப்படுகின்ற மூன்று கண்களையுடைய தலைவராகிய கடவுளும், என்னை அடிமை கொள்பவரும் யாவரென்றால், மரங்களில் தூங்குகின்ற சோலைசூழ்ந்த மாதோட்டமென்னும் நல்ல ஊரிலுள்ள இருவினைகளையும கெடுக்கின்ற அடியார் வசிக்கும் பாலாவித் தீர்த்தக்கரையிலிருக்கின்ற திருக்கேதீச்சர மென்னுந் தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே. எ-று.*

*பாவந்தீவினையையும் வினை நல்வினையையும் உணர்த்தின. தற்பயன் கருதாது பசுக்களுக்கும் பரிபக்குவ நிகழச்செய்தது பரமுத்தி சேர்க்குமாறு மூவராயும் இருவராயும் இருந்தாரன்றி அவர்க்கவை இயற்கையன்றென்பர் மூவரென விருவரென முக்கண்ணுடை மூர்த்தி என்றார்.*

**க.வச்சிரவேலு முதலியார் உரை:**

*(இ-ள்): அயன் அரி அரன் என்னும் மூவர்க்குங் காரணராயுள்ளவர் எனவும் சத்தி சிவம் என்னும் இரு வடிவுகொண்டவர் எனவும் உலகினர் உணரும்படி நின்ற முக்கண்ணரும் நீலலோகிதமாகிய ஒளிவடிவினனும் (தேவன்) என்னை யாள்வோனும் ஆகிய சிவபிரான், மாங்கனி தூங்கும் சோலைகளையுடைய மாதோட்ட நன்னகரில் பாலாவியின் கரை மேல் பாவத்தை நீக்கிக்கொள்ளும் உலகரும், இருவினைகளையும் அறுக்கும் சத்திநிபாதரும் பயில்கின்ற திருக்கேதீச்சரத்து உளன் எ-று.*

**ந.சுப்பையாபிள்ளை உரை:**

**'மூவர்க்குங் காரணர்' என்பதை 'மூவர்' என்று காரணத்தைக் காரிய வாசகத்தாற் கூறியது உபசாரவழக்கு. "நின்ற' என்பது சொல்லெச்சத்தால் வருவித்துரைக்கப்பட்டது. 'தேவன் எனை யாள்வான்' என்னும் எழுவாய்க் கூற்றுப் பதங்கள் 'முக்கண்ணுடைய மூர்த்தி' என்பதன்*

*பின்னர்க் கொண்டு கூட்டியுரைக்க நின்றன. முக்கண் உடைமை மூவரென நின்றமையினையும், நீலச்செம்மையொளியுடைமை (- நீலலோகிதன்) 'இருவரென நின்றமையினையும் குறிக்கும் என்பது 'மூவரென - இருவரென முக்கண்ணுடை மூர்த்தி - தேவன்' என்ற தொடரின் கருத்தாகும்*

*இறைவனது வலக்கண்ணிலிருந்து அயனும், இடக்கண்ணிலிருந்து அரியும் நெற்றிக்கண்ணிலிருந்து உருத்திரனும் தோன்றியமையைப் புராணங் கூறும்; இறைவனது ஒளிவடிவு பெண்ணழகும் ஆணழகுங்கொண்ட கிருஷ்ணபிங்கள நிறமுடைமையை (நீலலோகிதன்) வேதம் கூறும்.*

கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார்பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத் தானை
மறையார்புகழ் ஊரனடித் தொண்டனுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினையே 10

**ந.ச.பொன்னம்பலம்பிள்ளை உரை:**

*(இ-ள்) கரியகடலைச் சூழ்ந்த கழிக்கரை பொருந்திய மாதோட்டமென்னும் நல்லஊரிலுள்ள பக்கங்களிற் பொருந்திய சோலைகளில் வண்டுகள் கீதங்களைப்பாடும் திருக்கேதீச்சரமென்னுந் தலத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானைப் பிராமணர்கள் புகழுகின்ற நம்பியாரூரனாகிய திருவடித் தொண்டன் பாடிய குறைவற்ற திருப்பதிகத்தைப் பாராயணஞ் செய்ய அவரைத் தீவினைகள் அடையா. எ-று.*

*சிறையார் என்னும் அடையை வண்டிக் கேற்றினு மமையும்.*

**க.வச்சிரவேலு முதலியார் உரை:**

*(இ-ள்): கருமை நிறம் பொருந்திய கடல் சூழ்ந்த, உப்பளங்கள் உள்ள மாதோட்டம் என்னும் பெயருள்ள நல்ல நகரில், சிறகுகள் பொருந்திய வண்டுகள் யாழின் இசை போன்ற இசையைச் செய்யும் பொழில்களின் நடுவில் உள்ள திருக்கேதீச்சரத்திற் குடிகொண்டெழுந்தருளிய பரமனை மறைகளை ஓதும் புகழையுடைய ஆரூரனாகிய அடிமைத்தொண்டன் பாடிய திருவருள் குறைவின்றி மிகுவதற்குச் சாதனமாகிய தமிழ்ப்பாடல்கள்*

*பத்தினையும் ஒருவர் பாடி வழிபட அவரைக் கொடியனவாகிய வினைகள் பொருந்தா தொழியும் (வருத்தாது கழியும் ) எ-று.*

**ந. சுப்பையாபிள்ளை உரை:**

*மறை ஆர் புகழ் - மறையை ஆர்த்தலால் வரும் புகழ்: ஆர்த்தல்- பண் பொருந்தப் பாடியருளுதல்; மறை - தமிழ் மறை; "நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க - அர்ச்சனை பாட்டே ஆகும். ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுகென்றார். தூமறை பாடும் வாயார்' என்னும் திருத்தொண்டர் புராணம் ஈண்டுச் சிந்திக்கற்பாலது.*

**இனி, "மறை ஆர் புகழ் உரை செய்த குறையாத் தமிழ்" என்பதற்கு, 'நால்வேதங்களிலே பொருந்தியுள்ள அப்பிரான் புகழை அருரன் எடுத்து விரித்துப் பாடித் துதித்த தமிழ்ப் பாடல்கள் (- வேதசாரமாகிய தமிழ்ப் பதிகம்)' என்று பொருள் கொள்ளினும் அமையும்.*

**இச் செய்யுள், இத் திருப்பதிகத்தினைப் பக்தியுடன் நியமமாகப் பாராயணஞ் செய்வார்க்கு எய்தும் பயன் முதலாயினவற்றைக் குறிக்கும் பாயிரமாகிய திருக்கடைக் காப்புச் செய்யுளாம் என்க.*

### அப்பர் சுவாமிகள் அருளிய திருப்பதிகங்களில்

# திருக்கேதீச்சரம்

பூதியணி பொன்னிறத்தர் பூண்நூலர்
    பொங்கரவர் சங்கரர் வெண் குழையோர் காதர்
கேதீச்சர மேவினார் கேதாரத்தார்
    கெடில வடவதிகை வீரட்டத்தார்
மாதுயரந் தீர்த்தென்னை யுய்யக்கொண்டார்
    மழபாடிமேய மழுவாளனார்
வேதிகுடியுளார் மீயச்சூரார்
    வீழி மிழலையே மேவினாரே.

### திருவாசகத்தில்

# திருக்கேதீச்சரம்

ஏர்தருமேழ் உலகேத்த எவ்வுருவுந் தன்னுருவாம்
ஆர்கலிசூழ் தென்னிலங்கை அழகமர்வண் டோதரிக்குப்
பேரருளின் பமளித்த பெருந்துறை மேயபிரானைச்
சீரியவா யாற்குயிலே தென்பாண்டி நாடனைக்கூவாய்

எனக்குயிற்பத்திலும்,

வந்திமை யோர்கள் வணங்கியேத்த மாக்கரு ணைக்கட லாயடியார்
பந்தனை விண்டற நல்குமெங்கள் பரமன் பெருந்துறை ஆதியந்நாள்
உந்து திரைக்கட லைக்கடந்தன் றோங்கு மதிலிலங் கைஅதனிற்
பந்தணை மெல்விர லாட்கருளும் பரிசறி வாரெம் பிரானாவாரே.

*எனத் திருவார்த்தையிலும் கூறியபடி மண்டோதரியின் பொருட்டு நிகழ்த்திய திருவிளையாடல் திருக்கேதீச்சரத்திற்றான் நிகழ்ந்திருத்தல் வேண்டுமெனவும் அவளுடைய தந்தையாகிய மயன் வாழ்ந்த இடம் மாந்தோட்டமெனவும் சரித்திர ஆராய்ச்சியறிஞர் ஸ்ரீமான் வ. குமாரசாமிப்பிள்ளையவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இஃது உண்மையாயின் திருக்கேதீச்சரத்தின் தொன்மையும் பெருமையும் எத்தகையனவென யூகித்துக்கொள்ளலாம்.*

### திருத்தொண்டர் புராணத்தில்

# திருக்கேதீச்சரம்

அந்நகரி லமர்ந்தங்க ணினிது மேவி
யாழி புடை சூழ்ந் தொலிக்கு மீழந் தன்னின்
மன்னு திருக் கோணமலை மகிழ்ந்து செங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப் பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட்டத்திற்
றிருக் கேதீச்சரத் தண்ணல் செய்யபாத
முன்னிமிகப் பணிந்தேத்தி யன்பரோடு
முலவாத கிழிபெற்றார் உவகை யுற்றார்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# திருக்கேதீஸ்வரர் பதிகம்

**நவாலியூர் க. சோமசுந்தரப்புலவர்**
**1910**

### காப்பு

ஓங்கா ரமதா யொளியாய் வெளியாய்
நீங்கா தருளோ டுநிறைந் தவுவா
பூங்கா லிணைபுந் திபொருத் துதுமெந்
தீங்கா யினதீர்ந் துசிறந் தீடவே.

### குரு

அருவா கியதன் னிலைநீத் தடியேங்
கருவா யுறையா துகளிப் படையக்
குருவாய் வருசுப் பிரமண் யனிரு
மருவார் கழல்போற் றிவணங் குதுமே.

### நாமகள்

எண்ணின் றியபல் லுயிர்நா வினிலுந்
தண்ணென் றிடுபுண் டரிகத் திலுமென்
கண்ணின் றிடுமா றுகலந் துறையும்
பண்ணின் றசொல்வா ணிபதம் பணிவாம்.

### நூல்

1 சி சிவமா மொழிமும் முறைசெப் புநர்வெம்
பவமா ரழல்மீ துறைபஞ் செனவே
அவமா கவழித் தருளந் கணனே
நவரூ பகேதீ சுரநா யகனே.

வா வாதா டிடுமைம் புலன்மா யமலக்
கோதா னவைகுன் றிடவே யருளாய்
சூதா னதனத் துமையா டுணைவா
நாதாந் தகேதீ சுரநா யகனே.

ய யமனார் தருவா தனையா வுமற
வுவமா னமிலுன் பதத்தஞ் சமருள்
பவநா சமிலா தபரா பரனே
நவரூ பகேதீ சுரநா யகனே.

ந  நசியா விருண்மா மலநா ளுமெமை
வசியா வகையின் னருள்வைத் திலையே
சசிசூ டியசங் கரனே நமஞா
னசிவா யகேதீ சுரநா யகனே.

ம  மமகா ரமகந் தைமயக் கமற
வுமையா ளொருகூ றவொழித் தருள்வாய்
எமகா லத்ரிநேத் திரவே கசிவ
நமஞா னகேதீ சுரநா யகனே

2  வா வாவா வெனமன் னுயிர்தம் மையழைத்
தோவா வருளூ டுபுகுத் துமையாள்
தேவா சுரபூ சிதனே சிவவென்
னாவா சகேதீ சுரநா யகனே.

ய  யகரப் பொருளா மெனைநீ சகச
மகரக் கறைமாற் றிமலர்ந் தவருள்
வகரத் தொடுகூட் டிவைகோ ணமலை
நகரத் தகேதீ சுரநா யகனே.

ந  நம்பா நமஞா னவரந் தருமே
கம்பா நமகா லனையட் டசிவ
சம்பா நமவெஞ் சலவஞ் சகர்கள்
நம்பா தகேதீ சுரநா யகனே.

ம  மலமோ திடமண் ணொடுவிண் ணொழியாச்
சலமோங் குபவத் தில்விழுந் தடியேன்
பலமோ சமடைந் தனனின் பதமீ
நலமோங் குகேதீ சுரநா யகனே.

சி  சிந்தா டரவென் பணிசெஞ் சுடரே
நொந்தா விதளர்ந் துநுணங் குழியுன்
செந்தா மரைமா ணடிசேர்த் தருளாய்
நந்தீ சகேதீ சுரநா யகனே.

3  ய  யதுவின் குலமே வியயா தவன்முன்
பதும மெனவே விழிபா தமிட
வதுகண் டடலா ழியளித் தவவா
னதிசூ டுகேதீ சுரநா யகனே.

ந  நந்தா வருள்வைத் தெனையாண் டுநமன்
வந்தா லடபோ வெனவோர் வரமீ

யந்தா மரைசூழ் பழனங் கடொறும்
நந்தோ டுகேதீ சுரநா யகனே.

ம மஞ்சே றுபொன்மா மலைவாங் கிமுனா
ளஞ்சா தபுரத் தரையட் டவனே
பஞ்சா னனசெங் களமீ துபய
நஞ்சே றுகேதீ சுரநா யகனே.

சி சிந்தா குலமோ டெமதீ வினைக
ளெந்தாய் மிகவாட் டவினைத் தனமால்
சந்தார் கழலுன் பததஞ் சமருள்
நந்தா தகேதீ சுரநா யகனே.

வா வாடா விருண்மா மலமா யமலர்த்
தாடா தலைமீ மிசைதாங் குமறைக்
காடா கருவா யுறையுங் கசடர்
நாடா தகேதீ சுரநா யகனே.

4\. ந நசியென் வினையா ணவமா யைநல
சுசிதந் திடுதந் திடுது யபதஞ்
சசியார் சடைவா னவதா ணுவென
நசியா தகேதீ சுரநா யகனே.

ம மடமே தருமா ணவமா யையுடன்
சடமா மிருவெவ் வினைதம் மையழித்
துடனா யுறைபே றுதவுத் தமனே
நடநா தகேதீ சுரநா யகனே.

ச சிவமா கியநின் னியல்புஞ் செறியும்
பவமா முறுமென் னியல்புந் தெரியத்
தவமா ருமொர்சமற் குருவா யருள்வாய்
நவரூ பகேதீ சுரநா யகனே.

வா வா சவனோ டயன்மான் முனிவர்
தூவார் மலர்தூ விநிதந் துதிசெய்
தேவா சிவவென் றுசெபிக் குநர்செந்
நாவா சகேதீ சுரநா யகனே.

ய இயமா னனிருஞ் சுடர்மூன் றினொடு
வயமா னமணீர் வெளிவா யுவெனுந்
துயநா லிருதொல் வடிவா சுகமீ
நயமா னகேதீ சுரநா யகனே.

5 ம மடமான் விழிமங் கையர்மை யலழித்
தடலார் கழலஞ் சரணந் தருவாய்
இடமா துடனின் றெரிகா னிடையே
நடமா டுகேதீ சுரநா யகனே.

சி சிற்றம் பலவா சசபே சசிவா
குற்றம் பலசெய் திடுமிக் கொடியேன்
பற்றும் பவவா ரிதியுட் படிநாள்
நற்றம் பகேதீ சுரநா யகனே.

வா வாசித் தமுறைந் திடவல் வினையை
மோசித் தருள்முத் தியையிக் கணமே
தாசித் தவிகா ரமிலாத் தவர்க
ளாசித் தகேதீ சுரநா யகனே.

ய யமகண் டவிரா வணனேத் துபர
வுமைகண் டசிவப் பொருளே யுனைநா
னமைவுண் டமனத் தொடுபோற் றவருள்
நவகண் டகேதீ சுரநா யகனே.

ந நமஞா லமுயைந் தொழில்நா தசிவா
நமமோ னவரந் தருயோ கசிவா
நமமா திடனா கியபோ கசிவா
நமஞா னகேதீ சுரநா யகனே.

**வணக்கம்**

தேவா வடிபோற் றிசிரந் தனிலு
வாவா வடிபோற் றிபொனார் மதலைப்
பூவா வடிபோற் றிபுகழ்ந் தவர்செந்
நாவா சகே தீ சுரநா யகனே.

விண்ணா சரணம் நுதல்மீ திலழற்
கண்ணா சரணம் கறைதோய்ந் தமிடற்
றண்ணா சரணம் அகமா சுளர்பால்
நண்ணா தகேதீ சுரநா யகனே.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

# திருக்கேதீச்சுவரத்
# தேவாரப்பதிகங்களும்

அவற்றின் பொழிப்புரையும்

## வடமொழியிலுள்ள
# ஸ்ரீ கேதீச்சுவரக்ஷேத்திர
## வைபவமும்

தமிழ் மொழிபெயர்ப்பும்.


யாழ்ப்பாணம் கந்தரோடை

**பிரம்ம ஸ்ரீ. க. ச. வைத்தியநாத**

**சாஸ்திரிகள்**

அவர்களால்


சங்கிரகித்து மொழிபெயர்த்து

கொழும்பு நாட்டுக்கோட்டை

**நகரத்தாருடைய**

கேள்வியும் பொருளுதவியுங் கொண்டு


நாவலர் அச்சுக்கூடத்திலே

முத்திரீகரணமாயின.

சித்தார்த்தி௵ வைகாசிமீ

ௐ

ஶ்ரீகௌரீஶங்கராப்யாம் நம: ।

ஶ்ரீதக்ஷிணகைலாஸமாஹாத்ம்யஸ்தித

ஶ்ரீகோடீஶ்வரக்ஷேத்ரவைபவம் ॥

இதம் கில

வீணாவாணேஶஸ்ய கந்தரோபேந்த்ராத்

வாஸ்தவ்யேந

க. ஸ. வைத்யநாதஶிவேந

க்ருதத்ராவிடவ்யாக்யாநஸஹிதம்

ஶ்ரீஜ்ஞாநஸம்பந்தஸ்வாமிபி: ஸாந்த்ர

பக்திபூர்வாபிஶ்ச விரசித

த்ராவிடபாஷாஸ்தோத்ரஸ்ய

ஸம்வலிதம்,

கும்பகோணஸ்ய

'ஶாரதாவித்யாவஸந்த்ராக்ஷரஶாலாயாம்'

முத்ரிதம்

தேநைவ ஶ்ரீகோடீஶ்வரேண ப்ரகாஶிதஞ்ச

விஜயதேதராம் ।

ராக்ஷஸநாமஸம்வத்ஸரே ஜ்யைஷ்டமாஸி ।

1915.

ஸ்த்ரைணகாரணேஷு விப்ராஜிதம் । ஸர்வலக்ஷணைஸ்ஸர்வமோ
மோஹைஸ்ஸர்வகாமைஸ்ஸுபூஜிதம் ॥௫௭॥ தத்ரஸ்தாவாஸிநஸ்ஸர்வே
ஸாவஜீவநதத்பரா: । அயோத்யா மதுரா மாயா காஶீ காஞ்சீ
அவந்திகா ॥௫௮॥ த்வாரவதீ த்வாரகா ஶ்ரீதக்ஷிணாமூர்த்தே
இத்யபி । ஜந்தூநாம் ஸக்தபக்தாநாம் நகரே தே மோக்ஷதா
யகா: ॥௫௯॥ காஶீயாத்ராவ்யம் மஹாவர்ணம் கர்மணாஞ்சிதிஸ்ஸ்ய
தம் । தஸ்மிந் வர்ணே ஶிவக்ஷேத்ரே மஹாதீர்த்தஸமந்விதம் ॥௬௦॥
அஷ்டாதீர்த்தஶதம் விஷ்ணுக்ஷேத்ரே ப்ருதிவ்யாம் ஹி த்விஜா:। க்ஷேத்ர
மஹாதஶம் தஸ்மிந் காஶீக்ஷேத்ரஸ்ய விஸ்த்ருதே ॥ ௬௧ ॥ ஸஹாநி
மூலக்ஷேத்ராணி ஸாவநேஷு மநீஶ்வரா: । தஸ்மிந் ஸிம்ஹ
மந்தேஶே தே ஶிவக்ஷேத்ரே ஆயம் பரம் ॥௬௨॥ ஶ்ரீதக்ஷிணாமூ
ர்த்திர்வா மஹாக்ஷேத்ராதிபோ ஹி ச । உமாமஹேஶ ஶிவக்ஷே
த்ரே ஸக்தாஶீஷ்டப்ரதாயகே ॥௬௩॥ தமேவ மஹாவிஷ்ணோ:
க்ஷேத்ரே ஆயதநே ஸ்திதம் । பஞ்சாநநோ பஞ்சவக்த்ரோ ஜ்ஞாநமோக்ஷா
யதாயகா: ॥௬௪॥ ஷண்முகஸ்ய த்ரயம் க்ஷேத்ரம் விஸ்த்ருதே
பரமேஶ்வரம் । கணேஶகாநநம் ஸ்கந்தாத்ரி: காமேஶ்வர: ॥
॥௬௫॥ விந்த்யாத்ரிதேவாநாம் ஸந்தி க்ஷேத்ராண்யநேகஶ: ।
ஸிம்ஹாசலம் தேஶ: ஸ்வர்ணக: கிஞ்சித்விஶேஷக: ॥ ௬௬ ॥
தேவாநாமத்ர தேவோ ஸிம்ஹமேரு த்விஜஸத்தமா: । ஶ்ரீத
க்ஷிணாமூர்த்திஸம்ஸ்தாநஸ்ய காரணாச் ॥௬௭॥ மஹா
க்ஷேத்ரேவஸம்பந்தா ஸக்தாநாம் ஸஹாத்ருதா: । வஞ்சக்ருத்ய
நடம் மஹாத்மா நேத்ராநந்தம் கரோதி ஸ: ॥ ௬௮ ॥ ஸநயோ
ர்வேதஸம் வக்தும் ஶக்த ஸந் ஸ்வயம் ஶிவ:। தஸ்மாத்ஸந்த்ரஹா
ஆக்ஷ்ய ஶ்ரீதக்ஷிணாமூர்த்தே ॥ ௬௯ ॥ அத்யாயேதச் ச
தோ தேவாஷ்ய: ஸர்வதேவாஸ்வஸ்வஸ்த்வவாஸிநி ஸம்பத: ।
ப்ராதார ஸமம் பாபாஷ்டாதிஜ்ஞம் முக்த்யா ஸர்வமோக்ஷகா
டாம்வி நஸ்யந்: ॥ ௭௦ ॥

இதி ஶ்ரீதக்ஷிணாமூர்த்திஸம்ஹிதாயாம் ஶ்ரீபுரக்ஷேத்ரமாஹாத்ம்யே
வர்ணநோத்பத்திகதநம் நாம
ப்ரதமோऽத்யாய: ॥

---

## அத² கௌஶ்வரோக்தவிதா⁴நாத் அதிதேவாத்⁴யாய꞉ ॥

ஸ்ரீவத்ஸ꞉ — ஸிம்ஹஜஸ்ய ச மாஹாத்ம்யம் வைப⁴வம் க்ஷேத்ரதீர்த²யோ꞉ । யதா² ப்ரோக்தரகைலாஸமாஹாத்ம்யம் ப்ரமோச்யதே ॥ 1 ॥ ததா² த³க்ஷிணகைலாஸவைப⁴வம் ஹ்ருத்³யம் ஹாவி । மயா நோக்ததீ³க்ஷம் வக்ஷ்யே கஸ்யாபி மாநிபா⁴வா꞉ ॥ 2 ॥ மநோமயத்³விவேஷ்டா꞉ ஶ்ருணுஷ்வம் ஸக்தமங்க³ல்யம் । விஜ்ஞாநம் பா³ஹ்யஜ்ஞ ப்³ரஹ்மஜ்ஞாநாதி³கம் ஸதா³ ॥ 3 ॥ சதுர்யுக³ம் ஸஞ்சித்ய விஶ்வமீஶம் மஹேஶ்வர꞉ । ஜயாநாதீ²ஶம் ஸம்ஸ்யாத்³ய ஸிம்ஹஜஸ்ய த்ரிகூடகே ॥ 4 ॥ ஹிமாத்³ரௌ ஸிம்ஹஜாம் நாதீ²ம் க்ருத்வா நாதீ²ம் ஸாக்ஷாந்முநீநாம் க்ஷேத்ரத்ரயம் விப்ரா ஸம்யமோக்தமோத்தமம் ஸம்யமோத்கஷிதாய யோகிநாம் நமஸ்யா꞉ த்ரீணி ஸ்தா²நாநி போ⁴கதா³நி மோக்ஷாங்கா³ணி ஹி ॥ 5 ॥ ஆரப்⁴ய த³க்ஷகைலாஸ꞉ வ்யாக்⁴ரபுரீ கத்²யதே । ஆரப்⁴ய வாயுஜம் ப்ரோ கைலாஸஸ்தம் ததோ²ச்யதே ॥ 6 ॥ ஶ்ரேஷ்டா²நேவ வ்யாக்⁴ரபுரம் த்ரீணி க்ஷேத்ராணி ஸந்தி ஹி । ப்³ரஹ்மக்ஷேத்ரம் வ்யாக்⁴ரபுரம் ஆரப்⁴ய மாயவஸ்ய ச ॥ 7 ॥ ஶிவக்ஷேத்ரஞ்ச கைலாஸஸ்க்ஷேத்ரம் ஶ்ருதிரோக்தம் । ஸிம்ஹஜாப்யமாநேஶ꞉ ஸர்வதே³ஶேஷு வோக்த꞉ ॥ 8 ॥ யஸ்மாத்³யேவம் தத்ஸதா ஸர்வஸ்யாஸ்ய ப்ரவாஸம் ஶ்ருதம் । தஸ்மிந் க்ஷேத்ராணி தீர்தா²நி ஸந்தி பு³த்³த்⁴யாநிவ ॥ 9 ॥ தேஷாம் ஸர்வஸ்ய மஹிமா த்ரிலோகாநாம் நவித்³யதே । த்ரிகூடவஸ்தோக்தஸ்ய மாஹாத்ம்யம் ப்ரகீர்த்யதே ॥ 10 ॥ கௌஶ்வரநரோக்தி꞉ க்ஷேத்ரதீர்த²ஸமூஹவத் । ஶ்ரேஷ்ட²நரோக்தி꞉ க்ஷேத்ரதீர்த²ஸமேவவத் ॥ 11 ॥ ஸ்ரீமத்க்ஷேத்ரகைலாஸஶிரோமணி வைப⁴வம் । த³க்ஷகைலாஸோத்³ப⁴வம் ச தஸ்ய மாஹாத்ம்யமுச்யதே ॥ 12 ॥ ஸ்ரீகாஞ்சீக்ஷேத்ரஶிரோமணீஸ்தவ வைப⁴வம் । ஸர்வநாஶாய தீர்த²ஸ்ய மாஹாத்ம்யம் விஶேஷவத் ॥ 13 ॥ கந்யாகுமார்யாம் ஸம்ஹிதாநம் ஸமுச்யதே । ஸேதுமத்⁴யே ஸ்நாநம் தீர்த²பி³ந்து³ ஸமுச்யதே ॥ 14 ॥ மஹாஸ்ரீ

[illegible]

ஷயம்ஹாஶ்வஶ்ரஶ்வதஶ்ஷிவ: ॥௧௧॥ ெகஷீஶ்வர ஜோ ஆம் ஶம் க்ஷீர
காணஸ்வ தீரெக । ஸவதுஜொரகஹிதாகருதாய வதஞெத ஜா
நிவாஸிவா: ॥ ௧௨ ॥ தத்ர க்ஷீரஜோகாணெ ஸாநம் க்ருத்வா
விெஜாதஜ: । ஸஹவத்ஸ விதரெஷவாநாம் ஷஶஷாநம் ஷஷாதி
வெசு ॥ ௧௩ ॥ ெகஷீஶ்வரம் நஜோஸ்க்ருத்வா ஸாயாஜ்யம் ஶஹெத த்ருவம் ।
ெயா நெரா ஜநஜெஸ்ய தா ெகஷீஶ்வரஜோநாம் ஸெராக ॥௧௪॥
ஸவதுவாவவிஶாஷாதா ஶிவெஜாெக ஜோஹிரெத । க்ஷீரகாம்
ெய நிஜெஜ்யா ெயா நக்வா ெகஷீஶ்வரம் விஹாய ॥௧௫॥ ஹாகிஜா
கிகாரெஶா ெஶா நாத காயதா விவாரணா । க்ஷீரகாணெ நி
ஜஜ்யாய ெகஷீஶ்வரம் நிெஷவ்யெத ॥ ௧௬ ॥ ப்ரஹ்மஹத்யாதிவா
ெவஷ்யா ஜாவ்யெத நாத்ர ஸம்ஶய: । க்ஷீரகாணஸ்வ தீெர
தா விஷ்ணும் ஷக்வா நெராதஜ: ॥௧௭॥ ஶயாஶ்ராஜவஸம் வாணாம்
ஶஹெத நாத்ர ஸம்ஶய: । ப்ரஹ்மவிஷ்ணுஜெஹஶாஷ்யா ஷெவஶய
வதுராக்ஷவா: ॥௧௮॥ விஷ்யாயெராரஶவஸாஜ்யா: கிஷாரா ஶரா
ஜாவயா । க்ஷீத்யா வஸவெஶுவ ஜாநயவஸ்கவாஷிந: ॥ ௧௯ ॥
கவிந்து ெக்ஷெத்ர வஸஷிஷ ஸதநம் தாஷஜாநவா: । தஸ்யா
வி ெவெஹவம் வக்தும் நாஹம் ஶக்தா நெவதர: ॥௨0॥ வஶா
வக்ஷிநரஸெவது ஜ்யாஷ்யாஸவதுஜஷவ:। யஷா வ ஜரணம் வத்ர
வா: ெகஷீஶ்வரவஹாவத: ॥ ௨௧ ॥ ஶிவாஶயஸ்ய ஹாெஶதா
ஶிெராநிக்ஷிவ்ய ஶாயிந: । தஷா ஹவஷி ெதஷாஷா ஸெவது
ஷாம் ஷக்ஷகணதுெக ॥ ௨௨ ॥ உவஷிஶ்யதி யஜுராதா ஶஷரவஸ
ரகம் ஜநாய । தஸாதாயாஜ்யவஷவீ ஜோவாஸவதுஷெஹிந: ॥
॥௨௩॥ வநதஸ்யஷஸம் வாணாம் நஹாெதா நஹவிஷ்யதி ।
ஜோகவஷ்ரவாெர ஜாதா ஜஷவதா ஜாநெவாவி வா ॥ ௨௪ ॥
தஸ்ய ஜாகி: கரஸா ஸ்யாக் கிஜாதாந்யா விஹாரயஶ: । ஸா
க்ருதிவாய வாவீ வா ெக்ஷெத்ரzஸிந்து ஜரணாஜகம் ॥௨௫॥ க்ஷீ
ரகாணெ நிஜெஜ்யாய நக்வா ெகஷீஶ்வரம் விஹாய । க்ருக்வா ஷிக்ஷா
டநம் வாவி வஸெத நியெதந்த்ரிய: ॥௨௬॥ காஶெகாடிஷஜோயா
க: ஶிவஸாயாஜ்யஜோவாயாக । கவிந்து ெக்ஷெத்ர நெரா ஹக்த்யா
ஜவா வணக்ஷரம் ஜோநாய ॥௨௭॥ வாரஶ்வயதுராஜ க்ருக்வா தா
வஸிஜ்யெத நாத்ர ஸம்ஶய: । ஜோநய உவாச:— ெகஷீஶ்வரஷிஷம்

க்ஷேத்ரே ஸ்மிந் ப்ராகதம் ரூபா மதேந ॥ ௩௮ ॥ மஹாரூபஸ்ய சா
ரம் நாம கதமஸ்ய பவிஷ்யதி? । ஶ்ரீஸூத உவாச:— சாமர ரூ
பா ஸமாமத்ய ரூத்ரரூபேண நிமஜ்ய ஸ꞉ ॥ ௩௯ ॥ கௌரீஶாரம் ஸம
ப்யர்ச்ய தபஸ்யே ப்ரத்யதே மஹேந்த்ரதம் । ஸ தபஸ்யந்தோ ஜயஸ்
வலா தாஷ்டமாநஸ꞉ ॥ ௪௦ ॥ ப்ராதுர்பூதோ மஹாதேவ꞉
சாருத்ரா ஸஹித꞉ ப்ரபு꞉ । தம் த்ருஷ்ட்வா சரயா பக்த்யா
ஸ்தோத்ரம் ப்ரசக்ரமே ॥ ௪௧ ॥ ரூபஷ்டா— "நமஸ்தே ஸாம்ப ரு
த்ராய நமஸ்தே சாமாததே । ஶோணாத்ரிநிவாஸாய கௌரீஶாய
நமோ நம꞉ ॥ ௪௨ ॥ நமஸ்தேऽவிமநாஶாய நமஸ்தே பயநாஶந ।
ஶோணாத்ரிநிவாஸாய கௌரீஶாய நமோ நம꞉ ॥ ௪௩ ॥ ஶூலிநஸ்த்ரி
ஜகத்ரூபாய ஹர்யாயாரநிரூபாய ச । ஶோணாத்ரிநிவாஸாய
கௌரீஶாய நமோ நம꞉ ॥ ௪௪ ॥ ப்ரபவிஷ்ணவே ரூபாய ஸ்ரு
ஷ்டிஸம்ரக்ஷஹேதவே । ஶோணாத்ரிநிவாஸாய கௌரீஶாய நமோ
நம꞉ ॥ ௪௫ ॥ உமாஸந்நித்யதேஹாய காரண்யவாரணாய ।
ஶோணாத்ரிநிவாஸாய கௌரீஶாய நமோ நம꞉ ॥ ௪௬ ॥ நமஸ்து
ரரூபாய ஸர்வப்ராணநாயக । ஶோணாத்ரிநிவாஸாய
கௌரீஶாய நமோ நம꞉ ॥ ௪௭ ॥ நமஸ்தே ஜகதாதார நமஸ்ரவிஜாம்
ப்ரணே । ஶோணாத்ரிநிவாஸாய கௌரீஶாய நமோ நம꞉ ॥ ௪௮ ॥
சாந்த்ரம் தேஹி ரூபாம் தேஹி தேஹி ஸத்கீர்த்திமேவ ச । ஶோணா
த்ரிநிவாஸாய கௌரீஶாய நமோ நம꞉" ॥ ௪௯ ॥ ஸ்தோத்ரேணாநே
ந ஸந்துஷ்ட꞉ ஸ்ருஷ்டாரமீதப்ரவீத் । ஈஶ்வர உவாச:— ஶ்ருணு
ரூபஷ்ட꞉ ப்ரவக்ஷ்யாமி க்ஷேத்ரம் ஸமேதாதேமாத்ம ॥ ௫௦ ॥ த
ஸாதிமேவ நிவஸ மயி பக்தா பவிஷ்யஸி । சத்ய ப்ரப்ருதிமோ
கேऽஸ்மிந்நிதம் ரூபஷ்ட்ரசாரம் பவேத் ॥ ௫௧ ॥ விஶ்வகர்மேதி தே
சாத்ரா மத்ப்ரஸாதாத்பவிஷ்யதி । இதி தத்வா வரம் ஶம்பு꞉ஸ்
வேயாநம் சகார ஸ꞉ ॥ ௫௨ ॥ ஶ்ரீஸூத உவாச:— ஸம்தத ஸ்மு
ஸம் க்ஷேத்ரம் ந பூதேந பவிஷ்யதி । த்ருதீயம் ஶிவாரம் ச
ஶாஸ் மாஹாத்ம்யமநுஸ்தம் ॥ ௫௩ ॥ தத்ர ஸாரூபா மஹாதேவத்
பக்தியுக்தேந சேதஸா । ஶ்ரீமாஹாத்ம்யநிஶாராதந்ய மமேதத்ய
ரமேவ ச ॥ ௫௪ ॥ ஹநநமேஶாரு ராமேஶம் மிரிஜாஸஹிதம்

यः । दृष्ट्वैतान् सर्वकामांस्तु लभते नात्र संशयः ॥ ४५ ॥
गिरित्रयं प्रसेवित्वा महापातकनाशनम् । धनधान्याय
बलदं पुत्रपौत्राणामिष्टदायकम् ॥ ४६ ॥ सर्वरोगप्रशम-
नं सर्वपापविनाशनम् । यस्त्वत्र लभते पात्रं स-
दा मङ्गलदायकम् ॥ ४७ ॥

इति श्रीदक्षिणकैलासमाहात्म्ये
कौशीश्वरकौतूहले
कौशीश्वरोत्पत्तिकथनं नाम
द्वितीयोऽध्यायः ॥

---

२

अथ श्रीमदगस्त्यमाहात्म्ये तपस्सिद्धिप्रदानं नाम
तृतीयोऽध्यायः ॥

[अगस्त्यादयस्सर्वे पूर्वा महर्षये पार्वतीपरिण-
यं दृष्ट्वा कैलासतो जग्मुः । तद्भारेण उत्तरं निम्नं द-
क्षिणमुन्नतमभवत् । तेन सर्वे मूर्च्छिताः संभ्रान्ताः । त-
स्मिन् काले परमेश्वरो भूमेस्समत्वाय [illegible] अगस्त्यं
दृष्ट्वा वेदारण्ये त्रिकूटस्य [illegible] क्षेत्रेषु वसे-
त्युक्त्वा प्रेषितवान् । ततोऽगस्त्यो द-
क्षिणकैलासे कोणेश्वरस्थलं कालयाम सर्वती-
र्थेश्वरान् सेवित्वा [illegible] कृत्वा सिद्धिं संप्राप्य स्तु-
त्वा तदाऽस्तौत् । तस्मै [illegible] पार्वत्या सह
तस्मै कल्याणसुन्दररूपं दर्शयित्वा तिरोदधे] ॥

अथ तस्मिन् [illegible] कालं [illegible] । [illegible]
कार्यं तपः कृत्वा [illegible] क्षेत्रे तीर्थयोः ॥ तपः
सिद्धिं संप्राप्तं यया कौशीश्वरस्तुतम् । स्नात्वा क्षीरस-
मागमे [illegible] । नत्वा कौशीश्वरं देवं
संपूज्य विधिवत्पुरा । [illegible] हृष्ट्वा त-
तः स्तोत्रं प्रचक्रमे ॥

अगस्त्यः—कैलासवासिन् गौरीश शरणागतवत्सल । श्रीमत्स्रष्टृपुराधीश पाहि मामीश्वर प्रभो ॥ १ ॥ गणेशस्कन्दजनक वृषवाहन शङ्कर । श्रीमत्स्रष्टृपुराधीश पाहि मामीश्वर प्रभो ॥ २ ॥ सामगानप्रियानन्द चन्द्रसूर्याग्निलोचन । श्रीमत्स्रष्टृपुराधीश पाहि मामीश्वर प्रभो ॥ ३ ॥ सर्वलोकान्तरूप कालकालविनाशन । श्रीमत्स्रष्टृपुराधीश पाहि मामीश्वर प्रभो ॥ ४ ॥ ब्रह्मविष्णुस्वरूपाद्य बिन्दुनादमय प्रभो । श्रीमत्स्रष्टृपुराधीश पाहि मामीश्वर प्रभो ॥ ५ ॥ सच्चिदानन्दरूपेश षाड्गुण्य परमेश्वर । श्रीमत्स्रष्टृपुराधीश पाहि मामीश्वर प्रभो ॥ ६ ॥ पशुपाशपरिच्छेद पशूनां नायक प्रभो । श्रीमत्स्रष्टृपुराधीश पाहि मामीश्वर प्रभो ॥ ७ ॥ कामेश करुणासिन्धो कालिकाद्युपवन्दित । श्रीमत्स्रष्टृपुराधीश पाहि मामीश्वर प्रभो ॥ ८ ॥ नमस्ते विश्वरूपाय नमस्ते विश्वनायक । नमस्ते वामदेवाय नमश्शिवपरात्पर ॥ ९ ॥ अपराधसहस्राणि क्रियन्तेऽहर्निशं मया । दासोऽयमिति मां मत्वा क्षमस्व मामीश्वरेश्वर ॥ १० ॥

श्रीसूतः—इति स्तुत्वा महादेवं कुम्भयोनिस्सुहर्षितः । श्रीकण्ठाख्यमिदं लिङ्गं तत्र स्थाप्य महामुनिः ॥ पूजयित्वा यथान्यायं वेदागमविधानतः । जप्त्वा प्रदक्षिणं कृत्वा नत्वा स्तोत्रं समारभे ॥ अगस्त्यः—“नमश्शिवाय साम्बाय सगणाय सनन्दिने । गणेशस्कन्दनाथाय श्रीकण्ठेशाय ते नमः ॥ १ ॥ ज्योतिर्मयाय शान्ताय नादान्तनिलयाय च । गङ्गाधराय शर्वाय श्रीकण्ठेशाय ते नमः ॥ २ ॥ सच्चिदानन्दरूपाय षाड्गुण्यपरिपूरित । चन्द्रसूर्याग्निनेत्राय श्रीकण्ठेशाय ते नमः ॥ ३ ॥ पञ्चकृत्यपरेशाय परमानन्ददायिने । पराशक्तिसमेताय श्रीकण्ठेशाय ते नमः ॥ ४ ॥ वृषाङ्क वृषभारूढ सर्वसारसुचितविग्रह । चन्द्रचूडाय नित्याय श्रीकण्ठेशाय ते नमः ॥

உ

சிவமயம்.

# திருக்கேதீச்சுவரக்ஷேத்திர

# வைபவம்.

---

விநாயகவணக்கம்.

பிரணவப் பொருளாய்ப் பேரொளி யுருவாய்த்
தந்தி வதனமுந் தொந்தி யுதரமும்
நான்கு புயமு மைந்து கரமுங்
கொண்டருள் விநாயகக் கடவுட னடியிணை
விக்கின நிவாரண மாகப்
பக்தியொ டேத்தித் தொழுவோம் யாமே.

---

## முதலாவது அத்தியாயம்.

### புராணவரலாறு.

முன்னொருகாலத்திலே, பிரமதேவராற் செலுத்தப்பட்ட தருப்பைச் சக்கிரத்தினாலே புண்ணியபூமியென்று குறிக்கப்பட்ட நைமிசாரணியவனத்திலே வாசஞ்செய்த மோக்ஷவிச்சையுடைய பிரம்மஜ்ஞானிகளும், இந்திரியநிக்கிரகமும், அடங்கிய கோபமும், ஜீவகாருணியமும், அஷ்டாங்க யோகானுபவமும், பஞ்சயஜ்ஞப் பெரும்பற்றும் உள்ள மஹாத்மாக்களுமாகிய சௌனகாதிமுனிவர்கள் கோமதியாற்றங்கரையிலே, தீர்க்கசத்திரமென்னும் யாகத்தைச் செய்திருந்தனர்.

அச்சமயத்திலே சகலபுராணங்களையு முணர்ந்தவரும், குருவாகிய வியாசபகவானுடைய அருளைப் பூரணமாகப்பெற்ற முற்றத்துறந்த மஹாத்மாவும் ஆகிய சூதமஹாமுனிவர்,மரவுரி, சடை,உருத்திராக்ஷமாலை,திரிபுண்டரமுதலியன பிரகாசி

க்குங் கோலமுடையராய் அவ்விடத்தையடைந்தனர். அங்ஙனமடைந்த முனிவர்பெருமானைக் கண்ட நைமிசாரணியவிருடிகள் விரைந்தெதிர்கொண்டு சென்று அவரை வணங்கி யுபசரித்து, அழைத்து வந்து தங்களுக்கு மத்தியில் உயர்ந்த பரிசுத்தமான வாசனத்திலிருத்தி அர்க்கிய பாத்தியா சமனீயாதிகளால் முறைப்படி பூசித்துத் தாங்கள் நெடுங்காலமாகக் கேட்கவேண்டுமெனப் பேராவல்கொண்டிருந்த புராணசரிதங்களை உலகிலுள்ளார் பிறருமறிந்தீடேறும்வண்ணம் அத்தவக்கிழவராகிய முனிவர்பெருமானிடங் கேட்பாராயினர்.

ஓ! சகலதருமங்களையும் போதியாநின்ற மஹாபாக்கியவானான முனிசிரேஷ்டரே! தேவரீரிடத்திலே நாங்கள் சகலபுராணங்களையுங் கேட்டோமாயினும் இன்னும் ஒன்று கேட்க விரும்புகின்றேம். அஃதாவது தேவரீரால் வடகயிலை தென்கயிலையென்னு மிருகைலாச ஸ்தானங்கள் பூமியிலே யாவர்க்கும் மோக்ஷங்கொடுக்கு மியல்பினவாயிருக்கின்றனவென முன்பு கூறப்பட்ட அவற்றின் விரிவேயாம். ஆகையால், நற்றவத்தீர்! அவற்றினுற்பத்தி விபவங்களை எங்களுக்குச் சவிஸ்தாரமாகத் தயைகூர்ந்து சொல்லியருளவேண்டுமென்றார்கள்.

அப்பொழுது சூதமஹாமுனிவர் ஓ முனிவர்களே! மஹான்களும் மேதாவிகளுமாகிய உங்களாற் செய்யப்பட்ட சகலலோகஜனங்களுக்கும் நன்மைபயப்பதான இந்த உத்தமப் பிரஸ்னமானது மிகவுநன்றாயிருக்கின்றது! நன்றாயிருக்கின்றது!! ஓ! சௌனகாதிமுனிவர்களே! உங்களாற் கேட்கப்பட்ட பரம இரகசியமான இச்சரித்திரம் ஆதியிற் ஸ்ரீ பரமேஸ்வரனாற் றிருநந்தியந்தேவருக்கும் அவராற் சநற்குமாரமுனிவருக்கும் அச்சநற்குமாரமுனிவரால் முனிவர்பெருமானாகிய வியாசபகவானுக்கும் குருமூர்த்தியாகிய அவரால் எனக்கும் உபதேசிக்கப்பட்டது. அத்தகைய சகல புராணேதிகாசங்களின் சாரமாயுள்ள இதனை மெய்யன்புடனே கேட்கு முங்கட்குச் சவிஸ்தாரமாகச் சொல்லுகின்றேன். ஆதரவுடன் புலன்வேறின்றிக் கேளுங்களெனச் சொல்லத்தொடங்கினர்.

ஓ! சௌனகாதிமுனிவர்களே! பிரமபுராணம், பதுமபுராணம், விஷ்ணுபுராணம், சிவபுராணம், தேவிபுராணம், பவிஷ்யோத்தரபுராணம், நாரதபுராணம், மார்க்கண்டேயபுராணம், அக்கினிபுராணம், பிரமகைவர்த்தபுராணம், இலிங்கபுராணம், வராகபுராணம், கந்தபுராணம், வாமனபுராணம், கூர்மபுராணம், மத்சியபுராணம், கருடபுராணம், பிரம்மாண்டபுராணம் எனப் புராணங்கள் பதினெட்டு. அவற்றுள் பிரமபுராணம், பதுமபுராணம் என்னும் இரண்டும் பிரமாவுக்குரியனவென்று அறிஞராலுரைக்கப்பட்டன. அங்ஙனமே அக்கினியைக்குறித்து அக்கினிபுராணமும், சூரியனைக்குறித்துப் பிரமகைவர்த்தபுராணமும், விஷ்ணுவைக்குறித்து நாரதபுராணம், கருடபுராணம் விஷ்ணுபுராணம் என்னும் மூன்றும், சிவபெருமானைக் குறித்துச் சிவபுராணம் பவிஷ்யோத்தரபுராணம் மத்ஸியபுராணம் இலிங்கபுராணம் கூர்மபுராணம் வாமனபுராணம் மார்க்கண்டேயபுராணம் பிரமாண்டபுராணம் கந்தபுராணம் வராகபுராணம் என்னும் பத்துப் புராணங்களும், தேவியைக்குறித்துப் பாகவதபுராணம் கூறும். இவைதவிர உபபுராணங்களும் பதினெட்டுண்டு, அவை சநற்குமாரபுராணம், தூர்வாசபுராணம், நரசிங்கபுராணம், வாமனபுராணம், சிவதருமபுராணம், பவிஷ்யபுராணம், நாரதபுராணம், கபிலபுராணம், கந்தபுராணம், பிரமாண்டபுராணம், காளிகாபுராணம், மஹேசபுராணம், ஸௌமியபுராணம், பார்க்கவபுராணம், ஸௌரபுராணம், பராசரபுராணம், மரீசிபுராணம், வருணபுராணம் என்பனவாம்.

இப்புராணங்களெல்லாம் சகலலோகங்களினது மிதத்துக்காக எங்கள் முன்னோரால் தெரியப்பட்டுள்ளன. இத்தகைய பலபுராணங்களினதும் சாராம்சங்களை ஒருங்குதிரட்டித் தக்ஷிண கைலாசமான்மியமெனப் பேர்புனைந்துளவிதனை ஆர்வத்தோடு கேட்பீர்களாகவென்று உதாரமும் விநயமும் விளங்குமியல்பினராகிய சூதமகாமுனிவர் அஞ்சலியஸ்தராய்க் கடவுள்வணக்கங் கூறுவாராயினர்.

வேதசாஸ்திரங்களைக் கற்றறிந்த தெளிந்த புத்தியினையும் புலித்தோலாடையினையும், தேவர் முனிவர்களது வணக்கத்

தினையும், கவித்தன்மையினையும், பிரம்மானுசந்தானத்தினை யும், பிரம்மதேஜஸ்ஸையும், பொன்மயமும் மஞ்சணிறமுமாய் விளங்காநின்ற ஜடாபாரத்தினையு முடைய முனிவர் திலகமாகிய ஸ்ரீ வேதவியாசமகாமுனிவரை நமஸ்கரிக்கின்றேன். என்றும்,

வசிஷ்டமுனிவருக்குப் பிரபௌத்திரரும், சக்திமுனிவருக்குப் பௌத்திரரும், பராசரமுனிவருக்குப் புத்திரரும், சுகப்பிரம்மமுனிவருக்குப் பிதாவும் தூய்மையும், தவநிலையுமுள்ள வியாசபகவானை வணங்குகின்றேன். என்றும்,

விஷ்ணுரூபியாகிய வியாசமகரிஷிக்கும் வியாசரூபங் கொண்ட விஷ்ணுவுக்கும் பிரம்மநிதியாகிய வசிஷ்டமகரிஷிக்கும் நமஸ்காரம். என்றும்,

மேலும், ஸ்ரீ விக்கினேஸ்வரர், பஞ்சமூர்த்திகள், பஞ்சசத்திகள், சுப்பிரமணியர், துர்க்காதேவி, வைரவக்கடவுள், சரஸ்வதி, நவக்கிரகங்கள், நக்ஷத்திரங்கள், இராசிகள், திக்குப்பாலகர்கள், சத்தமாதர்கள் என்னும் இவர்கள் யாவரையும் அருட்செல்வத்தை வேண்டி நமஸ்கரிக்கின்றேன். என்றும்,

நான்குமுகமில்லாத பிரம்மாவும், இருபுயங்களையுடைய இரண்டாவது விஷ்ணுவும், நெற்றிக்கண்ணில்லாத பரமேஸ்வரனும் அப்பகவான் வாதராயணரே யாகையால் மேலுமவரை நமஸ்கரிக்கிறேனென்றும் கூறி, இங்ஙனம் குருமூர்த்திகளையும், தேவர்களையும் நமஸ்கரித்துக்கொண்டு, சூதமகாமுனிவர் புராணப்பிரசங்கஞ் செய்வாராயினர்.

---

## இலங்கைச்சிறப்பு.

ஓ! சௌனகாதிமுனிவர்களே! அங்கம், வங்கம், கலிங்கம், காம்போசம், கௌசிகம், காஸ்மீரம், சூரம், கூர்ச்சரம், பர்ப்பரம், அருணம், குரு, காந்தாரம், ஹூணம், ஸௌவீரம், ஸௌராஷ்டரம், மஹாராஷ்டரம், மத்திரம், மகதம், மாஜரம், நிஷதம், சிந்து, தசார்ணம், மாளவம், சோளம், கேரளம்,

சிம்மளம், கௌடம், நேபாளம், பாஞ்சாலம், வங்காளம், மலையாளம், கோடகி, வீடம், கடகம், மரகாடம், கர்நாடம், கரகாடம், பாஞுடம், பாண்டியம், புளிந்தம், திரிகர்த்தம், குந்தளம், அவந்தி, விதேகம், விதர்ப்பம், மத்ஸியம், வத்ஸகம், சகலம், பாகசாவந்தி, யவனம், சாலுவம், வாஹலிகம், கேகயம், கோசலம், கொங்கணம், டங்கணம் என்னும் இந்த ஐம்பத்தாறுதேசங்களிலும் சிம்மளதேசம் சிரேட்டமானது.

கல்விவிருத்தி பொருட்பேறு ஆன்மசுகம் என்பன எத்தேசத்திலே இல்லையோ அந்தத் தேசத்திலே ஒருநாள்தானும் வசித்தல் கூடாது.

தேவகடாக்ஷமில்லாத தேசத்தையும், இடர்செய்யும் பங்காளிகளையும், கடுமுகியான மனையாளையும், ஞானமில்லாத குருவையும் நீக்கல் தகும்.

தேசாந்தரங்களைத் தீபாந்தரங்களை யடைந்துளராயினும் தீர்த்தயாத்திரை செய்பவரைப் புண்ணியசாலிகளென்று கொள்ளத்தகும்.

தபமும் புண்ணியக்ஷேத்திர யாத்திரையும் கேரளம் கொங்கணமொழிந்த தேசங்களில் மரணுந்த வாசமும் செய்பவர்களைப் புண்ணியவான்களென் றெப்பத்தகும்.

பூமியின் மத்தியிலே சகலதேசங்களுக்கு முத்தரபாகத்திலே மகாமேருவென்னு மோர் மலையுளது. அதனருகே திருக்கைலாசமென்னு மொரு சிறந்த வெள்ளிமலை பிரகாசித்திருக்கிறது. அம்மலையிலே பார்ப்பதி அம்மையாரும் பரமேஸ்வரப் பெருமானும் பிரத்தியட்சமாக எழுந்தருளி யிருக்கின்றனர். ஆதி சேதுமுதல் அக்கைலாசமலைவரையும் உள்ள தேசம் கர்மபூமி யெனப்படும். அவ்விடம் ஒன்பதினுயிரம் யோசனை தூரவிசாலமும் நூறுயிரம் யோசனை தூர நீளமுமுடையது. மேருமலைக்குத் தென்பாகத்தில் இமயமலைக்குஞ் சேதுவுக்கும் இடைத்தேசம் காமாசலம், பிரபாஸதீர்த்த மென்பவை யுட்பட்ட பரதகண்டமெனப்படும். இப்பரதகண்டம் ஒன்பது பா

2

கமாக முன்னரேயே பகுக்கப்பட்டிருக்கிறது. அவற்றுள் குமாரீகண்டமு மொன்று. அக்குமாரீகண்டமோ தன்னிடத்திருந்து அற்பபுண்ணியஞ் செய்யினும் ஒருவனுக்குப் பெரும்பலன் சித்திக்கச் செய்யுந் தன்மைபதன்றோ!

ஓ. இருபிறப்பாளர்களே!! சமுத்திரத்தாற் சூழப்பட்ட சேதுமத்திய ஸ்தானமாகிய அக்குமாரீகண்டத்திலேயே திரிகூடஸ்தலம் விளங்குகின்றது. அத்திரிகூடத்துக்குச் சமமான தலம் பிறிதொன்றுமில்லை யெனலாம். மற்றைய தேசங்களிலே உள்ள துன்மார்க்க சாரிகளாகிய அரசர்களோ பூமியின் வரவு பாகங்களை அவ்வத்தேச ஜனங்களிடம் ஆறிலொன்றாக வாங்கி நரகத்துக்காளாகின்றனர். இந்தத் திரிகூடமென்னும் இலங்கைத் தேசத்திலே அங்குள்ள பெருமையுள்ள அரசர்கள், அந்தத்தேசக் குடிசனங்களின் நன்மையைப் பெரிதுங் கருதுபவர்களாய்ப் பூமியின் வரவுபாகங்களைப் பத்திலொன்றாகப் பெற்றுத் தருமமுறை பிறழாது இராச்சிய பரிபாலனஞ் செய்கின்றனர்.

சில தேசங்களிலே உள்ளவர்கள் தங்க ளருமைக் கன்னியர்களைக் "கன்யாசுல்க" மென்னுஞ் சாக்கினால் வேதவிரோதமாக விலைக்கு விற்று மகாபாவத்துக் காளாகிக் கற்பகாலம் நிரயத்துன்பத்தை அடைகின்றனர் "தமது நிலத்தை ஈடுவைத்தல், கன்னிகைகளை விற்றல், பசுவைவிற்றல், அரசனைப்பகைத்தல், கொடியவார்த்தைபேசுதல் என்னு மிவ்வைந்துங் குலத்தைக் கெடுப்பன" வாகையால் மேற்கூறியவாகளைப் போல அவ்வீழநாட்டவர்கள் தங்கள் கன்னிகைகளை ஒருபோதும் விற்பதில்லை. ஆபரணங்கள், விளைநிலங்கள், வீடுகள், உபகரணங்கள், வேலைக்காரன், வேலைக்காரி, வண்டியெருதுகள், கறவைப் பசுக்கள், பொன் முதலிய பலவித வரிசைகளுட னலங்கரிக்கப்பட்ட மகளுக்களைச் சகலசற்குண வித்தியாசம்பூரணரும் திடகாத்திரமுடையருமாகிய வரர்களுக்குத், தசப்பொருத்தமும், நன்மூர்த்தமு மமையத் தந்தையுந் தாயும் வேதாகம விதிப்படி தாராதத்தஞ் செய்வதே வழக்கமாகும்.

மேலும், அவ்விலங்கைத் தேசம் அநேக சிவக்ஷேத்திரங்கள், விஷ்ணு ஸ்தலங்கள், விநாயக சுப்பிரமணியாலயங்கள்,

புண்ணிய விருக்ஷங்கள், நதிகள், நகங்கள், வாவிகள், கூபங்கள், ஔஷதிகள், பலவகைப் பக்ஷிகள். பலவகை மிருகங்கள் உலோகங்கள் முதலியன யாவும் பொருந்தப் பெற்றிருக்கின்றது. எக்காலமும் பயன்றருவனவாயங்கே நிற்கும் மரங்கள் செடிகள் கொடிகள் முதலியனவும் பலவுள. மனோரம்மியமான புஷ்பங்கள் பழவர்க்கங்கள் கிழங்குகள் முதலியனவுமிருக்கின்றன. அங்கே வசிக்கும் மனிதர்கள் யாவரும் சுகசீவனஞ் செய்வதிலே பற்றுடையவர்கள். இங்ஙனமே பலவகைப் பெருமையையும் அத்தேசம் பெற்றிருக்கின்றது.

பூமியிலே உள்ள அயோத்தி மதுரை மாயை காசி காஞ்சி அவந்தி துவாரகை துவட்டாபுரி தென்கயிலை எனனும் ஒன்பது நகரங்களும் பக்தி சிரத்தைகளை உடைய ஆன்மாக்களுக்கு மோக்ஷங்கொடுக்கும் தானங்களாம் அவற்றுள்ளே துவட்டாபுரி தென்கயிலை என்னுமிரண்டுஞ் சிறநதவை. அவைகள் கன்மபூமியென முன்விதந்து கூறிய குமாரிகண்டத்திலே விளங்குகின்றன. ஆயிரத்தெட்டு சிவஸ்தலங்களும் நூற்றெட்டு விஷ்ணு க்ஷேத்திரங்களும் பதினெட்டுக் குகாலயங்களும் விளங்கும் பெருமைவாய்ந்த அக்குமாரிகண்டத்திலே யுள்ளமோக்ஷஸ்தானங்களாக எண்ணப்படும் அவற்றின் பெருமையை யார்தான் கூறவல்லுனர். அடியார்களுக் கருள் புரிதலில் அவை முதன்மை பெற்றனவாயிருக்கின்றன.

பெருமை பொருந்திய தக்ஷிண கைலாச மென்னுந் திருக்கோணசலத்திலே சிவபெருமான் உமையம்மையாருடனே பிரத்தியக்ஷமாக விருத்தலினாலும்; மாதோட்டமென்னுந் திருக்கேதீஸ்வரத்திலே பரமேஸ்வரன் அடியார்க் கருள்புரியும் நோக்கமாகக் கௌரியம்பிகை நேத்திரானந்தங்கொள்ளப் பஞ்சகிருத்தியத் திருநடனஞ் செய்து கொண்டிருத்தலினாலுஞ் இவ்விலங்கைத் தேசமானது ஐம்பத்தாறு தேசங்களிலும் சிறந்ததாக விருக்கின்றது. இதற்கொப்பானதேசம பிறிதொன்று முன்னுண்டானதுமில்லை இனி உண்டாவதுமில்லை என முக்காலங்களையுமுணர்ந்த சூதமுனிவர் கூறிப் பின்னுங் கூறுகின்றார்.

ஓ முனிவர்களே! இந்த இரண்டு தலங்களினதும் வைப வங்களைச் சிவபெருமான் ஒருவரே சொல்லவல்லவர். ஏனைய சிற்றறிவினராகிய எம்போலிகளால்எடுத்துக் கூறுதல்கூடாது. ஆயினும், அன்பர்களே! எனக்குத் தெரிந்த சுருக்கமான விபவங்களைக் கூறுகின்றேன் கேட்பீர்களாக என்று சூதமகா முனிவர் சொல்லத்தொடங்கினர்.

இந்த அத்தியாயத்தைப் படித்தவர்கள் கேட்டவர்கள் ஆகிய யாவரும் செல்வம் ஆயுசு சுகம் என்பவற்றைப் பெற்று வாழ்வார்கள்.

தக்ஷிணகைலாச மான்மியத்தில்
புராணவரலாறும் இலங்கைச் சிறப்புங் கூறிய
க-வது அத்தியாயம் முற்றிற்று.

———o———

## இரண்டாவது அத்தியாயம்.

இலங்கையிலுள்ள தேவஸ்தானங்களும், திருக்கேதீஸ் வர உற்பத்தி விபவங்களும்.

நைமிசாரணிய வாசிகளைப் பார்த்துச் சூதமுனிவர் சொல்வாராயினர். ஓ இருடிகளே! மாக்ஷிமை பொருந்திய உத்தர கைலாசத்தின் வனப்புக்களைப் போலவே, இலங்கையின் மகி மையும் அதிலுள்ள க்ஷேத்திர தீர்த்த விபவங்களுமாம்.

இலங்கையின் கீழ்ப்பிரதேசத்திலுள்ள தக்ஷிண கைலாசம் இன்னும இப் பூவுலகத்திலே யாருமறிதற்கு மிகவரிதாகவிருக் கின்றது. இதனை இதற்குமுன் யாரொருவருக்குஞ் சொன் னவனல்லன் ஆதலால்,

முனிபுங்கவர்களாகிய பிராமணச் சிரேட்டர்களே, மன த்தை யொருவழிப்படுத்திப் பத்திச் சிரத்தையுடன் கேட்பீர் களாக. பிண்டம் அண்டம் பிரமாண்டமென்பன எப்பொழு

துஞ் சலித்துக்கொண்டிராமல் திரப்படுத்தச் சிவபெருமான் திருவுளங்கொண்டு, "அனேகந் தலைகள் அனேகங் கண்கள் அனேகம் புயங்கள் அனேகங் கால்கள் பொருந்தி" விசுவரூபங்கொண்டருளினர். அச்சமயத்திலே எப்பொழுதுஞ் சலித்தற்குணமுடைய நாடிகளை, முறையானே சிம்மள தேசத்திலுள்ள திரிகூட க்ஷேத்திரத்தில் "இடைகலை" என்னு நாடியையும், ஹிமவத்பருவதத்திலே "பிங்கலை" என்னு நாடியையும், தில்லைவனமாகிய சிதம்பர க்ஷேத்திரத்திலே நடுநாடியாகிய "சுழுமுனை" என்னு நாடியையும் நிலை நிறுத்துவாராயினர். இதனாலே இம்மூன்று தலங்களும் உலகத்திலுள்ள எவற்றினுக்கு முத்தமோத்தமமானவையாகும்.

கங்காநதியின் மத்தியத்தில் விளங்காநின்ற பிரயாகை என்னும் பிரம்ம க்ஷேத்திரமும், சமுத்திரமத்தியில் விளங்காநின்ற துவாரகை என்னும் விஷ்ணு க்ஷேத்திரமும், தென்சமுத்திரமத்தியிலுள்ள தக்ஷிண கைலாசமென்னும் சிவக்ஷேத்திரமும் பூமியிலுண்டானதும் தாவர ஜங்கமங்களுக்கு மோக்ஷவித்துக்களாக, ஆதியிலே பரமசிவனால் படைக்கப்பட்டு விளங்குகின்றன. இம்மூன்று தானங்களிலும் பிரமா விஷ்ணு சிவன் மூவரும் பிரத்தியக்ஷமாக விருந்து அருள் புரிகின்றனரென்று வேதத்திலேயே கூறப்பட்டிருக்கிறது. மேலும்,

இத் தக்ஷிண கைலாசம் பொருந்தியுள்ள வீழதேசமானது, பண்டைக்காலத்திலே புலஸ்தியமகாமுனிவரின் புதல்வர் பெருந்தவஞ்செயது சிவபெருமானிடம் பெற்றுக்கொண்ட விசிட்டமுடையதாயுமிருக்கின்றது. அதிலே பலவகையான க்ஷேத்திர தீர்த்தங்களிருக்கின்றன. அவற்றின் மகிமை மூவுலைகத்தவரானும் மின்னுமறியப்படாமலிருக்கிறது. முக்கியமான அம்சங்களின் அநுக்கிரமணிகை, முதலாவது:—திரிகூட சிகரோற்பத்தி விபவங்கள். இரண்டாவது:—திருக்கேதீஸ்வர க்ஷேத்திர முண்டானதும் துவஷ்டா பூசித்ததும், அகஸ்தியர் தவஞ்செய்ததும் பிறவும். மூன்றாவது:—கந்தமாதனமலையினுற்பத்தியும் பிறவும். நான்காவது:—பெருமை பொருந்

3

திய உத்தரகயிலையின்றேற்றமும் பிறவும். ஐந்தாவது:—தக்ஷிணகைலாசத்தோற்றமும் அதன் விபவங்களும். ஆறாவது:—திருக்காளத்தி மலையினுற்பத்தி முதலியன. ஏழாவது:—திருச்சிராப்பள்ளியினுற்பத்தியும், பிறவும். எட்டாவது:—மாவலிகங்கை, மாணிக்ககங்கை, களனிகங்கைகளினுற்பத்தியும், பிறவும். ஒன்பதாவது:—சிவனொளிபாதமலையினுற்பத்தியும், பிறவும். பத்தாவது:—அம்சுகாமாத்திரி (கதிர்காமம்) யின் விபவங்கள். பதினோராவது:—கரசை (கங்குவேலி) என்னும் க்ஷேத்திர தீர்த்தவிபவங்கள். பன்னிரண்டாவது:— அமுதகளி. கங:—நவுகங்கை. கச:—விநாயகமலை. கரு:-சப்பிரகாமம். கசா-அநுராசபுரம். கஎ:-முள்ளாலங்காடு. கஅ:-குதிரைமலை. ககூ:-முனீஸ்வரம் மாயவனாறு இவற்றின் மான்மியங்களும் பிறவும் உ0:-சிலாநதம் (கல்லாறு) உக:- பாலாவியாறு அருவியாறுகளின் மகிமைகள். உஉ:-கீரிமலை விசேஷங்கள் உங:-கிருச்சிரம் முதலிய விரதங்களின் முறைமைகள்; இவற்றின் பயன்கள் ஆகிய இன்னோரன்ன விடயங்களைக் கூறுதற்கு ஸாக்ஷாத் பரமசிவனே யன்றி ஆயிரம் நாவுடைய வாதிசேடனும் வல்லவனல்லன்.

விநாயகர், சுப்பிரமணியர், ஐயனார், இராமர், அநுமார், மகாகாளி, அசுரவைரியாகிய துர்க்கை, சிவன், அம்பிகை, விஷ்ணு, இலக்குமி, பிரமன், வைரவர், வீரபத்திரர் முதலான தேவர்கள் சதாகாலமும் பிரசன்னராக விருந்துகொண்டு அருள் புரிகின்றனர். அங்கே ஜபதபங்கள் மிகச் சீக்கிரத்திலே சித்தியாகிப் பயன்கொடுக்கின்றன. இதிலு மிதற்கிணையானது பிறிதில்லை என்று கூறக்கேட்ட முனிவர்கள் அத்தகைய தலத்தினுள்ள க்ஷேத்திரங்கள் தீர்த்தங்களின் விசேஷங்களை முழுமையும் விரிவாகச் சொல்லக்கேட்க விரும்புகின்றேம் என்றார்கள். அதுகேட்ட சூதபுராணிகர், முனிவர்களே! மிகப்பழமையானவோர் சரித்திரத்தைக் கேட்பீர்களாகவென்று கூறத் தொடங்குவாராயினர்.

முன்னொரு காலத்திலே வாயுதேவனும் ஆதிசேடனும் வாக்குவாதத்தினால் தனித்தனி "நானேவீரன்" "நானேவீரன்"

என்றொருவர்க்கொருவர் ஆக்கிரகத்தினாற் கோபங்கொண்டு பெரும்போர்புரிவாராயினர். அக்கணத்திலாதிசேடன் தன்னுடைய ஆயிரம் பணாமுடிகளினாலே மகாமேருவினுயிரஞ் சிகரங்களையுஞ் சீக்கிரமாக மறைத்தனன். அதுகண்டு வாயுதேவனதனைச் சகிக்கலாற்றாது பிரசண்டமாருதமாகக் கோபங்கொண்டு மிகுந்தவலிமையோடும் அச்சேடனுடைய சிகரங்களைச்சிதறும் படியடித்துவீழ்த்தியதோடமையாது, அந்தமகாமேருவின் அழகிய கொடுமுடிகள் மூன்றினைப் பறித்துத் தென்றிசைநோக்கிக் கொண்டுசென்று திரிகூடம் திருக்கேதீஸ்வரம் கந்தமாதனம் என்னு நாமத்துடன் தென்சமுத்திர மத்தியிலே பிரதிட்டை செய்தனன்.

வலிமையிற் சிறந்த வாயுதேவன் முதற்கண் தாபித்த உலக நன்மையின் பொருட்டான திரிகூடத்தை, யாவராயினும் நினைத்த மாத்திரையிலே சகலபாவங்களினீக்கம்பெற்று உய்வடைகின்றனர். ஓ! இருபிறப்பாளர்களே! பின்பு அந்த வாயுதேவன் இதனையடுத்து இரண்டாவதாகத் தாபித்துள்ள திருக்கேதீஸ்வர சிகரத்தில் விளங்காநின்ற அற்புத விபவங்களைச் சற்றுக் கவனமாகக் கேட்பீர்களாக.

அங்கே ஆன்மாக்களுக்குச் சுபத்தைச் செய்பவரும் மகாதேவரும், சுயம்புவுமாகிய சிவபெருமான் நித்திய சான்னித்தியராகவெழுந்தருளி யிருக்கின்றனர்.

ஓ முனிபுங்கவர்களே! அத்திருக்கேதீஸ்வர தேவஸ்தானம் மாதோட்ட நகரில், பாலாவியாற்றின் மேல்கரையில் சகலதேசங்களிலுமுள்ள ஆன்மாக்களின் நன்மைக்காகப்பிரசித்தமாயிருக்கிறது. அவ்விடத்திலுள்ள பாலாவித் தீர்த்தத்திலே முதல்வருணத்தவனான பிராமணன் "சங்கற்பம் சூக்தபடனம் மார்ஜ்ஜனம் அகமருஷணம் தருப்பணம்" என்னுமைந்தங்கங்களுடனும் ஸ்நானஞ் செய்து, தசதானம் "பசு பூமி எள் பொன் நெய் வஸ்திரம் தானியம் சக்கரை வெள்ளி உப்பு" என்னும் பத்துத் தானங்களையும் செய்துகொண்டு, திருக்கேதீஸ்வர மகாலிங்கத்தை அபிஷேகம் அர்ச்சனை நிவேதனம் ஸ்தோத்தி

ரம் நமஸ்காரங்களைச் செய்வானாயின் நிச்சயமாகச் சாயுஜ்ய மோக்ஷத்தையடைவான்.

யாவராயினும், அவரவர் சக்திக்குத் தகுந்த பிரகாரம் ஸ்நான தானங்களைச் செய்து, ஸ்ரீ பஞ்சாக்ஷர ஜபத்தைச் செய்வாராயின், இம் மானுடயாக்கையிற் பெற்ற சகலபாவங் களினின்று நீங்கிச் சிவலோகத்தை யடைந்து சாலோகபதம் பெறுவர். மேலும்,

எவ்வருணத்தினனாயினும் எக்குலத்தினனாயினும் பாலாவித்தீர்த்தத்திலே மூழ்கித் திருக்கேதீஸ்வர தரிசனஞ் செய்வானேல் போகம் மோக்ஷம் இரண்டையும் முறையே பெறுவான். (அதாவது இவ்வுலகத்திலே வேண்டிய இன்பங்களை அனுபவித்து, மறுமையிலே நித்தியாநந்தமாகிய மோக்ஷத்தை யடைவான். என்பதாம்) பிரமகத்தி முதலிய பெரும்பாவங்கணீங்கும். பிதிர்க்கடன் செய்வானாயின் "காசிக்குச் சமீபத்துள்ள க்யாவிலே போய்" கயாசிரர்த்தஞ்செய்த பலனைப் பெறுவான். இவ்விஷயங்களிலே விசாரணையும் சந்தேகமும் சிறிதும் வேண்டியதில்லை,

பிரமா விஷ்ணு உருத்திரர் முப்பத்துமுக்கோடி தேவர் கந்திருவர் அரக்கர் வித்தியாதரர் நாகர் சாத்தியர் கின்னரர் கருடர் ஆதித்தியர் வசுக்கள் தத்துவஞானிகளான விருஷிகள் யாவரு மிந்தத் திருக்கேதீஸ்வர க்ஷேத்திரத்திலே மிகுந்தவிருப்பத்தோடு சதாகாலமும் வாசஞ்செய்கின்றனர், அதனுடைய வைபவத்தைச் சொல்லுதற்கு நானும் வேறியாரும் வல்லுனரல்லர்.

பசு பக்ஷி மநுஷ்யர் மிருகம் முதலிய யாவும் இந்தத் திருக்கேதீஸ்வர க்ஷேத்திரத்திலே மரணமடையுங் காலத்தில் அச்சிவலிங்கப்பெருமானுடைய திக்குநோக்கி வலக்காது மேலாகப் பொருந்தும்படி கிடக்கின்றன. அப்போது தர்மாத்மாவாகிய பரமேஸ்வரன் அவற்றினுடைய வலக்காதிலே தாரகப் பிரமோபதேசஞ் செய்து அவற்றையப்போதே ஸாயுஜ்யமுக்திபெறச் செய்கின்றனர். இதனாலே இத்தலத்துக்கிணையான

புண்ணிய க்ஷேத்திரம் முன்னுண்டானதும் இனியுண்டாவது மில்லை.

மாதோட்டத்திலே பிறந்த எந்தப்பிராணிக்கும் எச்சாதி மனுஷனுக்கும் அத்திருக்கேதீஸ்வரக் கடவுளருளால் மோக்ஷ சாம்ராஜ்யம் சித்திக்கிறது. ஆகவே பிற செல்வங்கள் வேண்டற்பாலனவன்றென்பதாம். மேலும்,

இந்தத் திருக்கேதீஸ்வர க்ஷேத்திரத்திலே புண்ணியஞ் செய்தவனாயினும் பாவஞ் செய்தவனாயினும் மரணம் வரையும் பாலாவியில் முழுகுதலும், ஐம்புலனடக்குதலும், திருக்கேதீஸ்வர மகாலிங்க தரிசனமும், யாசகஞ்செய்து சீவித்தலுமுடையனாயின் அவன் தனது கோடிக்கணக்கான வம்சபிதிர்க்களுடன் சிவசாயுஜ்யமடைவான். மேலும்,

எந்த மனுஷன் இந்த திருக்கேதீஸ்வர க்ஷேத்திரத்திலே ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஜபம்பண்ணி பின்பு புரஸ்சரணை (உருப் போடுதல்) பண்ணுவானோ அவன் நிச்சயமாகச் சித்தியை அடைவான். இதிற் சிறிதும் சந்தேகமில்லை என; முனிவர்கள் சூத புராணிகரைப் பார்த்துப் பின்னும் வினவுகின்றனர்.

இருஷி சிரேஷ்டராகிய ஐயா! தொடக்கத்திலே திருக்கேதீஸ்வரமென்றும் இடையிலதனைத் துவஷ்டாபுரமென்றுங் கூறினீர்களே, அதன் வரலாற்றையுந் தயவுசெய்து சொல்லியருளுகவென்றனர். அதுகேட்ட சூதமுனிவர் சொல்வாராயினர்.

முன்னொருகாலத்திலே தேவலோகத்தினின்றுந் தேவகம்மாளனாகிய துவட்டாவென்பவன் திருக்கேதீஸ்வர க்ஷேத்திரத்திலே வந்து பாலாவித்தீர்த்தத்திலே விதிப்படி ஸ்நானஞ் செய்தலும் திருக்கேதீஸ்வர மகாலிங்கத்தை நன்றாகப் பூசித்தலுமாகிய மிகமேலான தவத்தைச் செய்துகொண்டிருந்தான்.

அதன்பின்பு சிவபெருமான் அத்தேவகம்மியனுடைய தவத்துக்கிரங்கி மிகுந்த சந்தோஷமுடையராய் உமாதேவியாருடன் இடபாரூடராய்க் காக்ஷி கொடுத்தருளினர். அழகிய அவ்

வுமாமகேசுவர வடிவத்தைத், துவட்டா அன்புடன் ஸ்தோத்திரம் செய்கின்றனன்.

(சுலோகம்) "நமஸ்தேஸாம்ப ருத்திராயநமஸ்தேபரமாத்மநே,
சேதுமத்ய நிவாஸாய கேதீஸ்வர நமோநமஹ. 1
நமஸ்தே கில நாதாய நமஸ்தே பய நாசக,
சேதுமத்ய நிவாஸாய கேதீஸ்வர நமோ நமஹ. 2
ஆதிமந்தியாந்த சூன்யாய ஆதார நிலயாய ச,
சேதுமத்ய நிவாஸாய கேதீஸ்வர நமோ நமஹ. 3
பிரம்ஹ விஷ்ணுஸ்வரூபாய ஸிருஷ்டிஸம்ரக்ஷே ஹேதவே,
சேதுமத்ய நிவாஸாய கேதீஸ்வர நமோ நமஹ. 4
உமார்த்ததிவ்ய தேஹாய காருண்ய வருணாலய,
சேதுமத்ய நிவாஸாய கேதீஸ்வர நமோ நமஹ. 5
நமஸ்ஸுந்தர ரூபாய ஸுந்தரீ பிராணநாயக,
சேதுமத்ய நிவாஸாய கேதீஸ்வர நமோ நமஹ. 6
நமஸ்தே ஜகதாதார நமஸ் ஸர ஸிஜாங்கிறும்ண,
சேதுமத்ய நிவாஸாய கேதீஸ்வர நமோ நமஹ. 7
புத்திரந்தேஹி கிருபாந்தேஹி தேஹிஸத் பக்திமேவச,
சேதுமத்ய நிவாஸாய கேதீஸ்வர நமோ நமஹ." 8

இவற்றின்பொருள்.

உமாதேவிபாகரே! உருத்திரரே! பரமான்மாவே! முழுமுதற்கடவுளே! மரணபயத்தை நீக்குபவரே! முதலிடைகடையற்றவரே! ஆதாராதேயமானவரே! பிரமவிஷ்ணு ஸ்வரூபரே! உற்பத்திநாசங்களுக்குக் காரணரே! அர்த்தநாரீசுவரரே! கருணைக்கடலே! ஸுந்தரரூபரே! வடிவழகிமணாளரே. உலகத்துக்காதாரமானவரே! அன்பரகத்தடாகத்துப் பத்தியெனும் பதுமத்துப் பானுவே! மஹாஸேது மத்தியஸ்தானமாகியுள்ளவரே! ஸ்ரீ கேதீஸ்வரக்கடவுளே. தேவரீடத்திலே நிலைபெறுன பத்தியையும் பேரருளையும் ஸத்புத்திரனையும் கொடுத்தருளும்படி நமஸ்காரம்! நமஸ்காரம்!!

இந்தப்பிரகாரம் துதிசெய்த துவட்டாவைப் பார்த்துக் கிருபாநோக்கத்தோடும் சிவபெருமான் ஆஞ்ஞை பண்ணுகின்

றூர். ஏ "துவட்டா! இந்தத் திருக்கேதீஸ்வர க்ஷேத்திரமானது உலகத்திலுள்ள நமது தலங்களெல்லாவற்றிலு முத்தமோத்தமமானது. நீயுமிவ்விடத்திலே வாசஞ் செய்குதி. உனக்கும் எம்மிடத்திலே என்றுமிடையறாத பத்தியுண்டாகும். இந்த க்ஷேத்திரமும் மகாதுவஷ்டபுர (மாதோட்ட) மென வழங்கும். உனக்குஞ்சுவர்ன்மாவென்னும் புத்திரனும் பிறப்பான்". என முன்விரும்பிய வரங்களைக் கொடுத்தருளிக் கௌரியம்மையாருடன் திருக்கேதீஸ்வரப்பெருமான் அவ்விலிங்கத்திற் கரந்தருளினார். ஓ பிராம்மண விருஷீஸ்வரர்களே? இதனாலேயும் இந்த சிவக்ஷேத்திரத்துக் கிணையான பிறிதொன்று முன்னுண்டானது மினியுண்டாவதுமில்லை.

பின்பு மூன்றாவதாகிய கந்தமாதனபருவதத்தைத் தரிசித்தலும், ஸேதுஸ்நானஞ் செய்தலும், அகஸ்தீசர் ஹநுமேசர் பர்வதவர்த்தனீ ராமநாதர் என்பவர்களைத் தரிசித்தலுமாகிய இவை சகல இஷ்ட காமியங்களைப் பெறச்செய்து ஸாயுஜ்யப் பிராப்தியுமுண்டாக்குவன. இதிலும் சிறிதும் சந்தேகமில்லை.

திரிகூடம் திருக்கேதீஸ்வரம் ஸ்ரீகந்தமாதனம் இம்மூன்று சிகரங்களையும் நித்தமுந் தியானிக்க மகாபாதகங்களறும்.

இந்த இரண்டாமத்தியாயத்தைப் படித்தல், கேட்டல்கள் செயின்; விரும்பியபலன் கைகூடும், சகலரோகங்களும் தணிவுறும், எல்லாவிடும்பைகளுமகலும், மலடியும் மைந்தனைப் பெறுவாள் எப்பொழுதும் மங்களமுண்டாகும்.

தக்ஷிணகைலாச மான்மியத்தில்
இலங்கையிலுள்ள தேவஸ்தானங்களும்,
திருக்கேதீஸ்வர உத்பத்தி விபவங்களுங் கூறிய
உ-வது. அத்தியாயம் முற்றிற்று.

## மூன்ரும் அத்தியாயம்

அகஸ்தியமகாமுனிவருக்குத் தவச்சித்தி கொடுத்தது.

சூதமகாமுனிவர் நைமிசாரண்ணிய வாசிகளைப் பார்த்துப் பின்னுஞ் சொல்லுகிருர் ஓ இருஷிகளே!

முன்ெருகாலத்திலே அகஸ்தியர் முதலிய விருஷிகணங்களெல்லாரும் இமயமலையில் நடைபெற்ற பார்வதி பரமேஸ்வரர்களுடைய திருக்கலியாணத்தைத் தரிசிக்கச் சென்றிருந்தனர். அப்பொழுது வடதுருவந்தாழ்ந்து தென்துருவம் உயர்ந்தது. அதனுல் யாவரும் பயந்தமை கண்டு பூமியைச் சமப்படுத்துவதிலதி சாதுரியம்படைத்த அகஸ்தியமகாமுனிவரைச் சிவபெருமான் பின்வருமாறு பணித்தனர்.

"ஓ அகஸ்தியமுனிவனே உனக்கு இத்திருக்கல்யாணக்கோலத்தை வேதாரண்ணியத்திலும், தக்ஷிணகைலாசமாகிய திரிகூடத்துக் கணித்தாயுள்ள கரஜாக்ஷேத்திரத்திலேயும் காண்பிக்கின்றேன். ஆண்டுச்செல்லுதி"யென்று சிவபெருமான் கூறியருளினர்.

அதன்பின்பு, அகஸ்தியர் தக்ஷிணகைலாசத்தில் கோணேசதர்சனமும், கரஜையில் கல்யாணசுந்தர தர்சனமும் ஸர்வதீர்த்தேஸ்வர நாம லிங்கப் பிரதிட்டையுஞ்செய்து வரம்பெற்றுக்கொண்டு, அங்குநின்றும் புறப்பட்டுத் தவச்சித்திபெற வேணவாவுடையராய்த் திருக்கேதீஸ்வரத்தை நோக்கிப்போவாராயிஞர். அவ்வாறு சென்ற அகஸ்தியமகாமுனிவர் மிகவிருப்பத்தோடு (சாஸ்திரங்களிற் கூறப்பட்ட பிரகாரம்) பாலாவியாற்றிலே பஞ்சாங்க ஸ்நானஞ்செய்து, திருக்கேதீஸ்வரப் பிரபுவை மஹாந்நியாஸவிதிப்படி அபிஷேகம் பூஜை அர்ச்சனைகளைச் செய்து சிரகின்மேல் அஞ்சலியஹஸ்தராய் நின்றுகொண்டு பரமசிவனை ஸ்தோத்திரஞ் செய்கின்ருர்.

### ஸ்தோத்திர தசகம். 10.

(சுலோகம்) "கைலாசவாஸின் கௌரீஶ ஶரணாகதவத்ஸல,
ஸ்ரீமத் துவஷ்ட்ர புராதீஶ பாஹிமாமீஸ்வரப் பிரபோ. 1

கணேஸ ஸ்கந்த ஜநக விருஷவாஹந ஸங்கர,
ஸ்ரீமத் துவஷ்ட்ர புராதீஸ பாஹிமாமீஸ்வரப் பிரபோ. 2
ஸாமகாநப் பிரியாநந்த சந்ர ஸூர்யாக்கினி லோசன,
ஸ்ரீமத் துவஷ்ட்ர புராதீஸ பாஹிமாமீஸ்வரப் பிரபோ. 3
ஸர்வலோகாநந்த ரூப காலகால விநாஸந,
ஸ்ரீமத் துவஷ்ட்ரபுராதீஸ பாஹிமாமீஸ்வரப் பிரபோ. 4
பிரம்ஹவிஷ்ண் வம்ஸரூபாத்மன் விந்துநாதமயப்பிரபோ,
ஸ்ரீமத் துவஷ்ட்ர புராதீஸ பாஹிமாமீஸ்வரப் பிரபோ. 5
ஸச்சிதாநந்த ரூபேஸ ஷாட்குண்ணிய பரமேஸ்வர,
ஸ்ரீமத் துவஷ்ட்ர புராதீஸ பாஹிமாமீஸ்வரப்பிரபோ. 6
பஸூ பாஸ பரிச்சேத பஸூநாம் நாயகப் பிரபோ,
ஸ்ரீமத் துவஷ்ட்ர புராதீஸ பாஹிமாமீஸ்வரப் பிரபோ. 7
காமேஸ கருணாஸிந்தோ காமிதார்த்த பலப்பிரத,
ஸ்ரீமத் துவஷ்ட்ர புராதீஸ பாஹிமாமீஸ்வரப்பிரபோ. 8
நமஸ்தே விஸ்வரூபாய நமஸ்தே விஸ்வ நாயகி,
நமஸ்தே வாமதேவாய நமஸ் திரிபுரஸுந்தரீ. 9
அபராத ஸஹஸ்ராணி கிருதந்தே ஹர்நிஸம்மயா,
தாஸோயமிதிமாம்மத்வாக்ஷம்மியே தாமீஸ்வரீஸ்வரௌ.

## இதன்பொருள்.

கைலாசவாசரே! கௌரியம்மைக்கு நாயகரே! தஞ்சமானவருக்குப் பட்சமானவரே! விநாயகர் சுப்பிரமணியர்களுக்குப் பிதாவே! இடபவாகனரே! சுபத்தைச் செய்பவரே! ஸாமவேத கீதப்பிரியரே! ஆநந்தரூபரே! சந்திர சூரியாக்கினிகளைக் கண்களாகவுடையவரே! எல்லாவுலகங்கட்குமானந்தத்திருமேனியானவரே! காலனைக்காய்ந்தவரே! பிரம விஷ்ணுவுருத்திரரூபரே! விந்துநாதவடிவினரே! ஸச்சிதானந்தரூபரே! பகவானே! பரமேஸ்வரா! பசுக்களுடைய பாஸப்பிணிப்பையறுப்பவரே! ஆன்மநாயகரே! பிரபுவே, காமேஸரே, கருணைக்கடலே, அடியார் விரும்பியபலனையீபவரே, பெருமைபொருந்திய துவட்டாபுரத்துக்கதிபதியே, ஈசுவரனே, என்னைக்காத்தருளுக, காத்தருளுக, விஸ்வரூபரே, உமக்கு நமஸ்காரம். விஸ்வநாயகி உமக்கு நமஸ்

காரம். வாமதேவரே, உமக்கு நமஸ்காரம் திரிபுரஸுந்தரீ உமக்கு நமஸ்காரம். என்னால் நாடோறும் அனேகம் குற்றங்கள் செய்திருக்கக் கூடும். தலைவனும் தலைவியுமாகிய நீவிர் தமியேனை இவன் நமது அடியானென்று கருதி, அவற்றைப் பொறுத்தருள்வீர்களாக.

என்று அகஸ்தியமகாமுனிவர் மிகுந்தபத்தியோடும் தோத்திரஞ் செய்தார். இவ்வாறு சிலகாலந் தபசு செய்துகொண்டிருந்து, தாமும் புதிதாக வோராலயம் வேதாகமவிதிப்படி நிருமாணஞ்செய்து,ஸ்ரீகண்டேஶ்வரனென்னு நாமத்துடனோரிலிங்கத்தையும் பிரதிஷ்டைசெய்து, ஆஸனம், ஆவாகனம், பாத்தியம், அர்க்கியம், ஆசமநீயம், பூதசுத்தி, தானசுத்தி, மந்திரசுத்தி, திரவியசுத்தி, லிங்கசுத்திகளுடன் சோடசோபசாரக் கிரமமாகப் பூஜைசெய்து தோத்திரம் பண்ணுகின்றார்.

அகஸ்தியமுனிவர்:—(சுலோகம்).

"நமஶ்ஶிவாய ஸாம்பாய ஸகுணாய ஸநந்திநே,
கணேஶ ஸ்கந்த தாதாய ஸ்ரீகண்டேஶாயதேநமஹ. 1

ஆதிநாதாய ஶாந்தாய நாதாந்த நிலயாயச,
கங்காதராய ஶுத்தாய ஸ்ரீகண்டேஶாயதே நமஹ. 2

ஸச்சிதாநந்த ரூபாய ஷாட்குண்ணிய பரிபூரித,
சந்திரஸூரியாக்கினிநேத்திராயஸ்ரீகண்டேஶாயதேநமஹ

பஞ்சகிருத்திய பரேஶாய பரமாநந்த தாயிநே,
பராஶக்தி ஸுமித்திராய ஸ்ரீகண்டேஶாயதே நமஹ. 4

விருஷாங்க விருஷபாரூட பஸ்மோத்தூளித விக்கிரஹ,
சந்திரசூடாய நித்தியாய ஸ்ரீகண்டேஶாயதேநமஹ 5

திரிபுரக்கினைய ரௌத்திராய திரிநேத்திராய திரிஶூலிநே,
திரிலோகபரிரக்ஷாய ஸ்ரீகண்டேஶாயதே நமஹ. 6

ஆதிமந்தியாந்த ஹீநாய ஆதர நிலயாய ச,
ஆதிவ்யாதி விமுக்தாய ஸ்ரீகண்டேஶாயதே நமஹ. 7

ஆதிதேவ மஹாதேவ அஸ்மத் குலஸுதீபக,
துவத்கடாக்ஷாத்வயம் தந்யா ஸ்ரீகண்டேஶாயதேநமஹ.

நமஸ்தே விஸ்வநாதாய நமஸ்தே ஜகதம்பிகே,
மமாபராதம் ஸர்வம்து க்ஷம்மியேதாம் ஜகதீஸ்வரௌ. 9

இதன்பொருள்.

சிவனே! அம்பிகாபதியே, சகுணரூபரே, நந்திதலைவ, விநாயக சுப்பிரமணியாகளுக்குப்பிதாவே, ஆதிதலைவரே, இந்திரியவய முடையவரே, நாதமுடிவிலிருப்பவரே, கங்கையைத்தரித்த வரே, சுந்தரரே, சச்சிதானந்தவடிவினரே, அறுகுணமுடைய வரே பரிபூரணரே, முச்சுடர்களைக்கண்களாய்க் கொண்டவரே ஐந்தொழில் நடாத்துபவரே,பரமானந்தங்கொடுப்பவரே, பரா ஸக்திநற்றுணைவரே, இடபக்கொடியுடையவரே இடபவாகனரூ டரே, வெண்ணீற்று மேனியரே, சந்திரசூடரே, நித்தியரே, முப்புரமழித்தவரே, உருத்திரரே, முக்கண்ணரே, முக்கருச் சூலமுடையாரே, மூவுலகுங் காத்தருள்புரிபவரே, ஆதிநடுவீ றற்றவரே, ஆதாரநிலையரே, மனவியாகுலத்தைத் தீர்ப்பவரே, முதற்கடவுளே, பெருந்தேவரே, எங்கள் குலத்தைநன்கு விள க்குபவரே, தேவரீரது கிருபாகடாக்ஷததினால் யாம் தன்னியர் களாயினோம். திருநீலகண்டத்தலைவரே, விஸ்வநாதா, உமக்கு நமஸ்காரம். உலகமாதாவே உமக்கு நமஸ்காரம். சர்வலோக பிதாவும் சர்வலோக மாதாவுமாகிய நீவிர் யான்செய்த தப்பி தங்களையெல்லாம் உபஸமனஞ்செய்து, என்னைக் காத்துக்கொ ள்வீர்களாக."

இந்தத் தோத்திரத்தினாலே தயாநிதியாகிய பரமசிவன் சந்தோஷித்து, அந்த லிங்கத்தின்மேலாவிர்ப்பவித்து அகஸ்தி யமகாமுனிவருக்கு விரும்பிய வரமாகிய தவச்சித்தியையீந் தருளி சர்வலோகஹிதப்பிரதாராய் மேலும் அவ்விலிங்கத்தில் அந்தர்த்தானமாயினர். கும்பயோனியும் தாம் விரும்பிய வரம்பெற்றுக்கொண்டு பொதியமலையை யடைந்தார்.

தக்ஷிண கைலாசமான்மியத்தில்
அகஸ்தியமகாமுனிவருக்குத்தவச்சித்திகொடுத்த
௩—வது. அத்தியாயம் முற்றிற்று.

# உத்தரபீடிகை.

இவ்வாற்றால் இவ்விலங்காதேசத்திலே வடமாகாணத்தைச் சார்ந்த மாதோட்டப் பகுதியில் திருக்கேதீஸ்வரமென்னுந் தேவமந்திர முளது என்றும், அஃது பக்குவான்மாக்கட்கு கோசரமாயும் அபக்குவான்மாக்கட்கு அகோசரமாயும் விளங்குகிறதென்றூகிக்கப்படுகிறது மேலும் "ரோயல் ஏஷ்யாட்டிக் சொசைற்றி" என்னுஞ் சங்கத்தாருடைய 10-ம் இலக்கப் பத்திரிகையில் Mr. Boaks. C. C. S. "என்பவர் இலங்கையில் மாதோட்டத்தில் கடல்புடைசூழ்ந்து திருக்கேதீஸ்வரமென்றழைக்கப்படுமிடம், மிகப்பழைய சைவக்கோயிலினடையாளங்களைக் கொண்டிருக்கிறதென்று ஸ்ரீசுந்தரமூர்த்திஸ்வாமி தேவாரமொழிபெயர்ப்புங் கூறி அத்தாக்ஷிப்" படுத்தியிருக்கிறார்.

மேலும், மாதோட்டத்திலும் அதற்கருகாமையிலுமுள்ள கிராமவாசிகளான கத்தோலிக்கரும் வன்னிநாட்டாருமிதனையே திருக்கேதீஸ்வரமென்று தமது மூதாதைகள் பாரம்பரியமாகக் கூறிவந்ததாகவும் 'சில காலத்துக்குமுன் ஓர் பதிகன் இக்கேதீஸ்வரத்திலே தங்கியவழி ஆகாயமளாவிய திருக்கோயிலையும் திருக்கூட்டத்தையும் திருவிளாத்திருநாளையும் நேரிற்றரிசித்து ஏனையோர்க்குங் காண்பித்தனன் என்பதோரிதிகாசமுங் கூறுவர். இன்னும்பலவுள.

இவ்வற்புதங்களைச் செவிமடுத்த கத்தோலிக்கக் குருமார் மற்றவைப் போல இதனையுந் தம் வயமாக்கப் பன்முறை முயன்றனரெனினும், விறகிற்றீயினன் பாலிற்படு நெய்யினனாக நெடுங்காலம் அத்தலத்திடை மறைந்து நின்றற்புதஞ் செய்து கொண்டிராநின்ற அத்திருக்கேதீஸ்வரக் கடவுள் தாம் கோயில்கொண்டருளத் திருவுளம்பற்றிச் சைவசமயிகளிடத்திலும் மெஸ் துவைனந்துரைமீதுங் கிருபாநோக்கஞ்செய்தனர். அதன்பயனாக அந்நிலம் யாழ்ப்பாணம் நாட்டுக்கோட்டை நகரத்தாருளொருவரான, ராம. அரு. அரு பழனியப்பச்செட்டியார் மூலமாக சென்ற விஜயவருஷ கார்த்திகைமீ உகூ௨ (1893 டிசம்பர் 13) யாழ்ப்பாணக்கச்சேரியில் அரசாக்ஷியாரிடமிருந்து பிரசித்த ஏலத்தில் மூவாயிரத்தொருநூறு (3100) ரூபாவாகவிலைக்கு வாங்கப்பட்டு நம்சைவசமயிகள்வசமாயிற்று ஜயவருஷ ஆனிமீ க௨-சி த. மு. பசுபதிச்செட்டியார்மூலமாகப் பெருந்திரளான பணஞ் செலவுசெய்யப்பட்டுப் பழைய கட்டிடங்களும் கிணறுகளுங்கண்டுபிடிக்கலாயின. சோபகிருதுவருஷ ஆவணிமீ (1903ல்) நா. குமாரஸ்வாமி தீக்ஷிதரால் ஆலயம் சிவலிங்கம் நந்தி பலிபீடங்கள்

ஜீர்ணோத்தாரமாயின. சோபகிருது ௵ ஆனி௴ கசஉ (ஜூன்27) கிரியாலிங்கமும் தேவியும் பிரதிஷ்டை செய்யப்பட்டன. அது தொடக்கம் இவ்வாலயம் மாதம்பை நகரத்தார் விசாரணையிலும, காலயுக்தி௵ மாசி௴ கஅஉ (1919 மார்ச்சு-1) தொடக்கம் கொழும்பு, யாழ்ப்பாணம் நகரத்தார்களது விசாரணையிலும் செவ்வனே நடைபெற்று வருகிறது

மேலும், இத்தேவஸ்தானத்தில் அனேக மண்டபங்களும் திருமதில்களும் கோபுரங்களும், விக்கினேஸ்வரர் சுப்பிரமணியர் வைரவர் கோயில்களும், அக்கிரகாரம் மடம் அன்னசத்திரங்களும், கூபங்களும், குளங்களும் அங்கங்கே யமைக்கப்படவேண்டி யிருக்கின்றன, இத்தேவாலயத்திருப்பணிகளை நடாத்த லக்ஷக்கணக்கான திரவியம் தேவையாயிருக்கிறது. கோயிற்பிரகாரங்களுக்காகவும் கட்டிடங்களுக்காகவு மரசாக்ஷியாரிடம் இன்னும் நிலம்பெறவேண்டியிருக்கிறது, ஜனங்களைக்குடியிருத்தவேண்டும். இதற்கணித்தாய் "ஜயன்ஸ்ருங்கு" என்னுங்கட்டுக்கரைக்குளமிருக்கிறது. இதிலிருந்து மாதோட்டப்பகுதிக்கு இருபோகவேளாண்மைக்குப் போதியஜலம் கிடைக்கிறது, பாலாவிக்குளத்தைக் கட்டி கட்டுக்கரைக்குளத்து ஜலத்தை விட்டுக்கொண்டால் திருக்கேதீஸ்வரத்துக்கு ஜலத்தட்டுப்பாடு நேரிடமாட்டாது,

இத்திருக்கேதீஸ்வரம்: கோட்டைமன்னாருக்குத் தென்கீழ்த்திசையில் 5 மயில் தூரத்திலுள்ளது. இதற்குத் தென்மேற்றிசையில் $2\frac{1}{2}$ மயிலில் தங்கலென்னுமிடத்தில் திருக்கேதீஸ்வரம் என்னுமபிதானத்துடன் புகைரதந் தங்குமிடமுண்டு. இதிற் பகலில் பிரயாணஞ் செய்வோர் காலையிலும் மாலையிலும் போக்குவரவு செய்யலாம். இதிலும் இதற்குத்தெற்கிலும் கிழக்கிலும் குடியிருக்க வசதியான நிலமும், நீர்வளமு முண்டு,

சின்னாட்பல்பிணிச் சிற்றறிவினராகிய நம்மாந்தர்இவற்றையெல்லாமுய்த்துணர்ந்து "காதற்றவூசியும் வாராதுகாணுங் கடைவழிக்கே" என்றபெரியோருரை மேற்கொண்டு இப்பெருந் தருமவிஷயங்களிற் றலையிட்டுப் புண்ணியஸ்தல வாசமும் கேதீஸ்வரநுக்கிரகமும் குன்றாதபுகழும் நிலைபெற்ற செல்வமும் ஆனந்தலாபமும் பெற்றுக் கொள்வார்களாக,

சுபம்! சுபம்,!! க, ச. வை.

சிவமயம்

# திருக்கேதீச்சர நாதர் கிள்ளைவிடு தூது

**சி. இ. சதாசிவம்பிள்ளை**

**1963**

### காப்பு

**(வெண்பா)**

தெள்ளுதமிழ்க் கேதீசர் செம்பொன் அடிமலர்க்கோர்
கிள்ளைவிடு தூது கிளக்கவே - பிள்ளை
உருவார் மதிசூடும் ஒற்றைமருப் பைந்து
கரவா ரணன்பதமே காப்பு.

### நூல்

**(கலிவெண்பா)**

**மங்கலவாழ்த்து**

சிவன், அடியார் சிந்தைத் திருக்கோவில் கொண்ட
அவனடிகள் வெல்க அகில - புவனமெலாம்

**கிளியை விளித்தல்**

ஏகிப் பிறந்துபிறந் தின்பதுன்ப மாயகன்ம
போகங்கள் துய்த்துப் புலனெறிவிட் - டேகாது
வாமு மிளங்கிளியே! வாவுன் னடிபணிவேன்
சூழவந்து செய்தியொன்று சொல்லக்கேள் - வாழவெண்ணிப்

**தூதுவிடும் காரணம்**

பாரிலுயர் கேதீச் சரமணைந்து பாலாவி
மார்கழி நீர் ஆடி மனங்குழைந்து - ஆர்வமுடன்
ஆதிரை நாள் நாதன் அருள் நடனங் கண்டுதொழக்
காதலுற்றேன் அஞ்சுகமே! கைதவஞ்செய் - தீதகலாப்
பண்டை வினையின் பயனாய் உடல் நோய் கொண் (டு)
அண்ட வியலா தலமந்தேன் - துண்டப்

## தூது வேண்டல்

பவள மணிவாய்ப் பசுஞ்சிறைய தேன்பால்
தவழுமொழிக் கிள்ளாய்! யான் சாற்றும் - துவளுமொழி
கொண்டுபெருந் தூதாகிக், கோல மணிமிடற்றான்
அண்டியருட் கௌரி அயலமர - மண்டலத்தில்
வாழுமன்ப ரெல்லாம் மருங்கு திரண்டேத்தத்
தாழி அறுகு தலைச்சூடி - நீளுமன்பிற்
பூந்தராய் வேந்தர் புகல்சுந் தரர்முதற்பா

வேந்தராய் உள்ளோர் மிழற்று தமிழ் - தாஞ்செவியுற்று
அன்பர் உடற்பிணியும் ஆணவமுன் னானவுயிர்
தன்பிணியும் மாற்றும் தருக்கோடு - மின்பயிலும்
கொண்ட லுறங்கக் குலவுமா தெங்காதி
மண்டு தருமருவு மாதோட்டம் - கண்டு,
பரந்து பலவளனும் பாலித்து நாதன்
சுரந்தவருள் என்னவெண்ணித் தோய - வரமருளும்
பாலாவி என்னும் பகீரதியின் பாங்கருறு
சேல்தாவும் மாமருதத் திண்பணையில் - மேலாய
ஈழக் கயிலை எனத்திகழும் பொற்கோவில்

வாழ அடியார் மனங்குளிர - நீளுமிரு
கண்குளிர உச்சிக் கரங்குளிர ஏத்துமவர்
பண்குளிரக் கேட்டருளும் பாவனையில் - விண்குளிர
வந்த அருள்நிதியம் மண்ணகத்து நம்மையெலாம்
பந்த மறுத்தாளும் பரஞ்சோதி - சிந்தனையார்
கேதீச் சரநாதன் கிருபா கரன் திருமுன்
போதி, வணங்கியவன் பொன்னடிகள் - மாதினொடும்
ஏத்தித் திருச்செவிகட் கென்றூ தெடுத்தியம்பி,
ஆத்தன் அருள்விடைகொண் டஞ்சுகமே! - மாத்திரையும்
தாழாது வந்திடு நீ சாரும் வகையுரைப்பன்

## தூது செல்வகை

ஆளாகக் கொண்டோன் அருள் நினைந்து - வாழ்வளிக்கும்
சுந்தரவெண் ணீறணிந்து தூய்மைநிறைந் தஞ்செழுத்தைச்
சிந்தையினில் மானதமாய்ச் செப்பியே - அந்தரத்தில்

அக்கணமே மேலெழுந்தெம் மாண்டான் அமர்திசையாந்
தெக்கணத்தை நாடிச் சிறைவிரித்து - மிக்குயரும்

## முறிகண்டி விநாயகர்

வான வழியே வளம்பலவுங் கண்டடர்ந்த
கானகத்தி லேகுவழிக் கைகுவித்து - போனவந்த
அன்பர் குழுமி அரஹரவென் றேத்தியுற்ற
துன்பொழிந்து நிற்குமந்தச் சூழல்கண்டு - மென்கிளியே!
சற்றே யிறங்கு தனிவழியே செல்லுமவர்க்(கு)

25 உற்ற துணைவன் உமைமைந்தன் - முற்றும்
அறிவன் அருளுருவன் ஆனைமுகத் தெந்தை
முறிகண்டி யான்கோவில் முன்னர் - நறைமலர் தூய்
வந்தித்து நீறணிந்து வாயார வாழ்த்திவரு
சந்தையெடுத் தோதியிரு தாள்பணிந்தே - எந்தனது
கேதீச் சரத்தூது கேடின்றிச் சித்தியுற
ஆதியருள் என்றென் றடிவணங்கி, - ஓதச்

## பாலாவித் தீர்த்தம்

சிறைவான் புனல்பயிலும் பாலாவித் தீர்த்தத்
துறைகண் டிறங்கு சுகமே! - மறைபுகலும்
சங்கல்ப மோதியது சாரவக மர்க்ஷணமும்
30 பங்கமறச் செய்து பணிந்தாடித் - திங்கட்
கலையுலவக் கொன்றை கமழ்ந்துலவக் கங்கை
அலையுலவுஞ் செஞ்சடையெம் மையன் - மலையுலவு
வாலை கவுரியொடு மால்விடைமேல் வந்தருளுங்
கோலம் மனத்திருத்திக் கும்பிட்டு, - மேல் நடந்து

## திருக்கோவில் செல்லல்

போது பழமுதலாம் பூசனைக்கு வேண்டுமவை
ஓதியன கொண்டே யுடனடந்து - வேதநெறி
சைவநெறி தந்த தலைவன் சராசரங்கள்
உய்ய அன்பர் கூடி ஒருங்கேத்தச் - சையமருள்
மாதுமையி னோடு வதியுந் திருக்கோவில்

ஓதியகீழ் வாசலினூ டுட்புகுந்து, - நாதனருட்
சந்நிதியில் அஷ்டாங்கஞ் சார விழுந்திறைஞ்சிச்
சென்னி கரங்குவித்துத் தென்றிசையாய் - முன்னி

### விநாயகர்

வலமாக வந்து மழகளிற்றை வந்தித்(து)
இலகுமருள் பெற்றேகி எந்தை - உலகருளும்

### மஹாலிங்கம்

ஆதிமஹா லிங்க அருளுருவைக் கண்டுபணி
சோதீ பரஞ்சுடரே சூழொளியே - பாதிமதிச்
செஞ்சடையாய் சீகாழிச் செல்வத் திருமகனும்
துஞ்சிருளில் தூதுகொண்ட சுந்தரனும் - நெஞ்சுருகிப்
பாடலினால் ஏத்தும் பரம்பொருளே பங்கயன்மால்

தேடற் கரிய சிவக்கொழுந்தே - நாடுமன்பர்
நெஞ்சத் துறையும் நிமல அடிபோற்றி
அஞ்சுருவில் ஒன்றாம் அருள்போற்றி - கஞ்சமலர்ப்
பாதத் துணைபோற்றி போற்றி எனப்பரவி,
ஆதியருள் கொண்டங் ககன்றேகி, - மாதிருவர்

### சுப்பிரமணியர்

பாகமுறப் பச்சைப் பசியமயி லேறியென (து)
ஆகப் பெரும்பாறை யாடிவரும் - தோகை
வடிவேல் முருகன் மலரடிகள் வந்தித்(து),

### நடராஜர்

அடிதூக்கி மன்றாடும் ஐயன் - துடியாகும்
நாதப் பறையும் நகையார் திருமுகமும்

பாதத் தலம்பு பரிபுரமும்-ஆதரவாய்
'என்றுவந்தாய்' என்ன இயலும் திருக்குறிப்பும்
மன்றுதனிற் கண்டு மனங்குழைந்து - இன்றுபர
நாத வுனது நடங்காண வந்தனன் என்(று)

ஓதிப் பணிந்தே உளமுருகி - மாதினொடும்
அம்பல வாணன் அடித்தா மரைபரவி,

## கேதீஸ்வரநாதர்

நம்பெருமான் கேதீச் சரநாதன் - தந்திருமுன்
வீழ்ந்து வணங்கி விரைந்துட் புகுந்துசிரம்
தாழ்ந்திறைவி பாதம் தலைக்கொண்டு - ஆழ்ந்தவன்பால்
பாச பசுஞானம் பற்றறநின் றெம்பெரும

ஆசகலுந் தூதொன் றறையவந்தேன் - ஈசவிது
சற்றுத் திருச்செவியிற் சாத்தியருள் என்று பணிந்(து)
உற்றுநினைந் துன்தூதை ஓதிடுவாய் - பெற்றம்
இடங்கொண்ட தேவா இறைவா பொதுவில்
நடங்கொண்ட நாதாநஞ் சார்ந்து - படங்கொண்ட
கேது பணிந்ததிருக் கேதீச் சரமமர்ந்த
வேத முதலாம் விழுப்பொருளே - ஓதுமன்பர்
சிந்தை குடிகொள் தெளிதேனே தேவரென்றும்
வந்தனைசெய் தேத்தும் மலர்ப்பதனே - அந்தமிலா
ஆருயிர்கட் குள்ளுயிராய் அப்பாலுக் கப்பாலாய்

ஓருருவு மற்ற ஒளிப்பிழம்பே - சாருமன்பர்
கண்டு வணங்கக் கருணை திருவுருவாய்
மண்டலத்தில் வந்தவருள் வாரிதியே - தண்டலைசூழ்
கேதீச் சரநாத கிள்ளைமொழிக் கௌரியிடப்
பாதிகொண்ட துய்ய பரஞ்சோதீ - நாத
முடிவான பாத முளரிமலர் போற்றி
அடியார்க்குத் தஞ்ச மளிக்கும் - கடியாரும்
செம்பதுமத் தாள்போற்றி போற்றி எனச்சிரந்தாழ்த்(து)
அம்பிகையி னோடும் அடிவணங்கி, - வம்புமலர்

## தியானரூபம்

சூட்டிப் பணிந்தெழுந்து, தூவெண் பிறைமுடியும்

நாட்டம் ஒருமூன்றும் நச்சரவும் - வாட்டமுறும்
அன்பர்க் கருளும் அபய வரதமுருப்

பொன்பெற்ற மானும் புகர்மழுவும் - கொன்பெற்ற
அம்புலித்தோ லாடை அரையும் அலர்பதுமச்
செம்பொற் பதமும் திருமருங்கில் - அம்பிகையும்
ஆய திருக்கோலம் அன்பால் அகத்திருத்தி,

## வேண்டுகோள்

நாயகனே காயமொடு நண்ணுநாள் - மீயுயர்ந்த
கோபுரங்க ளோடுமிளிர் கோவிற் குடமுழுக்காம்
மாபுரத்தில் ஆட்டும் மகாசாந்தி - தாபமறக்
கண்ணாரக் கண்டு களித்துமலர்க் கைகூப்பி

அண்ணா அருள் அருளென் படியே - எண்ணிஎண்ணி
அஞ்செழுத்தை நெஞ்சிருத்தி அன்ப ரொடுமருவிக்
கஞ்ச மலர்ப்பதங்கள் காதலித்துக் - கொஞ்சுதமிழ்ப்
பாவினா லேத்திப் பரவும் வரமருளி
ஆவி யுடல்விட் டகலுநாள் - சேயபத்ம
பாத நிழலிருத்திப் பன்னு சிவபோகம்
நாதவருள் என்றிரந்து நல்லருள் கொண்(டு), - ஏதமற

## சண்டேசுரர்

மண்ணிக் கரையின் மணலி லிலிங்கமொன்று
பண்ணிக் கபிலைதரு பாலாட்ட - நண்ணியங்கு
ஏலா தனபுரிந்த எச்சதத்த னாயதந்தை
காலோடு தன்பிறவிக் கால் தறித்த - நூல்மார்பன்
சண்டீசன் சந்நிதியில் தாளத் திரயமொடு
கண்டபலன் பெற்றுநின்று கைகூப்பித் தொண்டருறை
தேர்வீதி மார்க்கம் திரும்பி வலம்வருங்கால்

## சபாரத்தினசாமி

ஆரும் பெருந்தவத்தோன் அன்புருவோன் - ஈரநெஞ்சன்
தெய்வ நலஞ்சேர் திருவா சகச்சாமி
செய்யசபா ரத்தினந்தாள் சென்றுபணிந்(து), - உய்யத்

### திருவாசகமடம்

திருவா சகமடத்தைச் சேர் ஈழ நாட்டின்
மருவு சிவனடியார் மல்கி - அருள்நெறியில்
சித்த முருகித் திருவா சகம்படிப்பார்
அத்தனருள் எண்ணியெண்ணி அஞ்சலிப்பார் பத்திமையாற்
சாதனைகள் செய்திருப்பார் சைவப் பிரசங்கம்
ஓதிடுவார் கேட்டே உளமுருகி, - ஆதரவாய்

### சரவணமுத்துச்சாமி

மன்னீழ நாட்டின் மருவுசிவ னடியார்க்கு
அன்னையெனத் தொண்டாற்றும் அன்பாளன் - தன்னேர்
தவநெறியோன் சாமி சரவணமுத் தென்னும்
நவையறுமெய்த் தொண்டனிடம் நாடி - அவனடிதாழ்ந்து
இன்னமுதம் உண்டங் கிளைப்பாறித் தூதுசொல்லி,

### சிவானந்தகுருகுலம்

மன்னு குருகுலத்தை வந்தடைவாய் - பன்னியநால்
வேதம் பயில்விரதர் விப்பிரர்கள் தஞ்சிறுவர்
சாதனையி னோடுபயில் சாமமுதல் - ஓதும்
சுருதி உதாத்தம் அநுதாத்த மாய்ச்சொல்
விருதி னொடுகேட்டு மேன்மை - தருதமிழிற்
பண்ணோடு பாடிப் பயிலும் திருமுறை கேட்(டு)
உண்ணின்ற காதலொடும் உட்புகுந்து, - விண்ணிலுயர் (வு)

### குமாரசுவாமிக்குருக்கள்

ஆய குருகுலத்தின் அத்தியகக்ஷன் ஆரியமாம்
பாய மகோததியும் பத்திநெறி - மேயதமிழ்
வாரிதியும் நீந்தி வரம்புகண்டோன் ஆகமங்கள்
ஆரியத்தில் நின்றுதமிழ் ஆக்கினோன் - சீரமையவ்
வாரியமும் செந்தமிழும் அச்சுவே லிப்பதியும்

பாரிடமும் நோற்ற பயனாவான் - பேருயரும்
கோதில் குமார சுவாமிக் குருதேவன்
ஆதி குரவர் அடிபணிந்(து) - ஓதுவட

## சேர். வைத்தியநாதன்

வீதி வருதி வியன்கிளியே! அன்றொருகால்
சோதி அணிமதுரைச் சொக்கேசர் தீதில்வள
மன்பாண்டி நாடாள் மதியமைச்ச னாரைவந்து
தன்பணிகொண் டாண்ட சரிதைபோல் - பொன்பயிலும்
ஈழத் தமைச்சாய் இருநிலமாண் டெம்மையெலாம்
வாழவைத்த செம்மல் மதியூகி - தாழ்சடையெம்
மையன்கே தீச்சரத்தா னங்கு தனதுபணி

செய்யவெடுத் தாண்டதவச் சீராளன் - மெய்யுணர்வு
சேரும் பெரும்புகழோன் சேர்வைத்ய நாதனெனச்
சாரும் சிவதொண்டன் தாள்பணிந்து - ஆர்வமொடு
தூதுவந்த வாறெடுத்துச் சொல்லி விடைகொண்டு
சாது மடங்களவை சார்ந்து காண்- மேதகைய

## ஆறுமுகநாவலர் மடம்

கானகத்தி னூடே களிதருதேன் பொந்தாகி
வானகத்தி னோரும் வணங்குபதி - ஆன
கிலமடைந்த கேதீச் சரமிதெனக் கேள்வி
நலமுடையோர் காணநனி நாட்டி - பலமுறவே
உத்தா ரணப்பணியில் ஓம்என்று முன்னெழுந்த

சித்த வுரங்கொள் சிவஞானி - முத்திவிளை
சைவப் பயிர்தழைக்கச் சார்ந்திடித்து மின்னிமழை
பெய்யும் கருணைமுகில் பீடுற்று - மெய்ந்நெறிகள்
வீறு கொளவுதித்த மெய்ஞ்ஞான பானாவெனும்
ஆறுமுக நாவலன் பேர் அன்னமடம் - சோறுதவும்

## மற்றைய மடங்கள்

அம்மா மடமும் அருள்ஞான சம்பந்தர்
எம்மிறைவர் பேர்கொள் எழில்மடமும் - மம்மரறக்
கண்டு மகிழ்ந்து கரங்கூப்பி அன்பரடித்
தொண்டை வியந்துருகித் தொன்னெறியே - விண்டுமுதல்

## விடைபெறல்

தேவர் பணியுந் திருச்சந் நிதியடைந்து
சேவேறி முன்விழுந்து தெண்டனிட்டு - நாவாரப்
போற்றிப் புகழ்ந்திறைவா பூதாதி யாகியப்பாற்

சாற்றறிதாய் நின்ற தனிச்சுடரே - ஏற்றிலிடப்
பாலிற் கவுரியொடு பாலகனு மாகவரு
கோலம் நினைப்பறவே கூடவருள் - ஆலாலம்
உண்ட பெரும உமக்கபயம் என்றுவிடை
கொண்டுபல கால்விழுந்து கும்பிட்டுத் துண்டமதி
ஆறுமத்தம் சூடும் அமலன் அடிமறவா
வீறொடுநீ வந்தணைவாய் மென்கிளியே! - ஊறுசுவை
மென்வருக்கை வாழை வியன்மாங் கனிபாலோ(டு)

உன்வரவு பார்த்திருப்பேன் ஓம்.

## வாழ்த்து

செந்நெறிச் சைவம் வாழ்க சிவனடி யார்கள் வாழ்க.
மன்னுநல் லறங்கள் வாழ்க வளர்திருப் பணிகள் வாழ்க
அன்னையெங் கௌரி யம்மை யடிமலர்ப் பதுமம் வாழ்க
நன்னர்கே தீச்சரத்து நாதன்றாள் வாழ்க வாழ்க.

## திருச்சிற்றம்பலம்

“நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேது மில்லாதென் செய்பணிகள் கொண்டருளும்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ.”

- மணிவாசகம்

## திருச்சிற்றம்பலம்

கௌரிசமேத கேதீச்சரநாதன் திருவடி வாழ்க
‘நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க.’

## கௌரி அம்பாள் தியானம்
## பதினான்கு சீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்

சீர் தங்கு நவரத்ன மகுடமணி கேசமும்
சிந்தூர திலக நுதலும்
தெய்வீக அருள்பொழியு மிருகுகுவளை மலரைநிகர்
தேசுற்ற கருணை விழியும்
ஏர்தங்கு முழுமதிய மென்னுமுக மண்டலத்
திலகுசிறு முறுவல் நகையும்
இருகுழையி லரதன மிமைக்குபொற் றோடுகளு
மேத்துமடி யவர்க ளார
வார்தங்கு பரவபர ஞானம் பொழிந்திடும்
வரையுற்ற தடமார் பமும்
வரதவப யங்கொளு மலர்க்கரமு மாயென்
மனக்கோயில் நின்ற வடிவே
கார்தங்கு தண்டலைக் களிமயில்கள் நடமிடக்
கன்னியர் கரங்கள் கொட்டிக்
கருதுதிரு வாசகத் திசைபாடு கேதீச்
சரக்கௌரி அம்மை சரணே.

## அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பண்ணார் "விருதுகுன்ற" மெனும் பதிகம் கேட்கப் பரஞான
வுண்ணா முலையி னமுதருத்தி ஓங்கு புகலிச் சிவக்கன்றைக்
கண்ணா வளர்த்த வாறறிவேன் கவுரி திருக்கே தீச்சரத்துப்
பெண்ணா ரணங்கே யுன்னடியிப் பேயேன் பாடும் பேறருளே.

சிவமயம்

# திருக்கேதீச்சரப் புராணம்

**பண்டிதர் ச. இராமச்சந்திரன்**

**1966**

## துதி

### விநாயகர்

1. செஞ்சரணம் வெண்மேனி கரிவதனம்
பசுங்குழவித் திங்கள் சீத
மஞ்சணிறப் பூங்கொன்றை மலர்மாலை
தாங்கியெமை மகிழ்வித் தெங்க
ணெஞ்சகமாங் கானினிரு ணீங்கவரு
ளானிலவு காலு மோர்வெண்
குஞ்சரமா முகத்தோனின் குரைகழலென்
னுரைபுரக்கக் கூடுங் காப்பே.

### சிவபெருமான்

2. பிறைமதிய மணிபுனைந்து பிறங்கி தழிப்
பொன்வேய்ந்து பெருகு கங்கை
யுறையெனுமொண் ணித்திலத்தி னொளிவீசி
யோங்குசடா மகுடஞ் சூடி
நிறைமணிசால் பணியணிந்து நெடுங்கைலை
யரியணைமே னிலங்க ளெல்லாம்
மறைமுறையே மலையரையன் மகளினொடுங்
காத்தளிக்கும் மன்னன் காப்பே.

### உமாதேவியார்

3. தன்னுடைத் தளிர்க்கை தம்மாற்
தாயினி லணைத்தே நித்த
மென்னையிங் கேந்திக் காக்க
யானிதை யுணரே னாகிப்
பொன்னடி யளிப்பா யென்றே
போற்றுமென் புன்மை நோக்கிப்
புன்னகை பூக்குந் தெய்வப்
பூங்கொடி யுமைதாள் போற்றி.

### திருமால்

4. சலம்புகுந் தொளிக்குந் தரணியை மீட்டுத்
 தாங்கியே தந்துகாத் தளிக்கும்
வலந்திரி திகிரி மாலடிக் கமல
 மலர்த்துணை மனத்தடம் வளர்ப்பாம்
நிலம்புகுந் தொளித்து மீண்டிவ ணுதித்து
 நிலவுகே தீச்சர நெறிசேர்
தலம்புனை புராணந் தழைத்தினி தோங்கித்
 தமிழ்மணங் கமழுக வெனவே.

### முருகன்

5. கோட்டானை முகத்தானை வதைத்தானை
 யானைமுகத் தொருகோட் டானைக்
காட்டானை யுருவமது காட்டெனவே
 கானவரின் கன்னி மானை
மாட்டானை மாமனென வாய்மலர்ந்து
 கூறுவிக்க மணந்து ளானை
யாட்டானை யன்பரகத் தாடுமொரு
 மயிலானை யருச்சிப் பாமால்.

### தட்சணா மூர்த்தி

6. ஆலமணி நிழலதுவே யழகிலகு
 கலைக்கூட மாக நூலின்
மூலமெலா முணர்ந்தபெரு முனிவர்களா
 முதியவரே சிறுவ ராக
மேலிலகு மெய்யறிவு விளக்கியுயர்
 விடுதலையு மீந்து காத்துச்
சீலமரு ளொருதலைமை யாசிரிய
 னிருபதமுஞ் சிரமேற் கொள்வாம்.

### நாமகள்

7. காட்டு மிந்திரன் கற்பகக் காவெனுங்
 கலைய ரங்கிற் களித்து நடஞ்செயும்
மாட்டுஞ் செந்தமிழ் வாணர்கள் வித்துநூல்
 வயலிலுஞ்சொல் மணிக்குலந் தேர்ந்திடும்

பாட்டின் சாத்திரப் பைந்தருக் கானின்மெய்ப்
    பழமுங் கொண்டருள் பாமயி லின்றுமா
தோட்டம் பாடுமென் சொல்லையுங் காவெனுந்
    துதியுங் கொண்டுமுன் தோன்றுதல் விந்தையே.

## அவையடக்கம்

8. நாட்டினிடை நறுந்தமிழி னாட்டிடுமிப்
    புராணத்தஞ் ஞான மென்னுங்
காட்டிலுறு முட்புதருங் கசப்புடைய
    செடிகொடியுங் கலந்தா லும்மா
தோட்டமதி னருண்மலரின் சுகந்தமுடன்
    சிவக்கனியின் சுவையுந் துய்த்து
வீட்டினிடை மேவுமொரு விருப்பினிந்நூல்
    மேலோர்கள் வேண்டு வாரே.

## வரலாறு

1. போற்று நல்லிசைப் பொன்னக ரெனப்பெறு மீழந்
தோற்று வித்திடு சுடரொளி யென்னுமா தோட்டத்
தேற்றி னுக்கிறை யேற்றகே தீச்சரத் தெழிலிந்
நாற்றி சைக்குமோர் நல்விருந் தெனப்புவி நயக்கும்.

2. பந்த ணைந்தகைப் பார்வதி பாலருத் தியசம்
பந்த னன்றிசை பரவுகே தீச்சரப் பரனைப்
பந்த மற்றிடப் பதிகமொன் றினிற்றுதித் தனன்கும்
பந்த ருந்தவப் பழமுனி பயின்றபைந் தமிழில்.

3. பின்ன ரத்தனைப் பித்தனென் றேசியன் றவனா
லன்னை யப்பனு மையனென் றேயகத் தறிந்தங்
கின்னி சைத்தமி ழேற்றகே தீச்சரத் திறைக்குச்
சொன்ன தோன்றலுஞ் சுந்தர னாயவன் றொண்டன்.

4. வாத மோடுவி வாதமும் வழக்குடன் மருவப்
பேத மாய்ப்பிறர் பேசிடா வகையியல் சரித
மீத லுண்ணினைந் திங்குகே தீச்சரத் தியல்முன்
மாத கல்மயில் வாகனப் புலவனும் வகுத்தான்.

5. தராதலம்புகழ்ந் தேத்திடு தவப்பெருங் குரிசி
லிராம நாதவே ளித்தலப் பெருமையை விளக்கும்
புராண மொன்றுமுன் னுண்டெனப் புகன்றது புகழ்ந்து
பராவி யாங்கொரு பத்திரி கைக்கது பகர்ந்தான்

6. கண்ட னக்குரற் கண்டிகை யொளிபொலி கலைநீர்க்
கொண்டல் நற்குணக் குன்றிடங் கொண்ட நா வலனன்
றெண்டி சைக்குங்கே தீச்சரத் திறையிய லியம்பித்
தொண்டர் தம்மையுந் தொழும்புசெய் திடுகெனச் சொன்னான்.

7. நாட்ட முற்றவிஞ் ஞானிக ணானிலத் தியல்பு
காட்ட வுற்றிடு கலைஞர்கள் காலமெங் கருத்திற்
பூட்ட வுற்றிடு புதைபொரு ளாய்குந ரிவரா
லேட்டி லுற்றகே தீச்சர மியாவரு முணர்ந்தார்.

8. இன்ன வாறுகே தீச்சரத் தியலெலா மிணைத்து
மன்னு நூலிது வகுத்திடு வாயென மரபா
லென்னை யாவரு மிப்பணிக் கேவலி னிவர்கள்
சொன்ன வாறிவை தொகுத்துரை சொல்லிடத் துணிந்தேன்.

9. முன்ன ராங்கொரு முதலைவாய்ப் படுசிறு குழவி
தன்னை மீட்டிவண் டருகெனத் தமிழிசைத் தருள்வோன்
சொன்ன வாசகஞ் சூடுகே தீச்சரந் துலக்குந்
தொன்மை சேருநூல் தோன்றுதல் மீண்டொரு வியப்போ.

### ஈழம்

1. மேனி வந்தகல் விசும்பிடை விளங்குவெண் மதியம்
மான விந்துமா சமுத்திர மத்தியில் வயங்கு
மான பேரிதற் கரதன துவீபமென் றவனி
தான ளித்திடுந் தனிப்பெயர் தாங்குறு மீழம்.

2. பண்டை நாளிடைப் பரவைவாய்ப் படுமொரு குமரி
கண்ட மீதுறை கவினியல் வளனெலாங் கவர்ந்து
கொண்டு யாவருங் களிகொளக் காட்டுதல் குறித்துத்
தொண்டு செய்யுமோர் தோணியிற் றுலங்கிடு மீழம்.

3. சுற்றமும் விருப்பும் நீக்கித் தொடக்கற வனத்துட் சென்று
வெற்றியின் பால ராகி விரதத்தா லுயர்ந்தோர் போலப்
பற்றியே தனைமுன் றொட்ட பாரத நாட்டி னீங்கி
நிற்றலு நீரி னோற்று நிலத்தினி லுயர்ந்த தீழம்.

4. வாரிசூ முலகு வகுத்தருள் மறையோன்
வண்ணமும் வடிவொடு வளனும்
பாரினிற் படைக்கும் பயிற்சியிற் கரங்கள்
பழகலா லுலகதன் படிவஞ் சீரிய
வுருவிற் சிருட்டிசெய் திடுவான்
சிந்தனை தினமுமுன் செய்து
நீரிடை யியற்றி நிறுத்திட நீடு
நிலைத்திடு முருவது நிகர்க்கும்.

5. கோடாத நீதியெனுங் குன்றேறி
யெவ்வுயிருங் கொள்ள மேலோர்
வாடாது வளரருளை வழங்குதல்போல்
மலைநாடு மன்னி நாப்பண்
நீடாறு பலசுரக்க நீர்வளனும்
நிலவளனும் நிலைத்த லாலே
யீடாவ திதற்கிதுவே யெனப்பலரு
மேத்தெடுப்ப தீழ நாடு.

6. தத்தமது சமயமொன்றே தரணிதனில்
மேலெனமுன் தருக்கஞ் செய்வோர்
முத்திநிலை கைவருங்கால் முழுமுதல்வ
னொருவனென மொழிதல் போலப்
பத்தியினாற் பலமதத்துப் பண்டிதரு
மதன்குவட்டிற் பதித்த பாதஞ்
சித்தமகிழ்ந் தேத்தவுயர் சிவனொளிபா
தப்பொருப்புத் திகழ்வ தீழம்.

7. இருணெறியா லிறைவனுடை யியலறியாக்
காலமதில் யாழ்ப்பா ணத்தே
துருவனென வழிகாட்டத் தோன்றியரு
ணாவலனார் தொண்டி னாய

வருளினிருள் விடியவிபு லாநந்த
வடிகளவ தரித்துக் கீழ்ப்பால்
வருபரிதி யெனத்துலங்கி மலர்சமயத்
தொளிபரப்பும் வலத்த தீழம்.

8. வடபாலி னல்லையினுந் தென்பாலிற் கதிரையினு
நடமாடு மயின்முருக னன்குபுரந் தளித்தருளக்
குடபாற்கே தீச்சரமுங் கோணமலை குணபாலு
மிடமாகக் கொண்டிதனை யெம்பெருமான்காத்தருள்வான்

## மாதோட்டம்

1. கோவி னன்னகர் கோயிலொ டியைந்திடக் கூட்ட
மேவ லூற்றிடு வீதியின் விரிபுக ழிந்தி
யாவு மீழமு மிணைத்திடு மிருங்கடற் கரையின்
மாவி லங்குமா தோட்டமென் றொருநகர் வயங்கும்.

2. ஒற்றை யாழியி னுலகெலா முலவலி னுயங்க
லூற்ற செங்கதிர்க் குறையுள திரவெலா முதவிப்
பெற்ற தாயினிற் பேணிடு பெருங்கடல் பிறங்கிப்
பற்று நட்பியல் பாங்கியென் றுறவது பயிலும்.

3. நீல மாநிற நெடுங்கடற் கரையின்மா தோட்டம்
ஆல முண்டரு ளரன்றிருக் கண்டமு மம்மை
பால மர்ந்தருள் பரன்றிருக் கோலமும் படியின்
மேல கங்கிகாள வவற்றிய லெமக்கிவண் விளக்கும்.

4. வெள்ளை மேனிய விரிதிரை விலங்கலின் விரவு
துள்ளு நீர்க்கொரு துறையெனத் துலங்குமா தோட்டம்
பிள்ளை வெங்கதிர் பீதவண் கதிர்மிசைப் பெயலால்
வெள்ளி வெற்பயல் விளங்குபொன் னிமயமு நிகர்க்கும்

5. இம்பர் நாடுக ளெவற்றினு முளபொருள் யாவு
மம்பி மேவிடு மலைகடல் வழியவ ணடைய
வும்ப ரந்நக ருததியுட் டோன்றிடு முலகின்
விம்ப மென்றது வேறிடத் தாய்ந்துமெய் வியர்ப்பார்.

8. நீனிற நீரிற் காட்டி நெடுமையி னிவப்புக் காட்டி
மீனினத் துடுக்கள் காட்டி வெண்முகி றிரையிற் காட்டி
மேனிலை விண்ணின் காட்சி விளக்கியந் நகர்சூ ழாழி
யானியங் கிடுபல் வங்க மண்டலூர் விமான மொக்கும்.

7. இருநிதி நாளு மீட்டு மியாழ்ப்பாண வணிகர் தங்கள்
பருநெடுந் தாலந் தந்த பனங்கட்டிக் கீடென் றாங்கே
யுருசிய துணவுக் கூட்டு முப்பது கொள்ளுங் காட்சி
யிருவினை யொப்பு மாந்தர்க் கிதுவென வெடுத்துக் காட்டும்

8. வடகயி லாய வள்ளலை யீழ
மகளவ ணோக்கியுண் மகிழ்ந்து
படவரா வுறையும் பாதலத் துறுவோர்
பரமனி னெழிலது பார்க்கக்
குடதிசை வழியே கூவியன் னோரைக்
கொண்டது காட்டுதல் குறித்துக்
கடலிடை நீட்டிக் கருணையி னழைக்குங்
கரமெனத் திகழுமந் நகரம்.

**பாலாவி**

1. நிலைதரு பொறையி னோங்கி நிலமகள் சுரக்கு மன்பால்
மலையெனப் புலவ ரோது வருணனை மாலை சூடு
முலையிடைத் தோன்றி யாங்குமுளைத்தபைம்பயிர்களூட்டி
யலைகடல் வெளுக்கப் பாய்பா லாவியந் நகர்க்கோராறே.

2. இச்சகம் புகழ்ந்து போற்ற இலங்குமா தோட்ட மேவும்
பச்சிளம் பயிர்க ளோங்கும் பணை நில மடந்தை மார்பின்
கச்செனப் பொலிய வாங்கே கலந்தபா லாவி யாறு
நிச்சய மதன்மேற் சூடு நித்திலக் கோவை மானும்.

3. வெற்றி மேவிய விபுதருங் காணொணா விமல
னிற்றை நாளிற்கே தீச்சரத் திருந்தருள் கோல
முற்றுங் கண்களான் முகந்திடத் தொழுநில மகடன்
னெற்றி மேலணி நீறது நிகர்க்குமவ் வாறு.

# கேது திருப்பணி

1. ஓது மந்நகர்க் கோருயிர் மன்னவன்
பூத நாயகன் பொன்னடி யாமிரு
போது தம்மைமுப் போதினும் போற்றுவான்
கேது நாமன் கிளர்ந்தெழு கீர்த்தியான்.

2. நாக மானது நடுவிட நண்ணலி னதியால்
நாக நாடொறு நறுமலர் நல்கிடு நயத்தால்
நாக மாமத நறைகமழ் நலமிய னாட்டின்
நாகர் நாயக னம்பனி னல்விசை நவில்வான்.

3. வீசு காற்றுடன் வெள்ளத்து விளிவுறா விதத்தி
னீச னாரர சிருந்தரு ளாலய மியற்று
மாசை மூண்டெழு மகத்தினா னரும்பணி யயர
மாசி லாதமா தோட்டம தனிலிடம் வகுத்தான்.

4. அத்தி வாரமென் றறைதரு மரும்பெறல் விதையை
வித்தி மாநிதி மேவிய வுரமென விரவச்
சுத்த மாகிய தொண்டெனுந் தூயநீர் பாய்ச்ச
வத்த னாருறை யாலய மங்குரித் ததுவே.

5. மேவு நாத்திக விலங்குகள் மேய்ந்திடா வேலி
பாவு மாத்திகப் பாலனந் தனிற்பக லிரவுங்
காவ லாற்றினன் கண்ணிணை கருத்தொடு கலக்க
யாவ ருஞ்சிவத் தினியநற் கனிகொளற் கீவான்.

6. புதுமையொடு நம்பிக்கை பொலியழகு
 பக்தியெனப் புவனி போற்று
மதுரநிழற் செழுங்கிளைகள் மாதிரநான்
 கினும்பரப்பி வழிசெல் வோர்க
ளெது நிழலென் றேங்காதே எல்லோரு
 மிளைப்பாறற் கினிது தங்க
வதுபுவியில் யாவர்க்கு மருநிழறந்
 றணிபொலிய வலர்ந்த தாலோ.

7. பூத்திடுபே ருருண்மலரின் புகழாகும்
வாசனையாற் பொருந்துங் காலங்
காத்திருந்த தும்பிகளாங் கானமுர
லடியார்கள் களியிற் கூடி
யேத்துதற்கு நிலவுலகி னெத்திசைக
ளினுமிருந்தே யிங்கு வந்து
தோத்திரத்திற் றுதித்தருளின் சுவைத்தேனைத்
துய்க்கவது துலங்கிற் றன்றே.

8. எய்துநெறி யதுதேடி யெங்கணுமே
திரிந்தயர்வா லிளைத்திட் டோர்கள்
வெய்யநெறி யணுகாமே வீசியதன்
வாசனையால் விரைந்து கூவி
மெய்ந்நிழலொ டருட்டேனும் விடாயகல
வழங்கிடுமவ் விரையார் தாரு
வுய்திதரச் சிவஞானத் தொளிக்கனியு
முண்ணவவர்க் குதவிற் றன்றே.

9. முக்கணனா ருறைகோயில் மூன்றெவைக
ளெனின் முன்னேச் சரத்தி னோடு
தெக்கணத்துக் கைலையெனுந் திருக்கோணேச்
சரத்துடனே திருவுற் றோங்கு
மிக்கடல்சூழ் புடவியிற்கே தீச்சரமென்
றிவைமூன்று மெனவே நான்கு
திக்குகளுந் துதிக்கவது சிவக்கனிதந்
தருளநுகர்ந் திட்டார் தொண்டர்.

10. அண்டர் நாயக னடிமல ரகத்தடத் தலருந்
தொண்ட னாரது தொழும்பினிற் றோன்றிய தருவின்
பண்டு சேர்சிவப் பழமது நுகர்ந்ததன் பயனைக்
கொண்ட யாவருங் கொண்டனர் தொண்டெனுங் குறிக்கோள்.

11. ஆட்டு கந்தவ னாலய மெனுந்தரு வதுமா
தோட்ட மத்தியில் யாவருஞ் சிவக்கனி சுவைக்க
நாட்டி வைத்தரு ணாகர்கோன் றிருப்பணி நயந்து
மீட்டி யற்றிடு விசயனின் பணியது விரிப்பாம்.

## விசயன் திருப்பணி

1. வந்த னைப்புகழ் வங்கர்கோன் மைந்தனாம் விசயன்
தந்தை கட்டளை தாங்கினன் தனிமுடி தாங்கா
தந்த நாட்டினின் றகன்றன னலைகடல் வழிவந்
திந்தி யாவிலோ ரிடத்தினி லிறங்கியங் கிருந்தான்.

2. வழிந டந்திடு வருத்தத்தில் மலரடி மூழ்க
வொழிவி லாதவெம் பசியினி லுதரமு மூழ்க
விழிகண் ணீர்த்திரை வேய்துயில் வேலையில் மூழ்கக்
கழிபெ ருங்களைப் புடனவன் கனவிடை மூழ்க.

3. குடையெ னப்பெருங் குவலயங் கவித்திடு மிருளை
யிடைகி ழித்தெழு மிரவியொத் திவனுளத் தின்பந்
தடையு றுத்திய தளர்வகற் றிடவொளி தழைக்க
விடையு கைப்பவன் மேவினன் விளித்திது விளம்பும்.

4. மைந்த கேளிது வருத்தமிங் குனையினி மருவா
திந்த நாட்டினுக் கெதிருறு திசைத்தெழி லீழ
மந்த நாட்டின தணிதிகழ் வளனுட னதுநின்
சொந்த மாமவண் டுணிந்துசென் றுறைகென்றான் தூயோன்.

5. முந்தை யோர்தர வழிவழி முறைவரு மரசை
எந்தை யேயெனக் கீந்திலன் மறுத்தெனை யகற்ற
வந்து காத்து நீ வளநகர் வழங்கினை யினியென்
றந்தை தாயுநீ தலையிலுன் சரணினை தரிப்பேன்.

6. என்று கூறியவ் விசயனா மிளைஞனு மிறைஞ்சி
நன்று நாயக னமக்கரு ணாட்டிடை நாமுஞ்
சென்று சேர்ந்தவன் திருவரு ளாலிரு வளனு
மொன்று மாறுகோ லோச்சுது மெனவுளந் துணிந்தான்.

7. பொன்மலியு மீழமெனும் பூமாது
தனைச்சரணம் புகுவோன் றன்னை
யின்முகமா மியற்கைநலத் தெழில்காட்டி
வரவேற்றன் றின்ப மூட்டி

யன்னபல சிறப்பினிற்றன் னரும்பு தல்வன்
விசயனரி யணையின் மீதே
மன்னவனா யோங்கவுயர் மணிமகுடஞ்
சூட்டியக மகிழ்ந்தா ளன்றே.

8. வியத்தகுநல் லரசியற்றி விசயனெனும்
வேந்தனவண் விளங்கித் தோன்று
மியற்கைநலத் தெழில்காண்பா னீழமதி
லெவ்விடமு மினிது சென்றே
நயத்தலது செய்திடுநாண் நாண்மலர்ச்சேக்
கையிலொருமுண் ணடுவுற் றென்ன
இயற்றிடுகே தீச்சரந்தன் னெழில் குலைதல்
கண்டுமன மிரங்கிச் சோரும்.

9. தன்னுடைய வருமகவைத் தான்பிரிந்து பன்னாளின்
பின்னொருநா ளக்குழவி பெரியதொரு பிணியதனா
வின்னலுட னிளைப்பதுதன் னெ திரேகண் டிரங்குமுளத்
தன்னையென வவனதுகண் டயர்ந்துதெளிந் தரற்றிடுவான்.

10. உன்னுடைய திருமேனிக் குறையுநிழ லில்லையெனப்
பொன்னிறவெங் கதிர்க்குடையிப் பூமகளும் பிடித்திருந்தால்
மின்னிடையார் கவரியது வீசிடயான் வாழ்வேனோ
என்னுடைய வெண் குடையு மிருநிலத்தை நிழற்றிடுமோ

11. கனலின் கதிருங் கடும்பனியுங்
காற்றும் மழையுங் கனையிருளுந்
தனமில் வறியோர் குடிசையெனத்
தங்கு மோநின் கோயிலிலும்
புனலம் பொழில்சேர் புதுநாடு
புனிதா எனக்கன் றளித்தபொழு
துனதென் றொருதண் ணிழலேனு
மொதுங்கி யாற வைத்திலையோ.

12. நன்று நாயக நானிது கண்டுமுண் ணையே
னொன்று நெஞ்சக முருகிலே னெனும்பழி யோட
வின்று நீயர சிருந்தரு ளாலய மிதனை
யன்று போனிறை வாக்குவெ னெனவறைந் தினைந்தான்.

13. நெஞ்சகத் துறுதி காட்டி
நிலவிடு கற்க ளோடு
விஞ்சிய தூய்மை தோற்றும்
வெண்சுதை யதுமுன் கூட்டித்
தஞ்சமென் றடைவோர்க் கெல்லாந்
தாணிழ றருவோன் றன்னைக்
கொஞ்சு தண் ணீழ லுய்ப்பான்
கோயிலும் புதுக்கி னானே.

14. கடலிடங் கரந்த கதிரவன் மீண்டுங்
கடலிடந் தோன்றுதல் கடுப்ப
வடலரா மிடற்ற லணங்கிடப் பட்ட
வம்புலி யதன்வழி வெளிவந்
திடலதை யேய்ப்ப வெம்பெரு மானுக்
கேற்றகே தீச்சர மிதனாற்
புடவியிற் றுலங்கிப் பொலிந்திய லழகு
பூத்தருள் பொழிந்திலங் கியதே.

15. பெற்றதாய் கேது மன்னன் பேணிய செவிலித் தாயும்
வெற்றிசேர் விசய னென்னும் வேந்தனா மென்னி லந்நாள்
மற்றினி மங்கை பாகன் வைகுமிக் கோயி றானே
உற்றிடு செல்வ மிங்கு யாவரே யுறுவா ரம்மா.

## பாண்டியர் திருப்பணி

1. தனைவளர்க்குந் தமிழ்வளர்க்குஞ் சங்கமதன் றலைமையினா
லனைவருக்குங் குருவாகு மகத்தியனுக் காசிரியன்
சினைவளர்க்குங் கொன்றையணி சிவன்றிருக்கே தீச்சரங்கை
வினைவிளக்கச் சிற்பமுறை விளக்கினனங் கொருமாறன்.

2. சிவநெறியிற் செந்தமிழே செழித்தோங்கிச் சிறப்படையத்
தவநெறியாஞ் சைவமது தமிழ்மொழியிற் றழைத்தோங்க
வவநெறியில் வீழாமே யருணெறியி னுலகுய்யப்
பவநெறிநின் றெமைமீட்கப் பாண்டியனும் பணிபுரிந்தான்

3. வாழ்வுல கருள்சுரக்கும் வைகைநதி
வளம்பெருக்கு மதுரை மேவுஞ்
சூழடியார் தொழுசோம சுந்தரனா
ராலயத்தின் றோற்றங் காட்டி
யாழியிரு ளகற்றிடுபா லாவிநதி
யணிசுரக்க வலர்மா தோட்டத்
தீழமதி லிறையுறைகே தீச்சரத்தே
திருப்பணிசெய் திட்டான் மாறன்,

4. செப்பரிய தென்னாட்டின் சிற்பமுறை
தேர்குநர்கைத் திறத்தி னாலே
யொப்பரிய கலைகளுக்கோ ரூற்றாகி
யுல்கதனி லோங்க வெங்க
ளப்பனுடை யாலயம தமைத்திடுதற்
ககத்தெழுபே ரார்வத் தாலே
யிப்புவியிற் பாண்டியன்கே தீச்சரத்தை
எழிற்கெழிலா யிலங்கச் செய்தான்.

5. பண்ணிலவு மிசைவேதம் பாடியருள்
மணிமிடற்றெம் பரம னாருக்
கெண்ணிலவு மிசைத்தமிழி னேழிசையு
மெந்நாளு மிசைத்த லாற்றி
யுண்ணிலவு மானந்த மூட்டிடுவோன்
றிருவமிழ்துக் கொழுங்கு மாற்றி
விண்ணிலவு சுடர்களெல்லாம் விழிகளினிற்
றரிப்போற்கு விளக்கு மிட்டான்.

6. பொன்னியலு மிலைபரப்பிப் பொங்கொளிசால்
வைரமணிப் பூக்கள் காட்டுந்
தன்மைமிக விழைத்ததொரு தாமரைசா
றிருக்குளத்தைத் தானே மானத்
தொன்மைநல மிலகிடுமா தோட்டமது
திருக்கேதீச் சரத்தி னாலே
நன்மைமிகு மெழில்புவிக்கிற் நாற்றிசைக்கு
நாயகமாய் நல்கச் செய்தான்.

7. நீண்டபே ருருவா னிறைந்தவெண் சுதையி
   னிலவினா னெஞ்சினி னினைக்க
வேண்டிய தருளும் விமலனா ரிடத்தில்
   வெள்ளியம் பொருப்பையே வேண்டி
யிண்டது கொடுவந் தியைத்ததே திருக்கே
   தீச்சர மென்றிட வெவரும்
பாண்டிய னுடைய பக்திபே ரெழிலின்
   பழமெனப் பரிணமித் ததுவே.

8. வென்றி தந்திடு வேந்தனின் றிருப்பணி விதிகள்
பின்றை யன்னவன் பின்னவர் பேணிமுன் காத்தா
ரன்று தென்னவ ராற்றிடு மரும்பணி யன்றோ
வின்று நாங்கள்கே தீச்சரங் கைதொழு மியல்பே.

## சம்பந்தர் திருப்பணி

1. அருப்பணி யிதழிசூடு மண்ணலா ரரியின் கேழன்
மருப்பணி மார்பர் மூன்று மலமகன் றடியா ருய்யப்
பொருப்பின தரையன் பாவை புணர்ந்தருள் புனிதர்க் கேற்ற
திருப்பணி பலவி னொன்று செந்தமிழ் பாட லாமே.

2. ஆனசெந் தமிழா லெங்க ளப்பனைப் பாடி யுய்ந்த
மானுடர் சிரமேற் சூடா மணியென மகிழ்ந்து சூடி
வானவர் தமையும் வெல்லு மலர்ப்பத மருள வந்தான்
ஞானசம் பந்த னென்றோர் நற்றமிழ் ஞானி யன்றே.

3. இனிமைதரு திருமுலைப்பா லிறைவியரு ளிடவருந்தி
யினிமைதரு பேரின்ப மியைந்தசிவ சம்பந்த
னினிமைதரு மிசைபாடி யிறையுறையுந் தலங்களெலா
மினிமையெனும் பொருளதனை யேந்து தமி ழிசைத்தன னால்

4. அருளுருவாம் பரம்பொருளி னாற்றல்சிவ சக்தியதன்
திருமுலைப்பால் சிவானந்தந் திழைத்ததனிற் சிவஞான
மருவுமிவன் வளர்த்ததமிழ் மாலைகளி லிறையோனி
னுருவது விளங்கிடுத லுண்மையுட னியல்பாமால்.

5. ஈழமெனுந் திருமாதி னிருசெவியும் புரிதவத்தால்
யாழிசையின் மேலாகு மிசைத்தமிழிற் றொடையியற்றுங்
காழிவரு சிவஞானி கண்ணுதலோன் கழல் பரவி
யேழிசையின் பண்டிருக்கே தீச்சரத்தி னிறைக்கிசைத் தான்.

6. எருது மேவிடு மிறைவனா ருகந்தகே தீச்சரத் திசைபாடக்
கருதி யிசனைக் கண்டுகொண் டருள்பெறு சுவிதரு மிசை ஞானி
சுருதி மேவிடு மிசையினாற் றுதித்துமா தோட்டம திறை யோனை
விருது குன்றமா வெனுமுதல் விளங்கிடு மெய்த்தமிழ் விரித்தானே.

7. பிறவியெனுங் கடல்கடக்கப் பிறங்குபெரும் புணையாகு
மிறைவனது பதமென்று மிலங்கியருள் வழிகாட்டுந்
துறையதுவாஞ் சிவநெறிமுன் றோணிபுரத் துணர்ந் தருளு
மறையவன்மா தோட்டமது வருணித்தல் வியப்பாமோ.

8. நீருமத னிலையுமென நிறையுயிரு முடலுமெனப்
பாருலகு படைத்தியக்கும் பரனுமவ னாலயமு
மோர்பரிசி னிலங்கிடுத லுணர்ந்தருள்வோ னுரைத்த தமிழ்
சேர்திருக்கே தீச்சரமுஞ் சிவனியல்பு தெரிவிக்கும்

9. எழுத்தசை சீர்கட ம்மை யிசையினிற் குழைத்தே யின்பம்
பழுத்தசெந் தமிழி னெங்கள் பரமனா ருறையுங் கோயி
லழுத்தியே பதிக மென்னு மச்சினி லமைத்தோ னென்று
வழுத்தியே யுலக மேத்து மறையவன் கழல்கள் போற்றி

## சுந்தரர் திருப்பணி

1. ஞானசம் பந்த னாவுக் கரசனென் றிவர்கள் பாட
லானசெந் தமிழின் மாலை யவையுரைத் துவத்தல் செய்வோன்
தானெனச் சாற்றி முன்னர் தமிழ்க்கட றன்னை வாரிச்
சோனைமா மழையி னிங்கு சுந்தரன் சொரிந்தா னன்றே.

2. திருமணத்தின் றினத்தினிடைச் சித்திரப்பூம் பந்தரின்கீ
ழொருமணமுன் றடுத்தருளு முமையவளின் மணவாள
னிருமணமன் றருளநுகர்ந் திவனிறைவன் றலங்களெலா
மருமணக்குஞ் செழுந்தமிழின் மலர்த்தொடையல் வழங் கினனால்.

3. ஞானசம் பந்த னந்நா ணற்றமி ழுரைத்தல் போலத்
தானுரைத் தருளுந் தொண்டு தலைமிசைக் கொண்ட சான்றோன்
மானிலத் திறைவ னிந்நாள் வைகுறு தலங்க ளான
வேனைய துதித்துப் பின்கே தீச்சர மேத்தி னானே.

4. தம்பிரான் றோழ னாகுந் தகுதியாற் றலைமை சாலு
நம்பியா ரூர னென்னு நாவலூர் மறையோ னாளு
யிம்பரா ருயிர்கட் கெல்லா மின்புசெய் யிசையின் மாலை
யெம்பிரா னுறைதல் செய்கே தீச்சரத் திசைக்க லுற்றான்

5. பித்தாபிறை சூடியெனும் பீடாரிசை தருவோன்
சத்தாயுறு சடமானவை தமிலுந்நிறை தருமோர்
சித்தாகிய கேதீச்சரச் சிவனாரடி பரவி
நத்தார்படை யென நீடிய ஞானத்தமிழ் நவில்வான்.

6. மன்னுசிவ சம்பந்தன் வழியதனை யனுசரித்துத்
தன்னுடைய சிவநெறியைத் தரணியெல்லா மனுசரிக்க
வின்னிசையின் றமிழ்திருக்கே தீச்சரத்தெம் மிறையோற் குச்
சொன்னபெருந் தொண்டனெனுஞ் சுந்தரன்றாட் டுணை போற்றி.

## சோழர் திருப்பணி

1. அடிபெயர்த்து வைக்குமிட மனைத்தினுநல் லழகியலின்
கடிகமழுஞ் செழுந்தமிழின் கலைகமழல் காட்டுபுலிக்
கொடியுடைய சோழர்விடைக் கொடியுடையோன் கோயில்பல
படியினிடை யிலங்குதிருப் பணிபுரித லியல்பன்றோ.

2. பதித்தசுடர் நவமணியாற் பகலுடனே
யிரவெனுநாட் பகுப்பு மாற
வுதித்தியலு நவக்கோள்க ளொளிதருமிம்
மணிகளென வுளத்திற் கோளின்
கதிக்குரிய சோதிடத்திற் காலமுணர்
கணிதர்களுங் கருதும் வண்ணந்
துதித்தரனைத் திருப்பணியோர் சோழனுங்கே
தீச்சரத்தே தொடங்கி னானே.

3. மேருவென நிவந்தோங்கி விண்ணகத்துட்
புகுந்திடலால் விரவிக் கீழு
நீருடைகொண் டிலங்கிடுமிந் நீணிலத்தை
யளந்திடலால் நெடியோன் வேத
னீருருவி னடிமுடிக ளிவைகளென
வளந்தறியா விறையோன் றன்னைப்
பேருருவி னுட்புகுத்தும் பெருமையிற்கே
தீச்சரமுன் பிறங்கச் செய்தான்.

4. அகழியுடை யுடுத்திடலா லாழியுடை
நிலமடந்தை யவளை மானு
நிகழ்நிலவு விரிசுதையா னீறணியுஞ்
சிவனடியார் நிகர்க்கு நீண்ட
முகடணியு மணிகளினான் முடிமன்ன
ரொக்குமுறை முகில்க ளாலே
சிகரமுறு மலைநிகர்க்குந் திருக்கேதீச்
சரஞ்சோழன் திருத்தொண் டாலே,

5. ஈழமெனுந் திருமாதி னின்னகையி
னெழினிலவோ விவடன் சென்னி
சூழணிக ணாயகமாய்த் துலங்கிடுசூ
ழாமணியின் சுடரோ தொன்மை
வாழவருள் சுரக்குமவள் வாணுதலிற்
றிலகமதன் வடிவோ வென்னச்
சோழனது திருப்பணியாற் சுரந்ததெழில்
திருக்கேதீச் சரமு மாங்கே.

6. தண்ணிய குளத்தி லூற்ற தாமரை தழைத்தே யந்நீ
ருண்ணிறைந் திலங்க லொப்ப வுயர்த்திய புலியிற் சோழர்
பண்ணிய பணியி னாற்கே தீச்சரப் பயனுஞ் சீரும்
வண்ணமும் வடிவுந் தாமே மாந்தையாய் மலர்ந்த வன்றே

## நாவலர் திருப்பணி

1. தம்மைமுன் சுமந்து பெற்ற
   தாய்பசித் தேங்கச் செல்வம்
பொம்மல்வெம் முலைகள் விற்கும்
   பொதுமகட் களிப்போர் போலச்
செம்மைசா லறத்திற் சீர்த்த
   சிவநெறி சிலர்முன் னீத்துச்
சம்மதங் கொண்டார் வேறு
   சமயமும் தழுவு தற்கே.

2. பண்ணிய குழியி லிட்ட பைந்தழை பயிரென் றெண்ணி
மண்ணென வழியை நீத்து வழுக்கியங் கதனுள் வீழுங்
கண்ணிணை யிருந்து மற்ற கபோதிகள் கடைத்தே றற்கே
யண்ணலாய் நல்லூர் வந்தா னறுமுக நாவ லோனே.

3. தந்திமா முகவன் செய்ய தாமரைச் சரணம் போற்றிக்
கந்தனின் கோயில் மேவுங் கதிர்காமங் காண வெண்ணி
வந்தநா வலனு மாந்தை வழியினில் வரும்போ தாங்கே
யந்தநீ ளாற்றி லன்றோ ரதிசய மறிய லுற்றான்.

4. வம்புலா மலர்கள் வீசு
   வாசனை யதனால் வானத்
தும்பியைக் கவர்தல் போன்ற
   றூய்மைசேர் கரும்பொன் மேய
கம்பியை யூசிக் காந்தங்
   கவர் தல்போற் கருத்தை யெல்லா
மெம்பிரா னுறைதல் செய்கே
   தீச்சர மிழுத்தல் கண்டான்.

5. சேந்தனார் கதிரை மேவுந்
   தெரிசனங் காண வெண்ணிப்
போந்திடு நெறியிற் செந்தேன்
   பொந்திது கண்டே னென்றே
யீந்திடு முணவைக் காக்கை
   யினத்தினுக் கிடுத லேய்ப்ப
மாந்தர்காள் சிவத்தே னுண்ண
   வம்மினென் றழைக்க லுற்றான்.

6. நீறணிந் திடுவீர் சைவ நெறியினி னடப்பீர் கேண்மி
னாறணி சடையான் வைகு மாலய மடவி கொள்ள
வேறுபல் கோயி லிங்கு வேண்டுமோ விருப்பு வைத்தா
ஊறிய துளிக ளொன்றா யொருபெரு வெள்ள மன்றோ.

7. இவ்வித மியம்பிச் சைவ
ரியாவரு மியைந்து செய்யு
மவ்வவர் பணியா லங்கோ
ராலய மமைப்ப ராயி
னெவ்வித மிலங்கு மென்றே
யெண்ணித்தான் காணுங் கோயிற்
செவ்விய வுருவை மாந்தர்
சிந்தையிற் றீட்டி விட்டான்.

8. சகத்திடைக் கோயி லாக்குந் தரணிபன் றானு நாண
வகத்திடைக் கோயி லாக்கி யரனையு மதற்கு என்றே
புகுத்திடு மன்பான் மிக்க பூசலார் புரிந்த தொண்டே
யிகத்திடைப் புரியு மேந்த லின்றுநா வலனே யன்றோ.

9. சினவிடை யுகைப்போன் கோயில் சிந்தையிற் றீட்டுஞ் சிற்பி
யனையனென் றான்றோ ரேத்து மறுமுக நாவ லோனின்
கனவென மேலோர் கூறுங் கற்பனைத் திறனாலன்றே
நனவிடைக் கண்டு நாங்க ணயப்பதின் றதனை நன்கே.

## பசுபதிச் செட்டியார் திருப்பணி

1. மன்னவர் பின்ன ராவர்
வணிகரென் றுரைத்த லுண்மை
யென்னுமா றரசர் முன்கே
தீச்சரத் தியற்றுந் தொண்டு
தன்னொளி விளக்க வந்தோன்
தனபதி போல்வான் சான்றோர்
பன்னிடு புகழான் மிக்க
பசுபதி நாம முள்ளோன்.

2. மணிபொலி வளையல் விற்று
மாமனாய் வழக்கு வென்ற
பணி வணிக னான
பசுபதி பாதப் போதே
யணியெனச் சிரமேற் கொள்வோ
னரும்பொரு ளீட்டி வாழும்
வணிகரின் குடியிற் சூடா
மணியென வயங்கா நின்றோன்.

3. சத்திரந் தண்ணீர்ப் பந்தல் தன்னுடனறத்தின் சாலை
வைத்திய சாலை கோயில் மாணவர் வளர்ச்சிக் காகும்
வித்தியா சாலை யோங்க வீசினன் பொருளை வாரி
உத்தமனிவனைப் போல்வா ருலகினி லொருவ ருண்டோ.

4. அன்னவ னரனா ரிந்த வகிலமீ தடியா ருய்ய
வின்னருள் சுரத்தல் செய்கே தீச்சர மின்று காண்ப
லென்னவுள் ளெண்ணி யங்கு யாத்திரைக் கெழுந்து சென்று
கன்னிறை கடிய வெய்ய கானகங் குறுகி னானே.

5. கானமுங் கலையு முன்னே
கலந்ததோர் கோயி லிந்நாட்
கானக மாகித் தோன்றல்
கண்டுளங் கலங்கி நொந்தே
போனது நினைந்தென் னீங்கு
புரிவது புரிந்து கோயி
லானதொன் றமைப்பே னென்றங்
கரும்பணி யயர லுற்றான்.

6. நிலத்திடை மறைந்து வைகு
நென்மணி நிவந்த வானின்
சலத்தினிற் பயிரா யோங்குந்
தன்மைபோற் சான்றோர் முன்செய்
வலத்தியல் தரும மாகி
மறைந்ததவ் வணிகன் றொண்டாய்த்
தலத்தியல் தண்ணீர் காணத்
தழைத்ததா லயம் தாகி.

7. மனத்திடை முனிக்குத் தோன்றும்
வாவியும் வறண்ட பாலை
வனத்திடைத் தாகந் தீர்க்க
வந்தநீ ரூற்றும் மல்கு
புனத்திடைச் சுனையும் போலப்
பூதலத் தவர்க ணாவி
லினித்திடு நீருக் கன்னோ
னியற்றினான் கிணறு மாங்கே

8. மன்னவன் கேது தானே
வணிகனாய் வந்தா னென்பார்.
மின்னொளிர் மகுடஞ் சூடும்
விசயனே இவனா மென்பார்
பன்னிய தமிழைக் காக்கும்
பாண்டிய னென்பார் பாரோர்
சொன்னவா றியற்றுந் தொண்டாற்
சோழனித் தோன்ற லென்பார்.

## திருப்பணிச் சபையார் திருப்பணி

1. அண்டியதோர் சாலிவா கனச காப்த
மாயிரத்தெண் ணூற்றெழுபத் தைந்தின் மல்கு
தொண்டதனாற் றிருகேதீச் சரத்து மேவுந்
தொன்மைநிலை தனைமீண்டுந் துலக்கல் வேண்டி
யெண்டிசையு மிசைவிளக்கு மிலங்கை மேவு
மிந்துமதச் சைவரெல்லா மியைந்து கூடி
யண்டுதிருப் பணிச்சபையொன றமைத்தே யப்ப
னாலயத்திற் பணிபலவு மாற்ற லுற்றார்.

2. கடலினிடை நீரெல்லாங் கார்மேக
முகந்துயிர்கள் களிப்பி னோங்கப்
புடவியிடைப் பொழிந்திடல்போற் பொன்னிலகு
செல்வர்கடம் பொருள்க ளுள்ளத்
திடமுடனின் றியற்றுமுயர் திருக்கேதீச்
சரப்பணிக்குச் சேரச் செய்யுங்
கடமையது பணியாகக் கொண்டிவர்க
ளதனை நிதங் கருதிச் செய்வார்.

3. சொற்பொழிவு பிரசாரந் தொடர்ந்துவளர்
சஞ்சிகையின் றுறைக டம்மா
லிற்றையுல கெங்கணுநன் கிலங்கிடுகே
தீச்சரத்தி னியல்பு காட்டிச்
சிற்பமுறை விதிமருவுந் திருப்பணிக்குப்
பொருளுதவி செய்க வென்றே
பற்பலரு மப்பணியின் பங்குபெறச்
செய்வரிவர் பாரி னன்கே.

4. மாலயனு மறியாத மறைக்கடவு
ளருள் சுரக்க மன்னி யோங்கு
மாலயமொ டதற்குரிய வனைத்தையுமிங்
கிந்நாளி லாத ரித்தே
பாலனஞ்செய் தோம்புதிருப் பணியதுதந்
தலைமேற்கொள் பக்தி மேவிச்
சாலவுயர் பண்புடனிச் சபையோர்
நற் றருமமது தாங்கு வாரே.

5. அறியாரை யென்னுமிரு ளகன்றிடமெய்
யறிவொளியா லகத்தி லுண்மை
நெறியாகுஞ் சைவமதன் நிலையுலகோ
ருணரநித்த நிலவு மேன்மைப்
பொறியாரு நூலறிவு பொருந்துகுரு
குலமடங்கள் பூங்கா வெல்லாம்
வெறியாருங் கொன்றையணி விமலனரு
ளாலிவர்கள் விளங்கச் செய்வார்.

6. இங்கிவ ருடனிந் நாளி
லிலங்கைவாழ் சைவ ரெல்லாந்
திங்களின் வளர்ச்சி சேருந்
திருக்கேதீச் சரத்தைக் காக்கத்
தங்கிய தரும சாலை
சத்திரஞ் சமயக் கல்வி
பொங்குநூ னிலைய மெல்லாம்
பொலிவுறப் பணிகள் செய்வார்.

7. சிந்தையின் மகிழ்ச்சி யாக்குந்
திருப்பணிச் சபையைக் காக்குந்
தந்தையா யொருவ னிந்தத்
தரணிமீ துதித்தா னன்று
கந்தைய வள்ளல் போற்றிக்
காத்திடுந் தவத்தில் வந்து
மந்திரித் தொழில்முன் பூண்டோன்
வைத்திய நாத னென்போன்.

8. தவநெறி யடியார் சேரத்
தந்திடுந் தரும மெல்லாம்
நவயுக மிதனி லிந்த
நாடெலாம் பரப்புந் தொண்டாற்
சிவமணி யெனும்பேர் சூடித்
திருக்கேதீச் சரத்தின் சேவை
அவனியி லாற்றற் காம்பே
ராற்றலோ டலர்த்தா னன்னோன்.

9. விரவிய மக்கள் வேத
விதியுண ரறிஞர் நாட்டி
னரசின ருதவி யென்று
மளித்திடற் கமையு மாற்றாற்
பிரசுரந் தம்மோ டேற்ற
பிரசங்க மான வெல்லாந்
தரவுதித் திட்டான் கேதீச்
சரம்புரந் திடவிச் செல்வன்.

10. செல்வரி னுள்ள மெல்லாந்
திருப்பணிக் கிழுக்குந் தொண்டால்
நல்லதோர் காந்தம் போல
நாடொறு மியற்றுஞ் சேவை
வல்லவன் சிவன்சீர் போற்றும்
வைத்திய நாத வள்ளல்
கல்விதே ரறிஞர் தம்முட்
கருத்திடைக் கலந்த செம்மல்.

11. தலமெனச் சிறந்த கேதீச்
    சரத்திருப் பணிமுன் காக்கும்
வலமியல் பெரியோ னென்னும்
    வைத்திய நாதன் தொண்டின்
பலமெனுந் தருமத் தாலிப்
    பணிபுரி சபையெந் நாளும்
நிலமிசை நிலவ லென்றும்
    நிச்சய மாகு மாலோ.

12. சொன்னலஞ்சே ரீழமகள் சுடர்முகமாய்த்
    துலங்கிடுமா தோட்ட மீதே
யின்னருளை யெமக்கருள விறையுறைகே
    தீச்சரத்தை யேத்தி யிந்நாட்
பன்னிடுமிப் பாவுணர்ந்தோர் படிப்பவர்கள்
    கேட்பவர்கள் பதும மேவும்
பொன்னருளாற் புகழ்பூத்துப் பூவுலகி
    லெந்நாளும் பொலிந்து வாழி.

முற்றும்

சிவமயம்

# திருக்கேதீச்சர நாதன் ஊஞ்சல்

**புலவர் த. குமாரசுவாமிப்பிள்ளை**

**1966**

**காப்பு**

உலகமெலாந் தனதுருவா யொளிர்வி ராட்டின்
ஓங்குமிடை நாடியா மிலங்கை தன்னில்
நிலவுதிருக் கோணமலை கிழக்கின் கண்ணே
நிகரில்கதிர் காமந்தென் திசையின் கண்ணே
மலருநகு லேசாதி வடக்கின் கண்ணே
மருவமேற் றிசைக்கேதீச் சரத்தான் மீது
இலகுதமிழ் ஊஞ்சலிசை படியேன் பாட
தருளும் கணபதிதாள் காப்ப தாமே.

**பதிகம்**

திருவோங்கு நால்வேதம் தம்ப மாக
சிறந்த சிவா கமங்கள் மேல் விட்ட மாக
மருவோங்கு மாறங்கம் தாம்ப தாக
வளர்கலைகள் ரத்னமணிப் பலகை யாக
தருமாதி நான்குமுயர் சிங்க மாகத்
தாங்கவொளிர் பிரணவ வொண் பீட மீதில்
கருணைமிகு திருக்கேதீச் சரநா தாநற்
கௌரியுமை யுடனிருந்தே ஆடீ ரூஞ்சல் 1

ஈசானம் நவரத்னக் கிரீடம் மின்ன
எழில் நீறு திலகம்தற் புருடம் மன்ன
தேசான அகோரமதில் மதாணி கண்டி
திகழ்வாம தேவமதில் யோக பட்டம்
மாசான தகற்றிடுசத் யோசா தத்தில்
மறைச்சிலம்பு கிடந்தொலிப்ப வாம பாகம்
பூசாது சாரியுமை கௌரி மன்னப்
பொலிகேதீச்சர நாதா ஆடீ ரூஞ்சல். 2

சந்திரனும் சூரியனும் குடைகள் தாங்கச்
சாமரையை வாயு வெடுத் திரட்டி நிற்ப
இந்திரன் தான் ஆலவட்டம் எடுத்தே ஏந்த
இருபாலும் விசிறிகொடு வருணன் வீச
கொந்தலர் பூந் தட்டேந்திக் குபேரன் போற்றக்
குதுகலமாய் அக்கினிகண் ணாடி காட்ட
வந்தனை செய் பூதங்கள் நடனம் செய்ய
மாது கௌரி மணவாளா ஆடீ ரூஞ்சல். 3

அணியாக அமரர்குலம் தொழுது வாழ்த்த
அன்பர்கள் தாம் பண்களிசை யமையப் போற்ற
கணிநாத வேதம் மறை யவர்க ளோத
கந்தருவர் தும்புரு நா ரதர்கள் பாட
பணியாக ஆகமங்கள் ஆய்ந்து தேர்ந்து
பத்தியுடன் ஆதிசைவர் பூசை செய்ய
மணியாரு முறுவலுமை கௌரி தானும்
மகிழ்கேதீச் சரநாதா ஆடீ ரூஞ்சல் 4

சங்கினொடு வங்கமலி சமுத்ர தீர்த்தம்
சார்ந்தவர்தம் பவந்தீர் பா லாவித் தீர்த்தம்
அங்கைகவர் கனியுண்ண மந்தி தாவும்
அயலில் மயில் நடஞ்செய்பொழில் மாதோட்டத்தில்
எங்குமறை யொலியோங்க இசையுந் தேங்க
எழிலாரு மரம்பையர்கை வடந்தொட் டாட்ட
மங்கையுமை கௌரியிடப் பாகம் மேவ
வளர்கேதீச் சர நாதா ஆடீ ரூஞ்சல் 5

கேது திருத் தலம் வந்து பூசித் தேத்திக்
கேட்டவரம் பெற்றமையாற் கிளந்த நாமம்
ஏதுவினாற் றிருக்கேதீச் சரமென்றாக
இறையருளாற் போற்றிவரு மாதோட்டத்தில்
ஓதுபல நலங்களெல்லாம் உயர்தல் கண்டு
உவந்தடியார் திருப்பணியில் ஊக்கம் கொள்ள
மாதுமையாம் கௌரியிடப் பாகம் மன்ன
வளர்கேதீச் சர நாதா ஆடீ ரூஞ்சல் 6

சூதமொடு கதலிகமு காரும் சோலை
        சூழுமளி நறைதேரு மாதோட் டத்தில்
மாதவ மார் மேருமுடி யிருப்பக் கண்ட
        மகாதுவட்டா தளியமைத்து நகர மாக்கி
தாது நிறை மலர்ச்சடையா யுனைப்பூ சித்துத்
        தன்பெயரால் நகர்விளங்க வரங்க ளீந்து
மாதுமையாள் கௌரியிடப் பாகம் மேவ
        மகிழ்கேதீச் சரநாதா ஆட லூஞ்சல் 7

ஆய்ந்த மலர் மாலை தொடுத் தணிவார் ஓர்பால்
        அன்பினொடு மைந்தெழுத்தும் செபிப்பார் ஓர்பால்
தோய்ந்து திரு மஞ்சனநீர் சுமப்பார் ஓர்பால்
        தூயதிரு வலகு மெழுக் கமைப்பார் ஓர்பால்
ஏய்ந்தவிளக் கிடுவார் சங் கிசைப்பார் ஓர்பால்
        இன்னிசை மங் கல நாதம் இசைப்பார் ஓர்பால்
வாய்ந்த உமை கௌரியருள் வழங்க ஓர்பால்
        வளர்கேதீச்சர நாதா ஆட லூஞ்சல் 8

ஐங்கரனார் தந்தையரே ஆட லூஞ்சல்
        அறுமுகனைத் தந்தவரே ஆட லூஞ்சல்
அங்கனக வில்லியரே ஆட லூஞ்சல்
        அரிபிரமர்க் கரியவரே ஆட லூஞ்சல்
கங்கையணி செஞ்சடையீர் ஆட லூஞ்சல்
        காலனையு தைத்தவரே ஆட லூஞ்சல்
செங்சுனிவாய்க் கௌரிபங்கா ஆட லூஞ்சல்
        திருக்கேதீச் சரநாதா ஆட லூஞ்சல் 9

அந்தணர்கள் வாழிசுரர் ஆன்கள் வாழி
        அருமறைகள் வாழிசிவா கமங்கள் வாழி
செந்தமிழார் திருமுறைகள் சைவம் வாழி
        செங்கோலாய் அரசநெறி சிறந்து வாழி
சுந்தர மார் நீறுகண்டி துலங்கி வாழி
        தூயவடி யார்களும் ஐந் தெழுத்தும் வாழி
வந்து பொழி மழைவாழி கௌரியம்மை
        மன்னு திருக்கேதீச்சரன் தாள் வாழி வாழி 10

---

குறிப்பு : 2-ம் பாட்டு

| | | | |
|---|---|---|---|
| ஈசானம் | - திருமுடி | அகோரம் | - இருதயம் |
| தற்புருஷம் | - திருமுகம் | வாமதேவம் | - உந்தி |
| | | சத்யோசாதம் | - திருவடி. |

## லாலி

இராகம் : உசேனி

லாலிலா லீஜெக தீச லாலி - இந்த
ஞாலமுழு துய்யவருள் தேச லாலி
ஈசதிருக் கேதீச்சர நாத லாலி - நாளும்
இன்பருளும் கௌரியுமை பாகலாலி 1

காமனைமுன் காய்ந்த திருக் கண்ண லாலி - வெய்ய
காலனையு தைத்ததிருக் கால லாலி
வாமமுறை கௌரிமண வாள லாலி - நல்ல
வாழ்வு தரும் கேதீச்சர நாத லாலி.

## எச்சரிக்கை

இராகம் : சங்கராபரணம்

அந்தணர்கள் வேதமோத ஆதிசைவர் பூசைசெய்ய
துந்துபியைந் தும்முழங்கத் தொழுவீர் எச்சரிக்கை
வந்திமையோர் போற்றிசைப்ப மங்கைகௌரி கேதீச்சரத்
தெந்தைகொலு வைபவங்காண் யாரும் எச்சரிக்கை. 1

வள்ளல் திருக் கேதீச்சர நாதன் கௌரி யம்மையருள்
மன்னுதிரு மணங்கண்டு வாழ்வீர் எச்சரிக்கை
உள்ளமகிழ் பூத்துயிர்கள் ஓங்குபர மானந்தம்
கொள்ளுமண மென்பதுளம் கொள் வீர் எச்சரிக்கை. 2

## பராக்கு

இராகம்: பிலஹரி

அகில வுலகமுதல் ஆரண காரண னாயபரம் பொருளாம்
ஐயனை யமரர்கள் வையக முறைபவர் அடிதொழுவீர் பராக்
மகிழும லர்ப்பொழில் சூழ் மாதோட்டத்தில் வாழுமைகௌரிதளை
வள்ளல்கே தீச்சர நாதனை வழிபடும் மாதவரே பராக்கு. 1

மங்கல சங்காலி பொங்கும்பல் லியவொலி எங்குமெ முந்தொலிப்ப
வருபவர் புப்ழீதரு பணிபல முறை செயும் வண்மையாரே பராக்கு
பங்கய னரியறியாதபதந்தொழும் பான்மை யெமக்கருளும்
பண்மொழி கௌரிகே தீச்சர நாதனைப் பாடிடுவீர் பராக்கு. 2

**மங்களம்**

இராகம் : மத்யமாவதி  தாளம் : ஆதி

**பல்லவி**

மங்களம் ஜெய மங்களம்- ஜெய ஜெய-மங்

**அநுபல்லவி**

ஐங்கரனாம் முன்னவற்கும் ஆறுமுக நம்பியற்கும்
அம்மைதெய்வ யானைவள்ளி அணிமயில்வேல் சேவலுக்கும்-மங்

**சரணம்**

தெய்வ நட ராசருக்கும் சிவகாமித் தேவியர்க்கும்
சேர்ந்தமணி வாசகற்கும் திருத்தொண்டு செய்பவர்க்கும்
நவ்வி விழிக் கௌரிதிருக் கேதீச்சர நாதருக்கும்
நற்றிருப்ப ணிச்சபைக்கும் நயந்து போற்றி செய்பவர்க்கும் - மங்

# கேதீசநாத ஸுப்ரபாதம்

**வியாகரண சிரோமணி தி.கி.சீதாராம சாஸ்திரிகள்**

1967

**ஓம்**
**சிவமயம்**

## ॥ केतीशनाथ सुप्रभातम् ॥

## கேதீச நாத ஸுப்ரபாதம்

I श्रीशङ्खपाणि कमलेश वृषाधिरूढ
मत्तेभचर्म परिकर्मित दिव्यगात्र ।
प्रेमाश्रुपात पुलकाञ्चित भक्तवन्द्य
केतीशनाथ सुखदं तवसुप्रभातम् ॥

பாஞ்ச ஜந்நியம் என்ற சங்கைக் கையி லேந்திய திருமால் பசுபதிக்குப் பணிபுரியக் கருத்துக்கொண்டு இடபரூபம் தாங்கிவர அதனில் ஆரோகணித்து அருள் செய்த பெம்மானே, மதங் கொண்டு யானை வடிவம் தாங்கிய அசுரனைச் சங்கரித்து அதன் தோலையணிந்து அழகிய திருமேனி பொருந்தியவரே, காதலாகிக் கண்ணீர் மல்கி மெய்சிலிர்த்து அடியார்களால் வணங்கப்படுபவரே, கேதீசநாதப் பெருமானே உன் காட்சி கண்ட இந்த நாள் இன்பந்தரும் நன்னாளாகும்.

II कालाग्निदग्धभसितामल भव्यगात्र
कालाम्बुदाभ कमनीय सुनीलकण्ठ ।
काञ्चीगुणोज्ज्वल सुमध्यमयासमेत
केतीशनाथ सुखदं तव सुप्रभातम् ॥

ஊழிக்கால நெருப்பினுல் எரிக்கப்பட்டு வெண்ணீற்றை அணிந்து தூய திருமேனியுடன் விளங்குபவரே, நீருண்ட மேகம் போல விளங்கும் அழகிய கரிய கழுத்தை உடையவரே, ஒட்டியாண ஒளியுடன் விளங்கும் அழகிய இடை பொருந்திய கௌரி அம்மையாருடன் கூடிய பெருமானே கேதீசப் பெருமானே.

III आम्नायसूक्त महितामर भूसुरैश्च
क्षीरोदतीररचिते नगरे च रम्ये ।
त्वष्ट्रा निबद्ध निलये नियताधिवास
केतीशनाथ सुखदं तव सुप्रभातम् ॥

அமரரும் அந்தணரும் வேத ஸூக்தங்கள் கூறி வழிபடும் பெருமை வாய்ந்தவரே, பாலாவியின் கரையில் அழகாக அமைக்கப்பட்ட நன்னகரத்தில் தேவதச்சன் அமைத்த ஆலயத்தில் என்றும் உறைபவரே கேதீசப் பெருமானே.

IV सूर्येन्दुनेत्र नयनोपरि फालनेत्र
स्वर्धेनुदुग्ध तटिनीतट भासमान ।
सामादिवेद विनुताखिल वेदनाथ
केतीशनाथ सुखदं तव सुप्रभातम् ॥

மதியையும் இரவியையும் இரு கண்களாகக் கொண்டு ஆன்மாக்களுக்கு அருள் புரிபவரே, அவ்விரு கண்களுக்குமேல் நெற்றியில் நெருப்

புக்கண் கொண்டு ஆன்மாக்களின் ஆணவ மலத்தை நீக்குபவரே, காமதேநுவின் பால் நிறைந்த வாவியின் கரையில் வீற்றிருப்பவரே, சாமம் முதலிய நான்கு மறைகளாலும் போற்றப்படுபவரே. நான்கு மறைகளையும் அருளிய தலைவரே, கேதீசப் பெருமானே.

V भक्तार्तिभञ्जनविधावतिशायिदक्ष
चिन्ताधिरूढ विविधाधिविलोपकारिन् ।
विध्वंस्य रक्षक पुरातन कर्मरोगान्
केतीशनाथ सुखदं तव सुप्रभातम् ॥

அடியவர்கள் இன்னல்களை நீக்கியருளுவதில் நிகரற்ற பெருமை வாய்ந்தவரே, உள்ளத்தில் உறைந்த மனநோய்களை நீக்கியருளும் பெருமானே, முன்னை வினை நோய்களை அழித்துக் காப்பவரே கேதீசப் பெருமானே.

VI बालौषधीश सुमशेखर वैद्यनाथ
बालाम्बिकाहृदयपङ्कज भानुमूर्ते ।
हृत्वा मलं च कृपया भवरोगहारिन् ।
केतीशनाथ सुखदं तव सुप्रभातम् ॥

இளம்பிறைச் சந்திரனை முடியில் அணிந்த பெருமானே, வைத்திய நாதரே, பாலாம்பிகையின் உள்ளத் தாமரையை மலருவிப்பதில் பரிதி போன்றவரே. அருளால் மும் மலங்களை நீக்கிப் பிறவி நோயைப் போக்குபவரே கேதீசப் பெருமானே.

VII भीषाकरस्य च पुराणवराहमूर्ते
उत्पाटय दंष्ट्रशकलं भुजमध्यभागे ।
धृत्वानिशं त्रिदशरक्षक पुण्यमूर्ते
केतीशनाथ सुखदं तव सुप्रभातम् ॥

மூவுலகத்தையும் பயத்தில் மூழ்குவித்த பழைமையான பன்றியின் கோட்டைப் பிடுங்கி மார்பில் அணிந்து எப்பொழுதும் அமரரைப் பாதுகாத்துவரும் புண்ணிய மூர்த்தியே, கேதீசப் பெருமானே.

VIII पृथ्वीजलानल मरुत्खरवीन्दु यज्वा
मूर्त्याष्टदिक्षु विलसत्परमात्मरूप ।
कट्यां निबद्धफणि भूषण शोभमान
केतीशनाथ सुखदं तव सुप्रभातम् ॥

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், இரவி, மதி, குரு என்ற எட்டு மூர்த்தம் தாங்கி எண்திசையிலும் விளங்கும் பரமான்ம ரூபியே, திரு அரையில் அரவத்தை அரைஞாண் அணியாக அணிந்து விளங்குபவரே கேதீசப் பெருமானே.

IX मूर्तित्रयात्मक गुरो मुनिबृन्दसेव्य
विख्यातशक्तिशिवरूप नभिन्नमूर्ते ।
प्रारब्धसञ्चितफलादि निकृन्तनेश
केतीशनाथ सुखदं तव सुप्रभातम् ॥

மும்மூர்த்தி வடிவம் தாங்கி உலகத்தைக் காப்பவரே, எல்லா ஆன்மாக்களுக்கும் குருவே, சநகர் முதலிய முநிவர் கூட்டத்திஞல் சேவிக்

கப்படுபவரே, சிவம் சக்தி என்று இரு பிரிவாக அழைக்கப்படுபவரே, பிரித்துக் காணமுடியாத பெருமை வாய்ந்தவரே, பிராரப்தம் ஸஞ்சிதம் ஆகாமியம் என்ற வினைப்பயன்களை அழிப்பவரே, கேதீசப் பெருமானே.

X केतीशदिव्यचरणाम्बुजमाश्रितानां
प्रेतेशभीर्नहि कदापि भवेच्च सत्यम् ।
लोकेऽपि सर्वमभिवाञ्छितमाप्नुवन्ति
केतीशनाथ सुखदं तव सुप्रभातम् ॥

கேதீசப் பெருமானின் அழகிய திருவடித் தாமரையை அண்டியவர்களுக்கு யமபயம் ஒருபொழுதும் உண்டாகமாட்டாது. இவ்வுலகத்திலும் விரும்பிய பயனைப் பெறுவார்கள். இது சத்தியம்.

---

## ॥ प्रातिपत्तिः ॥

I मौर्वीम् विधाय फणिराजमिषुञ्च विष्णुं
चापं विधाय सुरसेवित रत्नसानुम् ।
हासेन दग्ध सुरशत्रु पुरत्रयारे
केतीशनाथ चरणं शरणं प्रपद्ये ॥

நாகராஜனை நாணாகவும், நாராயணனை அம்பாகவும், அமரர் வாழும் பொன்மலையை வில்லாகவும் அமைத்துக்கொண்டு புன்சிரிப்பினால் தேவர் பகைவராகிய முப்புரத்தவுணர்களை எரித்த பெருமானே, கேதீசப் பெருமானே, உமது திருவடியையே தஞ்சமென்று சரண் புகுந்தேன்.

II नानाविहारविहिताद्भुत दिव्यशील
गीर्वाणवागशित दारदनीलकण्ठ ।
सर्गादि पञ्चकृति जीवदयापरेश
केतीशनाथ चरणं शरणं प्रपद्ये ॥

திருவாலவாயில் பலபல அற்புத லீலைகள் புரிந்து போற்றப்படும் பெருமை வாய்ந்தவரே, தேவர் வேண்டுகோளுக்கிரங்கி நஞ்சை உண்டு கரிய கழுத்தை உடையவரே, படைப்பு முதலிய ஐந்தொழில் புரிந்து ஆன்மாக்களுக்கு அருள் செய்பவரே, கேதீசப் பெருமானே.

III बालेन्दुभासितनिबद्ध जटाग्रचूड
शिङ्जाननूपुर पदाम्बुज शोभमान ।
भस्मानुलेप विशदीकृत दिव्यगात्र
केतीशनाथ चरणं शरणं प्रपद्ये ॥

உயர்த்திக் கட்டப்பட்ட சடைமுடியில் தவழும் இளம்பிறையுடன் விளங்குபவரே, கலீர் கலீர் என ஒலிக்கும் சிலம்புப் பாதங்களுடன் விளங்குபவரே, வெண்ணீறு பூசித் தூயதிருமேனி உடையவரே கேதீசப் பெருமானே.

IV व्याघ्राजिनाम्बरधराग्र्य कुरङ्गपाणे
धर्मोग्रदर्पशिथिलीकर शूलपाणे ।
मूर्धाभिनम्र कलि कर्म विलोपदक्ष
केतीशनाथ चरणं शरणं प्रपद्ये ॥

புலித்தோலை ஆடையாக அணிந்திருப்பவரே, சிறந்த மான் கன்றைக் கையில் தாங்கியவரே, கூற்றுவனின் கொடிய செருக்கைச் சிதறடித்த சூலாயுதத்தைக் கையில் ஏந்திய பெருமானே, தலையால் வணங்குபவரின் பாபவினைகளை நீக்குவதில் நிகரற்றவரே, கேதீசப் பெருமானே

V गीर्वाणदैत्य विधिशीर्ष किरीटरत्न
कान्तिप्रवाह शबलीकृत पादपद्म ।
नक्तंदिवं शिखिकृतार्चन हृष्टचेतः
केतीशनाथ चरणं शरणं प्रपद्ये ॥

அமரர், அசுரர், அயன் இவர்கள் அரன் திருவடி வணங்க அவர்கள் முடியிலுள்ள இரத்நக் கற்களின் ஒளிப் பெருக்கினுல் பல நிறம் பொருந்தி விளங்கும் தாமரை போன்ற திருவடி பொருந்தியவரே, இரவும் பகலும் கேதுவினு லர்ச்சிக்கப்பட்டு மகிழ்ந்த மனத்தையுடையவரே, கேதீசப் பெருமானே.

VI चञ्चज्जटा जटिलगह्वर निस्सरन्ती
स्वर्वाहिनीधर गिरीश सुतार्धदेह ।
श्रीपाण्ड्यभूप तनयाशय सिद्धिदेश
केतीशनाथ चरणं शरणं प्रपद्ये ।

அசையும் அடர்ந்த சடையாகிய காட்டில் பெருக்கெடுத்து ஓடும் ஆகாய கங்கையை அணிந்திருப்பவரே, உமையம்மையாருக்குப் பாதி உடல் ஈந்த பெருமானே, பாண்டிய மன்னன் மகள் அங்கயற் கண்ணியின் விருப்பத்தை நிறைவேற்றிய தலைவ, கேதீசப் பெருமானே.

VII ध्यानेन पूतसनकादि मुनीश्वराणां
तत्वार्थ बोधक गुरो सकलात्मनाथ ।
श्रीशादि भक्तपरिसेवित पङ्कजाङ्घ्रे
केतीशनाथ चरणं शरणं प्रपद्ये ॥

இடைவிடாது இறைவனைத் தியானித்துத் தூய உள்ளம் படைத்த ஸநகாதி முனிவர்களுக்குக் குருவாய் வந்து தத்துவத்தை உபதேசித்த பெருமானே, எல்லா ஆன்மாக்களுக்கும் தலைவ, நாராயணன் முதலிய அடியார்களால் வணங்கப்படும் திருவடித்தாமரை பொருந்தியவரே, கேதீசப் பெருமானே.

VIII माकन्दपूग कदलीतरुषण्डरम्ये
त्वष्ट्रा विनिर्मितपुरे नियताधिवास ।
श्वेताचलोद्धरदशास्यकृपाकरेश
केतीशनाथ चरणं शरणं प्रपद्ये ॥

தேமா, கமுகு, வாழை, முதலிய மரங்கள் செறிந்ததாகத் துவட்டா அமைத்த நன்னகரத்தில் என்றும் உறைபவரே, வெள்ளிமலையைத் தூக்கிய இராவணனுக்கும் அருள்புரிந்த தலைவ, கேதீசப் பெருமானே.

3

IX अन्विष्य मूर्धचरणं त्वनवेक्षमाण
ब्रह्मारविन्द नयनाक्षिगतात्मरूप ।
गौरीसमेत पयसां निधितीरवास
केतीशनाथ चरणं शरणं प्रपद्ये ॥

அடிமுடி தேடிக்காணாத அரி பிரமருக்கும் காட்சி கொடுத்தருளிய பெருமானே, கௌரி அம்மையுடன் பாலாவியின் கரையில் உறைப வரே, கேதீசப் பெருமானே.

X त्वामेव देवशरणं शरणं प्रपन्नं
नोमात्यजेर्नहि ममान्यगतिर्महेश ।
भक्तिं स्थिरां गमय मां त्वत्पादपद्म
केतीशनाथ चरणं शरणं प्रपद्ये ॥

உன்னையே தஞ்சமெனச் சரண்புகுந்த என்னைக் கைவிடாதே, மகேச; எனக்கு வேறு புகலிடமில்லை, உன் திருவடியில் குன்றாத பக்தியை அருள்வாயாக, கேதீசப் பெருமானே.

XI माता त्वमेव जनको मम बन्धुवर्गो
भ्राता त्वमेव सकलं मनसा विचिन्त्य ।
त्वत्पादपद्म मकरन्दरसं पिपासुः
केतीशनाथ चरणं शरणं प्रपद्ये ॥

தாயும் நீ, தந்தையும் நீ, என் சுற்றமும் நீ, சகோதரனும் நீ, யாவும் நீ என்று மனத்தால் சிந்தித்து உன் திருவடித் தாமரையின் அமுதத்தைப் பருக ஆவல்கொண்டு கேதீசப் பெருமானே உன் திருவடியைத் தஞ்சமென்று அடைகின்றேன்.

## ॥ मङ्गळम् ॥

नमस्ते साम्बरुद्राय नमस्ते परमात्मने ।
क्षीरवापीतटावासि केतीशाय च मङ्गळम् ॥

அம்மையப்பருக்கு வணக்கம், பரமான்ம சொரூபிக்கு வணக்கம், பாலாவியின் கரையில் உறையும் கேதீசப் பெருமானுக்கு மங்களம்.

आदिमध्यान्तशून्याय सर्वाधारस्थिताय च ।
क्षीरवापीतटावासि केतीशाय च मङ्गळम् ॥

ஆதியும் அந்தமும் நடுவும் இல்லாத பெருமானுக்கு வணக்கம். யாவற்றுக்கும் ஆதாரமாக விளங்கும் பெருமானுக்கு வணக்கம்.

ब्रह्मविष्णुस्वरूपाय सर्गपालनहेतवे ।
क्षीरवापीतटावासि केतीशाय च मङ्गळम् ॥

படைப்புக்கும் பாதுகாப்புக்கும் காரணமான அயன் மால் வடிவம் தாங்கிய பெருமானுக்கு வணக்கம்.

उमार्धदेहरूपाय कारुण्य रससिन्धवे ।
क्षीरवापीतटावासि केतीशाय च मङ्गळम् ॥

உமைபாகனுக்கு வணக்கம்
கருணைக் கடலுக்கு வணக்கம்.

नमस्सुन्दररूपाय सुन्दरीप्राणनायक ।
क्षीरवापीतटावासि केतीशाय च मङ्गळम् ॥

சுந்தர வடிவனுக்கு வணக்கம்
சுந்தரி தலைவனுக்கு வணக்கம்

नमस्ते जगदाधार नमस्त्रैलोक्यपालन ।
क्षीरवापितटावासि केतीशाय च मङ्गळम् ॥

மூவுலகிற்கும் ஆதாரமாக விளங்கும் பெருமானுக்கு வணக்கம். மூவுலகத்தைக் காத்தருளும் பெருமானுக்கு வணக்கம்.

नमस्ते वेदवेद्याय वेदमन्त्रस्वरूपिणे ।
क्षीरवापीतटावासि केतीशाय च मङ्गळम् ॥

வேத மந்திரங்களால் அறியப்படுபவனுக்கு வணக்கம். வேத மந்திர வடிவம் பெற்றவனுக்கு வணக்கம்.

नमोज्योतिस्स्वरूपाय लिङ्गरूपधराय च ।
क्षीरवापीतटावासि केतीशाय च मङ्गळम् ॥

சோதி வடிவம் தாங்கியவனுக்கு வணக்கம் பின் லிங்க வடிவம் பெற்றவனுக்கு வணக்கம்.

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# திருக்கேதீச்சரப் புராணம்

**அச்சுவேலி சிவஸ்ரீ ச. கு. வைத்தீசுவரக் குருக்கள்**
**(1970)**

### காப்பு

பூமேவு திருமணக்கும் புயல்போலு
நெடுமேனிப் புனித மாயோன்
நாமேவு மறையயனே புருகூதன்
முதலமரர் நயந்து போற்றும்
தூமேவு கயவதனத் தைங்கரனார்
பாதமலர் தொழுது வாழ்த்திப்
பாமேவு செந்தமிழாற் கேதீசப்
புராணமது பகர்த லுற்றாம். 1

## பாயிரம் - கடவுள் வாழ்த்து

### வேறு

திருநிறை யுலகினிற் சிறப்புற் றோங்கிய
மருநிறை காவுசூழ் மாந்தை நற்பதித்
தெருணிறை கேதீச்சரந் திகழ்ந்து மன்னியே
அருள்பொழி கரிமுக னடிகள் போற்றுவாம். 2

### திருக்கேதீச்சரர் துதி

மலர்மிசை வாழும் வேதன் வான்புவி யளந்த மாயன்
குலவரைப் பகைஞன் றேவர் கோதறு கணங்க ளேனோர்
நலமிக வருளு கென்றே நாடொறும் வணங்கி யேத்தப்
பலனருள் கேது நாதன் பங்கயச் சரணம் போற்றி 3

### கௌரியம்மை துதி

சீர்மன்னு முத்தொழிற்கு முதல்வியாகித்
திருமணக்கு மாயோ னாதிப்
பேர்மன்னு பண்ணவருக் கதிகாரப்
பெருநிலைமை பெட்பி னீந்தே

நார்மன்னு மடியார்க்கு நாடோறு
நலிவகற்றிக் கதிமுன் காட்ட
ஏர்மன்னு பாலாவிக் கரையமரெம்
பிராட்டியடி யிணைகள் போற்றி 4

## நடேசர் துதி

துங்கவரை மங்கையுமை துய்யமணி மெய்யாள்
மங்கவினை மன்னுயிர்கள் மன்றதனி னோக்க
வைந்தொழில தென்னுநட மாரருளி னாற்றுஞ்
சிந்துவணி யீசனடி சென்னிமிசை யாமால். 5

## விநாயகர் துதி

வெண்ணிற விடையி னானை
வியாபகப் பொருளா னோனை
வண்ணவிண் மதிமெய் யானை
வாகுநான் குடையான் றன்னை
யொண்ணுத லோடை மின்னு
மும்பன்மா வதனத் தானை
யுண்ணெகிழந் துன்னல் செய்வா
ரூறெலா நீங்கு மாறே. 6

## சுப்பிரமணியர் துதி

செந்நிற மேனியுந் திகழுமோர் வதனமு
மன்புரி வயிரவேல் வராபயக் கரங்களும்
பொன்புனை மயூரமேற் பொலியுங் கோலமு
மென்னுள மன்னியே யிடரை நீக்குமே. 7

## தக்ஷிணாமூர்த்தி துதி

மதிமுடியு நகைமுகமு மலர்க்கண் மூன்றும்
மணிவடிவு மணிவடநீர்க் கரகஞ் ஞானம்
பொதிசுவடி முத்திரைகள் புணர்நாற் கையும்
புலியதளே பொருந்தரையும் பொற்பார் தாளும்
விதிமுறையே விளங்குனது குருரூ பத்தை
வினையேற்கு மனவிளக்கா யருள்வாய் வேதத்
துதிமுடிவுந் தொடர்வரியாய் ஞானந் தானாய்ச்
சுடருருவத் தேசிகனே துரியா தீதா. 8

**வைரவக்கடவுள் துதி**

தளிரெரி புடையுஞ் சடையணி பிறையன்
றழலன மேனிமுக் கண்ணன்
மிளிர்திரி சூலம் பாசமேற் கபாலம்
விசிதுடி விளங்குநாற் கரத்தன்
களியுறு மட்ட காசன்முற் றுலகின்
காவலன் மறைஞும லியினான்
வெளிபுனை யாடை வடுகன்வெம் பூத
வேந்தனற் சரணெமக் கரணே. 9

**திருநந்திதேவர் துதி**

அந்தி வான்பிறை யண்ண லயின்வரை
யந்தின் மேய வபர சிவனெனு
நந்தி நாயக னாண்மலர்ப் பாதமுட்
சிந்தித் தேவினை சிந்தியும் வாமரோ. 10

**அகத்தியமுனிவர் துதி**

அரியயற் கரிய வண்ண
லருண்மொழி சிரமேற் றாங்கி
யுரியவான் பொதியம் போந்தே
யொண்புவி சமஞ்செய் தென்றுந்
திருவுறை மாதோட் டஞ்சேர்
சிவனடி சேவை யாற்றித்
திரமுறு மன்பே கொண்ட
திருமுனி திருத்தாள் போற்றி. 11

**சமயகுரவர்கள் துதி**

மண்புரந்த மாறன்கூன் மாற்றுங் காழி
மாமறையோர் மன்னவனார் மலர்த்தாள் போற்றி
பண்சுமந்த பதிகத்தாற் பரவை மீதே
பாறையுகைத் தருள்பகவர் பாதம் போற்றி
விணிபுரந்த விடங்கரையே விடுந்தூ தாக
வேண்டுதமிழ் வேந்தரடிக் கமலம் போற்றி
மண்சுமந்தார் மலர்க்கைசுமந் தெழுத வேதம்
மலர்ந்தமணி வாசகனார் திருத்தாள் போற்றி. 12

### கேதுபகவான் துதி

சித்திர யானா வத்திர வத்திர செங்கண்ணா
சித்திர துவசா சுககர சாம்பவ சிங்கிக்கோர்
புத்திர கேசர வாசுர நாயக புரநாச
னுத்தம பூசக தருகுவை யோமிக வுன்னருளே. 13

### இராமபிரான் துதி

அருந்தவத்தோர் சேவிக்கு மரும ருந்தை
யணிதிகழுஞ் சாகேத வரத னத்தைக்
கருங்குழலாள் கோசலைதன் குலவி ளக்கைக்
கடல்சூழுஞ் சகத்துக்கோர் சோதி தன்னை
யருங்குணஞ்சேர் சானகித னிளமைக் கேற்ற
வழகொழுகு பாக்கியமா மரத னத்தைத்
திருத்திகழுங் கேதீசர் சபரி யாற்றித்
தீதகலு மருமணியைப் போற்று வேனே. 14

### குருவணக்கம்

சீரோங்கு மாகமத்தின் றிறமே வாய்ப்பச்
சிறியேனுக் கருளெந்தை பதமே பேணிப்
பேரோங்கு மகாமுத்துக் குமார சாமிப்
பிதாமகனேர் குரவனையு மகத்தே கொண்டு
நாரோங்கு மோசரெவர் தமையு முன்னி
நவையறவே யறிவுறுத்தி யென்னை யாண்ட
பாரோங்கு வைத்தியநா தப்பே ராசான்
பதுமபத முச்சிமிசை வைத்து வாழ்வாம். 15

### அவையடக்கம்

ஆதியி னுலக முற்று மளித்தவர் கேதீ சத்தின்
மாதுய ரகற்று மேன்மை மான்மியந் தமிழினாலே
யோதுமென் புன்மையுன்னி யொதுக்கிடார் புலவரானோர்
மாதமர் பாகன் காதை மற்றிதென் றுள்ளு வாரே. 16

பத்துநூ றாமு கங்கள் படைத்தருள் சேட னாரே
பத்துநூ றப்தங் காறும் பயன்றரு கேதீ சத்தி
னுத்தம வளங்க ளெல்லா முரைக்கினு முலவா தென்றாற்
புத்தியில் சிறியே னோதல் புலவர்க்கு நகையா மன்றே. 17

பாயிரம் முற்றிற்று

## 01. முதலாவது இலங்கைச் சிறப்புரைத்த சருக்கம்

### கேதீசர் துதி

போதுறை முதல்வ னாகிப் புவிமுத லனைத்து நல்கி
மாதுறை மார்ப னாகி மற்றவை யாவுங் காத்தே
யோதுமுக் கண்ண னாகி யொழித்துமுத் தொழிலுஞ் செய்
கேதுநா யகனைச் சேர்ந்தார் கேடிலா துலகில் வாழ்வார். 1

### கௌரியம்மை துதி

ஓங்கா ரப்பஞ் சரசுகமே யுயர்வே தாந்தப் பூங்காவில்
கூங்கோ கிலமே யாகமவா ரணியத் தாடிக் குளிர்மயிலே
பாங்கா ரன்பர் பத்திப்பால் பருகோ திமமே யடியனுளத்
தீங்கா தரவோ டமர்ந்தருள்வா யெந்தாய் கவுரி யிடர் கெடவே.2

### ஸ்ரீ கேதீச்சுரர் அருள்சேர் நாடு

உலகெலாம் பெற்ற கன்னி யுமையொரு பாகம் வைத்தே
நலமெலா மருளுங் கேது நாதனா ரருள்சேர் நாடு
தலமெலா மேத்த நின்ற தாவில்பா லாவி மக்கள்
குலமெலாம் வளர்க்கு மேன்மை குறைவில்சீ ரீழ நாடு. 3

### கௌரிதன் அருள்சேர் நாடு

தண்ணறுங் கமலம் வைகுந் தையல ரிருவர் தம்மைக்
கண்ணெனக் கொண்ட வெங்கள் கௌரித னருள்சேர் நாடு
சங்குமம் புயமு மாகுந் தனிநிதிக் கிழமை பூண்ட
அங்கணற் கினிய தோழ னரசுசெய் தளித்த நாடு. 4

### சிவனொளிபாதமாதி மலைகள்

தக்கிண மேரு வன்றித் தைவிகம் வாய்ந்து தன்பாற்
புக்கவர்க் கின்ப மாக்கிப் புலவர்கள் பாடும் பொற்பிற்
றிக்குலாய்ப் பரந்த சீர்த்திச் சிவனொளி பாத மாதித்
தக்கபல் கிரிகள் மேவச் சார்வதிவ் விலங்கைத் தேயம். 5

### மகாவலிகங்கை

மாவலி யடர்ப்பா னீண்டோன் மதிக்குநீள் செலவிற் றாயு
மாவலி னடியார் மான வலர் தழை புனன்மேற் கொண்டும்
பாமலி மறையின் கீதப் பதுமனே யென்ன வார்த்தும்
மாவலி யாறு பாயும் வளத்ததா லீழத் தீபம். 6

### மாணிக்கங்கை

சந்தமுந் தேக்கு முந்தித் தரளமு மணியுஞ் சிந்தி
யந்தமில் மலர்கள் வாரி யலைத்திரு மருங்கும் வீசி
வந்துநீ ராடி னார் தம் மலங்கழீஇத் தூயோ ராக்கி
முந்துமா ணிக்க கங்கை முச்சகம் பரவப் பாயும். 7

### சிவபூமி

தெருணெறி பெருக்கு மெங்க டிருமூல தேவர் செப்புந்
திருமுறைத் தெய்வ நூலாய்த் திகடிரு மந்தி ரத்துட்
டிருவருட் பரன்றொ டர்பாஞ் சிவபூமி யிலங்கையென்றாற்
றிருநிறை மேன்மை சாற்ற றேவர்க்கு மரிதா மன்றே. 8

காலத்தா னதீத நட்டன் கண்ணுறு மிலங்கைத் தேத்துக்
காலத்தான் முன்ன தாகக் கன்னியந் தமிழு மோங்கக்
காலத்தா னெட்டா தாகிச் சிவநெறி கலந்து வாற்றா
னேலத்தா னிந்தத் தேய மியல்சைவத் திருநா டென்பார். 9

### திருக்கேதீச்சரம்

பொதிய மேலுறை முனிவரர் மேலவன் புகழ்சேர்
விதிசெய் கைவல நூலுணர் கம்மியன் விசும்பார்
கதிர வன்பகை தசரத நந்தனன் கருத்தார்
விதியி லர்ச்சனைத் தானமு மீண்டுற விளங்கும். 10

### திருகோணமலை

திருந்து முத்தமிழ் முனிவரன் சிரங்கள்பத் துடையோன்
மருந்து போன்மொழிச் சானகி பதியயன் மாயோன்
பொருந்து நல்வர ராமனே புதல்வனே முதலோ
ரிருந்து போற்றுதென் கயிலையு மிலங்குவ திலங்கை. 11

### இராவணன் பூசாலிங்கம்

இன்னிசை யமுத வாரி யிறைசெவி குளிர வாக்குந்
நன்னல மிகுந்த தெய்வ நாரத முனிவன் றன்பா
லின்னருண் மறைக ளோது மிராவணன் பூசா லிங்கந்
துன்னுபல் கோடி யென்னாச் சொற்றன ரிந்த நாட்டில். 12

### கதிரைவெற்பு

வேடுவ மகளி ராட விரதரும் விரும்பி யாட
மாடுறு பத்த ராட மகிழ்வுறு குமரப் புத்தே
ளாடுத றானே யாற்றி யருள்புரி கதிரை வெற்பை
யீடுறு தன்பாற் கொண்டே யிலகுவ தீழ நாடு. 13

குன்றுதோ றாடல் செய்யுங் குமரவே டலங்க டம்முட்
பன்னரு பெருமைத் தாகிப் பண்ணவர் போற்றப் பாடி
துன்றுபா சறைய தாகிச் சுகந்தரு கதிரை மேன்மை
பன்மறைப் பதும னார்க்கும் பகருதற் கரிதா மன்றே. 14

### நகுலகிரி

ஒப்பறு முனிவர் மேலோ னுயர்தவ நகுல னென்பான்
முப்புர மழியச் செற்ற முதல்வனா ரருளி னாலே
செப்பிய வாக மத்தின் றிறனெலா முறையிற் றேர்ந்தே
தப்பறு பூசை யாற்றுந் தானமிவ் விலங்கை மேவும். 15

### சுயம்புநாதம்

நார்மன்னு பயோததியிற் றுயில்மேவு
நாரணனு நளின மேய
பேர்மன்னு திசைமுகனு மலர்ப்பதமும்
பிறைமுடிய மின்னுங் காணாச்
சீர்மன்னு மனலுருவாய் நின்றசிவன்
வயிரவனாஞ் செம்மல் காணப்
பார்மன்னு சிவக்குறிமுன் காட்டுதலம்
பயின்மேன்மை யுடைய தீழம். 16

### முன்னேசுவரம்

மன்புரி யிராகவன் மறையின் வாய்ம்மையிற்
பன்னுறு சிவக்குறி பரிவி னாற்றியே
முன்னுறு பூசைசெய் முன்னை மாநகர்
தென்னுறு சிங்களந் திகழ மேவுமே. 17

### மட்டுவிற் சிவாலயம்

மட்டு லாவு மலர்தொடு மாரவே
ளிட்ட மாக வியற்றிய பூசைகொ
ளெட்டு வான்குணத் தெம்மிறை வாழ்வுறு
மட்டு விற்பதி மன்னுவ தீழமே. 18

### பல சிவாலயங்கள்

பிணிதபு வயித்தி யேசர் பேரருட் பசுப தீசர்
பணியணி கஞ்சு கேசர் பற்றுபொன் னம்ப லேசர்
மணிபுனை கயிலை நாதர் மாவுரி விசுவ நாத
ரணிதர வமருங் கோட்ட மண்டரும் பணிய வுண்டால்.19

## நயினை நாகபூஷணி

இந்திர போகமு மியைந்த மோக்கமும்
வந்தனை புரிபவர் மருவ நல்கியே
யந்தரி யுமையவ ளருளின் மன்னிய
நந்தலில் நயினையு நண்ணு மீழமே. 20

## மண்டலாய் விநாயகர்

புங்கவர்க் கிடுக்கண் செய்த புரைநெறி யனல மொய்ம்பன்
துங்கமில் கமல வெய்யோன் றோன்முக னாயுள் கொண்ட
வங்கணற்பதிட்டை செய்தே யடல்வலியிரா மன்போற்றும்
மங்குறோ யடவி சார்ந்த மண்டலாய்ப் பதியும் மேவும். 21

## முறிகண்டி மருதடி முதலியன

பிணித்தடக்கிப் பேரீயும் பெரியோன் றானே
பிறரிலரென் றேவருந்தற் பேணு மாற்றாற்
கணிப்பாரும் பாசாங்கு சங்கள் தாங்கிக்
கருதரிய சாங்கமதை யுபாங்க மாக்கித்
திணித்தவுடற் கயமுகனைச் சேதித் தூர்ந்தே
திருக்கரத்தில் மோதகமுந் தாங்குந் தேவன்
குணிப்பாரு முறிகண்டி மருதுக் கோட்டம்
கூறுலவிற் குளமுமுள வீழ நாட்டே. 22

## கந்தவனம்

வன்னிதன் வடிவாக் கொண்ட வான்சர வணத்து வள்ளல்
பொன்புனை வீர மொய்ம்பன் புங்கவர் பூசை கொண்டே
கன்னிய ரோடு வைகுங் கவின்பெறு கந்த கான
மன்னிய வீழ மாண்பு மற்றெமா லுரைக்க லாமே. 23

## மாவிட்டபுரம்

முத்தொழின் முதல்வ னாகுமூவிரு முகத்து மூர்த்தி
சத்திய ரிருபான் மேவச் சராசர வணுக்க ளுய்வான்
சித்திர விரத மூர்ந்து திருவுலாக் காட்சி நல்கு
முத்தம மறையோர் மாவை யொண்பதி யிலங்கை யேயும்.24

## குமாரபுரம்

கிற்புறு மாயை வல்ல கிரவுஞ்ச வெற்பி னோடு
தற்பம துடைய கொள்கைத் தாரகத் திறலோன் றன்னை
விற்செறி தனிவே றொட்டு வீட்டிய விசாகன் மேய
குற்சித மகற்றுந் தொல்லைக் குமாரமா புரமு மன்னும். 25

### கந்தசாமிமலை

தனக்கொரு சாமி யில்லோன் றனக்கொரு சாமியாகித்
தனக்குவே றொப்பி லாத தனிமொழிப் பொருளை யோதித்
தனக்கெனச் சாமி நாதத் தனிப்பெயர் தாங்கு மேலோன்
றனக்கியல் கந்த சாமிச் சயிலமுஞ் சாரு மாதோ. 26

### திருக்கோயில்

நித்தியா னந்தன் றேவ னின்மலன் சத்தி பாணி
நித்தனிர் விகாரி முன்னோ னிட்களன் பாகு லேயன்
முத்தனைந் தொழிலோ னாய முருகவே ளுறைவ தாகிச்
சித்தநற் சுத்தி நல்குந் திருக்கோயிற் றலமுஞ் சேரும். 27

### நல்லூராலயங்கள்

நலங்கிளர் நீற்றின் சார்பே நான்மறைப் பயனா மென்னாப்
புலங்கொளு மேலோ ராகும் புண்ணியர்க் குறையு ளாகிச்
சலங்கிளர் சடையோன் மைந்தர் தளிபல மேவக் கொண்ட
தலங்கிளர் நல்லூர் தன்பாற் சார்வது மீழ நாடே. 28

இன்னதொன் னகரந் தன்பா லிராறுதோ ளுடைய வெம்மான்
மன்னுமின் னியங்கள் போர்ப்ப மறுவறு மறைகளார்ப்பத்
தென்றமி ழோசை பொங்கத் திருமிகு கொடித்தேர் மேலாய்
மின்னவிர் வீதிபோந்து வியனுயிர்க் கருளை நல்கும். 29

### செல்வச்சந்நிதி

உள்ளநெக் குருகா நிற்ப வுரோமமீப் பொடிப்புக் கொள்ள
வெள்ளமாய்க் கண்ணீர்வீழ மெய்யெலாம் விதிர்ப்புண்டாகத்
தள்ளரு மன்பி னாலே தலைமிசைக் கரங்க ளேறத்
தெள்ளொளி யடியார் போற்றுஞ் செல்வச்சந் நிதியு முண்டால்.30

### பொன்னாலயம்

செங்கம லத்தின் வைகுஞ் செந்திரு முன்போர் ஞான்று
செங்கண்மா றன்னைப் பூசை சிறப்புறச் செய்த வாற்றாற்
றங்குசொன் னால யப்பேர் தாரணி புகர வோங்கும்
பொங்கரிற் பொறிவண் டார்க்கும் புயல்வணன் பதியு முண்டால்.31

### வல்லிபுரம்

முல்லையம் புறவ மாயோன் முன்பொரு மடந்தை வேண்டச்
சொல்லமர் குழவி யென்னத் தோன்றியே யமர்ந்தாங் கன்பர்
எல்லவர் தமக்கும் வேண்டு மின்பெலா மளிக்குந் தானம்
வல்லிபூ சனைகொள் வல்லி புரமென வழங்கு மீண்டே. 32

**பலதளிகள்**

நானில மதிக்கு மிந்த நற்றமி ழிலங்கைத் தேயத்துப்
பானில வணிந்த வேணிப் பராபரன் பரைசேய் முன்னோன்
வானில மளந்தோன் சாத்தன் வடுகனே முதலோர் கோட்டம்
மேனிலந் தாழ வின்னு மேவுவ வனந்த மன்றே. 33

**தீர்த்த விசேடம்**

அலைசெறி நகுல தீர்த்த மரம்புகு யமுனா தீர்த்தம்
நிலைசெறி பாததீர்த்த நீடெழு கன்னி தீர்த்தங்
கலைபுகழ் பாவ நாசங் கருதுமா ணிக்க கங்கை
தலையபா லாவி மாமாங் கந்தனுக் கோடி சாரும். 34

**தேவாரம் பெற்ற தலங்கள்**

சிங்கடி யப்ப னாருஞ் சிறபுரச் செல்வர் தாமும்
பொங்குபே ரருளி னாற்றாற் பொழிந்தருள் பாடல் பெற்றுத்
தங்குறு தலமி ரண்டு சாருமே விலங்கைத் தீவி
லிங்கிதன் பெருமை பேச வெவர்க்கெலாம் வல்லா ரம்மா.34

**திருப்புகழ் பெற்ற தளிகள்**

கந்தவேள் பொருளே யாகக் கருதரு பத்தி ஞானம்
முந்துவை ராக்கி யங்கள் முதலன பயக்கு மேன்மைச்
செந்தமிழ்த் தொடையா யோங்குந் திருப்புகழ்பெற்ற தானங்
கந்தரஞ் செறிபொற் கோட்டுக் கதிரையே முதல வுண்டால்.36

**ஆலயத்திருப்பணி**

இந்துவின் குலத்து வேந்த ரிரவிதன் மரபோர் வாமச்
சுந்தரி யுமையாள் பாகன் சுத்தமா மின்ப மார்வான்
முந்துறு மயனும் வேட்ப முன்றவப் பயனாற் கண்ட
மந்திரம் பலவு முண்டால் மாத்திக ழிந்த நாட்டில் 37

விதுக்குறை முடித்த வேணி விண்ணவன் சிவையே முன்னோன்
மதுச்செறி கடம்பன் மாரி வடுகனே முதலோர் கோவில்
புதுக்குவோர் புதிது செய்வோர் புரப்பவ ராகி யுள்ளோர்
மதிக்குறு மறவோ ராகி வானமும் வணங்க வாழ்வார். 38

**புராணபடனமாதியன**

திருமுறைத் தோத்தி ரங்கள் திருத்தொண்டர் புராணஞ் சொக்கர்
திருவிளை யாடல் கந்தன் திருமிகு புராண மோதல்

வருமுறை மகேச பூசை முதலிய மடங்கள் கோயில்
திருமனை தோறு மோவா சிவகதி கருதிச் செய்தல். 39

### தண்ணீர்ப்பந்தர் முதலிய தருமங்கள்

கதிரையே மாவை யாதிக் கதிதரு தலங்கண் முன்னி
விதிமுறை செல்லு மன்பர் வேண்டிய வேண்டி யாங்கே
ததியுறு பாலே யன்னந் தருப்பயி லிளநீ ராதி
மதிமலர் வதனத் தோராய் வழங்குனர் சங்க மெங்கும். 40

### துறவிகண் முதலியோர்

தத்துவ முணர்ந்த மேன்மைத் தாபத கணாங்க ளெட்டுச்
சித்தியிற் சிறந்த நீரார் சிவநெறி வளர்த்து மிக்க
வுத்தர வாசை போய வுயர்பெரும் புகழோ ராறா
மத்துவ சுத்தி பெற்றோ ரமர்வரா லொழுக்கங் குன்றார். 41

அற்செறி கோதை நல்லா ராசைவே ரறுத்துச் சைவக்
கற்புறு கன்னி பாகன் கழலடி புருவ மத்திச்
சொற்பெறு விந்துத் தானஞ் சோர்வறச் சிந்தித் தேத்திப்
பொற்புறு நிட்டை மேய புங்கவ ரநேக ருண்டால். 42

சத்தெனும் பதியொன் றென்னாச் சாற்றுநான் மறை நூலாய்ந்தோர்
அத்தனா ரிருபா னெட்டா மாகம பாரங் கண்டோர்
முத்தமி ழறிவின் மூத்தோர் நால்வர்நற் றமிழ்வல் லாரென்
றித்திறப் புராணர் மேய திலங்கையாம் புனித நாடே. 43

மயலிலார் மனத்தின் வாக்கின் மறுவிலா ருருவந் தன்னி
லியலவே யுருத்தி ராக்க வினையலா லணிவே றில்லார்
அயலிலோர் பற்று மில்லா ரறிவினுட் சிவனா லன்றிச்
செயலிலார் செறிந்து மல்குஞ் சிறப்புள திந்த நாடே. 44

தேனலம் வென்ற தீஞ்சொற் சிற்றிடை யன்னை மார்தா
மாவகை கேது நாத வம்பிகை கௌரி யென்னாப்
பானலங் குதலைச் செவ்வாய்ப் பச்சிளஞ் சிறார்க டம்மை
மேவரப் பயிற்று மோதை மேவுல மனைக டோறும். 45

பன்னுபோ தகத்திற் சூழ்ந்து வரியளி விளரி பாடித்
துன்னுகா வுலவு வோராய்ச் சொற்பயில் சிறுவ ருச்சி
யன்பினான் மோந்து நீவி யறுமுகன் கதிரை வேல
னென்னவே பயிலச் செய்வ ரியலுநற் றாய ரானோர். 46

மரித்தவர் பிறப்பின் மன்னா வாழ்வருள் கேது நாதத்
தரியயற் கரிய சோதி யாகத்திற் பாகங் கொண்ட
கௌரிதன் நாமம் பாடிக் கயல்விழி மடவா ரூஞ்சல்
அரிமுர லளகஞ் சோர வாடுவா ரிடங்க ளெங்கும். 47

### பௌத்தாதி பலர்

மாயனார் மாயந் தன்னான் மதர்த்தெழு பௌத்த மாதிப்
பாயபன் மதத்தோர் தாமும் பன்னுசிங் களமே யாதி
யேயபன் மொழியி னோரு மியைதரு மொருவை நீரான்
மேயபல் வினைஞ ராகி விழைவொடு வதிவர் மன்னோ. 48

### இயற்கை வளம்

குளமெலாம் பதுமக் காடு குழியெலாங் குவளைக் கூட்டந்
தளமெலாம் விளரி வண்டு சாலெலா மூருஞ் சங்கங்
களமெலாங் கதிர்ச்செஞ் சாலி காலெலாம் புரளும் வாளை
வளமெலாம் வளர வோங்கு மன்புக ழீழ நாடே. 49

நீரெலா மொளிரு முத்த நெறியெலா மிசைக்குந் துத்தம்
ஊரெலா மாயுஞ் சங்க மூணெலாம் விருந்தின் சங்கம்
காரெலாந் தவழு மாடங் கதிர்மதி பதாகை கூடும்
பாரெலாந் நிகழ வோங்கும் படர்புக ழீழ நாடே. 50

### மாதோட்டத்துக் கேதீச்சரம்

இன்னபல் வளத்தா னோங்கி யிலகுறு மிலங்கை நாட்டின்
மன்னிய பதிக டம்மின் மாபெருஞ் சிறப்பு வாய்ந்தே
பொன்னியல் மாதோட் டஞ்சேர் பொருவில்கே தீச மேன்மை
பன்னரும் புகழ்சேர் முன்னோர் பகர்ந்தவா றறைய லுற்றேன். 51

## 2. கிரித் திரய வரலாற்றுச் சருக்கம்

### கேதீசர் துதி

மலாதியர் கேதுப்பணி மலயத்தமர் குரவன்
மேலாகிய தபதிக்கிறை மேவித்தொழு பரநின்
பாலாகிய வமுதேயருள் பாலாவிதன் கரைசேர்
மேலாகிய வேதப்பொருள் நால்வர்க்கருண் முதலே. 1

### வரலாறு

முந்தொரு காலத்தின் முதுவர்த மவையத்தே
வந்தெனு மசைவுள்ள வயமிகு திறலுற்றோன்

பந்தியின் முகமுகற்ற பணிபதி யிருவோருந்
தந்தம வலிபேசித் தகவறு சினமுற்றார். 2

மயறரு முனிவெய்தி மற்றவ ரதுபோழ்திற்
பயனறு கடுவென்னப் பழிமொழி பலபேசி
யயலுறு முனிவோரு மமரரு மயர்வெய்த
வியலறு நெறியானே யிகலுறு நிலையுற்றார். 3

**வேறு**

அந்திலவ் வேலையி லனந்த னென்பவன்
கந்தவா கன்றனைக் கனன்று நோக்கியான்
முந்தவே யிறுக்குவன் மொய்யினான் மேருவை
வந்துநீ நெகிழ்த்தியுன் வலியினா லென்றனன். 4

சொல்லிய வெல்லையிற் சொன்னதோர் வெற்பினை
வல்லிவன் றருவினை வளைத்தவா றென்னவே
யொல்லையிற் சுற்றியே யுரகரின் வேந்தனும்
மல்லவம் பணத்தினான் மறைக்கலுற் றானரோ. 5

மற்றது போழ்தினின் மருத்தின் வேந்தனும்
சுற்றிய சேடனைச் சுளித்து நோக்குறாக்
கற்றையிற் கனற்பொறி கண்கள் கான்றிட
வற்புத மெய்துமா றடர்த்து வீசியே. 6

ஆர்த்துச் சூழ்ந்திடா வறைவ தாயினன்
பார்த்த விண்ணவர் பனிப்புக் கொண்டரோ
கார்த்த யங்கிய கண்டன் முன்னு றீஇ
யார்த்தி யிற்பணிந் தங்கட் போற்றுவார். 7

**வேறு**

கொற்ற வந்தகன் மாய்வுறக் கொழுநுதிச் சூழமேற்
செற்ற முற்றுடல் குத்தியே சேவகஞ் செய்தோய்
உற்ற முப்புரந் தழலெழ வொண்ணகை விடுத்தோய்
மற்று நந்தமைக் காத்தருள் வரதநின் னடைந்தோம். 8

செருக்கு மூழ்கிய மலரவ னடுச்சிரஞ் சிந்த
முருக்கு மம்புய முழுமலர் வென்றகை யுகிரோய்
தருக்கு மெய்வலி யந்தகற் றடிந்தரு டாளோய்
நெருக்கு காலினிற் காத்தரு ணிமலநின் னடைந்தோம். 9

பொறுத்த சேவமர் பயோததி பொள்ளெனக் கிளராச்
செறுத்த வெவ்விட மமுதெனச் சேர்த்திய களத்தோய்
அறுத்து மாவுட றடிந்தவர்ப் பயந்தரு ளத்தா
உறுத்த காலினிற் புரந்தரு ளுமேசநின் னடைந்தோம். 10

**வேறு**

பூரண பரமா னந்த புதரகோ தண்ட வெள்ளை
வாரண சயம்பு நாத மந்திர வுருவ வாசி
யாரண வியோம கேச வமலைநா யகலோ கேச
காரண கயிலை வாச கருத்தநின் சரணம் போற்றி 11

நிருமல நிருவி கார நிரஞ்சன நிட்க ளங்க
மருவிய கருணா ரூப வாமனா தீத முத்த
பொருவில குணவதீத புராதன விசுத்த தேக
விரவிய பவவிநாச விநாயக சனக போற்றி 12

**வேறு**

என்று போற்றி யெதிரிலா
மன்று ளாடிய வார்கழ
றுன்று மன்பிற் றொழவுளா
னின்ற வண்ண னிகழ்த்துவான். 13

நொந்து சிந்தை நுணங்கலென்
றிந்து சூடி யியம்பலு
முந்து தேவர் முதமுறீஇ
யந்தி னீங்கின ரவ்விடை. 14

**வேறு**

கங்கையஞ் சடையினான் கருணை காட்டலும்
பொங்கிய வாயுவும் பொருப்பைத் தாக்கியே
தங்குபல் சிகரியுட் டக்க மூன்றினைச்
செங்கையிற் பறித்திடாச் சிந்தி வீசினான். 15

**வேறு**

முன்னர் வீழ்ந்தது திரிகூட மாமென மொழிவர்
பின்னர் வீழ்ந்தது கேதுவீச் சரமெனப் பிறங்கும்
அன்ன தன்புறங் கந்தமா தனமெனு மசலம்
இன்ன மூவிடப் பெருமையை யேவரே யிசைப்பார். 16

### வேறு

அன்னதோர் காலை யத்த னம்மையோ டானே றூர்ந்தே
துன்னுவார் முனிவர் பூதர் சுரர்புடை சூழத் தோன்றி
இன்னதோ டமைதி றென்ன விருவரு மிகலை நீங்கி
யன்னையோ டையன் றாள்க ளணிமுடி தோய வீழ்ந்தார். 17

பணிந்தவர் தம்மைப் பாராப் பரமனு மெழுதி றென்ன
வணிந்தவஞ் சலிய ராகி யருமறை மனுக்கொண்டேத்தித்
திணிந்தவஞ் ஞானத் தானாஞ் சீவர்கள் வருத்த மெய்தத்
துணிந்துசெய் பிழைபொறுத்தி தூயனே யெனவோ மென்றான் 18

மற்றது போதிற் றேவர் மாதவர் வணங்கி யெந்தாய்
இற்றுவீழ் சிகரி மூன்று மிலங்குதென் கயிலை யாக
உற்றுநீ கயிலை யென்ன வுவந்திருந் துலகர் பூசை
பெற்றதன் பயனை யீயும் பெற்றியை யாக வேண்டும். 19

பேறிது புவன முய்யப் பெரிதருள் பெரும வென்னக்
கூறினர் போற்றக் கூற்றின் கூற்றனும் பரிந்தவ் வாறே
பேறிது பெற்றீர் யாமும் பிரியல மிருத்து மென்ன
வாறியல் சடையான் பாதம் பணிந்தெழுந் தார்த்துச் சூழ்ந்தார்.20

அன்னண மியலும் போதி லருமறை முழங்க விண்மேற்
பொன்னவிர் பூவின் மாரி பொழிந்தனர் பூத ரார்த்தார்
இன்னிசை யிருவர் கொண்டா ரியைந்தன வரவே னோதை
மன்னிய புவன மெல்லாம் மகிழ்ச்சியின் மலிந்த மாதோ. 21

### வேறு

அத்த னவ்விடை யானே றுகைத்தரோ
சுத்தர் சூழ்தரத் தோகையுந் தானுமாய்
நித்த மாயுறு நீள்கயி லாயத்துச்
சித்தி ரத்த திருநகர் சேர்ந்தனன். 22

## 3. திருத்தல விசேட சருக்கம்

### கேதீசர் துதி

கந்தரங் கறுத்த வையா கருணையே யுருவ மானோய்
கந்தவார் குழலி பாகா கருதுவார்க் கினிய நாதா
அந்தரர்க் கரிய சோதீ யடியனேற் கினியா ருண்டோ
வந்தவென் துயர மாற்றேன் மாதோட்ட மணியே காவாய். 1

வேண்டியார் வேண்டி யாங்கே விமலனு மருளு நீரா
லாண்டியா தியரா வந்த மரசரா யுள்ளார் யாரு
மீண்டியே யியன்ற பூசை யியற்றவேற் றருளை யீயத்
தூண்டுமா துமையோ டுற்றான் றோமின்மா தோட்டத் தன்றே. 2

**வேறு**

எங்கு மிக்கன பல்வள நிறைந்திடு மியல்பாற்
கங்கு லாம்புன லிலங்கைநன் னாடுபாற் கடலே
பொங்கு பொற்பதி பற்பல போதுகள் பூமான்
தங்கு தாமரைப் போதுமா தோட்டமாந் தலமே. 3

புளின வேலைநுண் டுகிலெனப் புதுமலர்ப் போதி
னளியி னஞ்செறி சோலையா ரளகமா யமைந்தே
யொளிமி குந்தசீ ரிலங்கையா மொண்டொடி யுடைய
நளின வாண்முக மாவது மாந்தைமா நகரம். 4

வட்ட மாநிலம் பாற்கட லாவதின் மருவ
விட்ட மத்தமா மேருவை யிருசுடர் கதிரே
விட்ட பாசமா வீர்த்துமுன் மதித்திட மேலாப்
பட்ட தெள்ளமு தாவது மாந்தையம் பதியே. 5

சங்கு மல்கிய கரமலர் மாயனுந் தகைசா
லங்க மாமறை யோதிய வேதனு மகல்வான்
மங்கு லூர்தரு மந்தரர் நாதனு மகிழ்வாற்
றங்கி வந்தனை புரிவரா லென்றுமித் தலத்தே. 6

அமரர் சாத்தியர் விஞ்சையா கின்னர ரசுரர்
திமிர மெய்யுடை யிராக்கத ரியக்கரே சித்த
ரமல ராகிய வுருத்திரர் வசுக்களா தியர்கள்
தமது காதலி னித்தல வாசராய்ச் சார்வார். 7

**வேறு**

முக்கண னுறைவ தாகி முயலுமா தவத்தின் மேலோர்
புக்கம ரிருக்கை யாகிப் புகடரு பழைமை வாய்ந்தே
திக்கெலாம் வென்ற சோழர் தீதறப் புரந்த சீராற்
தக்கவிந் நகரந் தானே தனக்கிணை யென்ன வோங்கும். 8

வடமொழிக் கவிஞ ரானும் வளமலி தமிழென் றோதுந்
திடமொழிப் புலவ ரானுஞ் சிறந்தமற் றோர்க ளானு
மிடமுறப் புகழுப் பெற்ற திந்நக ரன்றி வேறாய்க்
கடலுடை யுலகந் தன்னிற் கழறவே றுண்டு கொல்லோ. 9

மலர்தலை யுலகிற் றொல்சீர் மாதோட்ட நகரந் தன்னிற்
பலவினைக் குறும்பு போக்கும் பாலாவிக் கரைமே லாகித்
திலகவா ணுதலாள் பாகன் றிடமதா யுறையப் பெற்ற
புலனமர் கேது பூசை புரிதல மிணையின் றோங்கும். 10

குருந்துசெங் கடம்பு நாவல் கூவிளம் பாரி சாதம்
செருந்திமந் தாரை வெள்ளில் செண்பகம் போதி தெங்கு
பொருந்துமின் சுளைப்ப லாநற் புன்னையா லிதழி யாரம்
திருந்துமா விலங்கை யாத்தி தேக்ககில் வகுளஞ் சூதம். 11

வன்னிகா யித்தி யத்தி மருதுபுன் னாக நாகம்
பன்னிநா ரத்தை புன்கு பாடலம் பலாச நொச்சி
கன்னிகா ரஞ்செவ் வந்தி கரவீர நாக வல்லி
பொன்மத்த நீற்றுப் பச்சை பூளைவண் டுளவ மாதி. 12

வரந்தரு பூசை யோம மஞ்சன மாதிக் கேய்ந்த
சிரந்தரு பொருள்க ணல்கித் திங்களை யுரிஞ்ச வோங்குந்
தருநிரை வல்லி பூண்டு தகுசெடி செறிந்த வைப்பி
னிருள்வலி தபுகே தீச ரெழின்மிகு பவன மோங்கும். 13

பிரமனின் புதல்வர் கேட்பப் பேரற முணர்த்திச் சீவர்
திரமுற வொழுகச் செய்த சிற்பர னமருங் கோயில்
நிரலுறு தொண்டர் போற்ற நீடரு ளவன்பா லிக்க
வரமிகு மாதோட் டத்து மன்னுகே தீச மென்பார். 14

பேழைவார் சடையின் மேலாப் பெருநதி வைத்து வெற்பின்
மாழையங் கயல்போற் கண்ணி வாமத்திற் கொண்டு வெள்ளைக்
கேழறன் மருப்புப் பூண்டார் கிளர்பொழின் மாதோட் டஞ்சேர்
வாழிய கேதீ சத்தே மன்னுவர் பிரியா தென்றும். 15

ஆரண முடிவுந் தேறா வைந்தொழின் முதல்வன் றானே
ஆரஞர் மூழ்கிச் சோரு மாவிகட் கருளு மாற்றாற்
காரணி துயிலு நொச்சிக் கருதுகே தீச்ச ரத்திற்
பூரண சுயம்பு வாகிப் பொலிவொடு வைகு மாதோ. 16

சிந்துவாழ் சடிலப் பெம்மா னிணையிலித் தலத்தின் மேவி
யந்தம தடையுந் தொல்லை யாருயி ரவைகட் கெல்லா
முந்தையி னிகம மூல மொழிதனை யோதும் பொற்பா
லந்தநற் காசி யீதென் றறைதர வோங்கி நிற்கும். 17

அத்தியிற் றுயிலு மாய னம்புயத் தயனே வெள்ளை
யத்தியி னரசை யூர்வோ னமரரே கணமா யுள்ளோர்
அத்தியின் சருமம் போர்த்தோ னர்த்தமாம் யாம பூசை
நித்தமும் வழிபட் டேத்தி நீடிய முதத்தி னாழ்வார். 18

பெண்ணொரு பாகம் வைத்தோன் பிறைதவழ் சடிலன் வேதப்
பண்ணியல் சிலம்பு பூண்டோன் பலிகனக் குழலு நீற்றோன்
அண்ணல்மா தோட்டஞ் சேரு மணிதிகழ் கேதீ சத்தை
அண்மியே யடையு நீரார்க் கருவினை யடையா மன்னோ.19

அங்கமே லுற்ற நோய்க ளடியர்மே லொழிக்கு மேலோன்
வங்கங்கள் மலிந்து நிற்கு மாதோட்ட நகரின் மேய
தெங்கிளம் பொழில்கள் சூழ்ந்த செய்யகே தீச்ச ரத்து
மங்கையோர் பங்க னென்னா மங்கல மறைகள் சாற்றும்.20

**வேறு**

பொடியேறு திருமேனிப் புராணன் றன்னைப்
புலியதளை யரைக்கசைத்த புனிதன் றன்னை
வடியேறு மூவிலைவேல் வலத்தோன் றன்னை
மறிகடல்சூழ் மாதோட்ட நகரின் மேய
கடியேறு பூம்பொழில்சூழ் கேதீ சத்திற்
கண்ணுதலைக் கருத்திருத்து மன்பு வைத்தே
முடியேறு கரமுகிழ்த்த மேலோர் தம்பால்
மொய்த்தெழுந்த வினைபொடியாய் முடியு மாமே. 21

நல்லனவே நாளுமுயிர்க் கருள்வா ராகி
நயந்தருளே வடிவெடுத்து நடப்பா ராகிப்
புல்லியவாம் பிறப்பிறப்பிற் பொருந்தா ராகிப்
புகலடைவார்க் கருள்புரிய வல்லா ராகும்
பல்லெழில்சே ரெந்தைபதி கேதீ சத்தைப்
பகலிரவே யல்லலறப் பரவித் தாழும்
நல்லவரா மவரடியைத் தொழுவோர் தாமே
நானிலத்து நாம்வணங்குந் நாயன் மாரே. 22

**வேறு**

ஒருகாலித் தலந்தாழ்ந்தார் தமைத்தாழ வமர்ரெலா
மொருங்கு சூழ்வார்
ஒருகாலித் தலஞ்சூழ்ந்து தாழ்ந்தார்சொற் கயன்மாலு
மொடுங்கித் தாழ்வார்
ஒரு காலித் தலத்தைமனத் துன்னுவோரை யனுதினமு
முகப்பார் யாரும்
ஒருகாலித் தலமகிமை கேட்டுவப்பார் பெருமையைக்கேட்
டுவவார் யாரே. 23

சங்கொலியும் புள்ளொலியுந் தணவாத பாலாவிச்
சலிலந் தோய்ந்தே
தங்குதிரு நீறணிந்து கண்மணியுஞ் சிரமுதலாத்
தரித்துக் கொண்டே

திங்களணி கேதீசர் சந்நிதியின் மந்திரங்கள்
செபஞ்செய் வோர்பால்
வந்தவினைப் பந்தமெலாம் பரிதிமுனம் பனிபோல
மறையுந் தாமே. 24

**வேறு**

அறத்தினை வேண்டுவாரு மளவிலாப் பொருளென் றோதுந்
திறத்தினை வேண்டு வாருஞ் செயிரிலா வின்ப மாகுந்
திறத்தினை வேண்டு வாருந் திகழுமிம் மூன்றின் மேலப்
புறத்தினை வேண்டு வாரும் புகுமிடங் கேதீ சம்மே. 25

**வேறு**

எங்க ணாயக னிச்சையின் மன்னுமித் தலத்தை
யங்க மேவுற வவனியில் வீதிசூழ் வருவோர்
தங்கண் மேவிய நோயவை பாற்றியே தவிராப்
பங்க யற்கரி தாகிய மேற்பதம் படர்வார். 26

நித்தலுமே யித்தலத்தைத் தரிசிக்க நியதியுட னொல்லா தோர்கள்
பத்தியுடன் சிவநிசியே பிரதோடம் பகர்சுங்கன் சோம வாரம்
சித்திகரு விடுவயன முதலுள்ள தினம்வருட விழாக்கா லங்கள்
சுத்திதரு நீர்படிந்து சந்திமுற்றிச் சுகம்பெறவே தரிசிப் பாரே. 27

**வேறு**

பானிற மருட்டுந் தூய பாலாவித் தோயந் தோயாக்
கானிறை கடுக்கை வேய்ந்தோன் கருதுகே தீசஞ் சூழ்வோர்
மேனிறை யசுவ மேத விழுப்பய னடியொவ் வொன்றாற்
னானுறப் பெற்று மேலைத் தாரணி மதிப்ப வாழ்வார். 28

பரம்பர னுருவா யுற்ற பாலாவி மூழ்கிப் பத்தி
நிரம்பிமே லுந்த நீரிற் றிலங்கொடு தருப்பித் தோர்வான்
வரந்தரு கயையிற் போந்தே வரன்முறை பிதிர ரோம்புஞ்
சிரந்தரு சிராத்தப்பேற்றைச் சேர்வராற் றிண்ணந் திண்ணம். 29

மாற்றருஞ் சனன தாப மாற்றுபாற் றோய மூழ்கிக்
கீற்றிள விதுசேர் சென்னிக் கேதீசற் பணிந்து நூலிற்
சாற்றிய பசும்பொ னாதித் தசவித தான மாற்றி
லூற்றமாந் தென்பு லத்தோரு றுமுதக் கடலி லாழ்வர். 30

பரசிவ னருளே யென்னப் படர்கீர குண்டத் தோயந்
திரமுறு பனுவ லாற்றிற் சீலத்தாற் றோயுந் தக்கோர்

விரவிய செல்வங் கல்வி மிகுமனை முதல வார்ந்தே
பரவுதே சிகனார் நோக்காற் பரகதி பெறுவர் வாய்மை. 31

நித்தலுந் தோய மீதி னியமத்திற் படிக வொல்லார்
உய்த்திடு கடையு வாவே யுயர்த்தம கோத யம்மே
பத்தியிற் பிரதோ டம்மே பகர்விடு வயன மாதி
யித்திறத் தினங்க டுற்றே யேமுற வாட னன்றால். 32

வாங்கிய திரைவில் லாக வண்டுளி யம்பே யாகத்
தீங்கியற் பவமென் றோதுஞ் செறிதரு மிருகங் கொல்லு
மோங்கிய புகழ்சேர் தீர்த்த மொருதின மேனுந் தோய்ந்து
தேங்கிய வொளிசே ராதார் சென்மமோர் சென்ம மாமோ. 33

### தேவாரப்பதிகம் பெற்ற சிறப்பு

கண்டவர் மனமுங் கண்ணுங் கவர்தரு சேலை சூழுஞ்
சண்பையயி லுதித்த ஞான சம்பந்தர் பதிகத் தோடு
கண்ணிய மூவா றாண்டிற் கயிலைசேர் நம்பி பாடல்
நண்ணிமற் றருள்வி ளக்க நனியுறு பதிகே தீசம். 34

### வேறு

துகளறுக்கு மித்தலத்தின் பதிகங்கள்
சந்நிதியிற் றொழுது போற்றிப்
புகழுறவே படித்தாலுங் கேட்டாலு
மொருவருக்குப் போதித் தாலும்
மகிழுறவே வரைந்தாலும் பரப்புநரைப்
பொருடந்து மகிழ்வித் தாலும்
மகி தலத்து மன்னருமாய் மறுமையினிற்
சிவலோக மருவு வாரே. 35

### குருகுலம்

### வேறு

சிற்பர னமர்ந்து வைகுஞ் சினகர வருண வைப்பி
லற்புறச் சார்ந்து கற்போ ரருமறை யொழுக்கம் பேணிப்
பற்றுநல் லறிவ னூல்கள் பயிலுதற் கிடனாய்த் தன்பாற்
குற்றமில் சிவானந் தப்பேர்க் குருகுலஞ் சிறப்பி னோங்கும். 36

இருமொழி யுபயக் கண்ணா வியங்குமிக் கழகக் கண்ணார்
அருமறைச் சிறார்கள் மேலா மங்கநூ றேர்ந்தார் சைவத்
திருநெறித் தமிழுங் கற்றார் சிவாகமப் பயிற்சி பெற்றார்
திரிவித கரும மாற்றுஞ் சீர்தரு தலைமை யுற்றார். 37

கூர்தரு மதியிற் றேசிற் குவலயங் கணிக்கு மேலாம்
பேர்பெறு மோசர் பாலிற் பீடுறப் பன்னூ றேர்வார்
சீர்பெறு மெழுதாக் கேள்வி சீலத்தா ரோதக் கேட்டே
யேர்பெறு சுகங்க டாமு மிசைப்பன கேட்போர் மெச்ச. 38

**மடங்கள்**

சருவறுத் தருளு மீசன் கவுரிதன் னிடப்பா லாக
மருவிய சினக ரத்து மன்னுமெண் டிசையின் பாலும்
பொருவினாற் பாதத் துற்ற புண்ணிய ரமைத்த பொற்பார்
தருமமே போற்றுஞ் சைவத் தாவறு மடங்க ளோங்கும். 39

ஆரண மோதும் பொற்பா லருட்டமி ழிசைக்குஞ் சீரா
னேரறு போத மாதி நெறிதவா விரிக்கு மாற்றா
லாரமு தனைய வுண்டி யடியவர்க் கருத்தும் பண்பாற்
சீரணி மடங்க ளோங்குஞ் சிவநெறி பாலித் தென்றும். 40

மூன்றுறுப் பானும் பூசை முயலுந ரிலமுங் கேள்விச்
சான்றவ ரெம்மான் கோயிற் றருமமே பாலிப் போரா
யான்றமை யுளத்த ராகி யமைந்தவ ரிலமுந் தொண்டே
யேன்றவ ரிலமு மெங்கு மயைவன வீதிச் சூழல். 41

சாதலும் பிறப்பு மில்லாச் சங்கர னணுக்க ளுய்வான்
காதலி னமரு மிந்தக் கருதருந் தலத்துக் கொப்பா
வோதவோர் தலமின் றென்றே யுரைத்தனன் சூத னென்றா
லேதுமொன் றறியே னெங்ங னிதன்சிறப் புரைக்க வல்லேன். 42

## 4. கேது பூசனைச் சருக்கம்

பற்றோங்கு தாயின்மிகப் பரிவு செய்யும்
பரசிவனே காத்தருணீ பணிந்தேன் பாதம்
சொற்றாங்கு நிதிபதிநின் சுகுணத் தோழன்
சோதிமிகு வெள்ளிமலை சொந்த வீடாம்
பொற்போங்கு பொன்வரையே கோட்டும் வில்லாம்
பொற்மார்பன் பொருகணையாய் பூணாந்திங்கள்
அற்றார்க்கே யருள்வாயென் தீனந் தானே
னகற்றுகிலா யடைக்கலங்கே தீசத் தானே. 1

**வேறு**

கணிதமி லுயிரெலாங் கலந்து மற்றவற்
றுணர்வுதொ றிருந்திடு மொருவன் பாங்கமர்
இணையறு கவுரித னிணைமென் றாண்மலர்
பிணிதப வணங்கியே பெரிது மேத்துவாம். 2

**வேறு**

வாசவன் முதலோ ரும்பர் வயமிகு மவுண ரோடுங்
காய்சின வுளத்த ராகிக் கடுஞ்சம ருஞற்றப் பல்லோர்
ஆசறு மாண்மை யற்றே யாவிய துலப்பக் கண்டார்
நாசம்வந் துற்ற தென்றே நடுக்குறா வமரை நீத்தார். 3

விடுத்தவர் தம்மிற் றோரா வேதனை முதலாக் கோண்டே
யடுத்தனர் மாயற் போற்றி யழிவுறா தமரைச் செய்வான்
வடுத்தவிர் பாலின் வேலை மதித்தெமக் கமிழ்தீ கென்னா
வெடுத்திது கூற மாலு மிசைந்தன னருளி னீரால். 4

மாதவன் பாலி னாழி மந்தர மத்தா வைத்துச்
சீதள மதியத் தேவைத் திரமுறு மதலை யாக்கி
மாதவ வலத்தான் மிக்க வாசுகி நாணாக் கொள்ளுப்
பேதமின் றீர்க்க நல்கிப் பேணியே பரித்து நின்றான். 5

ஏற்றமி லவுண ரோர்பா லிமையவ ரோர்பா லாக
வாற்றலி னீர்த்தல் செய்வா ராழியைக் கடைய வாங்கோ
யேற்றுடை யிமையா முக்க ணிறையருள் பெறாத நீராற்
கூற்றுவர் கோடி போலுங் கொடுவிட மெழுந்த தன்றே. 6

அன்னது கண்டே யஞ்சி யரியயன் முதலா வுள்ளோர்
தன்னிகர் பிறிதொன் றில்லாச் சயிலமாங் கயிலை சாரா
வன்னமென் னடையாள் பாக னடிமல ரிறைஞ்சி வேண்ட
வுன்னருங் கொடிய வால மொண்மிட றடக்கிக் கொண்டான். 7

உண்ணுதற் கரிய வால முண்டரு ளெம்மான் காயா
வண்ணனை முதலாக் கொண்ட வரம்பறு குழுவைப் பாரா
வுண்மலி வேட்கை முற்று மொலிகடல் கடைவீ ரென்னத்
தண்மலி பாலின் வேலை சார்ந்தனர் மதிக்க லுற்றார். 8

மலையுற டரங்கம் வீசு மாக்கடன் மதிப்பார் சீதக்
கலைமதி யுறமு மேனிக் கயமுக முன்னோன் பூதத்
தலைவன துபய பாதச் சபரிமு னியற்றார் செய்கைக்
குலைவுவந் துறுத்து மென்ப தோர்கிலா துற்றா ரம்மா. 9

கண்ணுத லுடைய ஞானக் களிற்றுமா முகத்தி னானைக்
கண்ணுதல் புரியா நீராற் கடன்னடு மத்தஞ் சாயா
வெண்ணறு நாகர் வைகு மிடஞ்செல வதனை நோக்கிப்
பண்ணவற் பூசை செய்தார் பரிதியான் முதல வும்பர். 10

வேதமுந் தெளியா மேலோர் வேழமாய் விளங்கத் தந்த
ஆதியங் குமரற் பூசித் தருண்முறை பெற்ற போதே
பாதலம் புகுந்த மத்தம் பழமையி னிற்றல் காணூ உச்
சோதிகொண் முகத்த ராற்றத் துவன்றியே கடைதல் செய்தார். 11

ஆழியைப் பண்டு போல வாங்கவர் கடைந்தார் பீத
மாழையங் கும்பந் தன்னில் வந்ததா லமுதங் கெண்டார்
ஆழியங் கரத்து வள்ள லளப்பரு மாயை நீராற்
சூழுறு சுரரே கொள்ளச் சுதையினைப் பகிர்த லுற்றான். 12

ஆங்கரி யளிக்கும் போதி லசுரரி லிருவோ ராற்ற
வோங்கிய வேட்கை கொண்டே யுடையதம் படிவ மாற்றிப்
பாங்கம ரண்டர் போலப் பண்ணவர் குழுவைச் சாரா
வாங்கின ரமுத வுண்டி வல்லையின் மிசைத லுற்றார். 13

மந்திர முறையா லன்றி மற்றவ ரயிலக் காணூஉச்
சந்திரன் றபனன் கண்ணாற் றண்டுழா யலங்கன் மாற்கு
முந்திய குறிப்பிற் காட்ட முகுந்தனுஞ் சட்டு வத்தா
லங்கவர் சென்னி வீட்டி யமரர்க்கு விருந்து செய்தான். 14

அண்டல ரண்டர் தம்மோ டமுதினை மிசையும் போதிற்
கண்டவம்வந் தமையு முன்னே யரிகண்ட துண்டஞ் செய்தான்.
எண்படு சென்னி மாயா விருந்திடத் துணிந்த யாக்கை
முண்டமங் கழிவை யெத்த முச்சக மளிப்போன் கண்டான். 15

அண்டரா ரமுத முண்டோ ரண்டத்து நிற்ப ரென்னா
வண்டர்கோ னருளாற் கோளா யமர்நிலை தந்தான் செய்ய
திண்டிறற் கரிய பாம்பின் செய்கைபெற் றிராகு கேதென்
றெண்டரு பெயரே பெற்றவ் வெழுவரோ டியைந்தார் தாமும். 16

உடறுணி பட்ட ஞான்றவ் வுபயரிற் கேது வென்பான்
கடறனிற் கடுவ யின்ற கண்ணுதல் பதும பாதத்
தடலுறு வினைகள் பாற்ற வர்ச்சனை புரிவ லென்னாக்
கடலுறு மீழ தேயங் கடிதுவந் தடைந்தான் மாதோ. 17

வந்தவ னிலங்கை நாட்டின் வந்துமுன் வீச வாங்கே
வந்துள சிகரம் வீழ்ந்த வளம்படு தலத்தி னோர்சார்
அந்தமோ டாதி யில்லா வற்புத விலிங்க பூசை
முந்துள விதியிற் செய்வான் முறையினற் பொருள்கள் சேர்ப்பான். 18

வடித்தமை தூநீர் சாந்த மலர்வகை தூர்வை யிண்டை
யடுத்துள பஞ்ச வில்வ மையவி யுசீரங் காசஞ்
செறித்தரு செந்தே னெள்ளுத் தேனுவின் பயனீ வாரம்
மறுத்தவிர் கதலி தேமா வருக்கையின் கனியே யாதி. 19

வியன்மிகு கரண மெல்லாம் வேண்டியாங் கமைத்துத் தூயோ
னயன் றரு சுத்தி யைந்து நண்ணுவித் தெண்ணெய் மாவே
துயர் தப முதல வாட்டிச் சுத்தவத் திராதி சாத்தி
யுயர்வுறு நெய்பெய் துற்ற வோதன மருத்திப் பின்னர். 20

பதனுறு சவையின் மிக்க பண்ணிய மவலே மும்மை
விதமுறு பழங்க டந்தே வெள்ளிலை யடைக்காய் நீட்டி
முதமுறப் புகைவி ளக்கே முகுரசத் திரமே யாதி
யிதமுற வுதவி வில்வத் திணையிலா யிரம்பேர் சாற்றி. 21

பத்திமிக் குடைய னாகிப் பரவியே துதிப்ப வாங்கே
முதடதொழி லியற்றுந் தேவர் மூவர்க்குந் துரிய னாகுஞ்
சுத்தனு மபின்னை யான சுந்தர வல்லி யோடு
மத்தகு விடைமேற் றோன்றி யவற்கருள் புரிந்தான் மாதோ. 22

சித்திர துவச யானச் சீரமை கேது மேனாட்
சித்தம தொருமை யெய்தித் திருத்திகழ் வழிபா டாற்றச்
சச்சிதானந்த மூர்த்தி சார்ந்தருள் புரிந்த தான
மெச்சுறு கேதீ சப்பேர் மேவுற விளங்கிற் றன்றே. 23

## 5. மகாதுவட்டா திருப்பணி செய்த சருக்கம்

### கேதீசர் துதி

அற்புதமா யநாமயமா யளப்பரிதா யறிவினுளே யறிவ தாகிச்
சிற்பரமா யுன்மனியி னந்தமீதே திகழுறுமா னந்த மாகி
முற்றறிவு முழுதருளு முடையதுவா முழுமுதலா யகள மாகித்
தற்பரமாம் பிரமமதாங் கேதீசத் தனிமுதலைப் பரவி வாழ்வாம். 1

### வேறு

வேதமே முதலா வுள்ள வியன்மிகு நூல்கள் வந்தித்
தோதுமுள் ளுறையா யுள்ளோ னோதநஞ் சடக்குங் கண்டத்
தாதியம் பரனே யென்றவ் வரனடி சிந்தைக் காக்கிக்
காதலிற் கசியுந் தெய்வக் கம்மியன் றுவட்டா வென்பான். 2

அலர்மிசை யயனு நாண வாக்குறுந் தொழிலின் வல்லோன்
னுலகினிற் றலங்கட் கெல்லா முத்தம மாகிச் சீர்சால்
நலனருள் பதியா தென்று நாடின னீழத் தேத்துப்
பலன் றரு பாடல் பெற்ற பர மர்கே தீசஞ் சார்ந்தான். 3

அல்லியங் கமலம் வைகு மயனரி மகவா னாதித்
தொல்லிய லண்டர் போற்றுந் தோமறு தலத்தின் வந்தோ
னல்லுறழ் கண்ட னெந்தை யருளெனப் பாயும் பாலின்
சொல்வரு தீர்த்தந் தன்னிற் சுசிபெறத் தீர்த்த மாடி. 4

புதியா மணியு நீறும் புகலிடந் தரித்து மெய்யி
லாதியாங் கேதீ சத்தாற் காகம விதிக ளாய்ந்தே
யாதரம் பெருக வெண்ணெ யாவினைந் தமுதங் கீரம்
தீதிலான் றதியே மற்றுஞ் சிரமுத லாக வாட்டி. 5

தாவிலா வறுமை சேர்த்திச் சந்தன மறுகு சாத்தி
யாவலிற் கலன்கள் பூட்டி யலர்வகைத் தாமஞ் சூட்டித்
தேவரா ரமுத மன்ன சித்திர சுத்த வன்னம்
மேவுலட் டுகமே யாதி மிகுபல முதவிப் பின்னர். 6

வெற்றிலை யடைக்காய் நல்கி விரைகமழ் தூப நெய்யின்
விற்செறி தீபங் காட்டி விளங்குவெண் பூதி சாத்தி
யற்றம தடையா வண்ண மாடிமுன் னான வுய்த்தே
யற்புளந் தழையப் போற்றி யவனியிற் பணிதல் செய்வான். 7

இன்னணம் பன்னாட் பூசை யியற்றுவான் முன்பு சைவக்
கன்னிகை பாங்கர் மேவக் கங்கைநீர் கலிக்குங் கொன்றை
துன்றிய சடிலப் பெம்மான் துவன்றிய கணங்க ளோடுஞ்
சொன்மறை முனிவர் போற்றத் தோற்றினன் விடைமேற் கொண்டே. 8

**வேறு**

மாது வட்டா மனநிறை யன்பினாற்
பாதி யான பராபரை தன்னுடன்
சோதி வானவன் றோன்றலு நோக்குறாப்
போது தூவிமுன் போற்றுதன் மேயினான். 9

**வேறு**

கங்கை தங்கிய சடைமுடிக் கண்ணுதல் சரணம்
கொங்கை யேந்திய கொன்றையந் தாரினோய் சரணம்
செங்கை மான்மழு வேந்திய சேவக சரணம்
சங்கை யேந்திய மாயற்குந் தனிமுதல் சரணம். 10

அடியர் குற்றமுங் குணமெனக் கொண்டரு ளனகா
கொடியர் முப்புரம் பொடிபட விழித்தருள் குழகா
படியர் விண்ணவர் பணிவுற வருள்புரி பகவா
கடிய தொல்விட முண்டருள் கண்டநின் சரணம். 11

திருவி னோங்கிய கயிலைமால் வரையுறை தீர்த்தா
வொருமை யன்பின ருண்மல ரின்பமா மொருத்தா
பொருவி னிர்க்குண நிட்கள சகளமெய்ப் புராணா
தரும மேறென வூர்ந்தரு டந்தைநின் சரணாம். 12

**வேறு**

என்று போற்ற விறையவன் கேட்டரோ
வன்ப பூசைக் ககமகிழ் வுற்றனம்
என்னை வேண்டிற் றியம்புதி யென்றலும்
துன்று மன்பிற் றுவட்டா வறைகுவான். 13

வேத நாயக வேதிய ரேத்துமெம்
பூத நாயக பூப்புன றாங்கிமுன்
கேது போற்றலுங் கேடறுத் தாண்டரு
ளாதி மூர்த்திமெய் யன்புதந் தாளுதி. 14

யாக நாயக யாரும் பரவுறு
மாகர் நாயக மாமறை போற்றுமின்
பாக நாயக பத்தரை யாண்டரு
ளேக நாயக வீறிலன் பீகுதி. 15

சூர்த்த சாபந் தவிர்த்து மதிதனக்
கார்த்தி நல்கி யருளினை யன்பினா
லேத்து கேதுவுக் கின்னரு டந்தனை
காத்து னன்பர் கணக்கேட் டெழுதெனை. 16

**வேறு**

என்றெதிர் கண்ணீர் வார விறைஞ்சமா துவட்டா வெண்பாற்
கன்றுமால் பிரமன் காணா வண்ணல்கே தீசப் பெம்மான்
நன்றுநீ விழைந்த வண்ண நல்கின மென்று செப்பித்
தன்றனி யிலிங்க ரூபஞ் சார்ந்தனன் கரந்தா னன்றே. 17

சிவனருள் சிறக்கப் பெற்றோன் றிருவமர் கேதீ சத்திற்
றவலறு வழிபா டாற்றித் தங்குவான் பின்னும் பன்னா
ளுவமனில் கயிலை யென்னா வும்பரும் போற்றும் பொற்பிற்
பவன்மகிழ் பவன மொன்று பரிவுட னமைத்தல் செய்வான்.18

சிற்பநூ னுவன்ற வாற்றிற் சிற்பரன் கருப்பக் கோயி
லூற்றபன் மண்ட பங்க ளுமையவ ளமருங் கோட்ட
மற்புதன் கோயில் சூழ லரிமுதற் சூழ்வோர் கோட்ட
மெற்செறி யாக சாலை யெழிநரச் சமைத்து மற்றும். 19

புயறவழ் மதிள்வி மானம் புரையில்கோ புரமே யாதி
மயறவிர் நேயங் கூர்ந்தே மனமுத லொருமை பெற்றே
யுயருறு பணிகள் யாவு மொளிர்தரச் செம்பொற் கோயில்
லியனுற வமைத்தான் சீர்மை விளம்புதற் கெளிதன் றம்மா. 20

விதித்தவச் சிவால யத்து விநாயன் விமல னம்மை
கதித்தகூர் வேற்கை நம்பி கனகமன் றாடுங் கூத்தன்
மதித்தநாற் குரவர் சண்டி வரையுள் மூர்த்தி யெல்லாந்
துதித்தநூற் சுருதி சொற்ற சோபன நாண்மு கூர்த்தம். 21

பொருந்துறு போது நாடிப் புகலுமா கமநூ லாற்றாற்
திருந்துற நாட்டிப் பின்னுஞ் சிறப்புகள் பன்னாட் செய்தான்
பரந்துள புவன மூன்றின் பாலரும் பரிவோ டெய்தி
விருந்தென விழாச்சே வித்து வேண்டியாங் கருள்மே வற்றார். 22

கரியினை வேளைக் கூற்றைக் காய்ந்தவர் கேதீ சத்தில்
உரியநல் விழைவு பொங்க வுறையுநுண் ணுணர்வின் மேலோன்
அரியயற் கரிய சோதி யடிமலர் விந்துத் தானத்
துரியவா றிருத்தி நிட்டை யநுபூதி பரனு மானான். 23

பூசையுந் தவமு மாற்றிப் புகறிருப் பணியுஞ் செய்தே
ஆசையிற் சீர்த்தி பாவ வாசையின் வசித்த வாற்றால்
ஆசிலித் தலந்து வட்டா புரமெனு மபிதா னத்தால்
பேசுநற் பேறு பெற்றான் கம்மியர் பிதாவு மன்னோ. 24

## 6. ஸ்ரீ ராமர் சிவபூசைச் சருக்கம்

### கேதீசர் துதி

கங்குமல்கிய கரமலர் மாயனைக் கவின்சேர்
துங்க மல்கிய விடையென வூர்ந்தரு டுயோ
யங்க மெய்திய பிணியவை யுறுத்தலி னலந்தேன்
பங்க மேவிய சிறியவெற் பரந்தனின் பரமே. 1

### வேறு

பாரினா ருவந்து போற்றும் பரிதிதன் மரபின் வந்த
சீரினா னரசர் மேலோன் றிலீபனே யவன்ப யந்த
நேரிலா னிரகு வானோ னீடிய வசன வன்சேய்
தேரினாங் கவன்சே யானோன் றிகடச ரதனா மென்ப. 2

அன்னவன் மதலை மேலா மறனுறு வாமி ராமன்
தன்னது தந்தை வாய்ச்சொ றாங்கலே தரும மென்னாக்
கன்னலை யனைய தீஞ்சொற் கனங்குழை யோடுந் தம்பி
தன்னொடுங் கொடிய கானஞ் சார்ந்தனன் வைகு நாளில். 3

இலங்கையி னிறைவன் வெய்ய விராவண னென்னுந் தீயோன்
நலங்கிளர் தெய்வக் கற்பி னங்கையைக் கவர்ந்து செல்லச்
சிலம்படு குவவுத் தோளான் சீறியே யமரிற் போகிக்
குலம்பட வரக்கர்ச் சாடிக் குறைத்தனன் சென்னி பத்தும். 4

அரக்கனைச் செகுத்த தோட மலைக்கவே யிராமன் றொல்லைத்
திருத்திகழ் முன்னே சத்தும் திரைபொரு கோணே சத்தும்
அருத்தியிற் கனகத் தேனை யரதனத் திலிங்க மாற்றிக்
கருத்துற வாவா கித்துக் கண்ணுதற் பதிட்டை செய்தான். 5

அறமெனு நம்பி யாங்காங் கருச்சித்த பின்னு மன்பின்
றிறநெறி கேது போற்றுஞ் சீர்மலி தலஞ்சார் வுற்றே
நிறமுறு மறலிற் றோய்ந்தே நீற்றோடு மணியும் பூண்டே
யிறைவனை ரசத லிங்கத் திழிவறப் பூசை செய்வான். 6

மஞ்சனம் பகையே தீப மருமல ரமுதே யாவி
னஞ்சுட னறுவை யாதி யமைவித்தே யொருமை நண்ணா
வஞ்செனுஞ் சத்தி பண்ணி யமைதரு பீடத் தாதி
தஞ்சமாஞ் சத்தி யந்தத் தாசன பதுமம் போற்றி. 7

விழுமிய விலிங்கந் தன்னின் வித்தியா தேகம் பாவித்
தெழுதரு மண்பி னோடு மிராகவ னிதய நின்றும்
வழுவறு மந்தி ரத்தான் வந்திடப் பிராண மார்க்கம்
தழுவுதன் கரத்தாற் றாங்கிச் சம்புவை யாவா கித்தே. 8

இரசத விலிங்க மூர்த்தி யியைந்தரு ளெம்பி ராய்குப்
பரவுமா னைந்து செந்தேன் பலகனி யிளநீ ராதி
விரவுசீ ரபிடே கங்கள் விதிவழி முட்டா தாற்றிக்
கருதுமெல் லாடை யொற்றிக் காஞ்சன வறுவை சாத்தி. 9

பாத்திய முதல மூன்றும் பதஞ்சிர முகங்க ணீட்டிச்
சாத்தியே கலவைச் சாந்தந் தகுமணிக் கலன்கள் சூட்டி
யார்த்தியி னோத னங்க ளறுசுவை பொருந்த வூட்டிப்
பூத்தரு முதக நல்கிப் புகைவிளக் கினங்கள் காட்டி. 10

எண்டகு முபசா ரங்க ளெஞ்சிடா தியற்றிப் பின்னுங்
கண்ணு நூன் முறையி லுள்ள கருமங்கள் பிறவு மாற்றி
யுண்ணிறை யன்பி னாயி ரஞ்செபித் தஞ்செ ழுத்தைப்
பண்ணிய பூசைப் பேற்றைப் பரமனுக் கொப்பித் தானே. 11

கற்றநூற் கருத்து ணர்ந்த காகுத்தன் கண்ணீர் கால
வற்றமில் சுருதி பாடி யற்றம தொழிக்க வேண்டிச்
சுற்றிமுன் வணங்கி நின்றான் றொன்மலை வல்லி யோடு
மற்புதன் றோன்றி யன்னாற் கருளியே மறைந்தா னங்ஙன். 12

தற்பம துடைய கொள்கைத் தசமுகற் சாடுங் கோமா
னற்புளந் தழைய நாட்டு மையனை யிராம நாதச்
சிற்பர முதல்வன் றன்னைச் சீதையு மிராமன் றன்னோ
டுற்றவர் யாரு மேத்தி யுள்ளிய வுயர்பே றுற்றார். 13

அஞ்சன மேனி யண்ண லமலனூல் விதிக ளாய்ந்தே
யெஞ்சலின் மணலா னாக்கு மெழிறரு மிலிங்கம் பின்னு
மஞ்சவே தொடரும் பாவ மகலுவான் றாபித் தேத்தித்
தஞ்சமாங் குழுவோர் சூழச் சாகேத நகரஞ் சார்ந்தான். 14

ஆனிமா மதிசேர் பூர்வ பட்சத்தி லமைந்த மூன்றே
மேனியா மேம லிங்க மேவர தனமா மைந்தே
பானிலா வெண்பொ னேழே பார்மணல் பத்தே ராமன்
மேனிலா வன்பி னாட்டும் வியன்புகழ்த் திதியா மென்ப. 15

## 7. திருமணச் சருக்கம்

### கேதீசர் துதி

சிந்து சேதுசெ யிராகவன் சினனொடு செருக்கார்
விந்த மாமலை யடக்கிய மேலவன் வினைதீர்
முந்து கம்மியன் முதலவர் பூசைகொள் முதலே
சிந்தி யென்றுய ரீகுதி நல்லருள் சிறிதே. 1

### வேறு

பூங்கம லத்தின் வைகும் புங்கவர் முதல்வன் மேனா
ளோங்கிய வன்பிற்றந்த வொன்றொழி பதின்மர் தம்முட்
டீங்குள தக்கன் றன்பாற் சென்றவன் மகளாந் தீமை
நீங்கிய வெண்ணிக் கௌரி நிருத்தனை வேண்டி னாளே. 2

வேண்டிய கருத்து முற்ற விமலனு மருள லோடுஞ்
சேண்மதி முகத்தெம் மன்னை திருமிகு மிமயத் தோங்கன்
மாண்புறு தடம தொன்றின் மலருமோ ரரவிந் தத்திற்
காண்டகு குழவி யாகிக் கருணையி னமர்ந்தா ளன்றே. 3

ஆங்கவ டன்னைக் காணூஉ வணிதிக ழிமய மன்ன
னோங்குறு முவகை பெற்றா னுச்சிமேற் றாங்கிச் சென்றே
வாங்கிய நுதலிற் றேவி வளைக்கரங் கொடுப்ப வன்னாள்
வாங்கியே வளர்த்தா ளன்பின் வளர்மதிப் பிள்ளை யேபோல். 4

இன்னவா றினையர் பாலி லெம்பெரு மாட்டி வைகிப்
பன்னுமாண் டைந்து செல்லப் பரசிவன் வரைந்து கொள்வான்
மன்னவ னிசைவு பெற்றே வரை தனக் கொருசா ராக்கி
மன்னிய சாலை யொன்றின் மாத்தவ நெறியி னின்றாள். 5

இன்னண மம்மை வைக வியல்பிலாச் சூரன் நோன்பாற்
பன்னகா பரணன் பாலிற் பலவர பலங்கள் பெற்றே
இன்னலி லிமைப்பி லோரை யிசைகொண்டு வெரினுங் கண்டே
மன்னிய னிலமை பெற்றே வைகினான் மகேந்தி ரத்தில். 6

அத்தகு காலை வெள்ளி யசலத்துச் சனக ராதிப்
பத்திசெய் முனிவ ரர்க்குப் பதங்களோர் மூன்றுங் கூறி
யித்திறஞ் ஞானபோத மென்றவ ருணர மேலோன்
சித்தம தொடுங்கு மோனச் சீர்நெறி காட்டி யுற்றான். 7

உற்றிடு கின்ற காலத் துரமிகு சூர னாதிப்
பற்றலர் தீங்கு செய்தே பண்ணவர் சிலரைப் பற்றி
முற்றிருஞ் சிறையில் வைப்ப முகிலுயர்த் தவனோ டேனோர்
உற்றுறு துயரம் வீங்க ஒளித்துறை நிலையர் சென்றே. 8

சம்புவின் மோனத் தன்மை சதுர்முகற் குரைத்தா ரன்னான்
வம்புலா மம்பு வேளை வலிமையி னேவ வேவ
எம்பிரா னவனை யட்டான் ஈபவன் முதலோர் வேண்டத்
தம்பிரான் மோன நீங்கித் தளர்வற வருள்பா லித்தான். 9

அருந்ததி கொண்க னாதி ஐயரோ ரெழுவர் தம்மை
வரையுறை யிறைவன் றன்பால் மனத்திறம் பேச விட்டும்
விருப்பொடு சௌரி கொண்ட விழுத்தவம் போந்து கண்டு
முருத்திரர் பூதர் தேவ ருறுதவர் வணங்கிப் போத. 10

வெள்ளிவே தண்டத் துச்சி வீற்றிருந் தருளுந் தூய
பிள்ளைவெண் டிங்கள் சூடும் புரிசடைப் புனித மூர்த்தி
யொள்ளழற் செங்க ணேற்றை யொய்யென வுகைத்துக் கொண்டே
தள்ளருந் தவத்தோர் வாழுஞ்சையமா மிமயம் புக்கான். 11

சென்றரு டேவ தேவன் சிலாதன முனிசேய் காட்ட
மன்றலங் கோயி லுள்ள வனப்புகள் யாவுந் தேர்ந்தே
மின்செறி மடங்கற் பீட மீமிசை யருளோ டுற்றான்
மன்பெருங் கணங்க ளேனோர் வைகின ரிறைவற் சூழ. 12

திங்களங் கண்ணி வேய்ந்தோன் சீவர்க ளுய்ய வாற்று
மங்கள வதுவை காண்பான் வயங்குமெப் புவனத் தாருந்
தங்களு ளாசை யுந்தச் சார்ந்தனர் தொக்கா ரற்றா
லங்குள ருட்கச் சைல மசைந்தது துளக்க மெய்தி. 13

பொன்னிற விமய வோங்கல் பொள்ளெனத் துளங்கச் சேடன்
றன்றலை யவனி யென்னுந் தகுதுலைத் தட்டி ரண்டின்
மன்றலாய் வடபால் தாழ மற்றைய தென்பா லோங்கத்
துன்புறு வாராய் மண்ணோர் செய்தவர் விண்ணோர் சோர்ந்தார். 14

இங்கிவர் சிவனே யென்னா விரங்கின ராகி நிற்பச்
சங்கரன் கண்டே யீது சார்நகை முகத்த னாகி
யங்குறு நந்தி தேவை யருளிநீ யாழி நீரை
யங்கையிற் செறித்துண் டானை யழைத்துவா வன்ப வென்றான். 15

நந்திசொற் சிரமேற் கொண்டே நந்தியந் தேவ னேகி
நந்தலில் முனியைக் கூவ நணுகினா னவனை யாங்கே
யந்தியின் மதியஞ் சூடு மண்ணன்முன் கொடுசென் றுய்ப்ப
வந்தனை செய்து நின்றான் மலையத்து முனிவர் மேலோன். 16

வந்தனை புரிந்தோன் றன்னை மறைமுத லருளி னோக்கி
வந்தவர் வடக்குத் தாழ வயங்குதக் கிணம தோங்க
வந்தமி லுயிரின் பொம்ம ரயர்வு றீஇக் கலங்கு கின்ற
மந்தர முதலா வுற்ற வரைகளுந் தவறு மம்மா. 17

ஆதலி னீண்டை நீங்கி யைதினீ பொதிய மென்னும்
புதரத் தமர்ந்தால் முன்போற் பூதலஞ் சமமா மன்ப
மாதுய ரகன்று போதி மணனயர் நிகழ்ச்சி யாவும்
காதலி னாண்டே காணக் காட்டுதும் காண்டி நீயும். 18

என்றிவை யெங்கோன் செப்ப விசைதரு புலத்த னாகி
மன்றமர் கழல்க டாழ்ந்து மற்றவ ணரிதி னீங்கித்
தென்றிசை நோக்கிச் செல்லும் குறுமுனி சேணாறாக
மன்றலம் படப்பை யோங்கு மலயமா மலைமீ துற்றான். 19

மலயமா நிலயம் புக்க மாதவக் கிழவன் முன்னா
ளுலகமே யான தேரை யொப்பறு பதத்தா லூன்றிப்
பிலமுற முய்த்த பெம்மான் பீடுயர் வடிவ முள்ளா
னிலவுறத் தியானஞ் செய்தே நிவப்புட னமர்ந்தா னன்றே. 20

விந்தமா மாய வோங்கல் விற றபு கும்ப வண்ணல்
மந்தமா ருதமு லாவு மலயமா மசலம் வைக
வந்தமி லுயிர்களான வல்லறீர்ந் துவகை யாகிச்
சிந்தனை தனக்கு மெட்டாச் சிவனடி பராவல் செய்த. 21

அங்கது போழ்து தன்னி னணங்கின ரெவருஞ் சூழ
மங்கல வுமையாள் வேத வதுவையஞ் சாலை நண்ணிச்
சங்கரன் மலர்த்தா டாழ்ந்து சாரும்பாங் கியர்களான
பங்கய மகளி ருய்ப்பப் பகவனோ டமர்ந்தாள் பாங்கர். 22

இமயமாம் விலங்கன் மன்ன னிசைவினா வில்லாம் மேனை
யமலமாம் பூசைக் காகு மரும்பொரு டரவே யீசன்
கமலமா ரடிக டேவி கரகநீர் வார்ப்ப வாட்டி
விமலமா மலர்கள் சாத்தி மேவரப் பூசை செய்தான். 23

பூசனை யுரிந்த பின்னர்ப் பூரணி கரத்தை யார்க்கு
மீசனார் பாணி வைத்தே யெம்பிராற் குமையா டன்னை
நேசமோ டளித்தே னென்னா நிகமமந் திரங்கள் கூறி
வாசமா ருதகத் தோடு மகேசனுக் குதவி னானே. 24

ஆனதேர ரமையத் தாங்கே யரிபடர் கருங்கட் செவ்வாய்
மேனகை யரம்பை யாதி மின்னனார் நடன மாட
வானுளார் முனிவர் யாரும் மறைகளை யோதி நின்றார்
கானமங் கிசைக்க லுற்றார் கத்தரு வத்த ரானோர். 25

தேனுலாம் வெளிய செய்ய செழுமடற் கமலம் வைகும்
நானமா ரல்லின் கூந்த னாமக டிருவே யேனை
மானகு நோக்கி னாரும் மங்கலம் பாட லுற்றார்
பானிலப் பணில மாதி பாரிட ரியம்பி யார்த்தார். 26

விதுநில வொளியை வென்ற வெண்பொடி பரந்த கோலக்
கதிதரு மிசையாம் வேதக் கரைதெரி யிருவ ரானோர்
விதமிகு கனியே பாகே வேரியே யமுத மென்ன
முதமுற முகந்துட் கொள்ளு முறையிலே ழிசைபொழிந்தார். 27

அதுபொழு தசல வேந்த னம்பிகை பாகன் முன்னர்க்
கதலிமா பலவின் றீய கனிவகை நெய்தே னாதி
மதுரமாம் பொருள்கள் வைத்து மற்றிவை நுகர்தி யென்ன
மதிமுடி பாணி தொட்டே மகிழ்ந்தன மென்றான் பின்னர். 28

மங்கல கரண மெல்லாம் மலரவன் விதியி னாற்றக்
கங்கையா னுலக மீன்ற கன்னிகை யுமையா டன்னைச்
செங்கையிற் பற்றித் தீயை வலம்புரீஇச் சடங்கு செய்தா
னெங்கடம் பொருட்டே யெம்மான் செயலெலா மென்பவான்றோர். 29

மன்றலஞ் சடங்கு யாவும் மறைநெறி முடிந்த காலை
முன்னுற வயனும் பின்னர் முகுந்தனே மகவா னண்டர்
துன்னிய முனிவர் மன்னன் சுற்றமே மைந்த ரேனோர்
கொன்றையஞ் சடையி னானைக் கோதையை வணங்கினாரே. 30

ஈங்கிவர் பராவல் முற்ற வெம்மையா ளுடையா டந்தை
யோங்குவெண் ஷூரி யேற்றா னொண்மலர் தீர்த்தங் கந்தத்
தீங்கனி பாலே யாதித் திவ்விய சேட மெல்லா
மாங்குறை நீரர்க்கெல்லா மளித்தன னணிந்துட் கொண்டார். 31

பொன்னிய லிமயந் தீர்ந்து புராதனி யோடும் பெம்மான்
மின்னு தண் கயிலை மேவி விடையினை யிகந்து மன்றி
லின்பிய றெரிப்பான் கூடி யிருந்தன னுயிரி யாவு
மன்பொடு போகங் கூட வழுந்தின வின்பத் தன்றே. 32

## 8. அகத்திய முனிவர் பூசனைச் சருக்கம்

### கேதீசர் துதி

நள்ளுரு மிரவினிலே வாசவனுங் கேசவனு நளினத் தானு
முள்ளுறு மன்புருவார் மருத்துவரும் பரிதியரு முரகர் தாமும்
தெள்ளுறு சித்தருடன் வசுமுதலோ ரனுதினமுஞ் சேர்ந்து போற்ற
மள்ளுறு மருளுற்று கேதீசா அளியேற்கு மருள்க தேவே. 1

### அகத்திய முனிவர் துதி

ஆழி தீய ரவனி விந்த மாமிவை
ஊழின் வற்ற வொழிய வொப்ப வாழவே
சூழ வல்ல முனிவ கும்ப சூனுவே
வாழ நல்கு தமிழில் வல்ல வித்துவம். 2

### வேறு

பொன்னிய லிமயந் தீர்ந்து பொதியமே லுறைகும் பத்தோன்
தன்னிட மென்று நீங்காச் சங்கரி யுமையை யெங்கோன்
மன்னிய மறைவி னீரான் மணந்தருள் வண்ண மெல்லாந்
தன்னிய லறிவாற் கண்டே சதானந்த முடனாங் குற்றான். 3

ஒருவனை யுள்ளே யுள்ளு மோவறு தவத்தின் சித்தி
யொருமையிற் பெறுவா னுன்னி யுயர்தலந் தோறுஞ் சென்றே
யுரிமையி னருச்சித் தேத்து முறுதியோ டார நாறுந்
தருநிரை பொதுளுங் காவேய் சையமா மலயந் தீர்ந்தே. 4

விற்செறி பசும்பொற் றூபி விண்ணக நக்குந் தில்லைச்
சிற்பர வியோம மன்றிற் சீவரைச் சிவமே யாக்குந்
தற்பரை கண்டு காட்டும் தனிப்பெருங் கூத்தன் கூத்தை
யற்பொடு போற்றிப் பல்கா லானந்த வுதவி யாழ்ந்தான். 5

அத்தல மரிதின் னீங்கி யராவொடு முதியஞ் சூடும்
முத்தனார் புகலி வேளூர் முதுகிரி கமலக் கோயில்
மத்திய மருதூர் நாகை மறைசையே முதல தானஞ்
சித்தனை யளித்தோன் றாழ்ந்து தென்னுறு மிலங்கை சேர்ந்தான். 6

விரிதிரை தரளஞ் சிந்தும் வேலைசூ ழீழக் கீழ்பாற்
றிருமிகு மூர்த்தி தீர்த்தந் தலமெனுஞ் சிறப்பு மேய்
பொருவறு கோணே சத்துப் புனிதனைப் பூசித் தேத்திக்
கரசையம் பதியிற் பூசை காதலி னியற்றிப் பின்னும். 7

சிந்தனைப் பயந்த கோமான் சிலைநுதற் கருங்கண் லோபா
முத்திரை வனிதை யோடும் மூறிநீ ருததிப் பாங்கர்ச்
சித்திசெய் மாதோட் டத்துச் சிகியுறு பூசை யாற்ற
வந்தனன் றருள்செய் கேதீச் சர தலஞ் சார வந்தான். 8

அப்பதி யெல்லை தாழ்ந்தே யகம்புக மருவார் சோலை
கைப்படு மலர்கா றூவி மலர்முகங் காட்டி முன்னே
தப்பற வெதிர்கொண்ட டேத்தத் தமிழ்முனி சென்று தாணு
ஒப்பற வமருங் கோயி லோங்ககோ புரம்வ ணங்கி. 9

தன்வயிற் படிந்தோர் யார்க்குந் தமமொழித் தொளிவி ளக்குந்
தன்னிகர் பிறிதின் றாய தாவில்பா லாவித் தீர்த்தந்
தன்னிடை வினைக ளீர்க்குந் தனிப்பெருஞ் சூத்த மோதி
மன்னுறு பரிவா னாடி மணிவடம் பூதி பூண்டே. 10

சந்தியா நியம மாதி தருகடன் முற்றி யாதி
யந்தமி னிமலத தேவே யாண்டவ னென்றுந் தானே
சந்தத மடிமை யென்றுந் தன்மனங் கொண்டே யன்பால்
மந்திர வரசர் யோங்கு மாமனுக் கணித்தல் செய்தான்.

கேடக நீக்கி யாளுங் கேதுநா யகனை வாமப்
பாடக மிலங்கு பாதப் பராபரை யுடனே மேலோர்
நாடக வன்பி னூற்றா னயனுறு முதனூ லாற்றி
னேடக மலரிற் பூசித் தெண்ணிறோத் திரமி சைப்பான்.

வேதநாயகனே போற்றி வேள்வியின் முதலே போற்றி
வேதமான் மறியாய் போற்றி விநாயக சனக போற்றி
காதில்வெண் குழையாய் போற்றி கங்கையஞ் சடையாய் போற்றி
மாதொரு பாகம் வைத்த மாதோட்டக் கனியே போற்றி.

அந்தியிற் பொலிந்த வேணி அண்ணலே போற்றி மேலாம்
மந்திரத் துருவங் கொள்ளும் வானவா போற்றி யைந்தாம்
பந்தம நகற்றத் தோன்றும் பற்கனே போற்றி யெங்கள்
மத்தியு மறியாச் சோலை மாதோட்ட மருந்தே போற்றி.

பொற்கரா வணிக ளாகப் புனைந்தருள் புனிதா போற்றி
பங்கயன் முகுந்தன் காணாப் பரஞ்சுடர் வடிவே போற்றி
வெங்கய வுரிமேற் கொண்ட விமலநா யகனே போற்றி
மங்கலை மருங்கு வைத்த மாதோட்ட மணியே யோற்றி.

**வேறு**

என்று பற்பல ஏத்தி வணங்கியே
துன்று செந்தமிழ்த் தொன்னூற் குரவனும்
அன்றி யற்று மருச்சனை யின்பயன்
மன்று ளாரடிக் கர்ப்பணித் தானரோ.

கால மங்கதிற் கௌரியுந் தானுமாய்க்
கால கால னகத்தியன் காணநின்
றோல வேலைநீ ருண்ட முனிவநீ
சால வேண்டுவ சாற்றுக என்றனன்.

**வேறு**

பாதம் பணிந்தங் ககத்தியனும் பரனே அரனே பசுபதியே
ஏத மறநின் னிணையடிக ளிதயத் திருக்க வரந்தருக
பேத மொழித்திப் பதிபேணிப் பெருமா னுனையே பணிவார்கள்
சாதல் பிறத்தல் சாராதுன் தாள்சேர் வாழ்வு தந்தருளே.

எனமுன் வேண்ட வீந்தருளி யெம்மா னிலிங்கத் திரையுற்றான்
தனமுன் பெற்ற தரித்திரனிற் சாரும் மகிழ்ச்சி தழைத்தமுனி
தினமுங் கேது நாதன்றாள் சேவித் திருந்து சின்னாளில்
முனமங்கோது பொதியம்போய் முறைவீற் றிருந்தான் முதமுற்றே.

சாற்றுங் கேதீச் சரமெய்திச் சபரி புரிந்து மலாயத்திற்
போற்றும் பணிகள் பின்னாளிற் புரிந்தும் புத்தி முத்திகளா
மேற்றஞ் சாரும் பேறுற்றா ரெண்ணி லடங்கார் மூவுலகும்
போற்றும் படிநின் றருள்புரியும் பிரியா திருந்தப் பூரணனே.

**வேறு**

தலங்களிற் சிறந்த கேதீச் சரத்துமான் மியத்தை யன்பு
கலந்துறப் படிப்போர் கேட்போர் காதலித் துரைவி ரிப்போர்
நிலந்தனி னிரப்பி னீங்கி நிறைசுக வாழ்வி னீடிப்
பலங்களிற் சிறந்த வீட்டின் பாலராம் பாலினாரே.

வான்மழை பொழிக ஞாலம் வளம்பல மலிக வெங்கும்
நான்மறை யொழுக்கஞ் சைவ நன்னெறி நடக்க நாளும்
பான்முறை கேதீ சத்திற் றிருப்பணி சமைப்பா ரோடு
மேன்மைகொள் கேதீ சர்தாள் மேவிய தொண்டர் வாழி.

**திருச்சிற்றம்பலம்**

**திருக்கேதீச்சரப் புராணம் முற்றிற்று**

# திருக்கேதீச்சரத்துக் கௌரிநாயகி பிள்ளைத்தமிழ்

**சி. இ. சதாசிவம்பிள்ளை**

**1976**

### நூற்காப்பு

காக்குங்கே தீச்சரத்துக் கௌரிபிள் ளைத்தமிழை
ஆக்கும் பணியில் அருள் தந்து - நீக்கமற
ஐந்துகரத் தொந்திவயிற் றந்திமிளிர் இந்துமுடித்
தந்தி முகத் தெந்தைதிருத் தாள்.

### ஆசிரிய விருத்தம்

ஓங்கா ரத்தி னுருவாயென்
னுள்ளங் கோயில் கொண்டருளி
ஒளிர்மா முடியி லாற்றுகு
மொருவெண் பிறையு முடன்சூடிப்
பாங்கார் கரத்தி லங்குசமும்
பாச முடன்கூர் மருப்பொன்றும்
பருப்பி னியன்ற மோதகமும்
பரித்த களிற்றின் பதம்பணிவாம்
தேங்கா ரளிபண் பயில்சோலைத்
திருவார் கேதீச் சரத்தமரும்
தெய்வக் குழந்தை கௌரியெனுந்
தேவி யடிக்கோர் தமிழ்மாலை
பாங்காய்ப் பிள்ளைத் தமிழென்னப்
பகரப் பொருளும் செஞ்சொல்லும்
பண்ணும் உதவிக் கவிதைவளம்
பாலித் தருள்க வென்றென்றே.

### அவையடக்கம்

சொல்லும் பொருளும் சுவைக்க வணி
சொட்டச் சொட்டச் செவிமடுப்போர்
சுரந்து கசிந்து வருகண்ணீர்
சொரியத் தெய்வக் கவிபாடும்

செல்வ ரிருக்க நாயடியேன்
தேவியடிக் கோர் பாமாலை
செப்பத் துணிந்த துணிபென்னே!
சிறுபுன் மதிகொண்டாசை யுந்த
நல்லோர் நகைக்கக் கவிபாடும்
நானும் கைக்க நாணமொடு
ஞானமின்றி யருளின்றி
நாறாத்தொடையல் புனைந்தபிழை
வல்லோர் பொறுத்தே கௌரிதிரு
மலர்ச் சேவடிகட் குவந்தபல
மணமார் தொடையல் புனைகவென
வந்திக்கின்றே னவரடியே.

## கௌரிநாயகி பிள்ளைத்தமிழ்

## நூல்

### 1. காப்புப் பருவம்

#### திருமால்

திருமகளுவந்துறையு மறுமார்பினானையொண்
டிகிரி சங்கேந்தினானைச்
செங்கமல நயனத்தினானை யஞ்சனவணத்
திருமேனி யழகி னானை
மருவருந்துளவமணி வைகுந்தவாசனை
வராகமொடு கமடமீனம்
வாமனமுதற்பத்து வடிவுகொண்டானை யடி
வந்தித்திறைஞ்சி நிற்பாம்
பருமணிக்கோவையொடு பரிபுரமிழற்றமறி
பாலாவி தீர மாடும்
பாவையைமருந்தீசர் பாகமுறுமம்மையைப்
பார்முத லளித்த பரையைக்
கருமணிக் கண்டர்முக் கண்விருந்தாய் நிலவு
கன்னியைக் கருது மடியார்
களைகணா யமர்திருக் கேதீச் சரத்தம்மை
கௌரியைக் காக்க வென்றே. 1

**கைலாசநாதர்**

மடையில்வாளைபாய வெடிகொள் சேல்கள்மீள
மவுனமுற்ற மந்தி நனைமலர்
மருவு தேவ தாரு வளர்பொதும்பர் பாயும்
வளமிகுத்த கைலைவரையினில்
வடிகொள் சூல வேலும் மழுவு மானு மேந்து
மதனை யட்ட வங்கி விழியினார்
வனச பாத மீது மறைக ளோதி யங்கைம்
மலர்கள் தூவி நின்று வாழ்த்துவாம்
படியின் முன்வி ழுந்து முடிகள் தாழ்த்தி றைஞ்சும்
பருவ அன்பர் நெஞ்ச முருகிநாப்
பழகு நாம மோது கிளிகள் பூவைபாடல்
பயில நின்ற சோலை மறுகுசூழ்
கடிகொள் இஞ்சி யோடு நெடிய கோபுரங்கள்
ககன முட்ட வோங்கு தென்றிசைக்
கயிலை யாய கேது பணியு மீச்சரத்துக்
கௌரி மானை நன்கு காக்கவே. 2

**முறிகண்டி விநாயகர்**

மருப்பொன் றொடித்துப் பாரதத்தை
மாமேருப் பொன்னேட்டெழுதி
வந்தித் திருந்த மூதாட்டி வயமா
வுகைக்கும் மன்னர்முனம்
திருப்பொற் கயிலை சேரவிட்டுச் சிறுமாங்
கனிக்காய் அகிலமெலாம்
சேர வுகைக்கும் மாமயிலோன் தெளியா
தயரக் குரவரை முன்
விருப்பில் வலம்வந் ததுபெற்ற
வேழ முகனை முறிகண்டி
மேவி யருளும் விநாயகனை வேண்டி
மலர்தூஉய்ப் பதம் பணிவாம்
கருப்பற் றறவந் தன்பர்தொழுங்
கழனி வளஞ்சேர் பாலாவிக்
கரையிற் கேதீச் சரத்தமருங் கௌரித்
தாயைக் காக்கவென்றே. 3

**கதிர்காம வேலவர்**

வேலெடுத்து வில்லெடுத்து
வீர வாகு வாதியாம்
வீர ரோடு செந்தில் வந்து
வெய்ய சூரர் விறல்படுத்
தால மொத்த கண்ணி தேவ யானை
தோள ணைந்து பின்
அன்னை வள்ளி தேனளைந்
தளித்தமென் தினைப்பதம்
மேலுமுண்டு காதல்கூற
வீறு கொண்டு வந்தவில்
வேடர் காணு றாதுமாய
வேங்கை யாகி மென்கிழக்
கோலமாகி மணமுவந்த
கதிர காம வேலவன்
கோம ளக்கு ழந்தை கௌரி
கூட நின்று காக்கவே. 4

**தேவேந்திரன்**

திருமலி துணர்ப்பூங் கற்பக நீழல்
தேவியோ டரியணை யிருந்து
திலோத்தமை யரம்பை யூர்வசி முதல
தேவகன் னியர்நடம் கண்டும்
உருமலி வெள்ளை யீரிரு பிறைக்கோட்
டும்பல்ஜ ராவத மேறி
ஒளிவிரி குலிச மேந்திவிண் ணாண்டும்
ஒலிதிரைச் சீரலை வாயிற்
பருமணி மகுடச் சூருரங் கீண்ட
பன்னிரு தடக்கைவே லவர்க்குப்
பரிசெனத் தேவ யானையை யீந்த
பாகசா தனன்நிதம் காக்க
கருமணிக் கண்டர் கைலையீ தென்னக்
கடவுளர் போற்ற வீற்றிருக்குங்
காமலி கேதீச் சரத்தினி லம்மை
கௌரிநா யகியைக் கண்ணெனவே 5

**திருமகள்**

மலயம் பிறந்து மலர்சந் தளைந்து
வடபாலி லோடு மிரதம்
வருவேனில் வேளை மலரோனை யீன்று
வனசத் திருந்த திருவை
அலைகொண்ட பாலி னுததிக்க ணாரு
மமுதோ டுதித்த பொறியை
அரிசெம்பொன் மார்பி லமர்கின்ற மின்னை
அடியஞ் சலித்து நினைவாம்
கலை கொண்ட வேணி கமழ்கொன்றை கொண்ட
கயிலாயர் பாக மருவுங்
கறைகொண்ட கண்ணி நறைமென் பதத்தி
கவிபாடு மன்பர் கனவில்
நிலைகொண்ட செல்வி நிலமாதி யாக
நெறிகொண்ட பூத வுருவாய்
நிலவம்ப ரத்தி கௌரிக் கொடிக்கு
நிழலாய்ப் புரக்க வெனவே. 6

**கலைமகள்**

வெள்ளைக் கமல நறும்போதில்
வேதன் நாவிற் பண்பயில்வார்
வீணை யிசையிற் கைவலவர்
விதிக்கு முயிரோ வியத்திலுயர்
உள்ளந் தெளிந்த பாவாணர்
உரைக்குங் கவியி லொளிர்சிறைய
ஓதி மத்தி லமர்வாணி
உபய பதங்க ளுன்னிடுவாம்
பள்ளத் துயருஞ் செஞ்சாலி
பழன மருங்கிற் பாலாவி
பாயு மறுகிற் கேதீசர்
பாகம் பயிலும் பசுங்கிளியைக்
கள்ளக் குறும்பர் காணரிய
களிமென் பிணையைக் கருதியெமைக்
காக்கும் கௌரி நாயகியைக்
கண்ணின் மணியாய்க் காக்கவென்றே. 7

## துர்க்கை

புறங்கா டுறையுங் கடுஞ்சினத்துப்
புரிவெங் கொலைய மடங்கலெனும்
போரே றேறி முத்தலைய
புகரார் சூலப் படைபரித்துக்
குறுந்தாட் செங்கண் வளைமருப்புக்
கோல மகிடன் சிரமீது
கொஞ்சுஞ் சதங்கை யடிமிதித்த
குமரிக் கன்னி பதம்பணிவாம்
உறுங்கா ழியர்கோ னாரூரன்
உலக முய்யத் தமிழ்பாட
ஊழி யூழி வரமருளும்
ஒப்பில் திருக்கே தீச்சரத்தின்
நறுங்கா சூழுந் திருக்கோவில்
நாத னருளே யுருவாகி
நம்மைக் காக்குங் கௌரியினை
நாளும் நாளுங் காக்கவென்றே. ८

## சப்த மாதர்

வந்தித்து மறையோதி மலரடி மனங்கொள்வாம்
மகேசுவரி நாராயணி
வனிதைகௌ மாரிவான் மருவிந்திராணிமற
மாகாளி யபிராமியோ(டு)
அந்தவாராகியென வமைசப்த மாதர்தமை
யணிகொள்கே தீச்சரத்தில்
அலைவீசு பாலாவி அயல்கோவில்கொண்டருளி
அடியருக் கருளுமம்மை
அந்தமி லுயிர்க்குடல் அளித்துப்பரிந்துவினை
யார்த்திப் பதங்களருளும்
ஆறுலவு சடைமதிக் கீறுலவுகேதீசர்
அருளுருவ மாயவமலை
கந்தநறு மென்குழற் கன்னிநமை யிமையாது
காக்குமுக் கண்ணியுலக
காரணி கடந்தபரி பூரணி கணம்பரவு
கௌரியைக் காக்கவென்றே. ௯

**முப்பத்து முக்கோடி தேவர்**

அருளி லாதுநெறி யொழுகி டாதுமலர்
அடிதொ ழாதுவரு சனனமீ(து)
அவல மாகவரு வினைகள் நேடிநெடி
தயர்வுறு மடிய மேமையும்
பொருள தாகவுள கருணை யாலடிகள்
புகழு மாறுபு ணர்த்தியெம்
புந்தி நின்றுலவு செந்த ளிர்ப்பத
புராரி பங்கிலுறு புனிதையைக்
கருதி யன்பர்தொழு கயிலை நாதர்விழி
களிகொ ளக்குலவு கன்னியைக்
கவுரி யென்னுமோர் கரும்பை நாளுமுறை
காக்க கண்ணுண்மணி யாகநன்(கு)
இரும ருத்துவர்கள் எண்வ சுக்கள்பதி
னொருவர் முக்க ணுருத்திரர்
இலகு பன்னிருவர் உதய சூரியர்கள்
என்னு முப்பதொடு மூவரே. 10

காப்புப் பருவம் முற்றிற்று.

## 2. செங்கீரைப் பருவம்

மையிட்ட வொண்கணார் வளையிட்ட செங்கைகொடு
மலரிட் டிறைஞ்சி நின்று
மானிட்ட கண்ணியே வானிட்ட வில்லினை
வகிர்ந்திட்ட நுதல ணங்கே
பையிட்ட நாகமுடி பணியிட்ட கேதீசர்
பாகம திருத்தி யிட்டுப்
பரிதிமதி யனலிட்ட பார்வையிட் டுள்ளமகிழ்
பாவையே யென்று பரவ
மெய்யிட்ட பணிகொண்டு மேதினிமுதற் புவன
மீதிட்ட வுயிரி னருள்சார்
விழியிட்டு மற்றவர்கள் வினைபுசிப் பித்திட்டு
மேனெறியி லிட்ட டிதரும்
செய்யிட்ட பங்கய பதத்தேவி கௌமாரி
செங்கீரை யாடி யருளே
செங்கண்மா லுக்கரிய தங்கையாய் வருகௌரி
செங்கீரை யாடி யருளே. 11

செங்கீரை யாடியருள் செங்கீரை யாடியருள்
தெய்வச் சுடர்க் கொழுந்தே
தேனூறு செவ்வாயில் அள்ளூற நகைநகச்
செங்கீரை யாடியருளே
வங்கம் மலிந்தகடல் மறுகினிற் கேதீசர்
வாமத் திருந்து பரிவால்
வானாதி பூதத்து மன்னுயிர்கள் வாழ்வுபெறு
வந்தணையு மன்பர் மகிழ்வால்
அங்கம் பொடிப்பநின் னாடல்கண் டலர்தூவி
அம்மைவாழ் கென்ன வாழ்த்தி
அழகூறு கனிவாயி லமுதூற முத்தமிட
ஆடியருள் செங்கீரையே
செங்கமல மலர்வயற் செந்நெல்விளை மாந்தையிற்
செங்கீரை யாடியருளே
செங்கண்மா லுக்கரிய தங்கையாய் வருகௌரி
செங்கீரையாடியருளே. 12

ஆடகச் சிற்சபையி லையனடி தூக்கிநின்
றைந்தொழிலி னடனமாட
அரிபிரம ரிந்திரர்க ளன்னைவா ழியவென்ன
அருமறைக ளோதியாட
மாடகத் தந்தியாழ் வாணியிசை கொண்டாட
மருவுச்சி பூமி னாதி
வானவர்கள் மகளிர்மலர் மாரிபெய் தடிபரவி
மங்கலங் கூறி யாடக்
காடகக் களிமயில் கலாபம் விரித்தாடு
காமறுகு சூழு மாந்தைக்
கைலையிற் கேதீசர் கண்ணின்மணி யாயாடு
கன்னியே சென்னி தூக்கிச்
சேடியர்கள் மகிழ்வுறத் தெய்வக் கொழுந்து நீ
செங்கீரை யாடி யருளே
செங்கண்மா லுக்கரிய தங்கையாய் வருகௌரி
செங்கீரை யாடி யருளே. 13

மாசகல வலகிட்டு மனைமுன்றில் வாசநீர்
வண்சாந்து கொண்டு மெழுகி
வண்ணப் பொடிக்கொண்டு மலர்கொண்டு கோலமிடு
மங்கைய ரொருங்கு குழுமி
நேசமொடு வந்துதிரு நீறிட்டு முத்திட்டு
நெற்றியிற் பொட்டு மிட்டு
நெஞ்சத் தணைத்துக் கவான்மிசை படுத்தன்னை
நீடுவாழ் கென்று வாழ்த்தப்
பாசமறு தீர்த்திகைப் பாலாவி யாடிவரு
பக்தர்கள் பணிந்து போற்றப்
பழமறை முழங்கிடப் பங்கய மலர்ந்தன்ன
பவளவிதழ் நகைய ரும்பத்
தேசடை முகந்தந்து சிவகாமி மகமாயி
செங்கீரை யாடி யருளே
செங்கண்மா லுக்கரிய தங்கையாய் வருகௌரி
செங்கீரை யாடி யருளே. 14

கொண்டலை யுயர்த்தவன் குமரன் தனஞ்சயன்
கோல்கண்டு பின்னுமெய்த
கோலங் குறித்துக் கொடும்போர் நிகழ்த்திக்
கொழுந்துமதி சிதறவில்லால்
எண்டோளிறைப் பரம னடிப்பட்ட போதினும்
எயினர்மக ளாய்க் குறிஞ்சிக்
இறைவனையு மிருகரத் தேந்திமனமறுகியும்
ஏனென்றி டாதுநின்றாய்
விண்டுமுத லமரரும் விழியிமைக் காதுள
விதிர்ப்பினொடு பார்த்திருந்தார்
விளையாட லிவைசாலு மருள்நாடி யடிபாடி
விரையாரு மலர்களிட்டுத்
தெண்டனிடு மெம்பிறவி சேதிக்க வளர்அன்னை
செங்கீரை யாடியருளே
செங்கண்மா லுக்கரிய தங்கையாய் வருகௌரி
செங்கீரை யாடியருளே. 15

காலங்கி நீர்நிலங் காயமெனு மைம்பூத
காரணத் தாயவுலகு
கஞ்சன் படைக்கவுங் கருமேக வண்ணனவை
காக்கவுங் கைலையாளி
மேலங் கழித்திட விதித்தவர்க டம்மையும்
வினையொழிந்திட வழித்தும்
மீண்டும் அவர்தமை யாக்கிமுத் தொழிலதாம்
விளையாட்டயர்ந்து வேண்டும்
கோலங் குறிக்கொண்டு கோமள வுருக்கொண்டு
குதலை மொழிகொண்டு மெம்மிற்
கூரரு ளுளங்கொண்டு கேதீச் சரத்தினிற்
குடிகொண்டு பணியு மடியார்
சீலங் கருக்கொண்டு தெய்வத் திருக்கொளச்
செங்கீரை யாடியருளே
செங்கண்மா லுக்கரிய தங்கையாய் வருகௌரி
செங்கீரை யாடியருளே. 16

சந்தமலி தென்பொதிகை வந்தகுறு முனியோடு
சங்கத் திருந்த புலவோர்
சசிகுலத் துறுதென்னர் தழுவிப் புரந்திட்ட
தமிழென்னு மார ணங்கைச்
சிந்தையருள் கூர்தர வளர்த்துந் தமிழ்ப்பாடல்
செழியன்மடி மீதிருந்து
திருச்செவி மடுத்தும் புரந்திட்ட மலைவல்லி
தேவிகே தீச்சரத்து
வந்துபா லாவிநீ ரதிலாடி வலமாகி
மலரடிகள் போற்று மன்பர்
மலவிருள் கடிந்தொளிரு முதயசூரி யனென்ன
மாசில்மெய்ஞ் ஞானமருளுஞ்
செந்தளிர்ப் பதவன்னை சிவநெறி தழைத்திடச்
செங்கீரை யாடி யருளே
செங்கண்மா லுக்கரிய தங்கையாய் வருகௌரி
செங்கீரை யாடியருளே. 17

**வேறு**

பலபல பக்தர்கள் பணிமுறை நிற்பவர்
பழமறை பைந்தமிழின்
பரவ வரந்தரு பதும பதத்திடு
பரலுறு தண்டையொலி
கலகல வென்றொலி முரல நினைந்திரு
கழல்கள் பணிந்திடுமெம்
கணித மிகைப்படு பிறவி யறுத்திரு
கருணை விழிக்கடைதா
திலக நுதற்றிரு மலைதருமுத்தமி
சிவமலி கேதீசர்
திரிநய னத்திடை நிலவுபசுங்கொடி
செங்கோ செங்கீரை
அலகி லுயிர்க்குல மருணெறி பெற்றிட
வாடுக செங்கீரை
அருளி னுருக்கொடு கௌரி யிளங்கொடி
யாடுக செங்கீரை. 18

மலரய னச்சுதன் மகபதி மற்றுள
வானோர் கண்டறியா
மலரடி யெம்மக வரையில் மிதித்திட
வாடி வருந்திடுமோ
அலர்முகை யொத்துள துவரிதழ் வாயினில்
அஞ்சே லென்றொருகால்
அபய மளித்திடில் அணிநகை முத்தவை
அவனி யுதிர்ந்திடுமோ
கலைமுடி வைத்திடு கயிலை மலைக்கிறை
கருதிடு கண்மணியே
கசிவொடு முத்தமிழ் கழறி வழுத்திடு
கருணை யெனக்கருள்வாய்
அலையி லுதித்திடு மமிழ்த மொழிக்கொடி
யாடுக செங்கீரை
அருளி னுருக்கொடு கௌரி யிளங்கொடி
யாடுக செங்கீரை. 19

கனையொலி யிட்டிருள் ககன முகிற்பொரு
கரிய நிறத்திருமால் களமணி
கண்டரம் மழவிடை வித்தகர்
கழலிடு கமலமலர்
வினைவழி யொன்றற விரைவி லிடந்துகண்
வெறிமல ரென்றிடவே
வெயில்விடு சக்கர மருளிய முக்கணர்
விழிகொள நின்றாடும்
அனைகவு ரிக்கொடி யெமையினி யன்னைய
ரகருற விட்டாட்டா(து)
அபய மளித்தடி நிழல்தர வாடுக
செங்கோ செங்கீரை
சினைதொறு மலர்பொலி செறிதரு மருவிய
திருமலி மாதோட்டம்
ஜெயஜெய வென்றிட வருளுட னாடுக
செங்கோ செங்கீரை. 20

**செங்கீரைப் பருவம் முற்றிற்று**

### 3. தாலாட்டுப் பருவம்

விண்ணோர் கான விசைகேட்டு
'விருதுகுன்ற' முறைகேட்டு
வேற்கைப் பாலன் மழலைமொழி
விருப்பிற் கேட்டு மிகுந்தசுவைப்
பண்ணார் தமிழி லபிராமிப்
பட்டர் பாடும் பாக்கேட்டுப்
பண்டு பழகும் திருச்செவிக்கெம்
பாட்டுங் கேட்கத் திருவுளமோ!
தண்ணார் பொழில்சூழ் திருக்கேதீச்
சரத்தில் வந்துன் தாள்பரவும்
தவத்தோர்க் கெல்லாந் தாயாகிச்
சகல லோக நாயகியாய்க்
கண்ணா யெமக்கிங் கெழுந்தருளுங்
கனியே தாலோ தாலேலோ
கயிலைக் கிறைவர் பங்கிலமர்
கௌரீ தாலோ தாலேலோ. 21

வெள்ளிக் கயிலை மலையெடுத்த
வீறார் மொய்ம்பன் இலங்கேசன்
வேற்கண் மனைமண் டோதரியும்
விண்ணார் அணங்கி னருமேத்தப்
பள்ளைத் திமில்வெள் விடையேறிப்
பரனார் பாகம் பாலனுடன்
பாலாவியில்வந் தருள்சுரக்கும்
பரதே வதையே பதம்பணிவார்
உள்ளத் திலகு மொளிர்மணியே
உலவாக் கிழியே உயர்போதத்(து)
உச்சி மலர்ந்த பங்கயத்தில்
ஊறுந் தேனே புலவேடர்
கள்ளக் குறும்புக் களைவீட்டுங்
கன்னீஇ தாலோ தாலேலோ
கயிலைக் கிறைவர் பங்கிலமர்
கௌரீதாலோ தாலேலோ 22

பங்கப் பழன முளைச்சாலி
பாலா வித்தா யமுதூட்டப்
பருவம் பெற்று வளர்ந்துகுலை
பரித்து முற்றி யடிநோக்கிக்
கங்கைச் சடிலர் கேதீசர்
கமல பதங்கண் டவைசேருங்
காலம் பார்க்கு மெய்யடியார்
கவினைக் காட்டும் மாதோட்ட
மங்குல் தவழ வுயர்சிகரம்
மதில்சூழ் கோவில் மருந்தீசர்
வாமத் திருக்கு மடக்கிளியே
மலைமன் வளர்த்த மருக்கொழுந்தே
கங்குல் பகலற் றெமைக் காக்குங்
கண்ணே தாலோ தாலேலோ
கயிலைக் கிறைவர் பங்கிலமர்
கௌரீதாலோ தாலேலோ. 23

செங்கட் புனிற்றுக் காரெருமை
சேதாம் பலைமேய்ந் திரைமீட்டுத்
தெவிட்டிப் பெருகும் பாலாவித்
தெளிநீ ரருந்தி யயலுயர்ந்த
தெங்கின் நிழலிற் றுயில்கொள்ளுந்
திருக்கே தீச்ச ரஞ்சூழ்ந்த
தேர்வீ தியினிற் சிவதொண்டர்
சேரவிசைக்குஞ் சிவநாமம்
பொங்கும் மகரக் கடலொலிபோற்
பொலியக் கேட்டுந் தவமாதர்
போற்றி யிசைக்குந் தாலாட்டும்
புரிந்து கேட்கும் பூங்குயிலே
கங்கை முடித்த கேதீசர்
கண்ணுண் மணியே தாலேலோ
கயிலைக் கிறைவர் பங்கிலமர்
கௌரீதாலோ தாலேலோ. 24

செயலைத் தண்டார் புரள்மருமச்
சினவேற் காளை குன்றெறிந்த
செந்தில் முருகன் ஐந்துகரத்
தேவுக் கார்த்தி யாராமல்,
வயலிற் றிரிபோந் தயலில் வளர்
மடற்பூ கத்தின் குலைசாய்த்து
வான்மீ னென்னச் சேலுலவு
வளஞ்சேர் காழி வேந்தரழ
அயலுற் றருத்துந் திருமுலைப்பால்
அடியே மாசைக் கனாதானோ!
அன்னாய் வாழி கேதீசர்
அருளின் உருவே தாலேலோ
கயலொத் தகன்று கருணைபொழி
கண்ணாய் தாலோ தாலேலோ
கயிலைக் கிறைவர் பங்கிலமர்
கௌரீ தாலோ தாலேலோ. 25

**வேறு**

மாதர் இளம்பிறை யூரமுடித்த
மலர்ச்சடை மேவியொரு
மங்கை தவழ்ந்திட அங்கதுகண்டு
மனத்திடை யூடல்கொளா(து)
ஆதரவோடிட மேவி மகிழ்ந்திடு
மம்மே தாலேலோ
ஐயர் விழிக்கு விருந்தருள் சுந்தரி
யன்னே தாலேலோ
தாதவிழ் கொன்றை கடம்பு செருந்தி
தழைத்திடு மாதோட்டத்
தளியிடை யன்றியெம் விழியிடை யும்பயில்
தாயே தாலேலோ
சாதல் பிறத்த லிலாதடிதந்தருள்
சங்கரி தாலேலோ
சதுர்மறை தந்தருள் கௌரி யிளங்கொடி
தாலோ தாலேலோ. 26

அன்னையி னின்று பிரிந்து கலங்கிடு
மஞ்சிறு பாலகரின்
ஐவர் கலக்குற மம்மர் உழந்தழு
தழுது பதைக்கு முயிர்க்(கு)
இன்ன லகற்றி யணைத்திரு தாள்தரு
மிறைவீ நாதாந்தத்
தெல்லை கடந்த பராபரை சங்கரி
யின்றரு ளன்பர் குழீஇப்
பன்னு நலந்திகழ் செந்தமி ழாலிரு
பத்ம பதம்பாடிப்
பஞ்சணை யிற்றுயில் கென்று பராவொடு
பன்னி யிரக்கின்றார்
தன்னிக ரில்லரு ளன்னை மனோகரி
தாலோ தாலேலோ
சதுர்மறை தந்தருள் கௌரியிளங்கொடி
தாலோ தாலேலோ. 27

ஆடியல் நாகமொ டாறணி யுஞ்சடை
ஐயர் நுதற்கண்ணில்
அங்கி யுருக்கொடு வந்துதவழ்ந்திடு
மாறுரு வத்தினையும்
நாடி யணைத்தவை யோருருவாக
நலந்திகழ் கந்தனென
நாமமூ மிட்டொரு வேலரு ளிச்சுரர்
நாடு புரந்திடென
நீடு பறந்தலை சூரொடு தானவர்
நீறு படப் பொருது
நின்று பணிந்த புரந்தர னுக்குவிண்
ணீடர சோடருளித்
தாடரு சேயை யளித்த பசுங்கொடி
தாலோ தாலேலோ
சதுர்மறை தந்தருள் கௌரி யிளங்கொடி
தாலோ தாலேலோ. 28

கொண்ட லெழுந்து முழங்கி யிருண்டு
குளிர்ந்து நெடுந்தாரை
கொண்டு பராபரை நின்கரு ணைகுதி
கொண்டென வேபெருகி
மண்டி நிறைந்து திளைந்திடு வார்பவ
மாற்றிடு பாலாவி
மாநதி யாயுயிர் வாழ வளிக்கு
மருங்கி லெழுந்தருளி
அண்டர்கள் மாமறை கண்டறி யாவடி
அம்புய மங்குதொழும்
அன்பரகத்தி லிருத்தி நிரந்தர
மாடு மனோன்மணிதாள்
தண்டனிடும்பணி கொண்டருள் செய்பரை
தாலோ தாலேலோ
சதுர்மறை தந்தருள் கௌரியிளங்கொடி
தாலோ தாலேலோ 29

மாலரு ளிற்றுயில் வேலைகொதித்தெழு
மால மெடுத்தருளால்
வையகமோடுயர் வானக மும்முயிர்
வாழ வயின்றபரன்
பாலி லிருந்தனை யாமறி யாதுசெய்
பாவ வினைக்கூற்றம்
பாடு தராவகை சாடியெமக்கருள்
பாலி பராபரையே
நீலி நிரந்தரி கோமளை யாமளை
நின்மலை யென்றடியார்
நித்தமு நின்னிரு பத்ம பதந்தொழ
நீடருள் செய்தாயே
சாலி வளந்திகழ் கேதுபதிக்கிறை
தாலோ தாலேலோ
சதுர்மறை தந்தருள் கௌரியிளங்கொடி
தாலோ தாலேலோ. 30

## 4. சப்பாணிப் பருவம்

காளக் கருக்கொண்டு ககனமுகில் மேனின்று
கட்டியங் கொட்ட நீலக்
காசினி வளைத்திட்ட கடலலைக் கைகொண்டு
கதிர்முத் தினங்கள் கொட்டப்
பாளைப் பசும்பூக மடல்விரிந் துதிர்மலர்கள்
பாங்கரிற் கொட்ட வலைநீர்ப்
பாலாவி யுறைபுட் குலங்கள்தஞ் சிறைகொண்டு
பல்லியங் கொட்ட மறுகில்
தாழைப் பொதும்பர்விரை நாறுபொற் சுண்ணங்கள்
தலமிசைக் கொட்ட வோங்குந்
தருநிரைகள் பலபலென மணமருவு மலர்மாரி
தண்ணறவினோடு கொட்டத்
தாளக் கரங்கொண்டு சார்கருணை மேல்கொண்டு
சப்பாணி கொட்டியருளே
சயிலந்தருங்கௌரி தளிரிளஞ் செங்கைகொடு
சப்பாணி கொட்டியருளே. 31

அலகிலா வான்மகோ டிகள்தமக் கருளவு
மவைதமை மறைத் தழித்தும்
அருள்கொண்டு காக்கவும் ஆக்கவு முளங்கொண்டு
ஐவரை நிறுத்தி யகில
உலகெலா மாயநீ உறுதுணைவி யாயவர்க்
குயர்மனோன் மணிசத்தியாய்
ஓங்கிய மகேசுவரி உமைசலசை வாணியாய்
உடனின்று நடநவின்றும்
மலமிலா ரறியவரு விந்துநாதஞ்சத்தி
மாசிவமு மாகியங்கும்
மன்னிடு பராசத்தி மாதேவி நவசத்தி
வடிவாயு நின்றவனிதை
தலமெலாம் புகழ்திருக் கேதீச் சரத்தம்மை
சப்பாணி கொட்டியருளே
சயிலந்தருங்கௌரி தளிரிளஞ் செங்கைகொடு
சப்பாணி கொட்டியருளே. 32

கற்பகக் காநிழற் கண்ணிமைக் காதுசுரர்
கள்ளறா மலர்கள் தூவக்
ககனவட் டத்துலவு பலகணமு முன்னருட்
கதிர்உருக் கண்டுமேவப்
பொற்புறு புவித்தலத் தன்பர்சிவ சிவவென்று
பூங்கர மெடுத்து நீவப்
பொன்மேனி தாளாது தாளா தெனத்தாயர்
பொருமியுள மறுகி நோவச்
சொற்பத மெலாங்கடந் தருவாகி நின்றபொருள்
சோதிபெறு முருவமாகி
துய்யமல ரணைமிசை யிளங்குழவி யாகிச்
சுடர்க்கர மெடுத்து மேலாந்
தற்பர னடத்தினுக் கொத்ததிரி புடைகொண்டு
சப்பாணி கொட்டியருளே
சயிலந் தருங் கௌரி தளிரிளஞ் செங்கைகொடு
சப்பாணி கொட்டி யருளே. 33

ஆடகப் பொதுநின்று மம்பலவர் நாதவொலி
யணிமுரசு கொட்ட மேலாம்
அருமறைகள் தவமுனிவர் அமரர்புடை சூழநின்
றாவலங் கொட்ட வருளை
நாடியயல் நின்றுருகு மன்பர்கண் ணீர்முத்தம்
நறைமலர்கள் கொட்ட வன்னை
நளினத் தளிர்க்கர மெடுத்திங்கு சப்பாணி
நகைகொண்டு கொட்டியருளே
மாடுற்றி டுஞ்சாலி வயல்மலியு மாதோட்ட
மன்னுகே தீச்சரத்தின்
மறைகளொடு திருமுறையி னொலிபெருகு திருவீதி
மருவுமடி யார்கள் வாழத்
தாடந்து கருணைபொலி சலசலோசனவன்னை
சப்பாணி கொட்டியருளே
சயிலத் தருங்கௌரி தளிரிளஞ் செங்கைகொடு
சப்பாணி கொட்டியருளே. 34

பாலுததி யென்னப் பரந்தொழுகு பாலாவி
பாங்கரிற் பரத மாடும்
பாங்கிய ரொடும்மலர் பறித்துத் தொடுத்துமைம்
பால்சூட்டி யழகு பார்த்துங்
கோலமயில் கிள்ளைநா கணவாய்க் கருத்தியும்
குதலைமொழி கேட்டுவந்தும்
கூடிக் கழங்குகொண் டாடியும் மகிழன்னை
கூடுமிரு வினையினாலே
ஞாலவட் டத்திலெமை ஞாயிறு முதற்கோள்கள்
நலியாது நின்று நன்று
நல்கிட வலர்ந்தநளி னக்கரங் கொண்டுநீ
நன்கு சப்பாணி கொட்டே
சாலத்தயா கொண்டு சாரருளுளங்கொண்டு
சப்பாணி கொட்டியருளே
சயிலந் தருங்கௌரி தளிரிளஞ் செங்கைகொடு
சப்பாணி கொட்டியருளே. 35

**வேறு**

மருங்கில் உடுத்த பட்டாடை
வண்ண மகளிர் ஆயமொடு
மறுகி லாடி மலினமுற
வளருங் கூந்தல் குலைந்தலைய
அரும்புங் குறுவேர் வுறத்திலத
மழிந்து நெற்றி யணிபிறழ
அதுகண் டன்னை மாரெடுத்தே
அணைத்தொப் பனையிட் டருகிருத்த
விரும்பிக் குழுவி னொடுபின்னும்
விளையாட் டயரும் பசுங்கிளியே
மென்கை விரித்துச் சப்பாணி
மெல்லக் கொட்டி யருளாயே
கரும்புங் கமுகுஞ் செஞ்சாலிக்
கரையில் வளர்கே தீசர்விழி
கண்டு களிக்கச் சப்பாணி
கௌரீ கொட்டி யருளாயே 36

கையான் வாச மலர்தூவிக்
காலால் வலம்வந் துருகியிரு
கண்ணால் முத்த முதிர்த்து நின்று
கசிந்து கசிந்துன் புகழ்பாடி
மெய்யாற் பணிந்து வேண்டுமுன்
விரையார் மலர்மென் கரமெடுத்து
விண்ணும் மண்ணுங் கண்டுதொழ
மென்சப் பாணி கொட்டாயே
ஐயா றமர்செம் பொற்சோதி
யமல னருளி னுருவாகி
ஆகம் பகிர்ந்த மடப்பிடியே
ஆலந் திரட்டி யமுதமெனக்
கையா தருந்தி யெமைக்காத்த
கறையார் கண்டர் கேதீசர்
கண்டு களிக்கச் சப்பாணி
கௌரீ கொட்டி யருளாயே. 37

வான்பொய்ப் பினும்தான் பொய்யாத
வளஞ்சால் பொன்னி நாடுடைய
மன்ன னிராச ராசன்முதல்
வள்ளல் பலரின் திருப்பணியால்
தேன்பொய்ப் பில்லா மலர்க்காக்கள்
தேவ ருலகை யண்மியுயர்
திருக்கோ புரங்கள் குருகுலங்கள்
தேரூர் வீதி மடாலயங்கள்
தான்பெற் றுலவிக் காழியர்கோன்
தம்பிரானின் தோழர் முதல்
தமிழ்மாச் செல்வர் பாடல்கொளும்
தலத்தி லமருந் தாயேநின்
கான்பெற் றிலகு பலர்க்கரங்கள்
கருதி யெடுத்துக் கேதீசர்
கண்டு களிக்கச் சப்பாணி
கௌரீ கொட்டி யருளாயே 38

நறையிற் பொலியும் பூந்தவிசின்
நங்கை யிருவர் பாலாவி
நதியின் சாரல் வாலுகத்தின்
நளினப் பாயல் நடுவிருத்திப்
பிறையிற் றிகழு நுதலணங்கே
பிள்ளைக் கனியே யன்றிமவான்
பேணி வளர்த்த பசுங்கிளியே
பெண்ணா யகமே சப்பாணி
முறையிற் புரிக வெனவேண்ட
முகிழ்த்த நகை கொண்டருள்கொண்டு
மூவா முதல்வீ சப்பாணி
முன்னிக் கொட்டி யருளாயே
கறையிற் பொலிந்து கருணைபொலி
கண்ணாய் கேதீச் சரநாதர்
கண்டு களிக்கச் சப்பாணி
கௌரீ கொட்டி யருளாயே. 39

**வேறு**

மன்னுமைம் பூதத்தின் வடிவான வுடலல்லை
மனமாதி கரண மல்லை
வல்வினைப் பயனுகர வவையா மளித்திட்ட
மாமருந்தறிதி யுடனாய்
முன்னுனை யணைந்துள்ள விருள்மல மயக்கினால்
மோகித்து நினைமறந்தும்
முத்திநிலை தந்தருளு மெம்மையு மறந்தனை
முதுக்குறைவு பெற்றெமடியார்
பன்னுதிரு வைந்தெழுத் தோதிவாழ் கென்றுகுரு
பரனாயு மருளு முமையே
பாலாவி மறுகினிற் கேதீச் சரத்திலருள்
பாலிக்க வந்த பரையே
தன்னிகரி லாவன்னை தண்மலர்ச் செங்கைகொடு
சப்பாணி கொட்டி யருளே
சகலவுல கும்பரவு கௌரிநா யகியினிது
சப்பாணி கொட்டி யருளே. 40

**5. முத்தப் பருவம்**

வீடகத் துறுமாசை மேலிட விரைந்துதிரு
மேவுபா லாவியாடி
விரதங்கள் கொண்டுதவ நெறிநின்று தொண்டரொடு
விரவிப் புகழ்ந்து னாமம்
ஏடகத் தெழுதரிய விசையொடு பயின்றாடி
இருகணீர் மல்க வுள்ளம்
எரியிடைப் பட்டமெழு கெனவுருக வலமாகி
ஏத்தித் துதித்தலின்றி
நாடகத் தாலன்பர் போனடித் திடுமிந்த
நாயிற் கடைப்பட்டவெம்
நாவிருந் துன்னடிகள் பாடப் பணித்திட்ட
நல்லருளை நவில வறியேம்
காடகத் தொளிர்திருக் கேதீச் சரத்தம்மை
கனிவாயின் முத்த மருளே
கைலைநா யகர்பரவு கௌரிநா யகியுனது
கனிவாயின் முத்த மருளே. 41

மட்டுலவு செங்காவி வயலுலவு வரிவாளை
வானுகண் டுடுவி னுலவி
மழைமுகிலினொடுமீளும் வளனுலவு மாதோட்ட
மருவிப்பணிந்த வளமார்
பட்டுலவு மிடையினாள் பாவைமண் டோதரி
பரிந்துபணி செய்ய வருளும்
பரைதேவி கேதீசர் பாகம் பகிர்ந்துலவு
பானற் றடங்க ணம்மை
எட்டுலவு முருவாகி யாவுமாய் நின்றவுமை
இணையில்கே தீச்சரத்தில்
ஏத்துமடியார்கள்வினை தீர்த்திட வுருக்கொண்ட
ஏகநா யகிமயக்கும்
கட்டுலவு முயிரவை கடைத்தேற நின்சுவைக்
கனிவாயின் முத்த மருளே
கைலைநா யகர்பரவு கௌரிநா யகியுனது
கனிவாயின் முத்த மருளே. 42

பொன்னிலவு செஞ்சடைப் புதுமதி யணிந்தரன்
பொற்றாலி சூட்டு மந்நாட்
புவனங்க ளத்தனையு மிருநாழி நெல்லிற்
புரக்கின்ற வன்னை நின்பால்
அன்னமலை யவையெலாந் தன்னக டடக்கியும்
அழிபசிகொள் குண்டோதரன்
அலறிடவு நளிநாணி யமலர்தரு செஞ்சோற்றி
னகழியி னளித்த வதனால்
மன்னுகே தீச்சரம் பணியவரு மன்பர்பசி
வாடாது காக்க வன்ன
மாமடம் பலகொண்டு வளரரு ளுளங்கொண்ட
மாதேவி மலயமுதல்வீ
கன்னல்வயல் சூழ்திருக் கேதீச் சரத்தன்னை
கனிவாயின் முத்த மருளே
கைலைநா யகர்பரவு கௌரிநா யகியுனது
கனிவாயின் முத்த மருளே. 43

அன்றுகா ளத்தியினி லையனொரு வேடனிடு
மவியூ னுகந்து தின்றான்
அலைவீசு கடலினிடை வலைவீசி னான் கூலி
யாளாகி மண்சுமந்தான்
சென்றுபலி கொள்ளநிர் வாணியாய்த் தெருவெலாம்
தேடித் திரிந்தலைந்தான்
தேனார் மொழிப்பரவை பாலிர விடைத்தூது
சென்று சென்றலைதலுற்றான்
பன்றியி னுருக்கொண்டு பாலூட்டி னான் விறற்
பார்த்தனார் வில்லினடிகள்
பட்டுநின் றானிவைகள் பரிபவ மெனக்கொளாப்
பாலிருந் ததர முத்தம்
கன்றை நாடிய புனிற்றாவினிற் றருமம்மை
கனிவாயின் முத்த மருளே
கைலைநா யகர்பரவு கௌரிநா யகியுனது
கனிவாயின் முத்த மருளே. 44

காணுங்க ணறியாது கருதுமன முணராது
காட்டுவா னின்றி யதனாற்
காயமுட னுள்ளங் கலந்துகாட் டிடுஞான
கதிரவ னெனத் திகழ்ந்து
மாணுற வுயிர்த்தொகை மயக்கறுத் தரனடியில்
மருவிடப் புரிய வருளால்
மன்னுபா லாவியின் மறுகணைந் தன்பர்சிவ
வாழ்வுபெற் றுய்யவேண்டிப்
பூணுறு சொரூபநிலை நீங்கித் தடத்தமாய்ப்
புகலுமரு ளுருவு கொண்டு
பொன்மேனி கொண்டுமெய் யன்பரிற் றயைகொண்டு
பொற்புறு மிளங்குழவியாய்க்
காணுற்ற மலைவல்லி கௌமாரி முருகுதவழ்
கனிவாயின் முத்த மருளே
கைலைநா யகர்பரவு கௌரிநா யகியுனது
கனிவாயின் முத்த மருளே. 45

**வேறு**

மழைக்கார் கடுக்க மதம்பொழியும்
மணிவர் ரணத்து வதனமுடை
மைந்தன் றனக்குஞ் சரவணத்தில்
வந்த குழந்தை வேலவற்கும்
முளைக்கால் வயலிற் சூல்நந்து
முழங்குங் காழி வந்துதிரு
முலைப்பால் வேண்டி யமுதுபெற்ற
முருகார் மலர்வாய்க் கவுணியற்கும்
அழைக்கா துதவுங் கனிவாயின்
அருளார் முத்த மின்றுதிரு
வடியே சரணென் றலறிநிற்கு
மடியேம் பெறநின் னருளுண்டோ?
கழைக்கா மனுக்கு மருளன்னை
கனிவாய் முத்த மளித்தருளே
கெளரித் தாயே யருளொழுகுங்
கனிவாய் முத்த மளித்தருளே. 46

கயிலை யெடுக்க நெரிந்துமறைக்
கானம் பாடி யம்மேநின்
கருணைப் பெருக்கால் அருள்பெற்ற
கடல்சூழ் இலங்கை யிராவணனார்
மயிலைப் பொருவு மென்சாயல்
மனைமண் டோத ரிக்குமருள்
வண்மை கண்டுன் னடியிணைகள்
வாழ்த்தி வணங்கி மலரிடுவோம்
அயிலைப் புறங்கண் டருளொழுகு
மணிநேத் திரத்தாய், அன்றரனார்
ஆலங் குடித்த போதுகனி
யதர முத்த மருளாயேல்
கயிலைக் கிறையைக் காப்பவரார்?
கனிவாய் முத்த மளித்தருளே
கெளரித்தாயே அருளொழுகுங்
கனிவாய் முத்த மளித்தருளே. 47

**வேறு**

கருவாயுதித்து விளைபோக முண்டு
களியால் மயங்கி யுனதாள்
கருதா துனன்ப ரொடுமே விடாது
கவிபாடி யுள்ள முருகிப்
பெருகார் வமோடு பணியாது நின்ற
பெருமூட மேமை யருளாற்
பிரியா துணின்று பெருவாழ்வு தந்து
பிரசங் கொழித்து மலரு
மிருபாத நீழல் தருமம்மை யெம்மை
யிடரான வொன்று நலியர்(து)
இனிவாழ்வி லன்பரொடு கூடியுன்ற
னிருபாத போது பரவும்
தெருளான தந்து சிவகாமி யம்மை
திருவாயின் முத்த மருளே
சிவனா ரிடத்தி லமர்கௌரி யம்மை
திருவாயின் முத்த மருளே. 48

கஞ்சத் தளத்தி லமர்மாத ரோடு
ககனத் தலத்து மடவார்
கமலப் பதத்து மலர் இட்டுநின்று
கரமுச்சி கொண்டு பணிய
மஞ்சிற் பொலிந்த குழலா ளிலங்கை
மண்டோ தரிக்கு மருளி
மாதோட்ட மன்னு கேதீச் சரத்தில்
வந்தித் துநிற்கு மடியார்
நெஞ்சத் திருந்து களியூட்டு மம்மை
நிலமர்தி பூத வுருவாய்
நிலைகொண்ட சத்தி யருள்கொண்டு மண்ணில்
நிலவும் குழந்தை வடிவாய்ச்
செஞ்சொற்கள் கொண்ட மழலைக் கொழுந்து
திருவாயின் முத்த மருளே
சிவனா ரிடத்தி லமர்கௌரியம்மை
திருவாயின் முத்த மருளே. 49

ஆவாவிதென்னை கொடுநஞ்ச மெம்மை
யலறத் துரப்ப தடியேம்
அழிகின்றமைய வரனே யடிக்க
ணபயம் மடிக்க ணபயம்
சேவேறிவந்து தெறுநஞ்சி னின்று
சிறியேமை யாளு கடிதே
சிவனே யென்றோல மிடநஞ்சையுண்டு
தேவர்க்கிரங்கி யவரைக்
கூவித்தெருட்டி யபயங் கொடுத்த
குழகன் னிடத்தி லருளாய்க்
கோலங்கொ ளம்மை கேதீச் சரத்திற்
குடிகொண்ட தேவி யடிகள்
சேவித்துநிற்கு மடியேமை யாண்டு
திருவாயின் முத்த மருளே
சிவனா ரிடத்தி லமர்கௌரி யம்மை
திருவாயின் முத்த மருளே. 50

**6. வருகைப் பருவம்**

தெய்வத் தமிழி னுடன்பிறந்த
தென்கா லசைப்ப விறாலுடைந்து
சிந்தச் சிந்த மழையென்று
தேறாக் கான மயில்க ளெல்லாம்
பையக் கலாபம் விரித்துநடம்
பயில்தண் டலைகள் சூழ்ந்துபரம்
பரனின் கருணை யெனப்பரந்த
பாலாவி யின்சார் பயில்கோவில்
வையஞ் சிறக்க விடங்கொண்ட
மாசில் மணியே கேதீசர்
வாமம் பகிர்ந்த மறைக்கொழுந்தே
மழலைக் கிளியே வருகவே
ஐயன் கருணை யுருவான
அன்னை வருக வருகவே
அருளார் கௌரி யடிசூட்டி
யாள வருக வருகவே. 51

காழி யுதித்த சிவஞானக்
கன்றுங் கமலை நம்பியுமுன்
கனிந்து கனிந்தன் றமுதூறக்
கழறும் பாடல் கேட்டருளும்
நாளன் றிதுவெம் புன்பாடல்
நயத்தல் கடனே நாகமணி
நஞ்சுண் டிருண்ட கண்டனிடம்
நாடிப் படரும் பூங்கொடியே
வாழி கேதீச் சரமுடைய
மயிலே யுததி வருமமுதே
வளஞ்சேர் பாலா வித்துறையின்
மானே வருக மலரடிதந்
தாளும் பழைய வடியருடன்
அடியேங் கூட வருள்கண்டாய்
அருளார் கௌரி யடிசூட்டி
யாள வருக வருகவே. 52

தேனார் சோலை மாதோட்டத்
திருக்கே தீச்ச ரத்துறையுந்
தெய்வப் பிடியே! பசுங்கிளியே!
சிவனார் முக்கண் களிக்கவரு
மானே! யிமவான் மடமகளே!
மறைநான் களித்த மயிற்பெடையே!
வையம் போற்றும் பாலாவி
மருங்கில் வளரும் பூங்கொடியே!
தேனாய்க் கனியாய் இன்னமுதாய்த்
தெளிந்த அன்பர் மனக்கோயிற்
றெய்வச் சுடரே வருகவிளந்
தென்றல் கமழுந் திருவீதி
ஆனே றுயர்த்த கொடியாட
அன்னை வருக வருகவே
அருளார் கௌரி யடிசூட்டி
யாள வருக வருகவே. 53

மத்தங் கமழுந் திருமுடியில்
வளரும் பிறையை வகிர்ந்துநுதல்
மருவப் பதித்து நகைபூப்ப
மதியற்றிருந்த மறியேந்தும்
அத்தர் அணைத்தங் கயலிருத்தி
அம்மே முகமா நிறைமதியுண்(டு)
அளித்தி யந்தக் குறைமதியென்
றாடல் காட்ட அவருடனே
முத்தங் கொடுத்து விளையாடும்
முதல்வீ வருக நான்குமறை
முதலே வருக இருசரண
முகையார் கமல மெம்மகத்தும்
அத்தன் கேதீச் சரத்தினும்வைத்
தாட வருக வருகவே
அருளார் கௌரி யடிசூட்டி
யாள வருக வருகவே. 54

செம்பஞ் சுனது சிற்றடிகள்
தீட்ட வருக தேன்மழலை
தெவிட்ட வருக இருகரங்கள்
தீண்ட வருக பிறைநுதலில்
பைம்பொற் றிலக மிடவருக
பானல் விழிக்கு மையெழுதிப்
பார்க்க வருக பாலாவிப்
பாங்கர் பசுங்கா வலர்ந்தநறை
கொங்குண் மலர்கள் பறித்துனது
குழலிற் சூட்ட வருகஅடி
கொஞ்ச வருக அண்டமெலாம்
குலவுங் கழங்காய் எடுத்தருளால்
அங்கு குழுமு மாயமுட
னாட வருக வருகவே
அருளார் கௌரி யடிசூட்டி
யாள வருக வருகவே. 55

மலயத் துவசன் மகளாகி
வண்ட லாடி முடிசூடி
வளருங் கன்னித் தமிழ்புரந்து
மதுரை யாண்ட மாதரசே
சிலையொன் றேந்திக் குறட்பூத்த்
தெய்வப் படைகள் சாய்த்துவெயில்
செய்ய வனல்தண் ணிலவுமிழுந்
தேவு முக்கண் ணேறுபட
முலையொன் றிழந்து வலியிழந்து
முன்னைத் தருக்கு மிழந்துகனி
முத்தங் கொடுத்தும் முடிகொடுத்தும்
மூவா முதல்வற் காளாகும்
அலையொன் றியகே தீச்சரத்தி
னணங்கே வருக வருகவே
அருளார் கௌரி யடிசூட்டி
யாள வருக வருகவே. 56

கருணை சுரந்து பொழியவரு
காளமுகிலே! கறைநீல
கண்டன் மகிழ்ந்து சுவைத்திடுசெங்
கரும்பே! கயிலைக் கொளியூட்டும்
தருண மணியே! கடலமுதே!
சயிலத்திருந்த சுவைத்தேனே!
தருவிற் பழுத்த நறுங்கனியே!
தளிர்மென் பதங்களெடுத்தாட
வருக! வருக! வெனவேத்தி
மலரிட் டுன்சீ றடிபரவும்
வண்ண மகளி ருடனாட
மறியுந் திரைநீர் பாலாவி
அருகு வருக! அன்பர்துய
ரகற்ற வருக வருகவே
அருளார் கௌரி யடிசூட்டி
யாள வருக வருகவே. 57

செக்கச் சிவந்த முகையவிழச்
சேல்கள் வெடிப்பச் சிவனடியார்
திருவா சகத்தி னிசைபாடிச்
சென்று சென்று தீர்த்திகையிற்
புக்கு முழுகி நூற்றெட்டுப்
பொன்னார் கலசம் பூரித்துப்
புலன்கள் ஒடுக்கி மகாலிங்கப்
புனிதனார்க்கு நீராட்டும்
மைக்கண் டத்தர் அருளென்ன
வாரிப் பெருகும் பாலாவி
மறுகிற் கைலை மகிழ்நருடன்
வாமம் பகிர்ந்த மடப்பிடியே
அக்கம் புனையு மன்பரகத்
தம்மை வருக வருகவே
அருளார் கௌரி யடிசூட்டி
யாள வருக வருகவே. 58

சந்தார் பொதியத் தவமுனிக்குத்
தமிழ்தேர் வுறவன் றுரைத்தருளித்
தாதைக் கோதி மறைப்பொருளைச்
சயிலத் தொடுசூர் தடிந்தவயிற்
செந்தூர் முருகன் றனையளித்த
தேவீ வருக மலர்ப்பொழில்சூழ்
திருக்கே தீச்ச ரத்தமலன்
செம்மார் பகத்து வடுப்படுத்த
பந்தார் முலையி னமுதூட்டிப்
பலகோ டியவா முயிர்க்கூட்டம்
பாச மகன்று சிவபோகம்
பயிலப் புரக்கும் பராபரையே!
அந்தா மரையி னணங்கினரோ
டாட வருக வருகவே
அருளார் கௌரி யடிசூட்டி
யாள வருக வருகவே. 59

விழுந்தார் வத்தி னொடுபணிந்து
விம்மி விம்மி விழிபொழிநீர்
வெள்ளம் பெருகி வெண்ணீற்றின்
மேனி நனைப்ப வியன்கங்கைக்
கொழுந்தார் கொன்றை மதிசூடுங்
குழக னோடு மமர்நினது
கோயில் வலம்வந் துருகிமனங்
குழைந்து குழைந்து தமிழ்பாடித்
தொழுந்தா ளன்ப ருடன்கூடித்
துரியங் கடந்த சிவபோகந்
துய்த்து நினைப்பு மறப்புமிலாச்
சுகவா னந்த நிலைவேண்டி
அழும்பா லரையா தரிக்கவருள்
அன்னை வருக வருகவே
அருளார் கௌரி யடிசூட்டி
யாள வருக வருகவே. 60

**7. அம்புலிப் பருவம்**

மதியமே யஞ்சனீ வாவாவு னங்கமுள
மறுவோடு க்ஷயமு மினிநீ
மாற்றலாந் தேயாத வாழ்வடைய லாமிரவி
மானவொளி பெற்று லவலாம்
ததிமத் துடைந்தெனச் சஞ்சல முறாதுவான்
தனிலாட்சி பெற்று லவலாம்
சாருமடி யார்களங் கத்திலுறு மின்னல்கள்
தவிர்த்திடக் கருணை கொண்டு
பதியெலாம் புகழ்திருக் கேதீச் சரத்தினிற்
பரமனொரு பாதி கொண்டு
பாலாவி மறுகினிற் பயிலுநடை கொண்டுலவு
பாவையுட னாட வாராய்
அதுகொண்டு நோயகலு மலைவுண்டு திரியாம
லம்புலீ யாட வாவே
அருமறைக ளறிவரிய அன்னைகௌ ரிக்கொடியொ
டம்புலீ யாட வாவே 61

பாகத் திருந்தபர மேசர்செஞ் சடைமீது
பயிலுநின் னழகு கண்டோ!
பண்டுசிறு விதியிட்ட சாபந் தொலைக்கவோ!
பாந்தளுக் கஞ்சல் கண்டோ!
ஆகத் துறும்பிணி யகற்றவோ மால்துயிலு
மலையாழி வந்த வுறவோ!
அறிகிலே மம்புலீ யனைகௌரி நாயகி
யழைக்கிறா ளாட வாவே
பூகத்து மலர்சிந்த வயல்வாளை தாவிப்
புடைக்குநீர் வளமி குந்து
பொங்குபா லாவியின் புடைகோயில் கொண்டவெம்
புனிதர்கே தீசர் பாகம்
ஆகப் பதம்பணியு மடியருக் கருளம்மை
யம்பிகையொ டாட வாவே
அருமறைக ளறிவரிய அன்னைகௌ ரிக்கொடியொ
டம்புலீ யாட வாவே 62

வானகத் துலவினும் வளையரா வுண்டிடும்
மழைமுகில் மறைக்கு மதனன்
வைகுகுடை யாயிடின் மறைமுத னுதற்கணெரி
மருவிடும் வண்ண மடவார்
பானல்விழி முகமுறிற் பருவம் பெயர்ந்திடப்
படரொளி யழிந்து படுவாய்
பாலாவி மறுகினிற் பயில்வண்ட லாடிடப்
பரைகௌரி கூவி நின்றாள்
தேனுண்டு வண்டுசெவ் வழியாட மயிலாடு
தேர்வீதி சூழ்ந்த பூங்காச்
செறிநிழ லரம்பையரொ டைந்தொழிலி னாடல்புரி
தெய்வக் குழந்தை யுடனே
ஆனந்த மாகவிளை யாடலாம் பாடலாம்
அம்புலீ யாட வாவே
அருமறைக ளறிவரிய வன்னைகௌ ரிக்கொடியொ
டம்புலீ யாட வாவே. 63

முத்தெறி திரைக்கடல் முளைத்தெழுந் தொளிவீசு
முழுமதீ குதலை மொழியால்
முளரிக் கரங்கொண்டு வாவா வெனச்சிறார்
முடிவறா நாள ழைத்துக்
கத்துமொழி கேளாது ககனத் துலாவுவது
கடனன்று காசி னியுள
கதியற்ற பாலரென வெண்ணிடேல்: கௌரியிவள்
கைலாயர் பன்னி கண்டாய்!
பத்தருக் கருளும் பராபரை சினந்திடிற்
பகிரண்ட கூட மெல்லாம்
பஸ்மீ கரப்படும் பரைசிறிது வெகுளுமுன்
பாலாவி நதிம ருங்கே
அத்தனரு ளுருவாய அம்மையுட னயலமர்ந்
தம்புலீ யாட வாவே
அருமறைக ளறிவரிய வன்னைகௌ ரிக்கொடியொ
டம்புலீ யாட வாவே. 64

கலையால் நிறைந்திட்ட கண்ணும்வா ளரவமது
கௌவிடக் காத்தி ருக்குங்
கதிரவ னுதிக்கக் கரந்திடும் வாளொளி
கவின்பெறக் கருதி மேரு
மலையால் வலம்வந்து வந்தலைந் தாலுமுன்
மாசு சிறித கலாதுகாண்
மணிகண்டர் சடையிடை மறைந்திருந் தெக்காலம்
வாழ்வு பெற வெண்ணி நின்றாய்?
தலையால் நடந்தாலு முன்குறைகள் தீராது
தண்மதீ கேதீச் சரத்
தலமமர்ந் தன்பரிடர் சகலமும் போக்கியருள்
சைலமட மங்கை யுடனே
அலையால் வளம்பெற்ற பாலாவி நதிமருங்
கம்புலீ யாட வாவே
அருமறைக ளறிவரிய வன்னைகௌ ரிக்கொடியொ
டம்புலீ யாட வாவே. 65

**வேறு**

உலவாக் கலைகொ ளுவாக்கடொறு
முண்டுண் டுமிழு முரகமினி
உன்னை வணங்கப் பெறுவைதளி
ரொத்த கரங்கொண் டுடனாட
மலர்வாய் திறந்திங் கழைக்கின்றாள்,
வாவா வாவம் புலியேநீ
மதியென் றொருபேர் பெற்றனையே
மதியுண் டாயின் வாவாவா
சிலையிற் கணையிற் கைகலைவரு
தெய்வக் கணங்கள் புறங்கண்ட
தேவி கௌரி யுடனாடுஞ்
செவ்வி கிடைத்தல் சிறிதேர்நீர்
அலையிற் பொலியும் பாலாவி
அழகார் மருங்கி லாடிடவா
அருளார் கௌரி நாயகியொ
டாட வருக அம்புலியே. 67

முந்நீர்ப் புணரி யொளித்தெழுந்த
முழுமா மதியே வாவாவா
முக்கட் பிரானின் முடிவளரு
மொய்ம்பின் றருக்கோ கலைகுறையும்
அந்நாட் பெற்ற சாபமதை
அயர்த்தி கொல்லோ ஆடலுகந்
தம்மை கௌரி யழைக்கின்றா
ளாட வாவுன் னங்கமுள
பின்ன மகலுங் கறையகலும்
பேணு மடியார் உடற்பிணியும்
பிறவிப் பிணியு மாற்றவலை
பிறழப் பிறழும் பாலாவி
அன்னம் பயில்தண் டலைநீழ
லாட வருக அம்புலியே
அருளார் கௌரி நாயகியொ
டாட வருக அம்புலியே. 68

**வேறு**

முன்னமோ ரம்புயன் மூடிகாண வெண்ணி யொரு
மோட்டெகின மாகி மேல்போய்
மூதண்ட கூடங்க ளெல்லாங் கடந்தும்
முரண்வலி யழிந்து காணா
அன்னமுடி யிற்றவழ்தி யம்புலீ யதுகண்
டழைக்கிறா ளம்மை வாவா
ஐந்தொழிலி னாடல்புரி யகிலாண்ட நாயகியொ
டம்புலீ யாட வாவா
செந்நெல்வயல் சூழ்திருக் கேதீச் சரத்தினிற்
சிவசக்தி கௌரி யுடனே
தேனமரு நாண்மலர்கள் கொய்துவிளை யாடலாஞ்
சீறுமர வணுகி டா(து)
அன்னைமுடி யுந்தவழ்ந் தாடலாம் பாலாவி
யாறும் படிந்தா டலாம்
அமரர்முனி வரர்பரவு கமலவடி போற்றலா
மம்புலீ யாட வாவே. 69

வானகத் தாறுகொள லாலிரவி லூறுதலால்
மானிடங் கொண்டு லவலால்
மன்னுபல கணமும் மருங்கணை தலாலந்தி
வானத் தொளிர்ந்து வரலால்
நானிலம் போற்றலால் நவை யுறுந் தக்கனார்
நன்மருக னாகி யுறலால்
நாண்மதீ நம்மிறையை யொப்பையோ வென்றறிய
நாயகி வரக் கூவினாள்
பானத்த மூர்துறைப் பாலாவி மறுகினிற்
பைந்தரு நிழற்க ணிமையோர்
பாவைய ரொடைந்தொழிலி னாடல்புரி பரையோடும்
பான்மதீ யாட வாவா
ஆனத்தி யூரம்மை யயலமர்ந் தருள்பெறுவை
அம்புலீ யாட வாவா
அமரர்முனி வரர்பரவு கமலவடி போற்றலா
மம்புலீ யாட வாவே. 70

## 8. அம்மானைப் பருவம்

கானாறு கஞ்சப் பொகுட்டுறு பிதாமகன்
கழறுமறை யோதை யுடனே
கமுமல முதித்தமுத் தமிழ்விரக ராதியோர்
கண்டதிரு முறையோ தையும்
தேனோடு பால்கலந் தென்னமெய் யன்பர்செவி
தித்திக்க நித்த மோங்கும்
திருவீதி சூழுநீள் மதில்வாயில் வானளவு
திகழ்கோ புரங்க ளோங்க
வானாடர் காணொணா மறைமுத லிருந்துவர
மருளுகே தீச்ச ரத்தில்
வாமபா கம்பகிர்ந் தன்பருக் கருளுமலை
வல்லியா மளைவ ராகி
ஆனாத அருளினொடு பாலாவி மறுகதனில்
அம்மானை யாடி யருளே
அரிபிரம ரறிவரிய வமலரிட மமர்கௌரி
யம்மானை யாடி யருளே. 71

கஞ்சமலர் மீதினுங் கருதுமறை முடிவினுங்
கைகுவித் துருகு மன்பர்
கண்ணினும் மற்றவர் கருத்தினுங் கேதீசர்
காணநட மாடு மடியெம்
நெஞ்சினு மிதித்தாட வல்லையோ மல்லல்வள
நீடுகே தீச்ச ரத்தில்
நீணாக மோரிரண் டின்றுதங் கிழமையால்
நிதமடி பராவு பரையே
தஞ்சமுன் னடியெனத் தாழ்ந்துருகு மன்பர்தஞ்
சஞ்சலம் போக்கி மேலாம்
சகலபோ கங்களுஞ் சிவபதமு மவர்பெறத்
தந்தருளு முமைசங் கரீ
அஞ்சலென வன்பருக் கபயங் கொடுத்துநீ
அம்மானை யாடி யருளே
அரிபிரம ரறிவரிய அமலரிடம் அமர்கௌரி
அம்மானை யாடி யாளே. 72

பண்ணாறு செந்தமிழ்ப் பாடலா லன்னைநின்
பாதபத் மங்கள் பரவிப்
பல்லூழி யர்ச்சித்த பலனல்ல வோதேவர்
பதியாகி யிந்தி ரன்றான்
விண்ணா டளிப்பதும் வேதன் படைப்பதும்
விண்டுதிரு மகளை யெய்தி
விரிபடப் பாயற் கிடந்துலகு காப்பதும்
மெல்லிதழ்ச் சிற்ற டியெனுங்
கண்ணாறு கமலங் கருத்திடை யிருத்திக்
கசிந்துகவி பாட வருள்தா
காரணி குழற்கமலை பூரணி புராந்தகீ
கௌமாரி மாதங் கியே
அண்ணாறு சாலிவயல் அயல்சூழு மாந்தைதனி
லம்மானை யாடி யருளே
அரிபிரம ரறிவரிய அமலரிடம் அமர்கௌரி
அம்மானை யாடி யருளே. 73

கார்கொண்ட கந்தரக் கனல்கொண்ட செங்கரக்
கதிர்மதிய மங்கி கொண்ட
கண்கொண்ட முடியிலொரு பெண்கொண்ட மும்மதக்
கரியுரிவை போர்வை கொண்ட
போர்கொண்ட மூவிலைச் சூலவேல் கைக்கொண்ட
புரிசடைப் புராரி சிவனார்
புண்கொண்ட மேனியொரு புடைகொண்டு பல்கோடி
புவனங்கள் கொண்ட வுயிர்கள்
பேர்கொண்ட தனுகரண புவனபோ கங்களாம்
பேறுகொண் டுய்ய வுன்னிப்
பேரரு ளுளங்கொண்ட பெரியபெரு மாட்டியெம்
பிழைகொண்டு தாழா துவந்(து)
ஆர்கொண்ட முடிமீதி லணிகொண்ட பிறையணிந்
தம்மானை யாடி மருளே
அரிபிரம ரறிவரிய அமலரிடம் அமர்கௌரி
அம்மானை யாடி யருளே. 74

வஞ்சரைம் புலவேடர் மாயவலை யிற்சிக்கி
வாழுநெறி யறிவு றாது
வல்வினை புரிந்துதனை யறியாது நின்கமல
மலரடி மனங்கொ ளாது
சஞ்சலம் கொண்டுலவு முயிர்களிற் றயைகொண்டு
சற்குருவி னுருவு கொண்டு
தாணிழ லிருத்தியருள் வாழ்வளித் தருளம்மை
சங்கரி பரா சக்திசெங்
கஞ்சமென் மலரடிக் கௌமாரி மாதங்கி
காமாட்சி கங்கா தரீ
காளகந் தரிநீலி மாலவன் தங்கைசிவ
காமிவா ராகி யுமையே
அஞ்சலென் றபயங் கொடுத்தருளு முலகன்னை
அம்மானை யாடி யருளே
அரிபிரம றறிவரிய அமலரிட மமர் கௌரி
அம்மானை யாடி யருளே. 75

தஞ்சமுன் னடியென்று சரணடையு மன்பர்தஞ்
சஞ்சித மலங்க ணீக்கிச்
சச்சிதா னந்தநிலை சாரவைத் திடுபாத
தாமரை மறப்பின் றியெம்
நெஞ்சிகத் திப்புவன தத்துவா திகளெலா
நின்னருளி னான கற்றி
நிர்க்குணா னந்தபர வெளியிலே நானற்ற
நின்மல சுகந்தரு வையோ
பஞ்சியலு மெல்லடிப் பரிபுர மிழற்றஒலி
பாலாவி மறுகி லாடும்
பாவையே வள்ளிகுஞ் சரிமருவு குமரனைப்
பாலனென வீன்ற பரையே
அஞ்சலென வன்பருக் கபயங் கொடுத்துநீ
அம்மானை யாடி யருளே
அரிபிரம றறிவரிய அமலாட மமர்சௌரி
அம்மானை யாடி யருளே. 76

கொந்தவிழு மென்மலர்க் கூந்தற் பெதும்பையர்கள்
கோலமிட் டதனி னாப்பண்
கும்பமிட் டலர்தூவி மணநாறு தூபமொடு
கோவினெய்த் தீப மிட்டுப்
பைந்தளிர்ப் பதம்இட்டு வந்தனை புரிந்திடப்
பனிமலர் கரங்க ளிட்டுப்
பாலாவி மறுகதனில் ஆடவரு கென்றுபல
பாடிப் பரிந்து நிற்கச்
சிந்தைசெய் யாதிரு திருச்செவி மடாதுநீ
செயலற் றிருத்தல் முறையோ
தேவிசங் கரிநீலி மாதவன் சிறுதங்கை
சிவகாமி திரியம் பகீ
அந்தமென் மகளிரொடு மாடரங் கதனில்வந்
தம்மானை யாடி யருளே
அரிபிரம ரறிவரிய வமலரிட மமர்கௌரி
அம்மானை யாடி யருளே. 77

தேனாறு கஞ்சத் தளத்தினும் மெய்யன்பா
சிந்தைத் தளத்து மகிடன்
சிரமீது மிமமேரு வரைமீது மலருமுன்
சீறடி செழுங்க ழனியிற்
பானாறு தீர்த்திகைப் பாலாவி மறுகினிற்
பந்தாடு மங்கை யரொடும்
பாடலினொ டம்மானை யாடிற் பனிக்குமோ?
பங்கயச் செங்கை நோமோ?
பூநாறு சுரிகுழற் பொன்னாடர் மகளிரொடு
பொங்கு பாலாவி தீரம்
புரியுமைந் தொழிலாய வம்மானை யாடவா
பூரணி புராந்த கீவெள்
ளானே றுயர்த்தபரை யலகிலுயி ருய்யநீ
யம்மானை யாடி யருளே
அரிபிரம ரறிவரிய வமலரிட மமர்கௌரி
அம்மானை யாடி யருளே 78

வெறிநாறு பூங்குழல் விரிந்தாட வாணுதலில்
மின்னுசிந் தூர மாட
வேலொத்த செங்கயல் விழிக்கடைகள் அருளமுத
வெள்ளம் பெருக்கி யாட
மறிநாறு செங்கரம் வனசமலர் கொண்டாட
வதனசந் திரனு மாட
மறைவான நூலிடை மருங்கினி லசைந்தாட
மணிநூ புரங்க ளலறும்
நெறிநாறு சிற்றடி யெடுத்தன்பர் நெஞ்சத்து
நின்றாடு சாமுண் டியே
நின்னடிகள் பரவாத வெம்மனப் பாறையினும்
நித்தநின் றாட வருள்வாய்
அறியாது மறைதேடு மன்னைகே தீச்சரத்
தம்மானை யாடி யருளே
அரிபிரம ரறிவரிய அமலரிட மமர்கௌரி
அம்மானை யாடி யருளே. 79

காருற்ற வாணவங் கன்மமா யாமலக்
கட்டினின் றெம்மை மீட்டுக்
கருணைநற வூறுமுன் கமலவடி கதியெனக்
கருதுமெய் யறிவு தந்து
சீருற்ற நின்னடியர் சேர்க்கைதந் தவரடிகள்
சேவிக்கு மன்பு தந்து
சிவபோக வாழ்வுதந் தடியேமை யாளவுந்
திருவுள்ள முண்டு கொல்லோ?
பேருற்ற வண்டகோ டிகளெலா மாக்கியவை
பேணிப் புரக்கு முமையே
பெரியநா யகிபரம னுருவநா யகியுயிர்கள்
பெற்றநா யகிபூ ரணி
ஆருற்ற செஞ்சடையி லழகுற்ற பிறையணிந்
தம்மானை யாடி யருளே
அரிபிரம ரறிவரிய அமலரிட மமர்கௌரி
அம்மானை யாடி யருளே. 80

## 09. நீராடற் பருவம்

மலர்த்தேங் கூந்தல் குலைந்தாட
வரிவண்டி னங்கள் கலைந்தாட
மகரக் குழைகள் அசைந்தாட
மணிமுத் தலங்கல் மருங்காடக்
கலைப்பூம் பட்டு நனைந்தாடக்
கலவைச் சாந்து கரைந்தாடக்
கலந்த வாய மொருங்குமிகு
களிகொண் டாடக் கரங்கூப்பித்
தலத்தே பரவும் தொண்டர் பதம்
தலைகொண் டாட வானுலகோர்
தண்கற் பகக்கா மலர்சொரிந்து
தாய்வாழ் கென்று தளிர்த்தாடப்
புலத்தே பாயும் பாலாவிப்
புதுநீ ராடி யருளுகவே
பொன்னம் பொருப்பில் வருகௌரி
புதுநீ ராடி யருளுகவே. 81

சால்பிற் சிறந்த கபிலனெனும்
தவமா முனியால் நீறாய
சகரர்க் காகப் பகீரதனாற்
றலத்து வந்த வான்கங்கை
ஏலப் பரந்து படியுமவர்க்
கிகமும் பரமும் கொடுத்தருளி
எண்ணிப் புலங்கள் உழுமள்ளர்
ஏற்ற மமைத்து வழிகோலக்
காலிற் பாய்ந்து வளம்பெருக்கிக்
கரையிற் றிரையால் முத்தொதுக்கிக்
கரவற் றுன்றன் னடியரவும்
கவிஞர்க் கம்மை நின்கருணை
போலப் பெருகும் பாலாவிப்
புதுநீ ராடி யருளுகவே
பொன்னம் பொருப்பில் வருகௌரி
புதுநீ ராடி யருளுகவே. 82

**வேறு**

தேனாறு கொன்றையுந் திங்களு மலர்ந்திடும்
செஞ்சடா டவியின் மருவித்
தேவகுல கோடுபா ருலகும் பணிந்திடச்
செம்மாந்து திரைகள் வீசும்
வானாறை யொத்துவரி வண்டுபண் பயில்சோலை
மாடுகொண் டாடு மன்பர்
மலமாயை கன்மமொடு முடனோ யகற்றிடும்
மாட்சியுங் கொண்டு கெண்டை
மீனாறு செஞ்சாலி வயல்பாயு மடைதோறும்
வெள்ளம் பெருக்கு மள்ளர்
வெறிநாறு செங்காவி களையப் பரந்துலவி
விளைவூட்டி யுயிர்கள் போற்றும்
பானாறு தெண்டிரை பரந்தாடு தீர்த்திகைப்
பாலாவி யாடி யருளே
பரமசிவ னருளுருவில் வருகௌரி பொங்குநீர்ப்
பர்லாவி யாடி யருளே. 83

மலயத் திருந்தகுறு முனியுண்ண லால்மாயம்
வல்லசூர் மாவி னுருவாய்
வலிகொண் டலைத்தலால் மதுரையுக் கிரவருமர்
வற்றவே லெறித லால்நின்
வலமுற்ற பரமனொரு வலைகொண்டு வீசலால்
மந்தர மதித்த லால்முன்
வசையுற்ற வுவர்வேலை யன்றுதெண் ணீர்மருவி
வந்தாடு மன்பர் மலநோய்
உலவப் புரிந்துனது கருணைப் பெருக்கென்ன
உலகிற் பரந்து பலகால்
ஊடேறி மாடுபைங் கூழன்னை யெனவளர்த்
தொப்பி லாநல் வளங்கள்
பலபெற்று வெண்டிரை நுரைத்துப் படர்ந்துலவு
பாலாவி யாடி யருளே
பரமசிவ னருளுருவில் வருகௌரி பொங்குநீர்ப்
பாலாவி யாடி யருளே. 84

வந்துநீர் புகுமன்பர் வல்வினை யிரிந்தென்ன
மதுகரமி ரைத்தெ ழும்ப
வாளைசேல் கயல்கெண்டை மாயைக ளகன்றோடு
மாறுநிலை யின்றி யோட
நந்துமுத லாயவுயிர் நாடிநிலை கெட்டலறி
நலியாணவ வத்தி னகல
நாதாந்த ரூபியுன் னறைமலர்ப் பதநெஞ்சி
னடமாடு மடியா ரெல்லாம்
அந்தியொடு சந்திதின மாடிக் களிக்கின்ற
அன்னசெயல் கண்டு கந்தே
அருள்புரிய அன்னைநின தயலுற்ற வன்பர்குழு
அரகரமு ழக்க வருளால்
பந்தமற நாமெலாம் பண்ணினேர் மொழியன்னை
பாலாவி யாடி யருளே
பரமசிவ னருளுருவில் வருகௌரி பொங்குநீர்ப்
பாலாவி யாடி யருளே. 85

மாடெலா மறையினொலி வயலெலா மள்ளரொலி
மடையெலாம் நீரி னொலியால்
வளமுற்ற மாதோட்ட மருவுதென் கயிலையாய்
மன்னு கேதீச ரத்து
வீடுற் றிடும்பெரு விருப்புற்று வந்துபணி
மெய்யன்பர் உள்ள வுடனோய்
வீட்டிப் பெருங்கருணை யாட்டிப் பதங்கள்தர
வெள்ளே றுகந்த வரனார்
ஆடலாற் செஞ்சடை யணிந்தபா கீரதியை
அங்குவைத் தென்ன நிலவி
அணிகொண்டு முத்தமெறி யலை காண்டு தெண்ணீ
ரகங்கொண்டுநிலை கொண்டுதன்
பாடெலாம் வழிகொண்ட பரவைநிகர் செந்துறைப்
பாலாவி யாடி யருளே
பரமசிவ னருளுருவில் வருகௌரி பொங்குநீர்ப்
பாலாவி யாடி யருளே. 86

அஞ்சிடேல் ஆடுதற் கன்னையிது கம்பைந்தி
யன்றுதென் மதுரை நகரை
அலைகொண் டழித்திடுது மெனவந்த வைகையன்
றையன்விட வங்கு பெருகி
விஞ்சலை புரண்டொழுகு கங்கையா றன்றுலகில்
மெய்ந்நெறியில் நின்று பணிவார்
வினையொழிந் துய்திபெற விடையேறு கேதீசர்
மேதினியில் வைத்த மென்னீர்
கொஞ்சலைப் பாலாவி குடையநின தாயமொடு
குறுகிமா மறுகில் வந்து
கூடிக் களித்தாடி மாடுற்ற தருநிழற்
கொண்டபே ரயர்வு போக்கிப்
பஞ்சிற் பொலிந்தநுரை திரைவீசு தண்டுறைப்
பாலாவி யாடி யருளே
பரமசிவ னருளுருவில் வருகௌரி பொங்குநீர்ப்
பாலாவி யாடி யருளே 87

**வேறு**

மதிநாற வுச்சி மணிநாக நாற்
மதுமத்த நாறு முடியார்
வலமாக நாலு மறைநாறு முந்தி
மலர்நாறு வெள்ளை விடைமேல்
துதிநாறு மன்பர் சுவைநாறு பாடல்
தொடர்வேத வோதையுடனே
சுரர்தூவு புக்ஷ்ப மழையூடு மன்னை
துணையாய வாய மருவ
நதிநாறு நீரு நறைநாற வந்து
நவைதீரு மன்பி னடியார்
நமவோதை யோடு பணிமாந்தை மேய
நகர்கேது பூசை புரியும்
பதிநாறு தீர மணிநாற வுந்து
பாலாவி யாடி யருளே
பரமேசர் கண்ணின் மணியான கௌரி
பாலாவி யாடி யருளே. 88

அலைமென் கரத்தி லமரம் புயத்தி
னலர்கண்ணி னீல மலரின்
அணிபுன் சிரிப்பி லமைமுத் தினத்தில்
அமர்பச்சை வண்ண வுருவின்
நிலைகொண் டபுள்ளி னொலிவாக் கிலன்னை
நினையொத்து நீடு மருள்போல்
நிலவிப் பரந்து பரைநீ யளித்த
நிறைபொற் கலத்தி னமுதம்
உலகுய்ய வுண்டு சிவஞான முற்ற
வுயர்சண்பை மன்ன னாரூர்
உறுசுந் தரன்ற னருளூறு பாடல்
ஒலிபொங்க வேத்து மடியார்
பலமுற்று நின்ற னருளார வாடு
பாலாவி யாடி யருளே
பரமேசர் கண்ணின் மணியான கௌரி
பாலாவி யாடி யருளே. 89

மழையென்ன வந்து வரைநின்றி ழிந்து
வலமாய்வ ளைந்து னடியார்
மனதிற்றெ ளிந்து மலர்சந் தொதுக்கி
வயலிற்பு குந்து பெருகி
விளைசெந்நெல் கன்னல் விரவிப்பு ரந்து
விதியோடு மாடு மடியார்
வினையான பந்த முடனோயி னோடு
விலகத்து ரந்து மலர்கா
விழிகின்ற தேனி னுடனொன்றி ஐயர்
எழுதச்சி றந்த தமிழ்போல்
இனிதாகி யுன்ற னடிபாடு மன்பர்
இதயத்தி லூறு மருள்போல்
பழகச்சுவைக்கு மிசைபோல வோடு
பாலாவி யாடி யருளே
பரமேசர் கண்ணின் மணியான கௌரி
பாலாவி யாடி யருளே. 90

## 10. ஊசற் பருவம்

நிகமா கமங்கால் விட்டமதாய்
நீள்சாத் திரங்கள் வடமாக
நெறியிற் பொலிந்த வுபநிடத
நேர்பொற் பலகை மீதிருத்தும்
தகவார் பிரண வப்பீடத்
தவிசி லமர்ந்து பல்லுயிர்க்கும்
சார்ந்த பிறவிப் பிணிநீக்கித்
தருநின் னருளாஞ் சிவபோகச்
சுகவாழ் வளிக்க வாள்கொண்டு
சோதி முகத்தின் னகைகொண்டு
சூழு மடியார் துதிகொண்டு
தூய வடங்கள் கரங்கொண்டே
அகிலார் கூந்தல் அவிழ்ந்தாட
ஆடியருள்க பொன்னூசல்
அணியார் கேதீச் சரக்கௌரி
ஆடி யருள்க பொன்னூசல். 91

செம்பொற் பதங்கள் சிலம்பாடச்
சிறுநுண்ணிடையிற் பட்டாடத்
திருமார் பலங்கல் முத்தாடச்
செந்தாமரைக்கண் ணருளாட
வம்பார் குழலின் வண்டாட
வாழ்த்து மடியார் மகிழ்ந்தாட
வரவும் போக்கும் புரிந்துழன்று
வாடும் உயிர்கள் வாழ்வுபெற
உம்பர் பொழிமா மலர்மாரி
உலகு புதைப்ப வோங்குமறை
யுடனின் றமிழி னொலிபொலிய
உள்ளத் தருள்கொண் டுவந்தேறி
அம்பொன் மணியார் பீடமமர்ந்
தாடியருள்க பொன்னூசல்
அருளார் கேதீச் சரக்கௌரி
ஆடி யருள்க பொன்னூசல். 92

**வேறு**

மலையி லுதித்திடு மரகத மெய்த்திரு
மாதே சொக்கேசர்
மதுரை புரந்திட மணிமுடி யன்றருள்
மானே தண்டமிழின்
வலையிடை பட்டொரு கவிவழி பின்செலு
மாலோ னுக்கிளைய
மயிலென வந்துயர் கயிலை மலைக்கிறை
வாமத் தமர்தேவீ
சிலைநுதல் கயல்விழி மதிமுக மரைமலர்
திருவடி யென்னவுளந்
தெரிய வுருக்கொளு மருள்வடிவாகிய
திருவே பாலாவி
அலைபொரு தழகுறு மணிகேதீச்சரத்
தாடுக பொன்னூசல்
அரகர வொலியொடு கௌரியிளங்கொடி
யாடுக பொன்னூசல். 93

அமல ரிடத்துறை அமுத மொழிக்குயி
லாடுக பொன்னூசல்
அருளுரு விற்றிகழ் பவளவிதழ்க்கொடி
யாடுக பொன்னூசல்
இமய மலைத்திரு விருவினை பற்றற
விணையடி தந்தருளும்
இறைவி பதம்பணி யடிய ருளங்கொளு
மெழிலி யயன்றிருமால்
அமயமி தென்றுநி னடிபர வத்திரு
நகையுட னூசலுகந்
தடிமலர் முன்னுற அருளொ டமர்ந்தினி
தாடுக பொன்னூசல்
அமரர் குலக்கொடி அருள்மலர் பொற்கொடி
ஆடுக பொன்னூசல்
அரகர வொலியொடு கௌரியிளங்கொடி
யாடுக பொன்னூசல். 94

**வேறு**

ஏமத் தியன்றுநவ மணிகுயிற் றித்திகழு
மெழிலூஞ்சல் இனிதினேறி
இசையின்வழி நடநவிலு மினவரம் பையர்முன்ன
ரேத்தித் துதிக்க வண்ணத்
தாமரைத் தவிசிலமர் திருவாணி யிருபுறந்
தாய்வாழ்க வென்ன வாழ்த்தித்
தமனிய வடங்கள்கை தொட்டாட்ட அன்பர்சிவ
சத்திசிவ சத்தி யென்ன
மாமறை பசுந்தமிழின் மங்கலம் பாடவருள்
மலர் வதனம் நகையரும்ப
மயிலொன்று பூங்கொடியில் வாவிநின்றாடல்போல்
மன்பதைக ளுய்யவருளால்
பூமலர்ச் சோலைமலி கேதீச் சரத்தம்மை
பொன்னூசல் ஆடி யருளே
பூங்தராய் வேந்தரழ முலைசுரந் தருள்கௌரி
பொன்னூசல் ஆடி யருளே 95

அருள்தந்து நின்னடி யகந்தந்து கருணைமலர்
அரியகட் கடைகள் தந்தே
அஞ்சே லெனத்திகழு மபயகர மலரினோ
டாசிமொழி தந்து சிந்தைத்
தெருள்தந்து செம்மனத் தெளிவுதந் தடிபரவு
செந்தமிழ்ப் புலமை தந்து
சீர்பரவு நின்னடியர் திருவடித் தொண்டாய
சேவையுந் தந்து கடுவுண்(டு)
இருள்தந்த கண்டத்தெ மிறையடிகள் மறவாத
இன்பநிலை தந்து கருவுற்
றினிவந்து பிறவாது நிணையடிப் போதினிடை
எய்துசிவ போகமார் மெய்ப்
பொருள்தந்து மெமையாளு கேதீச் சரத்தன்னை
பொன்னூசல் ஆடி யருளே
பூந்தராய் வேந்தரழ முலைசுரந் தருள்கௌரி
பொன்னூசல் ஆடி யருளே. 96

சிறையார் மடக்கிளிகள் திருவீதி தோறுமலர்
செறிகா விருந்து பூவை
செவிவாய் மடுக்கவுயர் சிவநாம மோதமயில்
சிவசத்தி யென்ன வகவ
மறையோடு செந்தமிழின் முறையோதை யுயர்வான
மண்டில நிறைந்து மலிய
மகவா னொடுஞ்சுரர்கள் மழைபோல வைந்தருவின்
மலர்மாரி பெய்துவாழ்த்தப்
பிறைவா ணுதற்கணிள மடமாதர் மங்கலம்
பொங்குசுடர் ஏந்தி யேத்தப்
பெய்கொண்ட லிடைதவழு மின்னலென வாவிப்
பிறங்குபொற் பலகையேறிப்
பொறையோடு நின்னருளி னிறைவோடு படரொளிப்
பொன்னூசல் ஆடி யருளே
பூந்தராய் வேந்தரழ முலைசுரந்தருள்கௌரி
பொன்னூசல் ஆடி யருளே. 97

நாமணக் குந்தெய்வ நாமங்க ளோதியருள்
நாடிப் பரிந்து னடியார்
நறைமணக்கும் வண்ண நாண்மலர்கள் கொய்துனது
நளினவடி தூஉய்வழுத்தத்
தேமணக் குஞ்சுவைச் செம்பொருள்க ளமைவுறச்
செந்தமிழ் கனிந்து சொட்டச்
சிவமணக் கும்பாடல் ஓதியே தெரிவையர்
செங்கரங் கொட்டி வாழ்த்த
மாயணத் தென்றலிள மாருத மதாய்வீச
மலர்முகங் கொண்டு ளத்தில்
மன்னுதிரு வருள்கொண்டு வந்துபணி யன்பர்சிவ
வாழ்வுகொண் டுய்யவுன்னிப்
பூமணக் கும்பொழிற் கேதீச் சரத்தம்மை
பொன்னூசல் ஆடி யருளே
பூந்தராய் வேந்தரழ முலைசுரந்தருள்கௌரி
பொன்னூசல் ஆடியருளே. 98

வையகத் துயிர்கள்சுப மங்களத் தொடுவாழ
மணியூச லாடி யருளே
வரமருள அருளுருவில் வருகௌரி யம்மையணி
மணியூச லாடி யருளே
ஐயரிட மாயமர்ந் தன்பர்பணி கண்டுவந்
தணியூச லாடி யருளே
அரகர முழக்கினொடு மடியர்புடை யடிபரவ
அணியூச லாடி யருளே
மெய்ம்மைபெறு சைவநெறி வேதநெறி வாழவென
மின்னூச லாடி யருளே
மெலலடிக் கீழன்பர் சிவபோக வாழ்வுபெற
மின்னூச லாடி யருளே
பொய்ந்நெறி யகன்றுயிர்கள் புனிதமுற வருளன்னை
பொன்னூச லாடியாளே
பூந்தராய் வேந்தரழ முலைசுரந் தருள்கௌரி
பொன்னூச லாடி யருளே. 99

திருமருவு கேதீச் சரம்வாழ வந்துபணி
சிவநெறிச் செல்வர்வாழத்
தெண்ணீர் நிறைந்துபொலி பாலாவி வாழத்
திருப்பணிகள் வாழவோங்கும்
அரனைந் தெழுத்தோடு மரியமறை யாகமம்
அணிகொள்திரு முறைகள்வாழ
ஆனினம்வாழமறை யந்தணர்கள் வாழமழை
யமைவுறப் பெய்துவாழ
மருவரும் சைவநெறி வாழநின் னடிபாடும்
வண்டமிழ்ப் புலவர்வாழ
வளரா ரியத்தினொடு தமிழ்வாழ வுயர்கலைகள்
மருவுகுரு குலமும் வாழப்
பொருவிடைக் கேதீச் சரத்தமரு நாதனொடு
பொன்னூச லாடி யருளே
பூந்தராய் வேந்தரழ முலைசுரந் தருள்கௌரி
பொன்னூச லாடி யருளே. 100

**ஊசற் பருவம் முற்றிற்று,**

# திருக்கேதீச்சர நாதர் வண்டு விடு தூது

**வித்துவான் சி.ஆறுமுகம்**

**1980**

## காப்பு

### வெண்பா

தொண்டர் துதிசெய்யத் தொல்லை வினைதீர்க்கும்
எண்டோளன் கேதீச் சரனடிக்கே - வண்டுவிடு
தூது கிளக்கத் துணைநின்று காக்குமே
ஆதி மகனைங் கரன்.

## நூல்
### கலிவெண்பா

#### மங்கல வாழ்த்து

உலகம் உவப்புறவே ஓங்கடியார் உள்ளம்
மலரும் சிவனடிகள் வாழ்க - நிலவு மெழில் 1

#### வண்டை விளித்தல்

பூம்பொழில்க ளுட்புகுந்து தேனுண்டு போந்துமே
ஆங்காலம் போக்கி யருங்கன்மம் - நீங்காதே
எண்ணும் பிறப்பெல்லாம் எய்தி யுழல்கின்ற
வண்ண மணிவண்டே வாசகரும் - நண்ணு 'கோத்
தும்பி' யென்று சொல்லிநின்ற தூய பரம்பரையோய் !
நம்பிக்கை கொண்டேன்யான் நண்ணிவா - நும்பெருமை
நன்கறிவேன் பண்டொருநாள் நற்றமிழர் சங்கத்துத்
'தன் பெருமை தானறியாச்' சங்கரனார் - அன்போடும்
'அஞ்சிறைத் தும்பி' யெனவழைத்த வான்புகழும்
எஞ்சிநிற்கும் இன்ப இனவண்டே! - நெஞ்சில்

## தூதுவிடும் ஏது

நிறைந்த கவலையெலாம் நீங்கவொரு செய்தி
அறைந்திடுவான் நின்னை அழைத்தேன் - பிறந்தபயன்
பெற்றிடவே யுன்னிப் 'பெருந்துறை' யென் றாசையால்
கற்றோர் அழைக்கக் கனைகடலும் - சுற்றிவரு
வங்கம் மலியுந்தொன் மாதோட்டம் மாவாழை
தெங்கும் பொலியுந் திருநகரின் - துங்கமுறு
கேதீச் சரமமர்ந்த நாதன் கவுரிமகிழ்
ஆதி பரமன் அணிதேரில் - வீதி
வலம்வருநற் காட்சி வணங்கி, விளங்கும்
நலம்சார் விசாகமெனும் நன்னாள் - மலங்கழுவும்
பாலாவித் தீர்த்தம் பழவடியா ரோடாடி
மாசகல வேத்தி மகிழவும் - சாலவிதி
இன்மையால் சோம்பல் இணைந்தே மறந்திருந்தேன்!
அன்னை யருகா வமர்ந்தருளும் - மன்னவனார்

## தூது வேண்டல்

மாண்பும் வடிவும் மனமாரக் கூறுவேன்
சேண்புலமும் செல்லவல்ல சீர்வண்டே - காண்பரிய
தண்டலைகள் சார்ந்தே தனித்தேனைச் சேர்த்திடுவாய்
அண்டர் மகிழண்ணல் அன்புத்தேன் - உண்பதற்கும்
நல்லதொரு வாய்ப்புனக்கு! நாயடியேன் கூறுதமிழ்ச்
சொல்லொன்று கொண்டின்று தூதாகி- எல்லையில்சீர்
அப்பன் அருட்சோதி ஆனேற்றன் மாலறியான்
எப்பாலும் அன்பர் இனிதேத்தச் - செப்பரிய
நாகமணி ஐந்தலையின் நீழலிலே நந்திதொழ
ஆகமந்தேர் அந்தணர்கள் அர்ச்சிக்கத் - தாகந்தீர்
தெய்வத் திருமுறையில் சீலரிசைப் பண்கேட்டு
ஐயனம்மை கூடி யகமகிழத் - துய்யசீர்த்
தொண்டர் பணிபுரியத் தோகை மயிலாட
எண்டிசையும் ஏத்த எழிலொழுகும் - கொண்டலுறை

ஐந்துநிலைக் கோபுரமும் அண்ணல் உருவென்றே
சிந்தை களிப்புறுவார் சேவிக்கச் - சந்ததமும்

மூவர் புகழ்ந்த முதற்பெருமை மட்டுமோ
தேவருமே போற்றுமெங்கள் சேக்கிழார் - பாவுடனே
சொற்றொடுக்க வல்லவர்கள் தோய்ந்துரைக்கும் நற்றமிழும்
அற்புதமாக் கேட்டுருகும் அப்பனுறை - பொற்புமிகு
மாந்தைப் பெயர்சேர் மணிநகரில் வண்ணமுறத்
தீந்தமிழின் ஓசை செறிந்திடவே - காந்திமிகு
தெங்கு திரள்சோலை சேர்கமுகும் ஆடிடவே
எங்குந்தே மாக்களும் ஏற்றமுறத் - தொங்கியெழும்
மந்தி யினங்கள் மருவும் மரச்சோலை
விந்தை மிகவொளிர்கே தீச்சரத்துக் - கந்தமலர்ப்
பூம்பொழில்கள் கண்டுதேன் உண்டுள்ளம் பூரித்தே
ஆம்வரையும் மேற்பறந்து அண்ணலொடு - சாம்பவியும்
நாணி நடந்துலவும் பாலாவி நற்கரைமேல்
கோணா தெழுந்தே குரல்காட்டித் - தாணுவென்றே
நாளும் அடியர் நயக்கும் பரஞ்சோதி
ஆளுமருட் பீடத்(து) அருகணைந்து - நீள
நினைந்து வணங்கியவன் நேசமலர்ப் பாதம்
'வனைந்து வனைந்தேத்தி' வாழ்த்தித் - தினந்தோறும்

வேதம் திருமுறைப்பண் வேட்டுருகும் வீறுடைய
நாதன் அருள்வேளை நற்செவியில் - பேதையேன்
சொற்றூது சொல்லித் தூய அருள் கொண்டே
மற்றங்கு தேனுண் மயக்கினால் - சற்றும் நீ
சாயாது வந்திடுதி சாரும் வழியுரைப்பேன்

## தூது செல் வழி

தாயாய் உலகமெலாம் தாங்குமவன் - ஓயாதே
உள்குவார் நெஞ்சும் உருக்கிப் பணிகொள்ளும்
வள்ளலணி நீற்றுள் மகிழ்ந்துருண்டு - துள்ளியெழக்
கன்னங் கரியவுடல் கௌரி நிறமானும்
மன்னுதிருக் கோலமுடன் மந்திரத்தை - உன்னியுன்னி
எங்குமிசை ரீங்காரம் ஓங்காரம் ஆதலுமே
பாங்காகத் தெற்கே பறந்து நீ - நீங்கா

நினைவுடனே எம்மான் நிலைத்திருக்கும் திக்கை
மன நிறைவு கொண்டுயர்ந்து வாழ்த்தி - நனிவிரைந்து
நன்கு பறந்திடுவாய், நாத மணிவண்டே
அன்போடும் வானமே ஆறாகத் - துன்பகற்றும்
கேரதீ வையனார் கேண்மைகொள் பின்னரொளி
ஆரும் அலையெறியும் ஆழிவரும் - சோராதே
நீலைய னார்துணையால் நீலக் கடல்கடந்து
ஞாலம் புகழும்கே தீச்சரனைச் - சாலநினை

வேகமுடன் செல்லும்நீ, வேளாளர் பூநகரி
தாகம் அகலத்தேன் தந்துதவும் - மாக
வழிச் செல்லும் போழ்துவரும் மாமரங்கள் பூத்தே
விழிக்கினிமை தந்தசையும் மென்கால் - அழைப்பதுபோல்
தோன்றும்நன் னீர்நிலைகள்! சொல்லரிய புல்வெளிகள்
ஆன்றபே ரானை யலைவெளிகள் - சான்றோர்
எனவிருக்கும் கொக்கினங்கள் இன்பமரை யாவும்
இனமினமா வாழும் எழில்கள்! - மனமுவக்கும்
காட்சிபல காண்பாய்! களைப்பேது? ஆதிமுதல்

### முழங்காவில் பிள்ளையார்

ஆட்சிபுரி பிள்ளையார் அன்புபொலி - மாட்சி
முழங்காவில் என்னும்பேர் முந்துபதி தோன்றும்!
பழங்காலப் பண்பு பலவும் - வழங்கிவரு
நன்னகரம் என்றெண்ணு நால்வாயின் பாதங்கள்
முன்னுநெஞ்சில்! மூர்த்தி முகங்கண்டு - மன்னடியார்
ஐங்கரனே! ஆனைமுகா! வா! கா! அரகரவென்(று)
எங்கணுமே ஏத்தியெழும் ஓங்காரப் - பொங்கொலியும்
கேட்டும் மகிழ்ந்தும் கிளரும் களைதீர
வேட்கும் மரக்கிளையின் மேற்றங்கு - நீட்டாதே!
தென்புதரும் வண்ணமென் செய்திசொலச் செல்லும்நீ
முன்போ டெழுந்தே முடுகிச்செல் - அன்புருவ

நல்லடியார் கூட்ட நடைகாண்பாய் நாதமிசை
செல்வாய் பறந்தே! திசையெல்லாம் - புல்வாய

புல்வாய் குதித்தோடப் புள்ளினங்கள் தாம்பாட
அல்லலின்றிச் செல்வாய் அணிமாட மல்லல்சேர்

### மாந்தை நகரம்

மாந்தை யெனும்பழைய மாநகரம் தோன்றுமே!
சாந்தமுடன் செல்க தமிழ்விரகர் - பூந்தராய்
வேந்தரும் சுந்தரரும் விந்தை யுறப்பாட
ஏந்தல் அருள்பொழிந்த ஏற்றமுறு - தீந்தமிழ்சேர்
கேதீச் சரத்துக் கிளர்கோ புரந்தெரியும்!
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்துதி - பூதேவர்

### பாலாவித் தீர்த்தம்

உள்ளம் மகிழ உலகோர் துயர்தீர
வள்ளல் கவுரி மகிழ்ந்தாடும் - தெள்ளுநீர்ப்
பாலாவி முன்தெரியும்! பார்ப்பாய்! பறவைகள்
சாலப் பொலியும்! தழைத்துநிற்கும் - கோலநெடு
மாமரங்கள் மீதமர மாலார் மனமிழுக்கும்!
ஏமாரேல்! எம்தாய்! எழில்கவுரி! - சாமவிசை
கேட்டுவக்கும் நீள்செவியும் கேழ்முடியும் தாள்களுமே
வேட்டுருகி நிற்பாய்! விழிமூடாய் - பாட்டுத்தான்
அன்னை யுளமுருக்கும்! ஆகையினால் காந்தாரம்
நன்னயமார் பண்நட்ட ராகமிசை - பின்னர்

பூசைக்கு வேண்டும் பொருள் வாங்கித் தூய்மைசெய்து
ஆசை யொடுங் கீழ்த்திசையை அண்மியே - நேசமிகு

### இராஜ கோபுர தரிசனம்

மாசில் பெருந்தொண்டன் மந்திரிசேர் கந்தைய
தாசன் வயித்திய நாதனார் - காசிலுளம்
போல எழுந்துநிற்கும் பொற்கோ புரத்தைச்சீர்
நீல மயிலுறங்கும் நீள்மலையைச் - சால
வினையறுக்கும் மாராச கோபுரத்தை மேலோன்
நினைவுடனே நீவணங்கி நின்றே - அனைவரும்

### காவல் நந்தி தேவர் காட்சி

புந்தி மகிழ்ந்தென்றும் பூரிப் புடன்தொழுநல்
நந்தி பகவான் நடுவமர்ந்து - சந்தமலை
ஈதோ எனவியக்கும் ஏற்றமுறு தோற்றத்தை
நாதன் அருளால் நனியுணர்ந்தே ஆதரவாய்

## துவார கணபதியும் கந்தனும்

வேழ முகத்தெம் விநாயகரை வேலவரை
ஆழ்நன் னெஞ்சில் அமர்த்தியே - ஊழிமுதல்
கோவில் நுழைவதன்முன் கோபுரத்துள் வீற்றிருக்கும்
தேவனதி காரநந்தி சீர்பாதம் - ஆவலொடும்

### மூலலிங்கம்

கும்பிட்டு மூலலிங்கக் கோமளத்தை அன்பார
எம்பந்தம் தீர இனிதிறைஞ்சி - நம்புசிவ
நாமம் இசைக்கும் நமசிவய மந்திரத்தை
ஏமமாக் கொண்டே எழுந்து செல் - வாமம்

## சூரியதேவர்

திரும்புதலும் செங்கதிர்ச் செல்வமுகங் காண்பாய்
விரும்பித் தொழுதுவலம் மேவ - அருங்காமம்

### பதிகம்பாடிய சம்பந்தர்

கன்றுசினந் தாங்கடிந்த காட்சியுறு காழியர்கோன்
ஒன்றும் மெய்ஞ்ஞான உணர்வெழலும் - நின்றுவந்து
பாடிப் பதிகம் பரவிய பாவேந்தர்
நாடிநிற்கும் தோற்ற நயந்தொழுதும் - தேடிவந்தே

### கேதுபகவான்

சாற்றுமோர் ஊழியிலே தன்பாவந் தீர்ந்திடவே
போற்றியுய்ந்த கேதுவின் பொன்னுருவும் - ஏற்றமும்
எண்ணியெண்ணி யத்தேவின் ஈடில் பதம்பணிந்தும்

**சேக்கிழார்பெருமான்**

தொண்டர்சீர் போற்றியநல் தூயமணி - எண்டிசையும்
மிக்கபுகழ்ச் சேக்கிழார் வெண்ணீறும் கண்டிகையும்
தொக்க வடிவும் துலங்குமால் - தக்ககவி
மண்ணில் வருபயனும் மாண்பும் உணர்ந்துருகி

**சமய குரவர்**

அண்ணலார் நால்வர் அடிதொழுதும் - திண்ணமா
மேற்றிசையை நோக்கியே மெல்லப் பறக்குங்கால்
ஆற்றவுமே சைவசித் தாந்தமெலாம் - சாற்றிநின்ற

**சந்தான குரவர்**

மெய்கண்ட தேவர்! விபுலர் அருணந்தி
துய்ய உமாபதியார் தோன்றுபுகழ் - ஐயன்
மறைஞான சம்பந்தன் மாதவத்து நால்வர்
நிறையுருவங் கண்டே நெகிழ்ந்தே - சிறைவண்டே!

**வேதாகமங்கள், பன்னிருதிருமுறைகள்**

கொஞ்சம் நகர்ந்தே குறிக்கொள் நீ நால்வேதம்
தஞ்சம் தருநல்ல ஆகமங்கள் - விஞ்சுமிசைப்
பண்ணார் திருமுறைகள் பன்னிரண்டும் பூசிக்கும்
தண்ணார் தமிழ்ப்பண்பு தான்கண்டே - எண்ணிச்
சிறிதே பறந்திடலும் தென்கோ புரமும்

**கௌரி நாயகி**

அறிவாய்! வடபாலெம் அன்னை - பெறலரிய
காளி! கருமை அகன்ற கவுரிப்பேர்
ஆளி அருள் பொழியும் ஆனந்தி - கேளாகக்
கொள்வார்கள் உய்ந்திடவே கொக்குருவக் கொண்டையுடன்
மெள்ளச் சிரித்தழைக்கும் விந்தையுன்னித் துள்ளாதே
பின்னர்ச் சுவைப்பாய்நீ பேரன்பால் மெல்லவே
முன்னம் பணிபுரிந்து முத்தியுற்ற - நன்னயமார்
தொண்டர் தமைப் போற்றித் தூபி யழகினைப்பார்

### தட்சணாமூர்த்தி தனியுருவம்

கண்டாங் கரிய கயிலாயர் - பண்டுபெருங்
கல்லால நீழலிலே கற்றபுகழ் நான்மறைதேர்
வல்லாளர் நால்வருக்கும் வாய்மைதனைச் - சொல்லாதே
கூறுங் குறிப்பினால் கொள்ஞான முத்திரையால்
மாறின்றிக் காட்டுகின்ற வண்ணமும்பார் - ஆறாதே

### பதிகம் பாடிய சுந்தரர்

வன்றொண்டன் ஆகி மகிழ்ந்துகே தீச்சரனை
நின்றுணர்ந்து பண்நட்ட நேர்பாகைஷ - நன்றுசெய்த
ஆலால சுந்தரர்தம் அன்புருவம் போற்றியவர்
சீலம் தெளிந்து செறி பத்தியுடன் - சாலவும்

### பரிவார மூர்த்திகள்

வாழப் பிறந்திட்ட மக்களெலாம் போற்றிடுசீர்
வேழ முகத்தெம் விநாயகரைச் - சூழவந்து
'ஓங்கார ரூபா வணக்கம்' எனவுரைத்து
ரீங்காரம் இட்டே வலந்திரும்பி - ஆங்காரம்
நீக்கும்சோ மாஸ்கந்த நேயவுருக் கண்டிறைஞ்சிக்
காக்கும் திருமால் கனிவுகண்டு - ஆக்கமுறும்
ஆதிகே தீச்சரத்தின் அண்ணல் மகாலிங்கச்
சோதி யுருவந் தொழுதழுது - பாதியுமை
கோனார்தம் பஞ்சலிங்கக் கோலக் குழாந்துதித்து
மானார் விழியாள் மலர்த்திருவைத் - தேனாரும்
கானம் எழுப்பி வணங்கிக் கசிந்தயலே
ஞான முருகன் நலந்துய்த்துக் - கானவள்ளி
தெய்வானை யம்மன் தெரிசனமும் பெற்றியாம்
உய்யும் பொருட்டென்றும் ஓராறு -- செய்யமுகம்
காட்டி யருள்செய் கதிர்வேலெம் கந்தவேள்
நீட்டுவேல் நெஞ்சில் நினைந்திருத்தி ஊட்டும்
அருளாளன் நற்கோலம் ஆர்வமுடன் கண்டே
பொருளாளன் சத்தியுடன் போகத் - திருவாரூம்

**திருப்பள்ளியறை**

பள்ளி யறையும் பண்ணவனார் ஐந்தொழிலும்

**நடராசப் பெருமான்**

துள்ளி யியற்றுஞ்சீர்த் தொன்னடமும் - மெள்ளவே

**வைரவமூர்த்தி**

கும்பிட்டு வைரவர்தம் கொற்றத் திருக்கோலம்

**நவக்கிரக தேவர்**

நம்பித் துதித்தே நவக்கிரகத் - தெம்புதரு
தேவர் தமையுந் தொழுதே திரும்புதலும்
மாவலிசேர் வானோர் மனிதரெலாம் - சேவிக்கும்

**சனீசுவரர்**

ஆற்றல் படைத்த சனீசுவர அண்ணலார்
தோற்றமும் நன்றே தொழுதுபின் - ஏற்றாளன்

**சந்திரதேவர்**

நீருலவுஞ் செஞ்சடையோன் நீள்முடியே தஞ்சமா
ஊருமுயர் சந்திரனார் ஒண்முகமும் - ஆர்வமிக
மேவத் துதித்தே விரும்பித் திரும்பியே
ஆவலுடன் அண்ணாந்து நோக்குங்கால் - கோவினுயர்

**கொடிமரம்**

நல்லுருவங் காட்டும் நளினக் கொடிமரத்தின்
மல்லல் மிகுகோல மாண்பிழுக்கும் - செல்ல

**நந்திபகவான்**

அருணந்தி மேரு எனப்பொலியும் ஆங்கே

**கேதீச்சரநாதர் கிளர்கோலம்**

பொருளுணர்ந்து நின்றே புனிதன் - அருவுருவைக்
கூர்ந்துநீ உள்நோக்கு கூசுங்கண்! சோர்ந்திடேல்

சார்ந்துநின்று மூலலிங்கத் தண்ணொளியைத் தேர்ந்துவரும்
பற்றால் பருகிப் பரமனார் பற்றாய
முற்றும் உணர்ந்த முதல்விதாள் - உற்றிறைஞ்சி

எந்தையார் பக்கம் இனிதேகி எம்மரிய
பந்தங்கள் பாசங்கள் பாறிடவே - சந்தத்
திருச்செவியில் தூதொன்று செப்பவந்தேன் தேவா
கருத்திருத்திக் கொள்கவெனக் காதல் - உருத்தெழவே
புண்ணியர்க்குத் தூதைப் பொருந்தும் வகைசொல்லி
அண்ணலே! வேதம் அறிவரிய - கண்ணுதலே
வானோரும் ஈனோரும் வாழ அமுதளித்து
ஈனநஞ்சம் உண்டிருந்த எம்பெரும் - ஞான
முதல்வா! முனிவர்களும் சித்தர்களும் மோன
இதமுணர நின்றருளும் ஈச - பதமறிந்து
சீரிமயக் கொம்புக்கும் தேவர்க்கும் மூவர்க்கும்
நேரே யருள்புரிந்த நீலகண்டா - பாரில்
விரும்பித் தொழுமடியார் வேண்டுவரம் ஈயும்
கரும்பே கருணைக் கடலே - இரும்பாம்
மனத்தவ ரையுமீர்த்து மாசிலருள் நல்கி
நினைத்த முடித்துநிற்கும் நீதி - தினந்தோறும்
பாலாவி நீராடிப் பாடிக் குடமெடுத்துச்
சாலவுந் தீர்த்தம் தனைத்தாங்கி - ஓலமிட்டே
அன்புருகி ஆட்டும் அடியர் - இடர்களையும்
இன்ப உருவே எழிற்கவுரி - மென்மொழிகள்

கேட்டுவக்கப் பாதிகொண்ட கேதீச் சரநாதா
பாட்டுக் குருகும் பழஞ்சொக்கா - ஏட்டினிலே
செந்தமிழ்ப்பா தீட்டியே தென்தமிழ்க்கு ஏற்றமே
முந்தளித்த மூல முழுப்பொருளே - சந்ததமும்
வாய்மை யொடுதூய்மை பேணி மனமிரங்கித்
தாயாக ஏழை தமக்கீயும் - நேயா
புனிதர் துயர்போக்கப் பூவுலகம் புக்கு
மனிதவுருக் கொள்ளும் மருந்தே - கனிவுடையாய்

ஐவர்கலக்கவே ஆறும் மயங்குமுயிர்
உய்யும் வகையருளும் உத்தமா - ஐயனே!
சங்கரா! நின்பாதம் போற்றி சதாசிவா
மங்களமே போற்றி மலரடிகள் - எங்கும்
மலரும் பரம்பொருளே! மாதவமே! போற்றி
தலம்புரக்கும் தண்ணளியே போற்றி - நிலமிசை
நின்புகழே ஓங்கவெனப் போற்றி நினைந்தவர்க்குத்
தென்புதரும் அன்னை திருவடிக்கும் - அன்பான
வாழ்த்துரைத்துப் போற்றி வணங்கி மலர்கொண்டு
தாழ்ந்தெழுந்து அண்ணலிரு தாள் சூடி - சூழ்ந்திரையும்

**தியான வடிவம்**

வானநீர்க் கங்கை மதிதவழும் செஞ்சடையோன்
ஞானத் திருநீற்றின் நன்னுதலும் - மோன 130

விழியும்நற் புன்சிரிப்பு மேவுஞ்செவ் வாயும்
அழியாக் கறைமிடறும் அண்ணல் - செழுமையுறும்
ஆரம் எனவரவும் நூலும் அணிமார்பும்
நேரும் அபயம் வரதமுடன் - சேரவரு
மானும் மழுவும் வயங்குந் திருக்கரமும்
கானப் புலித்தோல் கவினரையும் - தீனருறும்
அச்சம் அகற்ற அணிந்த கழலரவும்
இச்சை யகற்றும் இருபதமும் - மெச்சுமிடப்
பாகத் துமையும் பரவு திருக்கோலம்
ஆகத் திருத்திமிகும் அன்புடனே - மோகமெறி
ஈசனே எந்தாய்! இனியடியான் வந்துனது
பூசனைகள் கண்டே பொலிவுறுநாள் - தேசுமிக
மண்ணில் வருமலைக ளோவென்றே வான்வியக்கும்
அண்ணல் திருத்தேர்கள் ஐந்தோடும் -- எண்ண
அரிய திருக்காட்சி ஆர்வமுடன் கண்டே
பெரியோய் நினதுபுகழ் பேசிப் - பிரிவரிய
தொண்டர் அடிபரவும் தொண்டனாய்த் தூய்மையுடன்
அண்டிப் பணிய அருளுதியே - எண்டிசையும்

நின்பெருமை ஏத்தி நினைந்து நினைப்பாடும்
அன்புமலி செஞ்சொற் பொருளருள்க - தென்புலமும்

ஏகும் நாள் 'ஏழை இவன் என் அடியனென'
ஆகும் அருளால் அழைத்திடுக - ஏகனே
அன்றேல் நினைமறவா அன்பருள்க - என்றே
யிரந்திரந்து வேண்டி இனியவருள் கொண்டே

## சண்டேசுரர் துதி

பரந்தெழுபேர் அன்பாலா பாலும் - சுரந்துதர
வேதமலி சேய்ஞலூர் எச்சதத்தன் வீரமகன்
நாதன் விசாரசன்மன் நன்மணலில் - தீதகலச்
செய்தலிங்கத் தேவுக்கே ஆட்டுதலும் தந்தைபொறா(து)
எய்திலிங்கம் தன்னை யிடறுதலும் - மெய்யா
வெகுண்டெழுந்து தந்தைதாள் மாளவே வெட்டி
உகந்தோறும் ஈசன் உறுதார் சகம்பரவும்
சண்டே சுரர்பதம் தான்சூடி சந்நிதியை
அண்டிநின்று அன்புடனே தாளமிட்டு - மண்டி
வணங்கிப் பலன்பெற்று வார்கரங்கள் கூப்பி
மணங்கமழும் மன்நீறும் சாந்தும் - இணங்குமெழில்
பூவும் பொடியும் அணிந்தே பொலிவுடனே

## வீதிவலக் காட்சி

மேவுமைந்து தேரோடும் வீதிவலம் - ஆவலொடும்
எண்ணியெண்ணி வந்திடுங்கால் ஏற்றமுறு கீழ்த்திசையில்
அண்ணலெங்கள் ஆரூரர் சுந்தரனார் - வண்ணப்பேர்

தாங்கும் மடந்தெரியும் சார்ந்து பார் தொண்டதனால்
ஓங்கும் நமசிவாய உத்தமனார் - வாங்குசீர்ப்
பாலாவி தீரத்துப் பண்ணவர்க்கும் பாவைக்கும்
சாலத் திருப்பணிகள் தாம்புரிந்தே - கோலப்
பெருஞ்சாந்தி செய்துநின்ற பேராளன் சீலம்
பொருந்தும் துணைவி பிரிந்த அருந்துயரால்

உள்ளஞ்சோர்ந் தானோ? உடன்கண்டு ஆறுதலும்
மெள்ளவே சொல்லி விரைந்துசெல் - வள்ளல்சீர்
வண்டினங்கள் பாடுகின்ற மாண்புணர்ந்த சீகாழிக்
கொண்டல்பேர் கொண்ட மடங்கண்டு - தெண்டனிட்டு
மேற்றிசையை நோக்கின் விரவும் மரச்சோலை
தோற்றுமதன் நாப்பணோர் தொல்குடியில் - நோற்றுயரும்

**சபாரத்தினசாமி**

அன்புருவன்! என்புருவன்! ஆன்றதிரு வாசகத்தேன்
இன்புடனே ஈந்துவக்கும் ஏற்றமுளான் - தென்புதர
வீற்றிருக்கும் யோகி விரதிசபா ரத்தினமாம்
சாற்றரிய சாமிகுரு தாள்பணிந்து - பேற்றிலுயர்

**சிவராத்திரி மடம்**

அன்னம்பா லித்தருளும் ஆதிசிவ ராத்திரிப்பேர்
வன்ன மடத்தின் வளங்கண்டு - அன்னை
கவுரிதனை மீண்டும் நீ கைகூப்பிச் சென்றே

**திருவாசக மடமும் சரவணமுத்தடிகளாரும்**

மவுனமுடன் மாணிநிலை நின்றே - பவமகலத்
தெய்வ மணஞ்சேர் திருவா சகந்துணையாய்
உய்யும் சரவண முத்தடிகள் - துய்ய
ஒருவா சகமடத்தை உற்றடைந்தே ஆறிப்
பெருமா மடத்திலுறை பெம்மான் - கருமான்கை
ஏந்தி யுயர்தில்லைக் கூத்தன் எழில்நடனச்
சாந்தமுங் கண்டுநின்று தாள் தொழுது - போந்தோர்க்குப்
பேரா தரவுதரு பேறுமிதம் பேர்மடத்தில்
ஆரா தனையோ டளிக்குஞ்சோ(று) - ஆரவே
உண்டருள்க! பின்னர் உவந்தண்ணன் தன்செவியில்
தொண்டரே கௌரி துணைவர்பால் - மண்டுமன்பால்
தூதுவிட்டான்! தம்பி துயரந் தொலைதற்கே
ஏதும் அறியான் இருக்கின்றான் - சாதுவே
என்றிறைஞ்சி மேல்வீதி எய்துமடங் கண்டகன்று

சென்றே வடமேல் திசைசாரின் - அன்றுவட
ஆரியமும் செந்தமிழும் ஆய்ந்த குருகுலமும்
காரியமொன் றின்றிக் கலைந்ததே - ஆரினித்தான்
மீண்டும் குருகுலத்து வேதவொலி கேட்பிப்பார்
வேண்டும் குருமார் விழைகுலமா - ஆண்டாண்டாய்
மேலோங்க வேண்டுமென்று வீறுடனே வாழ்த்தியே
பாலசுப்ர மண்யப்பேர்ப் பண்பாளன் - சீலக்

குருக்களுக்கும் என் வணக்கம் கூறிப் பறந்தே
திருக்கிளரும் சீர்சால் வடபால் - மருவுதலும்

**அமரர் அமைச்சர் சேர் கந்தையா வைத்தியநாதன்**

பண்டைக்கே தீச்சரத்தைப் பாரறிந்தே உய்யவுயர்
தொண்டுள்ளம் கொண்ட துரைமகனார் - திண்திறவோன்
நன்னயஞ்சேர் கந்தைய வைத்திய நாதனார்
என்றும் கவுரிபதம் ஏத்தினோன் - மன்பதைகள்
வாழ வளர்பணிக்கே ஆளான மாவிரதி
தோழன் துணைவியொடு சூழ்ந்திருந்து - தாழாதே
திட்டமிட்டுத் தெய்வத் திருவருளால் செய்பணிகள்
இட்டமுடன் ஆற்றியே ஏகாந்த - நிட்டையிலே
கூடிக் கலந்தோன் குளிர்குடிசை தோன்றுமால்
பாடிப் பரவிப் பணிந்துநீ - நாடியயல்

**வேதியர் மனை**

வேத வொலியெழுப்பும் மாதவத்து வேதியருள்
ஆதி யடிதொழுஉம் அந்தணனார் - சோதிமுகப்
பட்டர் எனும்பெரிய பண்பாளன் வாழுமனை
இட்டமுடன் கண்டே யினிதுருகிச் - சிட்டனடி

**உடையார் உறையுள்**

எண்ணி யிரவும் பகலும் இறைஞ்சுமுயர்
அண்ணல் அருளம் பலவுடையார் - நண்ணியமர்

**புலவர் திரு**

நன்மனையும் கண்டென் நலமுரைத்து நம்பிதிரு
மென்முகமும் பார்த்தென் விழைவுரைத் துப்-பன்னரிய 180

ஈசானத் தான்திசையை எய்தின் மயன்மரபோர்
தேசன் திருத்தேர்கள் செய்யுமொலி - மாசில்நுண்
வித்தையெலாம் காண்பாய் வியப்பாய்! எனைநினைப்பாய்
அத்தன் புதுத்தேர் அமருநாள் - உத்தமர்கள்
நின்றழுது போற்றி நினைந்துருகும் காட்சிபல
ஒன்றுமுளக் கற்பனையி லேயுதிக்கும் - அன்றழைக்க
வேண்டும் விதியினையும் வேண்டிப்பின் தோன்றுமடம்

## நாவலர் மடம்

ஈண்டித் தெளிவுடனே எண்ணுதியேல் - காண்பரிய
கேதீச் சரமாய்க் கிளர்காடு மூடிடவே
ஆதியுறை கோவில் அறிவரிதாய்ச் - சோதியுரு
பாரறியா வண்ணமே மண்மூடிப் பாழாகிச்
சீரழிந்த செய்தி தெளிவுறுத்த - ஆர்வலரே!
மண்டுபெருங் காட்டினிலே மாண்புமிகு பொந்துத்தேன்
உண்டுகொள வாரும்! உறங்காதீர் - பண்டுபோல்
மீட்டும் சுவைப்போம் விடாப்பிடியாய் நிற்பிரென
வேட்கை யுறமிக்க வீறுடனே - ஏட்டிலெலாம்
நன்கெழுதிப் பேசிநின்ற ஞானிநல்லூர் நாவலனார்
பொன்கொதிந்த சீர்ப்பேர் பொருந்துமோர் - அன்புமடம்
கூவி யழைத்தே கொழுஞ்சோறும் ஈந்துநிற்கும்!
தேவியம்மா போமடமும் சேர்ந்துகாண்- ஆவிமகிழ் 190

கொண்டுபெரும் தொண்டரெலாம் கூடிப் புரிபணிகள்
கண்டுங் களித்தும் கருத்தோடும் - அண்ணலடி
நாளும் தொழுதுருகும் நற்சந் நிதிசார்ந்து
தாளில் விழுந்தழுது தண்டனிட்டுக் - கோள்வரியை
நீக்கும் பெரும நிகரற்ற நால்வேத
நோக்கும் கடந்துநின்ற நுண்ணியா - காக்குமெம்

காவலா! அன்னை கவுரி இடப்பாகம்
மேவக் குமரனொடும் வெள்விடையில் - தாவிவரும்
தெய்வத் திருக்கோலம் சேவிக்கச் சிந்தையிலே
உய்வாக வைக்க உடனருள்க - ஐயாவே
பிட்டுவிற்கும் வந்தி பெருந்துயரம் போக்கவோர்
கொட்டும் கொடுக்குடனே கூடையுமா - மட்டற்ற
ஆடல் புரிந்த அணிமதுரை அண்ணாசீர்க்
கூடலிலே மண்சுமந்த கோவேயென் - தேடரிய

**விடைபெறல்**

செல்வத் திருவே! தெளிதேனே! கற்கண்டே!
நல்லோய்! நினக்கபயம் நாளுமெனச் - சொல்லரிய
கூத்தன் திருவடிகள் கும்பிட்டு வீழ்ந்தெழுந்து
ஏத்தியிசை பாடி யிருபதமும் - நாத்தழைக்கக்
கூவியொரு ஓங்கார ரீங்காரம் கூட்டியே
ஆவித் துணையாம் அடியிரண்டும் - மேவுமுளங் 200

கொண்டுநின்ற வீறுடனே கோலச் சிறைவண்டே
அண்டியெனைக் காக்க அசைந்துவா - மண்டுதற்குத்
தேன்கதலி தாறுவிட்டுச் சீப்புச்சீப் பாய்த்தேனும்
தான்தரவே கூடிநிற்கும் தாழாதே - வான்வழியே
பாடிப் பறந்துவா பண்ணிசைக்கும் நின்வரவை
ஓடிவந்தே பார்த்துநிற்பேன் ஓம். 203

## வாழ்த்து

செந்தமிழ் வாழ்க சைவம் சீருறச் செழித்து வாழ்க
முந்தையோர் கண்ட நீதிமுறைவழி அரசு வாழ்க
அந்தணர் வாழ்க உண்மையறிந் துழைப்போரும் வாழ்க
சந்தமார் கவுரி, அண்ணல் தாளிணை வாழ்க! வாழ்க!

சுபம்

# திருக்கேதீச்சர மான்மியம்

## புராதன காண்டம்

**பண்டிதர் மு. கந்தையா**

**1989**

உ

சிவமயம்

### கடவுள் வாழ்த்துப் படலம்

**தலவிநாயகர்**

சொல்லார் திருக்கே தீச்சரத்துத்
 தொடரும் நித்ய நைமித்ய
மெல்லாங் கால்கொள் திருநிலையாய்
 எழிலார் கோலத் தனியுருவின்
வல்லாள் வலபை யுள்ளுறுத்து
 வணங்கார் தமையும் வணங்குவிக்கும்
எல்லார் வெண்கோட் டிபமுகன்றாட்
 கெல்லா வுறுப்பு முறப்பணிவாம்

**சுவாமி**

பண்டென் குறிக்கோர் பழங்கிடையாய்ப்
 பழகப் பழகப் புதுவரத்தாய்
அண்டு தொறுமவ் வவர்காட்சிக்
 கவ்வப் போதொவ் வொருவிதமாய்
விண்டு வாதி யடியரொடு
 வியன்மா முடிமன் னவர்குலமுந்
தொண்டாள் கேதீச் சரத்தடிகள்
 சுடர்ப்பூங் கமலக் கழல்பணிவாம்

**நடேசர்**

ஏதுக் குழல்கின் நீருலகீர் இங்கே பாரு மெனவுடுக்கங்
கோது மொலியா லுவந்தழைத்திட் டுடு நீள்கை விரற்சுட்டி
ஈதுகாணும் நுமதுபுகல் என்றேந்துபதத் தியல்காட்டி
மாது காண நடனமிடும் மன்றன் பொன்றா ளிணைபோற்றி

**பெரிய சோமாஸ்கந்தர்**

துரித மதுர சுரவேகத் தொனி நா
யனமுன் னெழத்தொடர்ந்து
சுரத மின்னார் நடனமிடத் தோள் தாங்
களவில் சிவபூதம்
முரிய நெளிய முதுகுளைய முன்னும்
பின்னு மசைந்தாடி
இரத மேறும் பெரும் பெருமான் இருந்த
கொலுவி னெழில் போற்றி.

**உற்சவர்கள்**

மூளும் பக்தி யலையலைய முதுசீ ரடியார் புகழேத்தக்
கேழும் ஒளியுங் கிளருமழ கெழுவா கனயா னங்கள் மிசை
நாளும் பொழுதும் நலமார நீளுங் கேதீச் சரவீதி
சூழுந் திருவாருற்சவர்சீர் துதித்து மகிழ்ந்து தோத்திரிப்பாம்

**ஆதிவிநாயகர்**

ஆதிக் கேதீச் சரத்த மர்ந்தஃ தான கீர்த்திப் பிரபாவம்
மாதிக் கெல்லாங் கொளப்பரப்பி மண்கீழ் வாசம் மகிழ்ந்துசைவ
நீதி மிதக்க மேன்மிதந்து நிலவுபூசை மகிழ்ந்துறைவெண்
சோதித்தந்தக் களிற்றையன் தூமாமலர்த்தா ளிணைபோற்றி

**நர்த்தன விநாயகர்**

மத்துறு மதக்கொலைஞர் சூழ்ச்சிகடந் தேறி
இத்தல மெழுந்தவிற லோகைமகிழ் தேக்கி
மர்த்தள வயிற்றினொடு மாமுடி துளங்க
நர்த்தன மியற்றுகண நாதனடி போற்றி.

**தக்ஷிணாமூர்த்தி**

சீரார் முகத்தி னுபசாந்தத் தேசுமலரச் செழுங்கரத்திற்
பேரார் சின் முத்திரை திகழப் பிறங்கு புலித்தோ லிடை யொளிர
நேரார் தியான நிம்மதியில் நெடுநீ ருலகு திளைக்க வருள்
ஆரார் கல்லா னிழற்கடவுள் ஐதார் கமல பதம் போற்றி

### லிங்கோற்பவர்

சங்கேந் தியமால் சதுர்முகனுந்
தமைத்தா மறியாத் தவறுணர்த்தப்
பொங்கே ரழலாய் வானுயர்ந்த
பொருவார் சோதிக் குடர்கு டைந்து
செங்கே முருவந் திகழவரு
திருவாள் மழுமான் திருக்கரத்து
லிங்கோற் பவர்பொற் றிருப்பாத
பங்கே ருகநற் றுணைபோற்றி.

### சோமாஸ்கந்தர்

தேமா மலர்வேய் செழுங்கூந்தற்
செல்வி யிடப்பால் சினவடிவேற்
சூர்மா தடிந்த சேய் நடுப்பால்
துலங்கத் துலங்கித் தொழுதணைவார்
காமா திகளுங் கடைபோகக்
கதிமோட் சமுங்கை கூடவருள்
சோமாஸ் கந்தர் துணைமலர்த்தாள்
தொழுது போற்றி யுளமகிழ்வாம் 2

### விஷ்ணு

பூமா தொருபாற் பொருவறு சீர்
மலர்மா தொருபாற் பொலிவெய்த
நாமார் தேக தர்ம நிலை
நலியா வண்ணம் புரந்தருள் சீர்த்
தூமா நீல மணி மேனிச்
சுதரி சனப்பேர்ச் சுடராழிச்
சீமான் விஷ்ணு திருவடிக்கண்
செழுமா மலர்தூய்ப் பணிகுவாம்.

### மஹாலிங்கம் (குளகம்)

ஆனாயும் நீ பெரியாயென் றப்பர் பெருமான் செப்புபொருள்
தானாய்த் திருக்கேதீச்சரத்துத் தலங்காண் வீக்க தூக்கங்கட்
கானாப் பேரத் தாட்சியுமாய் அடிமா நிலத்துங் குடியிருந்து
நானா விதப்பேர் நலிவுமுற்று நானூ றாண்டு கடந்தேறி, 13

இந்நாள் வண்ணைப் பசுபதியார்
இடுக்கட் கிடுக்க ணாகிநின்ற
பன்னா ளுழைப்பூ தியமாயங்
கவர்தம் வயிற்றிற் பால் வார்த்து
நன்னாட் கொளமேல் மீண்டருள்சீர்
நாம மஹாலிங் கப்பெருமான்
பொன்னா ரடிக்கீழ் நீர்மலர் தூஉய்ப்
புறநோக் கறநின் றகமலர்வாம்.

**பஞ்சலிங்கம்**

எஞ்ச லில் பிர பஞ்ச முதல்களாம்
ஐஞ்சு பூதமு மாள் முதல் நாமென
விஞ்சு வீறுற மேற்பிர காரம்வாழ்
பஞ்ச லிங்க பகவர்ப் பரவுவாம்.

**இலக்குமி**

மரும லர் வன மாலைப் பிரியன்மால்
மருமம் விட்டக லாதுமற் றீதிலோர்
மரும முண்டென மாநிலந் தேற்றவாழ்
மரும லர்க்குழல் மாபதம் போற்றுவாம்.

**சுப்பிரமணியர்**

வேல்நெ டுங்கை வியத்தகு வேள் சிவ
பாலன் பாவையர் மேவிரு பாலுற
நீல மஞ்ஞையின் மீதொளிர் வெய்ய சூர்க்
காலன் காற்றுணை காதலித் தேத்துவாம்.

**ஆறுமுகர்**

வேறு வேறு விதம்ப டருட் டொழில்
ஆறு மாமுகம் வீறுமி ராறுதோள்
ஏறு சேவற் கொடிமயில் வாகனன்
ஆறு மாமுகன் சீரருள் வேண்டுவாம்.

**பிரமா**

தரமன் றெவருந் தனக்குல கில்
தானே பிரம மெனுமக ந்தைச்
சிரமங் கொள்ளா தெனைவோருந்
திருவா ரொருநின் முதன்மையுணர்

வர நன் றருளென் பிரார்த்தனையின்
மருவு மொரு நான் முகத்தேவன்
பிரமன் கழற்செம் போதிணைநம்
பிமரங் கெடவுற் றிறைஞ்சுவாம்.

**துர்க்கை**

படந்தாங் கரவஞ் சுமந்திளைக்கும்
பார்மா தயர்வுற் றுடலிளைக்கத்
தொடர்ந்தாக் ரமித்துத் துயர்ப்படுக்குஞ்
சும்ப நிசும்ப சண்டமுண்டர்
அடர்ந்தார்ப் பரிக்கும் ஆயிரவர்
அசுரர் கொடுமா யக்கடம்முன்
கடந்தா ளம்மை காடுகாள்
தடந்தா ளிணையெம் முடிக்கணி வாம்.

**பைரவர்**

நாமமுறு மூவிலைவேல் நாளலருஞ் செவ்வலரித்
தாமமணி மார்பிலங்கத் தண்டையொலி சலசலக்கச்
சேமமுறு காவல் மகிழ் சேத்திரபா லகன்படுகன்
காமருபூங் கழலிணைகள் கருத்தினிலுள் ளிருத்துவாம்

**நவகோள்**

தேவுமலி சிவபூசை செய்துபெறு பலனோங்கிப்
பூவுலக மானிடர்க்குப் போது பலன் வகுத்தூட்டும்
நாவுமலி புகழாளர் நவக்கிரக நாயகர்சீர்
பாவுமன மொருக்கி நின்று பணிந்துநல மெய்து வாம்,

**சனீஸ்வரன்**

முனீஸ் வரருஞ் சார்வரிய முதிய பெருந் தவத்திறனுக்
கனீஸ்வரனாஞ் சிவன் மகிழ்ந்தன் றளித்தபெரு வரச்சிறப்பால்
தனீஸ் வரனாந்தன்மையுமோர் தலத்தினிடைத் தான் கிளக்குஞ்
சனீஸ் வரனுக் கன்பார்வோம் தகு துயர் விட் டின்பார்வோம்.

**சந்திரன்**

அண்டத்தும் பிண்டத்தும் ஆகாச மண்டலஞ் சேர்ந்
தெண்டகுசீர்ப் பயனுதவும் இமகரன்கோ புரவாயில்
அண்டையிடப் பால்மருவி யண் ணலிடக் கண்ணான
பண்டைநிலை தேற்றுமவன் பாங்கினுமன் பீங்குறுவாம்.

### சூரியன்

நேரியலுந் திருவாயில் நிருமலன்நோக் கெதிர் வலப்பால்
தாரியலுஞ் செவ்வந்தி மார்பொளிரத் தன்னணைவார்
கூரியலு மதிமென்மேற் கூர்ப்பிக்க வீற்றிருக்குஞ்
சூரியனைத் தொழுங்காலைத் தூரியதாம் மனவிருளே,

### துவாரவிநாயகர் சுப்பிரமணியர்

முந்தைமுதல் எந்தைமகார் மூத்தவரும் இளையவரும்
தந்தையிடம் வருவோரை முந்திக்காண் ஆதரவார்
சுந்தரச்சீர்த் துவாரவிநா யகர்சுப்ர மணியரவர்
சந்தமலர்த் தாண்மலரெந் தலைக்கணியாம் முறைமையினால்

### நந்திகேஸ்வரர்

பண்பார்கே தீச்சரத்துப் பழம்பெருமைக் கிலங்கணியாம்
நண்பார்சீர்ப் பெரியநந்தி நம்பனிடம் வருவாரைக்
கண்பார்த்து நேர்புகுத்தக் கடைவாயின் முன்னிருக்கும்
திண்காத்தி ரத்தேவன் திருப்பொலிவு கருத்தமைப்பாம்

### அதிகாரநந்தி

மாதிரத்தோ ரெவரெவரும் வந்தணிவா யிலிற்புகுவோர்
ஆதிபரன் ஆணையநு சரணைவிதிக் கமைந்தொழுகத்
தீதில் பிரம் பொடுகட்கந் திருமலர்க்கை கொளத்தாங்கி
நீதிபுரி யதிகார நந்திநிலை நினைகுவாம்.

### பதிகம்பாடிய சம்பந்தர்

தூரியனா மந்நிலையே அணியனுமா
யிருந்துதன துண்மை காட்டும்
பேரியலான் கேதீசன் எனல்காட்ட
அவன்பெரிய வாய்மை முற்றும்
ஏரியல்மா தோட்டத்தி னெழில்முற்று
மியல்ராமேச் சரத்தி ருந்தே
நேரியலக் கண்டபடி பதிகமருள்
பிள்ளைகழள் நினைவிற் கொள்வோம்.

### நால்வர்

சைவ மெய்யியல் மாதுமெய் பொடிப்பத்
தமிழுந் தெய்விகத் திரு நிலைக்குயரத்
தெய்வ நீறுகண் டிகையுமஞ் செழுத்துந்
திசைய டங்கலுந் தேசுமிக் கொளிர

உய்வ தோர்நெறி நால்வர் நன் னெறியென்
ஓகை மீக்கிளர்ந் துலகெலாம் மலர
வைய முய்ந்திட வாழ்வருள் நால்வர்
மலர்ச்செ ழும்பதம் வாழ்த்தியுய் வுறுவாம்.

**சேக்கிழார்**

கன்றும் மழுவுந் திகழ்கரத்தார்
கழற்கே முழுக்கத் தமையளித்திங்
கென்று முள்ள தொண்டுநெறி
யியலார் தம்மை யினங்கண்டு
துன்று மநுபூ திக்கண்ணால்
துலங்கு மவர்சீர் கண்டுரைக்க
நன்று மருவும் வாக்கியலார்
சேக்கி ழார்பூங் கழல்போற்றி.

**கேது**

கேடி லாதகே தீச்சரந் தொழவே
கெடுமி டர்வினை யெனமுனங் காழி
நாடு ளார்க்கிறை ஞானசம் பந்தன்
நவின்ற வாய்மை யதார்த்தமுன் னீடும்
நீடு பல்யுகம் நேர் பெற முன்னே
நிலவு தன்செய லானிகழ் வித்துப்
பீடு சேர்தலப் பெயருந்தன் பெயரால்
பிறங்க நின்றிடு சிகிபதந் தொழுவாம்.

**சந்தானகுரவர்**

நந்தா ஞானப் பெரு நிலமாம் நலமார் கயிலைப் பரம்பரையின்
வந்தான் மிகஞா னத்திருவின் வளமேம் படுக்குஞ் சித்தாந்த
சிந்தா மணிகள் சிவஞானத் திருவார் மெய்கண் டாராதி
சந்தானத்துக் குரவர்பதந் தலைமேற் கொடுமெய்ந் நிலையுறுவாம்

**திருமுறைக்கோயில்**

நீடார் வேத வேதாங்கம்
நிலவு மிருதி யாதிகளும்
சேடார் சைவா கமத்தொகையும்
திருவார் புராணப் பெரும்பரப்பும்
தோடார் பாடல் முதலாகத்
தொடரும் பனிரு திருமுறையும்
பீடார் திருமா முறைக்கோயில்
பிரச மலர் தூய்த் தொழுதெழுவாம்

### அறுபத்து மூவர்

மறுவில் செல்வத் துலகியலின்
வாழ்வாங் கறிந்து வாழுநெறி
பொறுதி நேர்மைக் கடைப்பிடிக்குட்
புலனைந் தடங்க வெல்லுநெறி
உறுதிப் பயனார் இறைபணிக்கே
ஒன்றும் நெறியென் றிவைதோற்றும்
அறுபத் தொருமூன் றடியர்கழல்
ஆராப்பரிவி னணைந்துய்வாம்

### பதிகம் பாடிய சுந்தரர்

கத்துங் கடலக் கரைமருவுங்
கவினார் ராமேச் சரத்திருந்தே
மெத்து மாந்தைப் பாலாவி
வேகப் பெருக்குங் கேதீசர்
சுத்தா மிர்த அருட் பெருக்குந்
தோன்றக் கண்டு சுவை துளும்ப
நத்தார் படைமெய்ப் பதிகமருள்
நாவ லூரன் கழல் போற்றி.

### அம்பாள்

பைம்பொன் மகுட மணிப்பதக்கப்
பாத சாலப் பணியழகி
செம்பட் டாடைப் பொலிவழகி
திகழ் சந்தனக்காப் பணியழகி
நம்பன் மார்புக் கிலக்குறுத்தி
நாணிச் சாய்க்கும் விழியழகி
பிம்ப விதழ்க்குங் குமவழகி
பிராட்டி கௌரி பதம்பணிவாம்.

### கோபூசை

கோலத் திருவார் கோபூசை
காலைச் சந்தி தொறுங்காண்பார்
வாலைக் கௌரி பேரருளால்
மேலைப் பெருவாழ் வெய்துவரே.

### பள்ளியறை

பரிவோ டிராக்கே தீச்சரனார்
பள்ளி யறையிற் புகும்போதும்
விரிவார் விடியல் மீளுமவர்
வியன்சீ ரிருக்கை புகும்போதும்

பரிவார் பள்ளி யெழுச்சியினும்
நிகழும் பாத பூசை நலம்
தெரிவா ரினிமேற் பிறப்பெய்துந்
திறமென் றுந்தாம் மருவாரே.

### சண்டேஸ்வரர்

பாமே வுயர்கே தீச்சரத்துப்
பாவை கௌரி பாகமுறும்
மாமே கத்துக் கறைக்கண்டர்
வைகல் மகிழும் பூசைதொறும்
நாமே விசையாற் றோத்திரித்து
நைந்துள் ளுருகித் தொழுமவர்க்குத்
தாமே பலமீந் தமர்ந்துமகிழ்
சண்டீ சர்தாள் தலைக்கணிவாம்.

**கடவுள் வாழ்த்துப் படலம் முற்றும்.**
**ஆகத்திருவிருத்தம் 39**

உ

சிவமயம்

## திருக்கேதீச்சர மான்மியம்

### அவையடக்கம்

தேவலர் புகழ்த்திருக் கேது வீச்சரத்
தாவதோர் மகிமையின் றளவு முற்றுற
வேவருந் தமிழ்செயா திருத்த லூற்றுணர்ந்
தாவலா லதுசிறி தறைதல் மேயினன்,1

இற்றிதன் நாயகன் இயல்ப தாவது
குற்றமென் றொன்றிலாக் குறைவில் பூரணம்
மற்றவன் மகிமைசொல் வழிக்கொள் குற்றமும்
உற்றவப் பூரணத் தொடுங்கல் வாய்மையே. 2

ஆதலி னருந்தமி ழுறிஞ ராகுவார்
தீதுநன் றிதனிடைத் தேர்த லோம்பி நன்
றோதுவர் ஓதுதோ றுளங்கொள் கேண்மையான்
கேதுவீச் சரனருள் கெழுமக் காண்பரால், 3

**அவையடக்கம் முற்றும்**
**ஆகத் திருவிருத்தம் 42**

உ

## நாட்டுப்படலம்

பாட்ட ளிமுரல் பங்கயங் கோட்டமா
வேட்ட மெல்லிய லார்மகிழ் தேக்குமா
தோட்ட மோடுயர் தொல்புக ழீழநன்
னாட்ட சீர்மை நவின்றிடு வாமரோ. 1

உருவி னுந்திரு வோரா யிரம்படி
பருமு மாண்புயர் பாரத மாதயல்
ஒருவி ரல்சுவைத் துத்தலை சாய்த்துநில்
பொருவி லாததொர் பொற்பிளஞ் சேயென. 2

அன்னை நீலப்பட் டாடைமுன் தானையிற்
சின்ன மென்கரம் பற்றித் துவண்டு நின்
றென்னைத் தூக்கென் றிரங்குமென் பூந்தலை
வன்னச் சிட்டென வர்ணிக்க லாவது. 3

பூத லத்துப் புலனுகர் வேட்கையின்
மாதி ரந்தொறும் வாவிப் பலன் கொளார்
போத வந்தணை மேதைமே னாட்டினர்
காத லித்தமர் கன்னியிவ் வீழமே. 4

அன்று தொட்டின்று காறு முலாமகிழ்
துன்று யாத்திரி கர்தொகை குன்றலா
தென்றும் பல்குமவ் வேதுவி னால்நிலை
நின்று நீள்புகழ் மேவுமிவ் வீழந்தான். 5

காடு நாடு கடல்மலை யாகுமெப்
பாடு மெய்தப் படுவளம் ஓர்புடை
நாடு வார்க்கென நான்முகன் முன் செய்பொன்
மூடு பேழையு மாகுமிவ் வீழத்தில், 6

தம்ப லேஸ்வரம் சாலுங்கோ ணேஸ்வரம்
நம்பர் சந்திர சேகரம் நாடுசீர்
பம்பு கேதீச் சரநான்கும் நாற்றிசை
இம்பர் போற்ற இடங்கொண்ட சீரெனாம். 7

நீல வார்கடல் நீள்பரப் பொன்றலால்
தூல மாயெதுந் தோன்றாத் தனிமையில்
ஆலும் பேரலை யாடல்கண் டின்புறக்
கோலு மன்பிற் குணதிசை நோக்கிநீள். 8

கோடு மூன்று கொள் கோண சயிலத்தில்
ஈடி லீழத் துரோமா புரியெனக்
கூடு மேன்மை 'குவைறோஸ்' குறித்தசீர்
நாடு கோணேஸ் வரமென் சினகரம். 9

கூர்த்த வெம்பகைப் போர்த்தர் சினத்திமிர்
தீர்த்த காலத் தவர்கைப் புகாதெடுத்
தாத்தர் பேணுசோ மாஸ்கந்தர் மாதுமை
மூர்த்தி பர்கள் தாம் பேர்த்தும்வந் துற்றிட. 10

ஆழ நீள் கடற் புக்க சிவாலயம்
மீள கில்லா தெனினும் புதிதொன்று
சூழுங் குன்றிடைத் தோன்றி நமர்கண்டு
வாழ வாழ்வருள் மாண்புமங் குள்ளது. 11

ஈழ மன்னரோ டிந்நிலத் தாட்சிகொள்
சோழர் பாண்டியர் தொல்சிவற் காக்கின
கேழில் சிற்ப நற் கற்றளி யோர்பல
வாழி பொல்ல நறுவைப் பரப்பெலாம். 12

தேடு மாலயன், காணாச் சிவனருள்
நாடு சீர்ப்பனங் காமம்ம. காவலி
மாடு சேர்கர சைத்தலம் ஆதியாக்
கூடு மீஸ்வர மெண்ணில வற்றினுள். 13

வண்ணை வைத்தீஸ் வரன்திரு நல்லையில்
அண்ண லார்கயி லாயர்சி னகரம்
எண்ணு சிற்ப வெழிலார் கொச் சிக்கடைப்
புண்ணி யத்திரு வார்சிவன் கற்றளி. 14

குரக தக்கதி கொள்ளுங் கடலலை
விரவு காலி வியன் நக ரந்திகழ்
மரக தப்பொன் னிலிங்கத்தில் மாறில்சீர்
அரன்ம கிழ்ந்தரு ளற்புத ஆலயம், 15

வெட்டு கேழ்வர குத்தலை நீங்கவெஞ்
சொட்டுச் சுட்டு மெரியா திருந்திடல்
தொட்டு வேகா வனமான தொல்புகழ்
ஒட்டு சுட்டா னொளிர்சிவ னாலயம். 16

வடிவ மூகிவ னப்பினிற் சொக்கியெப்
படிவ முந்தா னலாச்சிவன் பாங்குறு
நெடிய மாலென நீண்டுயர் மாண்பிற்கோர்
முடிவி லாதுறு முன்னமா மீஸ்வரம். 17

மன்னு யாழ்வட மேல்கட லோரத்தே
துன்னு கீர்த்தியீ ழத்துச் சிதம்பர
மென்ன மேவு மிணையில்சி வாலயம்
அன்ன ஐயனார் ஆலயப் பாங்குறும். 18

திக்கெட் டுங்கமழ் தெய்விகச் சோலைசூழ்
கொக்கட் டிச்சோலை மட்டுமௌ லீஸ்வரம்
முக்கட் டாதை யிருசந் நிதிக்கணே
மக்கட் காணுமவ் வாரி வனேஸ்வரம். 19

ஆணை மூர்க்கங்கொ ளந்நிய ராட்சியிற்
கோண ஈசு வரத்துக் குழகராம்
கோணை நாயகர் சென்று குடில்கொளும்
தாணு வாந்தம் பலகாம வீஸ்வரம். 20

இன்ன வான சிவாலய மன்றியும்
பொன்னி னாலை புகழார்வல் லிபுரம்
பன்னு சீர்ப்பழு காமமொ டுமல் வில்
உன்னு மாய னுறைபதி யாவன. 21

சொல்ல ரும்விறற் சிப்பிர தாயினி
தெல்லி மாநகர்த் துர்க்கை திருமலைச்
செல்வி பத்திர காளியெ னுமிவர்
நல்கு பேரருள் நாடுமீ ராலயம். 22

தாவ ரம்மொன்றுந் தான் விரும் பாமலே
நாவ லொன்றி னடித்தலம் நண்ணிவாழ்
ஆவரம்பிட்டி யாள் முத்து மாரிசீர்
பாவு சீர்த்திப் பழமைகூ ராலயம். 23

மூர்த்திக் கொத்துயர் தீர்த்தப் பெருமைசால்
கீர்த்திக் கீரிம லைமாணிக் ககங்கை
ஆர்த்தி கூரு மமிர்த களியொடு
பேர்த்த மாவலி சங்கமம் காருடம். 24

பாவ நாசம்பா லாவி களனியும்
காவு சூழ்கன்னி யாய் நவ கீரியும்
தேவ ராடுந் திருவடி யாதியாம்
ஓவில் தீர்த்தங்க ளூடு டொளிர்தலின். 25

துன்று தேர் விழா தீர்த்த விழா பொங்கல்
நன்று கூருங்கு ளிர்த்தி குடமுழுக்
கொன்றி ரண்டெனு மில்லாத நாளிது
வென்று காட்டுதற் கோர்தின மின்மையின், 26

உய்ய ஊக்கும் பௌத்தமிஸ் லாமுடன்
வையம் வாவும் விவிலிய மாதிய
தெய்வ வாய்மை தெரிப்பன வாயினுஞ்
சைவ மாண்பு தலம் புகழ் சால்பிற்றே. 27

வேதங் கூறும் விராட்புரு டன்றனக்
கோத வுற்றிடு முப்பெரு நாடியுள்
ஏத மில்லிட நாடியிவ் வீழத்தூ
டாதல் மேதைக ளாய்ந்துணர் வாய்மையாம். 28

மாதொர் பாகனை யோகத்தி னாற்பெறும்
ஆதி நாகர்த மாஸ்ரய மாமிது
சோதி யார்சிவ பூமியெ னாவன்றே
மூதறிவினெம் மூலன்மொ ழிசொலும். 29

**வேறு**

நேயமா ரீழ தேச
நிலத் துளும் புறத்து மெல்லாம்
பாயசீர்ச் சிவால யங்கள்
பழங்கிடை கிடப்ப மீதே
சேயவிச் சிறப்புக் கென்றோர்
செயத்தம்பம் நிறுவிற் றென்னச்
சீபதஞ் சிரமேற் கொண்டு
சிவனொளி பாதம் நிற்கும். 30

மத்தவா ரணமு கத்தோன்
கல்வளை மருதை யாதி
மெத்துசீர்த் தலங்க ளெங்கும்
வீதியால் வேம்பு போதி

வைத்திடு நிழல்க ளெங்கும்
வான் குளக் கரைக ளெங்கும்
பத்தர்சூழ் மடங்க ளெங்கும்
பரிவினோ டுறைவ ரன்றே. 31

சுந்தரத் தோன்றல் நந்தங்
கந்தவேள் வள்ளி காதல்
முந்துற மருவுஞ் செல்வக்
கதிரைமாணிக்க கங்கை
வந்துபாய் மருங்கிற் றோன்றி
வரம்பிலா வரங்கள் நல்கி
இந்தமா நிலத்தோர்க் கென்றும்
இறும்பூது பயப்ப தாகும். 32

மாருத வல்லி மாவை
மந்திரி புவனே கன் தன்
சீர் குலாம் நல்லை செல்வச்
சந்நிதி வெருகல் மண்டூர்
வீர நற் குமர கோட்டம்
வில் லூன்றி உகந்தை யாதி
பேர்மிகு செவ்வேள் மேன்மை
பிறங்குவ அநேக முண்டால். 33

பத்தினி வராகி பேய்ச்சி பைரவர் வீர பத்ரர்
அத்தியூ ரைய னார்நல் லண்ணமார் பூத ராயர்
சத்திகூர் முத்துமாரி மாமாரி நாய்ச்சி மாரென்
றித்திறத் தவர்க்குங் கோயில் எனைப்பலவெங்கு முண்டால்

சுத்தவா கமங்கள் போற்றுந் தூநெறி வழாதெஞ் ஞான்றும்
நித்யநை மித்தி கங்கள் நிலவுமித் தலங்க ளெங்கும்
புத்தவா கமத்தோர் தாமும் புரிந்துணர் வோடு போற்றி
மெத்து சீர் நண்புகூர மேவுவர் அன்று மின்றும். 35

பாதயாத் திரைமேற் கொண்டு பரவியாழ் வடபா னின்றும்
சீதள மலை நாட்டின் கண் திசைதிசை யெங்கும் நின்றும்
தீதகல் கதிரை நோக்கிச் சிவனொளி பாதம் நோக்கிக்
கேதுவீச் சரமுன் னோக்கிக் கிளர்ந்தெழு பக்தர் கூட்டம்.

கடகமா சத்து மேவுங் கதிரையுற் சவகா லத்தும்
இடபமா சத்து நேரும் எழிலமர் விசாகப் போதும்

கடலலைப் பெயர்ச்சி மானக் காடுமே டெங்கு மார்க்குந்
திடமுறு தெய்வ கோஷந் திசையெலாந் துளக்கு மன்றே. 37

ஐயனே முருகா கந்தா 'அரோஹரா' என்றுங் கந்த
தெய்யோ ஹோ சாது சாது கருணாவாய் என்றும் எங்கும்
தையலார் மைந்தர் வாயில் தழையொலி தயங்கு மீழப்
பொய்பழி துடைத்தெஞ் ஞான்றும் புனிதமே லோங்க நல்கும்.

முந்துதெய் விகத்தின் மாண்பால் மூவகைத் துயரும் நீங்கி
வந்தணை வோர்க்குந் தன்பால் வதிவோர்க்குந் நலமே செய்யும்
நந்துசீ ரீழ நாட்டு நானில வளமுஞ் சற்றே
முந்தை நூல் மரபிற் கேற்ப முறைநெறி வழாது சொல்வாம். 39

சுந்தரக் கன்னி மார்பிற் றுணைமுலை கிளர்ந்த தென்ன
நந்தம தீழ நாட்டு நடுவுயர்ந் தமரர் நாடு
பிந்தமுன் னுயருஞ் செவ்விப் பீதுறு காலத் தோடு
சிந்துபூந் தருக்கள் துன்றுஞ் சிவனொளி பாதம் மன்னும். 40

சீர்தரு தெய்வ வாய்மைச் சிவனொளி பாதத் துச்சிச்
சேர் தரு பனிகூர் வாடைச் சிலிர்ப்பையும் பொருள் செயாமே
நார் தரு முணர்வு கூர நாளுநாள் திரளுங் கூட்டம்
ஆர் தரு முதயக் காட்சியற்புதம் பகரொ ணாதே. 41

உள்ளங்கா லூடுற் றேறி உணர் நரம் பெலா மீர்த் துச்சி
நள்ளுறப் படர்குளிர்க்கு நடுக்குற்று நிலைகொ ளாது
துள்ளுதாட் டுலங்கு செல்வாய்க் கருணாவாய்த் தொனிகூர்பக்த
வெள்ளத்தி னார வார மிகுமொலிப் பிரள யத்துள். 42

கீழைவா னடிவாரத்திற் கிஞ்சுக மாது ளச்செங்
கேழுறு மணிப்பொன் வட்டில் கிறுகிறுத் ததிரச் சுற்றித்
தாழுவ துயர்வ தாகித் தனில்முக்கா லசைவுற் றேறும்
ஊழ்மலி யுவகைக் காட்சி யுவட்டாவின் புறுத்து மிங்ஙன். 43

தந்திமா முகப்புத் தேள்முன் தாழ்ந்துமும் முறையெ முந்து
சந்தமார் தோப்புக் கண்டத் தகவினா லநுஞ்ஞை பெற்றுத்
தந்தம் தொழின்மேற் செல்லத் தவறுவார்க் குணர்வு கூர
இந்தவா றினன்சீ பாத மிறைஞ்சித்தன் பணிமேற் செல்லும். 44

மும்முறை தாழ்ந்தெ முந்து முடுகிய விசையி னிந்நாட்
செய்ம்மதி வானிற் றாவுஞ் செவ்வியி னுயர் பொற் பாது

மைம்மலி பனிமூட்டத்துள் வானவில் லனந்தந் தோற்றி
மெய்ம் மலி யிந்திர ஜாலம் விளைந்திடத் தழங்கு மாலோ. 45

இற்றிதாஞ் சீபா தத்தோ டியைந்துள நமுனுப் பொற்றை
மற்றுள வரைக ளான்ற வரம்பில் பேர் வளாகந் தன்னில்
உற்றறிந் துலக மெல்லா மொருங்குற வசீக ரிக்கும்
வெற்றிகூ ரீழலக்ஷ்மி வியன்கொலு விருக்கை மேவும். 46

மற்றிவற் றுச்சி யேறி மகிழ்வுற நோக்கு வார்க்குச்
சுற்று வெண் பனிசூழ் குன்றத் தொகைபல குளிர்க்கு டைந்து
துற்றுறு மயிர்ப்போர் வைக்குட் டுயங்குடல் முடக்கித் துஞ்சும்
பெற்றங்கள் அனைய காட்சி பெருங்களி துளும்ப நிற்கும். 47

ஊழிதோ றுருக்கொள் மாய
னொவ்வொரு பிறப்புந் துஞ்சும்
கேழிலா லிலைகள் முற்றும்
பரப்பியீங் குறங்கல் காட்டும்
சூழுமெல் லிளங்கொ முந்து
தொகைகொள்தேளப் பயிர்ப்ப ரப்பின்
நீளுறத் துன்றி யொன்றும்
நீலிருங் காள மேகம் 48

வானைப்போழ்ந் துயர்ந் தெழுந்து வளர்கிரி யவற்றின் சூழல்
ஆனகுன் றுகள னைத்தும் அங்கங்கு சுரித்தெ ழுந்தே
வானநாட் டமிர்தம் வாரும் வனப்பினிற் பெருகிக் கன்னங்
கானவின் னிசைகூட் டுண்ணக் கடுகுவ அருவிக் கூட்டம்

துடியிசை’ பம்பை யோசை குடமுழாக் குமுக்கு மற்றும்
கடிகுரன் முரச வார்ப்புக் கரடிகை யுறுமல் இன்பாம்
படியிசை தட்டை யாதி பலபல விசைத்திட் டாங்ஙன்
வெடிபடு மருவிக் கோஷ்டி வித்தக விழவு கூரும். 50

படிப்படி யாயுயர்கற் படுகைமேற் படுகை யாகிப்
பொடிக்கொள்பூ வுலகி னின்று புவர்சுவர் லோகந் தாவும்
அடுக்குகட் கெதிர்நேர் கீழாம் அதலங்காண் பள்ளத் தாக்கும்
விடுப்புற நோக்குங் கண்கள் வியப்புற விருந்து செய்யும். 51

கல்லினைக் கைபி சைந்து கனியாக்கும் வித்தை மான
வல்லவா றெல்லாம் வன்கை வினையினால் வளம் படுத்திப்

பல்குதேச் செடிகள் நாட்டிப் பராபரித் துழைக்கும் மாந்தர்
எல்லவர் தொகையு மீண்டி யியலிடஞ் சைல பூமி. 52

இத்தகு வினைஞர் சார்பில் வெற்றிட மேது மின்றி
அத்தகு சைல பூமி அனைத்துமிவ் வீழம் பெற்ற
வித்தகப் பொன்னே மிக்கு விளை பூமி யாம்பொற்பிற்றாய்
மெத்து சீருலகுக் கெல்லாம் வியப்பொடு நயப்பு மூட்டும். 53

படைபடை யாக மொய்க்கும் பனிப்புகார்ப் படலத் தூடே
நடையிடு மக்கட் பொம்ம லியக்கமு நகர்ந்தூர்ந் தேறுந்
தொடைபுணர் தூமவண்டித் தோற்றமுங் காண்பார் நீங்க
விடை தரா வகைவிளைக்கும் விந்தைமேல் விந்தை சால. 54

குறவரே குறிஞ்சி மாக்கள் கொடிவள்ளி நாட்டல் வேட்டை
நிறமலி தினைவிளைத்தல் ஆதிய தொழிலென் நூற்குப்
புற நடை யாங்குறிஞ்சிப் புதுமைக ளினும் வி ரிக்கில்
நறவலர் குறிஞ்சி மாதர் நயனங்க ளென்ன நீளும். 55

வெற்றிவே ளிரா வணன்றன் வீரமா நகரு மிங்ஙன்
அற்றை நாட் சீதைவைகு மசோகமா வனமு மிங்ஙன்
இற்றிதன் சார்பி லென்று மிராமயா ணத்து வாய்மை
கற்றவாய் வினர்க ளாரக் காதல் செய் பகுதி யீதால். 56

வீரமா நகரென் றந்நாள் விளம்பிய திருந்த பாங்கர்
நார நீ ரருவி தூங்கும் நானுவோ யா வின் மேல்பால்
சீரணிபாறை யீட்டஞ் சிறையடித் தெழுமுன் னூக்கும்
கூருகிர்ப் பறவை யீட்டக் கோலமே குறிக்க வைகும். 57

எவ்வகைச் சிறப்புந் தன்பா லேய்ந்திடு மதிட்டப் பேற்றின்
மெய்வகை மகிழ்ச்சி பொங்கி விண்டுவாய் சொரிவ தேய்ப்ப
ஐவகை யிடத்திற் பொங்கி யாருநீர் வீழ்ச்சிக் காட்சி
இவ்வருங் குறிஞ்சி யின்பமெண்ணகத் தினிக்க நாட்டும், 58

மாப்பெரு மருவி வெள்ளம் மாணிக்க கங்கை காலு
போப்பயில் வளவை யாதி நதிகளாப் பெருகும் பாங்கர்
பூப்படை துருவிக் காணப் பொலியுமா ணிக்கச் செல்வம்
சீர்ப்பயில் குறிஞ்சி நீங்குஞ் செழுநதிக் கொணர்வா மன்றே. 57

தேளப்பயிர்க் கொவ்வாப் பாங்கர்ச் செவ்விநீள் படிகள் வெட்டி
ஏரீப்பட வுழுது வித்தி அருவி நீர் தடுத்துப் பாய்ச்சுஞ்

சீர்ப்புயர் வயல்கள் குன்ற மடந்தைதன் மருங்கிற் சூழும்
மாப்புணர் மேக லைப்பேர் மரகத வடங்கள் மானும். 60

வையமார் மணிகள் தம்முள் மாணிக்கம் போல் நாம் போற்றுந்
தெய்வமா ணிக்கமாகத் திகழ்வரு செவ்வேள் சேயோன்
ஐயநற் படைவீ டாறு மாண்டெமை யாள்வோ னீங்குக்
கையமர் வேலுந் தானுங் காதல்செய் துறையு மென்றும். 61

தண்டமிழ்த் தணிகை மானும் பண்டரா வளைச்செங் குன்றில்
வண்டரார் கடம்பன் கோட்டம் வானுயர் பெரதைக் குன்றில்
கொண்டசீர்க் குறிஞ்சிக் கோட்டம் கோ நர்ச் செவ்வி சாலுங்
கண்டியா திகளி லெல்லாங் கதிரேசன் கோட்டம் மேவி. 62

குமரனாங் குறிஞ்சிக் கோன் தன் கோமுறை வழுவா தென்றும்
அமருமிக் குறிஞ்சி மேன்மை ஆங்ஙன மிருப்ப இப்பால்
தமர நீ ருலகந் தன்னில் தனக்கிடம் பெருகக் கொண்டு
வமனனா யுலகு கொள்மால் வளர் முல்லை மாண்பு சொல்வாம்,63

பச்சிலைப் படலை மீதூர் பயோதரத் தெழிலுந் தன்பால்
அச்செனப் பதிய மேவி அணிகிளர் முல்லை நாளும்
இச்சக முண்ட மாயோற் கிருப்பிட மென்ன முன்னே
மெச்சிய தொன்னூல் வாய்மை மெய்ம்மையாம் பரிசு காட்டும் 64

மருவுசீர்ச் சைல பூமிச் சார்புவிட் டிடாதே நீடும்
பெருநிலப் பரப்பார் முல்லை பீடைகூர் புதர்கள் மண்டிப்
பெருமரத் திரள்க ளோங்கிப் பிறங்கிருட் புக்கி லாகி
வெருவருந் தோற்றந் தாங்கி விரவுதற் கரிதாய் மன்னும். 65

மனிதருக் கரிய வேனும் மனுத்தொகைக் கதிம டங்காம்
அனிதபல் கோடி ஜெந்துக் காஸ்ரய மாகிப் பார்க்குப்
பனிமழை பொழிவித் தோம்பிப் பயன்படு வளங்கள் தானும்
நனிமிக வுதவல் தூக்கி நாடெலாம் வளர்க்குங் காடு. 66

விலங்கி நீள் மருப்பு மேதி விழுந்தடித் துழக்கி யுண்டு
கலங்குநீர்க் குட்டைச் சாரற் கரடிமான் பன்றி யாதி
இலங்கிடப் பதித்த பாதச் சுவடுகள் இன்பார் முல்லை
விலங்கினத் தொகைம திக்க விதித்தசட்ட கம்போ லாகும். 67

இட்டிடைச் சிறுநெ றிக்கண் இலங்கடிச் சுவடு நாடிக்
கட்டழல் காலும் பன்றி கரடிமான் துஞ்சுஞ் சேக்கை

கிட்டி நின் றடர்க்கும் வேடர் கேளிர் தங் காமம் நாடி
ஒட்டி நின் றறுக்குஞ் செய்கை உலுத்தர்கள் தம்மை யொப்பர்.

சாந்தமுற் றுலவு மான்கள் தட்டழிந் தவல மெய்தக்
காந்து வெஞ் சினமேற் கொண்டு கதுவு நாய் இம்பர் மையல்
தீர்ந்தக வமைதி நாடித் தியானிப்பார் மனதை வெளவிச்
சேர்ந்து நின் றடர்க்குந் தீய ஐம் புலன் தகைய வன்றே. 69

குளச்செழுங் கரையை நாடிக் குழுவுட னணைந்து தங்கள்
இளசுகள் தமைநீராட்டி இளவெயில் பட நி றுத்தி
உளமகிழ் பிடிநீ ராட உடனின்று காவல் காத்துக்
கொளமகிழ் கரிகுடும்பப் பண்பாடு குறிக்கி னென்னாம. 70

மருந்துமூ லிகைதே டிப்போய் மகப்பேற்று வைத்யம் பார்க்கும்
திருந்துசீ ரறிவின் மந்தி சேர்கரு வுயிர்பி டிக்குப்
பரிந்தய லகலா துற்றுப் பந்தோபஸ் தளிக்குந் தந்தி
இருந்துவாழ் முல்லைப் பண்பா டெண்ணினுக் கினிதா மன்றே. 71

உரியசஞ் சலஞ்சாரீமந்தியுச்சாங்கொப் பணைந்தோர் நோக்கில்
பெரியதே னிறால்கை தொட்டுப்பயிலவார் ந்தொழுகு செந்தேன்
பிரியமாய்ச் சிசு வளர்க்கும் பெரியவெண் கிருகையேந்தி
அரிய பான்மையினி லூட்டி யதனொடு களிகொண் டாடும், 72

களிறுவாய்ப் பிளிறல் கான வேனத்து முர்முர் மேனி
வெளிறுவன் கரடிக் கூச்சல் விரகமார் மான்கூப் பீடு
களிமயி லகவல் கான வேங்கையி னுறுமல் முற்றி
முளிகழைக் காற்றுக் கீதம் முழங்கொலி தழங்கும் முல்லை. 73

பல்நிற மேகத் துண்டம் படர்கவ டிடைத்து டக்கி
எல்லையி லளவு மீப்போய் எழுந்துயர் விருக்ஷஜாலம்
முல்லையங் கடவுள் மாயோன் முன்னை நாள் யமுனை யாடும்
வல்லியர் துகில்க வர்ந்து வைத்திடு தருக்கள் மானும், 74.

சிற்பமாய்ச் சிவன் வாழ் கோட்டைச் சிகிரியா சிவன்றி ருக்கண்
உற்பவித் தெழுந்த செவ்வேள் உவந்தருள் உகந்தை யாதி
முற்படு குன்ற மங்கண் முல்லையிற் குறிஞ்சி யென்னச்
சொற்படு திணைம யக்கந் தோன்றிடக் குலவு மென்றும் 75

பொருமத கரிகள் தம்போற்
புழைக்கைம்மா முகங்கொள் தேவன்
பெருமை சால் பிள்ளை யாரைப்
பிரார்த்திப்பார் தம்மைத் தேர்ந்து
மருவிடா தகலும் மாண்பு
மதித்துவே டுவர்தா பித்த
உருமலி விநாய கர்கட்
குறையுளா மீழ முல்லை. 76

பம்புபல் தருக்கள் வீழ்த்திப் பற்றைமுட் புதர ழித்துச்
செம்புலப் படத்தி ருத்திச் சேனைசெய் முல்லை மாக்கள்
ஐம்புலக் காடு சாய்த்திட்டகப்பகைக் குறும் பழித்து
நம்பமெய்ச் சிவம்வி ளைக்கும் ஞானியர் தம்மை நேர்வர். 77

பொந்துறை நரிகள் பல்கிப் புற்றுறை சர்ப்பம் பாய்ந்து
முந்துறு புலிகள் முட்டி முடுகுமோட் டெருமை யானை
சொந்தமாய் நின்றறுக்குஞ் சுயநலம் பகையாங் காரம்
நந்துமா ணவமே யாதி நம்மியல் தெரித்து நிற்கும். 78

விட்டுவிட் டொன்று பற்றி விரிதரு வனங்கள் முற்றும்
பட்டலர் கிளைகள் யாவும் பாய்ந்துபாய்ந் தலையும் மந்தி
தொட்டதொன் றினில்நி லாது சுழன்றடித் துலக மெல்லாம்
வட்டமிட் டலையு நங்கள் மனத்தியல் தெரிப்பவாகும். 75

வருந்தித்தம் முயல்வால் வாழ்ந்து மற்றவர் தஞ்சம் நாடா
தொருத்தர் தம் சுயாதீனம்மற் றொருத்தராற் றடுப்புணாது
விருத்திக்கு விலங்கிடாது விதியென்றுங் கலங்கிடாது
திருப்தியோ டியலும் வாழ்க்கைச் சீர்தெரித் திடுமேர் முல்லை. 80

இத்தகு நலங்கண்டன்றே இம்மையோ டம்மை வாழ்வில்
மெய்த்தகு மமைதி வேண்டும் விழுமியோர் வன வாழ்க் கைச்சீர்
உய்த்துணர்ந் துற்று வைகி உயிருண்மை யுணர்ந்து ஞான
வித்தக ராகி வீடு மேவியுய்ந் துயர்ந்தா ரென்ப. 81

ஈழத்து முல்லைப் பாங்கர் ஈடில்சீர் ஜௌானிக் காட்டில்
சூழத்தீ விலங்கு துன்றுந் தொல்குகை மருவித் தம்மில்
ஆழத்துத் தியானம் மேவி அரிதின்மெய் யுணர்ந்து ஞாலம்
வாழத்தாம் வாழ்வார் செய்தி மாநிலம் வியந்து கேட்கும். 82

மேதகு முல்லை சார்ந்து வியலிடங் கொளப்ப ரந்து
தீதகல் மண்வளத்தாற் செழித்து நீர்க் கசிவான் மெல்கி

ஓதரு முயிர்வாழ் வின்பே ருபாதான மாகிச் சீர்த்த
கோதில் நெற் கழனி தாங்கிக் குளிர்புனல் மருதம்வைகும். 83

**வேறு**

தாவாத நெல்லுவளந் தழங்குணவுக் களஞ்சியமாய்ச்
சாவாத மூவாத சரித்திரச்சான் றுறு மீழத்
தோவாது வான்பொழி நீர் ஒருதுளியும் அவம்போகா
தேவாகு மிகுமன்னர் தேக்கிய நீர் நிலைபலவால். 84

மேட்டுநில மழைவெள்ளம் விரைந்தடித்து வரும்பாங்கில்
மோட்டுயர்வல் லணையெழுப்பி முடுகுநீர் தடையுண்ண
நாட்டுவியன் ஏரிபல நாடி நிலம் நெளிபாங்கில்
தோட்டமைத்த குளங்கள் பல துரவுகளும் பலபலவாம். 85

தளங்கொண்ட பூதங்கள் தமையேவல் கொண்டெங்குங்
குளங்கொண்ட கோடுயர்த்த குளக்கோட்டன் மாவலிதன்
வளங்கொண்டு தன்பெயரால் பராக்கிரம சமுத்திரமொன்
றுளங் கொண்ட ஒருமன்னன் உவர்போல்வா ரவர் பலருள். 86

கருதரிய கந்தளாய் மின்னேரி யெனும்பெயரில்
இருபெரிய நீர்த்தேக்கம் ஏற்படுத்து மாசேனன்
பொருவரிய தெய்வமெனப் பொங்கல் மடை பூசைபெறும்
மருத நில மாண்பதனால் வாழ்தகைய தீழமிது. 87

புலங்கெழுமு பூங்குறிஞ்சிப் புரண்டுபதைத் துருண்டிறங்கி
நலங்கெழுமு மருதத்து நல்வளமேம் படுத்த வென்றோ
தலங்கெழுமு சரிவெல்லாந் தலைதெறிக்கக் குதித்துமுல்லை
நிலங்கெழுமிப் பெருவெள்ளம் நீளப்பாய்ந் தலைவதுவே. 88

ஈட்டுமுல்லை வண்டல்கள் எழில் மருத மண் கொழுமைக்
கூட்டச்சத் தெனவாங்கி உரவுநீர் ஏரிகுளம்
கோட்டு நுனி வரையுயரக் கொளும் பரிசால் வேனிலினும்
வாட்டமற வயலோம்பும் வாழ்வுளது நீள்மருதம், 89

சாலுமுயர் பண்பைந்துந் ததும்புறுசான் றோர்களென
ஏல்வகைய அறத்தாற்றி னிரும்பொருள் சேர் செல்வரென
ஆலியநீர் வளத்தோங்கி யமைதியுறு குளத்துடைமை
கால்வழிசென் றுற்றேறிக் கழனிபுகுந் திதம்புரியும். 90

நீர்மருவு கழனியெல்லாம் நிரந்திடுசே வினம்பூண்ட
ஏர்வரிசை படவுழுதிட் டிலங்குமண்கீழ் மேலாக்கிக்

காரெருமை பிணைத் திறக்கிக் களியிழுது படக்குழைத்துச்
சீர்செயும்பே ரொலியோவா செழுமருதப் பரப்பெல்லாம். 91

வயல் வரம்புங் குளக்கரையும் வளர்மருத நீழலினும்
அயல் விலகா ஐங்கரற்கும் அரிஹரபுத் திரனுக்கும்
பயமுறுபத் திமைவழுவாப் பரிவுறுபூ சனையாற்றி
வயலுழவர் சேற்றுவயல் நாற்று நடத் தொடங்குவரால், 92

தாற்றுறுபைங் கதலிநிரை காற்றமுக்கத் தலைகுனிந்திட்
டேற்று நிமிர் தோற்றமென எண்ணில்மட மின்னார்கள்
பாற்படுபன் னிரைமேவி நாற்று முடி நனைத்துதறிச்
சேற்றினிடைப் பதித்தசையுஞ் செயற்றிறனே போற்றல் பெறும் 93

தேர்வயல்மா வரம்பணையுந் தெய்வத்தி னருள் வளமும்
வார் குளிர் நீர் வயல் வளமும் வயலுடையான் சீர்வளமும்
சீர்மருதப் பண்ணியலிற் செழிக்குமவர் பாட்டிசையால்
பேர்மருவு கழனியெலாம் பெருமினிசைத் துழனியெழும், 94

வளர் காதற் பயிர்நாட்டி வாழ்க்கைவயல் விளைவிக்கும்
இளமாதர் பலரிளைஞர் இணைந்தியலிவ் வயல் நடுகை
களமாருங் காதலிலீ லைகள் பலவுங் கலந்தணைவார்க்
குளமாருஞ் சுவையுணர்வுக் கூட்டமுமாம் நாட்டுங்கால். 95

கூர்த்தநய னக்கடைகள் குறுக்கோட மறித்துவெட்டி
ஆர்த்திகெழு மிளைஞருளத் தறியாவொர் புதிருணர்வு
சீர்த்துவரத் திரித்திழுக்கும் வயன்மகளிர் செவ்விமுற்றும்
பார்த்திரசித் திடற்கென்றோ மருதவிறைக் காயிரங்கண். 96

குழைசேற்றில் நாற்றூன்றுங் கொவ்வைவாய்ச் செவ்வரிக்கண்
மழைபொருவுங் கூந்தல் நலார் வயல் வினைஞ ருளக்காதல்
விழைவூன்றும் மதனவச வித்தகந்தாங் கற்கவென்றோ
தழைசிறைவெண் குருகுபல சரிப்பதவ ரடிப்பிறகே. 97

வாலிசர்கள் தலையெடுப்பு வாலியர் வாழ் பகையாதல்
ஏலவறிந் தகற்றுமறி வியலாளர் செயலேய்ப்பச்
சாலிதலை நிமிர்தரவே தாமுநிமிர் வன்களைகள்
கோலிவளைத் திழுத்தகற்றுங் கோல்வளையார் பரிவொழுக்கும் 98

நட்டு நிமிர் குறுநாறு நறுவெண் தூர் சேற்றெறிந்து
பட்டுமினு மினுப்பொளிரப் பரபரென்று பசப்பேறி
மட்டமுமோர் பலகிளைத்து மாநீல முகில் பொழிதோ
றெட்டிநிமிர்ந் துயர் வனப்பும் எனைவோர்க்குங் கண்விளக்காம் 99

தாய்பரிசப் பயில்வினிமை தழுங்குமுகத் தயவினிமை
வாய்மிழற்றுஞ் சொல்லினிமை வளர்த்தி தரக் கொழுகொழுக்குஞ்
சேய்களென உழர்த்தியராற் சேரினிமை யவைமூன்றுந்
தோய்மகிழ்விற் செழித்தோங்கித் துலங்குபயி ரெழு நலமும். 100

தாலிசைக்குந் தாய்பக்கந் தலைசாய்த்துக் கொளவணையும்
பாலியர்போல் வயன்மாதர் பகருழத்திப் பாட்டிசைக்க
ஆலியமென் தலையசைத்திட் டவர்மீது சாய அசை
சாலியிளம் பயிர்மேதா விலாசமுமோர் தனியழகே. 101

ஆற்றுவண்டல் மிகுபடுகர் ஆனைமறைப் பளவுமுயர்ந்
தேற்றுவளர் செஞ்சாலி யிக்குவன மெனத் திகழச்
சாற்றுவள மூற்றுகன்னல் தழைபூக மெனக்கிளர்ந்து
தோற்றுமெழில் கம்பளை தம் பலகாமப் பரப்பெல்லாம். 102

மெய்ப்போக மெனவுலகு வீழ்புலன்கள் விழைபோகத்
தெப்போக முந்தருதற் கின்றியமை யாநெல்லின்
முப்போக விளைவாற்றும் விளங்கொலி நீர் வியன் மருத
வைப்பதனால் ஈழமிது மெய்ப்புகழார்ந் துயர்ந்ததுவே. 103

**வேறு**

பாய தீங்கனிச் சோலைகள் பழனங்கள் கெழுமிச்
சேய வாழ்வளந் திகழ்தர நிகழுமா மருதத்
தேய வெல்லையி னப்புறத் தது திரை நெடு நீர்
நேயமுற்றணைந் தாயபல் வளங்கொழி நெய்தல். 104

நீல வார்கடற் றிரைநிரை யுழக்கிமீ தூருங்
காலி லாக்கலம் பலபல கரை கொணர்ந் திறக்கும்
மேலை நாட்டவுங் கீழைநாட் டவுமெனும் வளங்கள்
சால மிக்குயர் தகையது தயங்குசீர் நெய்தல் 105

குன்று தோறுநின் றொன்றுறு விரைவின்மிக் கிழிந்து
நன்று கூர்மரு தத்திற்றன் நல்வளந் தேக்கி
நின்று வற்றிடா நதிபல நிரந்து நீர்ச் சலதித்
துன்று மாபெருங் கழிமுகம் பலவுள நெய்தல், 106

கழிமு கத்தணை யாற்றிள நங்கையைத் தன்பால்
ஒழிவில் வெண்ணுரை விதானமீ திட்டெதி ரூருஞ்
சுழிமு கச்சங்க மங்கல நாதமோ டன்பாற்
கொழிபு னற்றிரை குதுகல வதுவையின் மருவும் 107

யாற்று நங்கையை யெழிற்றிரை நம்பிகொள் வதுவைப்
பேற்றி னாலன்றோ பிறங்குபல் லாயிர கோடி
வேற்று வேற்றுருச் செந்துக்கள் வியன்பெருங் கடல் வாய்த்
தோற்று மென்றிடில் தம்பதி யுவரென்கை சழக்கோ. 108

நணிய ஈங்கிவர் சேர்க்கையி னாங்கணுற் பவிக்கும்
பணிலம் முத்துறு சிப்பியே பவளமே சுறவம்
கணித மில்குவை மீனினம் கருதெழின் மணிகள்
அணிய நல்வள மடங்கலு மிடங்கொளும் நெய்தல். 109

தத்து நீர் நதிக் கெதிர் நதித் தன்மையி னாழி
மெத்து நீரலை வியனிலம் நெளிவழிப் படர்வ
எத்து மோர் பய னின்றியும் மானிடப் பொதுமைக்
கொத்தி யல் நரும் உலகிதி லுளரெனல் காட்டும். 110

நெளிநி லத்தலை நீர்தடுத் தொரோவழி யுப்பங்
கழியென் பல் பல பாத்திகள் கோலிமுன் பாய்ச்சி
அளிய ஊண்சுவை யமுதமொன் றாக்கிடு மளவர்
எளிய தொன்றுளு மரியகாண் மேதைய ரேய்ப்பர். 111

பூத்துப் பொங்குயர் வெண்மையி னாற்பொலி யுப்புப்
பாத்தி காண்குநர் பரன்சிவன் நீற்றலர் திருவின்
ஆத்தி கத்திருக் கோலமே காண்டலின் நெய்தற்
பேர்த்த பூமியும் பிரான்நினை வுணர்த்தலிற் பிசகா, 112

விரித்த நீள் வலை சுருக்கியீர்த் துதிர்த்தறக் கொட்டி
வரித்த மாபெரும் பறிகள் வாய் முட்டிடத் தேக்கிப்
பரித்த குற்றுயிர்ப் பதைப்பறாப் பல்லினக் கொழுமீன்
தரிந்த ஓடங்கள் தலைத்தலை வந்துவந் தணைய. 113

விட்டு விட்டொளிர் விரிமணல் வெள்ளிப்பா ளம்போற்
கொட்டு மீன்படுங் குற்றுயி ரவத்தையு மோர்பால்
முட்டி மோதிமுன் பேரம்பே சிக்கொடே முடுகும்

பட்டி னத்துமீன் பகருநர் பரபரப் போர்பால். 114
பதைக்கு மீனினும் பாய்ந்து நீர்ப் புகுந்திட வொட்டார்
தகைத்து வேலிசெய் தார்க்குநர் தழையொலி யோர்பால்
மிகைத்து நீள் சிறை விரித்திழிந் துணங்கல்வாய்க் கொடுமேல்
உகைக்குங் காரண்டம் உவணங்கள் கிளரொலி யோர்பால், 115

அனைய வாகிய வொலிபல வார்த்துவான் தூர்த்த
பனைம டற்றெங்கங் கீற்றொலி பலவுமாண் டடக்கிப்
புனைபொற் றாதுகு புன்னையஞ் சோலைசூழ்ந் ததிர்ந்து
கனைக டற்கொலி யிலைகொலென் புதுமை முன் காட்டும். 116

ஓர்த்த ஐம்புல வேட்டையி னுலவுமுல் லாச
யாத்தி ரீகர்த முளங்கொள வீர்த்தணைத் தீழச்
சீர்த்தி நாற்றிசைச் சென்றுற வேற்றி நின் றோங்குங்
கீர்த்தி யாலுயர் நேர்த்திய தியாம்புகழ் நெய்தல். 117

நன்ன யந்தெரி பண்டைநா கரிக வுத் துங்கத்
தன்மை சால்பல தூர நாட் டொடுகடல் வணிகத்
தொன்மை நீடிய துறைமுக நகர்வள மார்ந்து
பன்ன லந்திகழ் பாங்கின தீங்குள நெய்தல். 118

இன்ன வாறுள நெய்தலி னொருபுடைத் தெனினும்
உன்னு நானிலத் தியற்கையும் ஒருங்குறக் கெழுமித்
தென்னர் நற்றமிழ் திணைமயக் கென்னமுன் தெரிக்கும்
அன்ன பான்மையி னமைந்ததிங் கணியதோர் நகரம். 119

சொன்ன சீர் நக ராவது சுருதிகட் கெட்டா
முன்ன வன் திருக் கேதுவீச் சரன்முழு தளிக்கும்
அன்ன மென்னடைக் கௌரிநண் பாதரித் தென்றும்
மன்னும் மாதுவஷ்டாபுரி யதன் வளம் வகுப்பாம். 120

**நாட்டுப் படலம் முற்றும்**
**ஆகத் திருவிருத்தம் 162**

உ

## நகரப் படலம்

அருவு மாகிமற் றுருவுமாய் அவ்விரண் டினுக்காங்
கருவு மாயுறு கண்ணுதல் கனவினுந் தனைவிட்
டொருவு மாறிய லாத்திருக் கேதுவீச் சரச்சீர்
மருவு மாண்பின துருவுலா மாதோட்ட நகரம். 1

தத்து நீர்க்கடல் முத்தெனத் தரணிமீக் கூறும்
மெத்து சீர்மலி யீழத்து மேதகு மாண்டு
பத்து நூறுகள் பலகடந் தேறிய பழமைக்
கெத்து மோர்குறை யியம்புதற் கரியதிந் நகரம். 2

ஆர்த்தி கூர்தரு மகஸ்தியன் புலஸ்தியன் கேது
தீர்த்த யாத்திரைப் பார்த்தனே செயசிறீ ராமன்
சீர்த்த மாமயன் செல்விமண் டோதரி யிங்ஙன்
நேர்த்தி செய்தடை நீள்தவத் தியல் நலந் தேரின். 3

வேட்ட மாதவம் வேட்டவா விரைந்துற வெடுத்து
நீட்ட மாதவ நாயகி பதியிலிட் டவையோ
ரீட்ட மாகவைத் தோம்பலி னாற்கொலோ விதுமா
தோட்ட மாயதென் றெழுகருத் தோட்டத்தென் தவறாம். 4

மாரு தம்பறித் தற்றைநா ளிடறிய வடமா
மேரு தன்சிக ரந்தனி லொன்றுதென் கயிலைச்
சீரு மெய்தியஃ தங்ஙனே செப்புமா தோட்டப்
பேரு மெய்திற்றென் பெருமைக்கு மருகமற் றிதுவே. 5

மான முத்தமி ழுடைவெலாம் மட்டித்து வடித்தோர்
ஞான வாய்மையி னாற்பிழிந் தூற்றுகா ழியர்கோன்
கான வின்னிசைக் கீதந்தோ றாட்சிபெற் றமர்தற்
கான பான்மையு முடைத்துமா தோட்டம் தறியின். 6

தீது தீர்தவத் தெய்விகச் சைவரல் லாரும்
போது மன்பினி லிங்கிதன் புனிதமோர்ந் துரையோ
வாது மாதித்த வெனமதித் தழைத்துள ரென்றால்
ஈது சார்புகழ் யாம்புக லளவினுக் கெளிதோ. 7

ஈழ மாநிலத் தியல்வட மேல்கரை சார
ஆழ நீள் கடல் மருங்கினி லலகில்பல் கலங்கள்
சூழ வந்துற முந்தொரு காலத்து வையம்
வாழ வாணிபத் தலைமைகொள் நகருமற் றதுவால். 8

மெத்து சீர்மலி மேலை நாகரிகத்தி னுயர்ந்த
மத்தி யத்தரைக் கடலிரு மருங்கினுந் தம்பேர்
வைத்தி லங்கிய ரோம் கிறீஸ் யவனமும் எகிப்தும்
உய்த்த மாண்கலம் உலப்பில ஓவிலா தீண்டி. 9

வித்த கத்தொழில் விசித்திரப் பண்டங்கள் பளிங்குப்
பத்தி ரத்தொழிற் பாத்திர வகைகள்பற் பலவும்
உத்த மத்தனி யோகநற் புரவிகள் நிரையும்
இந்த லங்குளி ரோகைமீக் கொளப்பரிந் தீனும். 10

மூளும் போர்ப்பகை முறிந்திட முடுகிவென் றாடி
மீளும் பாங்கின விண்தொடு மைக்கிரி யனைய
வேழும் பற்பல வியன்பெருங் கோட்டைகள் பொருவும்
ஈழக் கப்பல்கள் இடங்கொள மிகத்துறுத் தின்னும். 11

விலைம திப்பரு மாணிக்கம் முத்துநல் மிளகு
கலைந லங்கொளக் களிநடம் பயில்மயில் மந்தி
சிலைவ டிக்சொள்சிம் பங்களு மளவில வேற்றி
அலைதி ரைத்தலை மலைபடர்ந் தெனவசைந் தகல்வ. 12

பொன்னொ டும்வந்து பொருளொடு மீள்வன பலவும்
பொருளொ டும்வந்து பொன்னொடு மீள்வன பலவும்
பன்னு பாய்மரக் கலங்களோர் பலபல வீண்டும்
தன்மை மற்றிதற் கற்றைநாள் ஏகபோ கமதாம். 13

ஈழத் துட்புக வெத்திசை தனிலுநின் றணைவோர்
ஆழி தாண்டிவந் தணுகுதற் கொரோர்துறை யிதுவே
ஈழத் தெத்திசை யினுமிருந் தயற்புலம் படர்வோர்
ஆழி தாண்டவந் தணையொரோர் துறையுமற் றிதுவே. 14

இந்த நீர்மையி னெய்தியோ ரிராயிர மாண்டு
வந்து சேர்ந்தன வாணிபப் பண்டங்கள் குவைஇ
எந்த நாட்டினர் தாமுமெஞ் ஞான்றுமே துன்ற
முந்த இப்புவி முழுதுக்கோர் சந்தையு மிங்ஙன் 15

வாய்ந்த காரணம் பற்றிமா சந்தையா யதுமேல்
தேய்ந்து மாந்தையெ னாமரீஇச் செந்தமிழ்ச் சங்கத்
தாய்ந்த தீஞ்சுவைச் செய்யுள்தோ றாட்சிபெற் றிலங்கித்
தோய்ந்த தொன்மையுந் தனக்குண்மை தோற்றுமிந் நகரம். 16

சந்தை யாமள வன்றியுந் தன்னிகர் வரிய
முந்தை வல்லரண் தானுமொன் றெய்திய வகையால்
சுந்த ரப்பெயர் சோமாந்தை யென்றும் மீக்கூற
வந்த திந்நகர் மற்றதன் விரிவுபிற் காண்டும், 17

### வேறு

அகில லோகஞ்சார் சந்தை யாதலின்
அகில லோகத்தார் அகில நாணயம்
அகில லோகமும் அதிச யித்திட
அகில மாந்தையும் இலகக் காண்பரால். 18

ஏறு மாறுகொள் ளிருப தாம்வகை
தேறு நாணயத் திறங்க ளித்தலத்
தேறு மாய்வியல் நிபுணர் கொண்டதாக்
கூறு வாய்மையா லூர்ஜி தம்மிதாம். 19

இற்றை மாந்தையு ளியலு மோர்பலர்
மற்ற நாணயம் பலதொ குத்துளார்
பெற்ற நாணயங் கொண்டு செல்வன்பே
ருற்ற வொருவர்பே ரூருங் கேட்டுமால், 20

இற்றி தாகமற் றிந்த கர்முனாள்
கற்ற நுண்புலக் கண்ணுள் வினைஞராற்
பெற்ற மேன்மையும் பிறவு முண்மைநூல்
சொற்ற வாற்றினாற் சிறிது கூறுவாம். 21

### வேறு

சுராட்டெனத் தூலமாகித் தொல்லுல கனைத்தினுஞ்சம்
மிராட்டெனச் சூக்கமாகி இதற்குக்கா ரணமாம் பண்பால்
விராட்டென மிளிர்பிரம்மம் மேவுமைம் முகங்கள் தாங்கி
ஓராட்குள பொறுப்பி னிங்ஙன் உலகெலாந் தானாய் நிற்கும். 22

மன்னுமம் முகங்க ளொன்றுக் கொருவராய் மனுமுன்னாகச்
சொன்னவை வரையுந் தோற்றித் தொழின்முறை சிருட்டித்திங்கே
துன்னுமா ருயிர்கள் யாவுந் துரிசறு வாழ்வுமேவ
என்னவேண் டுமெனினு நல்கி இயல்புறக் காப்பிரென்றே. 23

நன்னய மாக வீந்த வரத்தினா லவரை வோரும்
கொன்னுறு மயமே தாரு சிலையொடு கொழுஞ்செம் பாதி
பொன்னெனு மவற்றிற் சிற்பப் புதிர்பல விளைக்கும் விஸ்வ
கன்மர்கள் தம்மைத் தோற்றிச் சொன்முறை முயல்வாரானார் 24

மனுமயன் தொட்டா சிற்பி வாகுசேர் விஸ்வஞ் ஞன்னே
எனுமிவர் ஐவருக்கும் இருஷிகோத் திரசூத் ரங்கள்
பனுவலார் வேதஞ் சக்தி பகரதி தெய்வ மோடு
தனிதனி பிரவ ரங்கள் தகவுற வகுத்து நல்கி 25

மற்றுமப் பிரமந் தானே வழங்கிய வைதி கப்பாங்
குற்றிடு சிகைநூல் தாங்கி உயர்குல வொழுக்கம் பேணி
முற்றுற வேத வாய்மை முழுதுணர்ந் துயிர்க்காங் குற்றச்
செற்றங்கள் தீக்ஷித் தோட்டுஞ் செகத்குரு நிலையு முற்றார், 26

இத்தகு திறமை யானே இவர்களை வோரும் இந்த
மெய்த்தகு முலகுக் கெல்லாம் வேந்தராம் நிலையு மெய்திச்
சத்திய நெறியி னின்று தர்மங்காத் துலக முற்றும்
மெத்திய கீர்த்தி நீழல் விளங்கின ரென்ப மாதோ. 27

இந்துமா கடல ளாவும் லெமூரியாக் கண்ட முற்றும்
அந்தநா ளாட்சி செய்தோ ராரெவர் பிறரு மன்றால்
நந்தலில் நக்கர் நாகர் இயக்கரார் சேரர் சோழர்
முந்துபாண் டியர்க ளார்மற் றிவரலா ரெவரு மின்றால். 28

மனுமயன் துவட்டா வென்போர் வருமுறை இயக்கர் நாகர்
நனவுறு நெற்றிக் கண்ணால் நாமமார் நடக்கர் நக்கர்
இனுமிவர் நிரலே சோழர் சேரர்பாண் டியர்களீழப்
பனவுறு ரட்டை மூன்றுக் காள்நரு மிவர்தா மன்றே. 29

இரசரட் டையிலெல் லாளன் மனுநீதி எழிலார் புத்தர்
வரவெதிர் மாய ரட்டை வளாகத்து நாக ராட்சி
உரவரு ருகுணை யுத்த வித்தைசா ரியக்கர் மாட்சி
பரவுறு வரலாற் றீது பட்டவர்த் தனமாம் பார்க்கின். 30

வீரவாள் வீரபத்தி விறல் கொள வீணையேந்தி
வீரமா நகரி ருந்து வியத்தக வுலகை யாண்ட
வீரரா வணனு மிந்த வீரமார் விசுவ கன்ம
வீரராந் துவட்டா பேர னாவது துணியும் விஸ்வம். 31

அன்று தொட் டின்று காறும் ஆய்விய லறிஞர் காட்டும்
நன்றுகூர் துணிபும் விஸ்வ புராணமும் நாடிக் காணின்
வென்றியார் காந்தக் கோட்டை மிடுக்கொடு மாந்தை நாட்டைத்
தொன்று தொட்டாண்டோர் தாமும் இவரென்றே துணிவர் மேலோர்.

வாணிப உலகச் சந்தை யெனுங்கருத் ததனில் மாந்தை
ஏணுய ருலகி லின்னுஞ் சிலவுள வெனினு மீழங்
காணுநன் மாந்தை யொன்றே காந்தக்கோட் டையுமொன் றுற்ற
மாணுயர் ராஜதானி நாமமும் பொருந்திற் றென்ப. 33

செம்பினா லியன்று வர்ணச் சித்திரக் கொத்த ளங்கள்
பம்பிநற் பதும ராக மரகத மேடை பல்கி
உம்பரு மருளும் ஊசிக் காந்தயந் திரம்பொ ருந்தி
வம்பலர் கலங்க ளீர்த்து மறுக்குமக் காந்தக் கோட்டை 34

செம்பினா லியன்ற கோட்டை சிறந்தமை பொருளா வீது
இம்பர்செப் பரணென் றாகி இலங்கு சோவரணாய் மாறி
அம்புவி வழக்கில் மாந்தை சேர்ந்துசோ மாந்தை என்றவ்
வும்பரா ருரோமர் வாக்கில் உரைக்குஞ்சோப் பட்ட மாய்த்தே. 35

கருதலர் கலங்க ளீர்க்குங் காந்தயந் திரம வற்றின்
அருவலிப் படைகள் வெளவி அக்குவே றாணி வேறா
உருவழி கலத்த ராகி யுவருட்கக் கலக்கு நீரால்
மருவலர் மருவா மாண்பின் மலர்ந்தது மாந்தை ராஜ்யம். 36

மருவலர் கலங்க எல்லா மறுகலம் வலிந்தி முத்து
மருவுறு யாத்திரீகர் மயக்குற வசீக ரித்துப்
பொருவறு புலநு கர்விற் புகுத்திப்பே துறுத்தி யாளுங்
கருமமும் வலதிக் காந்தப் பொறியெனக் கழறல் கேட்டும். 37

ஆகச வெளிய ளாவும் அநுமந்தத் துவச மோங்கி
ஏகமாந் தமிழி ராச தானியா மீழ மாந்தை
போகபூ மியினு மேலாம் பொற்பின தொருகால் வந்து
போசுவென் றழைப்ப தென்னப் பொலிந்ததாற் காந்தக் கோட்டை38

விளங்குயர் விசுவ கர்ம நாடகம் மாந்தைப் பள்ளு
களங்கமில் பாளி நூல்கள் விசுவப்பேர்ப் புராண மற்றும்
உளங்கொளு முரோம சீன யாத்திரி கரும்மீக் கூறுந்
தளங்கொளுங் காந்தக் கோட்டை தயங்குறத் தயங்கும் மாந்தை.39

வாய்ந்தசீர்க் காந்தக் கோட்டை வகுத்திடு தொழில்நுட் பத்தின்
ஆய்ந்தநுண் புலமை மாண்பில் அரியநுண் கலைகள் இன்பம்
ஏய்ந்திட இயற்றும் பாரம் பரியமுன் னோடிப் பாங்கில்
மாந்தைக்கம் மாளர் கீர்த்தி மகிதலம் மகிழ்ந்து போற்றும். 40

அல்லுறழ் கருங்கற் சிற்பம் அலகில்பல் லுலோகச் சிற்பம்.
பல்வித தெய்வ மூர்த்தப் படிமங்கள் வடிக்குந் தொன்மை
மல்லமா புரத்துச் சிற்பர் மற்றவற் றியல்மாண் பெல்லாம்
சொல்லரு மீழ மாந்தைக் கொடையெனல் கேட்டும் இன்றும், 41

இத்திற மிந்த மாந்தை வாழ்பதி யாகக் கொண்ட
அத்திற மதற்குத் தாமே ஆள்பதி களுமாய் வாய்ந்த
பத்தர்கள் முதலோ ராகும் பஞ்சகம் மாளர் தம்மால்
மெத்துசீர் மாந்தை பெற்ற மேன்மையோ ரளவிற் றன்றால். 42

**வேறு**

ஒருசி றைப்பட வுறையினு முளமுழு வுலக
விரிவி னின்றுசற் றொருவிடா நோன்மைசா லுணர்வின்
மருவு மேலையோர் வாழ்விய லம்சங்கள் தோறும்
அரிதி னவ்வுணர் விலங்கிட வாழ்வகைக் கொப்ப. 43

அறிந்தி டப்படு முலகங்க ளொக்கச்சூழ் சுவராச்
செறிந்த சக்கர வாளநற் கிரியுமக் கிரியின்
புறந்த தும்புசீர்ப் புறவாழிக் கடலுமாம் பாங்கிற்
சிறந்த பேர்நக ரரணஞ்சூழ்ந் தமைந்திடு மகழி. 44

நாலைந் தோசனை யான்றுயர் நலங்கிளர் திருவின்
மேலை வானநன் முகடுற நிமிர்ந்துநின் றிந்த்ர
சாலம் போல்நிகழ் மாந்தைப்பே ரரணத்தைச் சூழும்
கோலம் மேவிய குண்டக ழித்திறங் குறிப்பாம். 45

**வேறு**

தன்னீர் மையினால் தமிழர்தனித் தலைமா நகரென் றுலகேத்த
மன்னீர் மையினால் மிக்குயர் விண் மருவு புகழார் மாந்தை கொண்ட
நன்னீ ரகழி யதற்கப்பால் முந்நீ ரகழி யென்றிரண்டும்
பன்னீர் மையினும் நகர்ச்சிப்ப நூலோர் பகரும் பண்பினவால்

**வேறு**

ஆழங்காண் பருமைக் கும்மேல் அகலங்காண் பருமை யாய்மண்
கீழங்காண் கேழல் தானும் கிட்டாக்கீ ழெல்லை கிட்டி
நாளங்காண் கமலந் துற்று நரகவாய்க் கராக்கள் துன்றி
ஈழங்காண் மாந்தை நன்னீர்க் குண்டகழ் இலங்கும் மாதோ. 47

முள்ளியோ டடம்பு கைதை முழுதொருங் குறநெ ருங்கித்
தெள்ளுநீர்த் திரித்த லைக்குந் திமிங்கிலத் திரள்க ளோடு
கொள்ளுங்கூர்ங் கோட்டு மோட்டுக் கோட்சுறா வினமலிந்தே
எள்ளரும் வலுவிற் றாகி யிலங்குமுந் நீர்க்கி டங்கு, 48

அறிபொரு ளுணர்ந்தோ ருள்ளத்தமை தியுற்றலை வொன் றின்றி
நிறைகலம் போறல் காட்டும் நேயநன் னீர்க்குண் டாழி

சிறிதுமுள் ளமைதி யின்றித் திரிந்தலை மனத்தர் போன்று
பிறிவறத் திரைந்து தேம்பித் தளம்புமுந் நீர்க்குண் டாழி 49

நல்லவ ருள்ளம் போல மிகத் தெளிந் தாகா சத்தின்
எல்லொளி வண்ணங் காட்டும் இலங்கிடு நன்னீ ராழி
அல்லவர் சிந்தை போல அழுக்கடைந் தறத்த டித்தே
எல்லொளி தன்னிற் றோன்ற இடந்தரா முந்நீ ராழி 50

இந்நில நின்று காண்பார்க் கெப்படித் தப்ப டித்தாய்ச்
செந்நிலை நிற்குங் காந்தக் கோட்டையி னெழிலத் தேவர்
தந்நிலை யிருந்து காணத் தலைகிழக் கிட்டுக் காட்டி
அந்நிலை நன்னீ ராழி யதிசயம் விளைக்கு மென்றும், 52

செவ்வியர் செவ்வி யில்லா ரிருவருஞ் செகத்துறுப்பா
மவ்வியல் கடைப்பிடித்திட் டதன் நலக் குதவு மாபோல்
இவ்வகை தன்மை வேறா மிரண்டின அகழி மாந்தை
பவ்விய மாக வைகப் பாதுகாப் பளித்து மன்னும் 52

தோலாத நாவின் மேன்மைத் தொல்பெரும் புலவர் செய்யுள்
நூலாறு மடுப்ப நூலும் நோன்மையுற் றொளிர்வ தென்னப்
பாலாவிய முத வெள்ளப் பாய்ச்சலி னேர்கொள் மாந்தை
மேலான நகரச் செவ்வி மிகைபடா வகைவி ரிப்பாம். 53

விராவுசீ ரீழப் பிற்றை வரலாற்று முதல்வ னாகப்
பராவுசீர் விஜயன் சேர்ந்த அன்றுதொட் டின்று காறும்
இராயிரத் தைத்நூ றாண்டு கழிந்தன விவற்றுள் முன்னை
ஒராயிர மளவும் மாந்தை யுற்றசீ ருரைத்தும் முன்னால். 54.

அன்றைய மாந்தை லோகத் தகிலநா கரிக முற்றும்
துன்றுயர் நகரா மென்கை சொற்றனஞ் சற்று முன்னும்
நன்றறி கிரேக்கர் ரோமர் நாமமார் யவனர் சீனர்
என்றிவர் பலரோ டீழர் இந்தியர் வாழ்வாம் மாந்தை. 55

மற்றிதற் கேய்ப்ப வன்னோர் மாந்தைநல் வீதிதோறும்
பற்றுதம் வழக்கிற் கேற்பப் பாணிவெவ் வேறுதோன்றத்
துற்றிய மனைகள் தொல்லை மனையியல் வகைமை முற்றுக்
குற்றமா திரிநி ரைத்த வொருகாட்சிச் சாலை தோற்றும். 56

உருவினில் விதம்வே றாகி யுடைநடை பாவனை செய்
கருமநல் விதம்வே றாகிக் கலைகலா சாரப் பண்பில்

ஒருவர் போ லொருவ ரின்றா மெனினுமுள் ளுணர்வுப் பண்பால்
மருவியோர் குலமாய் மக்கள் வாழ்ந்திடம் மாந்தை யென்ப.

மூவகை நகரமைப்பும் முறைமையி னேய்ந்த மாந்தை
மாவியல் வளாகங் காணும் புறநகர் மன்னு றுப்பாங்
கோவியல் சாதுரங்கம் குறைவற நிரவித் துன்றும்
பாவிய இடப்பரப்பாற் பரவச முறுத்து மாலோ, 58

உன்னமித் துயர்ந்த குன்ற மொருங்குவாய் பிளந்த வென்ன
முன்னிமிர் காட்சி நல்கி மூசுகை வீசு கர்ணக்
கொன்னுறு களிறு துஞ்சுங் கொட்டாகா ரங்கள் மேவி
மன்னுபே ரச்சங் கூர மதிமயக் குறுக்கு மாலோ, 59

வீசுறு கவரி யென்ன விளங்குவா லசைத்த சைத்துத்
தேசுறு முருவிற் பல்கித் திக்கிட்டு விழிப்பார் தங்கண்
கூசுபன் னிறத்த வாகிக் குரங்கொடு நிலங் கிளைக்கும்
ஆசில்சீர்க் குதிரைப் பந்தி யணிகளும் பலவா மங்கண், 60

ஆர்செறித் தாழி கோத்திட் டகன்பெருந் தட்டு வீக்கிக்
கூர்படு சிகரம் வைத்துக் கூவிரங் கொடிஞ்சி யார்த்த
தேர்நிலை பலவுஞ் சீர்த்த செழும்பயிர் விளைவு தேக்கும்
வார்வயல் மருதந் துன்றும் வரம்பில்நெற் கூடு மானும். 61

எதிரும்போர்க் கிடையூ றெய்தா திருந்திடத் தெய்வம் வேண்டி
முதிர்தசை முறுக்கு வாய்ந்த மொய்ம்புரங் கூர்ப்பத் தட்டிச்
சதிர்பட நடந்து முட்டித் தம்மிலொத் திகைபார்த் தாடும்
அதிர்கழல் மள்ளர் வாழும் பாடிவீ டநேக மங்கண் 62

இன்றுங்காண் பரிசி னீங்குற் றிலங்கிடு மானைப் பந்தி
வன்றுர கங்கட்கேயும் வையாளி வெளிபோர்க் கப்பல்
ஒன்றுறச் சமைத்த திங்கென் றுணர்த்துவங் காலை யாதி
தொன்றுறு புறநகர்க்குச் சொந்தமா யிருந்த வென்ப, 63

நாற்படை துவன்றி வைகும் நாமநீ ளிருக்கை யன்றிப்
பாற்படு மவற்றின் பாகர் பணிக்குநர் ஏவல்கொள்வோர்
நூற்படு விதியி னான்ற நோன்படைக் கலம்ப டைப்போர்க்
கேற்புடை யிடங்களாக இயைபவும் பலவே றுண்டால் 64

**வேறு**

ஆனை யேற்றமுங் குதிரை யேற்றமும்
மான வீரரைப் பயிற்று வோர்பலர்
சேனை யிற்புகுஞ் சிறுவர் அஸ்திர
மான கைக்கொளக் கற்பிப் பார்பலர், 65

புதிய களிறுகள் புரவி கள்களத்
தெதிரும் போரினில் இடுச மிக்ஞைகள்
கதிவி கற்பங்கள் கருத்திற் கொள்வகை
அதிசி ரத்தையிற் சிட்சிப் பார்பலர். 66

கான மஞ்ஞைகள் கானச் சேவல்கள்
மான மோத்தைகள் மலைந்து மோதுதற்
கான பான்மையின் மூட்டி யவ்வித்தை
சேனை வீரர்க்குத் தெருட்டு வார்பலர் 67

பார்கெ முந்துகட் படலை மீதெழத்
தேர்வ லம்மிடஞ் சாரி போம்வகை
கூர்ம திக்குலக் குமரர் தேர்வுற
ஆர்வ முற்கொடுற் றறிவிப் பார்பலர். 68

வேக மெத்துபோர்க் களத்தி லேமதி
யூக மாய்ப்பயில் சக்ர கருடவி
யூக வித்தைகள் செயற் கிரமம
தாக வைத்துநன் கழுத்து வார்பலர் 69

இத்தி றம்மலிந் தோங்கி நீங்கலா
அத்த னைக்கிட மாம்மை தானங்கள்
பத்து யோசனைப் பரம்பி னும்மிக
மெத்து விரிவுடன் மேவும் புற நகர், 70

கார்கு லாங்களிற் றுப்பி ளிற்றொலி
வார்கு லாம்பரி மாக்க னைப்பொலி
மார்கு லாம்விறன் மள்ள ரார்ப்பொலி
பார்கு லாம்புற நகர்ப்ப ரப்பெலாம். 71

**வேறு**

புறநகர் வனப்புக் கண்டாம் போந்தினி மாந்தை மன்னர்
அறமலி செங்கோ லோங்க அரசியற் கருமம் பார்க்கும்
விறன்மலி யுக்தியோக விதங்களுக் கிணங்கும் பண்பா
டுறமலி மாந்தர் பல்கி யுறையிடை நகருங் காண்பாம். 72

சுத்ததத் துவத்தி னாற்றல் அசுத்தகத் துவப்பாங் கேக
மத்தியா யுதவுஞ் சுத்தா சுத்ததத் துவமே போல
மெத்துசீ ரகந கர்செய் விருத்திகள் புறநகர்க்கண்
உய்த்திட வுதவும் பாங்கி னோங்குமிவ் விடைநகர்தான், 73

குளநிறை தண்ணீர்த் தேக்கங் குளிர்வயல் சென்று பாய
வழிவிடு மடையே போல வயங்குமிவ் விடைந கர்தான்
குளம்விழை பொழுதின் நீருட் கொளவிடும் மடை போல் நாட்டு
வளமிகு வரிக ளுட்சேர் வாயிலு மாகுங் காணின், 74

மேவுமிவ் விடைந கர்தான் விதம்படு தண்ட நாதர்
காவிதி எட்டி கந்தோர்க் காரிய கர்த்தர் மன்னும்
பாவிய வளங்கள் பல்கிப் பார்வியந் துவக்குஞ் சிறப்ப
ஓவிய மனைகள் துன்றி உளமகிழ் சிறப்பு நல்கும், 75

மாந்தையின் வனப்பு மாங்கண் வாணிபச் செழிப்புங் கண்டு
தாந்தமிற் குடிபுகுந்த தகவொளிர் மேல்கீழ் நாட்டு
மாந்தரிவ் விடைந கர்க்கண் வளமிகு மனைகள் கோலி
ஏந்தெழில் மனையா ரோடும் இடமிடந் தோறும் வாழ்வர். 76

மாந்தைக்கண் ணாளர் தங்கை வண்ணமாந் தொழில் நுணுக்க
மேய்ந்தபட் டாடைகட்கும் இலங்குயர் நகைக ளுக்கும்
வாய்ந்தபே ராவல் கூர வந்திங்கு பழைகிடப்போர்
ஏந்தெழில் யவன சீன வணிகர்சீர் வனிதையர்கள். 77

காந்தம்போ லிழுக்கு மன்னோர் கவர்ச்சியால் அவர் போலாகத்
தாந்தமில் அநுக ரிக்குந் தளிரடி மடமின் னார்கள்
போந்துலாம் வீதி யெங்கும் போக்கற நிறைத லாலே
மாந்தைமா மகளிர் சந்தை யாக்கிடும் இடைந கர்தான். 78

ஈங்கிதங் கொருபா லாக இங்கக நகர்க்கண் மேவும்
பூங்குழற் கௌரி பாகன் புனிதன்கே தீச்ச ரத்தான்
பாங்குயர் மகிமை கேட்டுப் பாரதம் நீங்கி வந்தே
ஈங்கிணை பக்தர் கூட்டம் இருந்து வாழ் விடுதி மற்றும், 79

பண்ணிசை கானக் கோஷ்டி பத்திசால் பிரசங் கஞ்செய்
புண்ணியர் கழகம் பொற்பார் புரிசடை கண்டி கெண்டி
தண்ணிய நீற்றுக் கோலந் தகுபல வேடச் சைவர்
நண்ணிவாழ் மடங்கள் யாவும் நலமிகு மிடைந கர்க்கே 80

மாண்புயர் மகளிர் மைந்தர் மணிநிலா வரங்க மேறிப்
பூண்பன நுகர்வ வாதிப் புலனுகர் வார்ந்து தம்மில்
ஏண்பெறு மகிழ்மீக் கூரும் இன்னிசைப் பாட லாடல்
காண்பவர் அமுத மூறக் காண்பிடம் பலவு மங்கண் 81

இடைநக ரிருந்த வண்ண மின்னணம் முற்றக் கண்டு
தடைபல கடந்துள் ளார்ந்த தகவுசா லகந கர்க்கண்
அடைகுநர் அதிச யான்வி தாமதன் வனப்பிற் சொக்கி
நடையிடக் காலெழாது நடுதறி யாதல் நேரும். 82

பத்துக்கு மதிகவண்டி பக்கம்விட் டகலா தொன்றாய்
ஒத்தியல் அளவுக் கான்ற உரவுவீ திகளும் மாடே
பத்தியிற் குயின்ற திண்காற் பரூஉச்சுடர் மணிவில் வீசும்
சித்திர மண்ட பத்துத் துங்கபல் நிரையுந் தோன்றும், 83

மரக்கலத் தேற்ற வுற்ற மதக்கைம்மா கூட்டிலிட்ட
குரக்கினம் மஞ்ஞை யாதி கொண்டுவந் திறக்கி வீதி
நெருக்குறு புரவி தம்வாய்ப் பிளிறல்கீச் சகவ லோடு
தருக்குறு கனைப்புந் துன்றித் தழங்கொலி முழக்க மோங்கி 84

அறைகட லொலியை விஞ்சும் ஆரவா ரத்தான் மிக்க
துறைமுக வீதி யெங்குந் தொடைபுணர் சகட மீண்டி
நிறைவுறு சூன்மு திர்ந்த நேரிழை நலாரி னொல்கித்
தறையுட னரைந்தூர்ந் தெய்தித் தலைத்தலை தியங்கி நிற்கும்.85

பகடுகள் பல விளைத்துப் பழுவெனும் பிழுக வீர்க்கும்
சகடுகொண் டுய்க்கும் பண்டந் தலைத்தலை குவிந்து வானத்
தகடுபோழ் கிரிக ளாக அவைதுறுத் ததியு யர்தம்
முகடுபோ மளவுந் துற்றும் முதுபெரும் பண்டசாலை 86

பண்டசா லைகள்மிக் கோங்கிப் பல்குசீர்ப் பொலிவிற் றாகி
வண்டிவா கனங்கள் தெற்றும் வாணிப வீதி நாய்கைக்
கொண்டுலாம் யவனர் கூந்தல் பின்னிப்பின் தொங்குஞ் சீனர்
முண்டமார் கோல ரோமர் முடுகுநீ ளிடைகொண் டன்றே 87

வாணிப வீதி யிவ்வா றாகமா மன்ன ரூரும்
ஆணிப்பொற் றேரு மாவும் அரசுலாம் பவனிச் சீரும்
காணிய விழைந்து வையங் காதலிதீ தணையும் மாட்சி
பேணிய அரச வீதிப் பிறங்குசீர் வளமுங் காண்பாம், 88

ஆனைத்தந் தத்தி னான்ற அணிகிளர் சலாகை மூட்டி
மானநன் மணிகு யின்று மரகத உருளை கோத்துப்
பானல்வெண் புரவி பூண்ட பவித்திரச் சிறுதே ரூர்ந்து
தேனலங் குதலைச் செவ்வாய்ச் சிறுவர்சீர் வரிசை துன்றி 89

ஐம்பெருங் குழுவு மெண்பே ராயமு மாகி மன்னர்
தம்பெருஞ் சுற்றம் வைகுந் தமனிய மாட மோங்கும்
வம்பலர் மாலைப் பத்தி மகரதோ ரணஞ்சூழ் வாயில்
செம்பொனற் றசும்பு தீபச் சுடரொளி விளக்கம் பொங்கி 90

செற்றமுற் றடரும் போர்மேற் சென்றுதங் கருமம் முற்றி
வெற்றியோ டணையும் வீரர் நெற்றியிற் றிலக மிட்டங்
கற்பொடா லத்தி சுற்று மணியிழை மடமின் னார்மெய்ப்
பொற்புறு வதனச் சோதி யொடுபொலி விளக்க மல்கும். 91

வளங்கெழு மாந்தை வேந்தர் மன்பெருந் தலைமைக் கீழாய்த்
துளங்கு நல்லநுரை வன்னி கல்யாணி கண்டி நண்ணி
விளங்குசீ ருபவேந்தர்கள் வேறுவே றுறக்கு விக்கும்
களங்கமில் தந்தம் முத்துக் கவினமர் குவைகள் துன்றி 92

விளங்கொளிப் படலை வீசி விண்ணொடு மண்ணு மொக்கத்
தளங்கொள்வெண் சோதி கான்று தாவில்தென் கயிலை நீலக்
களங்கொள்கே தீச்ச ரத்தான் கருதுமூ ரென்ன முன்னோர்
உளங்கொள்பே ருண்மை தோற்றும் ஒப்பிலா இராச வீதி. 93

அந்தமி லெழிலின் மல்கி யவிரொளிப் படலை வீசி
இந்திர லோகமென்ன இலங்குசீ ரிராச வீதி
நந்திய வனப்புங் கண்டு நம்பன்கே தீசன் மைக்கார்க்
கொந்தளக் கௌரி பாகன் கோயில் சார் வீதி காண்பாய். 94

புன்னாகச் சோலையூடு புனற்றெங்கு மிக்கெ ழுந்து
நன்னாக மாளிகைக்கு நாட்டு தூண் பொருவு மாந்தை
தன்னாக மாக மேவுந் தலத்திடைத் தரணி யாளும்
மன்னாக நாக நாதர் மன்னு பொற் கோயில் வீதி. 95

**வேறு**

உலக மன்ன ரொளிர்மணி நீண்முடி
யலசு தம்மடி மாந்தைநன் வேந்தர்கள்
நிலம லசிட நித்தம் வலம்வரும்
குலவு மேன்மைகுன் றாதொளிர் பொற்பது. 96

நாத ரூபத்தி னாதி யருளுமவ்
வேத ஓசையும் வேதந் தமிழ்செயும்
போத ஞானப் புலவோர் விழைந்து செய்
கீத வோசையுங் கேட்பிக்கு நீரது, 97

ஞாயி லோங்கு நெடுமதி லொன்றுநால்
வாயிற் கோபுர மாடசை யாமணிப்
பாயஒசை பருமி நுணுகி யோய்ந்
தோய்வில் மங்கல நாதமீக் கூர்வது. 98

ஆவல் மிக்கணை மாந்தர்க ளன்றியும்
தேவர் கந்தர்வர் சித்தர்வித் யாதரர்
பாவு மாண்சிவ பூதம்பல் லாயிரம்
ஓவா தென்று முலாவரு நீரது, 99

ஆல யத்தினு ளாகம நூன்முறை
யேலும் வேள்வி யிருத்துவிக் குக்கள்நாக்
கோலு மந்தரங் குறித்திடு தேவரை
நாலு வீதியு நாடி யலையுமால், 100

சோக மென்பது சொல்லள வன்றியே
ஆகந் துன்று மணியுமஃ தாகெனத்
தேக முற்றுஞ் சிவனணி பூண்டுவாழ்
வேக மான விரதிகள் சூழ்வது 101

மாறி லென்பணி மாவிர தர்திரு
நீறு பூசிடு பாசு பதர்சூல
மேறு முன்கைப் பயிரவர் வெண்டலை
வீறு மாலைகொள் காபா லிகர்மற்றும். 102

சத்தி தற்பா சித்த ரெனும் வாமர்
அத்தி யீருரி போர்க்குங்கா ளாமுகர்
இத்தி யாதி யறுவகைச் சைவரும்
மெத்து வீதி மகிமை விதம்பல, 103

ஏலும் மூலிகை யிட்டமுத் திப்பளிங்
காலுங் கற்படை வீதியிப் புண்ணியக்
கோலம் நாகருங் கண்டுகை கூப்பிடப்
போலும் மாமயன் பண்டு வகுத்ததே. 104

மாந்தை வேறு புலன்களின் மாழ்கியே
மாந்தை துன்றி மறுக்க மரம்புகு
மாந்தை போல்நரு மண்டமெய் வாழ்வுய்க்கும்
மாந்தைக் கோயின் மருவுமிவ் வீதியே. 105

**வேறு**

ஒருகுலத் துற்று மேன்மை யிருபிறப் பெய்தி மூன்று
பெருமழ லோம்பிப் பேறார் நான்மறை யோதி யைந்து
பருமடிப் பட்டு டுத்துப் பகரறு தொழில ராகி
மருவுமந் தணர்கள் வாழ்வு மலியுமக் கோயில் வீதி: 106

அருமைசா ரக்நிஹோத்ர அழற்கடன் வழுவா தோம்பும்
பெருமைசா ரந்தணர்கள் பிறங்குயர் மாடமெங்கும்
உருவமை மந்த்ர நாத ஒலியெழுந் துலகை வாட்டும்
கருமலி கலிய கற்றிக் காண்புறு சுபீட்ச நல்கும் 107

சங்கிதா பதபா டங்கள் சார்சடா கனபா டஞ்சேர்ந்
தங்கெழு வேதநாதம் அளப்பில்பல் லூழி காலம்
தங்கள்கே தீச்ச ரத்தான் நயந்திருந் தமர்ந்து கேட்டு
மங்கலம் பெருக்க விந்த மாடங்கள் நிலவு மென்றும். 108

ஆண்டமை வெய்தி நீடும் அக்கிரா ஹாரத் தோர்சார்
பூண்டகு நூற்புன் குஞ்சிப் பூசுரர் சிறுவ ரானோர்
மாண்டகு குருகு லத்து வாசமேற் கொண்டு தாங்கள்
வேண்டுறு பிரம சர்ய விரதமேற் றொழுக லோவார். 109

அந்தணர் குடியிருப்பை யகன்றயல் மருவுஞ் சாரல்
சுந்தரன் கேதீ சற்குத் தௌரியத் திரிக பூசை
நந்துசீர் வனப்பி னோங்க நடனசங் கீத வாத்ய
வந்தனை புரிவோர் மேவி வாழ்விடம் பலவு முண்டால். 110

இங்கிவர் சார்பி லென்று மெழில் பெறு கோயில் வீதி
துங்கமார் நடன கீத வாத்தியச் செழிப்பு மல்கித்
தங்கியங் குறைவோர் வந்து தங்குவோர் வந்து போவோர்
அங்கவ ரனைவர்க் குஞ்சீ ரருங்கலை விருந்து நல்கும். 111

உடனலத் தேசின் மேலாம் உணர்வொழுக் கத்தே சார்ந்து
கடனமைத் திறைபே ரன்பு காதலித் தடிமை செய்யும்
நடனமா தர்க ளாலே நாட்டியக் கலைக்குத் துங்க
இடனமைத் திந்தஞால மென்றுமின் புறுவதாகும், 112

நடனமே தானுமாடி நடனமா தரையு மாட்டி
இடனமர் உலகு வாழ இயைவுறு போக மோக்க
அடைவளித் தாளு மண்ணல் ஆலய பூசைக் கன்றி
நடனவுற் பத்தி மூலம் நாடுதற் கிடம்வே றின்றாம். 113

நாதமூ லத்தொ டர்பு நாறுமா றாறு தத்வம்
நாதமூ லத்தே தோற்றி நாதத்தே யொடுக்கித் தானும்
நாதமாய் நாத யோக ஞேயமாம் நாதன் பூசை
நாதமின் றமையா தென்னும் ஞாயமோர் பால தாக. 114

நாதத்தே சுதிம ணந்து சுவரங்கள் துன்றி யூர்ந்து
மீதத்து மசைவதான விளம்பத்தே நடன மென்ற
வேதத்து வாக்குந் தேரின் விகிர்தனா லயபூ சைக்கண்
நாதத்துப் பயில்வு மொன்ற நாட்டிய பொருண்மை தோன்றும் 115

இவ்வண நடனநாத வெழிலியல் வீதி தன்னில்
செவ்வண மருளும் வேத முதல்வன்கே தீசன் மேவச்
செய்வணந் தேருஞ் சிற்ப வித்தகர் விஸ்வகன்மர்
கைவணந் தெரிக்குங் கோயில் கவின்பெற விளங்கு மென்றும் 116

நாற்றிரு வாயில் தோறும் நந்தியந் துவச மோங்க
நூற்றரு சிற்ப நோன்மை நுணங்குகோ புரமுன் தோன்றி
மேற்றிக முலகுக் கெல்லாம் விமலன்கே தீசன் மாண்பு
தோற்றநின் றிலகுந் தொன்மைத் திருமதில் வளாகத் துள்ளால்.117

மருவு பொன் மாட நீடு மாளிகைப் பத்தி சூழ்ந்து
குருமணி நிரைபொற் றூபிக் குடமருள் கலச மார்ந்த
கருவறைப் பொலிந்து விஸ்வ காரண ணாங்கே தீசன்
அருவுரு வடிவின் மன்னி யமர்ந்திருந் தருள்வ னென்றும். 118

இத்தகு கோயில் தன்சீ ரிருதய மாகப் பெற்ற
மெய்த்தகு சிறப்பி னாலே மேதகு மாந்தை ஞாலத்
துத்தம நகர்வ ளங்கள் ஒன்றினுக் கொன்று விஞ்சி
அத்தகு பாலா வித்தாய் அரவணைப் பினில்வி ளங்கும். 119

அத்தந்தோ றிடப மாசப் பூசத்திற் றுவச மேற்றி
உத்தம விசாக நன்னா ளோங்குபா லாவித் தீர்த்தப்
பத்திமை விழவு மல்கப் பண்டை நாள் மாந்தை யாண்ட
மெய்த்தகு துவஷ்டா வேந்தன் விதிமுறை வகுத்தான் என்ப. 120

திகந்தம தளவு கீர்த்தி திகழருட் கேது நாதன்
உகந்துறை மாதோட்டத்தி னுயர்சிறப் புதுவாக் கண்டு
சகந்திகழ் புண்ய தீர்த்தத் தலைமையாள் சிறப்பிற்றாகப்
பகர்ந்திட நிலவு தெய்வப் பாலாவி வரவு காண்பாம். 121

**நகரப்படலம் முற்றும்**
**ஆகத் திரு விருத்தம் 283**

உ

## பாலாவிப் படலம்

மெத்துசீ ரீழநாட்டு விண்டொட நிவந்துற் றோங்கும்
மத்திய மலைப் படுக்கை யுத்தர சரிவின் மன்னும்
சித்திரக் குகையார் சிற்பச் சிகிரியா நடுவணாக
மொய்த்து நீள் தொடரின் முட்டி மோதுகார் முகில்கள் துன்றி. 1

கனத்திடித் துரறிக் கான்று கடுகுநீர் முடுகி யோடி
வனத்தரு வளங்கள் வாரி வார்புனற் பெருக்கு மண்டிப்
புனத்தலைப் பொன்மான் மேவும் புதுமைகூர் மிகிந்த லைப்பாற்
சினத்திடி முகில் பெய் நீருஞ் சேர்ந்தொரு பேரா றாகும். 2

வீறுமவ் வாற்று வெள்ளம் விரைந்துயர் தொன்மை மேன்மை
நாறுசீ ரநுரை நண்ணி ஆறுமென் கதிமேற் கொண்டு
வேறுவே றியலுந் தெய்வ விகாரைசே தியங்கட் கொன்றும்
ஊறுசெய் யா தடங்கி யொருவழி விலகி யேகி, 3

மலைபடு மகிலுஞ் சந்தும் மணிகளு முருட்டித் தன்சீ
சரலைபடு கரங்கொ டெற்றி அநுரையார் கொளப்ப ரப்பி
நிலைபடு வயல்கள் வேண்டும் நீர்வளம் பிறங்க நல்கித்
தலைபடு தொழில் வேளாண்மை தழைவுறத் திகழ்த லொன்றோ 4

கோதில் சீர்ப் பௌத்த மோம்புங் குறைவறு தானதர்ம
நீதிசா ரறத்துக் கென்றும் நீர்வளக் குறைவ றுப்பான்
தீதகல் திஸ்ஸவாவி திகழ்தரு நுவரை வாவி
சீதள நன்னீர் தேக்கிச் சேர்வற்ப மணுகா தாக்கி, 5

மநுமுறை நீதிக் கென்றும் வையகப் புகழ்சேர் வாய்மை
அநுரத புரியாள் வேந்தர் ஆதர வுடன் தா பித்த
பநுவலார் சிவன்கோ யில்கள் பகரபி ஷேக பூசை
அநுதினம் வழாம லோங்க ஆவன அனைத்துங் கூட்டி, 6

சோதியா யோங்கி ஜென்மத் துயர்தப அடர்க்கும் மெய்ம்மை
ஓதியொன் றுண்மை தேற்றும் உயரிலச் சினையாம் வெள்ளைப்
போதியை வலம்வந் தப்பால் புதியவுத் வேகம் வாய்ந்து
மாதிரத் தொன்றாம் வாயு திசை குறித் தகலு மெல்லை. 7

புல்குற்ற மணம றாப்பைம் பூஞ்சோலை வழிக்கொள் நீரால்
மல்வத்து ஓயாவாகி வனவளச் செழிப்பு மல்கும்
வில்பத்துக் கடத்தி னோரம் விரைந்திழி யாற்று நீத்தம்
வெல் குற்ற போர்வெஞ் சேனை வீம்பொடு படரு மன்றே. 8

மாங்குளம் பறையனாலங் குளமுட்டி வழியத் தேக்கி
ஆங்ஙனம் படரு நீத்தம் அணிகெழு முறுங்கற் கப்பால்
தேங்குதன் திசையை மாற்றிச் செறியும்வெண் களி நிலத்தின்
பாங்குற்றுப் பாலா விப்பேர் படைத்துறு விசையிற் பாய்ந்து 9

நன் திசை வடமேற் காக நாடிப் போய் விரைபா லாவி
முன்னுறு முயிலமென்னு முதுகுள மூட்டி அப்பால்
இன்னிய லாருந் தோற்ற விராட்சதக் குளம்நி ரப்பிப்
பன்னுகே தீச்ச ரத்துப் பாங்குற மருவிச் செல்லும். 10

மன்னுறு பாலா விப்பேர் வரநதி வரலாற் றுண்மை
பன்னுறு விழைவிற் சொற்றாம் பராபரன் கேது நாதன்
தன்னியல் பாகமேவுந் தீர்த்தமு மாமிவ் வாற்று
மன்னிய தெய்வி கச்சீர் மரபறி முறையிற் சொல்வாம். 11

மீதோட்டு வங்க மூர்ந்து வியனில முழுது மாண்டு
தீதோட்டும் புரவு பூண்ட தெய்விகக் கம்மி யர்சேர்
மாதோட்டச் செவிலி யென்ன வாக்கிய லார்கள் போற்றக்
காதோட்ட வயல்களூடு கடுகிமேம் படுபா லாலி. 12

பண்ணியல் வண்டார் கொன்றை பகர் தும்பை யறுகு வன்னி
தண்ணிய லெருக்கு வீந்தார் தலையோடு முதல தாங்கி
வெண்ணிற மிளிர வீறு கயிலையில் விரவ லாற்செங்
கண்ணுறு நெற்றி யண்ணல் கடுக்குமென் றிசைக்க லாகும் 13

தோடுபித் தாகூற்றாதி தொடுக்குமுக் குரவர் வாக்கிற்
பாடுசீர் பெறலாற் பத்தா கியதொண்டர் தொழலாற் பாவம்
வீடுறக் கெடுக்கும் பொற்பால் மாந்தைக்கண் விரவு நீரால்
கேடில்கே தீச னென்றுங் கிளக்கலாந் தரத்த தஃதே. 14

உண்ணெகிழ் தகைத்தாய்த் தான் சேர்ந் துற்றதும் நெகிழ்க்கும் மாண்பால்
நண்ணிய நாபி கூந்தல் நாடு செவ் விதழ்கண் ணாதிக்
கெண்ணிய சுழிநற் பாசி கிடைகயல் கெழும லால்நம்
புண்ணியப் பிராட்டி கௌரி பொருவது மாம்பா லாவி. 15

சூழாழித் தேரோன் தன்பாற் றுலங்கிடப் பெறலாற் சூர்த்த
கோளாளி யிழுத்த லைக்குங் கொள்கையாற் கூன்சங் கேந்தி
வாழாழி சேர்த லால்மா மருவலால் வனஞ்சூழ் பண்பால்
நீளாழித் துயிலும் மாலை நிகர்க்கவு மாம்பா லாவி. 16

வாக்கியல் செல்வி தன்சீர் நாக்கியல் பரிசாற் பொங்கி
மீக்கிளர் நாதந் தோற்றும் மேன்மையால் வியன்மா ஞாலம்
ஆக்குமத் தகவால் மீக்கூ றகலத்தால் அலர்மென் கஞ்சப்
பூக்கணுற் றமரும் வேதன் போலவு மாம்பா லாவி 17

பார்புகழ் ரிஷிகள் வந்து படிதலாற் படிந்தோர் பாவம்
தீர்வகை செயலாற் செத்தார் சிவகதி யேற வுய்க்கும்
பேர்பெறு மந்தியேஷ்டி பிதிர்த்தில தர்ப்பணங்கள்
சீர்பெற வுறலாற் கங்கை சிவணலு மாம்பா லாவி 18

வரமலி தூய்மை யால்வான் வாழ்த்துகே தீச்சரத்துப்
பரனடி பிரியாப் பண்பாற் பயபக்தி யொழுக்கச் சீரால்
மரபினிற் பரனே யாக மாநிலம் போற்றும் பாங்கால்
அரனடி யாரு மென்றற் கடுக்கும்பா லாவி தானே. 19

வான்றோயுங் குலப்பி றப்பால் வாய்மையி னுருவாம் வெண்மை
தான்றோயு மாற்றால் வாழ்விற் பிறர் நலம் தன்ன லம்மென்
றேன்றேயு மதனால் ஈடில் தண்ணளி யுறலாற் சைவச்
சான்றோர்க்கு முவமையாகுந் தகைமையு முளதவ் வாறு, 20

செவ்விய சிவத்திற் றேங்குஞ் சீரருள் தேசாசாரத்
தவ்வவ வியல்பிற் கேற்ப வலகில வாகுந் தெய்வத்
திவ்விய மூர்த்தந் தோறுஞ் செறிந்தவற் றருளாய் மன்னும்
பவ்விய நிலைமை தோற்றும் பாலாவி யென்னு மாறு 21

அடம்பன்னா னாட்டான் பாப்பாமோட்டைதோறாங் காங்குற்றுத்
திடம்படு மணைக்கட் டோரஞ் செறிந்தகன் றாழ்ந்த செவ்வித்
தடங்குள மனைத்தும் மேவித் தத்தம்நீ ரென்ன மன்னி
இடம்படு முலக மோம்பி யிதமளித் திலங்குமென்றும் 22

வேறுபட் டியல்வ ரேனும் வீறுதம் பரிபா கத்தில்
தேறு சீர்ச் சைவத் தொன்றிச் செல்பல சமயி கள் போல்
நாறுபூந் தருவனத்து நடையிடு கான்யா றெல்லாம்
ஈறில்சீர்ப் பாலாவிக் கண்ணியைந் தொன்றாய்க் கலந்து செல்லும். 23

சிந்தையைச் சிவத்தொடுக்கித் திகழ் சிவ ஞானி கள் தம்
பந்தவா சனைமலங்கள் பரன் பக்கம் மீளு மாபோல்
முந்துபூங் கதிர்கள் முற்றி முதிர்வயற் கழிவெள் ளந்தான்
வந்துபா லாவி யாற்றின் மருவியாங் கொடுங்கு மன்றே 24

மேலையோர் தம்பாற் செல்வோர் வெறுங்கையோ டேகலாகாச்
சீலத்தால் வனயா றெல்லாஞ் செழுமலர் பழங்காய் சாந்தம்
கோலவா சனைப்பண் டங்கள் கோலிமேற் சுமந்து கொண்டு
பாலொளிர் பாலா விக்கண் பரிந்திட்டுப் பணிந்து சார. 25

விவிதவா சனைகள் விம்ம விரைமலர்த் தாமஞ் சூழ்ந்து
புவிதனிற் பயில்பா லாலி புதுமண வணிப்பொ லிந்து
நவிவிழி பரப்பி வேட்கும் நாயகன் லிழிவி ருந்தாம்
குவிமுலைக் கொம்ப னாரிற் குரைகடல் நோக்கித் தேங்கி 26

வையாளி வெளிக்கண் மேவும் வார்புனற் பரப்பி னீட்டம்
மையாளு மிடற்றா னன்று மதுரைமா நகர்ப்பித் தேற்றி
மெய்யாளும் வாச கர்க்கா விரிகட லெனக்கொண் டுய்த்த
கொய்யாளு முளைமா வென்னக் குதிகொளுங் கதியிற் பாயும் 27

கொந்தளித் தலைத்து வீசுங் குளிர்புனற் றிரையோ டள்ளுண்
டக்தரத் தெற்றுண் டாடி யலைந்து வீழ் மீனி னீட்டம்
நந்து வெங் கதிரேழ் வர்ணம் நாடியூ டுருவ வீழ்தல்
இந்திர வில்லெ முந்தாங் கிறங்கிடு தோற்றங் காட்டும் 28

சேலுலாம் வயற்சேற் றுள்ளுஞ் சிவமணங் கமழுங் காழிப்
பாலுலாஞ் செவ்வாய்ப் பிள்ளை பாசுரம் வரைசீ ரேடு
ஆலுநீர் வையைச் சென்ற வாறது தெரிப்ப போல
ஏலுநீர்ப் பெருக்குக் கஞ்சா தெதிர்த்துநீந் துவபல் மீன்கள் 29

ஓசைமே லோசை விம்ம உரப்பிமீ தார்த்தார்த் தோங்கி
ஆசையெட் டளக்கும் மூர்க்க அலைத்தலை மிதக்கு மோடம்
காசைப்பூ வண்ண மாரன் காமமோ ஹனத்தினெற்றும்
ஆசையாம் அலைத் தலைப்பட் டலைமனி தரையும் மானும் 30

இடபமா சத்தினொன்று மீடில்சீர் விசாக நன்னாள்
நடநவில் கேது வீசன் நாடுசீர்க் கௌரி யோடும்
இடபமூர்ந் தணைந்து தீர்த்தமேற்றருள் சிறப்பி னிந்தப்
புடவியோர் புகழுந் தெய்வப் புண்யதீர்த் தமுமிஃதாகும் 31

நன்னகர் விழவுகொள்ள நாற்றிசை யினுஞ்சூழ் பத்தர்
பன்னுசீர் நட்டபாடைப் பண்ணிசை முழங்கப் பல்வே
றின்னியங் கறங்க அந்நாள் எம்பிரான் பாலா விக்கண்
மன்னியங் காடு தீர்த்தமாண்பு சொல் வரைத்தன் றாமால் 32

காதுபோ ரிராம னாக்குங் கல்லணை கால்கொண் டுற்ற
சேதுமத் தியத்திற் சென்று சங்கம மாகும் பொற்பால்
மீதுயர் கந்த மாத னத்தயல் விரவுஞ் சார்பால்
தீதுதீர் சேது தீர்த்தத் தெதிர் திகழ்த் திலங்கு பண்பால் 33

உடலுள முயிரென் மூன்றில் உறுபிணியனைத்து மோட்டித்
திடனுறு சங்கற் பச்சீர் திறம்பா துட் படியும் மாந்தர்
படர்பவ மேலெஞ் ஞான்றும் பயில்வறப் பரிகரிக்கும்
கடனுறு பாலா விச்சீர் கண்ணுத லருளாற் றேர்ந்து 34

சுத்தபௌ ராணி கச்சீர்ச் சூதமா முனிவ ரன்று
நத்துவேட் கையினி லான்ற நைமிசா ரணியமேவும்
அத்தகு முனிவர் கேட்க அருளும்பா லாவி மாண்பு
இத்தலத் தெவரும் பேணி யீடேறற் பயத்த தாகும் 35

ஏண் மலி யீழந் தன்னி லிலங்குமா ணிக்க கங்கை
மாண்புறு களனி கங்கை மகாவலி தமினும் மேலாக்
காண்புறு சித்தி முத்தி கைக்கனி யாக நல்கும்
சேண்பயில் திருவார் மாந்தைப் பாலாவித் தீர்த்தமென்றும் 36

இங்குற்றித் தீர்த்தந் தன்னில் யாரெவ ரெனினு மன்பாற்
சங்கற்பம் படன சூக்தம் மார்ச்சனம் அகமர் ஷப்பின்
தங்குசீர்த் தர்ப்ப ணஞ்செய் தாடிநற் றசதா னங்கள்
மங்கலம் பெருகச் செய்வோர் மாறில்வீ டடைவ ரென்றும் 37

பேசரும் பிரம ஹத்தி யாதிபா தகத்தார் தாமும்
மாசிலித் தீர்த்த மாடி வருமுறை நியம முற்றி
ஆசிலைந் தெழுத்தி னாங்கோ ராயிர முருச்செ பிக்கில்
தேசருள் சிவசா யுச்யச் சீர்பதம் பெறுவ ரென்றும் 38

இத்திருத் தீர்த்தத் தாடி யிதன்கரைச் சிரார்த்தஞ் செய்யின்
மெத்துசீர்க் கயா சிராத்த மிகுபலன் மேவு மென்றும்
இத்தலத் திறப்போர் காதில் தாரகப் பிரம மோதி
மெய்த்திரு கொளரிபாகன் மேவுவீ டளிப்ப னென்றும் 39

சூதமா முனிவர் தம்மைச் சூழ்ந்துறு முனிவர் கேட்பப்
போதனை புரிமாண் பொன்றோ புவிபுல் சரித்ர காலத்
தேதந்தீர் நாவலூரன் எம்பிரான் நம்பி பாடற்
போதந்த தீர்த்த மாண்பும் புதுமையும் பகரொண்ணாவால் 40

மேவுமிவ் வுண்மை தேர்ந்து வியனுல கதனில் மன்னும்
ஓவில்சீர் ரிஷிக ளுண்மைப் பத்தர்சித் தர்கள் தோய்ந்து
பாவுமா மலம றுத்துப் பரகதி யுற்ற பான்மை
நாவலா ரூரன் நன்னா நவின்றிடக் கேட்டு மன்றே, 41

பாலாசி மண்டி என்னப் பண்டை நாட் கிரேக்கர் வாக்கிற்
பாலாவி யின்றி மாந்தை பயின்றிடாப் பரிசு தேரின்
வேலாழி யுலக மெங்கும் வியந்துற நயந்த செம்மைப்
பாலாவித் தொன்மை மேன்மை பட்டவர்த் தனமா மன்றே 42

பேதுறு மேதில் பந்தப் பிறவிவெப் பகல நாதன்
தீதறு கருணை வெள்ளந் திளைத்திடப் பக்த ராடிப்
பாதகந் தீர்பா லாவிப் பான்மையீ தினியிந் நூற்குப்
பேர துமாண் புள தொன் றாகப் புகலும்பா யிரமுரைப்பாம், 43

**பாலாவிப் படலம் முற்றும்**
**ஆகத் திருவிகுத்தம் 326**

உ

## பாயிரப் படலம்

செந்தமிழ்க்கு வளர் நில மாமென
முந்து மேன்மைகொள் பாண்டிநன் மண்டலத்
தந்த மில்சிவ மேருவெ னுந்திரு
நந்து நீரது நாமப் பொதியமே 1

ஐய கீர்த்தி அகஸ்திய மாமுனி
மெய்யே யின்றும் விழைந்துதன் பாலுற
வைய மெல்லாம் மகிழ்ந்துடன் வந்துகாண்
செய்ய நீர்மைய தாலத் திருமலை 2

தென்றல் வந்துயர் சந்தனச் சோலைவாய்
மன்றல் வாரி வளமார் தமிழ்மணந்
துன்ற வீசலின் தொன்மை நயந்துப்பார்க்
கென்றும் எண்ணமர் இன்பம் பயப்பது 3

சாந்து பூசித் தளங்கிட நீவுசீர்
வாய்ந்த மாமணித் திண்ணைகள் தாமென
ஏய்ந்த மாமுது பாறைகள் காண்டலின்
ஆய்ந்த கல்லியல் வல்லுநர் தாமெலாம். 4

சந்தன ப்பொதி யத்தட மாமலை
இந்த மாநிலத் தோங்கு மலைக்கெலாம்
முந்து தொன்மைய தென்ன நிலவுமச்
செந்த மிழ்மா மலைத்தடஞ் சாரலில் 5

சிந்து பன்மணி ஔடத மூலிகள்
சந்த னக்குற டோடு நற் காரகில்
நந்து கோட்டந்தக் கோலமெ னாவிவை
சந்த தந்தொகுத் தோங்கு தொழிலின் வாழ். 6

பெரிய வாணிகச் சாத்தொன்று பண்டுநம்
விரியு நீரலை மன்னார்த் துறையடைந்
தரிய நீர்மையிற் காடு கடந்து போய்ப்
பெரிய பூநக ரிப்பாங் கதனிலும் 7

அண்டை யூர்க ளவற்றினும் புக்குலாய்ப்
பண்ட மாற்றுப் பணமாற்றுப் பாணியில்
கொண்டும் மாறு கொடுத்து நிலாவிய
பண்டைச் செய்தியப் பக்க மிசைக்குமால் 8

அன்ன வாணிகச் சாத்தங் கொருபகல்
என்ன தோரிடை யூறும்நே ராதெனப்
பன்னு சார்பிற் பழக்கம துற்றதம்
முன்னைப் பாதையி னூடே முயங்குழி 9

ஏற்றெ திர்ப்படு கூற்றர் குழுவெனத்
தோற்றி யன்னர் துணுக்குற வந்தது
மாற்றில் வெம்மத நாற்ற முடையெழச்
சீற்ற மார்குளு யானைக் குழுவொன்று 10

கிட்டு முன்னங் கெடுமண்டி யோட்டெடுத்
தட்ட மாரரு கெங்குஞ் சிதறிப்போய்
எட்ட நிற்கவும் விட்டுவி டாதுமேற்
றொட்டு மண்டித் துரந்தன வேழமே. 11

அஞ்சி யஞ்சி அலைந்தலைந் தவ்வனம்
எஞ்சா தெங்கும் இயன்றுயிர்க் காசையால்
மஞ்சு தோய்மா மரங்களிற் றாவியும்
புஞ்ச மார்புதர்ப் புக்குட் பதுங்கியும் 12

**வேறு**

இனிய கன்றிடும் எனுநப் பாசையால்
நனிமி கவெதிர் பார்த்துப் பார்த்துக்கண்
பனிப னித்துடல் பதைக்கு மன்னரைச்
சனிபி டித்தெனத் தகைந்த வாரணம் 13

அட்ட மருகெலாந் துட்ட வாரணம்
கொட்ட மிட்டுலாய்க் கோர தாண்டவ
நட்ட மாடிமுன் நடந்து ரறித்தன்
னிட்டம் போலெடுத் தெற்றி யாடிற்றே 14

கெட்ட வாரணம் விட்டு நீங்குமென்
றுட்ட ருந்துணி வொழிந்து பீதிசார்
மட்ட றுந்துய ராளுஞ் சாத்தினர்
பட்ட பாடுகள் பகரற் பாலவோ 15

மூட்டு மின்னல்கள் மூட்டி யாங்கவை
விட்டு நீங்கவும் வேண்டு மாறருள்
அட்ட மூர்த்திதன் னாடற் பாங்கினைச்
சுட்டி யீதெனத் துணிய யார்வல்லார் 16

போது சாய்ந்துத்தான் தீது தீர்வதற்
கேது மோர்குறி தென்படாமைகண்
டீதெ மிறுதிநா ளாவ தென்றெணூஉப்
பேத லித்துயிர் பிதிர்வ போல்கையில் 17

அண்டம் விண்டதோ அதல பாதலம்
விண்டெ ரிமலையாய் வெடித்ததோ
கொண்டெ மும்மிடிக் கூட்ட திர்ச்சியோ
மண்டு மிவ்வொலி யெனும யக்கெழ 18

விண்ணு மண்ணுமொன் றாய்வி திர்த்திட
நண்ணு மோரொலிக் குண்ண டுக்குறக்
கண்ணுஞ் சாம்பிக்கை தூக்கி யோலமிட்
டெண்ணங் கெட்டழிந் திரிந்த வேழங்கள் 19

எட்டுக் காடுமு றித்தள் ளிக்கொடே
விட்ட வேட்கையர் வினைப றிந்தெனத்
துட்ட வாரணந் தூரம் போயுறப்
பட்ட வைபகற் கனவ தாயிட 20

உள்ளந் துள்ளுபே ருவகை மீக்கொள
மெள்ள மெள்ளவந் தொருவெ ளிக்குழீஇப்
பள்ள மாமடை யாகப் பாயுங்கண்
வெள்ளந் தேங்கவொவ் வொருவ ராய்த்தழீஇ, 21

**வேறு**

கொண்டு டன் மகிழ்ந் தனர்களாயினும்
மண்டு மாலை தன் வரவு நோக்கியே
அண்டு மிடமெதென் றங்க லாய்த்தயல்
விண்ட கோலத்தோர் விடுதி கண்டனர், 22

வன்னி லத்துநா வரளு மெல்வையில்
நன்னி லத்துநீ ரூற்றுக் கண்டென
மன்னு மார்வமோ டெய்தி யங்கதில்
துன்னு மவ்விராத் துயில வுன்னினர், 23

கூரை யில்லைத்தான் கோஷ்ட மில்லைத்தான்
ஆரும் அயலுலாம் அசுகை யில்லைத்தான்
சீர ழிந்தவச் சிதைவி லன்னவர்க்
கேர்ம லிந்ததோ ரிருக்கை யாயிற்றே. 24

ஆங்க மர்ந்திருந் தசாவு யிர்த்தன்று
தாங்கள் பட்டவத் தனிப்ப டர்கெட
ஓங்கு பேரொலி யுற்றெ ழுந்தவப்
பாங்கு பற்பல வாறுற் றெண்ணினர். 25

இன்ன காரணத் துற்ற தஃதெனப்
பன்னற் கின்மையின் பாழு றந்நிலந்
தன்னி லேபழங் கிடைகி டந்தொளிர்
மன்னு தெய்விக மதுவென் றேத்தினார். 26

**வேறு**

கருதுமந் நினைவுநீடக் கண்துயிற் கியையா வேனும்
ஒருபகல் முழுது மூன்ற உழப்பினா லயர்ச்சி கூர்ந்து
வருதலாற் கண்மு கிழ்த்து மாறிலா உறக்கந் தொட்டுப்
பருவரல் காணா நித்ரா சுகமனு பவிப்போ ரானார். 27

சொப்பனந் தனில்நு மக்குச் சோதிமிக் கோங்குமென்ன
முற்படத் தெரிவிப் பான்போல் முழுநிலாக் கிரணம் வீசி
அற்படு மபர பக்கத் துதியை நாள் மதியு மாங்கே
எற்படத் தோன்றி யன்னார்க் கிதம்புரிந் தெழுந்தா னன்றே. 28

நாற்புறஞ் சுற்றி நீடும் நாமநீள் இராச வீதி,
பாற்பட உள்ளே மன்னும் பட்டின மதன்மு கப்பில்
ஏற்புறு மிராச ராசப் பெருநகர்ப் பெயர்வி ளக்கம்
நுற்படு மளவை யான்ற நுணுக்கசித் திரப்பொற் கோயில். 29

இராசகோ புரத்து முன்னா விலங்குயர் துவார நந்தி
பரசுகோ புரத்து ளோர்பாற் பயிலதி கார நந்தி
விரவுமாள் தொகையி னீட்டம் மிகுமிசை வாண ரீட்டம்
முரசதிர் தடாரி பேரி சல்லரி தாளம் காளம். 30

பம்பிசைக் குழல்முன் னான பராவிசை யொருபால் சூழ்ந்து
தும்பிதே னாடுந் தொங்கற் றோகையர் நடன மோர்பால்
எம்பிரான் புகழ்க ளேத்தி யிரங்குசீ ரடிய ரோர்பால்
நம்பிசம் பந்தர்பாடல் நயந்தபண் ணினிமை யோர்பால். 31

இத்தகு மங்கலச்சீ ரிசையொலி பொங்கி யோங்க
மெய்த்தகு வேதியர்வாய் வியன்மறை யொலி நின் றோங்க
வித்தகக் கவிகையால வட்டஞ்சா மரங்க ளோங்கப்
பத்தியிற் பணிந்து மன்னன் படையணி வகுத்து நிற்க. 32

மத்தவெங் களிற்றி னுச்சி மருவுமம் பாரிதன்னில்
புத்தெழி லரசி கௌரி புடையமர்ந்திலக ஆதி
அத்தன்கே தீச்சரத்தெம் அண்ணல்புண் ணியப்பொற் கோல
மெத்தவீற் றிருந்து வீதி விழாவயர்ந்து வந்தா னன்றே. 33

உள்ளுறு முவகை கூர உரோமங்கள் சிலிர்ப்ப ஏத்தி
எள்ளுவீழ் வதற்குஞ்சற்றும் இடமின்றி நெருங்கு கூட்டத்
தள்ளுமுள் ளுகளுக் கூடே தாமுமுள் நுழைந்து நைந்து
வள்ளல் சீர்ப் பாதம் போற்றி வாழ்ந்துதாழ்ந் தவச முற்றார். 34

வீதியெங் கணுங்கோ டித்து மிகுமலர் சுண்ணம் வீசிச்
சோதிநல் விளக்குத் தூபம் ஏந்திப்பொற் குடம்பூ ரித்து
நீதிமா தவர்க ளேத்த நிகழ்விழா நியமம் முற்றி
மாதியல் பாகர்வந்து கருவறை புகுந்த பின்னை. 35

வளங்கெழு நகருந் தெய்வ வளரொளிக் கோயில் தானும்
இளங்கதி ரொளிகால் ராச கோபுர மதனோ டொக்க
உளநீதுணுக் குறநேர் நோக்கி யும்பரார் பரிதபிக்க
விளங்குபேர் மண்மே டாகி வியத்தக மாறிற் றன்றே. 36

இத்தகு கனவு கண்டா ரிறுத்திச்சா மத்து றக்கம்
மொய்த்திட வறிவு மாழ்கி முன்னை நா ளுழப்பி னான்ற
எய்ப்புமுற் றகலு மட்டும் இம்மையோ டம்மை தோன்றா
மெய்த்துயிற் சுவைகொள் வாகு மிகுகும்ப கன்ன ரானார். 37

கனவதே யெனினுங் கண்ட காரிய முழுது முண்மை
நனவுறு விஸ் வசக்கு நானிதிங் கறிவே னென்று
முனமறி விஸ்பான்போல. முழுதுல கமிழ்த்து நித்ரைத்
தினவுதீர் திருவின் மேலோன் தினகர னுதயஞ் செய்தான் 38

இந்தநல் லினிய காட்சிக் கிடனதா முறக்கந் தன்னில்
அந்தமி லமைதி சாந்த மமைந்தொளி ருள்ள மோடு
வந்துகீழ்த் திசைவெ ளுக்க வணிக நன் மாக்க ளெல்லாம்
தந்துயி லுணர்ந்து தாந்தாம் தனித்தனி கனவு சொற்றார். 39

இளங்கலைச் சிறார்கள் பல்லோர் இருந்திரை மீட்டு மீட்டாங்
குளங்கொள மனனம் பண்ணி ஒப்பிக்கும் ஒரேபா டம்போல்
விளங்குமொவ் வொருவர் கூற்றும் ஒரேவித மாகக் கண்டு
வளங்கொளவ் விடத்துத் தெய்வ மாண்பிதென் றார்வங் கூர்ந்தார்.40

முன்பகல் நனவும் பின்னர் முடுகிராக் கனவும் மற்றும்
நன்குறத் தமக்குள் நாடி நமக்கெலா மப்பா லாகித்
தன்றொழில் நடத்துந் தெய்வ தலமிது சரத மென்றே
தென்படு கின்ற தின்னு மிதனுண்மை தேர்து மென்று. 41

களைபசி மறந்து வந்த காரியம் மறந்து தெய்வ
விளைவுறு மிந்தச் சூழல் மேவுயர் இயற்கைச் சார்பாம்
வளமையைச் சற்றே சுற்றி யுற்றுநோக் கிடுவ மென்னாத்
தழைவுறு மனத்த ராகித் தமிற்றிரண் டொருங்கு சென்றார் 42

பற்றைகள் செடிக ளூடே பரும்பருங் கருங்கற் கண்டம்
மற்றவற் றூடே தெய்வத் திருவுருச் சிதைவு சாரும்
அற்றைநாட் செய்தபோலும் அழகொளி ரோவி யங்கள்
தெற்றெனத் தெரிய வெங்குஞ் சிதறிமுன் கிடத்தல் கண்டார் 43

ஊர்பசும் புற்ப ரப்பாம் மார்பணி கச்சு வீக்கிப்
பார்மகள் மருமத் துற்ற பலபல முலைக ளென்ன
நேரெழுந் துயர்மே டாகி நிமிர் திடல் பலவுங் கண்டார்
சீர்கெழு மனைக்கா மத்தி வாரத்துச் சிதைவுங் கண்டார் 44

கொடுந்தொழிற் கஞ்சா தார்தங் குடும்பங்கள் கெடுமா கெட்டே
இடிந்திடிந் தச்சமூர எதிரும்பாழ்ங் கிணறு கண்டார்
வடிந்தசீ ருளிபாய் வெண்கல் வரிசிதை யாத சிற்பம்
படிந்தினு மெழில்செய் பண்டைக் கூபமும் பயிலக் கண்டார். 45

மனிதர் தம் முகங்காண் வாய்ப்பும் மற்றெமக் குளகொல் என்று
துனிபடர் முகத்த போலத் தூசுமேற் படர்பொற் காசு
தனியவுந் தொகையுமாகத் தண்ணீர்பாய் சுவடு தோறும்
நனிமிகத் தோன்றக் கண்டு நயப்பொடு வியப்பு முற்றார். 46

பணங்கண்ட வாஞ்சை யாலே பயஞ்சென்ற வழிகா ணாது
நுணாங்குமுட் பற்றை யூடும் நுழைதர விழி செலுத்தி
இணங்குகற் படுக ரெல்லாம் இருந்து கை கொடுது ழாவி
அணங்கு செய் பசியு மெண்ணார் ஆசையா லலையு மன்னார். 47

இடமிட மாகத் தேடி யெதிர்ப்படு காசு யாவும்
தடவி நன் கெடுத்துத் தத்தம் கைகொடு பைநி றைக்கக்
கடவிடு மூக்க மோடு காடெனு நினைவே யற்றுப்
படவராப் புற்றுப் பாங்கும் பயமின்றி நெருங்கு மெல்லை. 48

புற்றிடந் தோண்டித் துன்று புற்றாஞ்சோ றெடுக்குமெண்கு
பற்றிய புதரூ டோங்கிப் படமெடுத் திரையும் நாகம்
குற்றுடை வாளே போலுங் கோரப்பற் கொடுஞ் சிறுத்தை
மற்றிவை மனிதவாடை கேட்டெழுந் துலவ லான. 49

அனைபதீ விலங்கூ டாடும் அ சுகைதோன் றிடுத லோடும்
இனியுமிங் குலவ லிந்த உடலுயிர் உறவிற் கொவ்வா
நனிவிரைந் தகல்தும் என்றே நடுக்குற்று மிடுக்குச் சாய்ந்து
துனிமிகத் தளர்ந்தும் அச்சந் துரந்திட விரைந்தம் மட்டில். 50

முன்னிட்ட கால்பின் னிட்டு முடுகிய விசையின் மீண்ட
அன்னவர் துளங்கித் தேம்பி அவதியுற் றோடிப் பின்பும்
முன்னர்போற் கூடி யாங்கே முன்னிய வழிப்ப டர்ந்து
துன்னிய வேட்டைக் காரர் துணையதா அணையப் பெற்றார். 51

அங்கவர் உதவியாற்றா மடைந்திடற் குற்ற பாங்கர்
பொங்கிய மகிழ்வோ டேகிப் புனர்ஜன்ம முற்றார் போலத்
தங்கரு மங்கள் முற்றித் தாம்பயில் வழியே மீண்டு
துங்கநீள் பொதிகைச் சாரல் துன்னினார் வணிக ரெல்லாம். 52

பொதிகையஞ் சாரல் தன்னிற் பொலிதவக் கோலம் பூண்டு
மதிபுனை பரனை யேத்தும் மாதவர் கூட்ட மொன்றை
விதிமுறை வழிபட் டேத்தி வியப்பொடு தமக்கிங் குற்ற
அதிசய மெல்லாங் கூறி யானந்த முறுவ ரானார். 53

**வேறு**

முற்ற இவ்வதி சயமெலாம் முறைமையிற் கேட்கப்
பெற்ற பான்மையா லிங்கிதன் பின்னணி தேரின்
உற்ற தெய்விகப் பழந்தல மதுவெனல் சரதம்
மற்றச் சீர்த்தல மாண்பியல் தேர்ந்திட வேண்டும். 54

நீதி மாதவந் தனக்கொரு நீணிதி நிலையாய்
தீதில் லாவகை திகழுமுக் காலமுந் தேரும்
ஓதி யாயவெம் முயர்முனி அகத்தியற் சாரில்
ஈதி ருந்தவா றறியலா மெனக்கிளர்ந் தெழுந்தார். 55

ஒன்று மேன்மைசால் உயர்திருப் பொதிகையின் மேவித்
தொன்று தொட்டுள தமிழ்க்குள நோன்மைமேன் மைகள் தாம்
நன்று காண்வர விருந்தசீ ரகத்தியற் றேடிச்
சென்று கண்டவன் சேவடி போற்றி நின் றிரப்பார். 56

கும்ப மாமுனி போற்றியிப் பொதிகைகண் கண்ட
நம்ப போற்றி நம் நலிவறப் பொலிதவக் கோலத்
தும்பர் போற்றுறு மொருபெருந் தாபத போற்றி
செம்ப தந்தருந் தேவநின் திருவடி போற்றி. 57

எந்தை யெம் பிரா னேறுயர் புனிதர் வீற்றிருக்கும்
முந்தை மாதலத் தியல் பெலா மறிதர முயலுஞ்
சிந்தை கொண்டுழல் சிறியரேம் திகைப்புற வின்று
வந்த தோர்மயல் மாய்ந்திடு வகையருள் போற்றி. 58

**வேறு**

ஏர்மிகு சிறப்பா ரிந்தப் பாரத கண்டஞ் சார்ந்த
சீர்மிகு மீழ நாட்டில் திகழ்குட பாலின் முன்னாட்
பேர்மிகு தலமதொன்று கிலமுற்றுக் கிடக்கும் பாங்கு
பார்பயில் வணிக மேற்செல் பதிகர்வாய்க் கேட்டும் ஐய.

யாதந்தந் தலமதன்சீர் முன்மையென் பின்னை யுற்ற
கேதமென் கிளர்ந்து மீண்டும் அத்தலம் பாரி லோங்க
ஏதுபோம் புத்தி யீச னருளிருந் திடுமா றென்கொல்
தீதுதீர்ந் துலக முய்யத் தெரித்தருள் பெரியோய் போற்றி, 60

இந்தவா றேத்த நின்ற இயலிசை நாட கச்சீர்ச்
செந்தமிழ் முனிவ னாங்கே சிவனடி சிந்தித் தேத்தி
முந்தைய தொடர்பை யுன்னி முகமெலாங் கண்ணீர் வாரச்
சிந்தையுள் ளுருகி நின்று திசைகுறித் திறைஞ்சி யேத்தி, 61

மற்றவர் தம்மை யாங்கேயமர்ந்திடப் பணித்துத் தாமும்
பற்றிய தண்டு கெண்டி பாங்குறப் பதும மிட்டுப்
பொற்புற வமர்ந்து மெத்தும் போதமெய்ஞ் ஞானக் கண்ணால்
அற்புற நோக்கி யன்னோர்க் கார்வமோ டறைத லுற்றான் 62

மாதவச் செல்வர் காள் நும் மயக்கற வீது கேண்மோ
ஏதமில் ஈழ நாட்டுத் தலமது மாதோட்டத்துக்
கேதுவீச் சரம தாகுங் கேடிலா ததுவஃ தென்று
போதமார் ஞானப் பிள்ளை போற்றிய தகவு முண்டால் 63

முன்னவ னாணை யாலே முதுபுக ழிமயம் நீங்கித்
தென்னகம் படர்ந்தேற் கன்று திருமணக் கோலங் காட்ட
என்னையாள் ஈச னந்நாள் ஈழத்து மகாவலிப்பால்
மன்னுசீ ரகத்தி யஸ்தா பனஞ்செயப் பணித்த காலை. 64

அங்கது முடிந்தகையோ டாதிகே தீச்ச ரத்துத்
துங்கமா தலமுஞ் சென்று தொழுதனம் தவங்க ளாற்றி
அங்கணர் அருண்மாண் சித்திய நேகமும் பெற்றோ மஃது
பொங்கொளிக் கயிலை யேயாம் பொற்புமங் குற்ற றிந்தோம். 66

அங்கது கயிலையாக அமைந்ததொல் வரவு மாங்கே
துங்கமா தவத்துக் கேது துவட்டாமற் றினையர் பல்லோர்
பொங்குகா தலின ணைந்து பூசித்த புதுமை தானும்
இங்குள பழைய மன்னர் பணிகளு மின்னு மின்னும். 67

செந்தமிழ் மன்னர் சோழர் திருப்பணிச் சிறப்பும் பின்னர்
வந்துறு செழியர் தொண்டும் வாய்த்திந்தத் தலமே லோங்கி
நந்திய திறமும் பின்னாள் நாசகா ரிகளாய் வந்த
மந்தர்கள் செயலால் நேர்ந்த மறுக்கமு மின்னு மின்னும். 68

இம்பரீ ரிருநூ றாண்டுக் கித்தலம் மறைந்து பின்னர்
எம்பிரா னருளி னாலே எழில்மிகு சிவலோ கஞ்சார்
நம்பிகள் சில்லோர் ஈழ நாட்டில்வந் துதித்து மீண்டும்
தம்பெருஞ் சால்பா லூக்கித் தலத்தினைப் புதுக்கு மாறும். 69

தாபதச் செல்வர் காள்நும் தணிவிலா வேட்கை தீரப்
பாடமற் றறமே லோங்கப் பாருயிர்ப் பிணிக்கும் ஜன்ம
சாபந்தீர்ந்துலக முய்யச் சங்கரன் கீர்த்தி யம்பொற்
நீபமாய் ஒளிர விங்குத் தெரித்துரைத் திடுவங் கேண்மின் 70

என்றுதம் பரிவா லெந்தை குறுமுனி யெடுத்தி யம்பத்
துன்றுதா பதர்கள் யாருந் தூயநன் னியமம் பேணி
ஒன்றுசிந் தையர்க ளாகி உணர்வெழு வேட்கைகூர
நன்றுகேட் டுவந்தார் என்ப நாமுய்ந்தீ டேறு மாறே. 70

**பாயிரப்படலம் முற்றும்.**
**ஆகத் திருவிருத்தம் 396**

உ

## திருக்கைலாசப் படலம்

ஓத நீருல குய்ய அறஞ்சொலும்
வேத வைதிக வாய்மை மிகுத் துயர்
போத ஞான புவியிதென் றெண்ணுமிப்
பூத லம்புகழ் பொற்பது பாரதம் 1

பன்னு மேன்மைகொள் பாரத கண்டத்து
மன்னு சீர்மலி மாமேரு வெற்பயல்
இன்னு மேன்மே லுயர்ந்துசெ லற்புதத்
தன்மை மேவித் தளிர்ப்ப திமகிரி 2

சமயம் யாவினுந் தானுயர் சைவம்போற்
கமையு ளார்களுள் மிக்குயர் காந்திபோற்
சிமயம் யாவினுஞ் சீர்த்து மிளிர்வதோர்
சிமயந் தன்னா லுயர்வ திமயமே. 3

வானம் முட்டி மறிகட லோரிரண்
டான அந்தங்க ளாற்றுளைந் தான்றகன்
றூன மில்புவி முற்று மளக்குமோர்
மான தண்டம தாவதம் மாமலை. 4

போற்று லௌகிக மாத்மிக மாமிரு
பேற்றி னுக்கும் பிறங்குயர் சத்துவ
ஆற்றல் நல்குவ யாவையுந் தன்னகந்
தோற்று தொன்மைய தாலத் திருமலை 5

தூய யாவினுந் தூயதோர் கங்கையும்
தேயம் யாவினுந் தேடரு மோஷதி
யாய வும்மகி லத்தெங்குங் காண்பருஞ்
சேய மேனிச் சிவமுங்கொள் நீரது. 6

அன்ன மேன்மைகண் டாயுள் வரை கடந்
தின்ன முந்தனை நீங்கா துறைபனித்
துன்னு துன்பமுந் தோன்றாப் பெருந்தவ
மன்னு மாமுனி வோர்கள் பல் லாயிரர். 7

நித்தி யத்துவ மெய்தி நிலவுசீர்ச்
சித்தர் நந்திரு மூல ரனையவர்
சுத்த சாதகர் தொல்சிவ யோகியர்
மெத்து மாயிர வர்பயில் மேன்மைத்து. 8

ஒருக்கு காலர்கள் உள்குளிர்ந் தோங்கிடப்
பெருக்கு ஞான ஒளியினிற் றாபித்து
அருக்கி யம் முதல் தந்து முறைமையால்
இருக்கு முன்மொழிந் தேத்துசீர் பாங்கெலாம். 9

மாதி ரந்தொழு கேதாரம் சீசைலம்
பாதி மாதர் பசுபதி நாத்துடன்
ஓதி லந்தைக்கீழ் மாதவன் யோகுசெய்
பாதி ரிகாசி ராமம் பயில்வது. 10

மெத்து பாரத மீதி லெழுந்துலாந்
தத்வ ஞானத் தனிப் பெரும் பீடங்கள்
இத்த ரணித ரத்தன வாமெனில்
எத்த ரத்த திதுவென யார் வலார். 11

பன்ன உன்னுநர் பாவள வுட்படா
அன்ன மேன்மை யதிசயம் யாவையும்
தன்ன கங்கொடு தன்னர சாய் நிமிர்
இன்ன மால்வரை போல்வதெம் மாமலை. 12

**வேறு**

ஆவின்மெய்க் கோலங் கொள்ளும்
அவனி தன் மடித் தலத்தில்
தாவிமுன் னூட்டு கென்று
பிருதுவா லேவப் பட்டுப்
பூவின்பாற் புணர்சத் தெல்லாம்
புகுந்துள இமவான் பாலென்
ஓவில் சீர்க் கவிதைக் கீர்த்தி
உலகறி மேன்மைத் தன்றே. 13

சங்கதந் தமிழி ரண்டிற்
சார்சுவை யிலக்கி யங்கள்
துங்கமார் புராண நூல்கள்
எங்கெங்கும் விரவி யோங்கும்
இங்கிதன் கீர்த்தி வெண்மை
யெலாந்திரண் டொன்று கூடி
அங்குயர்ந் தனகொ லென்ன
அமைதரு மிமயத் துச்சி. 14

நண்ணுமூ வுலகும் நான்மை
வேதமுந் தமது வாய்மை
திண்ணிய வாக வேண்டிச்
செம்பொருட் சிவனை யுன்னிப்
பண்ணிய புண்ய வெண்மை
பரந்துறத் திரண்டொன் றாகி
நண்ணிய வோவென் றோர்கால்
நயக்கவு மமையு மஃதே. 15

சிவன்புரி யட்ட காச
மதுவெனச் சேயொன் றின்னுந்
தவப்பசித் தழுதால் தன்னைத்
தரட்டுமச் சிவனென் றெண்ணி
உவப்புறு பாலார் கோலத்
துத்தியவ் விமயத் துச்சி
நிவப்புற நின்ற தென்ன
நினையவு மாமஃ தெண்ணில் 16

இத்திறம் புலவர் யாரு
        மியல்பெடுத் தேத்த நின்ற
அத்திரு மலையி னுச்சி
        யாவது கயிலை யாங்கண்
மெய்த்தகு சிவயோ கிக்குச்
        சிரத்துமீப் பொலியு மாபோல்
நித்தனு மம்மை யோடு
        நித்தமு முறைவா னாக. 17

வெண்மைக்கோர் வெண்மை யாகி
        வியப்புக்கோர் வியப்ப தாகித்
தண்மைக்கோர் தண்மை யாகித்
        தனித்துவத் தூய்மை யாகி
எண்மைக்கோர் எண்மை யாக
        இறைவனை யெணா ராத்மீக
உண்மைக்கோர் உண்மை யாகி
        உயர்வுக்கோ ருயர் வா மஃதே. 18

அன்றன மாகி மேற்செல்
        அயனுக்கு மப்பா லாகி
நின்றிடு சிவனே யென்ன
        நினைவினாற் றேட லுற்றுச்
சென்றிடு வார்கள் செல்லு
        மெல்லைக்கு மப்பாலாகி
என்று நின் றிடுத லாலே
இறைவனே யாகுங் கைலை. 19

ஒன்றுறு சிரத்தை யன்பா
        லெய்துவ மென்ன அன்று
சென்றிடு மப்பர் தம்மைச்
        சிறிதிடை தடுத்துத் தான்முன்
நின்றிடு நிமலன் தானே
        நீ செலற் கரிதஃ தென்ற
நன்றுறு செய்தி கேட்க
        நம்முள நடுங்கு மாலோ, 20

**வேறு**

இன்னிய லார் தரு மிறாலின் பாங்கறாப்
பொன்னியல் வண்டர்தம் பொம்ம லாமெனப்
பன்னிய பத்தினொ டெண்க ணத்தவர்
மன்னியல் கயிலையின் மருங்கு நீங்கலார். 21

சித்தர்வித் தியாதரர் தேவர் கந்தர்வர்
மெத்துநல் லிசைபயில் கின்ன ரர்முதல்
இத்திறத் தவர்மகிழ்ந் தாடிப் பாடுசீர்
நித்தலு மறாக்களி நிலவுங் கைலையில், 22

அரியய னிந்திர னாதி மேலவர்
உரியசீ குருத்திர கணங்க ளொப்பில் சீர்
விரிதரு மாற்றல் சேர் வாயு மாநிலந்
தரிபணப் பத்தியார் சேட னாதியர். 23

மா திர நாயகர் மகர்ஷி வர்க்கத்தர்
ஆதிநா யகன்புரி அருளின் வாய்ந்ததம்
ஓதியா லுணர்ந்தொரு வரும்வ ழாமைவெண்
சோதியார் கைலையிற் றுவன்றி நிற்புழி 24

தம் பெரு மாட்டிகைத் தாள மொற்றிடத்
தும்புரு நாரதர் வீணை மீட்டிடப்
பம்பிசைக் குடமுழாப் பாணன் வாசிக்க
எம்பிரான் ஏன்றதோர் கருணை மேன்மையால் 25

செஞ்சடை துளங்கிட மதித ழுங்கிட
நஞ்சமர் பணவரா நிரைநெ ளிந்திட
எஞ்சலில் கரதலத் தபயந் தந்து பூங்
குஞ்சித பதமெடுத் தாடி னானரோ, 26

அங்குல குய நிக ழுமல னாடலாற்
பொங்குயர் தன்னுள வீறு தேக்கலின்
துங்கமார் பவனனைச் சேடன் நேருறீஇ
இங்குனை நுங்குவன் யானென் றேற்றெழ, 27

பார்சுமந் தநுதின மிளைத்த லன்றியே
ஓர் தர மெனினுமிவ் வுலகு காண்வர
நீர்புரிந் திட்டதோர் தீர முண்டுகொல்
யார் நின வீம்பினுக் கஞ்சும் நீரரே. 28

எடுத்ததோர் தலைச்சுமை யிறக்கி வைப்பதற்
கடுத்ததோ ராற்றலின் றவல மேவுனைப்
படுத்தவிப் படைப்பெலா மழிக்கு மாற்றலேம்
விடுத்தனம் பெயர்குதி வீம்பற் றுய்கெனா 29

வாயுமுன் பகர்தலும் வட்டித் தோங்குயர்
தேயுவிற் சினந்தெழு சேடன் கூறுவான்
ஆய நின் னாற்றலு மறிதும் அற்றை நாட்
போயநின் வீரச்சீர் புகலுங் கேனமே. 30

சிறியதோர் துரும்பினை அசைக்க ஆற்றலில்
வறியை நீ புகல்வது வாய்மை யன்றரோ
வெறுவி துன் வீம்பதை வீசி விட்டி வண்
உறுசம ரேற்பதற் கெழுதி யென்றலும். 31

மற்றெனக் குற்றுள வரம்பி லாற்றலின்
உற்றதோர் கூற்றினால் உயிர்க்கும் பேதை நின்
செற்றமேற் றுன்னொடு பொருதல் மாறிலெங்
கொற்றவெவ் வலிக்கொரு கொச்சை யாமரோ. 32

எம்பிரான் சந்நிதி விரோத மெண்ணலை
வெம்புபோர் விளைத்திட விழையும் நின்செயல்
இம்பரு மும்பரு மிகழ்தற் கேயலால்
நம்புசீர் நலந்தரா தென்ன வாயுமன். 33

இத்திறம் பிணக்குறு மிருவர் தம்மையும்
நத்துசீ ரருள் புனை நந்தி யெம்பிரான்
உய்த்தொரு புறங்கொணர்ந் துலக முய்வதற்
கொத்ததோர் வகையினா லுரைத்தல் மேயினான். 34

வீரர்காள் நீரிரு வீரும் நும்மிடைத்
தீரர்யார் என்பது தெரித்தல் வேண்டிடின்
நீர் நுமிற் பொருவது விட்டு நேர்மைகூர்
ஓர்பெருஞ் சபதத்தா லுதுதெ ரித்திரால். 35

மிக்குயர் மேருவின் சிகரம் மூன்றையும்
நெக்குறப் பிடுங்கியே நேய வாயுநீ
தெக்கணத் திடவொரு தீரஞ் செய்யதைத்
தொக்குறு வலியினாற் றடுத்தி சேட நீ. 36

இப்பெருஞ் சாதனை யியற்று மெல்வைநும்
ஒப்பில்தீ ரத்தியல் உலகங் காண்வரும்
எப்பெரும் பழுதுமிங் கியைந்தி டாதினி
அப்படிக் கமைதலிங் கழகி தாமென. 37

இருபெரு வீரரு மீதிங் கெம்பிரான்
மருவரு கயிலையான் வாக்கென் றேகொளீ இப்
பொருவரு மேருவை நோக்கிப் பொள்ளென
வருபெருந் திரமொடு வாவிப் பாய்ந்தனர். 33

அவனிதாங் குரமுடை யாதி சேடன் தன்
குவவுதோள் வலியெலாங் கூட்டி மேற்கொள
நிவவுமா யிரம் படம் விரித்து மேருவின்
குவடுமூன் றையுமறை திவவி னுற்றிட. 39

பவனனுந் தன்வலிப் பரம்பரைக்குள
திவவெலாம் ஒருக்கிநீள் சினத்தொ டேற்றதிர்
புவமொடு திவமெலாம் பூழி மொய்த்தெழக்
கவனமார் கொட்பினிற் கலக்க லாயினான். 40

ஆயதோ வாயுவி னூழி யென்றென்று
பாயமா நிலத்துயிர் பதைப்ப மேற்றிகழ்
சேயவா னவர்களுஞ் சிந்தை நைந்திட
மேயது மீயுயர் சண்ட மாருதம் 41

கடுவிசைக் காற்றினுக்குக் கவிகுடை நிமிருமா போல்
முடுகிய பவனன் மோத மூடுதன் பட நி மிர்ந்து
விடுமுனம் மறித்து மூடி வெவ்வலி யாற்பு ரந்து
படுமணிப் பணத்துச் சேடன் பலதர முழந்து நையும் 42

ஏற்றெழு காற்று வேக மெங்கணும் பரந்து மண்டித்
தோற்றுயர் சுரலோ கத்துத் தருக்களும் பறித்துச் சாய்த்து
நாற்றிசை பிதிர மோதி நாமநீள் சிகர மூன்றும்
காற்றினுக் காற்றா வென்னக் கலக்கி நின் றுலவிற் றன்றே. 43

வெந்தழற் சுவாலை கான்று விழிக்குமீ ராயி ரங்கண்
முந்துறப் பிதுக்கி மூசி முழுவலி கொடுத டுத்தும்
நொந்துநொ ந்திளைத்துத் தன்ன நோன்மைகள் முற்றச்சிந்திச்
சிந்தையா ளுக்கஞ் சோர்ந்து சேடன்சே டழியு மெல்லை. 44

பவனனுஞ் சண்ட வேகங் கொண்டுறு சிகரமூன்றும்
தவவில குவிற்ப றித்துத் தக்கணத் திடுதலோடும்
அவசமுற் றயருஞ் சேடன் அறியாமை தனக்கி ரங்கித்
திவமுறு தேவரெல்லாந் திகைத்தனர் செப்பு கின்றார். 45

ஒ தி நூல் முழுது முற்ற உணர்ந்தவ னெனப்பார் போற்றும்
ஆதிசே டனுக்கே னிந்த அவமதி அதுவு மீசன்
சோதிவெண் கயிலை தன்னில் துலங்குசந் நிதிவி ரோதம்
ஈதெனத் தேறான் காற்றோ டிவன்செற்ற முற்ற தென்கொல் 46

ஈசனா லன்றி யேமற் றெதுவுமிங் கியல்வ தன்றால்
பேசுமிவ் வாய்மை தேரினிங்கிதன் பேற தாக
மாசறு புதுமை யொன்று விளைந்திடல் திண்ண மென்றெம்
ஆசறு முள்ளங் கூறு மதுவிருந் தறிவோ மென்றார், 47

காரண னாகித் தானே கருணை யா லெவையு நல்கும்
பூரண முதல்வன் நொந்த சேடற்கும் நோன்மைசால்ச
மீரணன் தனக்கு மேற்ற வகையினா லமைதி நல்கி
வாரமார் சிற்பம் வல்லான் மயனுக்கங் குணர்த்து நின்றார். 48

சண்டமாருதம் பெயர்த்துத் தக்கண திசையி லிட்ட
எண்டகு சிகர மூன்று மென்றுந மிருக்கை யாகக்
கொண்டன மவையு மேனாட் கோலமார் கயிலையாக
உண்டொரு விதிய தற்காம் ஒப்பனை யியற்று கென்றார். 49

இப்பரி சமைந்த மூன்றின் இடத்தது கோண சைலம்
செப்புறு வலத்த தாகுந் திகழ்கந்த மாத னம்நற்
றுப்புற அமைந்த ஒன்று துலங்குமா தோட்ட மோ வா
திப்புவி யுள்ளோர் போற்ற இறைவனிங் கிருக்கு மென்றும். 50

துப்புறழ் வேணி யண்ணல் துலங்குமா தோட்ட மீது
செப்புறு கயிலையான செய்தியீ தறிமின் யாமும்
அப்பதி யணைந்த அந்நாள் அங்கது நேரிற் கண்டோம்
மெய்ப்படு மதன்சீர் தானும் விளம்புதுங் கேட்டிர் நன்றே. 51

ஆதியந் தேவ னந்தாள் அணிகிள ரிமவான் பெற்ற
மாதினை மணந்த கோல மங்கல விழவில் யாமுந்
தீதற விருந்தோ மாகச் சிறியனேன் தனைவி ழித்துப்
போதமார் முனி நீ தென்பாற் போதியென் றிசைத்தகாலை. 52

எந்தைதன் வதுவைக் காட்சி ஏழையேன் காணா வண்ணம்
வந்ததோ ரிடையூ றென்றே வருந்தினேற் கண்ணல் சற்றுஞ்
சிந்தை செய் யாதே யேகு திருமணக் கோல மங்கண்
வந்து நாம் தரிசிப் பிப்போம் வாழ்தியென் றெனைவி டுத்தான்.53

அந்தநல் லருளால் மீண்டே அணிதிகழ் மறைக்கா டெய்தி
வந்தனை செய்தா காச வழிக்கொடு படர்ந்தீ ழுத்து
முந்துமா வலிக்க ரைப்பால் முதுபுகழ்க் கரசை கண்டு
அந்தமில் அகந்தி யஸ்தா பனமமைத் திறைஞ்சு மெல்லை. 54

உம்பரார் போற்ற ஞாலத் துயிரெலாங் குதுகலிக்கத்
தும்புரு நார தாதி கணமெலாந் துதிக்க எம்மான்
வம்பலர் கோதை மாதை வதுவைசெய் கோல முற்றும்
நம்பெருங் காதல் கூர நாமுங்கண் டுய்ந்தா மன்றே . 55

அங்கதன் பின்ன ரீச னருளினாற் பெயர்ந்தே யீழத்
துங்கமார் வடமேல் பாலிற் றுலங்குமா தோட்டந் தன்னில்
தங்கியங் கெம்பி ரானைத் தகுமுறை விதியாற் றாபித்
தங்கமந் திரங்க ளோதி யருச்சித்தங் கிருந்த காலை. 56

அருவுரு வாக வீசன் அமர்ந்தருள் பொற்பி னாலும்
பொருவரு கணங்க ளேனைப் பூதவே தாளந் துன்று
மொருபெரும் பொலிவி னாலு மோங்குபே ரொளியி னாலும்
திருமலி கயிலை யங்கு திகழ்தரக் கண்டு வாழ்ந்தோம். 57

அத்தலத் தொன்றி வாழு மகிலயோ னிகளு நம்முன்
தத்தம துணைக ளொன்றத் தழுவியப் பழமை சான்ற
சத்தியுஞ் சிவமு மாகத் தயங்கு மெய்க் கோல நோக்கி
மெய்த்தவப் பேறெமக்கு விளை நீதவா நதிசயித்தோம். 58

ஆங்கு நாம் தாபித் திட்ட அருவுரு வாமி லிங்கந்
தீங்குதீர் சீகண் டேசர் அவர்தம்மே லாவிர்ப் பாவித்
தோங்கியக் கயிலை யண்ணல் உருக்கியங் கென்னைத்தன்பால்
வாங்கி வாழ் வித்த சீலம் மறக்கிலம் நினைதுமின்னும். 59

இத்தகு தலத்தி லென்று மினியவ னிருக்கை நோக்கி
மெய்த்தகு கீர்த்தி மேலோர் மிகுபலர் விழைந்த ணைந்து
நித்தனைப் பூசித்தான்ற நீடருள் பெற்றுயந்தார்கள்
அத்தகை யோரிற் கேது அர்ச்சித்த படிமுன் சொல்வாம். 60

**திருக்கைலாசப் படலம் முற்றும்**
**ஆகத் திருவிருத்தம் 456**

## கேது பூசைசெய் படலம்

ஞால முற்று மியல நடக்குமோர்
காலங் கண்டிடு கற்ப மனைத்திற்குள்
மூல மாங்கற்ப முன்னுமன் வந்தரத்
தேலு மோர்யுகத் தேலுமோ ரெல்வையில். 1

சயில முற்றுக்குந் தானர சாயசீர்க்
கயிலை மீதினிற் கண்ணா யிரன்முனம்
பயில வானவர் பல்லாயிரர்குழி இ
அயில்கொள் சூலத் தரன்கழ லேத்துவார். 2

உலக மானிடர் போலொரோ ரூழியில்
பலத ரம்மரித் துப்பிறக் கின்றதோர்
அவல நீத்தம ரத்துவம் பெற்றுத்தாம்
நிலவ வேண்டுதல் நெஞ்சத் திடைக்கொளா. 3

போற்றும் வானவர்க் கேற்புற நல்குவான்
ஏற்று வாகனன் இன்முகஞ் செய்தவர்
தேற்ற முற்றிடத் தீமர ணத்துக்கோர்
மாற்று மாமருந் தாம்வகை சாற்றுவான். 4

ஆய ஐந்தொழிற் கண்ணிரண் டாவதாய்
மேய காத்தற் றொழிற்குரி யான்நந்தம்
மாயன் றேர்குவன் மற்றது நீரினிப்
போய வன்புடை மேவுதி ரென்றலும். 5

அண்ணல் பேரரு ளாதரித் தாங்கவன்
புண்ணி யப்புகழ் போற்றி மலர்ந்தெழீஇப்
பண்ண வர்பரந் தாமனி ருக்கையின்
நண்ணி நின்று நயப்புற வேத்துவார். 6

ஏத்துந் தேவர்பா லின்னருள் பாலித்தே
மாத்தி கழ்மணி மார்பினன் தானெழீஇத்
தீத்தி றம்மெதுந் நேர்ந்துள கொல்லெனா
ஆத்தர் பான்மையி னன்பொ டுசாவலும். 7

தாவ ரும்புக ழோய்நின் தவலருங்
காவன் மீறிக் கருகல ரானமக்
காவ தற்கொரு தீங்கிலை யிங்கியாம்
மேவ வந்த திதுவென் றியம்புவார். 8

சரண முற்றோர் தமதிடர் யாதுமோர்
திரண மாக்குநற் றீரமெய்ப் போகமே
அரண மாக்கொ ளளியோம் நடுக்குற
மரணம் வந்துறும் மற்றிதற் காற்றலேம். 9

தீது சேர்மர ணத்தடை நீங்கியாம்
போது புண்ணியத் தாற்பெறு போகங்கள்
யாது மோர்தொடர் பாக நுகர்ந்திடற்
கேது மோர்வகை எம்பொருட் டாற்றுவாய், 10

என்னக் கேட்டலு மீடிலா மாதவன்
தன்ன கத்திடைத் தானந்தர் யாமியாய்
மன்னு மாபரன் வாக்கற் றுணர்த்துமோர்
முன்னந் தோற்றலு மிவ்வகை முன்னுவான், 11

**வேறு**

போக மேபொரு ளாக்கொடு போகத்திற் றணியாத்
தாக முற்றிடு தேவரைச் சலிப்பற ஆழ்த்திப்
பாக மெய்துவித் தாள்வது பரனருட் குறிப்பாம்
ஆக லானவ னருள்வழி யாற்று தல் கடனே. 12

வேண்டு வார்கள்தாம் வேண்டிய வேண்டியாங் கருளும்
ஆண்ட வன்திரு வருட்குறிப் பதன்வழி யின்னோர்
மாண்டி டாவகை மாற்றதாம் மருந்தொன்றிங் கின்னே
காண்டல் நன்றெனக் கண்ணனுட் கருதுவா னானான். 13

ஓர்கணத்தினி லுறுதிசார் மருந்தொன்று மதனைச்
சேர்த லாவதோ ருபாயமுந் தெரிந்துகொள் மாயன்
ஆர்வ மோடுறு மமரர்மே லலர்விழி சாத்திக்
கார்பெற் றால்மயி லெனவவர் களிகொளக் கழறும். 14

மாறில் தேவர்காள் மற்றுநும் மரண மாற்றாகக்
கூற லாவதோர் மருந்துள தமிர்தமற் றதன்பேர்
தேறு மாங்கதற் கிருப்பிடம் பயோததி யதனை
ஊறி லாவகை கடைந்தெடுத் துண்ணல் நுங் கடனே. 15

யாது மொன்றுமற் றெண்ணலீர் யாமுமும் முடனாய்
ஏது சாதன மானவை யாவுமுன் கூட்டித்
தீதில் தெள்ளமு தாங்ஙனம் நீர்கொளத் துணையா
யாது மென்றலு மமரர்கள் கிளர்ந்தெழுந் தார்த்தார். 16

உறவுக் கோல் நிறீஇ யுள்ளமாம் பயோததிச் செறியும்
பெறல ருஞ்சிவப் பேரமிர் தெழுந்திடப் பிறங்கும்
விறலி னாருணர் வெனும்வடம் விக்கித்தாங் கடையும்
அறவர் தஞ்செய லாமென அரியுமப் பொழுதே. 17

மந்த ரத்தினை மத்தென நிறுவிவா சுகியை
விந்தை யார்கடை கயிறென வீக்கிவிண் ணோர்கள்
வந்தொர் பாலுற மறுபுற மசுரர் நின் றீர்ப்பச்
சுந்த ரத்திருப் பாற்கடல் துளக்குறக் கடைவான். 18

நந்து பேரலை நாற்றிசை யினும்பரந் தலையக்
கொந்த ளித்தெழு கடற்குடர் குழம்பிடக் கலங்கி
அந்த ரத்தெழு நீர்ப்பெருக் கமரநா டலைப்ப
மந்த ரத்தனிப் பொருப்பொரு பம்பர மெனவே. 19

சுழலும் வேகத்தி னாற்றலை சுழன்று தீக் கான்றிட்
டழலு மிழ்விழி பிதுங்கியாங் கவசமுற் றரவந்
தழலு லாவுவெவ் விடமுமிழ்ந் திடுதலுந் தாம்பார்த்
சுழலுந் தேவர்கள் உயிர்க்கஞ்சி யோட்டெடுத் தனரால், 20

**வேறு**

இரவோ ரத்தந் திப்பகல் மருவிந
மிறைவியு மிறைவனும் போன்ம்
பிரதோ ஷத்தனி வேளையி லடியார்
பிரானடி நேர்ந்து தொழும்
திரயோ தசியிற் செறுவிட மஞ்சித்
திசைகெட் டிரிவிபுதர்
கரயோ கத்தண் டன் மகிழ் கயிலைக்
கோயிற் கடையுற்றார். 21

சந்நிதி மருவித் தாழ்ந்தெழு மன்னோர்
பிரதக் ஷிணமாக
மன்னிய வடபாற் கோமு கை மருவலும்
வல் விட மெதிர்நேர
அந்நிய மறியா ரமரர்தி ரும்பிமு
னலறிவெ ருண்டோடி
வன்னியன் கோயிற் கோமுகை மறுசார்
மருவுறு மெல்லையினில் 22

வஞ்சவி டம்பினு மறுபுற மெதிரலு
மறுகிப் புறகிட்டே
தஞ்சமு னக்கெமை யருளென உழறிக்
குழறித் தடுமாறி
முஞ்சுறு நிலையின ராய்த் திரு வீதியின்
மும்முறை ஊசலிட
அஞ்சலி ரெனவோ ரபய கரந்தந்
தாள்வா னிறைவனுமே. 23

கோலா கலமிட் டலறிட வமரர்க்
கொல்ல முனைந்து வரும்
ஆலா கலமத ணுக்கத் தொண்டனை
யாலால் சுந்தர நீ
காலார் விசையிற் கடுகிப் பற்றிக்
கைக் கொடு வருகெனவே
மேலா மிறையோன் விடுத்தலு மன்னோன்
விரைந்து கொணர்ந்தனனே. 24

கொடுவரு விடமொரு கோலம லர்க்கைக்
கொண்டருள் விமலன்றான்
திடுமென வதுதன் திருக்கள மாரத்
திணித்தன னது காணூ உ
படுமவ லந்தவிர் பான்மைய ரிறையோன்
பாதம லர்க்கீழ்வீழ்ந்
துடுபதி முதலோ ருலகுய வீதொன்
றொப்பித் துவந்தனரே. 25

புண்ணிய முதலே போதுவெவ் விடமுண்
டாத ரெமைக்காத்தாய்
மண்ணியல் மாந்தரித் திரயோ தசியின்
வருபிர தோஷத்தே
நண்ணியிவ் விதம்பிர தக்ஷிணம் பண்ணி
நமஸ்கரித் திடிலன்னோர்
கண்ணிய வரமரு ளென்றலு மண்ணல்
கனிந்தருள் நல்கினனே. 26

**வேறு**

அஞ்சி யோடிய அமரர்கட் காங்ஙனம் நல்கிச்
செஞ்ச டைச்சிவன் நஞ்சினைத் தானமு தாக்க

விஞ்சு மாமகிழ் வெய்தியே மீளப்போய்க் கடைந்திட்
டெஞ்ச லில்லமு தெழுவது கண்டுளங் களித்தார், 27

வந்து தோற்றிடு மமுதினை வானவ ரோடு
நந்து தானவர் தாங்களும் நசை இமுற் குழுமத்
தந்தி ரத்தினால் தானவர்க் கதுதவிர்த் திடுமா
சிந்தை செய்தரு மாலுரு மாறிநின் றனனே. 28

மோக மேவரு மோகினி யுருவினிற் றிருமால்
ஏக மற்றவட் பின் தொடர் தானவர் காம
தாக மீதெழத் தாந்தமில் மொத்துண்டு மடிந்து
சாக லாம்வகை நின்றனன் தந்திர மாலே. 29

மாயன் தன்விர கறிதலின் வானவர் மயங்கா
தாய பான்மையி னழிவுறா துய்ந்தன ரங்கண்
சேயனாய் நின்ற சிங்கிசூ னுவுமதிற் சிக்கா
தேய நல்வினை யாற்பிழைத் திருந்தமை தேரான் 30

அமரர் தங்கள்பே ராரவா ரத்திடை யமுது
பகிரும் மாதவன் படர்நெருக் கிடைத்தனை மறைத்தங்
கமருஞ் சைங்கிகன் தனையறி யாதவன் கரத்தும்
அமர நன்னிலை யாக்குமவ் வமிர்தமீந் திட்டான், 31

தான வன்செயல் சகிக்கலாச் சந்த்ரசூ ரியர்தாம்
மான முற்றது மாலுக்குச் சமிக்ஞையாற் றெரிக்க
ஈன முற்றதென் றெடுத்தசட் டுவத்தினால் வெட்டி
ஆன வன்சிர மற்றுடல் வேறுறத் துணித்தான். 32

முட்டு வெஞ்சின மூர்க்கத்தின் முராரிகை வெட்டும்
வெட்டு மற்றவன் விரிதலை யுடலின்வே றாக்க
மட்டு மேயுத விற்றலான் மர்மவைப் பாகும்
உட்ட ருஞ்செறி வுடலுயிர் பிரித்தில தென்னே. 33

வெட்டு வீழ்வதன் முன்னமே அமுதவூண் விழுங்கி
விட்ட பேற்றினால் வீந்திலா மெய்யொடு சிரமும்
முட்ட முன்செய்மா தவப்பய னுந்திடக் கிளர்ந்தே
அட்ட மூர்த்திவாழ் கயிலையஞ் சாரல்மே வினவால் 34

ஆதி மூர்த்தி தன் கயிலைமண் வாசனை யளிக்கும்
ஓதி யோர்சிறி துறுதலின் உறுமக்கூ றிரண்டும்

தீதில் சேதன் வுருக்களாய்த் திகழுமச் சாரற்
பாதி மாதர்பாற் பலன் பெறத் தவமியற் றிடுங்கால் 35

முண்ட மாகியுஞ் சைங்கிகன் முயல்பெருந் தவத்துக்
கண்டர் நாதன்றா னிரங்கியங் கவற்குணின் றுணர்த்தும்
எண்ட ருந்தவ யோகி நீ யீங்குனக் கெழிலார்
குண்ட லிப்பெரு யோகங்கை கூடிய திறனால் 36

கூடு மவ்வியோ கக்குறி யாயொளிர் அரவச்
சேடு மிக்கொளிர் செந்நிறச் சிரமுனக் குறுக
கேடில் கேதுவென் றுன்பெயர் நிலவுக வீழ
நாடு சார்ந்தங்கு யாம்மகிழ் மாந்தையின் நண்ணி 37

நலங்கொள் குண்டலி யோக நா யகர்களாம் நாகர்
குலம்பு ரிந்துமுன் பூசித்த கோளகை யொன்று
பலங்கொள் சீர் நதி பாலாவி மேல்கரைப் பாலே
யிலங்கு மாகண்டங் குயர்சிவ பூசனை புரிதி. 38

புரியும் பூசனைப் புண்ணியம் பலங்கிளர்ந் துறுதற்
குரிய காலையில் உன்முனம் யாமணைந் துயர்வாம்
அரிய நல்வரம் யாவுந்தந் தாளுது மெனலும்
பிரிய மீக்கொளப் பிரானருள் பேணியங் கெழுந்தான். 39

நாகர் தங்குலம் பண்டுபூ சித்ததும் கேது
நாக நற்சிரத் தோடணைந் தர்ச்சனை புரிய
நாக சேகரன் நயந்ததுங் கொண்டுகே தீசன்
நாக நாதனென் றாகிய காரணம் நயப்பாம். 40

கயிலை நீங்கிய சைங்கிகன் கடுவிசை யினிற்போந்
தயிலை முக்கருப் படையினன் அருள் நலம் பேணிப்
பயிலை வேறுள நியமத்திற் பாலாவி மூழ்கி
எயிலைக் காய்ந்தவ னிலங்குமக் கோளகை யணுகி. 41

ஐவ கைப்படு சுத்திசெய் தகம்புற மிறைஞ்சிச்
செவ்வி தின்னறு மலர்புகை தீபமஞ் சனமுங்
கைவ கைப்பயில் சாதன மியாவையுந் தொகுத்து
மெய்வ கைச்சிவ பூசனை முயலுந னானான். 42

மோக மேவிட முடுகுமைம் புலவுணர் வனைத்துங்
காம வாயுவி னோட்டமுங் கையகப் படுத்தி
வேக மாகமேற் கொண்டெழு குண்டலி யோக
பாகங் கைவரு பண்ணவ னாதலிற் கேது. 43

ஆகத் தொன்றுமா தாரங்க ளாறும்விட் டேறி
ஏக மாஞ்சிவந் தன்னையுன் மனாந்தத்தி லியையுஞ்
சோகம் பாவனை யுறைப்பினிற் சுகித்திருந் துயர்சீர்
ஆக மோக்தமாம் பூசனை யமைதியி லாழ்ந்தான் 44

ஆவி நல்வளா கத்தினுக் கப்புறத் தகன்று
மேவி நின்றொளிர் விரிசடை நந்தியைத் தொடர்ந்து
கூவிக் கொண்டுவந் துற்றதோர் குறியினிற் சேர்த்துத்
தாவிக் கும்பிரா சாதமந் திரநெறி தழுவி. 45

ஆகம் நெக்குரு கன்பினி லெம்பரன் றனையா
வாக னத்தொடிஸ் தாபன சந்நிரோ தத்தால்
தேக மீதுனக் கிங்கமர் கெனப்பரிந் திருத்தி
நாகப் பூந்தலைச் சைங்திகன் நறுமலர் நீரால் 46

பாத்தி யத்துட னர்க்கிய மாசம னீயம்
சீர்த்த மஞ்சனத் திருப்பரி வட்டமே பூணூல்
சாத்து மாலைகள் தந்து நைவேத்தியஞ் சமர்ப்பித்
தார்த்தி கூரக்கற் பூரவா ராத்தி செய்ததன் மேல். 47

நேத்தி ரானந்த முறநெடி திருந்தெதிர் நோக்கிக்
கூர்த்த மெய்யுணர் வொளியினிற் கொண்டினி திருந்தே
ஆர்த்த ஆசன மூர்த்திமூ லங்களா லர்ச்சித்
தீர்த்த மாமல ரிறைத்திரு கரஞ்சிரத் தேற்றி. 48

காந்தண் மாமலர் கவினுற விரிந்து பல்தரமுஞ்
சோர்ந்து கூம்பிடு தேற்றம்போல் அவைபதித் தயலிற்
போந்துலாவரு மனமது சகசிர தளத்திற்
சேர்ந்து கூம்பிடு குறிநிலை யொன்றிடத் தொழுதே. 49

அளியு லாவரு மின்னெனப் பொன்னொளிர்ந் திலங்கும்
ஒளியை யுள்கியுள் ளுருகியங் கோருமைந் தெழுத்தைத்
தெளிய வோதியோ ராயிர முருச்செபித் தின்பக்
களியின் மூழ்கியங் கந்நிலை காதலித் திருந்தான் 50

இன்ன பான்மையி லினிதமர் பூசனை நிறைந்த
பின்னு மாதரம் பெருகநன் கேத்திநின் றுருகிப்
பன்னு தோத்திர மாலைகள் சாத்திச்சூழ் வந்து
முன்னு றப்பணிந் தெழுந்துத்வா சனவிதி முடித்தான், 51

இத்தி றம்பயில் திவ்யபூ சனையநு தினமும்
மெத்து மாதர வொடு புரிந் தின்பமர் கேது
உத்த மத்திரு மாந்தைசா ருபவனந்தொறும் வாழ்
சித்தர் வர்க்கமோ டளவளா வினிமையிற் றிகழ்ந்தான், 52

கேடில் கேது சனைப்பயன் கிளர்ந்திடு செவ்வி
நாடி நாதனங் கொருபகல் பூசனை நிறைவின்
ஈடில் கௌரிபாங் குறமகிழ்ந் திடபமூர்ந் தாடிப்
பாடு பூதரோர் பலர் தொழப் பரிவுட னணைந்தான். 53

கண்ட கேதுவுங் களிமகிழ் துளும்பநின் றாடி
விண்ட வேட்கையன் விடையவ னன் றெழுந் தருளக்
கொண்ட கோலமொன் றேபொரு ளெனக் கொளுங் குறிப்பால்
மண்டு தேனமர் வண்டென மருவுமின் பார்ந்தான். 54

வாய்விண் டேதொன்றும் வேண்டில னாயினு மன்னோன்
நேய மார்சிவ பூசனை நயமுல கேறற்
கேய சாதன மாகவும் இவற்கொடு ஞாலம்
பாய சீர்ப்பய னெய்தவும் பரனிவை யருள்வான். 55

கேது கேணலங் கிளர்சிவ பூசனை புரிநீ
ஏது வாகவித் தலம்மஹா சிவதல மாகித்
தீதில் தன் பெயர் நின்பெய ரானில வுகநீ
மாதி ரம்புகழ் ஞானகா ரகனுமாய் மகிழ்க. 56

மீது லாநவ கோள்களி லொருவனாய் நீயும்
பூத லத்தவர் போகங்கள் வரையறுத் தூட்டும்
ஓது சீர்ப்பதம் மேவுக உபராக நிகழ்தற்
கேது காரக னாகவு மியல்கவென் றிசைத்தான். 57

ஏலு மிவ்வர மெலாமளித் தெம்பிரா னங்கட்
கோலு கோளகைக் குட்கரந் தொடுங் கின னிமைப்பின்
சாலு மன்னவன் தானருள் புரிந்தவந் நெறியே
மேலு லாவரு கோளுல கெய் தினன் கேது. 58

போத மாதவச் செல்வர்காள் புண்ணியப் புகழார்
மாத வத்திருக் கேதுபூ சித்தமை கேட்டீர்
நாத னாணையால் நாமுமத் தலத்திலர்ச் சித்த
தோதி னம்முன மதன்றிறத் தினுமொன்று கேண்மின். 59

கோதில் கேதுபூ சித்திடு கோளகை யாங்கண்
ஆதி யாம்பர னன்றெமக் கருளுமோர் குறிப்பால்
சீத நீர்முடிச் சிவனையோர் சீகண்ட விலிங்கத்
தாதரித்தழைத் தருண்முகங் கொளவமர்த் தினனால். 60

பாத கந்தவிர்ந் துய்யயாம் பதிட்டை செய்சுத்த
சேத னத்தனித் திருப்பிழம் பாயசீ கண்ட
நாத னைப்பலர் நாடிவந் துய்ந்தன ரவருட்
சோதி மான் துவஷ் டாதொழு துய்ந்தசீர் துதிப்பாம். 61

**கேது பூசைசெய் படலம் முற்றும்**
**ஆகத்திருவிருத்தம் 517**

## துவஷ்டா பூசித்தபடலம்

வேறு வேறியல் யோனிபே தங்களும் பிறவும்
நூறு நூறுபல் லாயிர விதமுறத் தோற்றும்
வீறு சார்தரு விசுவப்பேர்ப் பிரமந்தான் படைக்கும்
மாறில் சீருயிர் வாழ்வியல் வளம்பெற வகுப்பான். 1

ஆரி டர்புகழ் ஐம்முகப் பிரமமாய்ச் சகளித்
தோர்மு கத்தீனுக் கொருவரை யுற்பவித் துலகிற்
சேர்தொ ழின்முறை யாவையுஞ் சிருட்டிப்பித் தவரே
பாரி லித்தொழில் விருத்திபா லிக்கவும் நல்கும். 2

மன்னு மைம்முகத் தொன்றதா மகோரமா முகமாச்
சொன்ன அன்னதிற் றோற்றிவந் துறுமஹா துவஷ்டா
என்னு மேலையோன் எழிலமர் செம்புமுன் னாகப்
பன்னும் லோகத்திற் றொழில்வளம் புரந்திடும் பண்பால் 3

தேவர் தானவர் மனிதரா மெத்திறத் தார்க்கும்
ஆவ வாள்முத லாயுத மன்னவர்க் கரண
மேவு கோட்டைகள் படைத்தளி விஸ்வகன் மாவென்
றேவ ரும்புகழ் பெயர்நிறீஇ யிலங்குமந் நாளில். 4

விருத்தி ரன்றனோ டுருத்திகல் புரியுமிந் திரனுக்
கருத்தி யாலவன் குலிசங்கூர்ப் பித்தளித் தானென்
றிருக்கு ரைத்திடும் இவற்கொடே தக்கனுந் தான்செய்
கிருத்தி மங்கெழு கிரதுமண் டபஞ்சமைத் தனனாம். 5

இன்ன பான்மையின் வேதமோ டியலிதி காச
மன்னு சீர்மலி மனுமயன் சிற்பிவிஸ் வஜ்ஞன்
சொன்ன இங்கிவர் துணைவராய் மேம்படு துவஷ்டா
இன்னு மேம்படுங் கருத்தினா லிருந்தவ முயன்றான், 6

ஆற்று நீண்முடி யானவ னன்பமர் நோன்பை
யேற்று மற்றவற் கேற்குமா றருளமுன் தோற்றிப்
பாற்ற டம்புனற் பாலாவி யதன்மருங் கெய்தி
நோற்று யர்ந்திடு கேதுவின் நோன்புகழ் சாற்றி. 7

ஆங்கணு ற்றெம தடியவன் முன்பு தாபித்த
தேங்கு மாரருட் சீகண்ட லிங்கத்தை யணுகிப்
பாங்கி னாற்பர விச்சிவ பூசனை புரிதி
யாங்கி யாமுற்றுன் குறைமுடித் தருளுது மென்ருன். 8

ஆதி யாரரு ளாணைமேற் கொண்டெழு துவஷ்டா
சோதி யொன்றுதன் துணையதா வழிசெயத் தொடர்ந்து
மோதி மீதலை பாலாவி மருங்குபுன் னாகச்
சாதி மாலதிச் சம்பகத் தருவனஞ் சார்ந்தான். 9

எண்ணில் சீர்மலிந் தண்ணலார் திருவடி நிழல்போற்
றண்ணென் றின்னிசை தழீ இநறு வாசனை கெழுமிக்
கண்ணுக் கின்னிதாய் நாவினு மிரசமூர்ந் துலவப்
பண்ணு நீரதப் பாலாவிப் பசுமரச் சோலை. 10

கொந்து மாந்தளிர் கோதுபூங் குயிலிசை மிழற்ற
நந்து மாமயி லகவிட நவில்கிளி கொஞ்ச
மந்தி கீச்சிட வண்டின மியாழ்செய மலர் தூஉய்
நந்தி பூசனை பஞ்சதுந் துபியொடஃ தியற்றும். 11

ஆன காநடு மானச வாவிபோ லான்று
தேன லம்புதண் டாமரை குவளைசெங் கழுநீர்
பான லாதியாம் பன்மலர் நன்னிறம் பரப்பும்
மான நீர்த்தட மொன்றதன் மருங்கினி லமர்ந்து. 12

பவ்ய மாதவ முனிவரர் பரிந்துவந் தணையுஞ்
செவ்வி பார்த்துறு சீகண்ட மூர்த்தியைப் பஞ்ச
கவ்ய மாடியைத் திவ்விய தேஜஸைத் துவஷ்டா
சவ்ய பாகுவும் நயனமும் பனித்திடக் கண்டான். 13

கண்ட போதினிற் கம்பித மெழுவச மழிந்து
கொண்ட அங்கங்க ளெட்டுமா நிலத்தினோ டொட்டத்
தண்ட மாய்விழுந் தெண்டகு பரிவுமீக் கூர
மண்டு காதலான் வாய்விண்டு துதித்துமெய்ம் மறந்தான் 14

மெய்ம்ம றந்தர னருணினைந் துணர்வுகொண் டெழுந்து
செய்வ கைச்சிவ பூசனை யாற்றுதற் கிசைவான்
எய்த வேண்டுவ சாமக்ரி யாவையுந் தொகுத்தே
செய்தவத் தினான் சிவன்மகிழ் பூசனை முயல்வான் 15

ஓத ரும்விசு வப்பிர மத்தினின் றுதித்தே
வேத வைதிக விதிமுறைக் குரியனாந் றுவஷ்டா
போத யானநற் சூத்திரம் புகல்நெறி பேணித்
தீத கல்ஸ்நா னாதிகள் செய் கடன் தொடங்கி. 16

சங்கற் பம்முத லாவரு சகலநீ ராடற்
றுங்க நூல்விதி தொடர்ந்துநற் றருப்பணம் முற்றித்
தங்கட் காமுறை சந்தியா வந்தன மாற்றிச்
செங்கட் சேவினற் காஞ்சிவ பூசனைக் கமைவான். 17

தேக மன்றியான் தேகியென் னுணர்வினி லழுந்தற்
காசுத் தன்னையே அழித்துப்பின் னருளினாற் படைக்கும்
தேக சுத்திமுன் னாவரு பஞ்சசுத் திகள் செய்
தேக னாய்ச்சிவ னோடொன்று பாவனை புரிவான். 18

சங்கி தாமந்த்ர மைந்தினோ டாறையு மங்கை
அங்கு லித்தலை தொறுமமைத் தவற்றினா லுடலிற்
றுங்க மார்சிர முதல்முழுந் தாள் வரைபரிசித்
தங்க முற்றுமே சிவமய மாக்கியங் கதன் மேல் 19

வீற்று வீற்றறு மிடைகலை பிங்கலை யிரண்டுங்
காற்றை ஏற்றியு மிறக்கியுஞ் சமநிலைப் படுத்தி
ஏற்றி றக்கறக் கும்பித்துச் சுழுமுனை திறந்து
தோற்று குண்டலி யாற்றலான் மேற்கொடுற் றேறி. 20

ஆறெ னப்படு மாதார சக்கரந் தாண்டிச்
சேறு நீளிடைச் சிதாகாய மண்டலத் தப்பால்
வீறு தேசுறு மீசான மூர்த்தத்தொ டொன்றும்
பேற தாகுமச் சிவோ ஹமாம் பெருநிலை பேணி 21

ஆசன மூர்த்திமூல மாமுறை பொருந்த வெண்ணி
ஆசிலா தார சக்தி தனையர்ச்சித் ததன்மேல் மன்னுந்
தேசுறு மனந்த னாதி தெரிதரு விமல மீறாப்
பேசுபஞ் சாச னங்கள் பிறங்குநூன் முறைபூ சித்தே. 22

நேர்த்திசா லியோக மீண்டும் நினைவகங் கொளவர்ச் சித்து
மூர்த்தியா வாக னச்சீர் முன்னுவான் பிராசா தப்பேர்ச்
சீர்த்தமந் திரத்தா றுன்னித் திகழ்பிரா ணாயா மத்திற்
பேர்த்திடு கும்ப கத்தாற் குண்டலி யனலை மூட்டி 23

மூலவா தாரத் தானை முகனருள் முகங்கொண் டுய்க்க
மேலெழு பிரண வத்து மிகுகலை யீரெட் டாகச்
சாலுமே தாதி தோறுந் தகவுறு மைந்தெ ழுத்தின்
பாலுறு தியானத் தொன்றிப் பைப்பய மேற்சென் றேறி 24

ஆதார கலைக ளென்னு மாறினோ டாறுந் தாண்டி
மீதான நாதாந் தத்தின் மேலுஞ்சென் றுன்ம னாந்த
மீதாக வொளிரு மின்னார் விசித்திரச் சிவச்செஞ் சோதி
போதாரஞ் சலிக்குட்சேர்த்திப் புலங்கொளப் போற்றித் தாங்கி 25

ஓதுமைந் தெழுத்து றைப்பி னொன்றிநின் றிறக்கி நெற்றி
மீதுறு மாஞ்ஞைநேரே நிறுத்தி நின் றனந்த சூர்ய
சோதியா மாறு கண்டு துதித்துறு மிரேச கத்தாற்
போதம ரஞ்ச லிக்குட் புகுந்தவோ றுணர்வாற் கண்டு 26

இதமுற விறக்கிப் பின்னு மிதயநே ரநாக தத்தே
கதமுறு முருத்ர சோதி கண்டுகைப் புகுத வாங்கி
விதமுறு முரோம கூப மிக்கெழ உள்ள மார்ந்த
முதமுறு மினிமை பொங்க மூர்த்திதன் முடிமேற் சேர்த்தி 27

மாதமர் பாகனுண்மை வடிவுகண் ணெதிரே தோன்றப்
போதபா வனையாற் கண்டு புளகித்துட் கசிந்து கூசித்
தாதநீ யணைந்தாய் கொல்லென் தகவமர் உபசா ரத்துக்
காதர வாகவத்த அணைந்தன மெனல்கேட் டாங்கண் 28

முடிவிலா முதலே யின்றிம் மூடனேற் கருள வந்த
அடிகளே அடியன் பூசை அவசான மெய்துங் காறுந்
நெடிதிருந் தருள்க வென்று தேயத்தாற் பரிந்து வேண்டித்
துடி துடித் துளவெப்பூரச்சுவாகதார்க்கியங்கொ டுத்தான். 29

மேலுமன் புருக நோக்கும் விரிகா மிரண்டும் நீட்டும்
மாலுற மறிக்கும் கட்டை விரல் நிமிர் முஷ்டி சேர்க்கும்
சாலுமங் குஷ்டம் முஷ்டி தனுள் மறைந் திடமடக்கும்
ஆலுமங் கவன்ம கிழ்வின் நாலுமெய் விருத்தி யீதா. 30

நாடுமா வாக னஸ்தா பனசந்நி தானமோடு
கூடுசந் நிருத்த முத்ரை கொடுத்துப்பின் அஷ்ட திக்கும்
சோடிகா முத்ரை தந்து சுற்றுக்கா வலும மமைத்து
ஈடுறு மிலிங்க புத்தி தவிர்ந்தியல் சிவமே கண்டான், 31

மஞ்சள் வெண் பொடிப ளித்தம் மான்மதக் கலவைச் சேறு
நைஞ்ச தீங் கனிகள் நன்னீர் நறுநெய்பா றயிர்தே னாதி
பஞ்சகவ் வியமுங் கூடப் பராபரன் முடிமே லாட்டு
மஞ்சனத் திரவி யங்கள் வரன்முறை யாற்றா பித்து 32

மருமல ரிட்டர்ச் சித்து மணமலி தூபம் தீபம்
தருமுறை தந்து தேனு முத்திரை சமர்ப்பித் தன்பால்
அமிருதீ கரணம் பண்ணி அண்ணலை நீராட் டற்காம்
அருமையை நினைந்துட் கூசி அவன்முன மொதுங்கி நின்றே. 33

எடுத்திரு கரமுங் கூப்பி இயல்சிவ யோக சித்தர்க்
கடுத்திடு மாஞ்ஞை மேவி அவர்மதி மண்ட லத்தின்
மடுத்திழி யமுத வாரி மஞ்சனம் மகிழுமா போல்
அடுத்திடு மன்பி லேன்செ யபிஷேகங் கொள்க வெந்தாய். 34

பாடுசீர்க் கண்ணப் பன்வாய்ப் பைம்பொனங் கலசத் தூநீர்
சேடுயர் கங்கை நீரிற் சிறக்குமென் றுவக்கு மெந்தைக்
கோடுபா லாவி நீரும் உவக்குமோ என்றென் றேங்கிக்
கூடுபல் வாசஞ் சேர்த்துக் கொணர்ந்தனன் கொள்க வெந்தாய் 35

இவ்வகை யிரந்து நாத னெழின்முடிப் புஷ்பஞ் சாத்தி
மெய்வகைத் திரவ்ய முச்சி மேலெடுத் தினிதி னாட்டி
அவ்வவற் றிறுதி தோறு மணி கொளா ராத்தி காட்டிச்
செவ்விதிற் றீர்த்த மாட்டிச் செழுங்கணீர்த் திவலை யாட. 34

சிற்றிளங் குழவி மேனி சீதளந் தாங்கா தென்னும்
பற்றுறப் பரியும் நற்றாய் பதைபதைத் தொற்று மாபோல்
சுற்றிடு சுழிநீர்க் கங்கைச் சுடர்முடிப் பரன் பொன் மேனித்
துற்றிடு மீர மொற்றத் திருவொற்றா டையுமுன் சாத்தி 37

பட்டொடுத் தரியஞ் சாத்திப் பளிதமான் மதக்கு ழம்பும்
அட்டகந் தமுமேற் சாத்தி அணிமலர் மாலை சாத்தி
விட்டுவில் லொளிரும் பொற்பூண் வேண்டுவ பலவுஞ் சாத்தி
எட்டுவான் குணத்தன் மேனி யெழினலங் கண்டு வாழ்ந்தான் 37
மகவைநீ ராட்டி மெத்து மங்கல வணிகள் பூட்டி
அகமகிழ் தாய்ம கிழ்வில் மகவுந்தான் மகிழு மாபோல்
தகமகிழ் துவட்டா கொள்ளுந் தனிமகிழ் வினுட்சீ கண்டன்
மிகமகிழ்ந் தாலுங் காட்சி விந்தையோ அரிய தன்றே. 39

**வேறு**

அபிஷே காலங் கார முடித்திட்டன் பினி லின் பாருந்
துதிசேர் சென்னித் தொட்டா தூநீ ராடிய சீகண்டற்
கதிகோ ரப்பசி யண்டிடு மென்றெழு மவசர வசனாகி
விதிசேர் பூசை யுறுப்பமை நைவேத் தியமூட்டிடவுன்னி 40

கொண்டெழு குங்குலி யப்புகை தீபங் கொழுமலர் கற்பூரம்
அண்டிடு பாத்திய மர்க்கிய மாசம னீய மெனப்பேசும்
எண்டகு பூஜார்க் கியமவை யாவு மெடுத்து நிரைத்திட்டே
அண்டரு மண்டரு மமல னமர்ந்தருள் விமலா சனம் போற்றி. 41

முனைமுரி யாவெண் முத்தரி யான்பால் முட்டு முலைக்கட்கை
வினைநல மெய்திட வேவித் தானெய் வெல்லப் பாகளவி
நினைவக லாப்பரி வெய்திட வாக்கிய நின்மல நைவேத்யந்
தனையது மருவுஞ் சருவொடு திருமுன் சாரத் தாபித்தே. 42

தங்கத் திருமுக் காலிய திற்பொற் றட்டொன் றிட்டார
அங்கஸ் திரமொடுநீர் தூய்ப் பொற்காம் பகப்பை முகப்புநிறை
பொங்கல் மங்காப் புகைகெழு வாசனை போந்துசுலாவிச்சேர்ந்
தெங்கள் பெருமாற் கிதமளிவகைதேர்ந் திருந்து படைத்தனனே, 43

மதுமது ரித்தியல் சிவன்டி யாருள மதுபோற் பதமேவுங்
கதலியும் மாவும் வருக்கையும் நேரே கடவுள் காத்தியமா
உதவிடு மாற்றி னுரித்துக் கண்டித் துட்சவ் வறநீக்கி
மதுவினி லிட்டுண் மகிழ்வெழ மணமெழ மாண்புற முன்வைத்தே.44

பற்றிக லற்ற பரற்கமு தாம்வகை பண்ணியமவைபலவும்
வெற்றிலை பூக பலம்முக வாசம் வெறியார் குங்குமப்பூ
பொற்புற வொருபா லினிதுற வைத்துப் பூப்பொலி மணமேவும்
அர்க்கிய மாசம னீயங் கள்தந் தார்வமி குந்தனனே. 45

**வேறு**

பொங்குகுங் குலிய வாசனை கிளரப்
புனுகுநெய் வாசனை கிளரத்
துங்கமார் களப வாசனை கிளரக்
கற்பூர வாசனை கிளரப்
பங்கமில் கனிகள் பண்ணியம் முகவா
சம்பயில் வாசனை துன்றி
எங்குமாய்க் கிளர எழுந்தது துவஷ்டா
இதயவா சனை நலங் கிளர்ந்தே . 46

கிளர்ந்தெழு முளத்தாற் கேழ்கிளர் தூப
தீபவா ராதனை தொடங்கிக்
களங்கொள்சீ கண்டற் கற்புறு கற்பூ
ராதனை முடித்தெதிர் நோக்கி
உளங்கனிந் துருகி ஒப்பில்நை வேத்யம்
உன்முக ஹம்சமுத் திரையால்
இளங்குழ விக்கூட் டுகந்திடு நற்றாய்
என முக மலர்ந்தெதிர் நீட்டி. 47

பவ்விய முறையா லடியனேன் முயன்று
பக்குவ மறிந்துநன் கமைத்த
திவ்வியா மிர்த மேற்றருள் தேவ
பாவவெம் பசுத்துவந் தவிர்ந்து
செவ்விய னாக நேர்ந்தன னிதுவென்
சிறுசமர்ப் பணமத னுக்கென்
றல்விய மில்லா னண்ணல்சீ கண்டற்
கன்ன சூக் தம்படித் தருத்தும். 48

ஒருதரம் போலப் பலதர மூட்டி
யுளமலி யகம்பாவந் தனைவிட்
டொருவிடக் களிறுண் விளவெனத் தனைக்கண்
டுவந்தனங் கோடியென் றிறையோன்
திருவருட் குறிப்புத் தெரிப்பது போலோர்
திருப்தியேற் படும்வரை யூட்டி
மருமலி மலர்வா யலசஅஸ் திரத்தால்
வாசநல் லுதகம்வே றளித்து. 49

முன்னவன் மகிழ நன்முக வாசம்
முறைமையி னளித்துவெள் ளடைக்காய்
பன்னரும் பளிதம் கராமிபுட னேலம்
பயின்றிடப் பரிவொடு சமர்ப்பித்
தன்னவூண் சிரம மஞ்சிவெண் தால
விருந்தசே வையுமளித் தன்பால்
பின்னரும் பாத்ய மறக்யமா சமனீ -
யங்கள் தந் தமைதிகொள் தொட்டா 50

பாபமா ரவித்தை யிருளிரிநீ தகன்று
பரையொளி விளங்குபா வனையால்
ஏவரு மெங்கள் பராபரற் கெடுக்கும்
இயல்பினிற் பழுநிய பழமைத்
தூபதீ பாரா தனைபுரிந் தங்கைச்
சொலுமஷ்ட புஷ்பங்கள் தாங்கி
ஆவலோ டட்ட மூர்த்தமந் திரத்தால்
அருச்சித்தா ராமைமீ தூர. 51

சங்திதா மந்த்ர மோதியர்ச் சித்துத்
தகுமஷ்டோத் தரசத மதுவும்
இங்கித மூர இருந்துறச் செபித்தே
ஈடில்புஷ் பாஞ்சலி கொடுத்திட்
டங்கெழு பரிவாற் பாத்திய மர்க்ய
மாசம னீயமு நல்கிப்
பொங்கொளிக் கற்பூ ராதனை நிகழ்த்திப்
போற்றிசைத் தோத்திரம் புரிவான். 52

ஆமுறை விஸ்வ கன்மருற் பவத்தில்
அண்ணல் முன் விதித்துள முறையே
ஏமுறு மகோர முகத்துதித் தாருக்
கின்னதென் றமைந்திடு தொன்மைச்
சாமவே தத்தாற் சாமகண்டற்குத்
தகவுறு தோத்திர மாற்றி
நாமரு மணியாம் நமச்சிவா யத்தில்
நவிலுமோர் நூறுருச் செபிப்பான். 53

முன்னுறு சீகண் டேசனை யிதய
மோன நற் குகையினு ளொடுக்கித்
தன்னுறு மாஞ்ஞை தன்னையே நோக்கச்
சார்விழிப் பார்வையை யொருக்கி
மன்னுற நிறுத்தி மனோலயம் வரத்தி
மருவுறு பரையெனு மொளியை
உன்னி யுள்ளுருகி உபாம்சுவாம் பான்மை
யுறச்செபித் துணர்வுட னெழுந்தான். 54

உச்சிமேற் குவித்த கரங்களோ டெழுந்தே
உராவுநெய்க் குடந்தலைமீது
வைச்சவர் போல மனஞ்சிரத் தொன்ற
வலம்வந்து விழ்ந்துதாழ்ந் தெழுந்து
நச்சுமோர் நன்றிக் கடன்முறை நெறியா
நவில்க்ஷமார்ப் பணமுஞ்செய் தன்பால்
ஒச்சந்தீ ராமைக் குளம்வெது வெதும்பி
யுத்துவா சனமுந்தந் தமைத்தான். 55

மருவுமிந் நெறியே வைகலு மீசன்
மகிழ்சிவ பூசனை யாற்றித்
தருமலி சோலை யெங்கணு முலவுந்
தவசிகள் தத்துவ நெறிசார்
இருஷிகள் யோக சித்தர்கள் தம்மோ
டிருந்துளங் கலந்தள வளவித்
திருவளர் துவஷ்டா திகழ்ந்தினி திருந்தான்
சீகண்டர் பணிதலைக் கொண்டே. 56

சீர்மரு சிகையுஞ் சிவபூசைக் களையார்
திருமுக மண்டலத் தொளியும்
கார்மரு முருத்ர கண்டிவெண் ணீற்றுப்
புண்டர மும்புரி நூலும்
பேர்மரு மேன்மைப் பிரமதே ஜசுமேர்
பிறங்கிட நிறங்கினர் துவஷ்டா
நீர்மரு மாந்தைப் பாலாவிச் சோலை
நேரிராப் பகல் செய் நிலவும். 57

இத்திறம் நிலவும் நாள்களி லொரு நாள்
இயல்சிவ பூசனை முடித்திட்
டத்தனை வலம்வந் தடிபணிந் தெழுங்கால்
ஆகாய வெளியொளி பரவச்
சுத்தசை தன்யச் சிவச்செழுஞ் சோதி
தூவெள்ளை யிடபமீ தூர்ந்து
மைத் திகழ் கூந்தற் கௌரியோ டுடனாய்
மருவியங் அவன்கணிற் காண. 58

நின்ற காட்சிகண் டகங்குழைந் தொருவா
நேயமீக் கூர்ந்திட நின்று
துன்று மெய்பொடித் துறுவிதிர்ப் பொடுகண்
துளித்தநீர்த் திவலைகள் சிந்த
ஒன்றியைம் புலனு மொடுங்குற வசமற்
றுடனிலந் தழுவவீழ்ந் தயர்வான்
சென்றொடுங் குணர்வு விழிப்புற விறையோன்
திருமணி வாய்மலர்ந் தருளும். 59

கேளிது துவஷ்டா எழுந்திரு நீயாங்
கிளர்வுறு மிருக்கையீ தணைந்து
நாளிது வரையும் பயில்சிவ பூசை
நலமுழு துவந்தனம் நல்லோய்
ஆழிசூ ழுலகில் அறநெறி தழைக்க
ஆருயிர் வாழ்வொளி மலர
வாழிய சைவம் வளமுற வேண்டும்
வரமெவை விளம்புதி யென்றான். 60

**வேறு**

ஈது கேட்டலு மேன்றெழு தொட்டா
இருகை யுச்சிமே லேறிட நின்றே
மாது பாகநின் மலரடி போற்றும்
வாழ்வு தந்தனை மற்றது மகிழ்ந்தேன்
ஏதும் மற்றவை யெனக்கியை வனதா
மிருக்கி னும்மது திருவுள மறியும்
சேது மத்திய நிவாசனே போற்றி
திருவருட்கடல் சீகண்ட போற்றி. 61

போது சேரயன் மாலவ னறியாப்
புராண போற்றி நின் பொற்கழல் போற்றி
தீது நன்றெதுந் தேர்வகை யறியேன்
திருவ ருள்ளறி விப்பதற் கப்பால்
யாது மொன்றறி யேனருள் நயப்ப
தெதுவ தன்றிமற் றயல் நயப் பில்லேன்
சேது மத்திய நிவாசனே போற்றி
சிறியனே ற்கருள் சீகண்ட போற்றி. 62

போற்றி நின்றிடு புனிதனாந் துவட்டா
போதம் பில்குளப் பொறுதிக்கு நயந்தே
ஏற்று வாகனன் ஏதுவட் டாகேள்
இங்கி ருந்துநீ பூசித்த தொடர்பால்
மாற்றில் மாதுவட் டாபுர மெனவே
மருவு மித்தலம் நிலவுக பிள்ளைப்
பேற்று வாய்ப்புமொன் றுனக்குள தொருநீ
பிறங்கு மித்தலக் குடிபதி யாகி. 63

ஈறில் வாழ்வள மோங்குமில் லறத்தில்
        இணையில் சீர்த்திரு மகனையும் பெற்றே
வீறு நின்குலம் விளங்கமற் றவன்பேர்
        விஸ்வ கன்மனென் றழைத்தியிப் பார்மீக்
கூறு சீர் நல மியாவையும் மன்னக்
        குலவு மித்தலம் பெருநக ராக்கி
மாறி லுன்னுடன் தோன்றல்களாகு
        மனும யன்முத லோரொடு மருவி 64

வைய முய்தொழில் வளமெலாம் பெருக்கி
        மருவு நுண்கலைச் சிற்பவித் தகச்சீர்
மையத் தான மென் றுலகெலாம் வியப்ப
        வாணி பத்துறை விருத்திகள் மலியச்
செய்ய கேதுவீச் சரத்தெழுந் தோங்கிச்
        செகமெ லாஞ்சிவ நெறிபரந் துயிர்கள்
உய்யு மாறர சோச்சுக நின் சீ
        ருலக முள்ளள வும்மலர்ந் தொளிர்க 65

இன்ன நல்வரப் பேறுக ளருளி
        எம்பி ரானிம வான்திரு மடந்தை
வன்னப் பூங்குழற் கௌரியுந் தானும்
        மருவு சீகண்ட விலிங்கத்திற் கரந்தான்
அன்ன மேன்மைகட் கருகனாந் துவட்டா
        அழுது வீழ்ந்தெழுந் தவன்பணி நிற்பான்
சொன்ன வாறவை யாவுமேற் கொள்ளுத்
        தூய சங்கற்ப நிலை தலை நின்றான். 66

வேண்டி னுந்தரும் வேண்டிடா விடினும்
        வேண்டும் பாங்கின தான்விழைந் தருளும்
ஆண்ட வன்னருட் பெருக்கினுக் கருக
        மாகுஞ் சீர்த்துவட் டாசிவ பூசை
ஈண்டு மாரரு ளாலினி துரைத்தோம்
        இனியிங் கன்னவன் இகம்புகழ்ந் தேத்த
ஆண்ட ஆட்சியு மதிற்படு சிறப்பும்
        அறிஞர் தங்கருத் தமைதியி னறைவாம். 67

**துவஷ்டா பூசித்த படலம் முற்றும்**

**ஆகத்திருவிருத்தம் 584**

## துவஷ்டா அரசுசெய் படலம்

மின்னு மேனி விகிர்த னுவந்து முன்
சொன்ன வாறு துவஷ்டா முதற்கணே
தன்ன ருந்துணை வர்கள் மனுமயன்
மன்னு சிற்பிவிஸ் வஞ்ஞன் தமக்கெ லாம் 1

அண்ண லாணை அறிவித் தழைத்தவர்
எண்ணத் தோடுசாய் ஏற்கும் வகைதெரீஇ
தண்ணு நூன்முறை நாடி வியத்தகு
வண்ண மோர்நகர் மாண்பி னியற்றுவான். 2

அத்தன் கேதீச் சரத்தினை மையமா
வைத்து நாற்றிசை நாலுபத் தோசனை
மெத்து நீள மகல முறு நகர்
சித்தஞ் செய்து திறம்பட வெண்ணியே 3

எந்தை யாரரு ளாலுற வந்துசேர்
நந்த லில்லா நவநிதி யங்குவைஇ
முந்த எந்தைக்கங் காலய மொன்றெழச்
சிந்தை செய்தது சீர்பெற ஆக்கினான், 4

மான மிக்க நவமணிச் சோதிபோய்
வான நாடும் வரவிங் கழைத்திடற்
கான ஆல்ய மொன் றமைத் தங்கதற்
கேனை வேண்டுவ யாவும் வகுத்தபின் 5

அரசர் வீதியும் அந்தணர் வீதியும்
உரைசெய் வைசியர் வீதியு முற்பல
விரைசெய் தாரணி வேளாளர் வீதியும்
வரைசெய் தார வகுத்தமைத் திட்டுமேல். 6

அடைவு கூரிவ் வகநகர் சூழ்ந்திடும்
இடைந கர்வகுத் தேலுறு மன்ன தன்
புடைப ரந்த புறநக ரும்வகுத்
துடைய நாத னுணர்த்து முறை தெரீஇ. 7

மான மேவுயர் வாச மலர்த்தடம்
தேனு லாவு செழுங்கனிச் சோலைகள்
ஆனி னம்பயில் கோசார பூமிகள்
ஆன யாவைக்கு மங்கங் கிடந்தெரீஇ. 8

சுற்று மாமதிற் கோட்டைநன் னீரகழ்
உற்றுத் தேங்கு முவர்நீ ரகழியாம்
மற்றவ் வோரிரண் டிற்கும் வகைமையால்
துற்று நூலிட் டளந்திடங் கோலிப்பின் 9

பாலா விப்புனல் பாதிப்பில் லாவகை
நாலா திக்கினும் நன்கு பயன்படக்
காலா றுற்றுக் கடுகு சுருங்கைகள்
நூலா துன்னி நுணுக்கங் கொளச் செயா. 10

புறந கர்தனிற் போற்று தொழிற்றுறை
நிறுவ னங்கள் நிரம்ப விதித்துத்தன்
உறவி னர்க்கா முறையுள் செய் தாங்கொரு
சிறையி லேதனக் கில்லமு மாக்கினான். 11

**வேறு**

மட்டார் பொழில்சூழ் மாதோட்ட
மருவு முதன்மைக் குடிபதியாய்
எட்டாக் காலந் தொட்டிருந்தே
இம்மா நிலத்துப் புகழ்பரந்த
முட்டாச் சிறப்பிற் றுவஷ்டாவின்
மூல நிலைய மிதுவெனற்குத்
தொட்டா வெளியென் பெயராலத்
தாட்சி காட்டுந் தொல்லுலகம். 12

இன்ன வாறு மாதோட்டத்
திடங்கொள் விஸ்வ கன்மாக்கள்
மன்னு விஸ்வப் பிரம மன்று
வகுத்த முறையே யைந்தாகச்
சொன்ன மூலப் பொருள்களினும்
தொல்சீ ருலகத் தொழிற்றுறையிற்
பின்னும் முன்னுங் காணாத
பெருகுற்பத்தித் திறம்வி ளைத்தார் 13

வேத மோதி வைதிகவா
சார முழுதும் அரவணைத்து
நாதன் பாத பூசைபுரி
நலத்தால் விளைந்த உளத்தெளிவால்

பூத பௌதி கங்களினுட்
புதுமை நுணுக்க முளயாவும்
ஓத வேவேண் டாதுணரும்
உணர்வுக் கூர்மை சிறந்தமையால், 14

அரிய பெரிய தொழில்நுட்ப
விரிவுவிளக்க முறை தேர்ந்து
கரிய விரும்பு களிம்பாருஞ்
செம்பு தாரு கல்லொடுபொன்
உரிய வகையா லாய்ந்தாய்ந்திட்
டுலக முவக்கும் பலபொருளும்
விரியப் படைத்துக் குவித்திட்டார்
விஸ்வ ஆற்றல் தெரித்திட்டார் 15

சிறிய தொருகுண் டூசிமுதற்
பெரிய காந்தக் கோட்டைவரை
குறிய தள்ளு வண்டி முதல்
பெரிய தொருபாய்க் கப்பல்வரை
அறிய வேண்டும் விதியறிந்தங்
காக்குந் திறமை யொன்றோவான்
செறியும் மின்காந் தம்பிரித்துத்
தெரித்தே வல்கொள் திறனுமுற்றார். 16

மற்று வேறெங் கினுமில்லை
மாதோட் டத்தில் மட்டுமெனக்
சுற்றோ ராய்ந்து காண்புதுமைக்
காந்தக் கோட்டை யியல்தேரின்
துற்ற சூர்ய கிரணத்திற்
றொகுமின் காந்தம் பிரித்தெடுக்க
உற்ற தொருசா தனமன்னோர்
உபயோ கித்த புதிர்புரியும் 17

புதுமை அருமை வனப்பொளிரப்
பொற்பார் திட்ப நுட்பச்சீர்
பொதுளப் படைக்கு முலோக வகைப்
பொருள்களுடனே புகழாரும்
மெதுமைக் குயர் நுண் பட்டாடை
விசித்ர விநோத நகைவகைகள்
எதுவும் படைக்குந் தனித்துவமிங்
கிவர்கள் மகிமைக் கேற்றமதாம். 18

பண்டை யுரோம நாகரிக
ரமணீ வர்க்கம் மாதோட்டங்
கண்ட சரிகைச் சித்திரப்பூங்
கலிங்கங் கட்குப் போட்டியிடக்
கொண்ட ஆர்வ மிகுதியந்நாட்
குறித்த பிளினி குறிப்புணரின்
மண்டு மாந்தைக் கைவினைஞர்
மாண்பா ரருமை வீறு பெறும். 19

விண்ட கீர்த்தி மாதோட்ட
விஸ்வ கன்மர் தொழினுணுக்கங்
கண்ட அற்றை நாட்புலவர்
கண்ணுள் வினைஞர் எனவவர்பாற்
கொண்ட மதிப்பு மிகுத்துரைத்த
தொன்றே யமையும் அவ்வினைஞர்
எண்டங் கருமை புலனுணர்விற்
கிருந்தபரிசு தெரிதரற்கே. 20

**வேறு**

இத்திற விஸ்வ கன்ம ரியற்றுசீர்ப் பண்ட மெல்லா
மெத்திசை யோரும் வேண்டு மியல்பின வாகவேயவ்
வத்திசை யோர்க ளெல்லாம் அலைகடற் கலங்க ளோட்டி
மெத்துசீர் மாதோட்டத்து வியன்கரை மருவ நோக்கி. 21

வார்கட லாழ மாக்கி வரும் பெருங் கலங்கள் யாவும்
நேர்பட வந்து கிட்ட நின்று நங் கூரம் பாய்ச்சற்
கேர்வழி வகைகள் செய்தே யிருந்துறை முகமொன் றாக்கிச்
சீர்மலி மாதோட் டப்பேர் சிறந்திடச் செய்த மைத்து 22

மருவுமவ் வந்நாட்டோடு மாற்றுவாணிப நிகழ்த்தற்
குருமிக்க வேழங்கூட உட்கொளும் பெருங்க லங்கள்
தருவினால் மட்டு மாக்கித் தரணியோர் வியக்க வைக்கும்
ஒரு தொழில் மேலுங் கண்டார் உணர்வுறு மாந்தை வாணர் 23

கார்மத வேழந் தாமுங் கலங்களி லேற்றும் பாங்கும்
ஓரிருப் பாணி தானு மின்றியே கலஞ்செய் மாண்பும்
கார்கடல் மாதோட் டத்தார்க் கன்றியே மற்றெ வர்க்கும்
ஓர்சிறி தேனு மந்நா ளிருந்தில் தென்பர் நூலோர் 24

இவ்விதம் மாற்று வாணி பத்தொடர் பதிகரிக்கச்
செவ்விய நிர்வா கச்சீர்ப் பொறுப்புமிக் குறுதலாலே
மெய்வகை தமக்கென் றான்ற வேத்திய லமைப்பு நாடித்
திவ்விய துவஷ்டா வுக்கே தேர்ந்து முன்னுரிமை நல்க. 25

ஏற்றிசை துவஷ்டா எந்தை சீகண்ட ரருளை மெச்சிப்
போற்றிசைத் தவர்க்கோர் தங்க மணிமுடி முதலிற் சூட்டி
மாற்றிலா அவரா ணைக்கீழ் மருவுதன் னாணைசெல்ல
வீற்றுவீற் றநுஜ்ஞை வேண்டி வேத்தியல் தழுவு கின்றான் 26

மனுமுதல் நால்வ ரான மற்றவன் துணை வர் தம்முள்
நனிமிக நாடி நல்ல முகூர்த்தம்வைத் தாவ வெல்லாம்
அநு தினம் முயன்று தேடி யங்கவற் கரச மேன்மைத்
தனிமுடி சூட்டர் சார்பிற் சமைத்திட்டார் தகுவ வெல்லாம்

கொங்கலர் கூந்தல் நல்லார் குமார்கள் கிளர்ச்சி கூர்ந்து
மங்கல மிகக்கோ டித்து மாநகர் விழவு கொள்ளப்
பொங்குதூ ரியங்களோங்கப் புரிசங்க நாதம் விம்ம
அங்கணர் கேதீச் சர்த மாலய முன்றி னின்றும் 28

அருநவ மணிகு யிற்தி யான்றசாம் பூந தப்பொன்
உருநலங் கவினும் மௌலி யுவாப்பிட ரூர்ந்து லாவ
மருமல ரிறைத்து வீதி தொறுந்தொறும் மாந்தர் வாழ்த்தத்
தருவல் ரிறைத்து விண்ணோர் தாமும்வாழ்த்தெடுத்தா ரன்றே

நகர்வல மாக வந்து நால்வித வனப்பு மோங்கி
மிகவொளி ரரச வீதி மேவுசீ ரரண்ம னைக்கண்
தகவுறு திருவோ லக்க மண்டபத் தனிப்பொற் பீடத்
தகமகிழ் வுறவிருத்தி ஆரத்தி கொடுத்துப் போற்றி 30

மங்கல சோபை மல்க மாதர் மகிழ்ந்து வாழ்ந்த
அங்கறு கரிசி தூவி யந்தண ராசி கூறத்
துங்கமா ருதய சைலந் தோன்றுசெங் கதிரோ னென்னச்
சிங்கவேற் றியைபி னார்பேர் திகழரி யாசனத்தே 31

வியலிடப் பொறுப்புத் தாங்க விதிமுறை சங்கம் பித்தே
மயலறு வதன சோதி விரிந்தெவர் விழிக்கு மின்பஞ்
செய்வமர்ந் துறுது வஷ்டா சிரமதில் மருவு மௌலி
மயனெடுத் துதவ வாங்கி மாமனு சூட்டினானே 32

முடிபுனைந் திடுது வஷ்டா முகத்தெதிர் படிகம் வெற்றிக்
கொடிகுடை யால வட்டஞ் சாமரை யுபசா ரங்கள்
படிமுறை கொளவெ டுத்துக் கடிமலர் மாலை சாத்தி
வடிகெழு கொற்ற வாளும் மருவுசெங் கோலும் நல்கி, 33

மண்ணுல கிவனாட் சிக்கண் வருத்துவெப் பகல நீங்கித்
தண்ணளி மிகுத்தெஞ் ஞான்றுந் தழங்கிடு மென்கை காட்டும்
வெண்மதிக் குடைவி ரித்து மேனிழற் றிட லுங் கண்டு
மண்மக ளுடல்பூ ரிக்க விண்மகள் வியப்புற் றார்த்தாள், 34

இவ்வகை யுபசா ரங்க ளெலாமுடித் தீடில் மேன்மைச்
செவ்விய மனுவிருப்பத் திகழ்மயன் முதலோர் தங்கள்
திவ்விய பண்பும் நண்புந் தெரிதரு பரிச னந்தம்
பவ்விய மாக நல்கிப் பாராட்டிப் பரிவு கூர்ந்தார். 35

மனக்கினியான் மேன்மைக்குமகிழ்மங்கை போல்மா தோட்டம்
தனக்கினி யான்து வஷ்டா மேன்மைக்கு மகிழக்கண்டு
சினக்களிற் றுரியான் கேதீச் சரத்தமர் செனக்க ளிற்றான்
அனக்களிற் றானு மாசீர் வதித்தக மகிழ்ந்தா ரென்ப 36

கட்டணல் கடுக்கும் யானை கந்துக நிரைதேர் காலாள்
மட்டண விடுபூந் தொங்கல் வான்மறை பீலிக் குஞ்சம்
உட்டண வாதமெய்ம்மை உரவோர் சூழ் வரத்து வஷ்டா
பட்டணப் பிரவே சஞ்செய் பவனியும் றெழுந்த தப்பால் 37

நெடுங்குரற் காள மூத நிமிர் நடை யானை யூர்ந்து
கடுங்குரன் முரச றைந்து கட்டிய காரன் செல்லப்
படுங்குரற் பம்பை கொட்டப் பதலைநற் றிமிலை யார்ப்பக்
கொடுங்குரற் றடாரி பேரி குமுறிசை தொடர்ந்து மேவ 38

செய்மதி யுருவக் கொற்றக் குடைவிரிந் துயர மேவும்
அம்மதிக் கிராணக் கற்றை யசைவபோற் கவரி வீசி
நெய்ம்மலி வேற்க ணல்லார் நிருத்தநர்த் தனங்கள் பண்ண
கொய்ம்மலி உளைகொளும் பொய்க் குதிரையாட் டங்கள் துன்ற 39

ஓங்குயர் வேழத் தும்ப ரம்பாரி யமர்து வஷ்டா
பாங்குயர் மெய்க்காப் பாளர் பரிசனர் துவன்றிச் சூழத்
தாங்குபொற் பல்லக் கூர்ந்து மனுமயன் முதலோர் சார
வீங்குபல் லியத்து நாதம் விண்ணெழ வீதி வந்தான். 40

கூடுயர் வளங்கள் வாரிக் குரை கடல் கொழிக்குஞ் செல்வப்
பீடுயர் மாதோட் டத்துப் பின்மைமுன் மைகளின் மன்னும்
நீடுவாழ் வனைத்து மொன்றி நெடுங்கைம்மாப் பிட ர்மீ தூர்ந்த
சேடுயர் காட்சி யின்பந் தெருவெலாஞ் சீர்த்த தம்மா. 41

சந்தி நாற்சதுக்க மெங்குந் தகவுயர் மாலைப் பந்தர்
பந்தர்கள் தோறும் தோறும் பவனி நாயகனுக் கன்பார்
சுந்தரத் தொங்கல் சூட்டும் எந்திரப் பாவைக் காட்சி
வந்துளோ ரிளைப்பு நீக்க யந்திர விசிறிக் காற்று. 42

மாடமா மனைகள் எங்கும் வரவேற்பு மங்கலங்கள்
ஆடரங் கவைக ளெங்கும் ஆனந்த நடனக் காட்சி
கூடகோ புரங்க ளெங்குங் கொடியலங் கார மாட்சி
ஈடகல் நகர மெங்கும் இவ்வகை களிகொண் டாட 43

தலைத்தலை காத்து நின்று தமனியம் முத்து வைரம்
விலைக்குயர் திரவி யங்கள் வெகுமதி யாய்க் குவித்தே
அலைத்தகைம் மாவின் மேவு மரசர்க்குத் தத்தம் பாலின்
நிலைத்த நன் மதிப்புத் தோற்றி நிறைவுற்றார் தனிக மாக்கள். 44

இத்திறப் பவனிமுற்றி யதாஸ்தான மெய்தி வேந்தன்
சித்திர மணிகுயின்ற சிங்கவா தனத்த மர்ந்தே
அத்தகு பவனி தன்னி லணைந்துளோ ரன்புக் கீடாம்
மெய்த்தகு மகிழ்ச்சி தோற்றி வீற்றிருந் தனன்சீர் மேவ. 45

**வேறு**

ஆட்சி நாயக னாகமா தோட்டத்தி னமரும்
மாட்சி மிக்குயர் மா துவட் டாதன தாட்சிச்
சூட்சி நற்றுணை யாகமுக் காலமு முணர் நற்
காட்சி யாளரைக் கருத் துறவாய்ந்து முன் தொகுத்தே 46

மற்ற வர்தமுள் மந்திரி மார்முதலாக
உற்ற ஐம்பெருங் குழுவுமெண்ணாயமு மமைத்து
முற்ற அங்கவ ரோடுசா அய் முடிவுதேர்ந் தேற்கப்
பெற்ற பின்னரே எதுவுங்கை யாள்நெறி பேணி. 47

ஏற்று வாகன னியற்றியீந் தளித்திடு ஞாலம்
தோற்று மன்னுயி ரவைக்கெலாம் வாழ் துணை யாக
மாற்றி லாவகை மாநிலங் காத்தளிப் பனெனா
மேற்கொள் பூட்கையால் விளக்கினன் தொன்மநு நீதி 48

மாற்று வாணிபத் தொடர்பினால் மாற்றரும் பெருநண்
பேற்று வந்திடு மேற்றிசை யுரோம் கிறீஸ் யவனம்
தேற்று கீழ்த்திசைச் சீனமா தியவற்றொ டென்றும்
போற்று நல்லிணக் கத்தொடர் பிடையறா தோம்பி 49

அவ்வந் நாட்டினர் இங்குறீஇத் தந்தொழில் நிலைகள்
செவ்வி தின்னமைத் திருந்துசீர்த் திடச்செயு மாற்றால்
எவ்வெந் நாட்டிலுந் தன்புகழ் தேக்கிமா தோட்டம்
பவ்வஞ் சூழுல கரங்கினி லுயர்வுற வேற்றி 50

**வேறு**

அநுராச புரம்பு லஸ்தி யாங்கவற்றுக் கீடாக
உனுமாண்பு மிகுந கர்க ளுபராச தானிகளா
மனுவாதி யோர்கள் தம ததிகாரத் தினில் நிறுவி
ஹநுமானென் கொடிவி எக்கங் காசினியெல் லாந்திகழ 51

மாதோட்டத் தரசிருக்கும் மாதுவட்டா வார்கடலின்
மீதோட்டு கலங்கள்கொணர் மிகுவளமும் உபராசர்
தீதோட்டு தெறியிற்கொணர் செழுவளமு முறக்குவை
மாதோட்ட முலகினுக்கு மாசந்தை யாக்கினனால் 52

பர சைன்ய மணுகாது பாதுகாத் திடுதிறனால்
அரசுமகி ழுங்கங்க ளாறினுளும் வீறு கொளும்
அரணமைப்பிற் றுவட்டாதன் அற்புதசா தனையதனால்
விரசு புகழ் விஸ்வகன்மர் வினைத்திட்பம் வெளிப் படுத்தான் 53

பகைத் துவரு படையனைத்தும் பட்டுற்றுக் கெட்டொழிய
உகைத்தெறியும் பல்பொறிக்குள் ஊசிக்காந் தப்பொறியா
மிகைத்தபுகழ்ப் பொறியமைத்து மேவார்தம் போர்க்கலங்கள்
துகைத்தழித்த தொல்கீர்த்தி துவட்டாவின் மாண்புரைக்கும் 54

பொருதுமிகு படைவலியும் போது விற லரண்வலியும்
கரு துறு நுண் மதிவலியும் காட்சியுளார் துணைவலியும்
மருதுதையு மாலைபுனை மாமன்னர் முடிவணங்கும்
ஒரு துவட்டா வலியாகி உருத்ததுசெங் கோலாட்சி. 55

அன்போங்க வன்பாழ அறமொளிர மறமிருள
முன்போங்கு நீதிநலம் முழுதுலகுஞ் சுவீகரிப்ப
என்போங்கு கலமகிழு மெந்தைகே தீச்சரன்பால்
இன்போங்கு மவனாணை யெழுந்தோங்கி நிமிர்ந்ததுவே, 56

மாவினமே யாயிடினும் மனுவினத்தின் மேலான
தேவினமா மகிதலத்துச் சிவசமய நெறிபோற்றும்
ஆவினத்துக் கஹன்யாவந் தஸ்தளித்த அதி முதிய
கோவிவனென் றுலகேத்தக் குலவி னன்மா துவட்டாவே. 57

மாபாத கங்களுக்குண் மாதோட்டப் பசுக்கொலையே
மீதான கொடும்பாவ மென விதித்த அவனாணை
மாதான தர்மவிதி வகுத்துரைதொல் லீழமன்னர்
தாமாத ரித்தெழுது மளவினுக்கு வலுத்துளதால் 58

முன்னுதமிழ் மூவேந்தர் முடியாட்சி முளை கொள்ள
இன்னுமொரு பலகால மெடுக்குமென உரைக்க நின்ற
அன்னதொரு காலத்தே ஆகியிவ்வா றரசாண்ட
மன்னனாந் துவஷ்டாசீர் வளர்கீர்த்தி வாழியவே. 59

இவ்வண்ண மாதோட்டத் தரசாண்டு மநுநீதிச்
செவ்வண்ண நிலையுறுத்த செம்மல் துவஷ் டாமரபு
மெய்வண்ண விஸ்வகன்ம னூடாக வேரோடி
உய்வண்ண முலகுபெற ஓரூழி நிலவிய தால். 60

தீது நலிந் தறமுயரச் செகமுழுதும் வாழ்வித்த
மாதுவட்டா அரசாட்சி மாட்சியிது மயன்மகளென்
றேதுபுகழ் மேவுறுமண் டோதரிநங் கேதீசன்
மீதுகொளு மெய்யன்பின் விநோதவிளை வினிக்காண்பாம்

**துவஷ்டா அரசுசெய் படலம் முற்றும்**
**ஆகத் திருவிருத்தம் 645**

## மண்டோதரி பேரருள் பெற்ற படலம்

பற்று வார்ப்பற்று பராபரன் மகிழுமா தோட்டத்
துற்று வாழ்தொட்டா உயர் புகழ் ஈழநன் னாட்டுத்
துற்று தொல்புக ழிராவணன் மூதாதை யாகப்
பெற்ற மேன்மையு முடைய னென் குநரிதி காசர். 1

வியனி லங்கைமண் வீரந்தோற் றிடுவது பொருளாச்
சயமி குந்திடு சனகன்மா மகட்சிறைப் படுத்த
புயப லங்கொளு மிராவணன் தனைக்கம்ப நாடன்
அயன் மகன்மகன் மகனென்ற தகிலமு மறியும். 2

சாய லாரெழிற் சப்தகன்னியர் தமு ளொருவ
ளாய பாவைமண் டோதரி யாந்திரு தானும்
தூய மாதவ மார் துவட் டாவுடன் பிறப்பாம்
மாய மில்திறன் மயன்மக னென்றிடும் மரபு. 3

வாகு சேர்திறன் மிகுதுவட் டாவொடு மருவிப்
போக பூமியாய் மாதோட்டம் வளம்பெற மலர்த்தி
ஆகு நற்றுணை யாயவன் அரசியற் குதவி
மாக நாட்டினும் மலிபுகழ் படைத்தனன் மயனே. 4

மாக மாள் பதி யிந்திரன் மாளிகை முதல
வாக வுள்ளபல் நிலைகளும் வகுத்தன னலதும்
ஏக சக்கர வர்த் தியா மீடில்சூ ரற்கு
வாகு சேர்தரு மகேந்திர புரியைமுன் வகுத்தே. 5

மேவு நல்லெழின் மாளிகை சூளிகை பலவும்
தேவ ரும்பிர மித்திடு சித்திர கூடம்
வாவு வாஹன யானமாம் வகைகளும் பலவாய்
ஏவு முன்விரைந் தியற்றியீந் திட்டவன் மயனே. 6

இலங்கு மீழமன் னிராவண னரசுவீற் றிருந்த
இலங்கை மாபுரி யியற்றியே அங்கதில் உலகை
வலங்கொள் சூரியன் வாள்பிரித் திரவினிற் றீப
மிலங்க ஏற்றுபல் பொறிகளு மமைத்தவ னிவனே. 7

மன்னு பாரத வமிசஞ்சேர் பாண்டவர் தமக்கே
இன்னி யல்கெழு மிந்திரப் பிரஸ்தமுன் னியற்றிப்
பன்னு மன்னதிற் பளிங்குமா மண்டப நிரைகள்
முன்ன மாக்கிய முதுபுகழ்க் கலைஞனு மிவனே. 8

இன்ன தொன்மய னிலங்குதொட் டாவெனக் கங்கைச்
சென்னி யற்கன்பாற் சிவார்ச்சனை புரிந்திடு நலத்தால்
உன்ன ருந்திறத் துயர்வுறு முலோகமா மகிபர்
முன்னி வந்துவேண் டிடுதகைக் கன்னியர்ப் பயந்தான். 9

தன்னி கர்வுறு தனதற்குச் சித்திர லேகா
என்னு நங்கையும் ஈடில்சீர் வரமகன் சூர
பன்மன் மேவுறப் பதுமகோ மளையுமீந் துவந்தான்
மன்னு மற்றொரு மகள்புகழ் வையகம் போற்றும். 10

ஏந்தல் ராவண னின்பியல் மனையென வாய்ந்த
சாந்து மல்குபூங் கூந்தல்மண் டோதரி தனக்கு
வாய்ந்த பத்திமை மாண்பினான் மகிதல மறிய
நேர்ந்த பேரருள் நிகழ்வின் சீர் நினைந்துள மகிழ்வாம். 11

பேசு மிம்மகள் பிதாமயன் சிவபக்திக் கனிவே
ஆசி லோருரு வமைந்தென வவதரித் துயர்ந்தாள்
தேசு கூர்மழப் பருவத்தே சிவன் நினை வகலா
மாசில் நல்லுளம் வாய்த்திடப் பெற்றசீர் மையினாள். 12

குழலை வென்றசொற் கோதையர் மடித்தலந் தவழ்கால்
மழலை யென்றவள் வாய்மலர்ந் ததுவெலாஞ் சிவன்பேர்
பழகு பேச்சினிற் பரிமளித் திட்டது சிவன்சீர்
தொழலெ னுந்தொழிற் கவட்குமுன் னிலை சிவ னுருவே.

மண்டு காதலான் மழவிளஞ் சிறாரொடு மகிழும்
வண்ட லாட்டினில் நிகழ்பவும் மண்ணியல் சிறுசோ
றுண்ட லாட்டினில் நிகழ்பவும் யாவுமே சிவன்பால்
விண்ட காதலின் விகாசமா வெளிப்பட மிளிர்ந்தாள். 13

மாது பாகர்சீர் மருவுமா தோட்டநன் னகரில்
ஈதொ ரற்புத மிருந்தவா றென வியந் தெவரும்
பேதை யாயுறு நிலையினிற் பெருந்திரு வுறுமிம்
மேதை யெங்ஙன்வந் துற்றதென் றறிகிலார் தியங்க. 14

உருத்த நல்லிளம் பருவத்தே உள்புகுந் தோங்கும்
ஒருத்த ரன்பவ ளுளமுறு விருத்தியிற் றானும்
விருத்தி கூர் தரல் விளம்பவும் வேண்டுமோ ஆரா
அருத்தி யாலவ ளன்பிய லிருந்தவா றோர்ந்து. 16

ஆவ தோர்ந்தறி யறிவனாம் மயன்குலப் பிறப்பால்
மேவு தன்னதோர் குருத்துவ நெறி தலை நின்று
ஓவ லில்லதோ ருயர்பெருஞ் சிவார்ச்சனை நெறியிற்
பாவை தேர்வுறப் பரிவமர் பயிற்சிதந் தளித்து, 17

வேத ஞானமும் வைதிகத் தூய்மையும் மிளிரச்
சீத நீர்முடிச் சிவனருள் நூலெலாம் வழுவின்
றோத வும்முணர்ந் துட்டெளிந் திடவுமுட் டெளிந்து
போத மேவவும் பொருந்துமாற் றான்மகிழ்ந் துதவி. 18

வளருந் தன்மகள் விருத்திக்குப் பன்மடங் காகக்
கிளருஞ் சீர்கெழு கேதீசன் பாலன்பு வளர
அளவி லார்வமோ டாக்கமு மூக்கமுந் தந்தான்
களவி லாவுளக் கன்னியுங் காண்வரு சிறப்பால். 19

நேச மார்தரு மீசனை நிகழ்வதோர் குறியிற்
றேசு றக்கொடு தாபித்துத் திவ்வியார்க் கியங்கள்
வாச நீர்முத லாக்கொடு வைகலும் நெறியாற்
பாச மீதுறப் பூசனை புரிந்திட லானாள். 20

உற்றி ருந்துநொந் தூண்டுறந் துடலற வற்றிப்
பற்று மைம்புலன் பசையற வறுத்தெலா மொறுத்தும்
ஒற்றி நின்றுழல் உபாசனா நெறிகளாய் வேதஞ்
சொற்ற சாண்டில்ய வித்தையா திகளினிற் சலித்தும்.

மெய்ம்மி டுக்கினை விதவிதப் பயற்சியான் மடக்கிற்
கைவ ருஞ்சிவத் திறமெனக் காண்ஹட யோகம்
நைவ ருந்திறம் நாநுதி யுட்டுளை யடைக்கச்
செய்வ தாயஜா லந்திர யோகமேற் சென்றும். 22

கொண்ட இச்சையே பிரதிவிம் பித்திடத் துள்ளிக்
கண்ட னம்மிதோ கைப்படுத் திட்டன மென்றென்
றெண்ட கக்கிளர்ந் தெழுந்துகூத் தாடுநர் தமக்கும்
மண்டு வேட்கையின் மருளுறு வாமமே முதலா. 23

இவ்வித் தந்திரத் தெளிதினி லெய்துவ மென்பார்க்
கவ்வத் தந்திரத் தகந்துரீஇ யொளித்துநக் கிருக்கும்
நவ்விச் செங்கர நம்பனை நைகர மில்லாச்
செவ்விப் பொன்னுளச் சீர்மையிற் பவ்விய மாக. 24

ஆத ரித்தழைத் தாவாகித் தருண்முகப் படுத்திப்
பாத தீர்த்தமுஞ் சுவாகதார்க் கியமுமுன் நல்கித்
தீது தீர்திரு மஞ்சன முதலன செய்தே
ஓது காதலி னுறைப்பினின் றர்ச்சிக்க லானாள். 25

ஏதுக் கர்ச்சனை யெனவினாம் இகுளையர்க் கென்றும்
யாதுங் கூறுத லாற்றலள் இனைந்து நைந் துருகிப்
போது நேரரிக் கண்பனித் திருந்திடு மளவுக்
கோது காரண மிலாவன்பி னுத்திறம் பயில. 26

யாது மோரிலக் கின்றியே மிகுமன்பி னிலையை
மேத கக்கொடு விழையு நிர் ஹேதுக கருணைக்
கேது நாதனங் கொருபகல் தேவியுந் தானும்
மாது பூஷணி மற்றவள் முன்மெழுந் தருள, 27

கருத்தி டைக்கிடந் தருவமாய்க் காண்பரு மினிமை
அருத்தி வாழ்வித்த அரிய அன் பநுபவ மூலம்
உருத்திடக் கண்டங் குவாமதி யெதிருமோ தம்போல்
பெருத்த அன்பலை பிறங்கிமீ தலைந்திட மலைந்தாள். 28

கைகள் கூம்பின கண்ணிணை நுண்டுளி கலுழ்ந்த
மெய்வி யர்த்தது விதிர்விதிர்ப் பெழுந்ததுள் ளெல்லாம்
நையும் பாகென உருகிற்று நயந்தனன் வியந்தாள்
தையற் குற்றவத் தரிசன மதுகையா ரறிவார். 29

நைக ரம்மிலா நங்கைமற் றவளிது காறுஞ்
செய்த பூசனைக் கெதிர் பல னிதனினும் மற்றொன்
றெய்த லாவதும் உளகொலோ வெதிர்ந்தரு ளையன்
தையல் நீநம்பால் வேண்டுவ தியாதென்ற போது. 30

சீத வாரிமேற் சொரிந்திடத் திடுமெனக் கிளர்ந்து
மீதெ முந்துயர் சாலிபோல் வியந்துளங் கிளர்வாள்
நாத நின்னையான் நயந்துற நினைபொழு தெல்லாம்
போத வந்தென்கட் புலப்பட வேண்டுநீ யென்றாள். 31

அன்பர் வேண்டுதற் கின்புறு பராபரன் மகிழ்ந்தே
இன்ப மூர்வர எழின்முக நகை யொளி மலர்த்தித்
தன்பெ ருந்தக வொளிர்வரத் ததாஸ்துவென் றருளி
மன்ம யன்மகள் மாண்பினை நயந்துருக் கரந்தான் 32

**வேறு**

பெற்றசீர் வரத்தின் வண்ணம் பிறையொளிர் சடையி னானை
உற்வற நினைபோ தெல்லா முவந்தவன் தோன்றுஞ் செய்தி
மற்றவ ரறியா வண்ணம் மறைத்துநன் மயன்பொற் பாவை
சுற்றுதா தியர்கள் போற்றச் சொல்லரு சிறப்பின் வாழ்வாள் 33

உருவொடு திருவும் பொங்க உறுப்பமை நலங்கள் வாய்ந்து
பருவநன் மங்கை யாகப் பயிலுமண் டோத ரிப்பேர்த்
திருவின்சீர் விகாச மேவச் செயுமணத் திறங்கு றித்தே
அருமையிற் பெற்ற தாதை அறிஞரோடுசாவ லானான். 34

ஒத்துறு குலமும் மாண்பும் உருவொடு திருவுஞ் சீரும்
சித்தமார் திடமும் வாய்மை சிவபக்தி சிவபூசைக்கண்
மெத்துறு கிரம் மாதி யாவுமா பொருமைப் பாட்டில்
இத்திரு வினுக்கி யைந்தோன் யாவனென் றாயுங் காலை. 35

வீரமுந் திருவுங் கங்கை வேணிய னருளாற் பெற்றே
நோல ரெவர்த முன்னும் நிலைதிரி யாத ஆண்மை
போரெதிர் விழுப்புண் ணாதி புருஷல க்ஷணங்கள் மேவும்
இராவணற் குப்பெண் பேசி யெய்தினார் சிலர்ம யன்பால் 36

வந்தமூ தறிவி னோரை வரன்முறை வரவேற் றன்னோர்
சிந்தையுண் மகிழப் போற்றித் திருமணத் திறங்கேட் டான்ற
முந்தை நன் மரபு பேணி முதற்றசப் பொருத்தம் பார்த்து
நந்தலில் கோத்ர சூத்ரம் நன்கமை திறமும் நோக்கி. 37

யாவுமொத் திருக்கக் கண்ட தன்றியு மிராவணற்கு
மேவரு மெதிர்காலத்து வியத்தகு விருத்தி யாவும்
ஓவிலுள் ளுணர்வாற் கண்டே யொருப்படு விருப்ப னாகிப்
பாவுசீர் மயன்த னுள்ளம் பராவரு திருப்தி கூர்ந்து. 38

பழமது நழுவிப் பாலின் விழுந்ததென் றுவந்தான் வந்த
கிழமுதி ரறவோர் தாமும் மங்கைதன் கிரஹ சாரம்
வழமையிற் பன்மடங்கா வரன்நிலை கிளர்ந்து மென்மேல்
ஏழவுயர்த் திடும்பாங் கிற்றா யிருத்தல்கண் டிறும்பூதுற்றார் 39

இவ்வகை யிருசாரார்க்கும் இதமளித் திறும்பூ தாக்குஞ்
செவ்விய ஒருமைப் பாட்டாற் றிருமண முகூர்த்தம் வைத்துப்
பவ்விய மாக நேர்ந்து பராபரன் கேதீ சற்குத்
திவ்விய பூசையாற்றித் திருப்திசெய் தனுஜ்ஞை பெற்றே. 40

இந்திர னாதி தேவர் மருத்துவர் வசுக்கள் சித்தர்
மந்திர மறையோர் துன்றி மங்கலம் பெருக வாழ்த்த
எந்தைசீர் மறவா ஏந்தல் இராவணன் மயன்ப யந்த
செந்திரு வனையா ளைச்சேர் திருமணம் நிகழ்வித் தார்கள் 41

ஆணர சிராவ ணன்ற னடல்வலி யாண்மை வீரம்
பேணுபெண் ணரசி யாகப் பிறங்குமண் டோத ரீதான்
தாணுவின் னருளாற் பெற்ற தனித்துவ வரத்தின் பான்மை
காணுங்கண் ணனைய காதற் கணவற்குத் தோன்றா துய்த்தாள்,42

பொற்புறு கற்பி னார்க்குட் புருஷன்நோக் கினிலாங் கற்பும்
அற்பொலி கண்டத் தண்ண லவன் திறத் தாருங் கற்பும்
இற்பொலி வாழ்வில் நின்றே ஏககா லத்திற் போற்றுங்
கற்புயர் வினில்ம யன்மான் காரைக்கா லம்மை போன்றான் 43

இல்லவள் மாண்பானாலங் கில்லதென் னெனும்வாய் மைக்கு
நல்லதோ ரெடுத்துக் காட்டாம் நங்கையிங் கிவள் தன் பர்த்தா
சொல்லருங் கீர்த்தி வாழ்வுத் துங்கரா ஜாதி பத்யம்
எல்லவும் பெற்றா னென்ப திருநில மறியும் வாய்மை 44

திகழ்திசைக் கஜங்க ளுக்குந் திறந்தமார் பகலம் நல்கி
இகழ்வரு வீரந் தோற்ற இராவணற் குற்ற வூக்கம்
புகழ்புரிந் தில்லு ளோர்க்கே யிகழுநர்க் கெதிரே றாக
நிகழ் நடை யொன்றுண் டென்னு நிலைமையின் புலப்பா டாமே 45

இவ்வகை கொழுநற் பேணு மிணையில்மண் டோத ரீதன்
பவ்விய நடையாற் சீர்சால் பத்தினி யெனுமாண் புற்றுச்
செவ்விய இல்லா ளாகத் திகழ்வுழிக் கேதீ சன்செய்
திவ்விய கருணையாடற் றிறமினிச் சிந்தை செய்வாம், 46

**வேறு**

ஓவிலாப் பரிவி னுடன் மரு வுரிமைச்
சுற்றமா யினரெலாந் தணந்து
மேவுசீர்க் கணவன் தானுமங் கயலின்
விரவுதல் தவிர்பொழு தறிந்து
சேவுயர்த் தானைச் சிந்தனை செயலுஞ்
சென்றவன் முன்னிலைப் படலும்
மாவியல் கண்ணாள் வாழ்வினி லிழுக்கா
வழக்கமாய்ப் பழக்கமா யினவால். 47

ஏதுமோர் திறத்து மிடையீடு நேரா
தித்திறம் பலபகல் கழிய
ஈதிட மாக ஒருதிரு விளையாட்
டுகந்திட விழைந்தரு ளீசன்
மாதவள் முன்தான் மருவிநில் போதில்
மகிழ்நனு மதற்கிடை யீடாப்
போதுதற் காமோர் புணர்ப்பினை விளைத்துப்
பூங்குழல் நிலைமைசோ திப்பான் 48

எண்ணிமுன் னிருக்கா வகையிரா வணனங்
கேகுமோ ரசுகை தோன்றுதலும்
உண்ணடுக் குறத்தன் உள நிறை பழுதாம்
என உணர்ந் தவலமுற் றிடுவாள்
வண்ணநேர் நோக்கிக் கண்ணுதற் பெருமான்
மழவிழங் குழவியா யவள்முன்
விண்ணுலா மதியின் விம்பமோ என்ன
விரிநிலா வெறித்திடக் கிடந்தான் 49

கைம்மலர் முகிழ்த்துக் கண்மலர் பிசைந்து
கனியிதழ்ப் பவளங்கள் துடிப்பச்
செம்முக வியர்மென் சிறு துளி யரும்பச்
சிறுபண்டி யெக்கியெக் கிப்பைங்
கொய்தளிர்க் குருத்துக் கரமலைத் தலைத்துக்
கோலமென் பதமெடுத்து துதறிப்
பைதலுற் றழுமோர் பாலனாய்ப் பொலிந்தான்
பாவை மண் டோதரிக் கருள்வான் 50

ஒருத்திபா லொருகா லூர்க்கூலி யாய்வந
துதிர்பிட்டுக் கூர்மண்ணே சுமந்தும்
அருத்தியால் மற்றங் கொருத் திக்கா விறகு
விலை பகர்ந் தங்குமிங் கலைந்தும்
விருத்தனாய் வந்து வழக்கிட்டு வென்றும்
விரும்பியாங் கருள்விளை யாட்டார்
ஒருத்தனார்க் குவள்பா லொருமழ மகவாய்
உருத்திடற் கென்கொலோ குறையே 51

எக்கண மிதுவென் னென்பனென் கணவன்
ஏதுரைக் கேனென வேங்கும்
அக்கண மங்ங னருமழ மகவாம்
அதுகொண்டங் கதிலொர்பே ராடல்
முக்கணன் நிகழ்த்த முன்னிற்கக் கண்டும்
மூடனேன் கவல்வது பழுதென்
றுக்கழி கருத்தோ டொன்றும் மேல் நினையா
துடையவற் கேயொப்பித் தமைந்தாள். 52

இவ்விடை யாங்க ணெய் தவந் துற்ற
இராவணன் ஏதிது வென்னச்
செவ்விடை யண்ணல் திருவருட் குறிப் பாற்
சீர்மயன் பாவையீ துரைப்பாள்
நவ்வியங் கண்ணா ளொருத்திநந் தோழி
ஞாதியரி மனை சென்று மீளும்
அவ்விடை யீதிங் கிருக்கவைத் தகன்றாள்
அணைகுவன் விரைவினி லெனனும். 53

தன்னினத் தொருத்தி சங்கடந் தவிர்க்கத்
தான் விரைந் துதவிடு தயவோ
மன்னுதன் பதியை மழவெனும் மயக்கில்
மற்றுளோர் தீண்டிடப் பொறுக்கா
அன்னதோர் உணர்வோ ஆதிதன் பாகம்
ஆளுடை மாதவப் பிராட்டி
சொன்னவத் தோழி யுருக்கொடே நடந்து
துண்ணெணத் தோன்றின ளரங்கில். 54

இந்தவா றணைவாள் இராவணன் மனைவி
யியம்பிய துளங்கொளு முனமே
நொந்தழு குழக்கன் றுறுமிட நாடி
முந்துற விரைபுனிற் றாப்போல்
சுந்தர வதனத் துடிப்புட னணைந்து
துடித்தழு குழவிகைத் தூக்கி
அந்தமில் நன்றிக் கடனுரைத் தகன்றாள்
அவனுந் தன் பாட்டினி லகன்றான் 55

அன்பினிற் செறிவா ரிருவர்கள் தத்தம்
அந்தரங் கத்துவம் பிறர்க்குத்
தென்படா வண்ணஞ் செயுந்திற மென்றுஞ்
சீரிதே நேருமிந் நிகழ்வில்
முன்புறு மீசன் பங்கினாள் தானும்
முன்வந்து பெண்ணுரு வாகித்
தன் பெரு நிறைகாத் தருளிய துன்னித்
தழன்மெழு காம மயன் பாவை 56

மெத்துறு மீச னெவ்விட மீசி
மேவரு மவ்விட மெனலும்
எத்திற மீசனத்திற னவளு
மியலுவ ளென்பதும் நேர்கண்
டர்த்தநா ரீச தத்துவ வுண்மை
அடியனேற் கருளிய வாவென்
றுத்தமி மண்டோ தரியுளங் கிளர்ந்த
உவகையின் வகைமையா ரறிவார். 57

ஏர்கெழு கேதீச் சரவனெம் பெருமான்
இசைகெழு மயன்குலப் பாவை
சீர் கெழு மண்டோ தரிக்கருள் திறமிங்
கிதுவிது போலினும் பல்லோர்
நேர்கெழு முணர்வின் நேர்ந்துற வொன்றி
நின்றுளோர் தங்களுக் கெல்லாம்
பேர்கெழு வளங்கள் பெருகிட நல்கிப்
பிறங்கிவீற் றிருந்திடு மென்றும். 58

பார்கெழு துவஷ்டா மதுமய னாதி
பண்டையோர் தம்பெருங் கிளைகள்
ஓர்குல மாகத் தன்னதா ணைக்கீழ்
உவந்திருந் திடும்வகை கொண்டு
சீர்மலி கேதீச் சரன்றிகழ்ந் திருந்த
காலந்தான் திகழ்கிறீத் தாப்தம்
நேர்வரு வதற்குச் சில சதாப் தங்கள்
நிகரமுன் னாமெனு முலகம். 59

அத்தகு காலத் தளவிலா யிரமாண்
டகன்றன காந்தக் கோட்டையுந்தன்
வித்தக ஆற்ற லிழந்திட விசுவ
கன்மர்கள் பின்னைய வீழ
மெய்த்தகு மன்னர் வேத்தவை மன்னி
விளங்குயர் புரோகிதர் களுமாய்
உத்தம விருது விருத்திக ளெலாம் பெற்
றுயர்ந்தவா சரித்திரஞ் சாற்றும். 60

அங்கது நிற்க ஆதியா ரருளால்
அணைந்துமா தோட்டச்சீர் வியந்து
தங்கள்சீ ருயர்வுந் தாழ்வுமா மனைத்துந்
தயாபரன் கேதீசன் மனையாந்
துங்கநீள் கோயிற் சார்பினி லியைத்துக்
கொண்டுணர் பிரஜ்ஞையோ டிருந்த
சிங்கபா குவின் சேய் விஜயனா தியர்செய்
தியின் முனம் மற்றொன்று தெரிப்பாம். 61

**மண்டோதரி பேரருள் பெற்ற படலம் முற்றும்**
**ஆகத் திருவிருத்தம் 706**

## மாந்தை விசாகப் படலம்

இத்தரணிப் பரப்பென்னு மிரும்பௌவ வளாகத்தோர்
நத்தீனு மோர்சிறிய முத்தென்ன நிகழீழம்
எத்தனைக்கங் குருச்சிறிய தத்தனைக்குத் திருப்பெரிதாம்
வித்தகமிவ் வையகங்காண் விந்தைகளிற் பெருவிந்தை. 1

நூதனத்தி லுள்ளதற்குப் புராதனத்திற் பன்மடங்கா
வீதணைந்த நோன்மைநிலை எண்ணுதற்கு மினிமைதரும்
காதணைந்த கேள்விக்குங் கருத்தினுக்கு மினிமைதரும்
மாதவமென் செய்தோமோ மருவியிதில் வாழ்வுற நாம். 2

சீர்குலவுந் திருமுறைகள் தொறுந்தொறுமிங் கிதன்சீர்த்தி
ஏர்குலவு மிதிகாச புராணமெலா மிதன் மகிமை
சார்புலமைச் சங்கப்பாட் டங்கங்கிங் கிதன்பிறக்கம்
பேர்குலவும் வகையமைந்த பெருமையுமோர் பெருமையே. 3

முக்கணனார் சீர்மகிமை முதுசூத முனிவர்வாய்த்
தொக்கிருந்து முனிவோர்கேள் தொடர்கதையாம் வடிவுடைய
தக்கிணமார் கைலாச புராணத்தி லிவ்வீழம்
மிக்குயர் நாடனைத்தினிலும் விசேடமெனக் கேட்டதுண்டு. 4

பார்சுலவும் பழவுலக யாத்திரிகர் ஏடுகளில்
ஓர்குறிப்புத் தானுமிதற் கிலாதவே டிருந்ததிலை
சீர்குலவு திருமூலர் சிவபூமி யீழமென்ற
நேர்வரிய மகிமைக்கு நிகரெங்குங் கண்டதிலை. 5

பேருலகிற் பழங்காலப் பெருநாக ரீகநலச்
சார்புடைய நாடுகளில் தகுதியினா லிதன் நண்பு
நேர்வரப்பெற் றிலாததொன்று நினைத்துப்பார்த் திடற்குமிலை
பார்புகழு மிவ்வீழப் பான்மையுமோர் பான்மையே. 6

பெற்றோர்தம் பெருமதிப்புப் பிள்ளைவழி விளைவதென
மற்றிந்த வீழமுறு மகிமையெலா மங்கதனுக்
குற்றணைதற் கூடகமாய் உலப்பில்பல நூற்றாண்டு
துற்றுமிகு திருநிலையாய்த் துலங்கியதால் மாதோட்டம். 7

உத்தமச்சீர் விளைநிலமாய் உலகவர்க்குக் கண்விளக்காய்
மெத்துமுயர் லௌகிகநல் விருத்திகளெல் லாங்கெழுமி
எத்திசையுங் கவர்ந்திழுக்கு மின்காந்தப் பொறியாய்த்தெம்
அத்தன்கே தீச்சரவன் அருள் நிலையாம் மாதோட்டம். 8

காலங்காண் முதுநாகர் காதலித்துப் பூஜித்த
மூலங்காண் பருமுதலாங் கேதீசர் முதுதவத்துச்
சீலங்காண் கேதுவுக்கும் திகழ்துவஷ்டா அகத்தியர்க்குங்
கோலங்காண் வரவருளுங் கொள்கையது மாதோட்டம். 9

உள்ளாடு முருப்பெரிய உயிலத்துக் குளம்நிரப்பித்
தள்ளாடி மீதாடித் தழங்குமூ லிகைமணந்து
வெள்ளாடும் பாலாவி விழுந்துமுழு கித்திளைப் பார்க்
குள்நாடு முயிர்ப்பிணியோ டுடற்பிணியு மொழிப் பதுவும். 10

பாலாவி மாந்தையெனப் பண்டைநாட் கிரேக்கர்புகழ்ப்
பாலாவி மகிமையினைப் பறைசாற்றி வைத்திட்ட
மேலான கீர்த்திமையும் வியன்நாவ லூராளி
பாலாவிச் சீர்பதிக முழுவதினும் இசைசிறப்பும். 11

எந்தநக ருக்குமிலா வளவினிலிம் மாநகர்க்கு
வந்தமைந்த மாண்பென்னே மருவுபுகழ்க் கேதீசர்
இந்தவொரு தலம்பிரியா ரென்றுமெனக் காழியர்வி
தந்துரைத்த வாசகத்தின் தரமென்னே தரமென்னே. 12

பூதலத்தின் மேன்மிளிர்ந்தும் புகுந்தொருகாற் கீழ்மறைந்தும்
மாதவத்தோர் பரிவுகண்டு மறித்துமொரு கால்மிதந்தும்
கேதுதொழு நம்பெருமான் கெழுமுபெருந் திருவிளையாட்
டேதுமொரு பிறதலமு மிதுவரைகண் டுளதிலையே. 13

இகமறியுங் கிறீத்தாப்த மெழுவதற்கு மிகமுனம்பன்
னகமருவு தலைக்கோல நாகரர சாட்சிதொட்டுத்
தகவுமலி தமிழர்தனித் தலைநகராய் ஓங்கியவிம்
மகதௌதா ரியநகரின் மகிமைக்கு வரம்பெங்கே. 14

வீறுகெழு மறுமகிமை யொருபாலா வாணிபத்தா
லேறு மகிமைத்திறமே யெண்ணில்பல நூற்றாண்டுக்
கீறில்சிறப் புற்றமையா லெண்ணிலபண் டத்தொகையும்
கூறரிய வாணிபர்தங் கூட்டமுமிங் கோங்குதலால்.. 15

மாசந்தை யெனும்பெயரின் மரூஉவாகும் மாந்தையொன்றே
தேசந்திக் கெலாம்பரவித் திகழுமுரோம் கிறீஸ் யவனம்
பேசுறுசீர்ச் சீனமெலாம் பிறங்கியதும் பெருங்கவிஞர்
வாசமலர் நறுங்குழலார் வனப்பெழில்போல் வதுமன்றி, 16

மற்றவர்தம் மதனவசக் காதலின்பப் பயில்வினிமை
முற்றுமிதற் குள்ளதென முதுபுகழார் அகத்திணையில்
நற்கவிதை மாந்தையெனும் பெயராலே நவின்றதுவும்
இற்றிதற்காம் மாண்பினுக்கோர் எடுப்பாக அடுப்பனவே. 17

ஏத்துமிசை யெண்தொகையி லீராறுங் கற்பனையின்
மூத்தஅநு பவமேவு முத்தொள்ளா யிரத்தாறும்
மாத்திகழும் மாந்தை யென்றே வழங்குபெயர் மேற்புனையும்
பாத்திகழு மின்பத்திற் பயிலுமிதன் பாங்கென்னே. 18

புதிய துகாண் புலவருளம் புல்லரிக்கச் சுவையூற்றும்
அதிமதுர கற்பனைக்காம் அத்தனைத்தீம் பண்புகளும்
மதுமதுப்போன் றறக்கனிய மல்கியசீர் மாந்தை நலம்
சதுர்மிகுந்த சங்கப்பாட் டேறுதற்கா மேற்றமென்னே. 19

வாய்ந்த புகழ் மாசந்தை மற்றுமிருக் கலாமெனினும்
மாந்தையெனும் பெயர் வழக்கம் மறுதேச மறியாதொன்
றேய்ந்தபுக ழிலங்கைக்கே ஏகபோ கம்மிதுவென்
றாய்ந்தநூற் றுணிபுரைக்கும் அதற்கென்னோ மாற்றீடே. 20

மாமூல னார்புனையும் மல்குகுறுந் தொகைப்பாட்டில்
மாதோட்டப் பெயர்தழுவி மாந்தையிடம் பெறும்பரிசு
தாமூகங் கொண்டிதனைத் தட்டிவிட முயல் வாரை
மாமூக ராக்கவுறும் வாலிமையின் வனப்பென்னே. 21

புன்னாகச் சோலையொடு புனற்றெங்கு சூழ்மாந்தை
யென்னவரும் வருணனைக்கிவ் வீழச்சீர் மாந்தையல

துன்ன மற்றோர் சூழ்நிலையிவ் வுலகினிலெங் கேனுமிலை
என்னுமறி வோர்கருத்துக் கெதிரீடு யாதுமிலை. 22

மாவம்சம் முன்வைக்கும் மன்கூத்தி கன்சேனன்
மாமூல னார்பாட்டில் மரூஉங்குட்டு வன்சேரல்
நாமேவு மொலிப்பிறழ்ச்சி நாடகமா மிதுமட்டு
மாகாத்ம்ய வாய்மை யொன்றால் வலுவுறுமென் பாரறிஞர். 23

முரன்றின்ப வண்டொலிக்கும் முதுபொழில்வாய்ப் பாலாவி
வரன்றிப்பொன் கொழித்துவரும் வனப்புமிகு நகரிதனைச்
செரன்றிப்பென் றந்நாளிற் சேர்யவனர் குறித்தவது
நிரன்றிங்கு விற்கொடிமுன் நிலைத்தமைக்கு நிதர்சனமே. 24

ஆகையினால் சகவாண்டு சனிக்க இனம்நானூறு
போகணுமென் றிடவிருந்த புராதனத்தே யிந்நகரை
ஓகையுட னச்சேர னுவந்தளித்த வாதெளிவாம்
வாகைமலி வளவரொடு மாறர்களு மங்ஙனமே. 25

மாந்தைக்கண் ணாளர்தம் வகுப்பொழிய மாநிலத்தில்
வேந்தர்க்கும் முனிவர்க்கும் விண்ணாளுந் தேவர்க்கும்
வாய்ந்தகதி வேறிலென வருணிக்குங் கவிஞர்வாய்ப்
போந்தபெரும் புகழ்ச்சிக்குப் பொருந்துநகர் மற்றெதுவோ.

பாலாசி மண்டி யெனப் பகர்கிரேக் கன்றொலமி
பாலாவி மாந்தையையே பன்னியதும் றோம்பிளினி
பாலாசி மன்டியோப் பிட்டமென் றிட்டதுமிப்
பாலாவி மாந்தையையே யென்பதுமங் கைக்கனியாம். 27

மக்கத்து வினைஞரொடு மாந்தைக்கண் ணாளரவர்
பக்கத்துக் கேய்ந்திடுபள் ளெனமருவு பழம்பாடல்
தொக்கிங்கு கம்மாளர் தோற்றமுட னேற்றமுற
மிக்கெங்கும் புகழொளிர விளங்கியமை தெரிப்பதுவும் 28

காந்தமுறு தடமதிலுங் கமழுமலர்ப் பொழிலுமுற்ற
மாந்தையெனு மோர்பாடல் மரபறிந்த இம்மாந்தைக்
கேய்ந்ததொரு பழமகிமை யியல்புறவைத் தேத்துதலும்
ஆய்ந்துணருங் கூர்மதியார்க் கரியபொருட் புதிர்கள ன்றே. 29

முத்தமிழின் காவலராம் மூவேந்த ரிந்நகரைத்
தத்தெடுத்த பிள்ளை யெனத் தகுமருமை பாராட்டி

வித்தகச்சீர் விருத்திகளால் விரித்தமைத்துக் கோதாட்டி
மெத்தப்பிற் காலத்தும் விருத்திசெய்த பாங்கென்னே. 30

**வேறு**

பொன்னி லங்கிய முத்துமா மணிகளும்
பொருந்திய மாதோட்ட
மென்ன எம்பிரான் காழியர் கோன்புகழ்ந்
தேத்திய நகரீது
முன்னம் மாந்தையாய் முழுதுல களவுசீர்
மொழிந்தமுப் பதும் நிற்க
மன்னு வங்கமாள் மன்மகன் விஜயனின்
வருகைமேல் வருணிப்பாம். 31

**மாந்தை விகாசப் படலம் முற்றும்**
**ஆகத் திருவிருத்தம் 737**

## விஜயன் வருகைப் படலம்

துங்க மேவு மிமயஞ் சுரந்திழி
கங்கை வந்து கடற்சங் கமமுறு
வங்க நாட்டு வளங்கெழு மன்னவன்
சிங்க பாகுவென் போனுள னாயினான். 1

வேத வாய்மை விராட்பிர மத்தினிற்
போது மைம்முகத் துற்பவித் தித்தல
மீதி' லாட்சிசெய் விஸ்வப் பிரமப்பேர்த்
தீதில் நற்குலத் தானென்ப மற்றவன் 2

ஆன மன்னவன் ஆதர வாற்பெறு
மான மிக்குயர் மைந்தர்பல் லோர்தமுள்
தான வெங்களி றன்ன விஜயனென்
போனொர் காதலன் போற்றுறு மாண்மையான் 3

அன்ன சீர்விஜ யன்றன தாற்றலாற்
றன்னொப் பானவர் சப்த சதரெனத்
துன்னு மோர்தொகை வீரர்கள் சுற்றமா
மன்னு கீர்த்தி வயங்க இயங்குழி 4

ஆயவன் தன தாண்மையெள தாரிய
மேய வீரத் திறங்கண்டு மெச்சியோர்

நேய மாரு மரச நிமித்திகன்
ஏயு மாறவற் கீதுரைத் தானரோ 5

மைந்த நிற்கு மகிழ்பிதி ரார்ச்சிதத்
தெந்த வோர்பங்கு மெய்த விதியிலை
சிந்து தாண்டிப்போய்த் தென்றிசை சார்ந்திடில்
நந்து சீர்வள நாடுனக் குண்டென 6

தந்தை தன்னையர் சார்பி லிலாதசு
தந்த ரத்துவந் தன்னை நயந்திடு
சிந்தை மேவு விஜயனக் கூற்றையு
வந்து நல்வர வேற்றன னென்பவே 7

மைத்த ரோர்பல ரென்பதும் மைந்துகூர்
இந்த மைந்தன் பரநில மாள்தற்கு
கந்த ஆற்றல னென்பதுங் கண்டவன்
தந்தை யும்மது தக்கதென் றானரோ 8

தன்ன சுற்றம தாத்தன யன்கொளு
மன்னு மாற்றன் மருவெழு நூறதாச்
சொன்ன அன்னவர் தம்பய ணத்துக்கும்
இன்ன வேண்டுவ வென்ப துறத்தெரீஇ 9

அரச னாணையி னாலமைச் சர்குழீஇ
உரைசெ யற்கரு மூக்கமொ டாற்றியே
குரைக டன்மேற் குதிரைக் கதியினில்
விரையும் வள்ளங்கள் வேண்டுவ சூழ்வர 10

ஊழிக் காற்று மசைக்க வொண் ணாததோர்
பாழிப் பாய்மா மரக்கலந் துன்றுற
ஆழிப் பாவனைக் காவவெ லாம்பெய்து
ஏழி னாலுறழ் நூற்றுவர் தம்மொடே 11

எங்கெ வர்க்குமே ஏந்த லெனத்திகழ்
துங்க வீரத் துடிப்பொளிர் பாகுடைச்
சிங்க பாகுதன் மைந்தனு மேறிட
அங்க ரசம திப்புட னேற்றியே 12

அரச சைன்ய அணிவகுப் புற்றிட
விரவு மைங்குழு வோரும் மிடைந்திட
முரச மாதி முழக்கொலி யார்த்தெழுப்
பரசு வந்தியர் மாகதர் பாடிட 13

தேச மக்கள் திரண்டு திரண்டுவந்
தாசை கூர அருமை நயப்புரை
பேசிப் பேசிப் பிரியா விடைதர
மாசின் மாமலர் மாரி சொரிதர 14

வங்க மீன்றவெஞ் சிங்கம் ஜெயஜெய
சிங்க பாகுநற் றோன்றல் ஜெயஜெய
எங்கள் வங்க இளவர சுஜெய
துங்க மேன்மை துலங்க ஜெயஜெய 15

வெல்க வெல்க விஜயன் ஜெயஜெய
பல்கு வீரப் பராரி ஜெயஜெய
மல்கு நல்வள மோங்க நினக்கெனப்
புல்கு மங்கல ஆசி பொலிந்தெழ 16

வங்க மேம்புகழ் எங்கும் விளங்கச்செய்
சிங்க கேதனம் பாய்மரத் துச்சியிற்
பொங்கு பட்டொளி வீசிப் பறந்திட
மங்க லப்பய ணம்வழிக் கொண்டதே. 17

**வேறு**

மலர்புகழ் மாந்தை மன்ன ராட்சிக்கு மாற்றீடாக
நிலமிசைப் பிறிதோ ராட்சி நேர்தல்துர் லபமா மேனும்
உலகியல் நிலவ நீயங் குறுகென வுண்ணின் றுய்க்கும்
அலகில் சீர்க்கேது வீசன் அருளுருத் தெனநேர் வங்கம் 18

நீலவார் கடற்ப ரப்பின் நீளலை முகடு ழக்கிக்
காலுளர் நிலைமை நோக்கிக் கயிறுபாய் மாற்றி மாற்றி
மேலுயர் விண்மீன் நிற்கும் நிலைகொடு திசைய றிந்து
வாலியோ ருள்ளம் போல வழுவில்சீர் நெறியிற் செல்லும் 19

ஆடிமுன் னகரும் வள்ளத் தளவிலாச் சுதந்தி ரத்தின்
ஈடில்மெய்ப் பயன்கூட் டுண்ணு மிளைஞரும் விஜயன் றானும்
கூடுமுற் சாக மேவக் குதிகுதித் தாடிப் பாடி
நாடுமப் பிரயா ணத்தின் நாட்செலல் தோன்றா தாக 20

வங்கநின் றிழிந்து சூழும் வள்ளந்தோ றுலாவி யோடித்
துங்கமார் கடல்வ ளங்கள் தொகுத்தும்வந் துறுமு மெண்ணில்
பங்கமார் கடல்வி லங்குப் படைக்கெதிர் போர்தொ டுத்தும்
தங்களுக் கினிதாம் பாங்கிற் சலிப்பற மகிழ்ந்து வந்தார், 21

ஆடியல் புயற்கொ துங்கி யணைவுறு கரைதோ றாரும்
நாடியல் வளங்கள் கண்டும் நாமிங்குத் தலைமை யெய்தக்
கூடுவாய்ப் புளதோ வென்னக் கூர்ப்புற நோட்ட மிட்டும்
காடுபோந் துலவும் போதுங் காரியக் கண்ண ராகி 22

இத்திற மியலும் வங்க மியல்பெறு மரிக்கா மேடு
நத்துசீர்க் கலிங்கம் நாக பட்டங்கா வேரிப் பட்டம்
கத்துபே ரலையார் காயல் கொற்கையா தியெலாந் தாண்டி
உத்தம வீழத் தண்மு மொருகடற் பரப்பில் வந்தார் 23

வானிலை மாற்றம் நோக்கி மறித்துப்பாய் திருப்பி வங்கந்
தானிலை கொள்ளற் கேற்ற தரைமுகந் திருப்பு முன்னம்
ஏனிதென் றுணரா வாறோ ரிராட்சதப் புயல்கி ளம்பி
மேனிலை யுலகு முட்க வீறொடு மலையு மன்றே 24

பாய்மரம் நிலைத ளம்பப் பனிக்கெதிர் நடுந டுங்குஞ்
சேயென வங்கம் நின்று திணறிடத் திரைகீழ் மேலா
மேயின விசையிற் கீழ்மேல் விழுந்தெழும் பித்திண் டாட
மாயிருள் கௌவிக் கொள்ள மரணபீ தியினில் மாழ்கி 25

வீறகல் விஜய னோடு தோழரும் விதிர்வி திர்த்து
வேறொரு வழியுங் காணார் விட்டவா காண்போ மென்றே
தேறுத லிலாம யக்கிற் றிளைத்தயர்ந் தவச மெய்தி
ஊறுமுன் னைந்து மொன்றி யுயிர்பரித் திருந்தா ராக 26

ஈறில் முன் யாமம் மூன்றும் எப்படி யோக ழித்துத்
தேறநேர் நான்காம் யாமஞ் சேர்வுறு மளவின் மெல்ல
வீறுகொள் புயல டங்கி விட்டதே யெனினுந் தாங்கள்
சேறுமா றியா தென் றொன்றுந் தெளிவுறா தயர்ந்தவெல்லை 27

தூரத்தே யெழுந்தொ லித்துத் துலங்குமென் காற்ற லைக்குட்
சேரத்தா னலைந்து வந்து செவியிடை நுழைநுண் ணோசை
தீரத்தோர் கோயிற் கண்டா மணியோசை யாத்தெ ரிந்து
சேரத்தா மெலாமவ் வோசைத் திசைதனைக் குறித்துக்கொண்டார் 28

மென்மெலக் கீழ்வெ ளுப்ப விரைந்து பாய் கயிறு மாற்றி
முன்குறித் திடுதி சைக்கண் மோட்டிருங் கலஞ்செ லுத்திப்
பன்னுநீ ளிடைக டந்து பராபரன் கேதீ சன்சீர்
மன்னுமா தோட்டத் தொன்று வான்கரை யடைந்திட் டார்கள் 29

கரைதட்டி வங்கம் நிற்கக் கடுகியங் கிழிந்தோ ரெல்லாம்
விரைமன வேகத் தொன்றி விண்ணிற்கண் சுழல நோக்கி
நிரை செய்பொன் மாடத் துச்சி நீடுவா னுயர்ந்து தன்சீர்
உரைசெய்நா தத்தாற் றங்கட் குதவிய மணிகண் டார்கள் 30

வந்தடை கரைக்குந் தாம்முன் மலைத்து நின் றிடத்துக்கும் நேர்
அந்தரம் ஒரோ சனைக்கு மப்பாலா மெனம தித்தே
முந்தஅத் தூர மோடி முன்னறி வித்தல் தந்த
இந்தமா மணியின் மாண்பிங் கிலங்குதெய் வீக மாண்பாம் 31

இங்கமர் தெய்வ மாண்பே எமக்குறு துணையாம் போலும்
எங்கும்நா மினிநாடாமல் இங்குற்றே நிமித்தி கன்சொல்
மங்கல வளங்கள் யாவும் மருவுவம் போலும் நேர்போய்
அங்கத்தெய் வத்தை நேர்கண்ட தனருள் பெறுவோ மென்றார் 32

என்றவர் விரைவி னெய்தி யெண்ணிலாண் டுகட்கு முன்னாத்
துன்றுகே தீசன் மேனித் தொன்மைகண் டேத்திப் போற்றி
நன்றமை கோயிற் சிற்ப நலிவுற்ற நிலையுங் கண்டு
நின்றவர் பாங்கு சாவி நிலைமைதேர்ந் தறிவா ரானார். 33

மருவுமத் தலம்பல் காலம் மாதோட்ட மன்ன ராகி
விரவுசீர் விசுவ கன்ம ராட்சியின் மிளிர்ந்த வாறும்
உரவுநற் காந்தக் கோட்டை விலாசமு மதன்வீழ் வோடு
பரவுமம் மன்ன ராட்சி பலமிழந் தருகு மாறும். 34

அன்னவ ராட்சிக் கீழன் றடங்குப ராஜதானி
யென்ன வாய்ந் திடுபு லத்தி அநுராச புரிமுன் னான
தன்னர சாவார் கையிற் றட்டழி கின்ற வாறும்
சொன்னவங் கவர்மாற்றத்தாற் றுலங்குறு முளத்த ராகி, 35

நிமித்திகன் குறித்துச் சொன்ன நாடிதே யாங்க ளிங்ஙன்
ரமித்திருந் திடுதற் கேதும் இடையூறு நேர்தற் காகும்
நிமித்தமிங் கிருப்ப தாக நினைவதற் கேதில் லென்றே
தமிற்றமில் மகிழ்ந்த அன்னோர் தாமெலா மொருங்கு கூடி. 36

அன்றங்கவ் விடத்திற் றானே யாலோசித் தமைத்த வாறு
சென்றுநாற் றிசையுஞ் சுற்றித் திகழுமந் நகர்வ ளாகத்
தொன்றும்வல் லாட்சிச் சாய லுருப்படா திருப்பக் கண்டு
நன்றவ ணுற்றுத் தங்கள் நயத்தொடு பயத்தி னாலும். 37

மக்களை வசீகரித்து மகிழ்ந்தவ ரொடுகு லாவி
மிக்குயர் பண்பும் நண்பும் மேவரக் கலந்து வாழ்ந்து
தொக்குயர் நிதிவ ளங்கள் தொகுத்துமா தோட்ட வாணர்
அக்கமும் பக்க மும்நின் றநுசரித் திடப்பெற் றார்கள். 38

தீதோட்டு மருளார் கேதீச் சரன்பணிக் காக வென்றே
காதோட்டு கேள்வி மேலோன் கருதுசீர் விஜயன் வாழ
ஊதோட்டு முயிர்ப்புப் போல்வான் உபத்தீசன் தன்னைவைத்து
மீதோட்டு மாணை தாங்கும் வேத்தியல் முறைமை பேணி. 39

தாங்குசீ ரநுரை யந்நாள் தான்றோன்றித் தலைமை விஞ்சும்
பாங்குமிக் கிருந்த வாற்றாற் பகருமந் நிலைத விர்த்தற்
காங்கது தலைமை ராஜ தானியாம் படிக்க மைத்து
வீங்குயர் புஜபலத்தான் விஜயனே மன்ன னாக. 40

அன்னவன் தோழர் தம்மு ளான்றமை கேள்வி மேலோர்
நன்னெறி விசுவ கன்மப் பிரமர்நா ரயணன் முன்னாப்
பன்னுசீ ரைவர் கூடிப் பட்டாபி ஷேகத் திற்காம்
மன்னுவை திகச்ச டங்கு மரபுழி யியற்றிப் போற்றி. 41

தாமே தங் கையாற் றொட்டுத் தடமணி மகுடந் தூக்கி
மாமேதை நீதி யோங்க வையகத் தின்பம் மல்கப்
பாமேவு கீர்த்தி மேலோன் பண்புயர் விஜயன் சென்னி
மாமேவு மகுடஞ் சூட்டி மங்கல ஆசி தூர்த்தார். 42

அன்றவர் தொடக்கி வைத்த அவ்விதி முறையிவ் வீழத்
தொன்றுறு பௌத்தத் தாலு மசைக்கொணா வுரத்த தாகி
நின்றுநீ டியவா றெல்லாம் நிலவுமிவ் வீழ நாட்டுத்
துன்றுநற் சரித்தி ரத்தி னின்றுங்காண் பரிசின் மேவும் 43

பார்புக ழீழ மன்னர் தங்களுட் பராக்ர மப்பேர்ச்
சீர்திகழ் மன்னன் தற்கு முடிசூட்ட விசுவ கன்மர்
ஆருமா ணிலாமை நோக்கி அக்குலக் கன்னி தன்னை
ஏர்பெறத் தான்ம ணந்தங் கவள்வயிற் றுதித்த மைந்தன். 44

தந்தைக்கு முடிசூட் டக்கொள் சரித்திர மறிந்த செய்தி
இந்தவீ ழுத்து மன்னன் விஜயன தாணை மாட்சி
எந்தவோ ரளவுக் கோவா திடம்பிடித் திருந்த தென்னும்
அந்தநன் னிலைமை தேற்று மத்தாட்சி யாகு மன்றே. 45

தன்னுறு தோழர் தம்மைத் தகுந்தகும் பதவி தம்மில்
மன்னுற வமர்த்தி யஃதே மத்திய நிலைய மாகக்
கொன்னுறு மாணைச் சக்ரங் குலவிநாற் றிசையுஞ் செல்ல
மின்னொளிர் புகழ்மீக் கூர விழைதகு மாட்சி செய்தான். 46

விஜயனாம் விசுவ கன்மப் பிராமணன் வேந்த னாகி
அசைவில்சீ ரநுரைக் கந்நாள் அருநெறிச் சைவ மேன்மை
இசைவுற விருந்த வண்ணம் இயம்புவ தென்கொல் யாண்டுந்
திசைதிரும் பிடங்க ளெங்குஞ் சிவதளி யெழுந்த வன்றே. 47

பவநெறி நீக்கி யாளும் விஜயன்பின் பந்து வாசன்
அவநெறி புகுதா வண்ணம் அநுரையில் எட்டுத் திக்கும்
சிவதளி நிறுவுஞ் சீரும் சீர்த்தஅங் கவன்பின் னாண்டோர்
சிவபதந் தமது பேரிற் செறிவுறக் கொண்ட வாறும். 48

சிவதளி சிவிக சாலா திகழ்பிரா மணன்ப மன்னன்
நவதன்னோ விசுவ கன்மன் கம்மாளன் கம்ச லன்னிந்
நவவிருத் திகள் பிற்கால நடைமொழி மாற்ற மென்றுந்
தவலரு நூலத் தாட்சி சாற்றுதல் காண்டு மன்றே 49

சீர்திக ழீழ மென்றுஞ் சிவபூமி யென்ற கீர்த்திக்
கோர்குறை நேரா வாறும் உயர் திருக் கேது வீசன்
பேர்மிகு மிந்த வீழப் பெரும்பெரு மானென் சீரும்
நேர்வுற விதனை யாண்டு நிலவிற்று விஜய னாட்சி 50

மன்னுசீ ரநுரை மேவி மாதோட்ட நலங்கள் பேணி
உன்னுசீ ருபத்தீ சன்றன் றலைமையி லொருத்தர் கோயில்
தன்னிலை புதுக்கி வேண்டும் நிபந்தங்கள் தகவி னாக்கி
அந்நிலை சிவதர் மச்சீ ராட்சிபெற் றோங்க வைத்தான் 51

கேதீச னருளினாலே கிடைப்பரு மாற்றல் மிக்கு
மாதோட்டத் துறைமு கத்தை மறுபடி புதுக்கி ஈழத்
தீதில்நற் கீர்த்தி நான்கு திசையினுஞ் செல்ல ஆழி
மீதோட்டு கலங்கள் போக்கி வியாபார விருத்தி பண்ணி 52

காந்தமா ரரணொன்றல்லாக் கருதுமற் றெத்தி றத்தும்
ஏந்தெழின் மாந்தைமுன்னா ளிருந்தசீ ரனைத்து மேவிப்
பூந்தடம் பொழில்கள் சூழ்ந்து பொற்பமர் சிற்ப மோங்கி
மாந்தர் வாழ் சொர்க்க மாகி மறுமலர் வுறவைத் தாண்டான் 53

பேர்கெழு விஜய னந்நாட் பிறங்குசீர்த் தமிழ்நாட் டோடு
ராஜிக வுறவு பூண்ட இயல்பினால் பாண்டி நாட்டுச்
சீர்கெழு மிராஜ கன்னி தனை மணந் திட்ட தொன்றோ
பேர்கெழு தோழர் கட்காம் பெண்ணுமங் கெடுத்தா னென்ப 54

இவ்வகை யானே சைவத் தமிழ்க்கலா சாரத் தீழம்
மெய்வகை விரவப் பேணி மிக்குயர் வன்னி நாடும்
மையில் சீர் மன்னார் நாடும் மலர்புகழ் புலத்தி நாடும்
கொய்மலர்ச் சோலை வாவிக் கோணநன் னாடுங் கண்டு 55

தாயினு நல்ல எங்கள் தலைவர்சீர்க் கோணை நாதர்
பாயின புகழின் மன்னு பாலாவிக் கரைக்கே தீசர்
கோயில்கள் கீழ்பால் மேல்பாற் குலவுறக் குறைவறுத்தே
மேயின தோழர் தம்மால் மேலுந்தென் வட திசைக்கண் 56

அகழ்ந்துகாண் பொருளாய் விட்ட அண்ணலார் சந்திரசேகர்
திகழ்ந்திடு நகுலச் சாரற் சேர்திருத் தம்ப லேஸ்வர்
மகிழ்ந்தமர் சினக ரங்கள் வகுப்பித்திவ் வீழ நாட்டின்
நிகழ்ந்தநாற் றிசையுஞ் சைவ நறுமணம் நிலவ வைத்தான் 57

ஓவியக் கலைமுன் னேற ஒமாந்தை நகர்வ குத்தும்
காவிய ஆய்வு மல்கக் காண்புல நரவை செய்தும்
தேவியல் விளக்கத்தோடு திகழ்கலை விளக்கந் துன்ற
ஆவன யாவும் மேற்கொண் டமைந்தது விஜய னாட்சி, 58

மல்வத்து ஓயா நன்னீர் வளமொன்று மவம்போ காதே
பல்குற்றுத் தேங்கும் வாவி வடிகால்கள் பலவு மாக்கி
மல்குற்ற விளைவு துன்ற மருவுசீ ரநுரை யந்நாள்
நெல் துற்ற களஞ்சி யப்பேர் நிகழ்ந்திட நிலவிற் றாமால். 59

கூழெனும் பெரும்பே ரங்கங் குறைவுறா திருக்கு மெல்வை
வாழ்வுறு மாட்சிக் கூறா மருவுமற் றங்க மைந்துந்
தாழ்வரை வெள்ள மென்னத் தானின்று நிலைக்கு மென்னும்
ஊழ்முறை விஜய னாட்சி யுறுதியுற் றிலங்கிற் றென்றும். 60

பராபர னருள்முன் னீர்க்கப் பாய்மரக் கப்ப லேறி
விராவுசீர் விஜய னீழ வியன்கரை யடைந்த வந்நாள்
தராதல முயவு தித்த சாக்கிய முனிவிண் சேர்ந்த
இராயிரத் தைந்நூற் றைம்பத் தெட்டமர் கலியென் பாரால். 61

வசையிலித் தினந்தொ டுத்து வருமொரீ ராயி ரத்தோ
டிசையுமுந் நூறு காறு மீழத்தி னரச யந்த்ரம்
திசைபுக ழின்னோ னன்று சீர்பெற முடுக்கி விட்ட
விசையினி லியன்ற தென்னில் விளம்பலென் விஜயன் மாண்பு 62

மாதுவட் டாவுக் குத்தாம் வழங்குய ரீழத் தாட்சி
ஏதுகா ரணத்தினாலோ இற்றிட வெழிலார் வங்கத்
தீதுதீர் விஜய னீழத் திசையணைந் திடவ ரத்திப்
பாதுகாத் திடுகே தீசர் பதமலர் வழுத்தி யுய்வாம். 63

**விஜயன் வருகைப்படலம் முற்றும்.**
**ஆகத் திருவிருத்தம் 800**

விரித்தசீர்க் கேது தொட்டா விஜயனா தியரைத் தானே
வரித்துமா தோட்டக் கேதீச் சரநலம் மேம் படுத்துச்
சரித்திரக் கலைகால் கொள்ளத் தயங்குமத் தொன்னா ழீழச்
சரித்திரம் படைத்த கேதீச் சரன்கழல் தலைமேற் கொள்வாம்

**திருக்கேதீச்சர மான்மியம்**
**புராதன காண்டம் முற்றும்.**

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# திருக்கேதீச்சர மான்மியம்
## பொற்பொளிர் காண்டம்

**பண்டிதர் மு.கந்தையா**

**1992**

### முதலாவது
### சேது மத்திய மஹிமை யுரைத்த படலம்

தாதுகு மலங்கன் மார்பிற் றசமுகன் தன்னைச் செற்ற
தீதுதீர் வகைமை நாடிச் சிவார்ச்சனை புரிந்த ராமன்
ஏதுமோர் பழித்தீர் விற்கும் ஈதிட மெனமுன் நாட்டுஞ்
சேதுமத் தியத்தி னான்ற சீரொரு சிறிது ரைப்பாம். 1

ஊழிதோ றூழி முற்று முகிர்சதைப் பிணைப்பி னொன்றி
வாழிபா ரதப்பாங் கீழும் வைத்துள வான்ம நேயக்
கேழில்சீ ருறவி னுக்குக் கிளத்துபௌ திகச்சான் றாக
ஆழிமீ தமைந்த தம்மா அறிஞர்போற் றிசைக்குஞ் சேது. 2

உந்தித்தா மரைக ரந்திட் டுலகுறு மாலெண் டிக்கார்
தந்திக் கொம் பலைத்த மார்பன் தனதட லாண்மை தோற்றப்
பந்தித்த திருவை மீட்பான் பாரத மீழத் தொன்றச்
சந்தித்த கலணை யீதாஞ் சரித்திர முலகு தேற்றும். 3

கடலமை கலணை சுட்டுங் காரணக் குறியாஞ் சேது
இடனுறு பதத்துக் கேயும் இலக்கணா விருத்தி பெற்றே
தொடருமவ் வணைகால் கொள்ளுந் துறைக்குமத் துறைசார்ந் தொன்றும்
புடவியின் வரைப்பி னுக்கும் பொருந்துறு பெயராய்ப் பின்னும். 4

கல்லணை சமைத்த ராமன் கடற்கரை யோரத் தீவாய்
வல்லவா றமைத்து விட்ட நிலத்துக்கும் பெயராம் பாங்கு
நல்லவர் வாக்கி லூருஞ் சேதுரா மேச்ச ரப்பேர்
சொல்லுமங் கதனாற் கண்டு துணிந்திட வடுக்கு மன்றே. 5

ஈதமர் விளக்க மாக வின்னுமேல் நாடிக் காணிற்
சேதுசெய் யிராமன் தங்கித் திருப்பள்ளி யமர்புல் லாணி
தீதுதீர் நவபாஷாணந் தாபித்த தேவை யென்றங்
கோதுமிப் பரப்ப னைத்தும் உற்றவாற் சேது நாமம். 6

இவ்விடப் பரப்பெ லாங்கொண் டின்று போலென்று மொக்கச்
சைவவைஷ் ணவப்பேர்ச் சார்பார் தடுமாற்றந் தலைகாட் டாத
தெய்விகப் புனித பூமி யாகுமத் திருநாட் டிற்கேய்
மெய்வகை யெல்லை நான்கும் விதந்துரைத் திடுதுங் கேண்மின். 7

பாரதத் தென்கீழ் பாங்கிற் படருங்கற் படுகை யாகி
வீரவா குவின்பொற் றாளின் மிதியுண்டு கடற்கீ ழாழ்ந்தும்
ஓரொரு பகுதி பார்மே லுயர்ந்துதன் னிலைமை தோற்றுங்
கார்மலி சிகரக் கந்த மாதனப் பிறங்கல் மாதோ. 8

மற்றது வடபா லாக மருவுதென் கோடி தன்னில்
உற்றமர் செவ்வேள் செந்தில் உத்தர கோச மங்கை
குற்றமில் குடபா லாகக் குணதிசை யெழின்மா தோட்டப்
பொற்றிருத் தலமு மாகப் பொருந்துமாற் சேது வஃதே. 9

தெய்விகப் புனித பூமி யவையெலாந் தீர்த்த மென்ன
எய்திய வழக்க மொன்றுண் டேததன் விளக்க மென்னில்
மெய்வகை தெரித்துங் கேண்மோ வீறுமுத் துங்க வாய்மைச்
செய்தவ முனிவர் காள் நுஞ் சிந்தனை தெளியு மாறே. 10

ஆர்த்தடர் பிறவிப் பந்தத் தழுக்கொருங் ககல நல்குந்
தீர்த்தமாஞ் சிவன ருள்தா னாகலாற் சிவனே தீர்த்தன்
நேர்த்துவந் தவன ருட்குள் நிலை இயினார் தாமுந் தீர்த்தர்
சீர்த்தவந் நியமந் தன்னாற் சிறீராமன் தீர்த்த னாவான். 11

தீர்த்தனா மொருவன் நோக்கிற் பரிசத்திற் செறிந்த யாவுந்
தீர்த்தமாம் முறைமை யாலே செய்சிறீ ராம னாழி
தூர்க்கவந் தமர்புல் லாணி தொடரணைக் கடிக்கல் நாட்டக்
கார்க்கடற் கரையி டத்துக் காண்தநுஷ் கோடி மற்றும். 12

இராவண வதம்மு டித்திட் டிராவண னாஞ்சீ ராமன்
தராதலம் பயந்த செல்வி தன்னொடு மீண்டு வைகி
அராவணங் குயர்பொன் மேனி யமலனைப் பூவார் கோயிற்
பராவிய தலமோ ரொன்பான் பாஷாணப் பதிட்டை காணும். 13

தேவிபட் டணமென் றெல்லாந் தீர்த்தமா யத்தீர்த் தப்பேர்
பாவுமூர் வழக்கிற் பின்னாட் பகருமிவ் வளாகந் துன்று
கூவநீர் நிலைகள் மட்டிற் காரணச் சிறப்பா யிற்றால்
மேவுமிவ் விளக்கம் மற்றுந் தீர்த்தமா மவைக்கு மொக்கும். 14

செயசிறீ யிராமன் தான்செய் தீவென முன்னஞ் சொற்ற
நயமிகு வளாகந் தன்னில் நாரியோர் பாகன் தன்னைப்
பயமுறு பக்தி கூரப் பலபக லருச்சித் தாங்கண்
கயமுறு கமலச் செல்வி காதலித் தேத்த வாழ்ந்தான். 15

மற்றவன் பரிசந் தன்னால் மருவுமவ் வளாக மண்ணுக்
குற்றுள புனிதஞ் சற்றோ வொருவரு மந்த மண்ணில்
துற்றுமே ருழுதல் செய்யார் செக்கிழுத் தெண்ணெ யூற்றார்
இற்றிதே னென்னி லன்னோ ரியம்புவ திதுவாங் கேட்பின். 16

சித்திரப் பூங்கொம் பன்னாள் சீதையெம் பிராட்டி பைம்பொற்
கைத்தலத் தினிற்பி டித்துக் கொடுத்திடக் கணவன் கைக்கொள்
அத்திரு மணல்வை ரித்திங் கிலிங்கமா மதனால் இந்த
மெய்த்திரு மணலேர் பாய்ச்சல் மிகுசிவா பராத மன்றோ. 17

சிவலிங்க வடிவே தானாஞ் செக்குலக் கையினை யிந்தத்
தவமிகு நிலத்தி லாட்டல் தானுமே சிவாப ராதத்
தவவிளை வளிக்கு மஃதால் அது செயோ மென்ப ரிந்தப்
புவனத்தி லிதன் தெய்வீகப் புனிதமற் றினைத்தா லென்றும். 18

ஏர்மலி யிராமன் கையா லியலுறு மவ்வி லிங்கச்
சீர்மலி புனித மொன்றோ தினந்தினம் வந்து சேரும்
பேர்மலி கங்கா தீர்த்தப் பிறங்கபி ஷேகந் தன்னால்
நேரில்பல் கால மாக நிலஞ்செறி நீருட் டேங்கி. 19

நாற்புற மகல நீள நவிலுமைஞ் நூறு பாக
மேற்படு மளவை யான்ற விசாலமார் தடம்பொற் கோயிற்
பாற்படு வளாகத் துள்ளே சுரித்தெழு புனித தீர்த்தம்
நாற்பதோ டெட்டுண் டென்னில் நவில்வதென் புனித மேன்மை. 20

நிலத்தொடு மூர்த்தி யொன்ற நிலத்தமர் மூர்த்தி கோயிற்
றலத்தொடு தீர்த்த மொன்றச் சர்வமுந் தீர்த்த மான
நலத்தினால் ஞால முற்றும் நாள்பொழு தெலாம்வந் தீண்டத்
தலத்தினு ளுயர்வுற் றோங்குந் தலமிரா மேஸ்வ ரந்தான். 21

நாதனா மிராமன் சார்பில் நாடியீங் குற்ற மர்ந்த
சீதைதன் கற்பு மேன்மை தெரித்திடு மக்னி தீர்த்தம்
மேதைகூ ரிலக்கு வன்பேர் விளங்குலட் சுமண தீர்த்தம்
தாதனா மநுமன் தீர்த்தந் தனுஷ்கோடி தீர்த்தம் மற்றும். 22

நாடுசீர் நவபா ஷாண தீர்த்தமென் றினைய வெல்லாம்
பீடுசே ரிகப ரத்துப் பேறெலா மளிக்கக் கேட்டுத்
தேடிவந் தணைவோர் தம்மாற் றிசையெலாம் புகழ்ம ணந்து
சேடமர் சேது நாடு தீர்த்தநா டாய்த்தென் பாரால். 23

தன்றாடு மன்ற தெல்லாம் நல்லவ ரிதய மெல்லாம்
நின்றாடு நிமலன் பொன்மான் கன்றாடு கரத்தெ மண்ணல்
சென்றாடு தீர்த்த மெல்லா மானவா திகழக் கண்டு
தொன்றாடு முலக மெல்லாந் துதித்தாட நிலவுஞ் சேது. 24

கார்க்கடல் தாண்டி யந்நாட் கவிக்கடல் இலங்கை மேவிப்
போர்க்கடல் கடக்க ராமன் புனைந்தமைத் திட்ட சேது
சூர்க்கவந் தலைக்கும் பவ்வச் சுழிக்கடல் கடக்க நல்குஞ்
சீர்க்கக முருகி வாழ்த்தித் திசை குறித் திறைஞ்சும் வையம். 25

வடதிசைக் கங்கை மூழ்கும் புண்ணியம் வலுவுற் றோங்க
உடனடி யாக வந்து சேது மூழ் கிடுமொ மூக்க
அடைவினி லானதம்மா ஆசேது ஹிமாச லம்மென்
இடையறா வழக்க மென்னி லியம்பலென் சேது மாட்சி. 26

வார்புனற் கங்கை மூழ்கி வாரணா சியிற்கும் பிட்டே
ஏருறு கயாசி ராத்த மியற்றுதற் கீடா மென்றும்
சீர்மலி திருவார் ராம சேதுவின் மூழ்கிக் கொன்றைத்
தாரர்ரா மேசர்ப் போற்றித் தநுஷ்கோடிச் சிராத்த மாற்றல். 27

சித்தமா சகன்றோர் போற்றுஞ் சேதுதீர்த் தப்பேர்க் குள்ளாம்
இத்தனை தீர்த்தமுஞ் சென்றியல் முறை விதியி னாடி
நித்தனா மிராம நாதன் நிறையருள் பெறுவாழ் வொன்று
சித்திகூர் வகையிற் பெற்ற சுவைதெவிட் டிடாம லன்றே. 28

ஈழம்வா ழன்ப ராவார் அன்றுபோ லின்று மோவார்
நீள்கடன் நேர்த்தி வைத்து நியமமோ டணைந்திட் டாங்கண்
கேளிர்கட் கந்தி யேஷ்டி சிராத்தமாங் கிரியை யாற்றி
வாழ்வினி லதியு யர்நல் வளமுற்று வாழ்வர் மாதோ. 29

இத்தகு சேது தீர்த்தப் பலன்களுள் விசிட்ட மான
மெத்துறு புத்ரப் பேறு மிகப்பெற்றிவ் வீழ வாழ்நர்
பத்தியோ டிராம நாத நாமமிட் டுகப்ப ரஃதுக்
கித்தலத் துயர்மன் 'சேர்' பொன் இராமநா தன்சான் றென்ப. 30

இத்திறச் சேது தீர்த்த யாத்திரைக் கெய்து வோர்கள்
பத்திமை கூரப் போற்றும் பாரம்பர் யத்தி னான்ற
உத்தம விதியொன் றுண்டஃ தோதுவ முணர்ந்து கேண்மோ
சுத்தசந் நியாச வாய்மை துலங்குமெய்த் தவத்திர் நன்றே. 31

**வேறு**

ஓங்குயர் திருவா ருப்பூர்க் கணபதி
யுபயப தம்பரவித்
தேங்கிடு மருளார் நவபா ஷாணத்
தீர்த்தம கிழ்ந்தாடிப்
பாங்குறு பரிவிற் பாம்பனில் வைகும்
பைரவ ரநுஜ்ஞை பெறீஇ
ஆங்குள தீர்த்தந் தோய்ந்துறு மகிழ்வோ
டங்க ணகன்றேகி. 32

எல்லொளிர் சோதியி ராமேச் சரத்தி
னிலக்ஷ்மண தீர்த்தத்தே
தொல்லியல் முறையிற் சங்கற் பித்துத்
தோய்ந்தக் கினிதீர்த்தம்
எல்லவ ரும்புக ழேனைய தீர்த்தமொ
ரெண்ணெண் தொகை மூழ்கி
நல்லரு ளாருமி ராமேச் சரனையி
றைஞ்சி நலம் பெற்றே. 33

திகழ்வுறு கோடித் தீர்த்தத் தாடிக்
குடதிசை வாயிற்கண்
புகழுறு கணபதி பொற்கழ லேத்திப்
புல்லா ணிக்கேகி
நிகழ்வுறு மாதி சேதுவி லாடி
மாதவ னைப்போற்றித்
தகவுறு தான சிராத்த மனைத்துந்
தனுஷ்கோடிச் செய்தே. 34

மாதுரி யத்தமிழ் வாசக மருளும்
மணிவா சகர்புகழார்
ஆதி சிதம்பர மீதென அவனிகொ
ளருளா டற்பதியா

ஓது நலந்திக ளுத்தர மங்கையி
னுற்றிறை யருள் பெற்றே
சேது விடைப்பயில் தீர்த்த நலம்பெறு
யாத்திரை நிறைவுறுமால். 35

**வேறு**

தீர்த்தமாண் பிங்ங னாகத் திகழ்வுறு மிராம லிங்க
மூர்த்திவாழ் நிலையா யோங்கும் முதுகலைத் தடம்பொற் கோயில்
நேர்த்தியுஞ் சிற்ப நோன்மைத் திறங்களும் பிறவு மான
சீர்த்திக ளாம வற்றிற் சிறிதுரைத் திடுதுங் கேண்மின். 36

அக்கினி தீர்த்த முன்னா அடிபதி னெட்டு யர்ந்து
பக்கமோ ரிரண்டும் பல்கிப் படுத்தபா வனையின் வைகும்
மிக்கொளிர் வெள்ளைப் பள்ளை விடையின் கெம் பீர மொன்றே
நக்கரா மிராம நாதர் கோயில்நா கரிக மோதும். 37

பாரதத் தியல் மாண் பாகப் பகர்வரு கருங்கற் சிற்பப்
பேரமர் நுட்ப மெல்லாம் பிறங்கவோ ரிடத்தி னுய்த்துச்
சீரமர் திருப்பணிக்குச் சிறந்தமா திரிவைத் தென்னப்
பாரமர்ந் துவந்து மெச்சிப் பாராட்ட நிலவுங் கோயில். 38

மாறுகண் டிடவொன் றின்றி மாநிலத் துயரிக் கோயில்
வீறுகெம் பீரத் தோற்றம் வெளிநின்று காண்பார் கண்ணில்
கூறுசீ ருபான மீதார் கபோதகண் டப்பாங் கான்று
மீதுறு விமான பஞ்ச ரங்கள்நல் விருந்து செய்யும். 39

உன்னத கருங்கற் றூணத் துருவமை யாளிச் சென்னி
தன்மிசைப் பின்கா லூன்றித் தாவிமேல் நோக்குஞ் சிங்கப்
பொன்னமர் போதி கைப்பாற் பொலியுமுத் தரகெம் பீரம்
முன்னுறு வார்ப்பிணிக்கும் மோஹனப் புதுமை யென்னாம். 40

ஐந்தடிக் குறட்டின் மீதி லணியிரு நிரையி னோங்கி
முந்துமுப் பிராகா ரத்தும் மூன்றுபத் தடியு யர்ந்து
நந்துசீர்க் கருங்கற் றூண்கள் முழுவதும் நாடிக் காணிற்
சிந்தனைத் தியக்கம் நேர்ந்து சிரஞ்சுழன் றிடலோ வாதால். 41

முப்பெரும் பிராகா ரத்துள் மூன்றாவ தாம தன்கண்
அப்பெரும் அணிவொட் டித்தூண் ஆயிரத் திருநூ றென்ப

இப்பிரா கார நீளம் அடியொரெண் ணூற தாகத்
தப்பறு மகலம் ஆறு நூற்தாம் அன்றி யேயும். 42

முன்னுறு துணிவின் மூச்சுத் திணறநின் றிதுச மைத்தார்
என்னரென் றெண்ணி யெல்லா வுலகத்துச் சிற்பர் தாமும்
முன்னுற நின்று நோக்கி மூக்கினில் விரல்வைத் துள்கி
இன்னதொன் றெங்கு மில்லை இலையென விதத்தல் காண்டும். 44

சீர்மிகு தமிழ்ப்பண் பாட்டிற் சிற்பவெளன் னத்ய மாண்பும்
தேருமம் மாண்பு முற்றுஞ் சிவன்கோயிற் பணியொன் றுக்கே
ஆருமவ் வடைவும் யாரும் ஐயப்பா டின்றித் தேற
நீருலா முலகில் நித்த சாட்சியாய் நிலவு மிஃதே. 45

இத்தகு சீரின் மல்கி யிலகிரா மேஸ்வ ரந்தான்
சுத்த வெண் சுதையுண் டோங்கிச் சூழ்புற மதில கட்டுள்
சித்திர மண்ட பங்கள் திகழ்பிரா கார மூன்றும்
வைத்துள பரப்போ ரீரெட் டேக்கராம் விரிவிற் றாமால். 46

முதற் பிரா காரந் தன்னில் மூலவர் கோயின் மாடே
பதத்திரு வளிக்கு மம்மை பர்வத வர்த்தி னிக்கும்
கதத்திழி கங்கைக் காசி விசுவநாதனுக்கும் முத்தி
விதத்திரு நல்கு மம்மை விசாலாட்சி தனக்கு மாக. 47

ஆசிலா விமானப் பொற்போ டருங்கலைச் சிற்ப நுட்பத்
தேசினால் மிகுந்து தெய்வத் திருவொருங் கமைய வோங்கிக்
காசிரா மேஸ்வ ரம்மென் கருதுகோள் நினைவி னீடப்
பேசுமா லயங்கள் நான்கும் பெருங்கவின் பொலிய வைகும். 48

சாலுநற் சிற்ப நூல்சொல் சந்தாரா வகையி னான்ற
மூலவ ரிராம நாதர் கருவறை மீதிட் டோங்கி
மேலுயர் துவித ளத்து விமானத்துக் கருமை கூட்டுஞ்
சாலபஞ் சரத்தின் இன்பத் தனியழ குகக்கும் வையம். 49

மேம்படு கவர்ச்சி பொங்கும் விசாலாட்சி கோயில் சிற்பர்
தாம்புகழ் பதபந் தஞ்சார் பதுமமே குமுத மாதி
யாம்பல வற்றி னோடு வியாழசித் திரவ ரிக்கண்
நாம்புகல் தகைய வல்லா நலம்பல பொலிய நிற்கும். 50

ஆதிமூ லவர்தங் கோயி லனுப்புமண் டபம்பொற் கொப்புக்
காதம ரம்மை கோயிற் கல்யாண மண்ட பம்நற்
சேதுமா பதிப்பேர் சான்ற திருமகிழ் மண்ட பம்மென்
றோதியோ வாந லஞ்சேர் மண்டப மனேக மங்கண். 51

இத்தனை வளமும் வாய்ந்த எழில் கொளா லயத்து வாயில்
நத்துசீர் மேன்மே லேற நவதளங் கொண்டு யர்ந்து
பத்துறழ் பன்னி ரண்டோ டாறடி யுயர்வி னோங்கி
எத்திசை யோருங் காண இராஜகோ புரநேர் நிற்கும். 52

இராஜகோ புரத்துச் சிக்கண் ஏறிநின் றிடுவார் கண்ணில்
உராவுசீ ரீழக் கோயிற் கோபுர மொக்கத் தோன்றும்
பராவுசீ ரீழ மாவைக் கோபுர நின்று காண்பார்க்
கிராமவீஸ் வரத்து ராஜ கோபுரந் தோன்று மாலோ. 53

இவ்வகை யீழ நாட்டுக் கிடமிக அணித் தாய் மன்னும்
அவ்வகைச் சார்பி னன்றோ ஆதியி லீழ மன்னர்
தெவ்வியல் போர்க்களத்துச் செழியர்க்குத் துணையா யெய்தி
அவ்வவ காலந் தோறும் அங்கமர் விருப்பின் வைகி. 54

கோணமா மலைக்க ருங்கற் பாளங்கள் கொடுசென் றுய்த்துப்
பேணுமா தரவின் ராம நாதனார் கோயில் வையங்
காணுகற் பணிபெற் றோங்கிக் கவினுறத் திருத்தி யங்கண்
ஏனுயர் நிபந்தந் தாமும் இயற்றிமேம் படுத்தா ரென்ப. 55

சகவரு ஷத்து மேவும் சகசிர சதவெல் லைக்கண்
இகமறி யீழ மன்னன் இசைமிகு நிஜங்க மல்லன்
தகவுறப் பணிசெய் திட்ட சம்பவக் குறிப்போ டோர்கல்
நிகரில் சீர் நந்தி முன்னால் நிலவிடக் காண்டு மின்றும். 56

இவ்விரா மேச்ச ரத்தை இயல்கெழுப் பண்டு தொட்டுச்
செவ்விய செழியர் தங்கீழ்ச் சிற்றர சுரிமை பூண்ட
தெவ்விய லடருஞ் சீர்த்திச் சிங்கையா ரியர்க ளாவோர்
பவ்விய முறையிற் போற்றிப் பாதுகாத் தளித்தா ரென்றும். 57

சீர்திகழ் நலத்தச் சிங்கை யாரியர் தமுளோர் சாரார்
ஏர்மிகு வட வீ ழத்தும் இறைமையாற் றியவக் காலம்
சேர்முனைத் தொடர்பு பேணித் திருப்பணி புரிந்தா ரென்றும்
பேர்மிகு சரித்திரத்துப் பிறங்குமோர் வாய்மை யுண்டால். 58

இத்திற மிராம நாத வீச்சரம் பரிபா லித்த
மெய்த்திறற் சிங்கை யார்யர் மரபொழிந் தழிந்த வந்நாள்
அத்தகை யோர்தஞ் சேனா பதிகளாம் மறக்கு லத்தோர்
இத்தலப் புகழார் சேது விறைமைமேற் கொள்வா ராகி. 59.

தேயத்து ளுயர்ந்த மேன்மைத் தென்னாடு பின்னா ளாண்ட
நாயக்க மன்னர் தம்பால் நல்விருத் திகள்ப டைத்தே
வீயக்கா மனைச்செ குத்தான் விளங்கிரா மேச்ச ரத்தை
நேயக்கா தலினா லோம்பி நிகழ்கின்றா ரின்று காறும். 60

**வேறு**

கோதறுசீர் நாயக்கர் குலமும் வலு விழந்தபின்னை
ஏதிலர்கைப் புகாதோம்பி இறைவரிரா மேச்சரஞ்சேர்
சேதுநில முழுவதினும் இவராணை வீறியதால்
சேதுபதி விருதிவர்க்குச் சிறப்புரிமை யாயினதே. 61

இராமநா தன்புகழில் இரண்டறவே கலந்தொளிரும்
இராமபிரான் புகழிருக்க இவ்விருவர் புகழினிலும்
விராவிநின்று விளங்குமிவர் மெய்ப்புகழும் புகழாகப்
பராவியுல கேத்திடுசீர் பயின்றதிரா மேச்சரமே. 62

வாழையடி வாழையென மருவுமிவர் குலமரபில்
நாளிதுகாறும் வந்தோர் நம்பனிரா மேச்சரனைக்
கேளிருஞ்சுற் றமுமாகக் கெழுதகைநண் பொடுபேணி
நீளுலகு கண்டுவக்க நிலவுவரித் தலத்தினிலே. 63

நாட்டுவளந் தொகுத்தமைத்து நம்பனிரா மேச்சரற்கும்
தோட்டுமலர்ச் சுரிகுழலார் பருவதவர்த் தினிதனக்கும்
வேட்டவர மெலாமருளும் விசுவநா தனுக்குமுயர்
வீட்டுநெறித் தவமருள்சீர் விசாலாட்சி யம்மைக்கும். 64

தங்கப்பொற் கிரீடங்கள் சரடுசரப் பளிவகைகள்
துங்கமணிக் கவசங்கள் தொகைவகையாய்ப் படைத்தமைத்தும்
மங்கலமார் வாகனயானந் துவஜஸ் தம்பமெலாம்
தங்க வெள்ளித் தகடுகளால் தகதகக்கச் செய்தமைத்தும். 65

பிராகாரந் தொறுமுருவிற் பெரியமணி மண்டபங்கள்
பராவார்வத் தொடுபடைத்தும் பண்புறுநண் புறவொளிர

இராவாரம் பள்ளியறைக் கிராமேசர் எழுந்தருள்கால்
விராவன்பிற் றங்கப்பொற் றீவர்த்தி தாம்பிடித்தும். 66

முரசமொடு கொடிகுடைவாள் சேனைபடை வளமுள்ள
அரசருமாய்த் தொண்டருமாய் அன்பருமாய் அடியருமாய்
விரசு புகழ்ச் சேதுபதி வேந்தர் செயும் பணிவிரும்பிப்
பரசுபுக ழிராமேசர் பயில்வரிரா மேச்சரத்தே. 67

பண்டுதொட்டே பாரதத்துப் பண்பார்நே பாளமன்னர்
கொண்டுவந்தி ராமேசற் கபிஷேகித் திடுதங்கம்
எண்டகுசீர் வெள்ளிகடல் முத்தெடுப்பார் தருமிறைகள்
மண்டுபெரு வளந்தேங்கி வரவின்மேல் வரவுமிக. 68

காலசைத்துக் குவிகுவிப்பக் காணுமிடந் தோறுமுயர்
வாலியவெண் மணற்குன்று வரிசைகளுங் கடலோரம்
ஆலியவெண் டாழைகளு மலங்கரிரா மேச்சரத்தில்
நீலகண்டத் திராமேசர் நிறைசெல்வச் சீமானாய். 69

தண்டுதழுக் குடனிருந்து சார்தருவார்க் கெலாமூல
பண்டாரம் வழங்குநிலை பாவிமுகத் திருகண்கள்
கண்டார வொண்ணாதே கருமியா மொருநாவால்
விண்டார வொண்ணாதே மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும். 70

சிற்றுருவிற் பெருமுதலாய்ச் சிறந்தரக நவமணிகள்
துற்றுமிளிர் பதக்கவகைச் சுடரொளியில் ராமேசர்
நெற்றியணி பவுண்பட்ட நிறையொளியுங் கலந்திலகப்
பெற்றிலகும் பேரழகிற் பிறக்குமின்பந் துறக்கவின்பம். 71

திருவுறுமிவ் விராமலிங்கப் பிரபாவத் தீர்ப்புண்டு
மருவுசிவ லிங்கமங்கு மற்றுளவும் பலபலவால்
உருவுமலி யுலகுபுகழ் சோதிலிங்கம் முந்நான்கில்
ஒருவிலிங்க மொடுபுகழார் சகசிரலிங் கமுமங்ஙன். 72

இன்னவா றேற்றமொடு தோற்றமிகு மிராமேசர்
வன்னவா யிதழ்நோவ வளர்காழிப் பிள்ளைமுனஞ்
சொன்னபதி கத்தகத்துஞ் சொல்லரசர் வாக்ககத்தும்
மன்னிவீற் றிருக்குமெழில் வாக்கியல்நேர் வாராதால். 73

**வேறு**

கற்கோயிற் கலைமாண் ராமேச் சரந்தெத்தை கடவு ளார்க்குச்
சொற்கோயில் புனைய ஞானத் தொன்முது புலவோ ராக
முற்கோலி வருமிம் மேலோர் மொழிவழி யிராம நாதர்
சிற்கோல மாண்பும் ராமன் திருமலி சீருங் காண்டும். 74

நம்பர்சீ ரிராம நாதர் ஞானமும் பொருளு மான
சம்பவ மதுவு மன்னோர் ஒருவரே பலராஞ் சீரும்
கொம்பன இடையாள் கொங்கை முயங்கியும் முனியா மாறும்
உம்பரே றூர்த்துத் தாமே யூர்ப்பிச்சைக் குழலும் பாங்கும். 75

அலைவளர் கங்கை யாளை ஆடகச் சடைக்க ரந்து
மலைவளர் நங்னக பாட, மகிழ்நட மாடு மாறும்
தலைவளர் கோல மாலை தழங்கிடத் துலங்கும் பொற்பும்
இலைவளர் தாழை விம்மு மிராமேச மரசாள் சீரும். 76

இராவணன் தவறுஞ் செம்ம லிராமன்மே தகவும் ராமேஸ்
வராவதா ரத்தி னான்ற வரலாறும் மற்று மெல்லாம்
பராவுபண்ணிசையிற் பாடி இராமேசர் மகிமைத் தீந்தேன்
தராதலம் பருகத் தந்தார் சம்பந்த மூர்த்தி தாமே. 77

செஞ்சடை யெந்தை பாலே சேர்மட நெஞ்ச மேயென்
நெஞ்சறி வுறூஉவு மாங்கண் நேசமிக் கன்பினாலே
உஞ்சிட நினைமி னென்னு முபதேச வுரையு மாங்கண்
வெஞ்சமண் கடந்த வாக்கின் வேந்தர்சொல் வாய்மை யுள்ளே. 78

ஊனமர் பிணியி னோடு முளவுயிர்ப் பிணிகள் நீங்கத்
தேனமர் கொன்றை யார்தந் திருவருள் வரத்துஞ் செல்வ
ஞானசம் பந்தப் பிள்ளை நாவலா ரூராள் நம்பி
ஆனவிவ் விராமே சஞ்சென் றாஸ்ரயித் திருந்த காலை. 79

திரைகள் முத்தால்வ ணங்குந் திருவிரா மேச்ச ரம்நேர்
குரைகட லெதிர்க ரைக்கண் குலவுமா தோட்டச் சீர்மை
விரைநெடு நீர்ப்பா லாவி விளக்கங்கே தீச்சரத்தான்
உரைசெறி தொன்மை மேன்மை உணர்ந்துநற் பதிகஞ் செய்தார். 80

**வேறு**

ஞான மும்பொரு ளாய நன்மையி ராம நாதர்சந்நிதிக்கணே
ஞான சம்பந்தர் நம்பி கேதீச நாதற் போற்றுமிவ் வாய்மைதான்

ஆன வித்தல மிரண்டி னுக்குள அநாதி ஐக்கிய மளவிடும்.
மான தண்டமெ னாறி லாவிடும் வண்ண மெண்ணுமிவ் வையமே. 81

மிக்கொழுந்துயரலை நெடுங்கா மிரும ருங்கினுங் கோலிமெய்ப்
பக்வ முற்றுயர் பாக்கு நீரிணை பாதக் ஷாலனப் பணி செய
இக்கரைக்கணு மக்கரைக்கணு மிலகு மீச்சுர மிரண்டு நற்
சொக்க நல்லெழி லீழ நாட்டவர் தொழுதுய் பேற்றினில் வழுவுறார். 82

கேது வீச்சர நாத னாரிலக் கிழத்தி யாரருட் கௌரிதான்
தீது தீருங்கே தார நின்றுகி ளர்ந்து வந்திரா மேச்சரத்
தாத ரத்தினி லங்கு வைகிப்பன் னாள்க டந்தன்பு கூர்சிவ
தாதர் வேண்டக்கே தீச்ச ரத்துறு தகவு முணருமித் தரணியே. 83

மன்னு மந்திரக் கிரியை மேற்கொளு மாறி லீழநற் சைவர்கள்
முன்னி யற்றுசங்கற்ப வாசகந் தோறுஞ் சேதுமத் யேயெனும்
அன்ன சொற்றவறாது பேணிடு மதுவுங் கொண்டுற நோக்கிடின்
இன்ன தீழத்துக் கின்றி யேயமை யாமை அங்கையா மலகமாம். 84

தீர்த்த மேதலம் மூர்த்தி யாகுமிம் முத்தி றத்தினும் ஏர்பெறும்
கீர்த்தி யாலுயர் சேது மத்தியத் தியலு மேன்மைகி ளந்தனம்
சீர்த்த சேதுகே தீச்ச ரத்திடைச் செறியு நண்பினி லுறவுபூண்
மாத்த வத்துமா தேவ டிகளார் வாய்மை மேலினிச் சாற்றுவாம். 85

**சேதுமத்திய மஹிமை யுரைத்த படலம் முற்றும்.**
**ஆகத் திருவிருத்தம். 86.**

## இரண்டாவது
## மாதேவடிகள் காட்சிப் படலம்

செந்த மிழ்த்திரு நாட்டின்றென் கீழ்த்திசை
எந்தை யார்மகிழ் ராமேச் சரத்தயல்
கந்த மாதனம் என்றிட நின்றதோர்
சந்த வாசந் தவழ்தடங் குன்றரோ. 1

முந்தை யேழ்பனை நாட்டைத்துண் டாடியுள்
ளுந்து சிந்துவைப் பந்தனத் துள்ளிட
வந்த ராகவன் பாத பரிசத்தால்
நந்து சீர்மைய தாங்கந்த மாதனம். 2

இந்து சேகரன் வாழ்மலை யென்றருள்
நந்து மப்பர் நவில் திருத் தாண்டகம்
முந்த முன்னுரி மைதந்தங் கோதுமக்
கந்த மாதன மேன்மைக் களவென்னாம். 3

சீல மேவு சிவாகமஞ் செப்புமக்
கோல மேவு சிவன்வாழ் மகேந்திரப்
பால தாகுமி தேலிதன் பாங்கினில்
மேலு மென்கொல் விளம்பிட லாவதே. 4

சோர நிட்டுரச் சூரன்பாற் றூதுசெல்
வீர பாகவன் வீரம கேந்திரஞ்
சார வூக்கிடு தாள்விசைக் கீடுசால்
தீர மிக்க சிலம்பிதன் பாங்கெலாம். 5

வேத வைதிக வாய்மையின் நோன்மைசால்
சாதனைத் திறத் தோங்கு தவமுறு
போத ஞானப் புனிதர்பல் லாயிரர்
நீதி மாதவர் நித்தலும் நீங்கலார். 6

நாத மார்தரு சாம ரசமதாய்
வேதம் யாவும் விளைந்திடு மூலமாம்
ஆதி மந்திர மோமென் றுணர்ந்துநன்
கோது மாண்புறு முத்கீத வித்தையும். 7

எங்கு மெல்லாஞ் சிவனென யாவதுஞ்
சங்கை யின்றியே தஜ்ஜலா னிக்கணே
இங்கு சாதனை யாற்று மியல்பினிற்
றங்கு மாண்புள சாண்டில்ய வித்தையும். 8

காட்சி மேவும் உலகொளி யாவுக்கும்
பூட்சி யாயவற் றுண்ணின் றொளிர்சுடர்
ஆட்சி பூண்டெ மகத்து மொளிர் தெய்வ
சாட்சி யாகுந் தனியொளி யாவதும். 9

ஆர்த்தி கூருள் ஆகாச மீதினிற்
சீர்த்து நிற்குமத் திவ்ய ஒளியினிற்
கூர்த்தி டும்மிர வும்பகலாகநேர்
பார்த்தி ருக்கும் பரஞ்சோதி வித்தையும். 10

**வேறு**

உணர்வினை மேற்கொண் டுய்க்கும் உத்கீத சாமர்த் யத்தால்
அணரிய ஆன்ம சத்தி ஆங்குயர் சிரசிற் சேர
இணரொளிக் கதிர்கான் றங்ங னெழுசிவ சூர்யற் கண்டு
புணர்மது கோஷ மாகப் பொழியுமின் பத்து மூழ்கி. 11

அம்மதுக் கோஷஞ் சிந்தும் ஆனந்த வாரி யிங்ஙன்
செம்மலர் தோறுந் தேனாய்த் திகழ்நதி தோறும் நீராய்
இம்முறை சிருஷ்டி முற்றும் விம்முமா றுற்று நோக்கி
மம்மர்தீ ரின்பந் தேக்கி மலர்வதோர் மதுவித் தையும். 12

காணவுங் கேட்க வும்முட் கருதவும் படுவ வான
ஆணமில் பொருள்கள் யாவு மற்பமா யழிவ வென்றும்
காணலா கேட்க லாவுட் கருதலா வவைதா மென்றும்
மாணுறு மஹத்தா யென்றும் மன்னிடு மென்றுந் தேர்ந்தே. 13

அற்பத்தி லறிவு செல்லா தடக்கியம் மஹத்தின் சீர்மை
விற்பத்தி யுளர்பாற் றேர்ந்து மேற்றம கண்கா துள்ளம்
சிற்பரன் சிவனை யல்லாற் கண்டு கேட் டுள்கா வாற்றிற்
பொற்புற்ற பூமா வித்தை தானுமற் றின்னு மின்னும். 14

பேசுமிச் சரீர மோபி ரமபுர மிதன்கண் மேவுங்
காசிலா இதய புண்ட ரீகமோர் சிற்றில் ஆங்கண்
ஆசிலா காச மொன்றுண் டஃதறி வதற்கா மென்றும்
தேசிக ருணர்த்தத் தேர்ந்து தேடற்கு மாமஃ தென்றும். 15

தேசுறு பிண்டத் தொன்று சிதம்பர மாமஃ தென்றும்
ஆசறு மண்டத் தொன்று சிதம்பரத் தாடு நாதன்
காசறு காட்சி யங்குங் காணலா மென்றுந் தேர்ந்து
சாதனை புரிவ தான தகரவித் தையுமுன் னாக. 16

வேதோப நிஷதங் கண்ட வியத்தகு மக்ஷி வித்தை
தீதிலா காச வித்தை திகழுங்கா யத்ரி வித்தை
ஓதுபஞ் சாக்னி வித்தை யாதியா யுள்ள யாவுஞ்
சாதனை செய்து தேக்குந் தனிப்பெருந் தேஜஸ் மிக்கார். 17

இங்கிவர் தேஜ ஸோர்பால் இவர்கள் சூழ் குழுக்கள் தோறும்
பொங்குமோ மத்தீக் கான்று பொலிந்தெழு தேஜ ஸோர்பாற்
கங்குலும் பகல தாக்கக் கந்தமா தனமெஞ் ஞான்றும்
துங்கமார் சுவர்க்க சோதி துளும்பிடத் தழங்கு மாலோ. 18

இத்திற முனிவர்க் கெல்லா மிறைவராந் தலைமைப் பாடுஞ்
சுத்தவை திகப்பண் பாட்டிற் சுடரொளித் திருவும் மிக்கார்
மெத்துசா தனைக்கு வித்தும் விளைவுமாஞ் சிவனை யென்றுங்
கைத்தலா மலக மாகக் கண்டு கண் டுவக்கு நீரார். 19

நெஞ்சின்மிக் கதுவாய் சோர்ந்து நிற்கினு மிருக்கும் போதும்
தஞ்சென உலவும் போதும் தனித்தெவர்க் காணும் போதும்
மஞ்செனக் கண்ணீர் வார மாதேவா மாதே வாவென்
றஞ்சலி யஸ்த ராகி அழைத்தழைத் துவக்கு மன்பார். 20

மாதேவ ஒலிய றாப்பொன் வாயிதழ்ப் பொலிவுங் கஞ்சப்
போதேயும் விழிகள் காலுங் கருணைப்ர வாகச் சீரும்
மீதேறிச் சுரக்கு மான்ம விளக்கமூர் வதனப் பொற்பும்
மாதேவ அடிகள் பாலின் வசீகரா சயங்க ளான. 21

இத்திறத் தடிகள் ஓர்கால் இராமநா தரைநி னைந்து
மைத்திகழ் குடுமிக் கந்த மாதனச் சாரல் நீங்கிக்
கைத்தலத் தண்டு தீர்த்த கெண்டிகை யிரண்டுந் தாங்கி
மெய்த்ததா பதர்கள் சூழ மேவு தென் றிசைப்பெயர்ந்தார். 22

போதமா ரடிக ளங்ஙன் போந்துழிப் புவன மீக்கூ
றேதமி லேகா ராமத் திருஷிக ளெதிர்ந்து போற்றிப்
பாதபூ சனைக்கா வேண்டிப் பரிந்திரந் திடுத லோடும்
ஆதரித் தவர்கள் வைகும் ஆசிலாச் சிரமம் புக்கார். 23

பூசனை விதிகள் முற்றிப் போ துவிஸ் ராமம் பண்ணி
ஆசகல் போதக் காட்சி அடிகளார் வைகும் போதில்
கூசிமுன் மொழிந்து கும்பிட் டவரெதி ரமர்ந்தா ரன்பின்
ஆசிலா சிராமம் மேவு மாரிடர் சிஷ்ய ரெல்லாம். 24

அங்கவர் சமுகந் தன்னி லடிகளா ருளத்து விஞ்சிப்
பொங்குகா ருணிய மோங்கப் புரிந்தவர் தம்மை நோக்கி
இங்கு நும் பாலினே துஞ் ஜிஜ்ஞாசை யுளகொ லென்னச்
செங்கரங் குவித்துத் தாழ்ந்து சிஷ்யர்தா முரைக்க லுற்றார். 25

**வேறு**

அஜாவிதிமெய் யறிஞர் சொலு மான்மபிர மங்கள்
சஜாதீய மோவலது விஜாதீய மோவென்

றுசாவுமெமக் குதன் விளக்க மொரே மயக்க மாமால்
விசாரமிகு முபநிடதத் துண்மை நிலை யென்னோ. 26

என்றிடலு மினிதுமகிழ்ந் தடிகளவர்க் கருளி
நன்றிது நும் ஜிஜ்ஞாசை நானிலமுள் ளளவும்
துன்றுமறி வாராய்ச்சித் துறையிலிதன் மஹிமை
நின்று நில வுவதொன்றா மென்றுமேற் கூறும். 27

தபமுனிவர் தம துசிஷ்யர் சங்கையற உரைக்கும்
உபநிஷத முழுவதினு முசாவு பொருள் மூன்றாம்
அபகதபாப் மத்வமுள பிரமமதொன் றாகும்
உபதை தரு பாசமொன் றுழலுமுயி ரொன்றாம். 28

அளவிலா வுபநிஷத மவற்று ளொருசார
உளவிவைமூன் றினையுமொரோ ரளவினிற்றா னுரைக்கும்
அளவறிந்தவ் வவசீடர்க் குணர்த்து முறை யென்றொன்
றுளத்தனா லவைகளெலா மவ்வகையி லான. 29

மற்றொருசா ருப நிஷத்கள் மருவுறுமுப் பொருளும்
உற்று மிக நுணுக்கமாய் உசாவிவிரித் துரைக்கும்
அற்றவையு மவ்வவசீ டர்க்கேற்கு மளவாம்
இற்றிதனா லெலாவற்றையு மிகலற நன் குணர்ந்து. 30

பாதரா யணமுனிவர் பண்புற நன் காய்ந்தே
ஓதலுறு வார் தங்கட் கிம் மூன்றில் விளக்க
பேதமுறா வகை செய்த பிரம சூத் திரமே
தீதறுநும் ஜிஜ்ஞாசை தெளிவிக்க வலதாம். 31

பிரமசூத் திரமுற்றும் பிரமான்ம வியல்பே
பரவலா மொருவகையிற் பட்டொளிரு மேனும்
விரவுமுத லத்தியா யத்தொன்றி ரண்டின்
வரவுதரு சூத்திர மொர் மூன்றுமவ் வகையே. 32

பகர்வு றுமவ் வத்தியா யத்தொன்று மூன்றில்
இகமறியு மிரண்டு நான் காறுமா யியைந்து
நிகரவுள சூத்திரமோ ராறும்பிர மான்மந்
தகவுறவே அத்யந்த விஜாதீய மெனுமால். 33

**வேறு**

உருவிலுறு மிதயகுகை யதனுளீ ரான்மா
உவையிரண்டும் வேறுவே றியலவா மெனலும்
மருவு றுகண் ணுவசாகை மாத்யந்தன சாகை
மற்ற தனுக் காதார மாயமையு நிலையும்
பொருவறுமெய்ம் முத்தர்தமா லெய்தவுள தெனினும்
புகலுமொரு பேதத்வம் பேசியுள தெனலும்
சுருதிசுவே தாஸ்வரத்தே துல்லியமாய்த் தோன்றச்
சொல்லிய தங்கதற்கொர்சான் றாகின்ற நிலையும். 34

சொன்னதென்ன சுவேதாஸ்வ தரத்தெனிலஃதுரைப்போம்
சொல்லுமொரே தருவினிலே சுபர்ணமிரண் டவற்றில்
மன்னுமுயி ரெனும் பறவை மற்றது போல் தானும்
மன்னாட்சி புரியகிலா மையின் மயங்கித் தயரும்
பின்னரது பக்குவத்தாற் பெருமகிழ்வுற் றணைந்து
பிரமத்தின் மஹிமையினைத் தானெய்துங் காலை
என்னுமொரு சுவடுமின்றித் துயரமெலாம் நீங்கி
இன்புற்று மற்ற தனை யிரசித்துற் றிருக்கும். 35

இந்த உரு வகக்கதையே யிரண்டுந்தாந் தம்மில்
என்றும் வே றாமாற்றை இனிதினெடுத் துரைக்கும்
முந்தவிது முண்டகத்தும் மொழியப்பட் டுண்டால்
மூதறிவி னாற்றெரியிற் பிரமமே ஆண்டான்
அந்தவிரண் டாவ துயிர் அஃதடிமை அஃதும்
அருள் பிரம மஹிமையுறினதிலின்ப நுகரும்
இந்தவகை யாலிரண்டும் விஜா தீய மாமால்
இதைவிடவும் இன்னுமென்ன வேண்டுமிதை விளக்க. 36

ஆன்மாவென் றேதனியா யொருபொருளங் கில்லை
அதுபிரம பரிணாமத் தோரம்ச மென்றல்
போன் மாறாட்டம் மெதற்குச் சஜா தீய மெனற்கோ
புகல் சுருதி வாக்கியமே அதுபொருளன் றென்னும்
ஏனதிகம் 'த்வாவஜௌ ' எனும் வார்த்தை யொன்றே
இயல்பிரமம் போலுயிரும் பிறவாத தென்னும்
ஆன தனால் பிறவாத இருபொருளி லொன்றாம்
ஆன்மாவெவ் வாற்றானுஞ் சஜாதீய மலவே. 37

நஜாயதே ம்ரியதே வாவிபச்சித் தென்னும்
நற்சுருதி யொன்றுளது நாடுமது தானும்
அஜாவென்னு மதற்கொப்ப தாமஃது மன்றி
ஆரணத்துக் கடோபநிஷத் ததன் சுருதி யொன்றில்
நித்யோ நித்யானாஞ்சே தனச்சேத னானாம்
என நிலவு மதுதானு மிவைவேறே யெனலால்
சஜாதீய நோக்கதனைத் தவிர்த்தலே கடனாம்
தகவினால் விஜாதீய மெனக்கோடல் முறையாம். 38

பிரமத்தைப் பசுபதியென் றிடுவதேன் மற்றும்
பேசுமிரண் டையுமிணைத்துப் பராபரமென் பதுமேன்
பிரதகாத் மாபிரே ரிதாவென்ப துவுமேன்
பெரியதிது வெனும் பொருளிற் பிரமம்நிற் பதுமேன்
திரனுற்ற சிந்தைதனில் தேர்ந்துணர்வீ ராயின்
திவ்யசுதந் தர நிலையில் திகழ்பிரம மதுவும்
உரனற்றுத் தான் நிலைக்கப் பிரமத்தின் சகாயம்
உறுமுயிரும் ஜாதியாற் பிறி துபிறி தாமே. 39

என்றிங்ங னுரைத்து மகிழ்ந் திருந்தருளு மடிகட்
கெதிர் நின்று தாபதர்க ளிருகைசிர மேற்றி
இன்றிங்ங னெழுந்தருளப் பெற்றதுவு மெம்பால்
இருந்தமயல் தெளிவித்திங் குப நிஷத வாய்மை
நன்றெங்க ளுட்புகுத்து நயப்பாடுங் காணின்
நாமல்ல யாதொன்றும் நம்மளவி னல்ல
சென்றெங்கும் நின்றியலுஞ் சிவன் செயலே யாதல்
தேர்ந்தனமென் றுரைத்தவர்தஞ் சேவடியிற் றாழ்ந்தார். 40

**வேறு**

ஏகா ராமத் திருடிகள் பரிவுற இயல்விடை கொண்டேகி
வாகா ருந்தவ வாழ்முத லாவரு மாதே வடிகள்தாம்
மோகா ரித்தெழு கடலலை யெற்ற முகிழ்த்திடு கைதைமிசை
ஒகா ரத்துரு வார்வளை பயிலுமி ராமேச் சரம்புக்கார். 41

சேடா நாழித் திரைமிசை யலைதரு சித்திர பவனம்போல்
நீடார் சீர்த்திச் சேதுபு ரீசர் நிதிவைநி கே தனம்போல்
தேடா ரருமைச் சிவமாணிக்கத் திருவார் பேடகம்போல்
பீடார் செல்வப் பெருமை பிறங்குமி ராமேச் சரமதனில். 42

வாரும் வெண்மண லொளியின் மலர்தரு மற்றப் பதியெல்லை
சேருந் திசைதொறு நேருற் றெதிர்சிவ தீர்த்தந் தொறுமாடி
நீருற் றுறுசுக மாவன மெய்யேர் நிமலனருட்சுகமாச்
சாரும் பண்புறு மதுவித் தைப்பய னார்வுற் றுவந்தனரே. 43

சென்றா டும்புன லன்றியு மங்குள திரைகடல் கழியெல்லாம்
குன்றா டும் மண லெல்லாம் வாரிக் குவிக்கும் வளியெல்லாம்
நன்றா டுங்கனை முகிலெழு மின்னின் நகைக்கும் புனமெல்லாம்
நின்றா டுந்திரு விராமே சர்பொழி நீடருள் மூழ்கினரே. 44

போதே புரையுங் கண்ணொளி மலரப் பொன்னொளிர் திருமேனி
மீதே யலையும் மின்னொளி மலர விரிசிகை யொளிமலரத்
தாதேய் வனசத் தண்மலர் வதனத் தவவொளி கொளமலரும்
மாதே வடிகள் வனப்பிற் சொக்கி மலர்ந்தது வையகமே. 45

ஏர்கெழு பேரரு ளியல் கெழு மிராம நாதர் திருக்கோயில்
பேர் கெழு மடிகள் புகுதலு மங்குள பித்துறு மன்பரெலாம்
கார்கெழு முகில்காண் கலிமயி லினமாய்க் களித்து மகிழ்ந்தாடி
நீர்கெழு விழியின ராயுள முருகிட நின்றெதிர் போற்றினரே. 46

உள்புற முக நன் கூழ்த்துக் கனிவுறு மொண் தீங் கனியெனவே
தெள்ளுறு தவக்களை கசிவுற வங்கண் திகழ்மா தேவடிகள்
நள்ளுற நாற்புற முஞ் சூழ்ந் துறுமந் நலத்தகு மடியரெலாம்
உள்ளுற வுய்த்தவர் உடையவர் சந்நிதி தொழும்பரி வெதிர்காண்பார். 47

எங்குள யாவினு மிவர்காண் சிவப்பொலி வெவ்வண மவ்வணமே
இங்குள ராம விலிங்க மதன் கணு மேய்ந்திடக் காண்பரிசால்
மங்கலில் வைதிக வாய்மை கிளர் தவ மாதே வடிகள் தாம்
பொங்குய ருணர்விற் புளகித மெழ நனி போற்றி மலர்ந்தனரே. 48

ஏற்றுயர் வலவனி ராமேச் சரனையிவ் வண்ண மிறைஞ்சுதலும்
போற்றுறு மன்னவ ருள்ளுறு முணர்விற் புதிதோ ருத்வேகந்
தோற்றிட வாய் விண் டித்தல மேன்மை துலக்கிடு பதிகமருள்
போற்றுயர் சிவஞா னிகள் சிலர் விரைவிற் போதுவ ரீங்கென்றார். 49

அம்மொழி யெழுபொழு தாகா சத்திழி அணிகிளர் மலர்மழையொன்
றிம்மொழி வாய்மை யெனுந்துணி பதனையி யம்பா தியம்பலுமே
செம்மைகொள் சீர்த்தி யிராமேச் சரத்துச் சீரடி யார்போற்றி
எம்மை யுயக்கொள வடிகளெஞ் ஞான்று மிவண்வாழ்ந் தருள்கவென. 50

அன்பினிற் போற்றி யிரந்திட வருள் கூ ரடிகளு மருள்செய்வார்
என்செய லாவதென் றெதுவுமி லாமையி னிங்குநும் வேண்டுதலுந்
தன்செய லாவிறை வன்கொளு மேலது சாத்திய மாங்கண்டீர்
மன்செய லாலது மாறிடு மெனினும் மனங்கவ லீரென்றே. 51

இங்கிது கேட்டவர் தாமு மிறைஞ்சி யியாவையு மிறையருளெள்
றங்கது பேணி யிருந்தன ரடிகளு மங்கயல் பிரியாமே
திங்க ளூரிஞ்சு செழுங்கோ புரவெழில் திகழ்ரா மேச்சரத்தே
தங்கி யிருந்தளர் தவநெறி மாண்பு தழைந்திட அவரிடையே. 52

**வேறு**

இத்திற மடிகள் வைக இவர் தவ கீர்த்தி விஞ்சி
எத்திசை யினும்ப ராவு மெல்வையில் ஈழ நாட்டு
மெத்துறு மாதோட் டத்து வியன் பெரும் பாலா விச்சேர்
உத்தம தபோவனஞ்சார் உறுவர்க்கு மெட்டிற் றன்றே. 53

கேட்டவர் தவமாண் புன்னிக் கிளர்ந்தெழு முளத்த ராகி
ஈட்டமார் முனிவர் தம்மிற் சங்கற்ப நியமம் பண்ணி
வாட்டுமெய்த் தவத்தினொன்றி வைதிகாக் கினிவ ளர்த்து
வேட்டன ரிருந்தா ரந்த மெய்த்தவர் வரவை யுன்னி. 54

ஆவஹ ஜாதவேதோ மாதேவ அடிகள் நம்பால்
மேவிட விரைவி னென்று மெய்ம்மை கொ ளிருக்குக் கூறி
ஓவிலா திரக்குஞ் சீலத் துறுவர்தம் பரிவும் பண்பும்
பாவகன் மூல மேகிப் பராபரன் செவிச்சார் பாக. 55

ஊடுபுக் குறுவர் தங்க ளுள மெலா மொக்க மேவி
நாடுமவ் வவர்நோக் கன்னோர் நயக்குமற் றவர்பா லொன்றிக்
கூடுமா றருளும் நாதன் கூட்டிவைத் திடவு ணர்ந்து
பீடுசே ரடிகளின்னோர் பிரார்த்தனைக் கிசைவா ரானார். 56

ஆசின் மெய்த் தவத்தோ ரெய்து மஷ்டமா சித்தி தம்முன்
பேசுறு பிராகாம் யப்பேர்ப் பெருஞ்சித்தி கைதந் துய்ப்ப
மாசறு காட்சி யையர் வான்வழிக் கொண்டு தாவிப்
பாசடை பொதுளுஞ் சோலைப் பாலாவிக் கரைக்க ணுற்றார். 57

ஐயரங் கணையு மெல்வை அவர்தமா னனப்பொற் சோதி
உய்தவத் தொன்று மெய்ம்மை யுறுவர்தந் தபோவ னத்து

மெய்யொளிப் படலை கால விரைந்தது தெரிந்த ணைந்தார்
செய்தவம் பலித்த மெய்ம்மைச் சீலத்தால் மகிழு நீரார். 58

பாலாவிப் பெருக்குக் காணூஉப் பராபரன் கருணை வெள்ளம்
மேலாக நிரந்து பொங்கும் நினைவெழக் கணந்தா ழாமே
மாலாகி யதனுண் மூழ்க வந்தணைந் தாரும் மூழ்கி
நீலாருங் களக்கௌ ரீசர் நிலவுமா லயத்துப் புக்கார். 59

ஆலயந் தொழுது புக்கார்க் கருண்மிகு கேதீ சன்றன்
சீலமா ரடியர் கூட்டஞ் சிறப்புரைத் தருகு சூழ
ஏலுநண் பருளி யன்னா ரொடுவலம் வந்து கும்பிட்
டாலுமன் பமைதி கூர அளவளா வின்பத் தாழ்ந்தார். 60

பாராவுசீர்க் கௌரி பாகன் பதிகே தீச் சரமா மிஃதும்
இராமவீச் சரமுந் தம்மில் எதிர்புதிர் நிலைய வாக
உராவுபே ராழி யோரத் துப்பாலிப் பால வாகி
விராவுசீர் வியந்து போற்றி விம்மித வசத்த ராகி. 61

மனாதிகட் கெட்டா மற்றிவ் விருதல மகிமை பொங்க
அனாதிதொட் டிங்கு மங்கு மருமறை விதியின் வாழ்ந்து
சனாதன தர்மம் பேணுந் தபசிகள் தொடர்பு மல்கத்
தனாதருள் வசத்தா லுய்த்துச் சங்கரன் புரக்கு மாறும். 62

காசிரா மேஸ்வ ரஞ்சீர்க் கயிலைகே தீச்ச ரம்மென்
ஆசிலா நினைவுக் காட்சி அருஞான யோக நோக்கிற்
பேசுறு மாஞ்ஞை மேலாம் பிரமரந் திரப்பாற் றென்றும்
தேசுலா மடிகள் மற்றோர் செவியமு தாக வார்க்க. 63

ஆர்ந்தபே ருவகை துள்ள அற்புதச் சுவைமீக் கூர
நேர்ந்தமெய்ப் புளக மார நீர் துளி கண்ண ராகிச்
சார்ந்தணை தகுவ ரெல்லாந் தம்வச மிழந்து போற்றித்
தேர்ந்தசீ ரடிகள் தம் முன் தெண்டனிட் டிருகை கூப்பி. 64

சென்றிருட் குகையுங் கானுந் தேடியும் நாட வொண்ணா
நன்றுறு ஞான யோக நற்றவப் பெரும நம்பால்
இன்றுவந் தருளப் பெற்ற இதற்குக்கைம் மாற தாக
ஒன்றறி கில்லோ மென்ன உவந்துரைத் துறுவ ரெல்லாம். 65

ஏதந்தீ ரடிகாள் ஈங்கு யாஞ் செய்முற் றவப்பே றாகப்
பாதந்தந் தாள வந்த பராபர னனையீர் ஈங்கெம்
ஆதரந் தீரச் சின்னாள் அளியமாச் சிரமம் வைகப்
போதரற் கிசைக வென்று புரிந்தழைத் துடன் கொண் டுற்றார். 66

**வேறு**

சிந்து யமுனை நர்மதையென் தெய்வீ கநதிப் பாங்கெங்கும்
முந்தை நாளின் மல்கியசீர் முனிவோ ராச்ர மங்கள் போல்
நந்து பாலா விப்பாங்கர் நாடு மாச்ர மத்தாங்கண்
அந்தண்மையினார் தாபதர்கள் அடிகளாரைக் கொடுபுக்கார். 67

தருப்பைக் கூரைக் குற்றி லின்கண் சாணந் தழங்க நிலம்நீவி
அருப்பு மலரும் பொரியுந் தூஉய் அணியார் சரணத் துரிவிரித்த
இருக்கை யமர வைத்திறைஞ்சி இருக்கோ டர்க்ய பாத்தியங்கள்
பெருக்கு மன்பாற் கொடுத்தவர் தம் பிரீதிக் கருக மாயினரால். 68

தருப்பை முடிபோற் குழைக்குடுமி தயங்கு மான்றோல் திகழ்பூணூல்
இருக்கு மணக்குஞ் செங்கனிவாய் இள மென் மாமைப் பொன்மேனி
செருக்குஞ் சினமு மிலாவதனச் சிறுமா ணவகர் குழாந்தோறும்
பெருக்கும் பதபா டந்தொட்டுத் தொடருங் கனபா டத்திசையும். 69

நித்த நியமத் தழலோம்பும் நெறிதேர் திறலார் தாபதர்கள்
தத்து முகத்துத் தண்ணளிபோற் றழங்கு நெய்யா குதிவேட்க
மெத்து மெழிலார் வான்பரப்பின் விரிந்து விம்மிச் செறிந்துலவி
நத்து வாச நறும்புகையும் நயமா ருணர்வு விருந்தாக. 70

வேத விதிசா ருபாசனையின் வெவ்வே றியலா ரநுபவத்திற்
போத மகிழ்ந்து சுகித்திருக்கும் பொருவில் மாதே வடிகள் தம்
பாத நீழ லமர்ந்தவர் பாற் பழுத்துச் செழித்த உ.பாசனையின்
தீதில் விளக்கப் புதிருண்ணச் செறிவுற் றணைந்தார் தாபதர்கள். 71

அணையுந் திருவார் தாபதர்கட் கடிக ளாரின் முகமளித்தே
துணையென் றிருந்துந் தோன்றலிலாப் பிரமந் தோன்று சிருஷ்டி தொறும்
இணையில் இதய வெளியினிலும் இலங்கு மாறு கண்டுயற்காம்
இணையார் வேதோ பாசனைகள் இருந்த வண்ணம் விரித்துரைப்பார். 72

சான்றோர் தழுவுஞ் சாண்டில்ய வித்தை தகர வித்தையென
ஏன்ற வித்தை யவ்விரண்டில் இன்னே முதலாவது வித்தைத்

தோன்று மஹிமை விரித்துரைத்தும் சுசமா ஹிதரா யிருங்களென
ஆன்ற அமைவி னவரிருப்ப அடிகள் தாமு மருள்கின்றார். 73

என்று மெங்கு மிங்குள்ள வஸ்து பேதம் யாவினிலும்
நின்று வியாபித் திடுபவன மொன்றுண் டறிவீர் அவ்வணமே
துன்று பவன மதனிடத்துந் துருவி யுண்ணின் றியங்கிமிக
நன்று புரியும் பிரமமுண்மை ஞானக் காட்சி யநுபவமாம். 74

பவன மதனி னுண்ணின்றோர் பரிச வுணர்வு தருவதுபோல்
தவனன் நீர் விண் மண்ணினின்று தாபந் தண்மை யொலிமணமென்
றவவற் றுணர்வு நல்குவதும் ஆகும் பிரமத் தின்குறிக்கோள்
இவிவற் றுள்ளாந் தனையறிவித் தியாங்க ளுய்தற் பொருட்டாமே. 75

விரவும் விரிவுக் காட்சியிலார் பரிசம் பவனப் பண்பதனால்
பரிசம் பவன மேதருமென் பாரங்கத வீண் படிற்றுரையே
பிரமம் ஒன்றே சித்தேனைப் பிறவுள்ள வெலாஞ் சடமெனலால்
மருவுஞ் சடங்க ளுணர்வு தரல் மலடி மகப்பேற் றுடனொக்கும். 76

பகரைம் புலனே வாழ்வினுக்குப் பரமோ பகார மெனத்தந்தந்
நிகரில் புலனூ டுற்றிருந்து நேடிக் காண நெறியுமருள்
பகவன் தானே படைத்தெவையும் உயிர்ப்பித் தீற்றில் துடைத்தொழிக்கும்
தகவு தெரிக்கும் மந்திரமாந் தஜ்ஜலானி யறிதல் தகும். 77

தத்சொற் குறிக்கும் பிரமமதைச் சாரும் ஜகரம் சிருஷ்டிசொலும்
ஒத்துற் றிசைக்கும் லகர்மே ஒடுக்கம் பேசும் ஊங்குறனி
தித்து வனிதா னுயிர்ப்புரைக்கும் தேர்சொற் பொருளீ தாயிடலால்
மெத்து தஜ்ஜலானிமந்த்ர விளக்க மினிது துலக்கமாம். 78

பேசும் பிரம மதற்கென்றும் பிராணன் சரீரம் சோதியுரு
தேஜஸ் மயமா மதற்கென்றுந் திடசங் கற்பம் சத்கியமே
ஆசி லாகா சம்போலு மதிநுண் வியாபி யதனிலையை
மாசின் மனசால் தியானிக்கு மதற்கு நிகர்மற் றெதுவு மின்றாம். 79

போந்தூ டறுக்கப் பரபரக்கும் புலனிச் சையெலாம் புறத்தொதுக்கிச்
சாந்த முற்ற சமுத்திரம்போற் றணிந்து வாயு விலா அறையிற்
காந்து தீபச் சுடர் நிங்கு மாறு நிற்குங் கனிமனத்தால்
நேர்ந்து நினையுஞ் சாதனைக்குப் பிரமம் நேர்பட் டேயாமால். 80

யாவன் எவ்வா றெதுநினைவன் அவனவ் வாறே யதுவாவன்
மேவு முலகில் வேட்டுவன்கொள் புழுவும் வேட்டுவ னேயாமால்
தேவ உபாச னையின் வலுவால் தேவ பாவம் வலுவடையும்
ஆவ வெல்லா மறியவலார்க் கைய மிதிலின் றிதன் மேலும் 81

மாறில் மனசங் கற்பமதே மனித உருவுந் திருவுமென்ப
தேறு முண்மை யிதற்கிணங்கச் சிறிது மோர்சஞ் சலமின்றி
ஈறில் பிரமப் பண்பதனை யிருந்து தியானித் ததிலுறைவார்
பேறு பிரமப் பேறாதல் பிசகா தென்றும் பிசகாதால். 82

சுருதி யுரைக்கு மிவ்வித்தை சொன்ன ரிஷிசாண் டில்யர்கை
வருதி யான மிதன் சார்பில் வாய்க்கும் பலன்கை மேற்கண்டு
கரும தேகம் விட்டதும்யான் கலப்பன் பிரம மென நம்மைக்
கருதி யுரைத்த வுறுதியுரை கருத்திற் கொண்மின் என்றமைந்தார். 83

உரைசே ருபதே சாமிர்த மிது கேட் டுருகி அடிகளார்
விரைசேர் பாத மலர்வணங்கி மேலும் வேண்டுந் தாபதர்கள்
தரைசேர் தரு நான் முகன்னையீர் தகர வித்தை தானுமிது
வரையாங் கேட்க வாய்த்ததிலை வழங்கி யருள்க வென்றிடலும். 84

மண்டு கருணை மீக்கூர மாதே வடிகள் உவந்துரைப்பார்
அண்ட பிண்ட சமத்துவப்பாங் கதனை நினைமின் நங்கண்ணிற்
கண்ட இந்த வெளியுலகு கருது மண்ட மாமதன்நேர்
கொண்ட பிரதியமைவாகக் கூறுஞ் சரீரம் பிண்டமாம். 85

பேரா ரண்ட மதுபோலப் பிண்ட மிதுவும் பிரமபுரத்
தேரார் நாமம் பெற்றிலகும் இதன்பாற் பிரம மிருந்தொளிருஞ்
சீரார் சிறுமாளிகையொன்று செந்தா மரையின் வடிவினதாய்
சார்வார் தஹர புண்டரிக வீடென் றுரைக்குந் தகவினதாம். 86

அண்ட மதனில் அனைவருங்காண் தூலா காச மதனூடே
அண்டற் கரிதாஞ் சூக்மாகா சமுமொன் றுளதாம் அதன்வடிவாக்
கண்ட சூக்மா காச மொன்று கருது மிதயத் தலத்தூடே உண்ட
தறியு முரவோர்கள் உயர்வார் தஹரா காசமென்ப. 87

தஹரா காசப் பெயர் தமிழில் நுண்ண காச மாயதுதான்
பகர வருசிற் றம்பலமாம் பாங்கு மீங்குக் காண்பினிதே
பகருந் தஹரா காசமிதிற் பண்டு மின்று மென்றுமுள
தகர முதல்போ லனைத்தினுக்கும் முதலாம் பிரம் மதுதேர்மின். 88

நுகரற் கினி தாம் மற்றதனை நுணுகி நுழைந்து தேடுமினோ
குஹா வடிவா மிதயத்துட் குனிந்து நுழைந்து காண்மினோ
நிகர மற்றொன் றிலாவதனை நேடிக் காண்புற் றொன்றுமினோ
மகர வேலை யுலகீர்மற் றகனை யொன்றி உபாசிமினோ. 89

என்றே வேத சுருதியெழுந் திசைக்கு மதன்சீர் நாமுரைக்க
நன்றே கேண்மின் நாடுமது நவிலு மணுக்கட் குள்ளணுவாம்
தின்றார் தினையின் பிளவினிலுஞ் சிறிதாஞ் சிறிதிற் சிறிதுமாம்
என்றா லும்மிவ் வுலகிலுள எதுவொன் றினிலும் பெரிதஃதே. 90

சிறிதாங் கைக்கண் ணாடிக்குள் தெளிவாஞ் சூழல் முழுதும்போல்
பெரிதா மண்ட வெளியுமதிற் பிறங்கும் அனைத்தும் பேசுறுமிச்
சிறிதா மாகா சத்தினுளே தெளியக் காணும் வாய்ப்புமுள
தறிவா ரதனை யறிகுவரே லகில மறிந்த பேற்றினராம். 91

அறிதற் கரிதா மனைத்தினுளு மறிதற் கரிதா மேனுமஃதே
அறியத் தகுவ யாவினுளு மறியத் தகுவ தாவதுமாம்
அறியத் தகுவ திதையறிந்தோ னனைத்து மறிந்தா னாயெவையும்
அறிவித் தறியும் பிரமத்துக் கயலா காமே யேகனுமாம். 92

அறியித் தஹரா காசத்தை அருளா ரின்ப வெளியென்றும்
செறியு மிதுசிற் பரமான வியோம மென்றுஞ் சேர்ந்தவரைப்
பிறிய விடாத காந்தமென்றும் பிரம கர்ப்பக் கிருஹமென்றும்
துரிய வெளிதூ வெளியென்றுஞ் சொல்வார் புகழ்க்கோ ரெல்லையின்றாம். 93

இதயந் தனக்கோ ரிராசமஹா தானி யாகக் கொண்டாங்கே
பதியுந் தஹரா காசத்திற் பயிலும் பிரமம் அதுதானும்
உதயாஸ் தமன நிலையிலதாய் ஒளியே தானாம் உருவின தாய்
அதியாத் மிகமாய் அபகதபாப் மத்வ மாகும் அருமையதாம். 94

நெறியார் பிரம சரியத்தால் நேரைம் புலனை யகத்தடக்கிச்
செறிவார் வைராக் கியத் தொன்றிச் சிந்தை யொருக்கித் தியானிக்க
அறிவா ரிந்தப் பிரமமதை அறிந்தாற் பின்னை யகவிருளிற்
செறியார் மீண்டும் பிரமமே சேருஞ் செறிவாய்ச் செறிந்திருப்பர். 95

இவ்வா றிந்த உபாசனையி லியைந்து சித்தி பெற்றுள்ளோர்
எவ்வா றெதனை விரும்பிடினு மவ்வா றதனை யடைந்துவப்பர்
செவ்வா றாகும் வீட்டுலகச் சீரார் பேறும் அவர்க்கவர்தாம்
இவ்வா முலகிற் சுதந்திரர்மற் றெவ்வா முலகுஞ் சுதந்திரரே. 96

என்றங் குரைத்து மாதேவ அடிக ளின்பார்ந் தினிதிருப்ப
ஒன்றுங் கருத்தின வருரைத்த உரைகேட் டுணர்வார் தாபதர்கள்
நின்று போற்றி யடி பணிந்தார் நேய மீக்கூ ரடிகளார்
அன்று போல வேயென்றும் அன்னோர்க் கருளி யமைந்திருந்தார். 97

**வேறு**

பண்டொருகால் ஒருநால்வர்ப் பத நிழலின் கீழமர்த்தி
எண்டகு சீர் ஞானோப தேசமருள் கேதீசர்
மண்டு மரு ளாலணைந்து வாய்மைமிகு தாபதர்கள்
கொண்டுணர உபதேசங் கொடுத்தருள் மா தேவடிகள். 98

கொய்கதிர்ச்செஞ் சாலிவிளை கோதறுசீர் மாதோட்டத்
தெய்விகச்சீர் விளைவாகும் திருக்கேதீச் சரங்கண்ட
வைதிகச்செந் திருவினுக்கு வாய்த்த மண வாளனென
உய்தருஞாலம் மகிழ உலாவிவரு மந்நாளில். 99

திவமணக்குஞ் செழுங்கீர்த்தித் திருக்கேதீச் சரமெங்கும்
அவமணக்கும் வாழ்வரங்கில் ஆத்மிக வேட் கைமணக்கப்
பவமணக்கும் மனவரங்கிற் பகர்வருசா தனை மணக்கத்
தவமணத்திற் சிவமணக்குந் தனித்திருமே லோங்கியதால். 100

மங்காச்சீர் விழாத்தோறுந் தங்காதல் வசத்தாழ்ந்து
செங்காவித் தாபதர்கள் சிவனடியா ருடன்கலந்து
பொங்கார்வத் தொடுபாடிக் கூத்தாடிக் களிபயிலுஞ்
சிங்கார வனப்பெழிலிற் றிகழ்கேதீச் சரமந்நாள். 101

கைதழுவு மான் மழுமைக் களமருவு கேதீசர்
பொய்தழுவு வார்த்தழுவாப் புண்ணியரா லயமதுதான்
மெய்தழுவுஞ் சைவமிது வைதிகசை வப்பெயரால்
எய்து வழக் குற்றமைக்கோ ரெடுத்துக்காட் டாகியதே. 102

மாதிலகு பாகர்மகிழ் வைதிகசை வத்தினுக்கோர்
ஊதியமா மெனவிலகு முயர் திருமா தேவரொர்கால்
கோதிலருட் கேதீசர் சந்நிதிமுன் கொள நின்றே
தீதில் நலத் தகரவுபா சனையின்கண் திளைத்திருந்தார். 103

ஓதுமிந்தத் தகரவித்தை யுறைப்பினில் நின் றிடுமவருக்
கேதுகழி வேதெதிர்வென் றிலா தனைத்து நிகழ்காலப்

போது தனி லொருங்குணரும் புதிர் நிகழக் கேதுதலத்
தீது நிகழ்ந் திடவுளதென் றெதிர் நிகழ்வு சிலமொழிவார். 104

**வேறு**

இருதய குகையி னூடே இயங்குணர் வனைத்து மொன்றக்
கருதரு பிரம மாங்கே கண்டுணர் களிப்பு நீட
உருவுரோ மாஞ்ச மூர ஒப்பிலுத் வேகந் தோன்றப்
பொருவரு பக்தி கூரப் போற்றிசைத் துரைமேற் கொள்வார். 105

ஜெயஜெய ராம நாத ஜெயஜெய கௌரி பாக
ஜெயஜெய கேது தொட்டா ஜெயஜெய கும்ப யோனி
ஜெயஜெய ராவணேசன் ஜெயஜெய ராமச் சந்த்ரன்
ஜெயஜெய சேது மத்யம் ஜெய ஜெய சிவப்ர பாவம். 106

ஜெயஜெய ஈழ ராஷ்ட்ரம் ஜெய ஜெய மாதோட் டச்சீர்
ஜெயஜெய க்ஷர கங்கா ஜெயஜெய கேது வீச்ரம்
ஜெயஜெய சைவ சீலம் ஜெயஜெய விபூதி கண்டி
ஜெயஜெய சிவப்ர பாவம் ஜெயஜெய சிவப்ர பாவம். 107

**வேறு**

சேது மத்திய தான முற்றொளிர் தேவன் சீரிரா மேச்சரன்
மாது பர்வத வர்த்னி பாகனார் மாண்பு லா மருள் வெல்கவே
தீது தீர்தவ சீலர் பரிசமார் தீர மாந்தி தீரம்வாழ்
கேது வீச்சரன் கௌரி நாயகி கேண்மை கூரருள் வெல்கவே. 108

ஆதி மாபரன் அம்மை பொன் முலை அமுத ளித்துமுன் னாளுஞ்சீர்
வேத மாமுதல் வித்த கத்திரு நீற்று வாய்மைநி கழ்த்துமெய்ப்
போத ஞானசம் பந்தன் பொற்புலாம் புகலி வாய்வரு புண்ணியன்
நீதி யார்ங்வ நெறிந டத்து செங் கோல்செலுத்திமுன் நிலவு நாள். 109

மாத ரங்கயற் கண்ணி பாகனார் மதுரை மாநகர்ச் சொக்கனார்
ஆதரத்தினி லம்மை மங்கையர்க்கரசி மந்திரி யழைப்பினால்
போத மற்றுழல் சமணர் புன்னெறி போக்கி நன்னெறி நாட்டுமா
வாத மீதினில் வென்று மன்னவன் மாறன் கூனுநிமிர்த்தபின். 110

சேது நாட்டமர் ராம நாதர்பர் வதவ ருத்தனி சேவடி
மீது மிக்கெழு மன்பு முற்கொள மெய்ந்நெறிப்படு மாறனும்
மாது மானிமந் திரிகுலச்சிறை மாறில் பத்தர்கு ழாத்தொடும்
போது வாரிராமேச்ச ரத்தமர் பொழுது முழுதருள் நல்குவான். 111

பொன்னு லாவுபா லாவி மேல்கரைப் பொலியு மெந்தைகே தீச்சரன்
தன்னு டைத்திரு வுருமுன் தோற்றிடத் தானு ணர்ந்துதீந் தமிழிசை
பன்னி யோதிடும் பதிகத் தீந்தமிழ் பாநு சந்திரர் உளவரை
மன்னு மாதோட்ட மாண்பு மேம்பட மாநிலத்தினில் மன்னுமே. 112

அதுநி கழ்ந்துசின் னாளி லாலால சுந்த ரன்வெண்ணெய் நல்லூரிற்
புதுவி தத்தினி லாட் கொளப்பெறு புண்ணியன் நம்பி நாவலன்
குதுக லித்தணை கோதை சீர்ப்பெரு மாளு டனாங்கண் மருவுநாள்
மதும துத்தசம் பந்தன் பண்சுவை மறக்க லாப்பெரு வேட்கையான். 113

கேது வீச்சரன் கேழில் நம்பிசீர் கெழுமு நினைவினில் வெண்டிரை
மோதி மீதெழுஞ் சீத நீர்கொள்பா லாவி சூழ்பொழில் வளமெலாம்
மாது கௌரிகோன் வனப்பெ லாங்கொள்ள மருவு காட்சிதந் திடுதலும்
ஓது செந்தமிழ்ப் பதில் மும்முல குவப்ப நின்றிசை கொழிக்குமால். 114

இன்ன வாருமிரு பதிக மோடுமிக் கேறு சீர்கொள்கே தீச்சரம்
மன்னு பேரெழில்கள் மல்கி மேன்மையுற மருவு மாளுமைநன் மாண்புறு
தென்னர் மன்னவர்கள் சேர்ந்திம் மாந்தையொரு தெய்வ ராஜதா னிக்களை
துன்ன நன்னகர் வகுப்பர் கோயிலுந் தெய்வி கக்களைமிக் கோங்கிட. 115

என்ன வேண்டுவன அன்ன யாவையும் இருந்தி யற்றியம் மன்னவர்
மன்னு மாதோட்ட மின்னு மீழந்து மருவொ ருபராஜ தானியாய்
முன்னிருந்த நிலை பின்னு மாகிமிகு பொற்பு மிக்கொளிர வைப்பரென்
றின்ன கூறுதலு மோது கோயின்மணி நாத மேவியதி யல்பினே. 116

மருவு சீரடிகள் வாய்மை கேட்டயலின் மன்னு சீரடியர் துன்னிநின்
றொருபெருங்கட லுயர்ந்தெழுந்ததென உவகை பொங்கியெழ உள்ளெலாம்
உருகு மன்பலைய உடல் சிலிர்த்து நின் றோகை மாநடன மாடினார்
இருடி சத்தமரு மீது கேதுபதி யின்ன ருள்வளமென் றேத்தினார். 117

**வேறு**

திருவளர் கேது வீச்ரந் திகழ்வுறத் தெய்வத் தூதாய்
வருமிம்மா தேவர் தாமும் மருவுமித் தலத்தை வாழ்த்தித்
திருவருள் நெறியே சென்று சேது நாட் டுற்றா ரிப்பால்
அருளுசம் பந்தர் பாட லரும் பொருள் சிந்தை செய்வாம். 118

**மாதேவடிகள் காட்சிப் படலம் முற்றும்.**
**ஆகத் திருவிருத்தம் 204.**

## மூன்றாவது
## சீகாழிப்பிள்ளை திருப்பதிகப் படலம்

திருமலி சிவனை யந்நாட் சேய்மைச்சுட் டாகக் கொண்டே
அருமறை யதுவென் றோதிற் றாகவு மன்னா னீதோ
இரு விசும் பொளிர நிற்கும் இவனென அண்மைச் சுட்டாற்
பெருமைசால் பிரம தீர்த்தப் பாங்குநின் றுணர்த்துந் தீரன். 1

உருவிலை சிவனுக் கிந்த உலகத்தார் தத்தம் பாங்கில்
கருதுறு கற்பி தத்தா னாமது வெதுவு முண்மை
உருவென லாகா தென்போர் உற்றுணர்ந் துள்ளந் தேற
அருமைசா லங்காங் கிச்சீ ரவையெலா மிலங்கக் காட்டி. 2

தோடமர் செவியன் தூய பிறையமர் சடையன் தீவெங்
காடமர் நீறு துன்றுங் கனலம ருருவன் தர்மப்
பீடமர் விடையன் என்றே பேசிய செம்மல் காழி
நாடமர் செல்வன் ஞான சம்பந்தன் நமையா ளண்ணல். 3

அண்ணலார் சைவத் துண்மை யகிலமும் பரந்து வீற
உண்ணிலா வுவகை துள்ள ஒருமூன்றாண் டகவைப் போதே
வண்ணவாய்ப் பவளம் விண்டு வருமமு தத்தீம் பாணிப்
பண்ணிசை வளம் பெருக்கிப் பக்தகோ டிகள்தற் சூழ. 4

நெடுக் கொடு குறுக்கும் நேடி யாவருங் காணா மூலை
முடுக்குமாஞ் சிவதலங்கள் முன்னவ னருள்முன் னுய்ப்ப
மிடுக்கொரு படர்ந்து வேத வைதிக பாஹ்ய ராகித்
தடுக்கொடு துவரு டுக்குஞ் சமயத்தோர் செயலி ழுப்ப. 5

கைவலான் முடுக்கி விட்ட கடுவிசைப் பம்ப ரம்போல்
வையக மெல்லாஞ் சூழ்ந்து வாதினால் மருவா ருட்கச்
செய்யுமற் புதத்தால் வென்று திசையெலாந் தெய்வச் சைவ
மெய்ந்நிலை வீறுற் றோங்க விளக்குமெய்ஞ் ஞான பானு. 6

வினைத் துய ரொன்றி னாற்பல் விதத்துயிர் யாவும் மாயும்
இனைத்தவன் றுயர்கள் போக்க இறைவனுண் டெனல் பொய் யிங்ஙன்
எனைத்துமொன் றவனா லென்று முயிர்களெய் துவது மின்றாம்
வினைப்பலன் தானே வந்து மேவிடும் விதிப்போன் வேண்டா. 7

என்றொரு விதண்டா வாத மெங்கணும் பரப்பி வையம்
நன்றறி யாமை மாய்க்கும் நயமிலார் தங்கண் முன்னே
பொன்றின ருயிர்பெற்றுய்யும் புதுமையு மெம்மா னீசன்
தன்றிரு வருளா னேருந் தகவுணர்த் திடுமு தாரன். 8

சிவனருள் சிவிகை யூர்ந்து சிவனருள் பந்தர் நீழற்
சிவனருள் விருது சூழத் திசைதொறுங் குழுமிக் காண்பார்
சிவனெனும் பேரே தேராச் சிறுவர்க்குங் கருத்திற் கண்ணிற்
சிவனெனு முணர்வுங் காட்சித் திறமுநின் றிலக வைத்தோன். 9

ஆறறி வுயிர்க்குப் போல ஐந்து நான் கிரண்டு மூன்றொன்
றாரறி வுயிர்கள் பாலும் அந்தர்யா மித்து வத்தாற்
சீரமர் சிவம் விளங்கல் திருவோத்தூர்ப் பனைகள் சார்பிற்
பாரமர்ந் தினிது காணப் பண்ணுமெம் புண்ய மூர்த்தி. 10

அருமறை யந்த ணாளர் தமக்குமௌ பாச னத்தில்
மருவுறு மைந்தெ முத்தே மாண்புயர் மந்த்ர மாமென்
றொருதற்கா முபநயத்தி லுபதேச குரவ ரேற்கப்
பொருவறு முளத்துத் வேகம் பொருந்தப்போ தித்த ஆசான். 11

எஞ்சலின் றனைத்துந் தன்னுள் ஏற்றிட நுங்குந் துங்கப்
புஞ்சமார் சுவாலைப் பத்திப் பொங்கழல் சிவனென் வாயமை
மஞ்சமர் மாட நல்லூர் மரூஉம்பெரு மணத்திற் காட்டி
உய்ஞ்சுல கீடே றச்செய் ஒருபெருங் குரவ ரேறு. 12

இனைத்தென வகுக்க லாமோ இருநிலத் தெவர்க்கும் பேறாம்
அனைத்து மங் கொருங்கே வாரி வழங்கிநஞ் சைவ மேன்மைக்
கெனைத்துமோர் குறைபா டெந்தக் காலத்து மெய்தா வாறு
வனைத்துவச் சிரலே பஞ்செய் தமைத்தசம் பந்தன் சீரே. 13

தெய்விகச் சைவ நல்லாள் சிவஞான வதியாய் வீறத்
தெய்விகத் தமிழுந் தன்னிற் றிருநெறித் தமிழ்ப்பே ரேறத்
தெய்விகச் சிவன்சீ ராணை செலுத்துசெங் கோலாய் நின்ற
தெய்விகச் சீர்சால் ஞான சம்பந்தன் சீர்த்தி வாழி. 14

அழகென்ப தென்னை யான்ற அற்புத மென்ப தென்னை
பழகுசீ ரினிமை யென்னை பவித்திர மென்ப தென்னை
உளவிவை பொருளி வில்லை யுளத்திலென் றுளநூற் காட்சி
கழறுவ தெல்லாம் பார்க்கிற் கால் வாசி யுண்மை யென்ப. 15

உளத்திலோ உருவி லேயோ உவைதுற்ற விதமற் றென்கொல்
கழறுமி னெனுங்கா லன்னோர் கண்டுகாட் டுவதொன் றில்லை
அளவறு ஞானக் காட்சி யண்ணல்சம் பந்தன் தானே
அழகினி னூற்றைக் கண்டிட் டழகினை யழகாய் விள்ளும். 16

பிருகதா ரணியத் தின்கட் பெட்புறு மனைவி புத்ரர்
இருமுது குரவ ராதி யினியரென் றிருப்ப தெல்லாம்
மருவுமவ் வவர்தம் மாட்சி யானன்று மற்ற வற்றின்
ஒருவிடா திலங்கும் ஆத்மன் ஒருவனா லெனல்போல் வாய்மை. 17

ஞானசம் பந்தர் பாடல் தொறுந்தொறும் நயக்குஞ் செவ்வி
யானவங் கதுகண் டன்றே அருமறை தமிழ்செய் தானென்
றூனமில் காட்சி யாற்கண் டுணர்ந்துமெய் யுரவோ ரெல்லாம்
மானமார் வேத வாயர் என்றவர்ப் போற்றி யுய்ந்தார். 18

சிருட்டியி னம்சந் தோறுஞ் செறிந்தது வதுவாய் நிற்கும்
அருட்டிரு வழகு தானே அவ்வவற் றழகாய் நிற்கும்
பொருட்படு மழகாய்த் தோன்று மதுமதன் விகாச மேயாம்
மருட்படு முலகர்க் கீது வாய்ப்பதன் றென்பர் நூலோர். 19

எப்பொருள் காண்டற் கண்ணும் இயைந்தத னூடாய் நிற்கும்
மெய்ப்பொருள் காண்டல் தானே மேதையென் வாய்மை வீற
ஒப்பில் மெய்ஞ் ஞான முண்ட சம்பந்தர் இயற்கை தோறுஞ்
செப்பிள முலையாள் பங்கன் திருவரு ளெழில் கண் டுய்ந்தார். 20

கப்பிய கனிதேன் பாகைக் கலசத்தோ டருத்தல் மானச்
செப்புறு மியற்கைப் பாங்காம் வருணனைக் கலசத் தோடே
திப்பிய அருளிற் றேங்கித் திகழுழ கெல்லா மொக்க
எப்பரி சினரு முண்ண எடுத்தளித் தருளி னாரே. 21

நண்ணுசீர்த் தலங்க டோறும் நடைவழிப் பாங்கு தோறுந்
தண்ணலர் சோலை வாவி சாறலர் கரும்புக் காடு
வண்ணமார் விசும்பு விண்சோர் மழைமின்ன லாதி தோறும்
அண்ணல்சம் பந்தன் காட்சி அருளின தழகுக் காட்சி. 22

வார்வரைச் சாரன் மேய்ந்து வான்முகின் முழக்க மஞ்சிச்
சேருமண் ணாம லைக்கட் சேதாக்கள் செறியக் காணும்
பேர்கெழு சம்பந் தன்கண் பிரபஞ்ச வாதைக் கஞ்சிச்
சீர்கெழு சிவனைச் சாருஞ் செகத்தியல் பதுவே காணும். 23

தேமாவின் கனிச்சா றான்ற செங்கம லத்தின் வீழ்கால்
நாவாரின் பருளும் பாடல் ஞானசம் பந்தன் காட்சி
ஆமேத பதிசி வற்கே அந்தண ரனலிற் பெய்யும்
ஓமாகு தியினற் காட்சி யுண்மையே காட்டிக் காணும். 24

தென்றல்கால் வருடு மின்பிற் கரும்புகண் வளரு மென்ற
நன்றுகூர் காட்சி தெய்வ நலமிகு திருவை யாற்றில்
கன்றுநல் லுயிர்க ளையாற் றரனருட் பரிச மார்ந்து
நன்றுமின் புற்றி ருக்கும் நலமிகு பேறே காட்டும். 25

வண்டிசை பாடத் தோகை விரிமயில் நடன மாட
மண்டுபேர் மகிழ்வி னோடு மான்கன்று துள்ளு மென்றல்
எண்டகு முயிர்க ளெல்லா மெழிற்றிருக் கேதா ரத்தே
மண்டுபே ரருளின் மூழ்கி மகிழ்ந்துதுள் ளுவது காட்டும். 26

ஒன்றிரண் டலவிப் பாங்கின் உளபல பலவாங் காணின்
நன்றிது தேர்ந்திட் டன்றே ஞானசம் பந்தன் வாக்கிற்
சென்றலர் இயற்கைத் தேசுஞ் சிவபூசைக் கங்க மாகித்
துன்றுமாண் புற்றுச் சைவ தோத்திர மாம்பாங் குற்ற. 27

முத்தமி ழழகு காட்டி முதுதமிழ்க் கனிவு காட்டிப்
பத்திமை மிகுதி காட்டிப் பாவகை பலவுங் காட்டி
வித்தக இசை நுணுக்க விதமெலாம் வியக்கக் காட்டி
நத்துசம் பந்தன் றானே முத்தமிழ் விரக னானான். 28

தொன்றுதொல் காப்பி யந்தொட் டென்றுஞ்செந் தமிழ்நூல் போற்று
நன்றுநா னிலவ ளங்கள் நாகரி கத்தி றங்கள்
ஒன்றொழி யாமற் பேசித் தமிழ் ஞான சம்பந் தன்நான்
என்ற இங் கிவர லால்மற் றெவர் தமிழ்ப் புரவு பூண்டார். 29

இத்தகு விறலார் ஞானத் தெழின்மிகு சம்பந் தன்றான்
உத்தமத் திருவா ரப்ப ருடனெழுந் தருளி யோர்கால்
மெத்து சீர் மறைக்காட் டின்கண் வேதம்பூ சித்துப் பூட்டிப்
பொத்திவைத் திடுக பாடப் பூட்டுவிட் டகலப் பாட. 30

அப்பரை வேண்டித் தான்பின் படைத்திடப் பாடி யாங்கே
செப்பரு மகிழ்வின் வைகித் திருத்திகழ் பாண்டி நாட்டுத்
துப்பிலாச் சமண மாயை தொலைத்திட வேண்டி யாங்கண்
அப்பரைத் தணந்து தாமே அணிகிளர் மதுரை புக்கார். 31

நீற்றொளி மழுங்கி யாங்கண் நிறைசம ணிருள்நெ ருங்கப்
பாற்படு பழுதுக் கஞ்சிப் பதைத்திடு மன்னன் தேவி
கோற்றொடிச் செங்கை மானி குலச்சிறை யிருவர் சீர்நன்
பேற்றுடன் வைகி யாங்கே ஏதிலார் சமணர் மாழ்கி. 32

அன்னவர் மடத்துக் கிட்ட அனற்கொடு வெப்பம் மீப்போய்
மன்னவன் தன்னைச் சார ஏவிப்பின் னதுதான் தீர்த்துப்
பின்னெழு மனல்வா தத்தும் பேர்கெழு புனல்வா தத்தும்
துன்னலார் சமணர் தோற்றுச் சுடர்நுதிச் கழுவிற் றோற்ற. 33

ஆசறு பாண்டி நன்னாட் டடங்கலுஞ் சமண வன்புன்
மாசறத் துடைத்துச் சைவப் பொன்னொளி மலர்வுற் றோங்க
ஈசன தருளால் வாழ்வித் தின்புறு மன்னன் தேவி
நேசமா ரமைச்சர் தாமும் நிறைமகிழ் வொடுதற் சூழ. 34

திருத்தல யாத்ரை மேவித் திருவிரா மேச்ச ரத்து
நிருத்தனார் இராம நாதர் நேயத்தா லீர்ப்புண் டாங்கே
அருத்தியா லணைவுற் றேகி அரிய சீர்ப் பதிகம் பாடித்
திருப்தியோ டுறையும் வைகல் திருவிரா மேச்ச ரர்தாம். 35

செப்பரு நலத்தி னோங்குந் திருக்கேதீச் சரமா தோட்டத்
தொப்பரு விலாச மன்னா ருணர்வினிற் றிகழக் காட்ட
மெய்ப்பொருட் பதிக மொன்று விருதுகுன் றெனவெ டுத்தே
அப்பெரு மன்னன் தேவி அமைச்சர்மூ வருங்கேட் டுய்ய. 36

மன்னர்க்கு மன்ன னாமெம் மாதோட்ட மணியின் பொற்பார்
தொன்மைமேன் மைகளெல் லாமுன் துலங்கிடப் பதிகம் பாடி
நன்னலந் துளும்பு நட்ட ராகப்பண் ணினிற்றந் திட்டார்
அன்னநற் பதிகத் தான்ற அரும்பொருள் துதித்திங் குய்வாம். 37

**வேறு**

விருது குன்றவென் றெம்பிரான் சம்பந்தன்
விளம்புமம் முதற்பாடல்
கருத நின்ற நுண் பொருள்களின் முதல்வதாக்
காண்பது மருவாரூர்
புரமொர் மூன்று மன் றெம்பிரான் முறுவலிற்
பொடிபடுத் திடுவாய்மை
அருமை மேன்மைகள் அறிந்துணர்ந் தடியர்தா
மகமகிழ் குறிப்பிற்றே. 38

தவத்து நற்பெருந் தகவினா லற்றைநாள்
தானவ ரொருமூவர்
புவத்து வந்துரா யுலவிடுந் தீமைகூர்
போரர ணவைமூன்றால்
தவத்து யர்ப்படுத் தகிலமு மழித்திடச்
சங்கர னதுகாணூஉ
அவத்தி றந்தவிர்த் தவர்களீ டேறுமா
றவையழித் தருள் செய்தான். 39

சிவத்த னிப்பரன் திருவிளை யாடலாஞ்
செய்திக ளவையாவும்
பவத்த னித்துயர்ப் படுமுயிர் பிழைத்திடப்
பண்ணுத லென்னுந்தத்
துவத்து நோக்கினிற் றுரிசறக் கண்டிடின்
தொல்லுயிர்ப் பிணித்தொல்காப்
பவத்து ளாழ்த்திடும் பாங்குறு மும்மலப்
பகையழித் திடல்தானாம். 40

இரும்பு வெள்ளிபொன் னரணங்க ளாமென
இயம்புமங் கவைமூன்றும்
அருந்து யர்க்கன்ம மாணவம் மாயையென்
றானவம் மூன்றற்கும்
பொருந்து நற்றிருட் டாந்தங்க ளாவதும்
புகலுமற் றவற்றின்சார்
பிருந்த சீவர்நம் உயிர்களுக் குவமையாம்
பெற்றியுங் காண்பினிதே. 41

இரும்பு போல்வலி தாயிருள் மயத்ததாய்
இறுகிடப் பற்றிக்கொண்
டருந்து யர்தரும் ஆணவ மாங்ஙனே
ஆசைதோன் றிடக்காட்டி
இருந்து மோசஞ்செய் தன்மையார் கன்மமும்
இரசதத் தொப்பாநன்
மருந்த தாய்விளக் கிட்டுப்பின் மயக்கஞ்செய்
மாயையும் பொன்னாமே. 42

தீதார் முப்புரஞ் செறுப்பதற் கண்ணலார்
தேர்ந்தமை சாதனமாம்
மீதார் மேருதான் வியன்முளந் தண்டதா
வெம்பணி குண்டலியாப்

போதார் வெவ்லனல் யோகவக் கினியதாப்
பொருந்துமவ் வகைதேரின்
ஈதோர் யோகலக் ஷியத்திற முலகினர்க்
கெடுத்துக்காட் டியதாமே. 43

மோன மார்சிவ யோகிதன் குண்டலி
முழுங்கழ லெழுப்பித்தண்
டான மேருவை வசப்படுத் ததன்வழி
யோகவெப் பேறவுயிர்
தான மாக்கொளு மாயைமுன் மறைந்திடக்
கன்மமுந் தட்டழிய
மேன ஆணவம் விட்டற விலகுமோர்
விந்தைகாண் பினிதன்றே. 44

மூல ஆத்தும உண்மைகள் வெளிப்பட
மொழிதிரு மூலர்தாம்
ஏல வேபகர்ந் திட்டதோ ருண்மையீ
தெம்பரன் சம்பந்தன்
ஞால மேவுநர் நன்குணர்ந் தானடி
நண்ணியுய்ந் திடுமாறே
பால றாதவாய்ப் பண்ணிசை யாற்றரு
பயனிது தேர்வாமே. 45

இன்னு மிங்கிதன் பாலொன்று கேட்டிடின்
எம்பிரான் கேதீசன்
தன்ன ணைபவர்க் கென்னவுந் தருகுவன்
தருக்குறக் காண்பானேல்
மின்னல் வேகத்தில் விரைந்தவை தவிர்க்குவன்
விருதுகொண் டுழலேன்மின்
என்ன ஈழவர்க் கெடுத்துக்காட் டறிவுரை
இதுவென லழகாமே. 46

மருவு பாட்டிதில் வளர்புகழ்க் காழிமன்
மாண்புறு தமிழ்விரகன்
கருது மென்மொழி யிருதரங் கழறிய
காரண மது தானும்
பெரிது போகம்வேட் பார்களும் ஞானம்வேட்
பார்களு மாயொன்றும்
இருதி றத்தர்க்கு மருளுங்கே தீச்சரன்
இயல்குறித் திடலாமால். 47

இன்னு மோர்குறின் இந்தக்கே தீச்சரம்
இருநிலத் துறவாழ்ந்து
மன்னு காலத்து மற்றது காண்பதோர்
வாய்ப்பிழந் திருப்போர்கட்
கன்னதன் திறம் அருட்பதி கங்கள்கொண்
டாகமப் பிரமாணத்
துன்ன லாவதும் உளதென முன்னமே
உணர்த்திவைத் ததுங்காண்பாம். 48

பாடல் வீணைய ரென்றது பிரளயப்
பட்டொடுங் குலகங்கள்
மீடல் காரண மாகமுன் பவையவை
சென்றுமுற் றொடுங்குறுதற்
கீட மாகிய நாத்தத் துவத்தினை
இயக்குதற் குறிப்பாகச்
சேடர் தாந்தொழு ஞானசம் பந்தர்தாம்
செப்பின ரருளாலே. 49

ஓத லாம்பொரு ளுற்பத்தி தொறுந்தொறும்
ஓசையொன் றுளதாமென்
தீதில் பௌதிகக் காட்சிக்குள் ளியக்கமாந்
தெய்விகக் காட்சியிது
ஆநல் கண்டர னாலல தெதுவுமிங்
காவதில் லெனுமுண்மை
பூத லம்புரிந் தகிலகா ரணனெனு
மவன்நிலை தேர்ந்துயுமால். 50

கேடி லாதகே தீச்சர மெனுமொழி
கிளந்தது மொருகாலம்
பீடி லாதவ ரிடித்தழிக் கினுமது
பிறங்கமீண் டெழுந்தோங்கி
நாடி ஞாலமுற் றணைதர விளங்குமென்
நயப்புரைப் பாங்காகப்
பாடி ஞானசம் பந்தன்முன் னுணர்த்துகை
பகர்ந்திடும் பொற்பாமே. 51

தொழுது கொண்டெழச் சொன்னதே தொழுதெழ
என்றதன் துணிபாமால்
முழுது மாம்பெரு முதல்வனை முழுதுற
நாள்முழு துந்தொழீரேல்

பழுது நும் வினைப் பற்றறற் கொவ்வாது
கண்ணயர் பொழுதிற்போல்
தொழுது கொண்டெழுங் கண்விழி பொழுதினும்
என்றனர் தூவாயர். 52

பெண்ணொர் பாகமும் பிறை தவழ் சடையுமாம்
பெற்றிக ளிரண்டுந்தாம்
அண்ணல் ஆற்றலும் அருளுமங் குணர்த்திடு
மடைவின அஃதான்று
சுண்ணம் பூசுதல் தொல்லுயிர் படுதுயர்
துடைப்பது குறிப்பாக
எண்ணும் பாடுதல் ஆடுதல் ஆனந்த
இயல்பினன் எனல்தோற்றும். 53

அரிய சொத்தெலாம் தங்கையாற் பெற்றுவாழ்
அன்பர்கட் கவைதம்மை
உரிய நல்விதத் துபயோகித் திடுநெறி
உணர்த்தலுந் தங்கடனாப்
பெரிய எம்பெரு மானேன்று கொண்டதே
பிச்சைக் குழலிச்சை
தெரிய இங்கிது செப்பின னாமன்றே
செந்தமிழ்ச் சம்பந்தன். 54

அல்ல தும்மிதன் திறத்தினின் மற்றுமொன்
றறிதகும் மற்றதுதான்
செல்வம் பெற்றுளீர் சிவன் சொத்தஃ துமதெனச்
சிறங்கணித் திடலொவ்வா
தல்லல் நல்குர வாளர்க்கஃ தாக்கினும்
அடிப்படைத் தேவைமட்டில்
எல்ல வர்களும் எளிமைவாழ் வியற்றிடின்
இதமிகும் என்பதுவே. 55

பொடிகொள் மேனியர் பாடலின் விரிதரு
வடிகொள் மூவிலைவேல்
அடிகள் கேதீசர் ஆற்றலாய் நிலவுறும்
ஆதிசத் தியதுதான்
வடிகொள் ஆரணி ஜனனிரோ தயித்திரி
மாண்புறு விரிநிலையில்
படிகொள் யாவுமே படைத்தளித் தழிப்பதோர்
பரிசுதோற் றிடுவதுவாம். 56

முடிகள் சாய்த்தல்தன் முனைப்பற நிற்பதோர்
முழுத்துவப் பணிவாகும்
அடிகள் பேணல்தான் அவன்செய லாலல
தெதுவுமின் றெனுநிலையாம்
வடிகொள் நுண்மதி வள்ளல்சம் பந்தன் சொல்
வாய்மைமற் றிதனாலே
அடிகள் கேதீசன் முன்செலு மன்பர்தாம்
அகந்தையற் றொழுக வென்றார். 57

நல்ல ராற்றவும் பாடலின் நாளிது
வரைதிருக் கேதீசர்
செல்லல் தீர்திருச் சந்நிதி தெரிசித்த
சிங்கி மகன்கேது
தொல்லை நாள் வந்து துதித்தருட் பேறுகொள்
துவஷ்டா அகஸ்தியனார்
நல்ல பண்புகள் ஞாலமிஃ தறிவர
நவின்றனர் சம்பந்தர். 58

பேழை வார்சடைப் பாடலி னெம்மையன்
பிரமபு ரக்கோன்சொல்
மாழை யங்கயற் கண்ணியை இடப்பாலுங்
கங்கையைத் தலைப்பாலும்
வேளை வென்றவெம் பிரான்மகிழ்ந் திருத்திய
விந்தையின் பின்னணியாம்
ஆழ நுண்பொருள் அழகிதஃ தறிதகும்
அமைவுற நோக்கிடினே. 59

ஈங்கார் பெண்மையில் இன்றுபோ லென்றுமே
இயைந்திடும் இருதரப்பாம்
ஆங்கார் சக்தியை அடக்கிவைத் தாள்வதும்
அருட்சத்தி யது தன்னைப்
பாங்கா ரன்பினிற் பரிந்தணைத் திதமுறப்
பராமரித் திடுமதுவும்
நீங்கா அமைதியில் இல்லறம் நிலவுற
நெறிப்படுத் துதல் காண்டும். 60

அன்றி எம்பிரான் விண்ணகம் பிதிரவந்
தார்த்திடு கங்கைதனைத்
தன்றி ருச்சடைப் புன்னுனிப் பனித்துளி
தகச்செறித் திடுமதுவும்

நன்று கூர்மலை மங்கையை இடங்கொள
நாட்டிய அதுதானும்
என்று மிவ்வுல காபத்திற் காத்ததும்
அருளினிற் காத்ததுமாம். 61

ஆங்கு வந்துறும் அருளிய பொருளினர்
ஆவது மெம்பெருமான்
பாங்கு சார் நங்கை பார்ப்பதி மூலமே
பகர்வரு புருஷார்த்தம்
தீங்கு தீர்வரக் கொடுத்தருள் செய்வதோர்
திறங்குறித் திடலாகும்
நீங்க லில்லதோர் நிரந்தர வாழ்வுண்மை
நிகழ்த்திற்றுக் குடிவாழ்க்கை. 62

வாழை யென்றது வாழிந் மாத்மிகம்
வருகனி சிவாநுபவம்
கூழை மந்தியுங் குறிக்கும்பக் வாத்மனைக்
குலவுறு மதனாலே
தாழை பூத்துயர் தண்கடல் மாதோட்டந்
தங்கு நர்க் கின்பகனம்
கேழில் சீர்திருக் கேதீசர் சார்பினிற்
கிடைப்பது நிஜமென்றார். 63

பண்டென் பாடலிற் பாலறா வாயர்தாம்
பராபரன் கேதீசன்
கண்ட நாதனா ரென்றதிவ் வுலகியல்
தோன்று தொல் காலத்தே
எண்ட கவிருந் தெவர்குடி வாழ்க்கையும்
இயற்றினர் எனவவர்தம்
பண்டை மாண்பியல் பரிவுறக் கேட்டிந்தப்
பார்களி கூர்தற்கே. 64

பண்டு நால்வருக் கறமுரைத் தென்பதும்
பலபல நூற்கேள்வி
கொண்டி ருந்து முன் மைத்திறந் தேர்ந்திடக்
கொடுத்துவைக் காரிக்ஷிகள்
அண்டி வந்தவர்க் கறம்பொரு ளின்பம் வீட்
டநுபவந் தெரித்திடலாம்
இண்டை வார்சடை எம்பரன் மேன்மையே
இயம்பிய வாறாமே. 65

தென்னி லங்கைய ரெனுந்திருப் பாடலிற்
றன்னலங் கெடவென்றார்
மன்னு தன் முடி யாட்சியும் மாற்றலர்
யாரையும் வெல்திறமும்
தன்ன மாண்பெனத் தருக்கிய அவற்கவை
தன்னவன் றவையீந்த
என்ன வாமென இயல்பறி வித்திட்ட
இறைமைமாண் புணர்த்தற்கே. 66

எடுத்த வன்முடி தோளென இயம்பிற்றவ்
வெழின்முடி யதுதரங்கம்
உடுத்த பார்முழு தாட்சிதன் னதுவென
உருள் திரள் தோள்ஞாலத்
தடுத்த வெற்றிகள் யாவுந்தன் னதுவென
அகந்தைப்பா லூட்டியவற்
கெடுத்த வாமெனக் காட்டுமோ ரிலக்கியக்
கெழுநயங் கிளத்தற்கே. 67

பூவு ளானுமென் பாட்டினிற் புகலிமான்
புகன்றிடு வித்தக
மாவ தென்னெனி னடங்கலுந் தானேயா
யிடம் பெறு கேதீசன்
மேவித் தேடுவோர் விழிக்கெதிரிப் படானெனின்
வியாபக மாயெங்கும்
பாவி நின்னுமொன் றினும் படாப் பரத்துவப்
பாங்கினன் என்ற துவாம். 68

தேவி தன்னொடும் என்றுசீ காழிமன்
செப்பிய துற்றுணரின்
காவி சேர் தரு கண்டனொர் வெண்டிங்கட்
கண்ணியன் கேதீசன்
ஆவி யுட்டிக ழாவியென் றணுகுநர்க்
கருள் முகப் பிழம்பாக
மேவி யன்னவன் வீற்றிருந் திடுமதோர்
மேதக வுணர்த்திற்றாம். 69

திருந்துகே தீச்சரத் திருந்தவென் பதனாற்றல்
தெரிந்திடிற் பலகாலம்
வருந்தி நாடினர்க் ககப்படா வொருவன்தான்
வந்திங்ங னெணைவோருந்

தெரிந்து கொள்வதற் கெளிமையா யிருந்தருள்
சிறப்பானாற் கேதீசம்
பொருந்து நற்றலம் யாவினும் உயர்வுறும்
புகழ்மையைத் தோற்றுவதாம். 70

மெத்து மாத்மிக வுண்மைமுன் வேதங்கள்
விளம்பிய வாறேற்கார்
தத்தம் போக்கினிற் சிலசில கற்பித்துத்
தமிலியைத் தொன்றாக்கும்
புத்தர் தத்துவப் பாங்கினை யேசில
புனை துகிற் குறிப்பின்றி
வித்தன் மேயினார் தத்துவத் தெளிபொருள்
விளக்கமார் சம்பந்தர். 71

கடவு ளுண்மையுங் கடவுளால் தரப்பெற்றுக்
கன்மங்கள் துய்க்குமுயிர்.
உடலி லுண்மையும் ஒப்பிடா நிலையதாம்
உஃதொரு வாற்றானும்
கெடலி லாத்துமச் சீர் நலங் கிளப்பதோர்
கேண்மைகூர் பலன்றனிற்கொண்
டிடலி லாத்தாம் என்கு நர் அவர்சொல்வ
தேழைமை என்றிட்டார். 72

பத்த ராகி நற் பரகதி விழைநர்க்குப்
பாதக மாய்நேரும்
மத்த ஆணவ வலி கெடுத் தடக்கிட
வல்லர்கே தீசத்தெம்
அத்தர் என்பவர் அங்கதற் கெடுத்துக்காட்
டாகவென் றாதிக்கண்
மத்த யானையொன் றுரிபடு செய்தியை
வர்ணித்தார் வளமுறவே. 73

கலச மென்முலைக் கௌரிபாங் கண்ணலார்
கலந்திருந் திடு சிறப்பிவ்
வுலகு தேர்வர உராவலை முழக்கமே
உறுபண முரசொலியாய்
இலகு மங்கலங் கொள் நிகழ் காட்சியும்
இயம்பிய தாயிற்றால்
பலசு ருதியென் பேர்கெழு பதினொராம்
பாடல்தான் பாங்குறவே. 74

மந்தி வாழையங் கனிமது நுகரமா
மஞ்ஞைகள் நடமாடச்
சந்த வண்டியாழ் செயவண்ணல் தானுமே
சதுர்பட நடமாட
நந்து பொன்னிலங் கிடமுத்து மொளி செய
நன்னகர் மாதோட்டம்
இந்த வாரழ கினிமைமிக் கிருந்தவா
றேத்தினார் சம்பந்தர். 75

**வேறு**

பார்கெழு புகழார் ஞான சம்பந்தர் மாதோட் டத்துச்
சீர் கெழு பாடல் கேட்டுச் செவிகுளிர் நாக நாதர்
ஊர்கெழு பாலா விச்சீர் உவந்திடப் பதிகஞ் செய்த
ஏர்கெழு நம்பி பாடல் இயற்படு மகிமை காண்பாம். 76

**சீகாழிப்பிள்ளை திருப்பதிகப் படலம் முற்றும்.**
**ஆகத் திருவிருத்தம் 280.**

## நான்காவது
## நாவலூர் நம்பி நற்றமிழ்ப் படலம்

முழுமுதல்வற் பொறுப்போன்று முழுதுயிர்க்கும் முழுநலஞ்செய்
கெழுதகவார் பரம் பொருள் தன் கேண்மைமிகு திருவருளாற்
பழுதகலப் பாரினுக்குப் பரஞான விளக்கமருள்
தொழுதகையா ரவ்வக்காற் றோன் றவருள் நலம் வாழி. 1

வானிருந்து மண்ணிழிந்து மக்கள் வாழ் வொடுமருவி
மானிருந்த கரத்தண்ணல் மகிமைநலந் தெரித்துணர்த்தி
ஊனிருந்த உடல்வாழ்வினுறுபயனுற் றுவக்குநெறி
நானிருந்து காட்டியவத் தகவுடையோர் புகழ்வாழி. 2

அப்பர்பிரான் தமைத் தோற்றி அருஞ்சரியை நெறிதேற்றி
ஒப்பருகா ழியர்கோவா லுயர்கிரியை நெறிதெரித்துச்
செப்புமணி வாசகராற் றிகழ்ஞான நெறியுணர்வித்
தப்பனிசெஞ் சடையண்ணல் அகிலமருள் அத்திறம் போல். 3

பவயோகப் பரபரப்பார் பாருலகோ ரதுதவிர்ந்து
சிவயோகத் திறத்தருமை தேர்ந்து தமிற் கடைத்தேறத்

தவயோக நெறிப்பற்றார் தமிழ் நாவ லூரனைப்புங்
கவயோகர் திகழ்கயிலைப் புராதனர்தந் தருளினரால். 4

திருவாருஞ் செழுங்கயிலைச் சீகண்ட நாதர்தாக்
கொருவாமெய் யன்புணர்வி னுவந்தணுக்கத் தொண்டுபுரி
அருவாய்மைப் பெரும்பந்தர் ஆலால சுந்தரர்தாம்
மருவார்வக் கமலினிசீ ரதிந்திதை பால் மனம் போக்க. 5

வித்தின்றி விளைவுசெய்தவ் வித்தகமா ரிறைமையினால்
அந்திறமே காரணமா அவர்க்கிடமால் றம்பணிந்தே
உத்தரநற் கயிலையொரீஇத் தக்கிணதே சம்மருவி
மெத்துபுகழ்த் திருநாவ லூர்ப்பிறக்க விதித்திட்டார். 6

திருநாவ லூர்ச்சடையர் திருமகனா யவதரித்துப்
பெருநாமம் நம்பியெனப் பிறங்கநிக ழுன்னவர்க்குச்
செருமான வேன்மன்னர் செல்வமக னாந்திருவும்
உருமான லௌரிகர்சீர் உயர்வேறத் தந்தருளி. 7

தெய்விகலை திகத்திருவுந் திகழுயர்மன் னவர்திருவும்
பெய்தமைத்த திருக்கோலப் பெரும் பொலிவு கொளவளர்த்தே
வைதீகச்சீர் மிகப்பெற்றார் தேர்ந்தமணப் பெண்ணவர்க்குக்
கைவருநற் பர்யங்க யோகநெறிக் கடாதென்றோ. 8

மையலுறு மானிடவாழ் வினிலடியேன் மயங்குபொழு
தையவெனைத் தடுத்தாட்கொண் டருள்கவென முன்நம்பி
செய்திருந்த விண்ணப்பப் பலனளிக்கு மதன்சார்பில்
எய்தவணைந் தியல்மணத்து கிடையூ றாய்ப் புகுந்தருளி. 9

நல்மணக்கோ லத்திருந்த நம்பிதனை வலிந்கிழுத்து
வல்வழக்குப் பேசியங்ஙன் வலியவாட் கொண்டவர்தம்
அல்லல்தவிர்த் தாளுடைய நம்பியென அயல்போற்றச்
சொல்லருசீர் மகிமையெலாந் தொகவளித்திட் டார் தாமே. 10

திருவாரூர் வருகவெனச் செய்திகொடுத் தவரங்கு
மருவாமுன் மணக்கோலச் சிறப்பளித்து வல்விரைந்து
மருவார்பூங் குழற்பரளை மணமிசைவிந் தவர்நிலைக்குப்
பொருவாமுன் மணந்தடுத்தார் பொருவுமணம் புணர்த்திட்டார். 11

பரவைநம்பி யிருவர்க்கும் பற்றாகி யிருபாலும்
விரவுசிவன் செயற்றிறனால் விழையுமவர் சம்யோகம்
உரவுறுநீ ருலகரிணை விழைச்சாகா துயருரவோர்
பரவுறுசீர்ப் பர்யங்க யோகவிளை வாயினதால். 12

பத்திமையாற் புலனைந்தும் பரப்பறத்தம் மகத்தடக்கி
மெத்துசகஸ் ராரத்து மிளிர்விந்து நாதத்தே
சித்தமுற வைத்கணருஞ் சிவயோகி யார்தங்கட்
கித்தகைய சம்யோகம் இழித்திடப்ப டாதென்பார். 13

கண்டனொடு கண்டியுமே காதல்செயும் யோகமிதென்
நொண்டகுசீர்த் திருமூலர் இயம்பியதும் வான்புலன்கள்
அண்டிடா தகத்தடக்கி மடவாரோ டியலுமின்பம்
அண்டர்பிரான நுபவமென் றப்பர்பிரான் செப்பியதும். 14

தென்னாவ லூர்மன்னன் தேவர்பிரான் திருவருளாற்
பன்னாளும் பயில்யோக பரம்பரையின் விரும்பினதாச்
சொன்னாமச் சேக்கிழார் துதித்ததுவுத் தொகுத்துணர்வார்
நன்னாமப் பரவை மணத் திரகசியம் நன்குணர்வார். 15

அரியதுவும் பெரியதுவும் ஆன்மார்த்தப் பெரும்பேற்றுக்
குரியதுவு மாமிதற்கோ ருதாரணங்கண் டுலகுய்யப்
பெரியபிரான் நம்பிதனைப் பிறப்பினிலுய்த் தாரென்கை
தெரியவரும் நம்பிதிரு வவதாரச் சிறப்பாமால். 16

இத்தகுசீ ரொன்றலமற் றினையபல வாமவற்றுள்
எத்திசையுஞ் சிவனடியார் இலைமறைகா யாயிருந்தார்
அத்தனை பேரையுமிவரா லரங்கேற்றற் காக்கமுமந்
நிந்தனார் புரிந்தவகை நினைந்துதுதிப் பாமிங்ஙன். 17

பாரூரும் மணப்புதுமைப் பசுமையறா முன்னேயே
ஆரூரன் நம்பிதனக் கரியதிரு வடிகாட்டிச்
சீரூரு மவ்வடிதேர் சிவனடியார் திறந்தேற்றி
ஆரூரா இவர்தம்மைப் பாடுதியென் றருளிடவே. 18

எல்லையிலாப் புகழாள ரிவர்ப்பாட லெங்ஙனென
அல்லலுறும் நம்பிக்கங் காதரவால் அடியெடுத்தே
தில்லைவா ழந்தணரென் திவ்யமொழி வழங்கியன்றே
சொல்லருஞ்சீர்த் திருத்தொண்டத் தொகைபாடு வித்தனரால். 19

இவ்வகையால் நம்பிதனை யெம்பெருமான் தம்மருமைக்
கைம்மகவு பேணுநர்போற் காதலுறப் பராமரித்து
மெய்வகையார் சைவமுதல் எனுநிலைமை மேவுவித்திங்
குய்வகையாற் சைவநலக் கூட்டச்சத் தளித்தனரால். 20

ஆவணங்காட் டித்தடுத்தும் அடிகாட்டி யடியவர்மேற்
பாவணங்கு திருப்பதிகம் பாடுவித்தும் அதிகைதனிற்
பூவணங்கு மடிமுடிமேற் பொருந்தவைத்துத் தீக்ஷித்தும்
நாவணங்கு நயமொழியால் நந்தோழ னெனத்தெரித்தும். 21

ஏவணங்கு நெடுஞ்சிலையா ரியற்றியவித் தகைமைகளால்
தூவணங்கு பொன்மேனிச் சுந்தரவே டந்திகழ
ஆவணங்கு கொடியாருக் கடிமையுமாய்ச் சிக்ஷ்யனுமாய்
நாவணங்கா மலும்பேசும் நல்லுரிமைத் தோழனுமாய். 22

தொண்டருக்குத் தொண்டனுமாய் மிண்டருக்கு மிண்டனுமாய்
அண்டர்பிரா னடியாருக் கடிமையுமா யணிமணிப்பூண்
கொண்டுவக்கும் போகியுமாய்க் கோதில்சிவ யோகியுமாய்
எண்டகுநற் சிவப்பொலிவுக் கென்றுமறி யாப்புதிராய். 23

நாவலர்சொன் மழைபொழிந்து நற்றமிழ்ப்பைங் கூழ்தளிர்ப்பத்
தேவலருங் கோவிலெங்குஞ் சிவானந்தத் தேன்பிலிற்றப்
பூவலஞ்செய் துலாவருமோர் புத்தெழிலார் சிவப்பிழம்பாய்
நாவலா ரூரரிடும் நடைசைவ நடையாய்த்தே. 24

**வேறு**

நம்பியென் ஞான மேகம் நலமிகு வெண்ணெய் நல்லூர்
அம்பர னருட்டு றைத்தேங் கருட்கடல் சுவற்றி யோங்கி
இம்பரார் இன்புற் றாரு மியற்படு வித்த கச்சீர்
பம்புசொற் பதிக மாரிப் பண்மழை பொழிந்த தன்றே. 25

பதிகந்தோ றந்நாட் டன்னைப் பரன்தடுத் தாண்ட பண்பும்
துதிகெழு பரனே தற்குத் தோழனாய்க் கெழீஇய நண்பும்
மதிகணுக் குறுவன் றொண்ட நாமமே தகவு மெல்லாம்
குதிகொளுங் கதிவாய் ஞானத் துதிகளாய்ப் பொழிந்தானையன். 26

மதிகெழு பரனது திக்காம் மாண்பமர் விதிவ ரம்புக்
கதிகமே பேசி யோர்கால் ஏசியு மிகழ்ந்துந் தன்பால்

உதிதரு விரக்தி தோன்ற ஊடியு முறழ்ந்துஞ் சொல்லும்
துதிகெழு பாடல் தோறும் தோழமை பொறித்த தொன்றோ. 27

அதிசய மாக நெற்கொண் டணையஆள் பெறலிற் றானும்
நிதிகொணர்ந்தனைதற் சார்பில் நிபந்தனைப் புதிரொன் றாங்கே
விதிசமர்த் ததனிற் றானும் மின்னிடைப் பரவை மாடு
மதிபுனை சடையான் தூது மகிழ்ந்திடப் பெறலிற் றானும். 28

வித்தக விநோதப் பொற்பு விஞ்சுதோ ழமைப்பண் பூர
வைத்துயர் பாடல் பல்ல வன்றொண்டன் பேர்ச்சீர் கூரக்
கத்துசீர்க் கடனஞ் சுண்டான் கண்ணின்று கண்ண றத்து
தித்திடு பாடல் பல்ல சுவைநிலைக் களங்க ளான. 29

அமிழ்துகு தெய்வப் பண்ணி லகங்குழைந்துருகிப் பாடத்
தமிழ்குழை குழைந்தான் மீகத் தண்ணறுஞ் சுவைத்தேன் பில்க
இமிழ்கட லுலகி லிந்த மொழிக்கன்றி இறைமாண் பின்பம்
உமிழ்தரு மதுகை யின்றென்னோகைமீக் கிளர்ந்து மல்க. 30

பிரபஞ்ச முழுதும் மேவிப் பிறிவறச் செறிவுற் றான்ற
பரமனும் பரிவார் நம்பி பாட்டிசைப் பித்தனாகி
வரவெதிர் கொளலும் வந்து வழிகாட்டிச் செல்லு மான
பரவதி சயங்கள் பல்கப் பயில்வன நம்பி பாடல். 31

இத்தகு பாட லின்பத் தெம்பிரான் நம்பி சார்பிற்
செத்தது முய்யச் செய்துஞ் செம்பொன்மா முதுகுன் றிற்கொ
டுத்தவை மணிமுத் தாற்றாற் குளத்திடை வரத்திக் காட்டும்
வித்தகம் விளைத்தும் வைத்த வியப்பெலாந் நெரிக்கு மஃதே. 32

ஆராத அடிமை வேட்கை அதுதவிர்ந்திடுங்கொ லென்னத்
தீராத அங்கலாய்ப்புத் திருவடிப் பிழையாத் திட்பம்
பேராத காதலன்பு பிரான்பணி யருமை மாண்பொன்
றோராதார் தம்மேற் செற்றம் உணர்த்துவ நம்பி பாடல். 33

ஏசினும் ஏத்தி னும்மற் றிகழினும் புகழி னுந்தான்
ஆசிலே கனெனும் பாவத் தரன்கழ லொருவா நம்பி
பேசுமித் திறங்கள் மேலும் பிறங்கக்காண் பித்தோ வீசன்
மாசில்சங் கிலியோ டன்னான் மணத்திறம் புணர்த்த வாறே. 34

சங்கிலி மணத்தி னேன்ற தயக்கமொன் றதுத விர்ப்பான்
சங்கரன் நம்பி தன்னைச் சத்தியஞ் செய்க வென்ன
அங்கது சந்நி திக்கண் ஆற்றுவ தடாதந் நேரம்
அங்கிளர் மகிழ்க்கீழ் நீர்போய் அமர்கவென் றறைந்தார்நம்பி. 35

ஆளவுள் ளானு மற்றங் கதுகந்தா நம்பி காதற்
றோழமை யாழங் காண்பான் நங்கைபாற் றுரிதந் தெய்தி
மூளுறு சபத மாற்ற மகிழ்க் கீழே வருக வென்று
கேளெனக் கிள்ளி விட்டுக் கிளர்மகி ழடிக்க ணுற்றார். 36

மறுத்திடிற் சுவார்த்த நாச மாமென மருள்வுற் றாங்கண்
வெறுத்தகேள் வியினார் நம்பி விதியுடன் படுவா ராகிச்
சிறுத்தநுண் ணிடையாள் நாச்சி சங்கிலி மட்டி லன்றிக்
கறுத்தக்கண்டத்தர் சூழ்ச்சிக் கயிற்றினும் மாட்டிக் கொண்டார். 37

சங்கிலி நம்பி சாருந் தாம்பத்ய வாழ்வின் நாள்கள்
பொங்குபே ரருள்நு கர்விற் போதுநாள் ஓர் நாள் ஆரூர்
மங்கல நினைவுள் ளுந்த மகிழடி நாட கத்துப்
பொங்குபின் விளைவு மீர்ப்ப அங்ககன் றிடுவா ரானார். 38

ஒற்றியூர் எல்லை தாண்டச் சத்தியப் பிறழ்ச்சி யீண்டி
நெறியூர் விழியான் தன்னால் நேத்திர ஹரணம் நேர
முற்றிகழ் சுமுகச் சூழற் றோழமைத் துடிப்பின் நாதம்
பிற்றிகழ் விமுகச் சூழற் பன்மடங் கதிரப் பெற்றார். 39

திருவருட் குறிப்பு முற்றத் தேவார மருளும் நம்பி
பொருமிவெவ் வுயிர்த்துப் பொங்கிப் புகைந்தெழு முணர்வு தன்னைத்
திருவடிப் பிழையா மைக்குஞ் சிவனடி மைப்பாங் கிற்கும்
பொருவுமா றமைத்துப் பாடும் பொற்பினி நயத்தல் செய்வாம். 40

**வேறு**

எண்ணாட்டு மாய்வின்றி யேய்ந்தசூட் கிசைந்தகழி விரக்கத் தோடே
கண்ணாட்ட முடையபிரான் கருதிடுமச் சூள்நிகழ்வி லடியன் தன்னைக்
கண்ணோட்டஞ் சிறிதுமின்றிக் கால்வாரி விட்டதிலாங் காழ்ப்பும் எம்மான்
உண்ணாட்டு நண்புணர்வின் றொருவினன்கொ லென்ற கதகதப்பு மோர்பால. 41

பேசுறுமோர் நோக்கினிற்றன் பிழையுடன்பட் டிடுமுணர்வும் பிறிதோர் நோக்கில்
ஈசனுட னேகனாய் என்றுமவன் நினைவகலா என்பா லென்ன
மாசுநிகழ்ந் திடவுளதென் மறுப்புணர்வும் மாசெனவொன் றுளதே லஃதும்
நேசமுற வெனொடியங்கும் ஈசனதன் றோவென்னு நியாயப் பாடும். 42

ஆசறவே தடுத்தாண்டார் அடியவருக் கடியவனாம் அதுவுந் தந்தார்
தேசுலாந் திருவாரூர் வரவழைத்துத் தோழமையாஞ் சிறப்புத் தந்தார்
ஏசுபவோ இகழ்வனவோ என்றின்றி எனதுரைகள் யாவுங் கொண்டார்
பாசமுறு நண்பினிலோர் பிழைபொறுத்தல் பழுதோவென் பரிவு மோர்பால். 43

அருமைகுலா முயிர்ச்செயல்கட் காதரவாய் அவற்றினுணின் றியற்று விக்கும்
ஒருவகையா லவைபுரியுந் துரிசுகட்கு முடனாயும் செயற்ப லன்கள்
தருவகையா லநாதரவாய் அதிகாரப் பண்பொளிரத் தமின்வே றாயும்
மருவுசிவன் மங்கலமாண் பனைத்துமியற் பட்விளங்கும் மகிழ்வு மோர்பால். 44

எப்படித்தா னியன்றாலு மேதெதுதான் செய்தாலு மெம்மான் தம்மான்
அப்படித்தா மவனாண்டா னடிமைநிலைக் குள்ளானோ மவற்கே யாளாம்
செப்படிமைத் திறமதுதான் திருவடிக்குப் பிழையாமை மேற்றஃ தொன்றே
இப்படித்தா மிடுக்கணினின் றேறவழி யெனுமேதா விலாச மோர்பால். 45

கதிகொளுங்கண் வேதனையுங் கடியபிணி வாதனையுங் கனற்ற வெம்பிக்
கொதிகொளுலைப் பொருளொன்றிக் குழைவதுபோற் குறித்தவெலாங் குழைந்தொன் றாக
அதிகவுணர் வதுதாய மதிககழி விரக்கமதி பரிவாதங்கம்
பொதிதருதம் முளப்பொறைக்குப் போக்குவீ டாம்பரிசு புகல்வார் நம்பி. 46

அழுக்குமெய்கொ டெனவெடுத்தங் கொற்றியூர் மேற்பாடும் நம்பி பாடல்
முழுக்கமுழுக் கவுமேற்காண் முதுசைவ வாய்மைமுழக் கெழமுன் பாடி
ஒழுக்கமருந் தூன்றுகோ லெலாம்வினவி வெண்பாக்கத் தணைந்து சிந்தைப்
புழுக்கமிகக் கோயிலுளீ ரோவெனவிங் குளோம்போகீரெனலுங் கேட்டே. 47

திருத்துருத்திக் குளங்குளித்திட் டெழுபதிகப் தாலகிலங் குளிர்ப்ப நல்கி
அருத்திமிகக் காஞ்சியினி லிடக்கண்பெற் றாலந்தா னெனப்பண் பாடி
வருக்கமிக ஆரூரில் வாழ்ந்துபோ தீரெனவே வாழ்த்தக் கேட்ட
நிருத்தனார் நேர்வலக்கண் ணளித்தருள ஒளித்தனபோ யுறுக் ணெல்லாம். 48

பனித்தசடைப் பரமர்மகிழ் தேவாரப் பரப்பினிலிப் பதிக நான்கும்
தனித்துவமாந் தகையினவாம் தழங்கு மருட் சுவையினவாம் தமிழ்த்தீம் பாகாய்
இனித்தவிலக கிய அமுதாம் இன்னமுங்கண் ணோய்மருந்தாம் ஈடில்வைப்பாம்
குனித்தசிலைக் கோனடியான் நாவலன்சீர் மண்டுமிவை கொண்டுய்வோமே. 49

**வேறு**

இவ்வகைய சைவநல நம்பிக்குத் தம்பெருமான்
செய்வகைய மேன்மையினுஞ் செயுமருளாற் சேரநன்னாட்

டையசிவ யோகியராய் அரசராந் திருவுமுறு
செய்யபுகழ்ச் சேரலனார் தோழமையு முறவருளி. 50

தம்பிரான் தோழரினிச் சேரமான் தோழருமென்
றிம்பருல கம்போற்ற வியலுநா ளாங்கொருகால்
உம்பர் புகழ் தமிழ்மதுரை யுற்றங்கு விருந்தாடுஞ்
செம்பியனோ டுயர்வழுதி சீர்விருந்து மாயினரால். 51

முடிவேந்தர் மூவர்களு மோராங்கு வழிபட்டங்
கடிபோற்ற நாவலா ரூரர்நயந் திருந்தசெவ்வி
படியாளும் வேந்தர்க்கும் வேந்தராம் பராவுசிவன்
அடியாரென் பெருமகிமைக் கரங்கேற்ற மாயிற்றே. 52

செவ்விகெழு சிவப்பிழம்பாய்த் திகழ்நம்பி சேரலரென்
றவ்விருவ ராலீர்ப்புண் டதிசயான் விதராகி
நவ்வியொடு மழுவேந்தும் நம்பர்தல வழிபாட்டிற்
பவ்வியமாய்ப் பார்த்திபர்மற் றிருவருந்தாங் கலத்தணைய. 53

சீர்திகழுஞ் செவ்வேள்வாழ் திருப்படைவீ டெனவுகந்து
பார்புகழும் பழந்தமிழ்ப்பண் பாட்டரணாம் பரங்குன்றிற்
சேரவெழுந் தருளியங்கு சிவபெருமான் முழுமகிமைச்
சாரமொருங் கொழுகநம்பி தனிப்பதிகம் பாடுவார். 54

**வேறு**

அடிகே ளுமக்காட் செயவஞ் சுதுமென்
அகுமா துரியப் புதிரொன் றணிநீர்
முடியா ரதிமாண் பவையுஞ் செயலார்
முரண்பாட் டியல்பும் நளினச் சுவையாம்
படியாற் பகர்தோ ழமைப்பாங் கொளிரப்
பழிபா ணியினிற் புகழும் பதிகம்
துடியார் நடையிற் றொழுதங் கறைந்தார்
தொன்னா வலர்புகழ் நன்னா வலர்கோ. 55

மூவேந் தரும்பொன் முடிசாய்த் தருந்த
முதுசீர்ப் பதிகம் மதுபா டியதும்
நாவேந் தருஞ்சீர் நம்பிசெம் பியனும்
நற்றமிழ் வழுதியு முற்றெதி ரிறைஞ்சப்
பூவேந் தரசிற் புகவிடை யருளிப்
புனிதத் தோழர் சேரல ரோடும்
சேவேந் தியவெல் கொடியார் மருவுந்
திருவா ரிராமேச் சரஞ்சேர்ந் தனரால். 56

பொலிவெண் கைதைப் புதுமண மோங்கிப்
புரையார் கானற் புலான்மண மாற்ற
மலிவெண் மணலார் வான்கிளர் சோதி
மன்னுயர் கயிலைநன் மாண்புணர்த் திடவார்
கலிகொண் டெறியலை துந்துபி நாதக்
கானவின் னிசைகெழு ராமேச் சரத்துப்
பலிகொண் டுழல்வார் பதமல ரேத்திப்
பார்த்திபர் பயில்வினி மையினினி துற்றார். 57

காடுயர் ராமேச் சரத்துயர் மன்னர்
கண்ணென மணியெனக் காண்மதிப் பெண்ணார்
ஆடுவர் பாடுவர் அரும்பலி தேர்வார்
ஆகிய பரம்பொரு ளார்தமை நாளும்
நாடுயர் நாபிக்கு நால்விரல் மேலே
நன்குறக் கண்டருச் சித்திடு நம்பி
சேடுயர் சேரல னார்செறி வுறவிற்
சிந்தைம கிழ்ந்து திளைத்திடு காலை. 58

ஈடரு மீழத் தியல்வட மேல்பால்
எழிலார் பொழிலார் மாதோட் டத்துக்
கேடரு கேதீச் சரப்பிர பாவம்
கிளர்ந்தெண் டிசையினங் கெழுவுறு மதுதான்
நாடரு சிந்தைகொள் நம்பியை யீர்க்க
நன்குறு கேதீச் சரப்பா லாவிப்
பாடுறு மகிமைகள் பயில்நட்ட பாடைப்
பண்ணினிற் சொன்னவை எண்ணியும் வாமே. 59

**வேறு.**

நத்தார்படை முதல்பாடலின் ஞானன்னெனு மதுதான்
சத்தாகிய சிவனென்றுமே சித்தாகியு முறலால்
உய்த்தாரநன் குணர்வார் தமக் கொழிலில் லறிவுருவாய்
மெய்த்தாதர வளிப்பானென் விளக்குந்திருக் குறிப்பாம். 60

அத்தேபொரு ளாத தெரித் தருநாவலர் பெருமான்
சுத்தாத்தும நிலையெய்துமோர் துகடீர்நெறி யொழுகி
மெத்தாரன்பி னுற்றார்க்கதன் விருத்திப்பய னதுவென்
றித்தாரணி தேரும்வகை நத்தார்படை யென்றார். 61

அன்பாதர வுற்றன்னதன் விளைவாமரு ஞானம்
முன்பார்தரு சுத்தாத்மனே முதல்வன்மகிழ் விடையாம்
என்பார்பசு வேறியென்றும் இயம்புந்நயங் காணின்
இன்பார்தர உலகுக்கரு ளுபதேசமிஃதாமே. 62

ஆனசிவ னதிரௌத்திரத் தழன்றாடுமப் போதே
மானமலை மங்கைபங்கும் மாற்றாதிருந் திடுமம்
மேனசிறப் பார்தண்ணளி விதப்பார்நாவ லூரர்
ஆனையுரி போர்த்தபோதே மணவாளனென் றறைந்தார். 63

கத்துங்கடல் மலைவாவிகள் கருதுஞ்சிவ மாக்காண்
சித்தம்மழ கியராமவர் திருநோக்கிற்பா லாவித்
தித்தம்மென நிற்பானுமச் சிவனேயெனு நயத்தால்
பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியென் றனரால். 64

சுடுவார்பொடிப் பாடல்சொலுங் கீளென்பது கேட்கின்
நெடுநூல்கொடு நெய்திட்டணி கடிசூத்திர மதுதான்
உடுகோவண வுடைதாங்குமஃ துலகோர்தெரிந் துடையிற்
படுசிக்கனம் பயிலப்பரன் தரித்திட்டமை தெரித்தார். 65

உடைகோவண மாதற்றிறத் தளதொன்றினு மறியின்
நடையார்தவச் சிவயோகியர் நவில்குண்டலி மேற்சென்
றடைவாவதற் குபகாரமஃ தெனல்தூக்கிடி னஃதும்
சடையார்சிவன் சிவயோகியென் தகைமையுணர்த் தியதாம். 66

திடமாவுறை கின்றானென்றார் தெய்வத்திறன் தெளியார்
சடமாருல கியல்வேட்டையே சமயம்மெனும் அதிமா
மடவோர்தமா லிடர்நேரிடத் தலங்காடுபட் டழிவுற்
றிடநேரினு மெங்கள்பிரான் இருப்பனிங்ங் னெனற்கே. 67

முக்காலமு முணருஞ்சில யோகன்நாவ லூரன்
இக்காலத்தித் தலத்தைப்புன ருத்தாரணம் பண்ணு
வித்தாதற்கோர் சுடர் தூண்டியாய் விள்ளும் பத மிதுதான்
எக்காலத்து முலகம்முணர்ந் தேத்தும்பரி சினதே. 68

கரியாருரி கெழுகேதீசர் கருதுந்தல மிதனைப்
பிரியாரென ஒருகாழிமன் தருமவ்வுறு தியுமேல்
அரியானெங்கள் பெருநாயலன் திருவாக்குமற் றிதுவும்
சரிசாமியப் பரிசோடமை தகவும்வியத் தகுமால். 69

அங்கம் மொழி யன்னாரென்ப தணிகேதீசத் தன்றே
துங்கமறை வாய்மைசெறி தூவைதிகப் பொலிவும்
வங்கம்மலி கின்றதென்கை வளமேவுமா தோட்டத்
தங்கண்ணன்னா ளகிலலோகத் தடைவுந்தெரித் திடலாம். 70

கீழைக்கடற் பிரதேசத்தன் றாழக்கடற் றுறையாய்
வாழத்தரும் பெருவாணிக மரசந்தையு மஃதாய்
மோழைக்கலம் பலநாளுநாள் முடுகுந்தொன்மை மாட்சி
ஈழத்துமா தோட்டங்கண்ட எழில்நாவலன் காட்சி. 71

துங்கத்தலை யுடற்கூறுறு தொல்தானவ னந்நாட்
செங்கண்ணர வசைத்தான்றிருக் கேதீச்சரம் நண்ணிப்
பங்கந்தவிர்ந் துய்ந்தகதைப் பாங்குங்குறிப் பதுவாய்
அங்கம்மொழி சிலேடைபயில் அழகும்விழு மியதே. 72

பங்கஞ்செய்த மொழியும்மதி பக்ஷபாதத் தாலுத்
துங்கத்தக்கற் களித்திட்டவாக் பங்கம்மதும் பழிவாங்
தங்கொள்கையி னன்னான்புரி மானபங்க மதுவும்
தங்குந்தனிச் சிலேடைத்திறந் தமிழார்நயந் தருமே. 73

கரியகறை முதல்பாடல்கொள் கண்மூன்றினுள் நுதல்மேல்
விரியும்மது விரூபாக்கமாம் விசேடத்திறம் வேறாத்
தெரியும்வகை பேணிநல்ல கண்மேலொரு கண்ணான்
பெரியபிரான் என்னவதன் பிறக்கம் நிகழ் வித்தார். 74

அரியவுல கியலாமதன் அடக்கச்செறி வனைத்தும்
உரியமுறைத் தெரியவலான் ஒருவனவன் தானே
பெரியமறை மூலம்மது பிறங்கவைத்தா னென்கை
தெரியும்மறை வல்லானுரை தெரித்தபொரு ளாமே. 75

காலாறிசை பயில்பூம்பொழின் மாதோட்டத்துட் கடுகி
நீலார்முகில் படிமாகடல் நிறைஜீவநன் னதியாம்
பாலாவிதன் பழையவெழில் பரியதிரை யெறிந்து
மேலாம்பெருக் குறுதோற்றத்தின் வியந்தார்நயந் தினிதே. 76

இம்மையுடற் பிணிதீர்ப்பதற் கிறைவற்காகா தென்னும்
பொய்ம்மைச்சமண் கோட்பாட்டினைப் போக அடித் திடுவான்
அம்மையப்பன் அங்கத்துறு நோயுந்தவிர்ப் பானென்
றெம்மையருள் ஆரூரரிங் கெடுத்தின்னிசை மொழிந்தார். 77

சத்திசிவத் தாதான்மியத் தன்மையுவப் புறக்காண்
பத்திமிகப் பங்கஞ்செய்த மடவாளொடு மென்னும்
மெத்துபுகழ் விரித்தாரன்றே மெய்ம்மாதவத் தடியார்
சித்தந்திகழ் திருவாய்நிகழ் பெருநாவலா ரூரர். 78

செய்யும்வினை வந்தூட்டியே யொழியுஞ்சிவ னருளால்
எய்தவள தெதுவுமின்றென் றிரைப்பார்மதங் கரைப்பார்
வெய்யவினை யாயவடி யார்மேலொழித் தென்றார்
வையம்புகழ் திருநாவலூர் வருமாரூரர் தாமே. 79

வையம் மலி கடலென்பொருள் வளமார்கடல் வணிகத்
தையதிரு வாருந்திறத் தகிலவுல கினரும்
தையல்பங்கன் மகிழ்மாதோட்டத் தண்ணார்கடல் குழும
வையக்கடல் மனிதக்கட லாந்தொல் சிறப் பதுவாம். 80

ஏனத்தெயி றணிந்தானென்ற தெங்கள்பெரு மானார்
தானெத்திறத் தினராயினுந் தருக்குவார்க்கு நெருப்பன்
ஊனத்திமிர் கெடுமாறடர்த் துய்யக்கொளும் விருப்பன்
ஆனத்திறம் அகிலத்தினுக் கறிவித்ததோர் குறிப்பாம். 81

மண்ணைப்பிலத் திருந்தீர்த்திட்ட வராகவுரு வரிதான்
கண்ணைமறைத் திடுகர்வத்தாற் கடுகியுல குடற்ற
எண்ணைக்கடந் திடுமெம்பரன் எதிர்தோன்றியங் கதுதன்
பண்ணைப்பரு வுடல்வீலித்திட் டெயிறும்பறித் திட்டான். 82

அட்டன்னெனு மதுதானண்ணல் ஆகாசம்மே வளிதீ
இட்டம்முறு நீர்மண்ணினோ டிரவிமதி யான்மா
எட்டுங்கொண்ட உருவன்னென இயம்பும்பர வுண்மை
சுட்டும்வடி விதுசைவத்திற் றொல்லோர் கண்ட துணிபாம். 83

எட்டுக்கொண்டா ரெனவும்மவர் அட்டமூர்த்தி யெனவும்
சுட்டுஞ்சிவம் பசுபாசந்தொல் பதிமூன்றுமோர் வகையால்
அட்டக்கொண்டிட் டமையுமாறிங் கருமாலயக் கிரியை
தொட்டுத்தொடர் துறைதோறுநன் றொட்டித்திகழ் தருமே. 84

புத்தம்புதுக் கோயிலெழும் போதில்நிகழ் வவெலாம்
நித்தியதை மித்திகத்து நிகழுங்கிரி யையெலாம்
மெத்துகும்பா பிஷேகநாளார் விசேடகிரி யையெலாம்
இத்திறத்தா னலதுமற்றெத் திறத்தினானு மிலையே. 85

மூர்த்திசிவம் மொழியர்ச்சகர் பசுநைவேத்ய முதலா
நேர்த்தியாவ நிலவுபஞ்ச பூதமய பாசம்
நீர்த்தகந்தம் மலர்தீபமே நிறைவார்தூபம் மணியென்
றோர்த்தவைந்தும் பஞ்சபூதத் தொவ்வொன்றென வாமே. 86

பஞ்சபூதத் தூடார்சிவனைப் பஞ்சபூத தேகி
எஞ்சலில்சீ ரிரவிமதி யிரண்டுஞ்சாட்சி யாகப்
பஞ்சபூதத் தாலர்ச்சித்துப் பரனோடொன்றி யொன்றாம்
விஞ்சுவித்தை சைவங்கண்ட விந்தைவியத் தகுமே. 87

பிரமந்தனை யைம்பூதப்பின் னணியிற்கண்டு கொண்டே
பரவைம்பூத வஸ்துக்களாப் பயில்தீநெய்யா திகளால்
மரபின்னழல் வேள்விபுரி மறையின்வழக் கிங்கும்
விரவலன்றோ சைவம்பெறும் வைதிகப்பேர் விதப்பாம். 88

மூவரென இருவரென மொழிவார்த்தையின் நம்பி
தேவன்சிவன் செகமிங்கிதைச் செலுத்தும்வகை தெரிப்பான்
யாவும்படைத் தளித்தூழியி னெல்லாமழித் தருள
மேவும்மய னரிருத்திரற் கவனேமூல மென்றார். 89

திரிமூர்த்திய ராகியன்னோர் செய்யுந்தொழில் காற்றல்
புரிதேவனு மவனாதலிற் பொற்பார்தரு சத்தி
தெரியுமுரு வினைமேற்கொளுந் திருவுமுள னதனால்
இருவரென வெனவுமவனியல் பேபேசி னாரால். 90

பாவம்வினை யறுப்பானெனப் பன்னுமதன் சீரும்
ஓவில்செயற் பாவமுறும் உலகர்பொருட் டருளும்
மேவும்மிரு வினையொப்புறு சத்திபாதர்க் கருளும்
தேவனவன் செயலேயெனத் தெரிக்குநலத் த்துவாம். 91

கறையார்கடல் முதல்பாடலிற் கனிபேரருளாளர்
அறையார்சுரும் பாலும் பொழிலணிமாதோட்டத் தடிகள்
குறையாவருள் கொழிபாடலிங் கிவைபாடுநர்ப் பிணிக்கும்
பொறையார்வினைப் பந்தந்தலை மறைவாதல்கு றித்தார். 92

**வேறு**

நாவலூர் நம்பி சொன்ன நற்றமிழ் நயங்கள் முற்றும்
ஓவற வுரைத்தற் கொவ்வா துணர்வினால் மிகுதி பேணித்

தேவலர் சிந்தை மேவு செயதுங்க ராஜ ராஜன்
பாவலர் போற்றுமீழத் தரசுசெய் பாங்கு சொல்வாம். 93

நாவலூர் நம்பி நற்றமிழ்ப் படலம் முற்றும்.
ஆகத் திருவிருத்தம் 373.

## ஐந்தாவது
## புலநரவைப் படலம்

துங்கநற் கங்கை பாய்ந்து சுழிகட லகடு தூர்க்குஞ்
சங்கமத் துறையார் வங்கச் சிங்கபா குவின்சே யந்நாள்
திங்களஞ் சடைக்கௌ ரீசர் திருவருள் வரத்த வந்திங்
கெங்கள்சீ ரீழந் தாங்கும் இறைமையேற் றிருந்தா னாக. 1

அங்கவன் அரசு வைகும் அநுராஜ புரமு மந்நாட்
பங்கயப் பழனஞ் சூழ்ந்து பலதிற வளனு மோங்கிச்
சங்கரன் புகழ்மீக் கூருஞ் சைவமுந் தழைத்திவ் வீழ
மெங்கணும் புரக்குஞ் செவ்வி யிராசமா நகரா யிற்றால். 2

இந்நகர்ச் செங்கோ லோச்சு மிணையில்சீர் விஜயன் தன்பின்
அன்னவன் மரபுநீடி யாயிரத் தைஞ்நூ றாண்டு
பன்னரு நலங்கள் கண்டு பார்புக ழீழ மந்நாள்
தென்னவர் தொடர்பு மோம்பிச் சிறந்தினி திருந்த காலை. 3

அவ்வப்போ துள்ளுள் மூளும் அரசியற் பகைமைச் சார்பில்
செவ்விசேர் தென்னர் ஈழ மன்னர்க்குத் துணைபோ மாறும்
இவ்விதன் கைம்மா றாக இவரவர்க் குதவு மாறுஞ்
செவ்வனந் தெரித்துக் கூறுந் திகழீழ வரலா றென்றும். 4

இத்தொடர் பிருந்த வாற்றால் ஈழநாட் டரசென் றேனும்
அத்தழிந் திடநேர் காணின் அஃதிட மாகப் புக்கு
மெத்துதென் னாட்டு மன்னர் விழுந்தடித் தவ்வப் போது
தத்தம தாணை யுய்த்த சம்பவங் களும நேகம். 5

கிளர்வுறு கிறீஸ்தாப் தத்துக் கிளக்குமா யிராவ சானத்
துளருமுட் பகைக்குள் ளாகி யூற்றமில் மிகுந்து மன்னன்
தளர்வுறு நிலைய னாகித் தப்பித்தான் றுகுணைக் கோட
வளர்வுறு மராஜகத்தில் வளர்புக ழுநுரை மாழ்கும். 6

ஈழச்சீ ரின்னதாக இலங்குசீர்த் தென்னாட் டின்கண்
பாழிமா லியானைச் சேனைப் பல்லவர் வலிமை குன்றச்
சோழப்பே ராசு ராஜ ராஜனா டெழுச்சி யுற்றுச்
சூழவுள் ளவெலாம் வவ்வி யீழமும் வவ்வ லாய்த்தே. 7

வெற்றிவே ளிராஜ ராஜன் வீங்கிருங் கடலர் ரிழத்
துற்றந்தா ளராசரீகத் துடுக்குமுற் றடக்கிப் பின்னை
முற்றரு வலியி னீழ முழுதுமோர் குடைக்கீழ்க் காண்டற்
குற்றிட மேதென் றாய்ந்து புலநர வைக்க ணுற்றான். 8

உற்றுமுன் னிடுகால் பின்னிட் டுருகெழு படையு முட்கத்
துற்றுயர்ந் தடர்ந்த துப்பிற் காட்டா ணொருபால் ஈட்டப்
பொற்றைகள் பொலியக் தோன்றும் மலையர ணொருபால் மன்னித்
தற்பமோ டரசு வைகத் தகுமிட மாகி மேலும். 9

அடற்பெரு வலியி னான்ற அண்ணல்சீ பிராஜ ராஜன்
கடற்படை வைகற் கேற்ற கற்படை யார்முக் கோணத்
திடப்பரப் பாருங் கோணா சலமுமங் கண்மைக் தாகக்
கிடப்பதும் முன்னிட் டீது கிளர்தலை நகரா யிற்றால். 10

அற்றைநாள் விஜயன் வைகு மநுரத புசிக்கு வாய்க்கா
இற்றிதன் மண்வளத்தா லேர்த் தொழில் விளைவு மேம்பட்
டெற்றைக்குங் குறைவு காணா தியலு மூண் வளமும் மல்கப்
பெற்றவிச் சூழ லஃதாற் பேரர சிருக்கை யாய்த்தே. 11

**வேறு**

தலமலியும் மன்பதைக்குத் தகவுறுவாழ் வளமளிக்கும்
பலகலையும் வளர்த்தோம்பிப் பண்டைநாட் சகலபுல
வலவர்பலர் சபையிருந்த வகைமையினா விந்நகர்க்குப்
புலநரவை பெயரான பொருத்தமுமோர் பொருத்தமே. 12

குலஸ்திதியா லுயர்கொள்கைக் கோதறுசீர் மாதவர்கள்
நயத்தியலும் வாழ்வுகந்தார் நாடுபுரா தனத்தீழ
நிலத்தியல்சீ ரகஸ்தியர்முன் னாமெழுவர் தமிலொருவர்
புலஸ்தியரிங் குறைந்தமையாற் புலஸ்திநகர்ப் பெயருமுண்டாம். 13

மேவுறுமிந் நகர்மருங்கின் விளங்குபழங் கற்சிலைதான்
யாவர்சிலை யெனுமாய்வில் இயலுமகஸ் தியர்முதல்நால்

மூவர் தமி லொருவரா முன்னுபுலஸ் தியர்சிலையென்
ஓவில்வழக் குளத்துவும் உதற்கோரா தாரமதாம். 14

புலநரவைப் பெயர்வழக்கிற் பொலநறுவை யாயினதும்
இலகுபுக ழிராஜவிரா ஜச்சோழன் தன்பெயரால்
தலமறியுஞ் சனநாத புரமெனநேர் மாறியந்நாள்
நிலவியதும் நிகழீழ சரித்திரத்து நிதர்சனமாம். 15

சகவாண்டு சனிப்பதற்குச் சரிநேர்முந் நூறுகள்முன்
இகமறிசீ ரெல்லாளன் ஈழமாண் டறத்தினுக்குப்
புகலளித்த புகழொன்றோ சூரத்தீ சனைச்செயித்துத்
தகவுறுகுத் திகன்சேனன் தாமர சாண் டதுமுளதால். 16

மெத்துறுசீர் மைத்திரியால் மேதினியெல் லாம்புரக்கும்
புத்தமதம் புகுந்தபின்னும் போதநெடுங் காலத்துக்
கித்தலத்துத் தமிழ்மரபோர்க் கிருந்திடுசெள சன்யநிலை
எத்தகைய தெனஅறிதற் கேது பல வாமவற்றுள். 17

பெரியபுளி யங்குளத்துச் சாசனமும் அநுரைகாண்
அரியஅகழ் வாராய்ச்சிச் சான்றுகளும் புகல்வகையால்
தெரிதமிழர்க் கந்நாளுந் திகழ்வாழ்வுத் துறைதோறுஞ்
சரிசமசந் தர்ப்பநிலை தணவாமை நிதர்சனமாம். 18

ஆட்சிவலு விடையறா தநுராச புரம்மிகுந்த
மாட்சியுட னிருந்தஅந்நாள் வாய்மைமிகு நண்புறவுக்
காட்சியொடு மிவ்வீழ மியல்தமிழ் நாட்டுடன் கொண்ட
பூட்சிமிகு நல்லெண்ண விளைவாகப் போந்திருந்தோர். 19

பலதிறத்துக் கலைஞர்களும் பயங்கெழுநல் வாணிகரும்
அலகில்கிளை கிளையாகி அநுராஜ புரத்தகத்துஞ்
சுலவுமதன் சூழலினுந் தொக்கிருந்தோ ரிக்காலம்
நிலவுறுதம் மந்தஸ்தில் நின்றுநிமிர்ந் துயர்வுற்றார். 20

வணிக்கிரமம் நான்குநாட் டாரெனுமவ் வகையில்வரு
வணிகரநு ராஜபுர காலத்தும் ஈழத்தில்
அணிபணியாள் சேனைபடை யுடனிருந்திவ் வீழவறப்
பணிகள்புரிந் திருந்தனரன் னவர்க்குமதி மடங்காக. 21

**வேறு**

திசையா யிரத்தைஞ் நூற்றுவர் வீர
வளஞ்சியர் நாநா தேசிகளும்
இசையார் வீரக் கோடியர் செட்டி
செட்டிபுத் திரரா தியர்பலராம்
வசையில் வாணிபர் கந்தளை புலநரை
பதவியா அநுரை யெலாம்
நசையுற வாழ்ந்திந் நாடுநல் வளமுற
நலத்தகு பணிபு ரிந்தார். 22

இங்கிவர் தாமுமிஸ் தாபன ரீதியில்
ஏத்துய ரந்தஸ்தில்
தங்கள்பொ றுப்பினில் தகுபடை யாதிய
தற்காப் பணிகளொடும்
துங்கநல் வாழ்வு சிறந்துறு சமுகத்
தொண்டு களும் பலசெய்
தெங்குள மக்களு மின்புற வுதவிடு
மின்துணை யாயினரே. 23

இதமுறு மெழிலார் பதவியா ரவிகுல
மாணிக் கேஸ்வரமும்
அதிபுக ழுநுரையி லா துலர்க் குதவிடு
மன்னசத் திரமதுமிவ்
விதவணி கர்தரு மமதா மன்றியும்
வகல்கடைப் பட்டினமும்
பதவியா வையம் பொழிற்பட் டினமுமிப்
பாங்கினர் வாழ்பதியாம். 24

**வேறு**

ஈழ மாளவரு ராஜ ராஜனிவ்
விதந் தகுவனவி யற்றியே
மூளு மாதரவின் நாடி மேதினியில்
ஈழ மான துயர் மும்முடிச்
சோழ மண்டலம் தாக வென்று பெயர்
சூட்டி யிங்கி தினி யாள்பவன்
சோழ லங்கபதி யென்ன மன்னவொரு
துரிசி லாவிருது மருளினான். 25

ஈழங் கண்டபுது ராஜ தானியிது
சூழ்வளாகமினி நிகரிலிச்
சோழ நன்னர்வள நாடெ னத்திகழ
வேயொர் தூயபெயர் சாற்றியே
கேழில் சோழநிரு வாக நன்னடை
கிளக்கும் பேர்வழக் கியாவினும்
வாழி யீர் நிலமும் ஏக பாணியினி
லங்கு மிறைமைநெறி நிறுவினான். 26

**வேறு**

சீர்த்தவிறற் படைச்சேரர் செழியர்முடி களும்வெளவும்
போர்த்திறத்தின் மிகுமாண்மைப் புலிராஜ ராஜனெனும்
பார்த்திபரே றாட்சிநிரு வாகவியற் கடலேறு
தீர்த்தநெறி யாஞ்சைவத் திருவேறு பேறுமுளான். 27

அன்னவன்ற னாட்சியதி காரவிதி நெறிமுறைகள்
நன்னலமார் அகவிருத்தி யூக்குவிக்கும் நயப்பாட்டில்
மன்னுயர்வே ளாண்மைசிற்ப வாணியச்சீர் விருத்தியொடு
பன்னலருங் கலைவளங்கள் பல்கிமிகப் பொங்குதலால். 28

முன்மைபின்மை காணாத முதிர்தமிழ்நா கரிகநலப்
பொன்னொளியில் மலர்ந்தீழம் புதுமணநல் லணிப்பொலியுங்
கன்னியா யவனாசைக் கரதலியா யிடக்கவன்று
பொன்னியுளம் புகைந்துமவன் புகழ்க்கடலி லணைந்ததுவே. 29

இன்னவகை யிராஜவிரா ஜன்புரவில் திகழீழ
நன்னர்வட பால்கீழ்பால் நளிர்கடலா ரெல்லைவரை
மன்னியவந் நாட்சிறப்பு வகுத்துரைக்கும் வரைத்தன்றா
மென்னினுமோர் சிறிதுரைப்பா மியலுமோ ரவிழ்ப்பதமாய். 30

உலகளந்தான் கோல்வகுக்கு முரவுநன்செய் யூர்மேதிக்
குலமுழுது நிரைத்துழுது கொள்ளவிளைத் தடித்துதிர்த்த
அலகிலதென் மணிக்குவைகள் ஆடவல்லான் அளந்தளிக்கத்
தலமுழுதுஞ் சுகித்துண்ணுந் தன்னிறைவு தளதளம்ப. 31

ஏற்றுமதி யிறக்குமதி வியாபாரத் துறைவிரிந்து
போற்றுறுமுத் திரத்தினக்கல் புழைக்கைமத மாக்கோடு
தோற்றுபுகழ்ச் சோழநிலத் தூடாகச் சென்றேறி
வேற்றுநாட் டுக்காசு நாகரிகம் மினுமினுப்ப. 32

மிகுத்துவரு செல்வவிநி யோகவிதி முறைநாடி
மகத்துவமார் சிவாலயங்கள் வளநாடு தொறுமமைத்தே
இகத்தையுமே பரமாக்கும் இணையிலிவை திகநெறிகள்
வகுத்துவழி நடத்தவல வேதியரும் வரத்தலுற்றார். 33

முதுபூத கணமமைத்த முதுகுளஞ்சேர் கந்தளாய்ச்
சதுவேதி மங்கலமுஞ் சார்விடமு மறையோர்கள்
வதுவரராய்க் கிளைகிளைத்து மரபுவழி நீடவைத்தான்
இதுசோழ ரீழத்துக் கிழைத்தபெரு நலமென்ப. 34

மதிமுடியார் நீலகண்டர் மாண்புமிகு மர்ச்சனைக்காம்
அதிதுல்ய வாய்மைதழூஉ மந்தணரா மகிமைமிகு
பதிபாத மூலப்பட் டுடைப்பஞ்சா சாரியரை
விதிமுறையா லழைத்தவர்க்காம் விருத்திகளும் வகுத்தமைத்தான். 35

தன்மாதன் மத்தியல்தேர் தக்கோர்மேற் பார்வையின்றிப்
பொன்னார் சிவாலயங்கள் போற்றல்பெறா வெனல்நாடிப்
பன்மாகேஸ் வரக்கண்கா ணிகள்தமையும் வரத்தினனால்
எந்நாளுஞ் சைவநலக் கிதயமரு ளிவ்வரசன். 36

நவலோக கலைநுணுக்க உத்தியெலாந் தலைகுனியப்
புவலோக முழுதளவி நிமிர்ந்துநிற்கும் பூலோக
சிவலோக மாந்தஞ்சைப் பிருகதீஸ் வரம்படைத்த
சிவபாத சேகரனிச் சிறீராஜ ராஜனென்ப. 37

இத்தகையா னிவணுறுத னிடம்பொருளே வலுக்கமையு
மத்தனையுஞ் சிவன்பணிக்கே அர்ப்பணித்துக் கோகர்ண
மெத்துபுகழ்ச் சிவாலயப்பேர் விளங்குறச்செய் பணிவகைகள்
பத்திமைகூ ரப்பகர்வ பலவேறு சாசனங்கள். 38

போற்றுயர்கோ கர்ணமது புகலுமிலன் ஈழவர
சேற்றிடற்கு வெகுமுன்பே ஈடில்சீர்த் தக்ஷிணத்துத்
தோற்றியதோர் கைலாச மெனும்பெயரிற் றுலங்கியிம்பர்
நாற்றிசையும் வசிகரிக்கும் நலம் பொலிய நிலவியதால். 39

கன்னக ரத்தொனியிற் கதறுகடற் பேரோதை
முன்னலைய நீளலைகள் முகந்துமுகந் தெடுத்தெற்றும்
பொன்னுநவ மணிவகையும் புதுநிலா வொளிவிரிப்ப
மன்னுதிருக் கோகர்ண வாழ்மு தலாங் கோணேசர். 40

முப்புரந்தீய்த் தழித்துமெதிர் மோகமதற் காய்ந்துநெறி
தப்பிவரு யமற்காய்ந்தும் தழனாகஞ் சுமந்துமுறும்
இப்பெரிய வெப்பதெலா மின்னுமின்னுங் கணகணக்கச்
செப்புமுலை மாதுமையாள் சுசுரூகைஷ தலைநிற்ப. 41

தாயினிலு மினிமையருள் தண்ணளியோ டன்பர்தம
நோய்பிணியெ லாந்தவிர்த்து நுழைபுரிநூல் மார்பிலங்க
வாயினிலும் மனத்தினிலும் மருவாநின் றொருவலிலா
நேயமுடன் நிகழ்சிறப்பும் நிகரில்கோ கர்ணமிது. 42

கோயிலகுளங் கடல்சூழ்ந்து குடிநெருங்கி மிகுபெருக்க
மாயதல மாய்மருத முல்லையொடு குறிஞ்சிநெய்தல்
மேயதிணை மயக்காகி விளங்கியவா காழியர்மன்
பாயபுகழ்ப் பதிகமதாற் பட்டவருத் தனமாமே. 43

**வேறு**

இச்சிவ தளியை ராஜ ராஜனு மவன்பின் னோரும்
மச்சகேஸ் வரமென் பேரில் மாறில்பல் பணிக ளாற்றி
மெச்சுமா தரவின் வேலிக் கணக்கினில் நிலமும் மற்றும்
வைச்சமா னியங்க ளாற்றி வளம்படுத் தளித்தா ரென்ப. 44

அருவலிச் சோழ ராஜ னாமிலங் கேஸ்வ ரன்தன்
மருவுசீர் மானாங் கேணிச் சாசன மதனிற் காணும்
விரிவுறு செய்தி யொன்று மற்றவ னிக்கோ யிற்கன்
றரும்பணிக் கொடைக ளாற்று மதுதெரித் திடுவ தாகும். 45

நிலாவெளிக் கல்வெட் டொன்று நிலவுமச் சேஸ்வ ரத்திற்
குலாவுசீர்த் தொழும்ப ருண்டிக் குறைவறுத் திடக்கு றித்த
விலாசமோ டிருநூற் றைம்பான் வேலிநன் னிலமக் கோயிற்
குலாவரு மாலை மார்பி னொருசோழன் கொடையாச் சாற்றும். 46

தாவில்மச் சேஸ்வ ரப்பேர்த் தகவுயர் திருக்கோ கர்ணக்
கோவிற்போ ருடனொன் றாகக் குலாம்புகழ்க் குளக்கோட் றன்றன்
பாவுசீர்ப் பணிகள் சோழர் பாணியிற் றிகழ்தல் நோக்கி
மேவுசோ ழஸ்தா னாதி பதியேயா மவனு மென்ப. 47

புராதன தலத்தைப் பேண லன்றியும் நவத லங்கள்
விராவுசீர்ச் சிவத லங்க ளாம்வகை விதித்த சோழர்
பராவரு தொண்டு மாண்பு பகருமிவ் வீழச் சைவ
விராவுசீர் விருத்திக் கென்றும் வியன்கிரி தீப மாமே. 48

தென்னக மாந்தந் நாட்டுத் திகழ்தஞ்சைப் பெரிய கோயில்
கன்னவில் சிற்பக் கங்கை கொண்டசோ ழேஸ்வ ரம்மற்
றுன்னுதா ராசுரத்துத் துலங்கை ராவதேஸ்வ ரம்மே
இன்னன வெலாம்ப டைத்த சோழரிவ் வீழக் கண்ணும். 49

உத்தம சோழன் பேரும் பண்டித சோழப் பேரும்
மெத்துவா னவன்மா தேவி பேருநின் றிலக வாக்கும்
இத்தளி மூன்றி னோடு மின்னும்பல் தளிக ளாகப்
பத்தினொ டாறுக் கும்மேற் புதுத்தளி படைத்தா ரென்ப. 50

பற்றைக்கா டடர்ந்து மண்டிப் பாய்புலி யுறும லோவா
இற்றைப்பு லநர வைக்கண் இற்றிற்றுத் தமிகு விந்து
துற்றடர் சிதைவு கட்குள் துலங்குசா சனங்கள் பல்ல
மற்றவை சோழர் காலக் கற்றளி யாமா காட்டும். 51

இடிபுயல் படைகுந் தாலி யாவுக்குத் தப்பி யின்றும்
வடிவமை தியிற்குன் றாது வயங்குமோ ரிருகோ யில்கள்
முடிகெழு சோழ மன்னர் முழுத்தகற் சிற்ப வுண்மைப்
படியெடுத் துரைக்க நிற்கும் பாங்குமீங் குணரற் பாற்றாம். 52

மருவுமிவ் விரண்டி லொன்று வளரத்தி வாரத் தின்பாங்
குருவழி என்புள் ளிட்டோ ரெண்கலம் நிரைத்திட்டந்நாள்
திருவுறு சோழ ராதித் தேச்சரத் தளிபோன் றான்று
பருவுரு வாரும் பள்ளிப் படைக்கோயி லெனவு மன்னும். 53

அழிபடு மவற்றுக் கூடா அவ்வப்போ தெடுக்க வாய்ந்த
எழிலுறு தக்ஷிணா மூர்த்தி விநாயகர் நடேச ராதி
பொழிகலார் படிவம் பல்ல புணர்ப்புலோ கத்த பல்ல
விழிவிருந் தாக இன்றும் விளங்கும்நூ தனசா லைக்கே. 54

சூரைக்காட் டெரிகொண் டாடுந் தொல்சிவ னாட்டங் காண
ஏரைக்கான் றுதறித் தற்கோ ரெற்புடம் பிரந்து பெற்ற
காரைக்கா லம்மை செம்மைக் கவினுடைப் படிமந் தானும்
சீரைக்கால் சோழர் செப்புப் படிமத்து ளொன்றாய்க் காணும். 55

சால்புறு சைவத் தெய்வ வழிபாட்டில் நாயன் மார்கள்
நால்வரும் நால்வர் பாவும் நித்யநை மித்யத் தேற
நூல்வழி விதியுங் கண்டு நடைமுறை வலுவு மாக்கி
ஏல்வுறு மேனை நாயன் மார்க்குமீ தேற்கச் செய்தார். 56

அங்கமர் தஞ்சைக் கோயிற் கதுநடைப் படுத்த வாறே
இங்குதங் கோயில் யாவு மியன்றிட விதியுஞ் செய்தார்
இங்கிது சோழர் சார்பி லீழங்கொள் சைவ ஞானத்
துங்கநல் விருத்தியாகத் தொழுதுமேற் கொள்வர் தூயோர். 57

தத்தம தான்மி கத்துத் தகுதிக்கங் கீடா மாக்கள்
எத்தகு சமயஞ் சார்ந்து மியல்சுதந் திரம்நி லாவ
மெத்துசீ ரிராஜ ராஜப் பள்ளியே முதலாச் சோழர்
புத்தவா கமத்தோர் வேண்டுந் தளிகளும் புதுக்கி யீந்தார். 58

இத்திற மிராஜ ராஜன் அவன்மகன் மகன் மகன்னென்
றத்தகு தொடர்பி னைஞ்ஞான் குறமுநான் காண்டு காலம்
புத்தெழி லார்பு லஸ்தி தலைநக ராக் கொண் டாண்ட
வித்தகச் சோழர் தம்முள் விறல்கொள்ரா ஜேந்தி ரன்றான். 59

நாற்படை வளமும் நந்தாக் கடற்படை வளமு மோங்கி
மாற்றல ரெதிரக் கூசும் வல்லாண்மை மிகுந்து தேங்க
மேற்சென்று கங்கை கொண்டு மிளிர்தென்கீ ழாசி யாவின்
பாற்பல பகுதி கொண்டு பராவரும் விறலோ டுற்றான். 60

இத்தகு வெற்றி யாள னீழத்துத் தென்பால் மேல்பால்
ஒத்துறத் தன்கீ ழாக்கி ஒருகுடை நிழற்கீ ழாண்ட
அத்தகு பொற்காலத்தே அணிதிகழ் மாதோட் டத்தும்
உத்தம நல்வி ருத்தி யுன்னத முறச் செய்வானாய். 61

சிந்தையைச் சிவனுக் காக்குந் திறல்மிகு மிராஜ ராஜன்
முந்துறக் கருத்திற் கொண்டமுதல்வர்கே தீச்ச ரற்குச்
சந்தமார் நகரொன் றாக்கி யிந்தரா ஜேந்தி ரன்றான்
தந்தைபின் மைந்த னென்னுந் தகவுரை தளிர்ப்பச் செய்தான். 62

சீர்மலி கோண சைலந் திருநிகழ் புலஸ்தி சைவத்
தேர்பெறப் புதுக்கும் பாணிக் கேலும்பன் மடங்கா மாந்தை
நேர்பெறு பணிகள் ராஜேந் திரன்புரிந் திட்டஃ திந்தப்
பார்புகழ் பதியா மாசெய் பரிசினிப் பகர லுற்றாம். 63

**புலநரவைப் படலம் முற்றும்.**

**ஆகத் திருவிருத்தம் 436.**

## ஆறாவது
## இராஜராஜபுரப் படலம்

வண்டரா லிக்குங் கொன்றை மதிச்சடை யார்தந் தில்லைத்
தொண்டரா லிக்கு மன்றிற் சுருதிபண் செயநின் றாடல்
கண்டவா மிகுந்து காதற் றிருவிசைப் பாமுன் பாடுங்
கண்டரா தித்தர்த் தோற்றுங் கவின்குல மரபு வாழி. 1

சீர்பயில் தில்லை மூவா யிரர்தமி லொருவ ராக
நார்பயில் நடன ராஜப் பிரபுநின் றியன்ற பான்மை
ஏர்பெற ஏத்தி நின்றா ளெய்துவ தென்று கொல்லென்
றார்வமுற் றிரக்குங் கண்ட ராதித்தர் மகிமை வாழி. 2

வெங்கோல்வெவ் வேந்தன் தென்னாடதனொடு மீழங் கொண்ட
செங்கோலன் கோழி வேந்தன் செம்பிய னென்னத் தன்சீர்
மங்காம னிறுவி யீழச் சரித்திர வாய்மை யுஞ்சொல்
எங்கோவா மரச ஞானி இவர்தமாற் சோழ வம்சம். 3

எய்துமோ ரிருநூ றாண்டுக் கீடில்பல் வளமும் பல்கித்
தெய்விகப் பொலிவார் கோயிற் றிருப்பணிக் கலைமேலோங்கிச்
சைவநன் னெறியே ராஜாங் கத்தமர் தகுதி மேவச்
செய்பணி நலத்தி னோங்கிச் சீர்த்தது வைய முற்றும். 4

இங்கிவர் தமுளோர் ராணி ஏர்கொள்செம் பியன்மா தேவி
தங்குலப் பேர்த்தி யான குந்தவை பேரன் தேவி
துங்கவா னவன்மா தேவி மூவருஞ் சிவப்ப ணிக்கே
தங்குல வளங்க ளிந்த சரித்திர முலகு தேற்றும். 5

பெண்களே சிவப்ப ணிக்குப் பெரிதுமுன் னின்ற அந்நாட்
பண்புறு மாண்கள் சேவை பகர்வதென் கருவூர்ச் சித்தர்
நண்புறு மிராஜ ராஜனாங்கண்டா தித்தர் பேரன்
எண்பெறு மவன்றன் மைந்த னெனுமிரா ஜேந்தர னின்னோர். 6

தாமுறு தீரத் தாலுந் தகவுயர் வெற்றி யாலும்
ஆம்பெரு வளங்கள் முற்றும் அண்ணலார் சிவனார் கீர்த்தி
மேம்படுஉஞ் சிவால யங்கள் விதித்தற்கே விநியோ கித்துத்
தாங்கள்கற் கலைப்பணிக்கோர் சரித்திரம் படைத்திட்டார்கள். 7

முன்மைபின் மைகள்கா ணாமே முழுதுல கதிச யிக்க
நன்னில் மாருந் தஞ்சை நகர்தனில் ராஜ ராஜன்
பொன்னமர் கோயில் நாமம் பிருஹதீஸ் வரமென் றோங்க
முன்னரே வகுத்தா னாங்கம் முதுதளிப் பெருமை தேரின். 8

வாசலிற் படுத்த நந்தி வளர்த்திபன் னான்கு பாகம்
பேசுறு நீளம் ஏழு குறுக்கள் விரண்டா வொற்றைக்
காசறு கருங்கற் பாறைச் சிற்பமாய்க் கவினு மென்னில்
ஏசறு மிவன்செய் கோயி லெடுப்பினி இயம்ப லென்கொல். 9

மூலவர் வளர்த்தி மும்மூன் றாமுழ மாகு மன்னார்க்
கேல்கரு வறைவ ளர்த்தி இருபதோ டடியைந் தாகும்
மேலுறு விமான மாக விளங்குயர் தக்ஷண மேரு
நாலுமுப் பதினோ டைந்து நவிலடிப் பாங்கிற் றாக. 10

விமானமேற் றளக்க லெண்பான்தொன்னிறை கோணமெட்டுஞ்
சுமாரிரு பாக நீள அகலத்தெட் டிரட்டை நந்தி
தமாரிடை நிறுவு செப்புக் கலசமெண் முழம தாகச்
சுமார்முவா யிரங்க ழுஞ்சுப் பொற்கவ சதோ டொன்றும். 11

எழிலுறு சிற்பக் காட்சி எண்ணினுக் கடங்கா சிற்பத்
தொழிலறி திறவோர் தாமுஞ் சொலவொன்றும் புலனா காமே
விழிபிதுக் கிடுவ தல்லால் விளம்புதற் கியலாப் பாங்கிற்
பழிதவி ரிராஜ ராஜன் பண்ணினான் பரனுக் கென்றே. 12

பேசுறு பிருஹ தீஸ்வர் கற்றளிக் கவின்முன் காண்பார்
ஏசறு சிற்பக் கோயி லெனவிது இயம்பற் கொவ்வா
மாசறு சிற்ப கூட மெனிலொக்கு மதுவொவ் வாதேல்
ஆசில் நூ தனசா லைப்பே ரதுவொக்கி லொக்கு மென்ப. 13

இத்திறந் தன்வளங்க ளியாவையுஞ் சிவற்கே யாக்கு
மத்தக வதனா லன்றே அவன்படை விரலித் தன்கால்
வைத்துள சுவடு தோறும் வெற்றிமேல் வெற்றி யாக
எத்திசை யினுந்தன் னாணை யிலங்கிடத் துலங்க லானான். 14

தந்தைப்பின் மைந்த னென்னுந் தகவினுக் குரைகல் லாத
மைந்தன்ரா ஜேந்தி ரன்வான் மிகுபுகழ்க் கங்கை கொண்டு
செந்திருக் கடாரங் கொண்டு திகழ்கிழக் கிந்திய தீவும்
முந்துறக் கொண்டு பாரில் முழுவெற்றி விநோத னாகி. 15

போர்ப்படை வீரர் சென்ற பொலிகல நிரைக ளெல்லாம்
சீர்ப்புறு திரவி யங்கள் திறைகொடு மீள மீள
ஆர்ப்புறு பொன்னி நாடன் றர்த்தமார் பொன்னா டாக
ஏர்ப்புறூஉ மிவைக ளெல்லா மிறைவன் சொத்தென்ன நோக்கி. 16

தஞ்சைகாண் ராஜ ராஜேச் சரத்தினற் றரத்தி னின்னும்
விஞ்சுபொற் சிற்ப மேன்மை விலாசமொ டுயர்வுற் றோங்கி
மஞ்சுதோய் விமானக் கோயில் வான்கங்கை வெற்றி மேன்மைக்
கெஞ்சலில் சான்றாய் நிற்க வியற்றியீந் திட்டா னாக. 17

பேர்மிகு சிவனே யென்றும் பெரும்பெரு மானெனன் றுற்ற
சீர்தனக் கழிவில் சான்றாத் திகழுமிவ் விரண்டன் மாண்பும்
நார்மிகு ஞான வள்ளல் நம்பிரான் கருவூர்த் தேவர்
சீர்மிகு மிசைப்பா விற்சொற் சிற்பத்து மிலகக் காண்டும். 18

**வேறு**

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரிய நீ யென்றும்
அண்டமோ ரணுவாம் பெருமைகொண் டென்றும்
அங்கதற் கின்னுமோர் படிமேல்
அற்புதத் தெய்வ மிதனின்மற் றுண்டே
யென்றுநின் றதிசயித் தயர்ந்தும்
சொற்புனை கருவூர்த் தேவர்தம் பாவிற்
றுலங்கிடு மாண்பு சொல் வரைத்தோ. 19

உலகெலாந் தொழவந் தெழுகதிர்ப் பரிதி
யொன்றுநூ றாயிர கோடி
அலகெலாம் பொலிந்த திருவுடம் பச்சோ
அங்ஙனே அழகிதோ வரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
என்றுமற் றிவளவி னோவார்
தனியரெத் தனையோ ராயிர வருமாம்
தன்மையர் தாமிவ ரென்றும். 20

பத்தொடு மூன்று முழச்சுற்றுக் கங்கை
கொண்டசோ ழேச்சரத் தாற்கும்
அத்தகு பிருக தீஸ்வரத் தாற்கும்
அமைவுறு திருவுருப் பெருமைக்

கொத்துறு மாடக் கோயில்காண் சிற்ப
உன்னத நேர்த்தியுங் காணச்
சித்தமே வருளாற் றேவராங் குரைத்த
திருமுறை நயந்தெரிந் துய்வாம். 21

இத்தகு கருவூர்த் தேவர்வாக் கினிலான்
றென்றுநின் றிலங்குசீர்க் கோயில்
வித்தக ரிருவர் தமிலொரு வரெனா
விளங்கிரா ஜேந்திரன் மருவும்
அத்தகு காலத் தப்பன்பின் மகனாய்
அணிதிக ழீழமு மரசாள்
மெய்த்தக வதனால் விளைந்ததோர் புதுமை
விளைவினி மகிழ்தகக் காண்பாம். 22

புலத்திநன் னகரே தலைநக ராகப்
பொற்புறு மீழமன் றாண்ட
வலத்தியல் ராஜ ராஜனா ளுகைக்கு
வசப்படா திருந்ததென் தென்மேல்
நிலத்தினும் ராஜேந் திரன்தன தாணை
நீண்டுற விரிந்தியன் றிடுமா
பலத்தியல் போர்கள் பலபல நடத்திப்
பகர்விஜ யாதித்த னானான். 23

அங்கதன் சார்பிற் கண்டிமாத் தளையே
றுகுணையே கழனியா முதலா
எங்குமா ளுகைசெய் திருந்திடு வோருள்
இயல்திறை யளக்குநர் தவிரப்
பொங்குமா னத்தாற் புகல்பெற மறுத்தா
ரரசெலாந் தன்னடிப் படுத்தி
எங்குமீ ழத்திற் புலியலாற் கொடியொன்
றிலையெனு நிலைமைசா தித்தான். 24

நிலைமைமற் றிதனா லுபராச தானி
யாகவு மொன்றுற வேண்டி
அலைபடு கடலார் மாதோட்ட மதனை
யரண்செயு மவசியந் தோன்ற
மலைபடு திறலார் மதிலொடு புறஞ்சூழ்
அகழியும் வரன்முறை யீண்டக்
கலைபடு சிற்ப விதிபிறழ் கில்லாக்
கவின்நக ரமைத்தல்கா தலித்தான். 25

சோர்ந்து தோற் றகன்றோர் செழியர்சா ளுாக்கர்
துணைவலி மேற்கொண்டு மீண்டு
சார்ந்திடு சார்பு முளதத னானுந்
தன்கடற் படைவதி வதற்காங்
கேந்திர மைய மதுவாத லானுங்
கேதீசர் தலமென லானும்
மாந்தையயோ ரிராச தானியா யன்னோன்
மதித்ததி லருத்தமுண் டன்றே. 26

அன்றொரு காலத் தநுராச புரந்தற்
குபராச தானியாய்ப் பணிய
நின்றுயர் மாந்தை இன்றொரு புலத்திக்
குபராச தானியாம் நிலைமை
நன்றறி மேலோர் லௌகிகத் திழிவும்
நனிமகிழ்ந் தேற்றர வணைத்துத்
தொன்றுபோ லிருக்குந் தூயநா கரிகத்
தொன்மையின் நன்மைமுன் காட்டும். 27

மாதமர் பாகர் மகிழ்திருக் கேதீச்
சரந்தனை மையமாக் கொண்டே
ஓதமே புறோத மொருபது மைலாப்
போதுவிஸ் தாரமுற் றமையத்
தீதக லரச நகர்விதி முறையிற்
றிறம்பிடா வாறுசெய் தமைத்தான்
மோதுபோர் வெற்றி விஜயனாம் ராஜேந்
திரப்பெயர்த் திருவமர் நிருபன். 28

போதுமந் நாளின் மாதோட்ட மன்னும்
புகழொளிர் குடிமகார் தமக்கங்
கேதுமோ ரிடையூ றிலாவகை புரியு
மியற்படு விதிமுறை தெரித்தும்
தீதகல் வாழ்க்கை வசதிகட் காகுஞ்
சிறந்தசா தனமெலா மமைத்தும்
கோதகல் வளங்கள் குறைவற நல்குந்
தொழில்நிலை குணிப்பில் வகுத்தும். 29

பார்ப்பனர் முதலா நாற்குலத் தவரும்
பயில்தம தொழுக்கவா சாரஞ்
சீர்ப்புற வதிதற் கேற்புறு நிலைகள்
யாவையுந் தெரிந்து நன் கமைத்தும்
நீர்ப்பொலி தடாக மோடுப வனங்கள்
நீளிடை தொறுந்தொறு மமைத்தும்
தார்ப்பொலி மார்பன் வளவன்ரா ஜேந்தரன்
தகுதியி னமைத்தவிந் நகரில். 30

நெட்டிலை நடுவண் நீண்டுள நரம்பிற்
கிளைத்திரு பாலுநீண் டோரங்
கிட்டிடு மரபிற் கிளைநரம் பனைய
கேழ்கிளர் பாலாவி யாற்றிற்
றொட்டுநீண் டிருபாற் றுனைகதி யினிற்செல்
தூம்புடைக் கால்களோ ரநேகம்
விட்டுவிட் டளவா ரிடைவெளி யமைய
வேறுவே றணிபெற வமைத்தே. 31

பாலாவி வெள்ளம் பரந்திழி கால்கள்
கடப்பதற் கேயுமம் பிகளால்
மேலான போக்கு வரத்துநன் கியல
விதிமுறை வேண்டுவ சமைத்தும்
நாலாதிக் கினிலும் வாழ்குந ரிடையே
பரஸ்பர நண்புணர் வூரத்
தோலாத மேன்மை வளவனாய்ந் தமைத்தான்
துல்லிய நடைமுறை யொழுங்கு. 32

கதித்தெழு கடல்நன் னிலத்தினிற் பரந்து
கழிநில மாக்கிடா வண்ணம்
குதித்தெழு மலைசார் கடற்றள மகழ்ந்து
கூம்புடைப் பெருங்கல நிரந்து
மதித்திடு சிறப்பின் வாணிபத் தோடு
வயல்நன்செய் நிலவளத் தானும்
நிதித்தொகை யீண்டி வளர்வுறு நிலைமைக்
கேற்பன நெறிமுறைப் படுத்தே. 33

அன்றொரு கால மகிலலோ கமும்வந்
தணைவுறு மாபெருந் துறையாத்
துன்றுபல் பண்டந் தொகுத்திட வோங்கித்
தொல்பெருஞ் சந்தையா யுலகில்
நின்றுயர் கீர்த்தி திசையெலாம் நிலவ
நிலைப்படு மாந்தைமற் றொருகால்
இன்றுதன் பழமை நினைவுகூர்ந் திடுதற்
கேற்பன வாய்ப்புறக் கண்டே. 34

பண்புறு ராஜேந்திரன் வகுத் தமைத்த
பாங்குறு நகரமற் றதுதான்
எண்பெறு மகழி புறமதி லரணம்
புறநகர் இடைநகர் காணுங்
கண்கவர் வனப்பி னகநகர் எனுமா
கவிநலப் புலவர்தாம் போற்றும்
நண்புறு காவ்ய நடைநெறி வழக்கின்
நாடுசீர்த் திகளினி நவில் வாம். 35

**வேறு**

உறவாரும் உலகுபடைத் ததுபுரக்கு முயர்பரமன்
அறையாரும் ஆழிவட்டக் கிரியாக்கி அதுசூழும்
புறவாழிக் கடலுமொன்று பொருந்தவமைத் திட்டதிறம்
நிறைவாரும் நகரமைக்கும் நிருபரெலா மனங்கொண்டே. 36

நகர்ப்புறஞ்சூழ் பேரரணும் நாடுமரண் சூழ்ந்துவர
மிகப்பெரிய அகழியொன்றும் விதித்திடுமந் நெறிமுறையே
சகத்திலுயர் ராஜேந்தரன் தான்விதிமா தோட்டநகர்க்
கிகத்திலுயர் அகழியுமாங் கியற்றினனற் செயற்றிறனால். 37

அக்னிரபா மாயதனம் ஆபோக்னி ராயதனம்
அர்க்கனபா மாயதனம் ஆபோர்க்கற் காயதனம்
இக்கிரமத் தெவனறிவா னவனாய தனவானென்
றொக்கவிசைத் திடுவேத ஒலிதெரிக்கு மமைதினியில். 38

அனைத்தினுக்குங் காரணமாய் அனைத்தினிலுந் தானுளதாம்
இனைத்ததொரு மேன்மையுறு நீர்மகிமை யிருக்குண்மை
வனைத்திசைக்கு மாகண்டங் கதுவிதற்கு மாயதன
மெனத்திகழ்க வெனுங்காட்சி யிலங்கவமைத் திட்டது போல். 39

நிலமனைத்தும் நீர்சூழ நிலவுமியல் பனுசரணை
குலவவுளங் கொள்வதுபோற் கோவேந்தன் வகுத்தமைத்த
அலகிலசீ ருறுமகழி ஆக்கிரமித் தெதிர்வருவார்
விலவிலக்க வெருட்டுறுநீர் விலங்கினங்கட் குறையுளுமாம். 40

நல்லபாம் பென்னினுமே தனைநலிவார் தமைவெருட்டப்
புல்லுநஞ்சும் படப்பொறியும் பொறியுமிழுந் தழல்நோக்கும்
வல்லவா காட்டுதல்போல் மற்றிவையும் மேவுதலால்
நல்லநகர் மாந்தையெனும் நலத்தினுக்கு மிழுக்கின்றே. 41

கொலைமலிவன் சுறவுகளக் கோரமுத லைகளலைக்க
மலைமலிவன் பாறையுரு மருவுதிமிங் கிலங்கலக்க
நிலைகொளா தலைந்தலைந்து நுரைதிரைமேற் பொங்ககழி
உலைகொதிபாற் கடாரமென உரறியடித் துழறிடுமால். 42

ஆழங்காண் பரியவென ஆரறிஞர் தெரிப்பவற்றுக்
கீழங்காண் மாதிரியொன் றிதுவெனவல் லார்கருதக்
கீழங்காண் மாலவற்குங் கிடைத்ததலாக் கீழ்த்தலத்தே
சோழன்காண் மாந்தைநகர்த் துன்றகழி நின்றுலவும். 43

கண்டல்நெடு நீர்முள்ளி காரையொடு சூரையெனு
முண்டவகை யாவையுமாய் மொய்த்துமலி மிளைசூழக்
கொண்டகழி நீரகழி யண்டியதன் நேர்மேல்போய்
மண்டுபுற வரண்தானும் மதிமருளும் வகையினதே. 44

எழுந்துயர்ந்து பரந்துகுவிந் திருங்குன்ற மெனவாங்கும்
அழுந்து துயர் பலவிளைத்திட் டண்டலரை யுயிர்வௌவ
எழுந்துதொழிற் படுந்துப்பின் எந்திரவன் பொறிகள்பல
செழுந்திருவார் மாதோட்டச் சீரரணுக் கரணாவ. 45

இருந்துமறைந் திலக்கையெறி ஏவுகணை யென்றுலகில்
வருந்திமுயல் விஞ்ஞான வார்ப்புகள்மற் றென்செய்வ
அருந்திவருந் திப்படைக்கும் அக்கினிக்குண் டென்செய்வ
எரிந்துவிழுந் திலக்கெறியிவ் வரண்பொறிகட் கெதிர்ப்படுமேல். 46

ஏய்ந்தவிறன் மிடுக்கினன்னாள் எனைவலுவார் பகைப்படையுஞ்
சார்ந்தணைய வொட்டாத தனித்துவமார் பெருந்திறமைக்
காந்தவரண் போய்த்தென்னுங் கழிவிரக்கங் கழிந்தகன்று
மாந்தையினும் வல்லரண மாந்தையா மெனலாய்த்தே. 47

வாய்ந்தவர ணிதனகத்து மற்றொரு நன்னீரகழி
ஏய்ந்தவதற் கெதிர்மேல்போம் ஈடிலக வரணோடும்
காய்ந்தசினக் களியானைக் காவலன்ரா ஜேந்திரன்நன்
காய்ந்தமைக்கு மாந்தைநகர்க் கழிவில்வலு வாயினவால். 48

**வேறு**

பொன்ன வாமெழின் மாந்தைகாண் புறநகர் வரைப்பின்
மன்னு வான்தரு நிரைதொறும் வண்குயில் பூவை
சொன்ன வாசொலுங் கிளியிவை மாந்தைத்தொல் புகழே
இன்ன முஞ்சொலிச் செவிகுளிர் வித்திசை மிழற்றும். 49

சீதை பந்தனந் தவிர்த்திடச் சேதுபந் தனஞ்செய்
மேதை ராகவன் படையின ரோர்பலர் மிகுசீர்க்
கேது நாதனா ருபாசனைக் காவினும் விட்டுப்
போத ரார்கொலென் றயிர்க்கவும் நிற்குமவ் வனமே. 50

வந்து கூங்குயின் முரசொடு வண்டியா ழிசைமென்
சந்த வான்கிளி சாரிகை வாரப்பாட் டெழவே
முந்து மோஹன வேனிலான் தனைமிசைக் கொண்டு
மந்த மாருத மூர்வரு மாண்பிற்றவ் வனந்தான். 51

வேனி லானநு சரணையிற் றேனிலா வயரும்
மானி லாவிய கண்ணியர் மைந்தர்மட் டன்றி
ஊனி லாவுயி ரிரண்டொன்றாஞ் செந்துக ளனைத்துந்
தேனி லாக்களி மகிழ்ந்திடத் திகழுமவ் வனமே. 52

இந்த வான்பொழின் மேகலை சூழ்வர அகத்தே
பந்தொ பஸ்தனி படைகுடி கூழவை மூன்றும்
எந்த நன்னகர்க் குளவினும் மேம்பட இறைமை
நந்து பேர்மன்னன் நயத்தக வமைத்திருந் தனனால். 53

மோது போர்க்களி றிரதமாள் முடங்குளைப் பரிமா
சாது ரங்கமாந் தகவினி மைந்தன அவற்றிற்
கோது மேன்மைக ளுலப்பில ஒருசில பகர்வாம்
காது போரிரா ஜேந்திரன் சீர்மணங் கமழ. 54

அந்தி லாங்கொரு சாருறு மானைப்பந் திகள்தாம்
முந்த வீழத்துப் போர்புல வென்றரா ஜேந்தரன்

சிந்து நீர்வழி குன்றுகள் பலவும் பந் தனஞ்செய்
திந்த மாநகர்க் கிட்டுவைத் தனனென நிற்கும். 55

கந்து கத்தனி நிரையெலாங் கங்கைகொ ளந்நாள்
சந்த மாரதன் றிரையெலாந் தன்சமர்த் தொளிரப்
பந்த னஞ்செய்து பருமரக் கலங்களி னேற்றி
வந்து சேர்த்தனன் கொல்லெனு மதிசயந் தோற்றும். 56

பார்கு லாம்பெரு மரமெலா மாழி பார் கொடிஞ்சிப்
பேர்கு லாம்பல வுருக்கொடு பிணைந்துரா ஜேந்த்ரன்
போர்கு லாங்களம் புகுந்திடச் சமைந்துநின் றனபோல்
தேர்கு லாம்பல நிலைகளுந் திகழுமற் றாங்கே. 57

துங்க வீரசா ளுக்கியர் ராஷ்டிர கூடர்
கங்கை பாயுநாட் டாரியர் ஹொய்சலர் கடாரர்
சிங்க ளத்தவர் தமிழரென் றியாருஞ்சேர் காலாள்
பொங்கு பூதலர் காட்சிச்சா லையிதெனப் பொலியும். 58

துங்க வீடுற வூக்கியும் தொட்டபா சப்பேர்த்
தங்கள் காற்றளை யறுக்கலாத் தகுவர்போற் றுயரும்
பொங்கு மானத்தாற் போர்ச்செல வூக்கியும் பிணித்த
சங்கி லித்தளை யறாமையிற் சலிப்புறு வேழம். 59

பாய்கி லாவணம் பந்தியிற் றடையுண்டும் வேட்கை
ஓய்கி லாமையி னுத்பத னித்துழல் பரிமா
ஆய தன்னெதி ராளியை யண்டிமோ திடற்கு
வாய்கி லாமையிற் றுள்ளித்தூண் மோதுவா ரொப்ப. 60

போர்க்க ளத்துறு காட்சிகள் கனவினிற் காண்தோ
றார்ப்ப ரித்துர றிப்பியல் புடைத்ததிர்த் திடலால்
கார்ப் படுத்திடு மிரவினுங் கண்படைக் கிடையூ
றேற்ப டுத்திடு மியல்பினர் முகாமிற்போர் வீரர். 61

நின்ற பான்மையி னிகர்வரு வேகத்திற் சுற்றித்
தன்ற னிப்பெருஞ் சாதனைப் பயிற்சிசெய் படைத்தேர்
ஒன்று தம்மகோட் பாட்டினி லுறுதிவாய்த் திடாமே
நின்று பல்தரஞ் சுழன்றுமாய் நீர்மையார்ப் பொருவும். 62

ஆனை யேற்றுகப் பார்களு மணிபரி யாதி
ஏனை யேற்றுகப் பார்களு மெறிபடைப் பயிற்சிக்
கான சீருகப் பார்களு மாகியெஞ் ஞான்றும்
சேனை வீரர்தஞ் செய்தொழிற் பயிற்சியிற் றிறம்பார். 63

மதமி குத்துயர் களிற்றினப் பிளிற்றொலி யோர்பால்
குதுகு துப்புறு குரகதக் கனைப்பொலி யோர்பால்
விதவி தப்படு தேர்கட வொலிவகை யோர்பால்
கதக தப்புறு வயவர் தங் கர்ச்சனை யோர்பால். 64

இன்ன சாதுரங் கம்வளர் வளாகத்தி னயல
மன்னன் வெற்றிகாண் வேற்றுநாட் டிறக்குவ பலவும்
மன்னு மீழத்துள் வளாகத்துத் தொகுவன பலவும்
என்ன ஈண்டிய பண்டங்கள் தொகுநிலை பலதாம். 65

முன்னோர் காலத்தி னுலகெலாம் மோப்பங்கொண் டணுக
வன்ன வாடைக ளாற்கவர்ந் திழுத்தநன் மாந்தை
சொன்ன வந்நெச வுத்தொழிற் றுறையின்மேம் படுதற்
கென்ன தான்தடை எங்கெங்கு மாலைகள் மலிந்த. 66

கிட்டிக் கங்கையுங் கடாரமுங் கிழக்கிந்திய தீவும்
முட்டி வென்றுதென் னகமுந்தன் னாணையிற் பிரியா
தொட்டக் கொண்டரா ஜேந்திரன் மாந்தைக்குப் பருத்தி
பட்டு நூல்படை படைகளாய்க் குவிந்தன பரிசின். 67

இன்றுங் காண்வர வெங்கெங்கு மிரும்புருக் குலோகத்
துன்று தொல்லுருக் காலைநற் சுவடுகள் தோன்றும்
நன்று மாந்தையி னன்றுருக் காலைகள் மலிந்த
என்றி டல்மிகை யெங்கெங்கு மவைபுற நகர்க்கே. 68

நால்வி தப்படு முற்பத்தி வகைகளும் மலிய
எல்வி தத்தினி லிவைவிநி யோகமாம் பரிசின்
மேல்வி தந்திடு புலத்தியின் மேவல்போ லிங்கும்
சால்பு மிக்குறு வாணிகக் குழுக்களுஞ் சார்ந்த. 69

அரிய தந்தொழிற் றனித்துவம் பேணிப்போற் றிடுதற்
குரிய பான்மையி னொரோவொரு பகுதிய றொரோர்பால்
மரீஇய தன்மையால் வாணிபர் கம்மாள ரென்பேர்ப்
பெரிய சேரிகள் புறநகர்ப் பாங்கினில் நிறைவ. 70

சோழ மார்தரு பிருகதீஸ் வரர்கங்கை கொண்டாற்
கீழக் காணிக்கை யாய்ச்செலு மிலுப்பைப்பால் மாந்தைக்
கீழை நற்றிசை யிலுப்பையங் கடவையிற் றொகுத்த
கேழில் சாலைகள் தாமுமிப் புறநகர்க் கிடப்ப. 71

**வேறு**

புறநகர் மாண்பீ தாக இடைநகர் நாடிக் காண்பார்
அறமொடு பொருளின் பம்மென் றான்றவர் வகுத்த மூன்றும்
செறிவுற ஒன்றி மல்கிச் சீர்த்திடு வாழ்வொன் றுண்டென்
றறிஞர்சொல் வாய்மை மற்றிஃ தச்சொட்டா வுணர்த்தக் காண்பர். 72

இந்நகர் தன்னில் வாழ்வார் இழிதக வார்மு யல்விற்
பொன்மலை கிடைப்ப தேனும் பொருந்துமென் றதனுக் கொவ்வார்
மன்னுதம் மரபாசார வழிதவிர்ந் தெய்த லாவ
என்னபே ரின்பமேனு மேற்பதற் கிசைவு தோற்றார். 73

அறவழிப் பொருளை யீட்டி யப்பொருள் துணையா யாரும்
அறவழி யின்ப மார்க என்றதே யல்லால் மையத்
துறுபொரு ளெவ்வா றேனும் வரத்திப்பின் னதனால் யாரும்
அறஞ்செய்க இன்பந் துய்க்க என்ற தன் றாமஃதோரின். 74

நடுவண தெய்த வாங்கே இருதலை யுந்தா மெய்தப்
படுமொழி காட்டி யெந்தப் படியினும் பொருள் செய்வாமென்
றிடுவதங் கொல்லா மேதை வள்ளுவர் இயற்கு றிக்கோள்
கொடுதமிழ் மறையி னர்த்தங் கூர்ந்துணர்ந் திடவல் லார்க்கே. 75

இங்குமேல் விருத்தி கெட்டார் தமுளுங்கீழ் நாட லான
பங்கமா ரொழுக்க மில்லைப் பணச்செழிப் பற்ற வாழ்விற்
றங்குவ ரேனு மாங்கே தரித்திர புத்தி யில்லைத்
துங்கநற் கல்வி கேள் வித் தொடர்பறாச் செம்மை யானே. 76

பொன்னணி மாடப் பத்திப் பொலிநவ ரத்ன ஜாலம்
மின்னொளிர் சோதி கால விழைவுறு சந்திர காந்தம்
இன்னியல் நீர்சுரக்க இரவு நண் பகலாய் வற்பம்
மன்னுவெங் கோடை தானும் மாரியாய் மகிழ்க்கு மாலோ. 77

இந்திர லோகச் செல்வம் இயல்பெறு மளகைச் செல்வம்
சந்திர தரன்கே தீசன் சார்வுறு மாந்தை தான்தான்

முந்திச்சென் றலங்க ரிக்க முறைமுறை போட்டி யிட்டு
வந்துகொண் டிருந்தா லன்ன வளமிகும் மாட மெல்லாம். 78

துவளிடை யலைக்குங் கும்பத் துணைமுலை வேது கொண்டும்
தவளமுத் தணிகள் கொண்டுந் தாங்கரு மதன வெப்பால்
உவளகத் துயங்கும் மைந்தர்க் கொற்றிவாய்ப் பவளச் செப்பிற்
றுவளுமௌ டதமு மூட்டிச் சுசுரூஷை தலை நின் றாங்கே. 79

மழலைமந் திரத்தி னாலுச் சாடனம் மதனக் காதல்
பொழிகுளி ரன்பு நீராற் புரோக்ஷணம் பண்ணித் தேற்றும்
விழிமருட் டழகி யர்தம் விந்தைவைத் தியத்தின் மாண்பும்
பழகுமாந் திரிக வீறும் பயில்வன மாட மெல்லாம். 80

மாடக நரம்பிற் கைபோம் வளரிசைக் குறிஞ்சி வாய்போ
தூடுபுக் கொளித்தான் காத லுணர்வெழத் தியங்கி வர்ணம்
பாடுவா யிதழ்தம் பித்துப் பண்ணுளர் நரம்பி னாடல்
நீடுகை விரலு மோய நின்றது நின்ற வாறே. 81

கோலியுங் கோலா தாக வாயிதழ் நிற்பக் கையின்
வாலிய விரல் நரம்பின் வைத்தது வைத்த வாறே
பாலிய முகப்ப ரப்பிற் பசப்பூர அயர்ந்து வைகும்
நீலிருங் குழலார் காட்சி நிலைகளு மலிவ மாடம். 82

மான்பிணை யென்னத் துள்ளி மருள்விழி யுருள நோக்கிக்
கான்பிணை வேரித் தொங்கல் கருங்குழற் பிணைவுற் றாட
வான்பிணை மதியைச் செங்கை வாங்கியெற் றிடுவார் போல
ஊன்பிணை தோற்பந் தாடும் யுவதிய ரரங்கு தோறும். 83

மாந்தைசேர் வணிகச் செல்வர் மனைகளும் வேற்று நாட்டிற்
போந்தவ ணுறைவார் செல்வ மனைகளும் புகுமுல் லாச
மாந்தர்சேர் விடுதி தாமும் பிரமுகர் மனையுந் துன்றி
ஏந்தெழில் மாந்தை சார்ந்த இடைநகர் துலங்கு மாலோ. 84

பல்லின மாந்தர் தோற்றம் பல்வித ஒழுக லாறு
பல்லின உடைவி சித்ரம் பல்வித போக போக்யம்
பல்லின மொழிவ ழக்குப் பல்விதப் பயில்வு மாக
எல்லொளி மாந்தை யந்நா ளுலகமா நகராய்த் தென்ப. 85

எங்கெங்கும் கலைஞர் கூடம் எங்கெங்கு மறிவா ராய்ச்சி
எங்கெங்குந் தரும சாலை எங்கெங்கு மணைந்தோர்ப் பேணல்
எங்கெங்கு மான்றோர் காட்சி யெங்கெங்கு மொழுக்க மாட்சி
எங்கெங்கு மாடல் பாடல் இடை நகர் வளாக மெல்லாம். 86

இடைபடு மத்ய லோகத் தின்பத்துன் பார்ந்திட் டும்பர்
இடைபடா வின்ப மார்தற் கியைந்துசெல் குநர்க ளென்ன
இடைநகர் தணந்துட் செல்லு மெனைவருந் தேவ ராவர்
இடைபட இமைப்பிற் காட்சி யெஞ்சுமென் றஞ்சி நெஞ்சம். 87

குலஞ்செய்புண் ணியமுங் கோயிற் பணிசெய்புண்ணியமும் ஓவில்
பலஞ்செயும் விஜய ராஜேந்திரனிப்பார் முழுதி னுக்கும்
நலஞ்செய்புண் ணியமும் ஒன்றி அகநகர் நாமந் தாங்கித்
தலஞ்செய்புண் ணியமார் மாந்தை தனையலங் கரிக்க நின்ற. 83

தவளவெண் மாடச் சோதி தனிவிசும் புயர்ந்து மீப்போய்
இவளவென் றளக்க லாகா எழில்மிகக் கெழுவு காட்சி
பவளவாய் வாணி கேள்வன் பராபரன் முடியை நாடித்
திவளும்வெள் ளனமா யின்னுஞ் சென்று கொண் டிருந்தா லொக்கும். 89

ஆறு பாய்ந் தென்ன மேவி யகநகர் அகடு போழ்ந்து
வேறுவே றியலும் வீதியனைத்தும்மே லவன்வெண் திங்கட்
கூறுசேர் மலிவுக் கேதிச் சரன்புகழ்க் கோயில் வீதி
ஏறுசீ ரிராச வீதி யெனக் கொடு கிளைத்துச் செல்லும். 90

எத்திசைப் பெயர்வார் தாமும் ஏறுடை யீசந் சேரும்
அத்திசை நோக்கிச் செல்க எனுமறி வுணர்த்தி நிற்குந்
தத்துவ விளக்கந் தாங்குந் தனியமைப் பிதுரா ஜேந்தரன்
மெத்துபண் டிதசோழன்னென் மேதக வுணர நிற்கும். 91

மாடமா ளிகைகள் மற்றுங் கூடகோ புரங்க ளெங்கும்
ஈடமர் புலிக்கொ டிப்பாங் கேறுடைக் கொடியெ முந்து
நீடுவிண் ணளவி நிற்ப நிலமாளு மிறைமை யென்றும்
ஆடுமம் பலவ னாணைக் கமைந்துகீ ழடங்கல் காட்டும். 92

தாயிற்றண் ணளிமி குந்த தயாபரன் கேது நாதன்
கோயிற்றன் னிதய மாகக் கொண்டெழுந் தகவினாலே
ஆயிற்றன் மேன்மை யொன்று மளக்கொணா அகந கர்தான்
கோயிற்பட் டினமென் றந்நாட் குலவிய சிறப்பு முண்டே. 93

செந்திரு மருவுந் தொன்மைச் சீர்மிகுந் துலகம் போற்றும்
இந்தநற் பட்டி னந்தான் இராஜரா ஜன்னென் பேர்கொள்
சுந்தரச் சோழன் மைந்தன் மைந்தன்ரா ஜேந்தி ரன்றான்
வந்திருந் தரசு செய்ய வாய்ந்தசீ ரேய்ந்திட் டன்றே. 94

கங்கைகொண் டதன்சீர் நிற்கக் கவினக ரொன்று தென்னாட்
டங்கமை தகவுக் கேற்ப இங்குமொன் றமைத்த வீர
துங்கரா ஜேந்தி ரன்னத் தொன்னகர்க் கியற்றி யிந்நாள்
மங்கிமா ளிகைத்திட் டான மாளிகைத் திடலுண் டென்ப. 95

மற்றம் மாளிகைத்தி டற்பேர் மருவுதிட் டொன்று மாந்தை
உற்றகே தீசர் கோயிற் கொருசில கல்தூ ரத்தே
பொற்றையொன் றெனநின் றோங்கும் புதுமைகாண் பினிதே யாங்கண்
கொற்றவ னிருக்கை காட்டுங் குறிகளும் பலவுண் டாயின் 96

சீர்ப்புறு மாக மச்சீர்ச் செழுங்கலைக் குருவந் தந்து
பார்ப்பயில் விருத்தி மேன்மை பாலித்த சோழ ரென்றும்
பார்ப்பனப் பிரிய ராகும் பண்பின ரதனா லிம்மன்
பார்ப்பனர்ப் பேணிக் காத்த பாப்பாமோட் டையுமொன் றாங்கண். 97

மற்றது சொற்ற திட்டின் மருங்கொரு பாங்க ராக
உற்றிங்கு சோழ ராட்சி யுருத்திருந் ததனை நாட்டும்
இற்றைநாட் சான்றா மின்னு மிருநிலக் கீழ்ப்போ யாங்கண்
துற்றவும் பலவா மென்ப தொல்பொரு ளாய்நர் தாமே. 98

மாளிகைத் திடலின் மன்னன் வாழரண் மனைய மைத்திட்
டாளுகைத் துணையா யான்ற வைம்பெருங் குழுவெண்ணாயம்
வாழுநன் னிலைகள் தாமும் மரபுளி வகுத்தன் னோர்கள்
கேளிருங் கிளையு மாகக் கிளைத்திட வைத்தா னாக. 99

இங்கனம் மாந்தை முற்று மேர்கெழு நகர மாக்கித்
துங்கச்சீர்த் தந்தை பேரிற் றுலங்கிடச் செய்வா னாகி
எங்குநன் கிலங்க ராஜ ராஜமா புரமென் பேரே
மங்கல நாம மாக வழங்கிட்டான் விளங்கு சீரான். 100

முன்னந்தென் னகத்திற் கங்கை கொண்ட சோழேச்ச ரம்மென்
அன்னபேர் விளங்க அண்ணற் காலய மமைரா ஜேந்தரன்
மன்னுமிந் நகர்வ குத்த மாண்பய னெய்து மாற்றால்
சென்னிசேர் மதியான் செம்மைத் திருக்கேதீச் சரமாண் கோயில். 101

எண்பெறு கருங்கற் சிற்பத் தியல்பெருங் கோயி லாகப்
பண்புறப் புதுக்கித் தந்தை பேரினிற் பயில வைத்தான்
தண்புற வார்பு லத்தித் தந்தைதன் தந்தை சார்பில்
பண்புறு நாமப் பள்ளிப் படைக் கோயில் படைத்த அன்னோன். 102

இங்கமர் ராஜ ராஜ புரந்தலை நகராக் கொண்டே
பொங்குபூ நகர்க்கப் பாலும் போகிநீண் டகல்வ தாகி
அங்கணோ ரேழேழ் காத மருண்மொழித் தேவ நாடென்
றெங்கணுந் தோன்ற நின்ற தென்பரா லறிஞர் மாதோ. 103

பொங்குபூ நகரிப் பாங்கர்ப் புகல்மண்ணித் தலைய தன்கண்
தங்குமெய்ச் சோழர் காலச் சலவைக்கற் றளிய தொன்றும்
அங்கதற் காமி லிங்க மாவுடை யாள்கள் தாமும்
இங்குதொல் லறிஞர் கண்ட துணிபிதற் கரணா மன்றே. 104

மாந்தைநின் றிராஜ ராஜ புரம்வந்த வாறு சொற்றாம்
வேந்தர்தம் வேந்த னெங்கள் விமலன்கே தீச்ச ரற்கென்
றேந்துகோட் டியானை மன்ன னிராஜரா ஜன்சீர் மைந்தன்
வாய்ந்தகற் றிருப்பணிச்சீர் வகுத்திடு வகைமை சொல்வாம். 105

**இராஜராஜபுரப் படலம் முற்றும்.**
**ஆகத் திருவிருத்தம் 541.**

## ஏழாவது
## இராஜராஜேஸ்வரப் படலம்

மாட மொன்றிற்கு வான்சுதைச் சித்திரம்
ஈடி லாத வெழில்தரு மாறுபோல்
நீடு நன்னக ருக்கெழி லாவது
தேடு சீர்கொள் சிவாலய மென்பரால். 1

ஆல யந்தனை யேநக ரென்றிடும்
மேலை நல்வழக் கம்பற நானூற்றின்
பாலின் மன்னிப் பழந்தமி ழர்நகர்
ஆல யமின் றமையாமை தேற்றுமால். 2

அன்ன தாலிங் கிராஜரா ஜபுரம்
என்னும் மாநகர் காணிரா ஜேந்திரன்

முன்ன மேயங் கிருந்தகே தீச்சரந்
தன்னை வேண்டுந் தகவிற்பு துக்குவான். 3

துங்க நல்லுரு வுந்திரு வும்பொலி
மங்க லச்சிற்பக் கற்றளி யாக்குதற்
கிங்கிச் சோழுற் கிணையில்லை யென்றதன்
வங்கி சத்து மகிமைமே லோங்கவும். 4

தலைமைக் கேற்ற தலையணி போல்நகர்
நிலைமைக் கேற்பதொர் நீள்பெருங் கற்றளி
கலைமை மேன்மை கவின்றிடச் செய்தல்தன்
தலைமை யாங்கட னாதல்க ருதியும். 5

பெருமைக் கெல்லை யெனுந்நிலை சார்சிவன்
அருமை பேணுதற் காவவெல் லாமவன்
திரும ருவுங்கு றிகளுங் கோயிலுங்
கருமை யார்கல்லிற் கண்டுய்வ தாமெனும். 6

இத்தி றந்தன் னுளங்கொண்டும் மேதகு
பத்தி மேவரு பண்பன்ரா ஜேந்திரன்
சித்த மேவு சிவத்திரு வாளராஞ்
சுத்த வைதிகர் தம்மொடு முற்றுசாஅய். 7

ஆல முண்ட மிடற்றனெ மையன்வெங்
கால காலன்றன் பாலனுஜ் ஞைபெறீஇ
நூல றிஞர் நுவலும்வி திமுறைப்
பாலஸ் தாபனம் பண்ணுமு யல்வினான். 8

மந்தர மாமுனி வோர்தெரிக் குஞ்சிவ
தந்தர நோன்மை தவாதவி திமுறை
அந்த ணாள ரருங்கட னாற்றிட
முந்து மன்பினில் வந்துபி ரார்த்திப்பான். 9

மும்மை ஞாலமுந் தேடக்கே தீச்சரத்
தெம்மை யாள வெளிவந் தெழுந்தருள்
அம்மை பாகத் தழககே தீஸ்வர
செம்மை மேவு சிவசங் கரஹர. 10

எந்த னுள்ளத் தெழுந்தரு ளெந்தைநீ
தந்த நல்வளத் தாலுய்த கவினேன்
இந்த நின்றிருக் கோயில்பு துக்கிடச்
சிந்தை செய்தனன் தேர்ந்தருள் செய்குவாய். 11

சந்த தம்மென்றன் சிந்தையு ழற்றிடும்
இந்த வேட்கை நிறைவுறு காறுமிங்
கெந்தைக் கென்றின் றெடுக்கும்பா லாலயத்
தந்த மில்லருள் மேவஅ மர்குவாய். 12

என்ன முன்னிரந் திவ்வணம் வேண்டுமா
மன்ன னன்பு வசப்படு கேதீசன்
பன்னு பாலா லயத்திற்கெ ழுந்தருள்
முன்னந் தோன்ற முதுமறை யந்தணர். 13

எஞ்ச லில்லதி காரவர்க் கத்தவர்
தஞ்சி றுமைபெ ருமைகட் குத்தக
அஞ்சு வேறுசுற் றின்கண மர்வர
விஞ்சு மேன்மையொ டுற்றமர் வேந்துபோல். 14

பஞ்ச ஆவர ணத்தினுந் தங்கிடுங்
கஞ்ச னாதிய ரஷ்டவித் யேஸ்வரர்
தஞ்ச மூகத் தலைமணி யாயுறும்
அஞ்சு மாமுகத் தண்ணல்கே தீசனை. 15

ஆச னம்மூர்த்தி மூலங்க ளாலர்ச்சித்
தீச னையித யாஞ்சலி யோடுசெய்
காசி லாத கலாகர் ஷணமெனப்
பேசு தந்திர வீறுபி றங்கவே. 16

கூர்ச்ச நீண்முடிக் கும்பத்திற் சேர்வரச்
சீர்த்த ஆவர ணத்துளார் தம்மொடு
மூர்த்தி தன்னை அவதரிப் பித்திட்டுச்
சீர்த்த பான்மையிற் றாபித்துப் பூசித்தே. 17

பார்த்தன் ராமன் பலரும் பூசித்தருட்
கீர்த்தி மிக்குயர் கேதீச மூர்த்தியைச்
சீர்த்த பூங்கச் சியானைதொட் டீர்த்திடப்
பேர்த்துப் பாலா லயத்திற்ப திட்டித்தே. 18

தீர்த்த கும்பத்து ளீர்த்தக லையெலாம்
மூர்த்தி பாலுற வென்றபி ஷேகித்துப்
பூர்த்தி செய்ததன் பூசைவி திமுறைக்
கார்த்தி கூர்வர யாவும் மைத்தபின். 19

முன்னு நல்லமு கூர்த்தந்தெ ரீ இமன்னன்
முன்னை மூலத்தா னத்துந வரத்னம்
பொன்னஞ் செப்பிற் பொலியக்க ருவைத்துச்
சொன்ன கோயிற் பணிதொடர்ந் தானரோ. 20

**வேறு**

பரங்கண்ட அநுபூ திப்பாற் பயில் சிவ யோகச் செல்வர்
சிரங்கண்டம் மார்ப தென்னத் திகழ்வர அமையுங் காட்சித்
தரங்கண்ட மூலஸ் தானம் அர்த்தமா மண்ட பங்கள்
திரங்கொண்ட சைவங் கண்ட சிவாலயத் தங்க மாகி. 21

கருவறை மூலஸ் தானங் காண்வரு சிரசிற் போலத்
திருவுறு ஜோதிர் லிங்கந் திகழ்சக சிரத ளக்கீழ்
மருவுற விளங்கு மாறும் மாண்புறு மந்த ராளம்
உருவுறு களம்போல் மந்திர ஒலிகிளர்ந் தோங்கு மாறும். 22

இடனம ரிதயத் தோவா இருதயத் துடிப்பு மான
நடநவில் நாதன் மாமண் டபத்தினில் நடிக்கு மாறும்
புடவியி லறிஞர் கண்டு போற்றியுய்ந் திடுமா சைவக்
கடனறி முதுவோர் கண்ட காட்சியின் மாட்சி மேவி. 23

மூன்றுமண் டபத்தி னுக்கும் முறைமையி னளவு கோலி
ஆன்றவன் கருங்கற் பாறை அடுத்தடித் தளம்ப டுத்தே
ஏன்றநல் லுபான மேஜ கதிகண்ட கபோத மென்பேர்
சான்றபல் வரிகள் சிற்பத் தகவினி லமைத்துக் கொண்டே. 24

சித்திர சிற்பப் பத்திச் செழுஞ்சுவ ரெழுப்பி மேற்கை
வித்தகத் திறலி னான்ற வியாழமும் வரித்து மீச்சேர்
உத்தரம் வைத்து மீதே உரனுறு கருங்கற் றுண்ட
மொத்துறப் பரப்பிக் கூரை படுத்தவுன் னதமாண் கோயில். 25

கருவறைப் புறச்சு வர்ப்பாற் காண்வரு புடைப்பும் பாங்கே
மருவுறு மொடுக்குஞ் சிற்ப மரபினி லமைத்திட் டாங்காங்

குருவுறு மாலைப் பொற்பார் மகரதோ ரணத்தி னான்ற
திருவுறு வாசிச் சூட்டுத் திகழ்மாடப் புரைகள் துன்றி. 26

இலகுமா டப்பு ரைக்கா மிருமருங் கினிலுஞ் சிங்கத்
தலைகொளுங் கூடி ரண்டு தகவுற வமைத்த பாங்கால்
தலமறி புகழார் கங்கை கொண்டசோ ழேச்ச ரத்து
நிலவுகற் றளிசார் சிற்ப நிலைநினைப் பிக்கு மாலோ. 27

**வேறு**

விட்டொளிர் மாட வியன்புரைக் கிடையே
வியத்தகு மமைப்பினி லான்ற
ஒட்டுத் தூண் மேவி யுருவழ களிக்கும்
ஊங்குய ருத்தர மதன்கீழ்ப்
பட்டொளிர் வனப்பிற் கும்பபஞ் சரங்கள்
பன்னிரைப் பயின்றிடுங் கண்தெ
விட்டிடா வனப்பின் வியப்பளித் திடுமேல்
விமானத்தின் வனப்பினி நயப்பாம். 28

இத்திற மியலுங் கருவறை மீதி
லெழுந்துயர் திரிதள விமானம்
பத்திகொள் கோஷ்ட பஞ்சரங் களொடு
பயில்வுறு கும்பபஞ் சரங்கள்
மெத்துறு மமைப்பின் வீறுபெற் றோங்கி
விவிதநற் கூடுகள் துன்ற
வைத்துறு வனப்பால் மலர்புகழ் ராமேஸ்
வரத்துறு விமானநே ரொக்கும். 29

பம்புசீர் விழியென் பான்மைய வாகிப்
பரந்தெங்குங் கூடுகள் மலிய
உம்பர்வா னோங்கி உயர்வுறு விமானம்
ஒளிர்மதிச் செஞ்சடைக் கற்றை
எம்பிரான் விசுவ உருவினி லன்னோற்
கெங்கெங்கும் விழிகளென் வாய்மை
பம்புநீ ருலகம் பார்த்தறிந் துவகைப்
பாங்குற வோங்குமா லினிதே. 30

பொற்புறு விமானச் சுற்றினிற் பொருந்திப்
புத்தமைப் பொளிர்வடி வினவாய்ச்
சிற்சிறு பவன மொத்துரு வாரும்
சீர்மிகு சாலபஞ் சரங்கள்

விற்பொலி சடிலன் விமானஞ்சே விக்க
விண்ணிழிந் தல்குதே வர்கள்
அற்பொடு தங்கி அயாவுயிர்த் திடற்காம்
ஆறுதற் சாலைக ளனைய. 31

இத்திறத் தெழிலார் முத்தளத் தினிலும்
இடைச்சிறு திடலுரு வாரும்
பித்திகை யமைப்பும் பிறங்கிடு வட்டப்
பீடுயர் சிகரநல் லமைப்பும்
மெத்துறு முறுதி வடிவமை திகளின்
மிகைகுறை தோன்றிடா மாண்பால்
உத்தம வனப்பார் விமானமீ தென்றென்
றுலகெலா முவந்திட மன்னும். 32

அர்த்தமண் டபத்துக் கணைதரு வாயில்
ஆங்குதென் வடலிரு பாலும்
சுத்தவன் றனிக்கற் றுண்டத்தி னேய்ந்த
துவாரபா லகரிரு சோடி
மெத்துமுன் வாயில் தனிலொரு சோடி
வியன்கரு வறைமுன்னோர் சோடி
இத்திற மெண்மர் துவாரபா லகர்கள்
இயற்படு வடிவமைப் புணரின். 33

முடிமிசை மருவு முத்தலைச் சூலம்
மொய்ம்பொரு நான்கொடு முகத்திற்
கடுகடுப் பொளிர இணைவிழி சுழல
எடுத்தகைத் தர்சனி நிமிர்த்தி
அடுவலித் தண்டு மறுகையி லூன்றி
ஆங்கொரு கைவிரல் மறித்து
முடுகுமுண் ணடுக்கத் தொடுமணை பவர்தாம்
முன்னிற்கப் பணிக்குமற் றதுவே. 34

ஆங்கொரு விரலா னச்சுறுத் துவதும்
அடுத்தொரு கரத்தினி லபயந்
தாங்குமுத் திரையாற் றகவளிப் பதுவும்
தழுஉமிவர் நிலையின்தாற் பரியம்
ஈங்குளார் சுவாமி கவனம்நில் லிங்கென்
றெச்சரித் திடுவதும் மதமற்
றூங்குட்போ யணையின் உமக்கருள் அபயன்
உவரென உணர்த்துவிப் பதுமாம். 35

இவ்வகைத் துவார பாலகர் காப்பில்
இலங்கிடு மஹாமண்ட பத்தின்
செல்விநேர் வாயிற் றிகழுமுத் திரக்கீழ்ச்
சேரிரு நிரையினி லடுக்கும்
பவ்விய விமான பஞ்சரத் திடையிற்
பயில்ஸ்தம்ப பஞ்சர அமைதி
எவ்விதத் தானுங் கோயிலெளன் னத்ய
எடுப்பினுக் கடுக்கவாய்ந் தொளிரும். 36

முன்னுறு மெழிலார் மஹாமண்ட பத்தின்
முழுத்தகற் சித்திரத் தூண்கள்
பன்னுறு பத்மம் ஓதிமம் மகரம்
பயிலியாழ்க் கின்னரர் இயக்கர்
என்னும்பல் வகையா ருருக்கள்பட் டிகைதோ
றுருவெழின் மருவுற மலிந்து
சொன்னநீள் சதுரப் போதிகை யடுக்குத்
துன்றிநின் றின்புறூஉந் தகைய. 37

நவிலுமண் டபத்தின் நாற்சுவர்ப் பரப்பும்
நன்பொன் மாடப்புரை தோறும்
எயிலொரு மூன்று மட்டதும் மதனை
எரித்ததும் யமனைக் காய்ந்ததுவும்
பயில்சிவ னருளார் புராந்தக காமாந்
தககாலாந் தகவெழில் மூர்த்தம்
அயில்கொடு பகைசாய்த் தார்க்கும்ரா ஜேந்திரன்
ஆளுமை மாண்புரைத் தமையும். 38

புரைதவிர் பரப்பிற் புரிசடை யண்ணல்
பொற்புறு திருவிளை யாட்டா
உரைபெறு காட்சி யுயிரோவி யங்கள்
உலப்பில் அவற்றிலொன் றின்கண்
வரைமகள் கௌரி வெருவிமா முருகை
வாரியொக் கலைக்கொடே யிரிய
நரைவிடை யூர்தி யானையை யுரிக்குங்
காட்சிமற் றங்கத னயலே. 39

ஓடிய கௌரி யொருசிறு தூரத்
தொண்முகந் திருப்பிநோக் கிடுகால்
ஆடியல் யானை யுரித்தெடுத் தண்ணல்
அதிரௌத்ர மொளிக்கவவ் வுரியால்

மூடிடக் கண்டு காதல்மீக் கூர
முன்னுற வனைந்தும் நாணத்தால்
மூடிய கண்கள் திறக்கலாள் நிற்க
முன்னவன் நகைத்திடு காட்சி. 40

மற்றொரு பாங்கின் நடராஜ மூர்த்தி
மாலயன் மர்த்தளம் போடக்
கற்புறு செல்வி காரைக்கா லம்மை
கைத்தாள மிடக்கணம் பாட
அற்பொலி குழலி காளியோ டாட
அவ்விடைக் கஜமுகன் குமரன்
பொற்புறு மஞ்ஞை மூஷிகத் தணையும்
புனிதமங் கலவெழிற் காட்சி. 41

மருவுமிக் காட்சி மலைமக ளாங்கண்
மால்விடை முதுகினில் வளைக்கை
உருவெழி லலைய ஊன்றிநின் றாடல்
உவப்பதும் மருவுமற் றோர்பால்
சிரமலி கங்கை திறத்தினி லூடிச்
சினந்துளம் புலர்மலை மடந்தை
பருவரல் துடைக்கப் பராபர னிரக்கும்
பாங்குமாங் காட்சிகள் பயிலும். 42

ஒன்றுட னொன்று கதைப்பன போலும்
ஒவ்வொன்றுந் தன்னெழில் முகந்து
நின்றுநின் றுவக்கும் ரசிகரா வார்க்கு
நீள்கதை யளப்பன போலும்
துன்றுகற் சுவரிற் சுதைவண்ணத் தியன்று
சொல்சட வுலகுசித் துலகா
மென்றிடப் பொலியும் பாவைக ளநேகம்
எழின்முக மண்டப மருங்கே. 43

மண்டப முகப்பின் வாயின்மேற் படிமீ
மருவுசெங் கமலவா சனத்தில்
மண்டுபே ரழகை வகுத்துறுப் பமைய
வடித்தெடுத் திட்டது போலக்
கண்டஜஸ் வரியக் களைதவழ் வதனக்
கஜலக்ஷ்மி சிற்பம்அந் நாட்கை
கண்டவோ வியத்துக் கலை நுணுக் கச்சீர்
காண்பரு நிலைத்தெனல் காட்டும். 44

முன்புற நீண்ட மண்டப மொன்று
முழுதுல கடக்கவான் றகன்று
நன்றமை திருவின் நாயன்மார் சிற்ப
நல்லெழில் நலிலுநற் றூண்கள்
துன்றுபல் வரிசை துலங்கிட நிரந்து
சோழமன் னவர்தமக் கென்றும்
நின்றசீர் அடியார் நேயம்விட் டகலா
நீர்மைநேர் தெரிதர நிலவும். 45

தன்னிலை மறந்து சார்சிவ பூசைத்
தவத்தொன்றித் தாதைதா ளெறிய
இன்னினித் தாதை நாமுனக் கென்றே
இணையடித் தலத்தின் கீழிருத்திச்
சென்னியிற் கொன்றை சிவன்கையாற் சூட்டச்
சிரம்பணிந் தேற்குஞ்சண் டீசர்
பொன்னமர் முகத்துப் பொலியும் சாந்தப்
பொற்புமே புனையுமோர் சிற்பம். 46

பொற்புறு கையிற் புணர்நரம் பொவொன்றும்
புகலுள் நினைவலை யொவொன்றின்
பிற்செலப் பணிகொள் சிற்பரால் தன்னிற்
பெருங்கலை பிறங்குமுற் றுணர்வு
கற்குலந் தனக்கு முளதுகொல் லன்னோர்
கைபடா முன்னமே குழைந்து
தற்குள வரன்கை படாமுனம் வசமாந்
தலைவிபோ லிளகுகின் றனவே. 47

பழிதவிர் சுண்ணச் சாந்திற்கண் பகட்டும்
பலவர்ணச் சமநிலைப் பாட்டின்
எழிலொளிர் நிரையில் இம்மண்ட பத்தின்
எதிரெதிர் சுவர்மிசைப் பொலிவ
விழிபிதுங் கிடமெய் வியர்த்துளி படர
விலாப்புறத் தொருகையுற் றூன்றிக்
கழிபெருங் கலசந் தலைசுமந் தசையுங்
கனத்த காத் திரப்பெரும் பூதம். 48

காண்பெரு வெற்றி விஜயன்ரா ஜேந்தரன்
கங்கைகொண் டிட்டவந் நாளில்
மாண்புறு வடவர் தமைவசப் படுத்தி
மற்றவர் சிரமிசைப் பெருமட்

பாண்டங்கள் நிறையுங் கங்கைநீர் சுமத்திப்
பகர்சோழ கங்கத்துக் கனுப்பும்
ஏண்பெறு நிரைகள் எதிரெதிர் நீண்டாங்
கிறும்பூது பயப்பனவாகும். 49

இந்தமண் டபக்தி னேர்கெழு முகப்பில்
ஏழடி யுயர்ந்துநீ ளகலம்
அந்தநல் லளவுக் கமைந்துபல் வர்ணத்
தவிரொளிச் சேரமேற் பூண்ட
சுந்தர விடையொன் றெழிலுறக் கிடக்குந்
தூயவெண் பளிங்கொளிர் சோதி
நந்திமண் டபத்தின் நலம்புகன் றிடற்கு
நாவெழா சேடற்கு மென்ப. 50

நந்திமண் டபத்து முன்னிரு பாலும்
நாடுகோ ணத்திசைப் படிகட்
கந்திலாங் கமையு மானைக்கை யுருவார்
அணைசுவர் முன்புறங் குறுங்கால்
உந்திமே னோக்கி வளையுநீள் வதனத்
துருமலர்த் தொடைமருள் நீள் வாற்
சந்தமார் மகர சிற்பங்கள் சுண்ணத்
தனிக்கலைத் தனித்துவந் தெரிக்கும். 51

இங்கிதற் கப்பால் திருமுற்றத் தெல்லை
யிடங்கொளீஇ நின்றுயர்ந் தெழுந்து
துங்கவான் நோக்கும் ஐந்நிலை மாடத்
துன்னருங் கலைச்சிற்பப் பாணிப்
பொங்குபே ரழகார் வாயிற்கோ புரத்தைத்
தொடர்ந்திரு மருங்கினும் நீண்டே
அங்கணா லயஞ்சூழ் அணிசுவர்க் குள்ளால்
அமைந்திடும் முதற்றிருச் சுற்று. 52

திருச்சுற்றி னிருபாற் றிரண்டுயர் தூணத்
திகழிடை வெளிதொறு நிரந்து
பருத்தகோ லத்த பவளக்கூர்ங் கோட்ட
பகர்மணி மாணிக்கத் தண்டை
உருத்தபொற் பதத்த ஓங்குகெம் பீரக்
காட்சிய இடபங்கள் அண்ணல்
இருப்பதிங் கதனா லிடம்விட்டுப் பெயர்தல்
எமக்கடா தென்பபோற் கிடக்கும். 53

தூணமொவ் வொன்று மிடையிடை யொடுங்கித்
தோற்றமார் அடிநடு நுனிப்பாற்
காணநின் றெழிலார் பட்டிகைப் புடைப்பிற்
கலைமலி நடனநாட் டியச்சீர்
பேணுபல் லுருக்கள் பேசுமிச் சோழன்
பிரபுவாம் நடராஜர் தில்லை
மாண்புணர் பக்த னாகிப்பொன் வேய்ந்தான்
மரபின னாம்பரி சுணர்த்தும். 54

**வேறு**

கருத்திலூ றழகுணர்ச்சி கைக்கொள் தூரிகைநுண்
கண்வழியே வந்தொழுகிக் கவினழகு கொழிக்கப்
பொருத்தமுறு வர்ணங்கள் தீட்டுமுகத் தானே
போற்றுதெய்வ லீலைகட்குப் புத்துருவம் படைத்திட்
டருத்தமிகு மகவுணர்ச்சி பாவங்களனைத்தும்
அங்குமிங்கு மார்லளித ரேகைகளாற் காட்டுந்
திருத்திகழு மோவியஞ்சேர் சித்திரமண் டபங்கள்
திருச்சுற்றில் தெய்விகச்சீர்க் களைத்தும்பத் திகழ்வ. 55

நிரலுடைய புருவலிணை நெரிந்துயர்ந்து வளைய
நின்றநிலை யொருபதம் மேல் தேர்த்தட்டி லூன்றி
வரிசிலையை வளைத்தொருகைச் சூலத்தை நீட்டி
வளர்நாசித் துளையிரண்டும் வாயகன்று விரிய
எரிகொள்நுதற் கண்பிதுங்க எண்கையுமா யுதங்க
ளேந்தியே சிரஞ்சரித்துச் சினக்கனலை வீசும்
விரிசடையான் புரமெரித்த வீரவிறற் கோல
வியன்பெருமை திகழ் சித்ரம் மிக்கொளிரு மாங்கண். 56

தெய்விகச்சிற் பங்கள்வை தாமன்றி யேயுஞ்
சீருறுகட் புலன்கவ்வித் தெவிட்டாமை பயக்கும்
ஐயமல ரினில்நீல வானிலணி யிழையார்
வதனத்தி லில்கெழில்கள் வர்ணவிகற் பத்தாற்
கைபயிலுந் தொழினுணுக்கக் கண்ணுள்வினை ஞர்தங்
கரம்படைத்த பிழம்புகளக் காசியப்பன் காலச்
செய்திரனார் சிகிரியாக் குகைச்சிற்பத் திறத்திற்
சிறிதேனுஞ் சளைக்காநற் றிருவொளிர மிளிரும். 57

ஆலயத்தி லிவர்களழ கிரசினைநன் மதர்ப்பார்
ஆக்கங்கட் கென்னதொடர் பெனஅயிர்த்தல் வேண்டா

ஏலவிவர் கொண்டதுதெய் விகப்பித்தோ அன்றேல்
இன்பநெறி லௌகிகப்பித் தோவெனலும் வேண்டா
ஆலுமழ கென்பவெலா மழகாவ தெவரால்
அவருக்கா மாயதனம் ஆவதழ கென்னக்
கோலுமுயர் குறிக்கோளில் இலயித்திங் கிவர்செய்
கோலவெழிற் படைப்பனைத்துங் கோயிற்படைப் பாய்த்தே. 58

இன்னவகை மன்னுமெழி லேய்திருச்சுற் றதனில்
இயல்திக்கு விதிக்குகளி லேர்மருவு சிற்பப்
பொன்னொளிருஞ் சிறுகோயி லவைகளுநன் றொளிர்வ
போதுமவற் றினிலொன்று புரிசடையா னருள்சேர்ந்
திந்நகரின் வரலாற்று நாயகனாங் கேது
எம்பிரான் தனைப்பூசித் திருந்தவனப் பெல்லாம்
மின்னவில்பல் சிற்பவுரு வினிற்காட்டும் விமான
விந்தைமிகு சிறுகோயி லாகமிளிர் தருமே. 59

முதற்றிருச்சுற் றினுக்கிப்பால் முன்மண்ட பத்துள்
மேற்றளத்துச் சகஸ்ரதள சிற்பவெழில் பொலியும்
இதற்கிருபால் நீண்டுசூழ் இரண்டாஞ்சுற் றதன்பால்
இயற்படுபொற் பெண்ணிலவாம் இதற்குமுக மாப்பல்
விதப்படுமா டப்புரைகள் விரவுமொட்டுத் தூண்கள்
வியன்கோஷ்ட பஞ்சரங்கள் கும்பபஞ் சரங்கள்
தகத்தகவென் றொளிர்வாண ஜாலத்திற் பொலியத்
தலைமைசா ரெழுநிலைக்கோ புர நிமிர்ந்து நிற்கும். 60

எழுநிலைக்கோ புரவாயி லிருபாலும் மருவி
எத்தண்டு மிண்டுக்கு மெதிர்தண்டு மிண்டாம்
முழு ரவுத்ரக் களைபொலிய முகம் நிமிர்த்தி முதுகும்
முன்னுகடிப் பாகமுமொ ரொயிலாகச் சரித்தே
இழுதனைய மீசையய லிலங்குவக்ர தந்தம்
இதழ துக்கி நீளவொரு கால்மடித்தொன் றூன்றுந்
தொழுதகுதெய் விகசோபைத் துவாரபா லகர்முன்
துதிக்கையுயர்த துட்கார்ந்த யாழியிரண் டிருப்ப. 61

**வேறு**

நீளங்காண் நித்ய விநோ தங்காண் தாரா
சுரத்தைரா வதேச்சரம் வனப்புக்
காழங்காண் கங்கை கொண்ட சோழேச
மாமிவற் றெழிலெலா முட்கொள்

சோழங்காண் ராஜேச் சரத்தினுக் கெதிரே
தொன்மைமேன் மைகளொடு மருவி
ஈழங்காண் ராஜேச் சரமிந்தப் பரிசி
னிருந்தசீர் நினைந்துளங் களிப்பாம்.

ஈழத்திற் றுஞ்சும் பேரன்ஞா பகத்துக்
கியல்பள்ளிப் படைக்கோயி லெடுத்தாங்
கீழம்வென் றாண்ட தந்தைஞா பகத்துக்
கிராஜரா ஜேச்சரம் படைத்து
வாழிஅப் பெயரே வழங்கிட வகுத்த
வாய்மைகூ ரிராஜேந்தர னான
கோழிவேந் திதற்குக் குடமுழுக் கியற்றுங்
குதுகலச் சிறப்பினிக் காண்பாம்.

**இராஜராஜேஸ்வரப் படலம் முற்றும்.**
**ஆகத் திருவிருத்தம் 604.**

## எட்டாவது
## கும்பாபிஷேகப் படலம்

செந்திரு வார்மா தோட்டத் திருக்கேதீச் சரநா தற்கென்
றந்தமில் நலமாண் கோயில் அமைத்தணி படுத்துக் காணுஞ்
சுந்தர சோழன் பேரன் துலங்குமார் வத்தன் னோற்குத்
தந்திர விதியிற் கும்பா பிஷேகச்சீர் நிகழ்த்த வுன்னி. 1

நூலறி யந்த ணாளர் தம்மொடு முசாவி யன்னோர்
கோலுபஞ் சாங்க சுத்த முகூர்த்த நிர்ணயஞ்செய் தாக
உலுந்த னிடம்பொ ருட்கு மேவற்கு மமையு மாற்றால்
சாலுமத் திவ்ய கர்மத் தகவுமேம் படுப்பா னாகி. 2

ஐம்பெருங் குழுவி னோடு மாய்ந்ததற் கருக மான
செம்பொருள் தொகுத்து மேலுஞ் செயற்படு திணைக்க ளங்கள்
நம்புசீர் வாய்மை சான்ற நற்பணிக் குழுக்க ளாக்கிக்
கும்பாபி ஷேகத் துக்காம் நியமங்கள் வகுத்த பின்னை. 3

அரசமுத் திரைபொ றித்த ஆணைப்பத் திரங்கள் தாங்கி
விரசுநாற் றிசையும் வேகத் தூதுவர் செல்லா முன்னம்
பரசுவங் கக்க லிங்கப் பர்மாபோர் னியோகாஷ்மீரத்
திரவியக் குவைக ளோடு தென்தமிழ் நாட்ட வெல்லாம். 4

பாரிய கலங்கள் தாங்கிப் படர்சுதி விரைவி னோடு
நேரிய நெறிபி டித்து நீளலை யுழக்கி யூர்ந்து
பேரியல் கருவு யிர்க்கும் பெய்வளை யாரிற் சார்ந்து
சீரியல் மாதோட் டத்துச் செழுந்துறைக் கீன்ப வான. 5

பட்டொடு பருத்தி வர்க்கம் பளிதமான் மதங்கஸ் தூரி
விட்டொளிர் வயிரம் முத்து மாணிக்க மரக தங்கள்
அட்டபந் தனமாஞ் சாதி லிங்கங்கொம் பரக்குச் செம்பஞ்
சொட்டுதேன் மெழுகு காவி சுக்கான்கல் லாதி மற்றும். 6

இணரெரித் தீபத் துக்காம் இருப்பைப்பால் அஜநெய் யாதி
உணவுமாங் கூல வர்க்கத் துழுந்துநெல் பயறெள் ளாதி
மணமுறு சாந்தம் பன்னீர் குங்குமப் பூவென் றாதி
அணவுறு கவிகை யால வட்டஞ்சா மரைக ளாதி. 7

மருவொடு மருக்கொ ழுந்து பிச்சிசெண் பகங்க ளாதி
பருவுருப் பனச மாமரம் பழுக்குலைக் கதலி யாதி
உருமலி தசும்பு துன்றுந் ததிபாறேன் பசுநெய் யாதி
திருமலி சந்த னாதி திலதைல வர்க்க மாதி. 8

கங்கைகா ளிந்தி சிந்து காவிரி குமரி யாதி
மங்கல தீர்த்த வாரி மடுத்தபல் கலசம் நல்ல
வங்கலா மிச்ச கந்த ஒஷதி வகையிற் சாரும்
வெங்கனல் விருந்தார் ஹோம விசேடத்ர வியங்கள் பல்ல. 9

மகரதோ ரணங்கள் தொங்கல் பீலிக்குஞ் சங்க ளாதி
நிகரில்பொற் சரிகை துன்று நீள்துகிற் சதுக்க மாதி
அகரமா யதிய னாகு மாதிகே தீச்ச ரற்கென்
றிகமுழு தளித்த ஈடில் காணிக்கை யாய்வந் துற்ற. 10

இன்னிய லீழ முத்து மாணிக்கம் யானைத் தந்தம்
கன்னியாய் பாவ நாசங் கண்டகி யாதி தீர்த்தம்
பன்னரு மேலஞ் சாதி பாய்புலி யுரியே மான்றோல்
இன்னறுங் கனிவர்க் கங்கள் ஏராள மாய்வந் துற்ற. 11

மாடங்கள் புதுக்கு மின்னோ மங்கல அணிசெய்ம் மின்னோ
ஈடகல் வீதி தோறும் வியலிட மெங்குஞ் சித்ர
கூடங்கள் தெற்றி கள்செய் திடுமினோ குளிர்நீர்ப் பந்தல்
நாடலாம் நடைபந் தர்கள் நலம்பெற நாட்டு மின்னோ. 12

வீதிகள் பெருக்கி நீர் தூஉய் விரியிலைக் கதலி பூகம்
போதுற நிரைத்து வாசப் பூந்தொடை பயில நாற்றித்
தீதகல் பூர்ண கும்பந் திகழொளி விளக்குத் தூபம்
வாய்தல்தோ றிலங்க வைத்து மங்கலம் பெருக்கு மின்னோ. 13

எல்லொளிர் சடிலத் தையன் எந்தைகே தீச்ச ரற்கு
நல்லொளி விளக்க மாக நவில் கும்பாபிஷேக காலத்
தல்லவை காமின் யாரும் நல்லவை கடைக்கொண் மின்னோ
சொல்செயல் நினைவிம் முன்றில் தூய்மைமேம் படநின் மின்னோ. 14

ஆதிகே தீச்ச ரன்ற னருட்கும்பா பிஷேகச் சார்பில்
ஈதெலாம் புரிக வென்றே இருங்களிற் றெருத்த மஃதின்
மீதுலாம் வள்ளு வன்வன் முரசறைந் தறிவித் திட்ட
மாசறு செய்தி மாந்தை மாநகர் முற்றுங் கேட்டு. 15

ஒருவராற் றுதற்கு மேலொவ் வொருவரு மாற்று மூக்க
மருவீடப் புரியு நீரால் மாந்தைமா நகர முற்றும்
திருவொளி தளிர்த்து மல்கத் திவ்விய தேசு பொங்கிப்
பெருமகிழ் வளிக்குஞ் சைவக் களைதட்டப் பிறங்கிற் றன்றே. 16

நாதற்காம் பூசை யேயாம் நடனநாட் டியக்க லைக்கும்
மேதக்க வேத மோடு விளங்குபண் ணிசைக்கு மொக்கச்
சீதரன் ராஜ ராஜன் திகழ்தஞ்சைத் தலத்த மைத்த
மேதகு நிலைக ளெல்லாம் வெறுவிதா யிடுமா றன்று. 17

வேதபா ரகர்க ளாவோர் கீதசா துரிய ராவோர்
நாதயா ழாதி யான நரம்பியல் கருவி வல்லோர்
மாதரார் நடன மாதர் நாட்டியக் கலைஞ ரிங்ஙன்
போதரா திருந்தா ரில்லை யெனுநிலை நிலவப் போந்தார். 18

இவ்வகை நிகழக் கேதீச் சரப்புதுக் கோயின் முன்றிற்
கைவகை முழுமுந் நூறு காணுநீ ளகலத் தாங்கண்
தெய்விகச் சிற்பப் பத்தித் திகழொளிப் பட்டு வேய்ந்த
வைதிக யாக சாலை கைவலார் வகுத்தார் ஆக. 19

தெய்விகச் சைவ வாய்மைச் சிவாசார்யர் தொகுதி துன்றிச்
செய்வகை விதிவ ழாமற் றிருப்திகூர் வரச்ச மைத்த
நெய்பொலி யாகு திக்கா நிகழ்குண்ட மண்ட லங்கள்
ஐதமர் சிவகும் பங்கட் காயவே திகைகள் மல்கும். 20

பிராசாத யோகத் தொன்றிப் பிராணனை வசீக ரித்து
நிராதார நிலைக்கிட் டுப்போய் நிகழ்சிவ னுடனொன் றாகிப்
பராவுசீர்ச் சிவனே தானென் பாவனைப் பிடிப்பி னிற்கும்
உராவுடைப் பஞ்ச கச்சச் சிவாசார்யர் விளக்க மோர்பால். 21

மாவிலை தருப்பை மல்க மாலைசாந் தணிகள் பல்கப்
பாவொளிப் பதக்கச் செம்பட் டுருவெழி லெறிப்ப சாக்ஷாத்
கோவில்மூர்த் தியினந் தஸ்திற் கொலுவமர்ந் துச்சி மேலா
மேவுவா சிகைக்குண் மன்னும் மஹாகும்பப் பொலிவு மோர்பால். 22

மகரதோ ரணநேர் வாயில் மணிமுத்துச் சரங்கள் தூங்கு
நிகரில்பே ரொளிச்சுற் றான்ற சரிகைப்பட் டேர்வி தானம்
பகர்வரு யாளி சிங்கப் பல்லுரு வெழிலார் தூண்கள்
புகரில்சித் திரப்ப டங்கள் பொலியுமண் டபப்பொற் போர்பால். 23

சதுரஸ்ரம் திரிகோ ணம்மே வர்த்தசந் திரம்வி ருத்தம்
இதுவித மாக மன்னும் நவகுண்டத் தமைப்பு மோர்பால்
பொதுளுமோ மத்தி ரவ்யப் பொலிவொடு நெய்ப்பாத் ரச்சீர்
புதுவதாஞ் சுருவ மோடு சுருக்கெழில் நலமு மோர்பால். 24

மந்திர முழக்க மோர்பால் மறைவிதி விளக்க மோர்பால்
வந்துயர் வேத மோர்பால் வண்டமிழ்க் கீத மோர்பால்
அந்தண ரிணக்க மோர்பால் அடியவர் வணக்க மோர்பால்
தந்திர நெறிப்பி றக்கந் தழங்குமவ் வியாக சாலை. 25

பஞ்சபூ தங்கள் தாமே பஞ்சிக ரணிக்கு மாற்றால்
தஞ்சுய நிலையி னன்றித் தத்வதாத் விகங்க ளும்மாய்ப்
புஞ்சமார் போக போகியப் பொருள்களு மாகி மேலும்
எஞ்சலில் சிவமவ்யா பித்தற் கியலாய தனமு மாவ. 26

சிவனுக்கா யதன மாகு மியல்பினிற் சீர்த்து நிற்கும்
தவனன்தண் மதியான் மாவுஞ் சாருமிவ் வைந்தி னோடும்
அவமில் சீ ரட்ட மூர்த்த மாகக்கொண் டன்று மின்றும்
எவமில்சீர்ச் சைவ மிவ்வெட் டினில்வைத்தே யெல்லாஞ் செய்யும். 27

அங்கதன் சார்பி னிங்ங னமைநவ குண்டந் தன்னில்
உங்கம ரட்ட மூர்த்தத் தொவ்வொன்றுக் கொவ்வோர் குண்டம்
துங்கமார் சிவற்காங் குண்டத்துடன்தொண்டென் தொகையின்
மேவும் இங்கிதால் வேத யாகஞ் சைவயா கமதாய்த் தென்ப. 28

ஏலவே மூலர் நூலி லிடம்பெறு நவகுண் டத்தின்
சீலமோர் சிவாசார் யர்தாம் சிவயோக நெறிப்பட் டுத்தம்
மூலவெங் கனலை மூட்டி முன்னுமா றாதா ரத்தும்
மேலுயர் சகசி ரத்தும் விளங்கொளி கண்டு கொண்டே. 29

சிவகுண்டத் தாவா ஹிக்குஞ் சிவவாகீஸ் வரிகர்ப் பத்தில்
அவள்பதி யாகும் வாகீஸ் வரர்பெறு தனய னாகச்
சிவஅக்னி தன்னைத் தோற்றி அதுவேமற் றெண்குண் டத்தும்
விபஜன விதியாற் சென்று மேவுமா றியைபு செய்து. 30

ஏககா லத்தி லெல்லாக் குண்டத்தும் வேறு வேறு
யோகமார் சிவாசார் யர்கள் இயன்முறை வளர்த்தெ டுத்துப்
போகசத் தியும்பு ணர்த்துப் பொற்புறு சிவசாந் நித்ய
மாகுமா றமைத்தோ மித்துப் பூசித்துத் தோத்தி ரித்தே. 31

மந்திரக் கிரியா பாவ னாதிகள் வலுவி னாகும்
அந்தமில் சிவசத் தவ்வக் குண்டந்தோ றொளிரக் கண்டு
முந்துசீர்ச் சிவகுண் டத்தே முழுதொருங் குறச்சேர்ப் பித்துச்
சந்தான விதியா லஃது தகுகும்பத் தேற வேற்றி. 32

பல்லிய நாதம் பொங்கப் பத்திமை விலாசம் பொங்கச்
சொல்லலங் கார பூசை சோபனம் மல்க ஆற்றித்
துல்லிய வாத்ய கீத நடனபூ சையுமொப் பித்து
வல்லநால் வேத பாரா யணந்தமிழ்ப் பண்ணு மோதி. 33

சம்ஸ்பர்சா குதியும் முற்றித் தகுநீரா ஜனமு முற்றிக்
கும்பாபி கமன யாத்ரா தானமும் முற்றும் போதிற்
செம்பாத சேவைப் பக்தன் சிவபாத சேக ரன்சேய்
அம்பாரி பரித்த பட்டத்தரசுவா அணைந்த தாங்கண். 34

கட்டழ லாறி யின்பக் கனிவொளிர் பார்வை கூர
உட்டுளைக் கையு யர்த்தி ஒளிமலர் மாலை தாங்கிப்
பட்டொளிர் முகப டாப்பொற் பருமணி யோடை மின்னச்
சிட்டர்போ லுளமொ டுங்கிச் செவ்வி தின் நிற்கும் வேழம். 35

சேடுலாங் காழிப் பிள்ளை திருக்கானப் பேரி லன்று
பாடுமப் பதிகப் பாட்டிற் பரபக்திக் கனிவிற் றோன்றும்
பீடுயர் பெருங்கைம் மாலின் பிரதிகொல் என்னத் தோன்ற
நாடுசீர் அறிஞ ரெல்லாம் நயந்தர ஹரவெ டுத்தார். 36

அரஹர வொலிமே லோங்க அணிமணிக் காள மெல்லாம்
உரவுறு தொனியி னோங்கி உச்சஸ்தா யியினின் றாத
விரவுநான் மறைமு ழங்க வேதியர் வாழ்த்து மல்கப்
பரவுசீர்க் கும்ப முன்னாற் பன்முறை தொழுது போற்றி. 37

பதிபாத மூலச் செம்பட் டுடைப்பஞ்சா சாரி யர்தாம்
விதிமுறை யணுகிக் கூசி மெய்பனித் துடலம் விள்ள
மதிமுடித் திருக்கேதீசர் மஹாகும்பத் திருவைத் தொட்டுத்
துதியறா விதழ்து டிப்பத் தூக்கிமேற் கொண்ட போது. 38

மலர்மழை பொழிந்த தெங்கும் வாழ்த்தொலி கிளர்ந்த தெங்கும்
அலர்விழி யலசும் பாஷ்ப மலைந்தலைந் திழிந்த தெங்கும்
புலர் தரு விடியல் வானிற் பரவுபொன் னொளியின் மாமை
பலர்புகழ் மாந்தை யெங்கும் பட்டொளி மலர்ந்த தெங்கும். 39

பட்டொளிர் கவிகை யெங்கும் பரந்தசை கவரி யெங்கும்
விட்டொளிர் பவளக் காம்பு மிளிரால வட்ட மெங்கும்
தொட்டசை துவஜ மெங்கும் துகிலிகைக் கொடிக ளெங்கும்
சிட்டர்க ளாடிப் பாடுந் திருக்கூட்டத் தசைவு மெங்கும். 40

சல்லரி தடாரி பேரி தக்கைதண் ணுமைமுன் னான
பல்லிய முழக்க மோங்கப் பணிலம் வாய் விட்ட ரற்றும்
நல்லியல் நாத மோங்க நடைமல்லா ரிப்பண் ணோங்குந்
துல்லிய நாயனந்துத் தொடரிசை வழிநடத்த. 41

திருவீதி யுலாவெ ழுந்த சிவமலி செம்பொற் கும்பம்
பருமான உதயக் குன்றிற் பட்டொளி பரப்பித் துன்றும்
பெருமான இளஞா யிற்றிற் பிறங்கிடும் பணையெ ருத்தத்
துருமேவு களிற்றினுச்சி யுயர்ந்தெழுந் திலங்கு மாலோ. 42

வியாபகப் பொருள்தா மாயும் வேந்தன்வேண் டுதற்கிணங்க
இயாகநற் கும்பத் தொன்ற இசைந்தருள் கேதீ சர்தாம்
சியாமளத் துருவார் யானைச் சிரத்தெழுந் தருளி யின்று
கயாரூட மூர்த்தியான காட்சியுங் கண்டோ மென்பார். 43

மன்னுமிவ் வீழஞ் செய்த மாதவ மென்கொல் வேந்தன்
சென்னிரா ஜேந்தி ரற்காம் சிவபுண்ய விளைவ தென்கொல்
முன்னொரு காலத் திந்த மாந்தைகண் டிருந்த மேன்மை
பின்னும்மீண் டெங்கண் காணப் புதுயுகம் பிறக்க வென்பார். 44

சோழத்தோ டீழங் கொண்ட தொன்னெறித் தொடர்ச்சி யென்றும்
வாழவந் துற்ற விந்த வாழ்வுநல் வாழ்வா மென்பார்
வேழமூர்ந் தருளு மெங்கள் கேதீசப் பிரபு தாமே
ஈழவேந் தெனும்பு கழ்மைக் கென் குறை பாடிங் கென்பார். 45

இவ்வணம் பக்தர் கூட்டம் இயல்பெடுத் தேத்தத் தாறார்
செவ்வணப் பட்டு டுத்துக் கௌரிசங் கர்பூண் டோவா
மெய்வண வேதியர்கள் வியனிருக் கோதி யோதிக்
கைவணக் கலசத் தூநீர் ஆசியோ டள்ளி வீச. 46

அறிவரு சிவன்கோ லங்க ளனைத்துந்த முடலி னொன்றிச்
செறிவரப் பூண்டு டாடு முபாசனை யொன்றே யன்னோற்
பிறிவரு முத்தி கூட்டும் பெருமுபா யமதா மென்றென்
றெறிசுடர் நீறு சூலம் இயல்கரித் தோல்க பாலம். 47

இறந்தவ ரென்பு மாலை இருஞ்சடை யென்ப யாவுஞ்
செறிந்திடப் பூண்டு சிந்தை யாலன்றி வடிவி னாலும்
பிறிவரு சிவோஹம் பேணும் பெருந்தவச் சைவ ரான
அறுவகைச் சமயத் தோரு மங்கங்கு நிரந்து செல்ல. 48

அரசிய லலுவ லாளர் அங்கிங்குங் கொதுங்கி நின்று
விரவுசீர் வீதிச் சேவை மிகைகுறை சீர்மை செய்ய
முரசுடை மன்னர் முன்கை கூப்பிப்பின் காட்டா தேகப்
பரசுசீர்க் கும்ப யாத்ரை யெழுச்சியுள் வீதி சூழ்ந்தே. 49

அபிமுக வாயில் நண்ண ஆடியல் யானை மீதிற்
கவிகைக்கீழ்க் கலசத் தேவைக் கண்ணூறு கழித்த லாகப்
புவிபுகல் திருஷ்டி தோஷஞ் சுற்றிநீ ராஜ னஞ்செய்
தபிநய மருவு மாடல் பாடல்மங் கலங்க ளாற்றி. 50

செறிமத யானை சென்னிக் கலசமேற் றிறக்கும் போதில்
அறிவழிந் தவச மெய்தி யன்பரார்ப் பரிக்கத் தானும்
பிறிவில்நே யத்த தாகிப் பிளிறிமெய் சிலிர்த்தா னந்தித்
தறிவர்போல் நின்ற காட்சி யற்புதம் பகரொ ணாதே. 51

சேர்ந்தவண் குழுமுந் தொண்டர் சிவனடி யாருட் கூட
நேர்ந்ததால் விலங்கி யல்பு நீங்கியவ் வேழந் தானும்
தேர்ந்தமெய்ப் பக்தி கூரத் திகழ்ந்துள தென்றா லாத்மா
சார்ந்ததன் வண்ண மாகுந் தத்துவத் தென்கொ லையம். 52

வேழநின் றிறங்கு கும்பம் மிளிர்சிரோ வேஷ்ட னஞ்செய்
தாழநோக் கமைதி கூரும் அறிவர்பொற் சிரமீ தேறி
வாழவிஞ் ஞால மெல்லாம் ராஜரா ஜேச்ச ரத்துக்
கேழுறு கருவ றைப்பாற் கெழுதக வணைந்த தன்றே. 53

கருவறைப் பீட மேவிக் காண்வரு தைலாப் யங்கத்
துருவுற மிளிருங் கேதீச் சரற்கங்க நியாச மாற்றிக்
குருமணிப் பட்டு மாலை பதக்கங்கூர்ச் சமுநேர் மாற்றித்
திருவுறு சிவாசார் யர்கை தொட்டெடுத் துயர்த்துங் கும்பம். 54

சிவயோகச் செல்வ ராவார் சிரத்திழிந் தமுத தாரை
அவர் மூலத் தமரி லிங்கத் தபிஷேக மாகு மாபோல்
சிவதீர்த்தத் தாரையாகித் திகழ்கேதீச் சரர்பொன் மேனிக்
குவமனில் உவகை தேக்க உலகெலாங் குளிர்ந்த காலை. 55

சங்கொலி முழங்க வெங்குஞ் சாரும்பல் லியம்மு ழங்க
அங்கெழு கண்டை நாதம் அன்பரார்ப் பெதிர்நின் றார்ப்பச்
செங்கைவேல் வேந்தன் சென்னி திருவுள வளாக முள்ளிட்
டெங்குந்தெய் விகசோ பைச்சீர் மங்கலம் பொலிவ தாய்த்தே. 56

மன்னுதெய் விகசோ பைக்கண் மலரிரா ஜேந்தி ரன்பால்
முன்னுறீஇக் குடமுழுக்கு முழுதும்பார்த் தகம லர்ந்த
தென்னவன் சேர னாதி சிற்றர சர்கள் துன்னிப்
பன்னருங் கேண்மை கூர விடைபெற்றுப் பணிந்து போந்தார். 57

சேலுலாம் வயன்மா தோட்டக் கேதீசர் குடமு முக்கின்
பாலுலாம் வியப்பு மல்கப் பலவேடச் சைவர் மார்பின்
நூலுலாம் அந்த ணாளர் நுழைபுலத் தறிஞர் சான்றோர்
மேலுலாம் பரிவு கூர வேந்தனை வாழ்த்திப் போந்தார். 58

மருவுகும் பாபி ஷேக மங்கலம் நிறைவித் தான்ற
கிருதகிர்த் தியனாம் வேந்தன் கேதீசர் புதுப்பொற் கோயிற்
றருமகா ரகனாய்த் தன்கீழ்த் தளிகும ரனையே வைத்தான்
அருமையாற் படைத்த கோயில் அரசகோ யிலென்சீர் மன்ன. 59

அரசலு வலனா மன்னோன் அரசிறை வருமா னத்தின்
பரசுமோர் பகுதி கோயிற் பராமரிப் பினுக்கென் றாக்கி
விரவுறு விசாக மாச விசாகநாள் தீர்த்தங் கொள்ளும்
மரபுறு மெழுநாள் உற்ச வாதியும் வகுத்தா னென்ப. 60

தனியுயர் மகிமை நோன்மை சார்குட முழுக்குப் பெற்றாங்
கினிதரு ளிறைவர் மாதோட் டத்திரு இந்நாட் பூப்புப்
புனித நீராட்டுப் பெற்றுப் பொற்பொளிர் மங்கை போல
நனிமிகு மெழிலுற் றோங்கி நாட்குநாள் மிளிர்வுற் றன்றே. 61

உன்னுமித் திருவாம் மாந்தை உள்ளம்போற் புறமும் மெல்கித்
தன்னிலே குளிரு மாறு தகவின்ரா ஜேந்தர னங்கு
மன்னுசீ ரந்த ணாளர் அன்பரா துலர்க்கெ லாமுன்
பொன்மழை பொழிந்தாற் போலப் புயன்மழை பொழிந்த தெங்கும். 62

இருநிலப் புகழார் செவ்வி யிராஜரா ஜேச்ச ரத்துப்
பொருவறு குடமு முக்குப் புண்ணியப் புகழ்வி ரித்தாம்
அருள்வலி படைத்தஃ தாற்றும் அரசன்ரா ஜேந்தரன் தானே
திருவிரா மீஸ்வ ரஞ்செய் சீரினிச் செப்பு கின்றாம். 63

**கும்பாபிஷேகப் படலம் முற்றும்.**
**ஆகத் திருவிருத்தம் 667.**

## ஒன்பதாவது
## திருவிராமீஸ்வரப் படலம்

இந்து சேகரர் ராஜரா ஜேச்சரம்
முந்து மார்வத் தமைத்தபி ஷேகித்தே
அந்த மில்சிறப் பெய்திரா ஜேந்திரன்
சிந்தை கூர்மகிழ் வோடுற் றிருந்துழி. 1

நந்து நண்புற வோடங்கு நாடொறும்
வந்து போபவர் யாவரும் மற்றதன்
சிந்தை செய்வரு சிற்பநன் மாண்புவி
தந்து போற்றிடக் கேட்டுய ரோகையால். 2

சிந்த னைக்கரி தாஞ்சிவன் தந்தசீர்
நந்து செல்வத்து நம்பிக்கை நாணயம்
இந்த வாற்றினிற் பேணப்பட் டாயிற்றென்
றந்த மில்திருப் திப்பய னார்குவான். 3

சாலு மத்திருப் திப்பயன் மீக்கொள
மேலுஞ் சந்தர்ப்பம் வேண்டுமென் றாவல்கொள்
ஞால மன்னவற் கன்னது நல்கிட
நீல கண்டர் நினைந்தருள் செய்குவார். 4

சேது மேல்கரை மீதிற் றிகழ்வரு
மாது பாகர் பதியிரா மேச்சரத்
தோது காத லுறைப்புறு சீலத்துச்
சாது வாகுமொ ரன்பரந் நாளினில். 5

மாதோட் டத்துப் புதுத்தளி மாண்புகேட்
டாத ரத்தொடு மங்கணை தாச்சார்ய
மீது றத்தரி சித்தது செய்திடும்
மேதை மன்னனைக் காணும் விழைவினால். 6

வந்து மாளிகைத் திட்டினில் மன்னவன்
சந்த மாரு மரண்மனை சார்ந்தவன்
தந்த நல்வர வேற்பின் நனிமகிழ்ந்
தந்த மில்லாசி தந்தவண் வைகுவார். 7

கூர்த்த நோக்குங் குதூகலச் சோபைகொள்
நேர்த்தி யாம்முக தேஜஸும் பண்புற
வார்த்தை யாடுநல் வாக்பிர பாவமும்
சீர்த்த மன்னவன் சிந்தையை ஈர்த்தலால். 8

களவி லாவுளத் தாரவர் தம்மொடு
மளவ ளாவின் மார்தரற் காசையால்
உளம கிழ்ந்தநண் பூர்வரத் தன்னதோர்
அழைகி லாவிருந் தாக்கொண் டமைகுவான். 9

அன்ன காலத் தணியிரா மேச்சரந்
தன்ன தொன்மையும் மேன்மையும் ஆங்கணே
மன்னு தெய்வ மகிமையும் மற்றவர்
சொன்ன வாறுகேட் டின்புறு மன்னவன். 10

சீரி ராமேச் சரஞ்சேது மாக்கடற்
சேரு மேல்திசை யாவெதிர் கீழ்த்திசை
சீரார் கேதீச் சாந்திகழ்ந் தொன்றிலொன்
றாரு மீர்ப்புத் திறப்பிர பாவமும். 11

அன்ன சீர்ப்பிர பாவங்கண் டேகாழி
மன்னர் தம்மொடு நாவலூ ராளியும்
முன்னர் ராமேச் சரத்திருந் தேயிதைப்
பன்னு நற்பதி கப்பாட் டிசைத்ததும். 12

அன்று தொட்டிது ராமேச் சரத்தொடு
நன்று பேணிய நண்புற வுள்ளவும்
என்று மீழத் தவரிஃது கண்டுகொண்
டொன்று காதலி னஃது பணிவதும். 13

போதக் காட்சியி னாற்றெரீ மேவுமச்
சாது சொன்னவை நன்கு செவிக்கொளீஇ
ஓதும் அன்னர்ரா மேச்சரக் காதல்தன்
மீது தொற்றிடப் பெற்றவ னாயினான். 14

மற்றச் சாதுவி னாசியும் பெற்றுமுன்
னுற்ற கும்பா பிஷேகப்ர பாவத்தால்
அற்றை நாளி லருண்மொழித் தேவநா
டுற்றி ருக்கும் பெருவள முந்தெரீஇ. 15

ஈழ மாந்தைத் திருவிரா மீஸ்வரம்
வாழி நல்லரு ளாற் செய்வே னாகவென்
றூழி யூழி உயர்புகழ் ராஜேந்திரன்
கேழில் கேதீச் சரன்கழல் சிந்திப்பான். 16

அன்ன தாகுக வென்றந்த ரங்கத்தில்
உன்னு கேதீசர் உற்றறி விப்பதோர்
முன்னந் தோன்றலும் மன்னனுற் சாகச்சீர்
இன்ன பாங்குற்ற தென்னற்கி யார்வலார். 17

**வேறு**

சொல்லுள்ளன வெல்லாஞ்சிவன் புகழ்க்கேசெலப் பணிக்கும்
நல்லுள்ளவி லாசப்பர ஞானப்புல வரர்போற்
கல்லுள்ளன யாவுஞ்சிவன் கலைக்கோயிற்குப் பணிக்கும்
சொல்லுள்ளன போதாப்புகழ் சோழர் தவ மென்னே. 18

தாராசுர முயர்தஞ்சையி ராஜேசுரங் கங்கைப்
பேரானிகழ் சோழேசுரம் பெருகும்புக ழீழச்
சீரார்திரு ராஜேசுர் மிவற்றுக்கு ளடங்கா
ஏரார்நல மெல்லாங்கொள இராமீஸ்வர மமைய. 19

முன்னந்திருப் பணியாற்றிய முதுசீர்க்கலை ஞருடன்
பின்னைப்புதுப் புதுவுத்தியிற் பிரபல்யமுற் றோரும்
மன்னுந்திரு விராமீஸ்வரப் பணியிற்றொடர் புறவே
மின்னுந்தவத் திருவொன்றிய வேந்தன் பணித் தனனால். 20

சீரார்திரு விராமேச்சரத் திருவார்பெருங் கோயிற்
பேரார்தரு கலைநுட்பங்கள் யாவுந்தகப் பேணி
ஏரார்பரு வதவர்த்தினி யிடமார்ராம நாதர்
பேரார்தரு பொற்கோயில்பி றங்கப்படைத் ததனில். 21

வாராணசி விசாலாட்சிச மேதர்விஸ்வ நாதர்
சீரார்திரு வார்சந்நிதி தானுந்திகழ் வுறவே
போரார்திரு வொருபாற்பொலி சைவத்திரு வொருபால்
நீரார்சடை யுடையானருள் நிருபன் படைத் திட்டே. 22

செல்வத்திரு வீதித்திருச் சுற்றின் கணாங் கங்கே
மல்கும்புனி தத்தார்தரு தீர்த்தங்களு மேவிப்
பல்குந்திரு விராமேச்சரப் பயில்பாவனை நிகழப்
புல்குங்குறி குணம்யாவையும் பொருந்தித் திகழ்ந்ததுவே. 23

சேடொன்றிய மதிலும்மிசை திகழ்விர்ஷய நிரையும்
ஊடொன்றிய உயர்தூபிகள் ஒளியார்தரு நிரையும்
பீடொன்றிய பெருங்கோபுரப் பிறக்கத்தொளி நிரையும்
நாடுந்தொறு மெழில்செய்வது ராமீஸ்வர நகரே. 24

பாலாவிநன் னதிமேல்கரைப் பயில்வார்ராஜேச் சரத்திற்
றோலாவகை யதன்கீழ்கரைப் பயிலுந்தளி யிதுதான்
காலாதிக காலந்தொறுங் கேதீச்சரத் தோடார்
மேலாமியல் ராமேச்சர மிகு நண்பியல் குறியாம். 25

**வேறு**

மன்னவகை மன்னுமெழி லிராமீஸ் வரப்பேர்ப்
பொன்னுலவு கோயிலினிற் போதுமருள் மேவ
முன்னுதிரு மூர்த்திகளும் மூர்த்தி பிரதிஷ்டைக்
கென்னவுள யாவுமிசை வுற்றிட வமைத்தே. 26

எங்குமுன மாதவரு மீடில்தப சிகளும்
எங்குமுள மன்னவரு மியல்பிரபு தமரும்
எங்குமுள சித்தர்களு மீசனடி யவரும்
எங்குமுள ஏனையரு மியல் வினவி மருவ. 27

துங்கவுயர் மாட்சிபெறு தொல்யாக சாலைப்
பொங்குமழல் வேள்விபொலி புகைகம கமக்க
அங்கணழ கரசெனவெ ழுந்தருள வைத்த
செங்கனக கும்பமது வீதிவலம் வந்தே. 28

மண்குளிர விண்குளிர மன்னனுளங் குளிர
எண்குளிர வேத்துமடி யாரிதயங் குளிரக்
கண்குளிர எனைவோருங் கண்டுமனங் குளிர
விண்குளிர வருகங்கை விரவுசடை குளிர. 29

**வேறு**

அங்கம ரிராம நாத அண்ணலார் மௌலி மீது
பங்கய மலரோ னன்ன பட்டுடைச் சிவாசார் யர்தாம்
மங்கல மறையி னோசை சங்கிசை வாத்ய நாதம்
எங்குமா யியம்பக் கும்பாபிஷேகஞ் செய்தமைந்தார் மாதோ. 30

திருமிகு மிராம நாதர் திருவிரா மீஸ்வ ரர்என்
பெருமைசேர் நாமஞ்சூடிப் பேர்மிகு மாந்தை வாழ
வருமொரு பெருவாழ் வாக வையகம் மகிழக் கண்டே
அருமையின் வழுத்திப் போற்றி அமைதியுற் றிடுமா லென்றும். 31

மன்னன்ரா ஜேந்தரன் தானும் மற்றிந்தத் தளிபார் மீதில்
என்னதோர் குறைவு மின்றி இராஜமான் யத்தி னாலே
உன்னரு மரபின் நித்ய நைமித்யச் சீர்பெற் றோங்கத்
தன்னதா ணையின் மூவேந்த வேளாரை நியமித் திட்டான். 32

ஏர்திகழ் தருமா தோட்டம் இங்ஙன்ரா மீஸ்வ ரம்மாம்
பேர்பெறு தளிபெற் றிட்ட பெரும்புகழ் உரைத்தாம் மற்றச்
சீர்திகழ் மன்ன னிங்குச் சிலாமலி சாசனஞ்செய்
தார்வமொ டமைத்த சீர்மை அடுத்தினிப் புகலு வாமே. 33

**திருவிராமீஸ்வரப் படலம் முற்றும்.**

**ஆகத் திருவிருத்தம் 700.**

## பத்தாவது
## சிலாசாசனப் படலம்

மும்முடிச் சோழ மண்டலப் பெயரின்
மூதுபுக ழீழமா நாட்டைத்
தம்மடிப் படுத்தித் தசதசாப் தங்கள்
தலையளி செய்புகழ்ச் சோழர்
செம்மல்ரா ஜேந்தரன் சீர்கொள்மாந் தையினில்
திருவிரா மீஸ்வர மதுவும்
செம்மையார் ராஜ ராஜவீச் சரமுந்
திருவுற வகுத்தமைத் ததன் மேல். 1

கோதில்சீர்ப் புதல்வர்க் கூதிய மாகக்
குறைவறு நிலம்புலந் தேடி
ஏதிலர் தம்மால் அவர்கள்த முரிமைக்
கிடையூறு நேர்வது தவிர்ப்பான்
நீதிசா ருறுதி சாதனம் படைக்கும்
நிகரில்பெற் றோர்பரி வொழுக
ஓ துமா லயங்கட் குலகவ ரறிய
உயர் சிலா சாசன மமைப்பான். 2

மாந்தைமா நகரில் மற்றதன் பேரில்
மன்னன்முன் வகுத்துள நான்சில்
ஆய்ந்த சீர் மேவு மருண்மொழித் தேவ
வளநாடென் பெயருட னந்நாள்
ஏய்ந்த சீர் மாந்தைக் கிராஜரா ஜபுரத்
தியல்பெயர் நிகழ்ந்து கோயிலுக்கும்
வாய்ந்தசீர் ராஜ ராஜவீஸ் வரமென்
வழக்கினி திருந்ததும் விளங்கும். 3

உற்றகற் றூணத் தொன்றினோர் பக்கம்
உயரிரா சேந்திர னாணை
வெற்றிகூர் வரச்செய் வேளார்நா டுடையான்
விளங்கிசைத் தளிகும ரன்தான்
பொற்பமர் ராஜ ராஜவீச் சரமாம்
புதுத்தளிக் களித்திடு நிபந்தம்
மற்றவற் காநிர் வகித்தவா காட்டும்
மறுபக்கந் தெரிப்பது காணில். 4

நிகரிலிக் கோயில் நித்யநை மித்ய
நிபந்தங்க ளாயிடும் பரிசிற்
பகர்வுறு பாதை படகுகள் வரியும்
பாங்குறு பிடிலிகை வரியும்
நிகர்வறு தறிகள் வட்டங்க ளாற்சேர்
நிகரிலா வரியுமா மவற்றிற்
புகலுமோ ரளவு மேல்வரு மொழுங்கிற்
போதுமா விதித்தமை புலனாம். 5

சொற்பெறு ராஜ ராஜவீச் சரத்திற்
றுகளறு வைகாசி மாசத்
தற்புறு விசாகந் தீர்த்தநா ளாக
அமைவரத் தக்கவா றெழுநாள்
உற்சவம் நிகழ விதித்திடு விதியும்
உவற்றுட னொக்கவே காண
மற்றிந்த இரண்டாம் பக்கமே காட்டும்
மறு பக்கச் செய்தியா வதுதான். 6

எம்பிரான் ராஜ ராஜவீஸ் வரத்துக்
கிறையிலித் தேவதா னமதாய்
நம்புசீர் மன்னன் வகுத்த நன்னிலந்தான்
நாடிரா ஜராஜமா வீதி
உம்பர்மேற் றிசையில் உத்தரந் தன்னில்
கம்மணச் சேரியிவ் விரண்டுக்
கிம்பரோர் குன்றங் காமன்றன் நிலம்விட்
டெஞ்சிய ஐங்கோலென் பதுவே. 7

நாடுமித் தூண நான் கதாம் பக்கம்
நாடுகொள் வரியிலெவ் விகிதம்
நீடுமிக் கோயில் நிதிக்குரித் தாமென்
நிலைமைமுன் குறித்திடு மதுதான்
ஊடுறு பாதை படகுக ளாலே
ஒவோர்தினத் தொரோரக்க மோடும்
ஆடுறு தறியா லரைக்கால்அக் கமுமொவ்
வோர்வட்டங் கொள்கொடுப் பனவால். 8

ஈடிலித் திறத்த வரிவிகி தங்கள்
இயம்பிடு மப்பக்கந் தானே
பீடுயர் கேதீச் சரர்கொள்சீ ரமுது
படிக்குமுப் பொழுதிவ்வீர் நாழி
சேடுயர் பிரமச் சாரிக ளிருவர்
செலவுக்குத் தினம்நன்னான் காக
மாடுயர் மடவாழ் வினுக்கும்போ தளவு
வகுத்திடு விபரமுந் தெரிக்கும். 9

மற்றிந்நாற் பக்கத் தூணமே நிபந்த
வரன்முறை தெரித்திட மற்றோர்
கற்றுண்டப் பலகம் கருதிரா ஜேந்தரன்
காண்புறு வனவாசி முதலாப்
பற்பல தேசந் தன்னடிப் படுத்திப்
பகர்வுறு மீழமும் முழுதுந்
தற்கென ஆக்குந் தாவில்சீர்ப் புகழின்
தரமெடுத் துரைத்திடா நிற்கும். 10

**வேறு**

முன்னுசா சனங்க ளான நான்கின்மூன் றாவ தாகப்
பன்னுசா சனம தாங்கோர் பணிமகன் சிறுகு ளத்தூர்
என்னுமூ ருடையான் வேந்தன் இராஜேந்தர னாணை மேவி
மன்னுறு திருவி ராமீஸ் வரத்துக்காக் கியன சொல்லும். 11

பேசுமிப் பணிம கன்தான் பெருகுசீர் மாந்தை நாட்டுத்
தேசுறு திருவி ராமீஸ் வரர்திருத் தளியி லென்றும்
ஆசில்நற் றீப மேற்ற ஆம்முதல் ஆங்கண் வைகும்
மாசறு வணிகர் தம்பால் வைத்தது நிகழ்த்து மாலோ. 12

மற்றதன் வகையே தென்னில் வாழைக்காய் வணிகர் தம்பால்
பொற்றிருக் காச தொன்றும் போற்றுசக் கரப்ப டியார்
வெற்றிலை வணிக ரென்ன மேவுமிவ் விருவர் பாலும்
உற்றெதிர் நிரலிற் பொற்கா சொன்றுட னிரண்டு மாமே. 13

இராஜேந்திரன் சாசனத்துள் இயலுநான் காவ தன்கண்
பராஜ்ய மடைந்திட் டீழ மன்னன்த னுடைமை தோற்க
விராவுசீர் விஜயங் கொள்மூ வேந்தவே ளான்தன் கீர்த்தி
உராவுசீ ருலகங் காண உளியெழுத்துருவின் மன்னும். 14

கோனறி மகிமை துன்றுங் குன்றங்கா மன்போல் வாருக்
கான சீருறையு ளாகி அரசநன் மதிப்புப் பெற்ற
மானமார் வணிக ரீட்டம் மகிழ்ந்துறை பதியு மாகி
ஆனசீர் மாந்தை யந்நாள் அமைந்தவா றிதனாற் காண்டும். 15

தள்ளாத விளையுள் மல்கத் தாழ்விலாச் செல்வர் பல்க
உள்ளார நல்ல தக்கோர் உயர் துணையாக மன்னன்
எள்ளாநற் செங்கோலாட்சி இயைவுறு நாடெஞ் ஞான்றும்
விள்ளாச்சீர் மேன்மை பொங்க விளங்குதல் சரத மன்றோ. 16

அற்பொலி கண்டத் தையன் கேதீச னருளி னாலே
எற்பொலி சிற்பக் கோயி லொன்றினுக் கிரண்டு மல்க
மற்பொலி புயன்ரா ஜேந்திரன் மகிழ்ந்திடு மாந்தை யிங்ஙன்
பொற்பொளிர்ந் திருந்த பான்மை போற்றியுய்ந் திடுமால் வையம். 17

**சிலாசாசனப் படலம் முற்றும்.**
**ஆகத் திருவிருத்தம் 717.**

## கேதீசர் துதி

சேடியல் மாந்தைச் சீர்த்தி தேம்பிடா துயர்வுற் றோங்கப்
பாடியல் வலசம் பந்தர் சுந்தரர் தமைவ ரத்திக்
கோடியல் கங்கை கொண்ட சோழனும் வரவிங் கீர்த்த
பீடுயர் கருணை வேந்தெம் பிரானடி போற்றி செய்வாம்.

**ஆகத் திருவிருத்தம் 718.**
**திருக்கேதீச்சரநாதர் திருவடிகளே சரணம்.**

உ

சிவமயம்

# திருக்கேதீச்சரநாதன் பேரில் தோத்திரப் பாமாலை

**புத்தூர் ஸ்ரீ பெ. சின்னப்பு ஆச்சாமி அவர்களால் இயற்றப்பெற்று யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவ ஆசிரிய கலாசாலைப் பேராசிரியர் பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களால் பார்வையிடப்பட்டது.**

### விநாயகர் துதி
### வெண்பா

சீராரும் செல்லத் திருக்கேதினீச்சரம் வாழ்
காராரும் மேனிக் கணபதியே - பேராரும்
அற்புதனா மீசன் அருந்துதியைப் பாடுதற்கு
கற்பகமே உன்னிருதாழ் காப்பு

### அவையடக்கம் - விருத்தம்

சிற்பராபர மாமெங்கள் திருக்கேதினீச்சரன் மேற்
கற்றறிவில்லா நாயேன் காதலுற்றிசைக்கும் பாவில்
குற்றமே திருப்பினுந்தான் குணமெனக்கொண்டு கோதில்
பொற்புறும் புலவீருற்ற பிழை பொறுத்தருள் வீர் போற்றி

### வெண்பா

பாடவறியேன்யான் பத்தியால் நின்னருளைத்
தேடவறியேன் தெளிவில்லேன் - நாடியுளம்
ஆசையுறும் பாவிசைக்க அத்தா என்நெஞ்சிலே
நேசமுற நிற்பாய் நிறைந்து. 1

ஆக்குவாய் காப்பாயளிப்பாயருள் தருவாய்
நீக்குவாய் யெம்பிறவி நீடுமருள் - தேக்கக்
கடைக்கணிந்தே யெங்கள் கவலை தணிப்பாய்நீர்
சடைக் கணிந்த வீசா சரண். 2

பாரார் பரவுகின்ற பாலாவியின் கரைமேற்
சீரார் திருக்கேதுபுரச் செல்வனே - பேரார்
பதிதேடி வந்தேனிப் பாவி துயர் தீர்த்துக்
கதிதருவா யுன்றன் கழல். 3

அண்டரமிர்த மருந்திடவே பாலமதை
உண்டவரைக் காத்தருள் செயுத்தமனே-தொண்டரிடர்
தீர்த்தருளும் கேதுபுரத்தேவே சிவனேயென்
ஆர்த்த பிறவி யகற்று. 4

மண்சுமந்து கங்கை மதிசுமந்து மன்றினிலே
பண்சுமந்து ஆடும் பரனே -புண்சேர்
அடியர் துயர்களையும் அத்தாவினி மேலும்
படமுடியா தென் துயரம் பார். 5

சித்திபளிக்குந் திருக்கேதி னீச்சரத்தே
பத்தியொடு வந்து பாலாவியிலே - சித்தமுவந்
தாடுவார் தீர்த்த மடியாருன தருளில்
கூடுவார்க்குண்டோ குறை 6

காலன் வருமுன்னே கண்முன்னே வந்துனது
கோலந் தனைக்காட்டிக் கோதாட்டிச் - சால
அடியருடன் கூட்டி ஐயவடி போற்றும்
படியருள்வாய் பக்திப் பயன். 7

தந்தைதாய் தாரம் தமரிருந்துந் தாரணியில்
வந்தவினை தன்னையவர் மாற்றுவரோ - எந்தை
அருள்கனிந்த பார்வையது போதுமே அடியேன்
கருவொழிந்து சேரக் கதி. 8

நரிபரியா யாக்கி நடத்துபரி ஆளாய்
பரிநரியாய் ஆக்கியிப் பாரில் - அரிதான
அற்புதங்கள் செய்தடியர் ரல்லறுத்தா யென்னை
உற்றவினை தீர்த்தா ளுகந்து. 9

கங்கைசடைச் சூடிக் காலனைக் காலாற் சாடி
மங்கையுமை தன்னையிடம் வைத்துமே - பொங்கரவைப்
பணியாயணிந்தாய் பரனே யென்றன் துயரம்
தணியாயுன் தஞ்சமிரு தாள். 10

**கலித்துறை**

சீர்கொண்டிலங்கு திருக்கேதினீச் சரமென் பதியில்
நீர் கொண்டிலங்கு சடைசேர் மதியம் நிலவெறிப்ப
மார் கொண்டிலங்கு மரவாபரண மணி துலங்கப்
பார் கொண்டிலங்கரன் பாதமெந் நாளும் பணிகுவமே. 1

ஆடிடும் பாதமருளிடும் பாதமடியர் சிரஞ்
சூடிடும் பாதநம் சுந்தரற்கன் பொடு தூதெனவே
ஓடிடும் பாதமொளிதரும் பாதமுயர்ந்திடமால்
தேடிய பாதத்தைத் தேடிவந்தோம் வினைதீர்த்தருளே 2

முத்தனை முத்திக்குவித்தனை மூவர்முதற் பொருளைப்
பத்தனைப் பத்தர் மனத்தனைப்பாவியர் பாலணுகா
அத்தனை யன்பருளத் தனையான றியா தலைந்தேன்
சித்தி தருந் திருக்கேதீச்சரம் வளர் செல்வனையே 3

திருவார்ந் திலங்குந் திருக்கே தினீச்சரச் சீர்மணியே
மருவாருங் கொன்றை மலர்சூடியாடிடும் மாமணியே
உருவாரும் பாதியுமைக் கீந்திலங்கு மொளிமணியே
கருவார் பிறவித்துயர் நீக்கியாளருங் கண்மணியே 4

அப்பருடன் சுந்தரர் வாதவூரர் அருட்பெருமை
செப்பவரிய திருஞான சம்பந்தச் செல்வருமுன்
எப்புவியோர்களும் ஏத்தி ஈடேற எடுத்துரைத்தார்
அப்படிப் போற்றவறிந்திலனே யென்னை ஆண்டருளே 5

உற்றாரெனக்குன்னை அல்லாது வேறிங் கொருவரில்லை
சற்றாகிலு முளந்தானிரங்கா யிந்தத் தாரணியில்
நற்றாயிழந்திடுங் கன்றதுபோல நடுங்கு மென்னைப்
பெற்றாயுன தருள் தந்திடர் தீர் எம் பெரியவனே 6

பாட்டிற்குருகும் பரனென்றுன்னன்பர் பலர் புகலக்
கேட்டுத் துதியினைக் கூறலுற்றேன் கல்விகேள்வியில்லேன்
ஈட்டும் நிதியெனக் கென்னவுள்ளா யிந்தவேழையேன்சொற்
கேட்டு நனியருள் செய்வாய் திருக்கே தினீச்சரனே 7

தாயற்ற சேயினையே நிகர்த்தே பெருஞ் சஞ்சலமாய்
நோயுற்று வாடியுடல் மெலிந்தேயுளம் நொந்திடவே
ஓய்வுற்றலைத் திங்குனை நினைந்தேனென் றனுத்தமனே
தீதுற்ற வென் வினை தீர்த்தாள் திருக்கேதீச்சரனே 8

அடியார்கள் நெஞ்சந்தனிலே நிறைந்து மவர்கள்பட
முடியாத சோதனை செய்தவர்க்கேயரும் முத்திதந்தாய்
படிமீதிலுன்றனைப் பத்திசெய்யாத விப்பாவி யுன்றன்
அடிசேருமார்க்க மறிந்திலனே யென்னை ஆண்டருளே 9

தவமே புரிந்திலன் தண்மலரிட்டிரு தாள்பணியா
தவமே திரிந்து பெண்ணாசைவலைப் பட்டலைந்துலைந்து
பவமே புரிந்து கொடுந்துயர்ப்பட்டு னைப்பற்றிநின்றேன்
சிவமே என துவினை தவிர்த்தாளுன் றிருவடிக்கே 10

## சந்த விருத்தம்

வானுலாவு மதியோடு பூண ரவு மங்கையாளுமை பங்குசேர்
கானுலாவு கரிபோர் வைசேருமுரிகங்கையாள் முடிதங்கவே
மானுலாவு கரமங்கைசூல மழுமட்டவீழ்ந்து மிகுசோதிசேர்
தேனுலாவு மலர்சூடியாடு திருக்கேதினீச்சரமார் தேவனே 1

ஆதியாய் நடுவாகி யந்தமாகி யெங்கணு மருள்புரி
சோதியாய் மிகுசுடரதா யென் றுமுய்ய வெண்மதிசூடியே
பாதிசேருமை பங்குகொண்டு பாலாவியின் கரைமேவிய
தீதிலாத் திருக்கே தினீச்சரத்தே நடம்புரி தேவனே 2

ஆடெடுத்தனை யே யுகந்தடியார்கள் மீதினிலன் புகொண்
டோடெடுத்தனை பிச்சையேற்கவுகந்து ஏற்றிடுவார்கள் போல்
மாடெடுத்தனை மறைகள் போற்றிட மா தவன் றிருமால்முனம்
தேடெடுத்த பொற்பாதமே வினை தீர்த்திடுந் திருசேர்க்குமே 3

விடையிலங்கி விளங்கிடத் திருவீதிவந்து விரித்தசெஞ்
சடையிலங்கிடவே யணிந்திடு சந்திரன் மிகுசங்கமார்த்
திடமுழங்கிடு தேவ துந்துமி தேடியன்பர்கள் கூடியே
புடைவருந்திருக் கேதினீச்சரத்தே நடம்புரி தேவனே 4

ஆடுவார் மலரங்கை கொண்டடியார் களன்பொடு கூடியே
பாடுவார் துதிபத்தியோடு பாலாவியின் கரைமேவியே
தேடிவந்திடு வோர்க்கருள் திருக்கேதினீச்சரத்தே நடம்
ஆடுபொற் பதமேயணைத் தெனையாளுவாயென தையனே 5

## ஆசிரிய விருத்தம்

ஆதிமறை புகலரிய குருவே ஞான
அருள்வடிவா யமர்ந் தரவமணிந் திலங்குஞ்
சோதியுறு மணித்திரளின் சுடரே திங்கள்
சூடிய செஞ்சடையோனே தூய்மை வாய்ந்த
நீதியுறை அடியவர் தம் நெஞ்சகத்தே
நீங்காது நிறைந்தருளும் நீதியே யென்
தீதகற்றி யெனை ஆளவேண்டு கின்றேன்
திருக்கேதினீச்சரம் வாழ் சிவனே போற்றி. 1

பெண்ணாகும் பிசாசென்னைப் பிடித்தே ஆட்டப்
பேருலகிலே யலைந்து பெரிதும் வாடிப்
புண்ணாகி நொந்துடலம் பொறுக்க வொண்ணாப்
பொல்லாநோய் வருத்திடவும் யான் சகிக்க
ஒண்ணாத தரித்திரம் வந்தொருங்கே வாட்ட
உன்றனையே நினைந்துள்ள முருகி நின்றேன்
திண்ணமெனு மடியர் துயர் நீக்கியாளும்
திருக்கேதினீச்சரம் வாழ் சிவனே போற்றி. 2

என்போலும் பாவிகளிவ் வுலகி லில்லை
ஏழைகளி லெனைப்போல்வா ரெவரு மில்லை
உன் போலும் ஒருதெய்வ முலகில் இல்லை
உற்றபொருளில்லார்க் கிவ்வுலகோ வில்லை
அன்புமிகுந் தருள் பெறார்க் கவ்வுலகோ வில்லை

அரிய துணை எனக்குன்னை அல்லா தில்லை
சின்மயானந் தாவென் வினை தீர்த் தாளும்
திருக்கேதினீச்சரம் வாழ் சிவனே போற்றி 3

செல்லாதார் வாயிலெல்லாஞ் சென்று நின்று
சிறுமையுறு வறுமையறத் தருஞ்சீர் செல்வம்
இல்லாமைஉனை யிரக்க வின்னு மெந்தாய்
ஏழையெனைக் கைவிடில் நீ ஏது செய்வேன்
பொல்லாத சேயெனினும் பெற்றோர் குற்றம்
பொறுத் தருளல் கடனன்றோ புண்யமூர்த்தி
தில்லை நடம் புரிவோனே வினை தீர்த்தாளும்
திருக்கேதினீச்சரம்வாழ் சிவனே போற்றி 4

துன்பமெனும் சமுத்திரத்தில் மூழ்கு மெற்குத்
துணைபுரிவாய் சுவாமி யெனத் தோத்திரித்துன்
அன்பினிலோர் துரும்பளவு பற்றி நின்றே
னாசையெனு மலை தாக்கி யறுந்து போமுன்
உன் கருணை யாலதை யோர்வடிவ தாக்கி
உகந்துகரை யேறு தற் கோர் தெப்ப மாக்கி
சின்மயானந்தா வென் வினை தீர்த்தாளும்
திருக்கேதினீச்சரம் வாழ் சிவனே போற்றி. 5

கல்லா தபாவி யென்மேற் கருணை கூர்ந்து
கலைபயின்ற புலவரெனக் கசிந்தே யின்சொல்
சொல்லாது சொல்லி யுன்றன் தோத்ரமாலை
சூட்டவழி காட்டியவென் சுவாமி உன்னைப்
பல்காலும் பணிந்தடியேன் கேட்டு நின்ற
பணியெனக்குத் திருமணியே பணித்த லென்றோ
தில்லை நடம் புரிவோனே வினைதீர்த்தாளும்
திருக்கேதினீச்சரம் வாழ்சிவனே போற்றி. 6

அருள் மருவுஞ் சிதம்பாத்தி லாடுஞ் சோதி
அம்மையுட னானைக்கா வமர்ந்த சோதி
மருவலருங் காசிநகர் வந்த சோதி
மகிழ்வினொடு மதுரையிலே வாழுஞ் சோதி

உருமருவு மொட்டுசுட்டா னுறையுஞ் சோதி
ஓங்கிவளர் கோணமலை உற்ற சோதி
திருமருவுந் திருவாரூர் சிறந்த சோதி
திருக்கேதினீச்சரம் வாழ்சோதியாமே 7

ஆலமதையுண் டமரர் தம்மைக் காத்தாய்
அடியர் துயர் தனையறிந்தா யவரைக் காக்க
காலனைக் காலாலுதைத்தாய் காதல் மூட்டுங்
காமனைக் கண்ணாலெரித்தாய் கனிந்த தொண்டன்
பாலகனைக் கறியாக்கிப் பதமளித்தாய்
பார்வதியாள் வேண்ட இடப்பங் களித்தாய்
சீலமுடனடியர் துயர் தீர்க்கு மெந்தாய்
திருக்கேதினீச்சரம் வாழ் சிவனே போற்றி 8

விண்ணிறைந்த மதியினொடு கங்கை தன்னை
விரித்தசடை தரித்தரவம் விளங்க வேமுக்
கண்ணிறைந்த வொளிவ தனங் கறைசேர் கண்டங்
கரியினுரி புலியதளுங் கலந்து கொஞ்சப்
பண்நிறைந்த பாடலுகந்தாடல் செய்யும்
பரம்பொருளே பாவியென் மேற் பரிவுகூர்ந்து
திண்ணமெனு மடியர் வினை தீர்த்தே யாளும்
திருக்கேதினீச்சரம் வாழ் சிவனே போற்றி 9

மங்கையுமை தனைப்பாகம் வைத்தாய் போற்றி
மறலி தனை உதைத்தவரு மருந்தே போற்றி
கங்கை தனைத் தரித்தவென் கண்மணியே போற்றி
காமனையுங் காய்ந்தவருட் கண்ணே போற்றி
அங்கை தனி லனலேந்து மரனே போற்றி
ஆலால முண்டவென தரசே போற்றி
திங்கள் தனைத் தரித்திலங்குஞ் செல்வா போற்றி
திருக்கே தினீச்சரம் வாழ் சிவனே போற்றி 10

## பிட்டுநேர் படமண்சுமந்த
## பெருந்துறைப் பெருபித்தனே யென்னும் சந்தம்

வெந்திடா வனந்தன்னில் வாழ்ந்திடும்
விமலனின் துதிவேண்டி ஓதவே
சந்தமார்கலை கற்றிடா வெனைச்
சார்ந்துமே அருள் தன்னை ஈந்தனை
சிந்தைசேர் திருக்கேதினீச் சரச்
செல்வனின் புகழ் செப்பவேயென
தெந்தையே துதிஇசை பொருந்திட
வென்றெனக் கருள் புரிவையீசனே. 1

கல்லினா லெறிந்தோர்க்கும் விழியிலோர்
காலினாலுதைத் தோர்க்குங் கனன்றொரு
வில்லினாலடித் தோர்க்கும் விரும்பிய
வேண்டுமா றருள் வள்ளல் விமலனே
அல்லிமென் முலையாளொ டன்புடன்
அமர்ந்தருள் திருக்கேதினீச் சரத்
தெல்லை வந்துமே இரங்கிடுமெனக்
கில்லையோ வருளெந்தை ஈசனே. 2

ஊரிலானொரு உருவிலான் றனை
உற்றழைத் திடவே யமைந்ததோர்
பேரிலானொரு பிழையிலா னொரு
பிறப்பிலானிணை பேசவே யொரு
நேரிலானொரு நிகரிலா ளுமை
நீங்கிடா துருபாதி சேரவே
சீருலாந் திருக்கேதினீச் சரச்
செல்வனென் சிவலோக நாதனே. 3

ஏரிலங்கிடு மாந்தை மாநகர்
எழில்மிகுந் தினிஇலங்கவே பெரும்
பாரிலங்கு பாலாவியின் கரைப்
பாங்கேழுந்து நற்பதியிலே யருஞ்

சீரிலங்கிடவே யெழுந் திருக்
கேதினீச்சரந் தேடி நாயினேன்
நேரிலங்கிடு நின்னை யன்பொடு
நித்தமும் தொழநீ யருள்வையே. 4

ஆதியே யரனே யடியவர்க்
கன்பனே யென்றனை யனேயுமை
பாதியே பரனே சிறந்திடு
பங்கயன் திருமாலறிந் திடாச்
சோதியே சுடரே யிலங்கிடுந்
துய்யவெண்மதி சூடி யாடிடுங்
கோதிலாத் திருக்கேதினீச் சரக்
குழகனேயருள் குறைகள் தீரவே. 5

சத்தியாய்ச் சிவமாகியே யுயிர்
தவங்களுக் கருந்தந்தை தாயுமாய்
முத்தியேதரு முதல்வனாய்த் திரு
மூர்த்தியாய் வருமொருவ னாகியே
சித்திசேர் திருக்கேதினீச் சரச்
செல்வனேயுனைத் தேடியன் பொடு
நத்தியேபதி நாடி வந்திடும்
நாயினுங் கடையேனை யாளுமே 6

மறை விளங்கிட மா தவர்க் கருள்
வடநிழ லிருந்தற முரைத்தனை
கறை பொருந்திட விட மருந்தியே
காத்தனை சுரர் கவலைதீரவே
பிறை பொருந்திடச் சடை யணிந்தனை
பெருகு கங்கைநீர் அருவி யேற்றனை
நிறைவுளாய் திருக்கேதீச் சரா
நின்மலா துயர் நீக்கியாளுமே 7

நோயினா லுடல் நொந்து வாடியே
நுண்ணறிவு கெட்டே யலைந்துமே
தாயிலா விளஞ் சேய் நிகர்த்துமே
தாங்கொணாத் துயரே யடைந்துமே

சேயென் யான் திருக்கேதீனீச் சரம்
தேடிவந்துமே வாடி நின்றனன்
ஆயுமா மறை யோது மையனே
அடியனை யணைத்தாளு மீசனே 8

அன்னை தந்தையும் நீயலா தெனக்
கார் துணை புரிவா ரறிந்திலேன்
முன்னையென் வினை மூண்ட தோவென
மூடனா மடியேன றிகிலேன்
இன்னு மென்வினை எய்துமோவென
ஏழையேனும் யான் ஏதறிகிலேன்
சின்மயா திருக் கேதினீச்சுரச்
செல்வனே துயர் தீர்த்தருள்வையே. 9

தாங்கொணாச்சுமை தந்து நீயெனை
தான் வருந்திடல் நீதியோவெனை
ஏங்க விட்டிடிலேழை யானினி
என்ன செய்குவே னெந்தையேயுமை
பாங்கமர்ந்து பாலாவியின் கரைப்
பதிவிளங்கிடவே யெழுந்தருள்
தீங்கிலாத் திருக்கே தினீச சரத்
தீர்த்த வென் துயர் தீர்க்கவேண்டுமே. 10

போற்றியே நடராசனே யொளி
பொருந்திடும் பணிபூணுநின் பதம்
போற்றியேயிரு முனிவர் வேண்டமுன்
பொருந்தியே நடமாடிடும் பதம்
போற்றியே யடியார் துயர்களைப்
போக்கவே சிரஞ்சூட்டு பொற்பதம்
போற்றியே திருக்கேதி னீச்சரா
போற்றியே சயபோற்றி போற்றியே. 11

**வாழி - விருத்தம்**

அருமறை யயன்மால் வாழ்க அந்தண ரடியார் வாழ்க
பொருள் நிறை புலவர் வாழ்க பொருந்து நாமகளும் வாழ்க
தெருளுறப் படிப்போர் கேட்போர் சிந்தை செய்வோரும் வாழ்க
திருவுறைந் திலங்கி வாழி திருக் கேதீச்சரமே வாழி.

உ

சிவமயம்

# திருக்கேதீஸ்வரக் குறவஞ்சி நாடகம்

**மஹாவித்துவான் பிரம்ஸ்ரீ மா.த.ந.வீரமணிஐயர்**

**காப்பு**
**(விநாயகர்)**
**விருத்தம்**

**ராகம்: பூபாளம்**

பூங்குலை குலுங்கும் சோலை புவியினில் இலங்கும் கோயில்
மாங்குலைக் கனிகள் காவில் தூங்கு மாதோட்டம் மேவிப்
பாங்குடன் சிவனைக் கௌரி பரவியே துதித்த காதை
ஆங்குறவஞ்சி பாட ஐங்கரன் காப்ப தாமே.

**திருக்கேதீஸ்வரநாதர்**
**விருத்தம்.**

**ராகம்: பௌலஹரி**

சேலோடிப் பாய்ந்தொளிக்கும் செழுநீ ராற்றில்
செங்கமலக் கண்ணியளின் அங்கண் வீச்சில்
வேலோடு வருங்கந்தன் விழியைக் கண்டு
வியந்துகயல் நாணமுறும் வியன்கொள்ஆற்றுப்
பாலாவிக் கரையினிலே கோயில் கொண்டு
பக்தருளம் களிக்கவருள் புரியும் தேவன்
மாலேத்தும் மாதோட்டம் மருவி வாழும்
மன்னுதிருக் கேதீசன் மலர்த்தாள் போற்றி.

**(கௌரி)**

**ராகம்: நாதநாமக்ரியா - பண்**

கெண்டாமணி நாதம் வளர் கேதீஸ்வரப் பதியில்
வண்டார் குழல் வடிவாம்பிகே வளமாதோட்டம் மருவி
தண்டாமரைப் பதம்பாடியே தாயைத் தொழுதேத்திக்
கண்டார்வினை யகற்றுங்கௌரி கழல்போற்றியே பணிவோம்.

### (சுந்தரமூர்த்தி நாயனார்)

**ராகம்: மோகனம்**

வெண்குழையோர் காதணியார்
பொங்கரவர் சங்கரரெனப் போற்றி செய்து
பண்கமழும் திருமுறைகள்
பைந்தமிழில் பக்தியொடு பரவுமன்பன்
மன்னவரும் விண்புகழும்
மாதோட்ட நன்னகரில் மருவி வாழும்
அண்ணல்திருக் கேதீசன்
அருள்பெற்ற சுந்தரரின் அடிகள் போற்றி!

### (ஞானசம்பந்தர்)

**ராகம்: ஆரபி**

வானவ ரேத்தும் வளமா தோட்டம்
தானமர்ந் தருள் திருக் கேதீஸ்வரனின்
மோனைத் தமிழ்த்தேன் முகிழ்த்திட மாந்தும்
படம் ஞானசம் பந்தன் நல்லடி போற்றி!

### (கலைமகள்)
### விருத்தம்

**ராகம்: சரஸ்வதி**

இருக்கோடு யசுர்சாமம் அதர்வ ணம்நால்
இனியமறை நிதம்போற்றும் வேத வல்லி
பெருக்கேழு கடல் பொங்கிப் புரள வானில்
பெய்யுதமிழ் மழைக்கவிதை பேணித் தந்த
தரித்தேடு மெழுத்தாணி தாங்கும் கல்வித்
தலைமகளாம் கலைமகளாம் தாயின் பாதம்
திருக்கேதீஸ் வரக்குறத்தித் தமிழைப் பாடத்
திருவருளைச் செய்யுமென்றே சிரத்தில் வைப்பாம்!

### நூற்பயன்

### விருத்தம்

**ராகம்: காம்போதி**

திருக்கேதீஸ் வரக்குறத்தித் தீந்தமிழின் நாடகத்தை
விருப்போடு படிப்பவரும் நடிப்பவரும் இரசிப்பவரும்
அருள்தேனைப் பொழியுமெழில் திருக்கேதீஸ்வரன் கௌரி
திருப்பாத மலரன்பின் பெருக்கா லருள் பெறுவர்.

### அவையடக்கம்
### விருத்தம்

**ராகம்: சுருட்டி**

குழலையாழ் வீணைசெய்யும் குரலினுமினிமை யன்ன
மழலைமென் மொழிகள் பேசும் மதலையை உலகம் போற்றும்
தழிழையான் யாத்தபோதும் தரணியில் பெரியோரெல்லாம்
அமுதவாய்க் குதலையெந்தன் அழகுறு தழிழை ஏற்பீர்!

## (நூல்)
## திருக்கேதீஸ்வரக் குறவஞ்சி நாடகம்
## கட்டியக்காரன் தோன்றல்

### விருத்தம்

**ராகம்: நாட்டை**

கங்கைமதி புனைந்ததிருக் கேதீஸ்வர நாதர்
மங்களம்சேர் விடைப்பவனி மாதோட்ட வீதியருள்
பொங்கவரு மெச்சரிக்கை புகலப்பொற் பிரம்பேந்திக்
கங்குலெழிற் காரெனவே கட்டியக்காரன் வந்தான்.

### திருக்கேதீஸ்வரநாதர் பவனி வருதலைக்
### கட்டியக்காரன் கூறுதல்

**ராகம் : கம்பீரநாட்டை** **பாதாளம் : ஆதி**

**பல்லவி**

விடையில் பவனி வந்தான் - மழ
விடையில் பவனி வந்தான்

**அனுபல்லவி**

இடையில் - புலித் தோலுரியணி
சோபைதர - மாலயனும் போற்றத்திருக் கேதீஸ்வரன்.

**சரணம்**

பாதி மதி நதியும் வேணிதனில் மிளிர
பாம்பு படருமெழில் திருமுடியும்
காதில் தோடணிவி பூதி தரித்த நுதல்க்
கண்ணும் அருள இதழ் நகை சொரிய
வேத வேதியரும் பூத நாயகரும்
தேவ தேவர்களும் புடை சூழ
நாதமணி யதிர கேது ராகு தொழ
நன்னகர்மா தோட்டம்வளர்
மன்னன் திருக் கேதீஸ்வரன். (விடையில்)

சந்த்ர சூரியரும் வெண்கு டைகளேந்தச்
சாமரை தேவ மாதர் வீச
மந்த்ர வேதியரும் மாமறை யிசைக்க
மங்கள நாதம் விண்ணதிர
இந்திரர் தேவர்முனி தொண்டர் சூழவரும்
இருடி நாரிகளும் போற்றி செய்ய
சந்த்ர சூடன் புகழ் பொங்குமாதோட்டம்
வந்தனன் திருக் கேதீசன்
தந்தருள் பாலித்திடவே. (விடையில்)

சூலம் டமருகமும் மானும் மழுவும் அனல்
சூழும் ஜோதியைக் கரமேந்தி
கோல மார்பில் புரி நூலுமிலங்கிடவே
கோவைத் தலைமாலை யசைந்திடவே
ஆலகால விடம் அமுதமென அருந்தும்
நீலகண்டமது நின்றிலங்க
கால காலன் திருக் கேதீஸ்வர னடியார்
கண்டு மனம் குளிர்ந்திடக்
கொண்டு வரம் கொடுத்திட (விடையில்)

## திருக்கேதீஸ்வரநாதர் பவனி வருதலைக்கண்ட பெண்கள் கூறுதல்.

### விருத்தம்

**ராகம்: தோடி**

செஞ்சடையில் பிறைமதியம் சூடுதிருக்கேதீசன் திருவுலாவில்
அஞ்சலென அபயமருள அழகு பொலி பவனியதன் அணியைக்காண
மஞ்சளணி குங்குமம்பூ மாலையணி மங்கையர்கள் மாதோட்டத்தில்
செஞ்சதங்கை கொஞ்சவொலி மிஞ்சிடும் சிலம்பலம்ப வருகின்றாரே!

## திருக்கேதீஸ்வரநாதர் பவனி வருதலைக்கண்ட பெண்கள் கூறுதல்

### பதம்

**ராகம் : தோடி** **தாளம் : ஆதி**

### பல்லவி

மேதினியில் மா தோட்ட வீதிவரும் திருக்
கேதீஸ்வரனைப் பாரடி - தவநிறையும் பவனிவர (கண்டகதி)

### அனுபல்லவி

பாதி நிலவும் கங்கைப் பாம்பு மணி சடையன்
காதில் குழைதோடணி காட்சி தர விடையில் (மேதினியில்)

### சரணம்

1. சுந்தரன் அழகினில் சொக்கிவிட்டேன் என்ன
மந்திரப் பொடிதூவி மயக்கி விட்டானோடி?
இந்திரனோ பூர்ண சந்திரனோ நந்தியில்
வந்திருந்தருள் செய்த வடிவழகையென் சொல்வேன்? (மேதினியில்)

**ராகம்: பெஹாக்**

2. மாலழகரும் தேவி மஹால் மியும் அயனும்
கோல வாணியும் தேவர் சூழவரும் அழகும்
நீலகண்டத் தழகும் நிமலன் நகையழகும்
சூலத்தழகும் புலித் தோலழகும் காண அங்கங்க (மேதினியில்)

**ராகம்: தேஷ்**

3. நைந்து நைந்தே உருகிப் பைந்தமிழ்ப் பாசுரங்கள்
செந்தமிழில் பாடும் சிவனடியார் தொழ
சுந்தரப் புன்னகையால் எந்தன் மனம் மயக்கும்
தந்திரம் என்னடி தையலே நீ சொல்லடி? (மேதினியில்)

**ராகம்: ஸிந்துபைரவி**

4. பொழிலணி மாதோட்டப் பூம்பதிமேவி விடை
எழில்தரு பவனியில் ஏழிசை ஓங்குதடி
குழலொடு வீணையும் முழவொடு முரசமும்
அழகொடு இசைத்தெந்தன் ஆவலைத்தூண்டுதடி. (மேதினியில்)

**ராகம்: சுருட்டி**

5. கன்னல் விருப்புடையான் கணபதியும் தோகை
வன்ன மயில் தனிலே வடிவேலனும் வர
மன்னன் திருக்கேதீசன் மழவிடைப் பவனியை
என்னடி சொல்லுவேன் எழிலின் சிகரமன்றோ! (மேதினியில்)

**கேதாரவல்லி பூம்பந்தாடுதலைக் கட்டியக்காரன்**
**கூறுதல்**
**விருத்தம்**

**ராகம்: ஆனந்தபைரவி**

திங்களணி வேணியராம் திருக்கேதீஸ்வர நாதர்
திருவு லாவில்
மங்களமாய்ப் பவனிவரும் மாதோட்டவீதியிலே
மாதர் சூழ
மங்கைதிருக் கேதாரவல்லியிவள் செங்கையதில்
மலர்ப்பந் தேந்தி
பங்கயச்செஞ் சேவடியில் தண்டையும் சிலம்பலம்ப
பயில்கின்றாளே.

## கேதாரவல்லி பூம்பந்தாடுதல்

**ராகம்: ஆனந்தபைரவி** **தாளம்: ஆதி**

1. செங்கைவளை குலுங்க சேவடியிற் சதங்கை
கொஞ்சியொலித்தாட - இரு
கொங்கைபூம் பந்தினை வென்ற பெருமிதத்தால்
குழைந்து குழைந்தாட - எழில்
அங்கையிலே மலர்ப் பந்தெறிந் தேந்தியே
அழகுடன் அழகாட - இளம்
மங்கை கேதாரவல்லி மாதோட்டவீதியிலே
மகிழ்ந்து பந் தாடினளே.

**ராகம்: கல்யாணி**

2. கார்முகில் போலவே வார்குழலும் ஆட
களிமயில் கண்டாட - கயற்
கப் கூர்விழி யாடிட குலவுவண்டினம் நாணிக்
கூடிப் பறந்தோட - எழில்
சீர்மிகும் தெய்வீகச் சித்திரப் பாவையாம்
கேதாரவல்லியவள் - இந்தப்
பார்புகழ்ந் திடும்திருப் பாலாவிக் கரையினில்
பந்து பயின்றனளே.

**ராகம் : ஹமீர்கல்யாணி**

3. மானிவளோ மட மயிலிவளோ - பச்சை
மரகத மா மணியோ? - மொழித்
தேனிவளோ தமிழ்ச் சாறிவளோ? சுவை
தெவிட்டாத தெள்ளமுதோ? - இவள்
மானில மங்கையோ வானுலகத்தில் தேவர்
வடித்தபொற் சித்திரமோ? - என
நாணிடும் நங்கையர்சூழ் நளினகே தாரவல்லி
நயந்துபந்தாடினளே!

**கேதாரவல்லி பவனி வருகின்ற திரக்கேதீஸ்வரனை**
**காணுவதைக் கட்டியக்காரன் கூறல்**
**விருத்தம்**

**ராகம்: கேதாரகௌளை**

மயிலாடும் பொழில்சூழும் மாதோட்ட நன்னகரில்
மருவி வந்த
கயிலாய பதியான கட்டழகன் கேதீசன்
காட்சி கண்டு
பயிலா இன்மொழியாளாம் பாவைகே தாரவல்லி
பந்தாடாமல்
அயிலாரும் விழியாலே அவன் தெவிட்டா அழகினையே
அருந்தினளே!

**திருக்கேதீஸ்வரனைக் கண்ட கேதாரவல்லி**
**நாணுதல்**
**விருத்தம்**

**ராகம்: காபி**

அஞ்சன விழியிரண்டும் அரன்திரி நயனங் கவ்வ
அஞ்சலென்று அருள்வான்கண்கள் அணங்கவள் விழியைக்கவ்வ
செஞ்சிமிழ் வாயிற்பூத்த சிரிப்பினுக்கிணையும் தந்து
வஞ்சிகேதாரவல்லி வாளாமுன் நாணி நின்றாள்.

**கேதாரவல்லி திருக்கேதீஸ்வரன் மீது காதல்**
**கொள்ளுதல்**
**பதம்**

**ராகம்: காபி** **தாளம்: ஆதி**

**பல்லவி**

இந்த யௌவன தேவன் யாரோ? - தோழி
எந்தன் உளமதைக் கவர்ந்து சென்றானே!

**அனுபல்லவி**

பூந்தண் சோலைப் புனிதமா தோட்டக்
காந்த நயனன் கமல வதனன்.

**சரணம்**

வெள்ளை எருதின்மேல் வீதிவலம் வந்துளம்
கொள்ளை கொண்டு சென்ற கள்வன் யாரோதோழி?
வள்ளையிசைக்கும் ஆற்றுப் பாலாவிக்கரையினில்
கிள்ளைகொஞ்சும் பூம்பதிக் கேதீஸ்வரனோ தோழி?

கண்ணின் கடைவிழியில் காந்தம் இருக்குதடி!
எண்ண இனிக்குதெந்தன் இதயம் உருக்குதடி!
மண்ணில் கேதீஸ்வரத்து மாதோட்ட வீதியிலே!
விண்ணவர் சூழவெள்ளை விடையிலேறி வந்த.

**பவனி வந்தவன் திருக்கேதீஸ்வரனே எனத்**
**தோழி கேதாரவல்லியிடம் கூறுதல்**
**விருத்தம்**

**ராகம்: கமாஸ்**

தென்னிலங்கை வேந்தனவன் இராவ ணேசன்
தினவெடுத்த தோள்களினால் மலையைத் தூக்க
சென்னியிற்கால் விரலூன்றிச் செருக்கும் தீர்த்துச்
செவியார வீணையிசை கேட்ட செம்மல்
மன்னிடுமண் டோதரிக்கு மகிழ்ந் தருள்செய்
மன்னவனாம் அன்னவனே மாதோட்டத்தில்
தன்னிகரில் லாப்பவனித் தலைவன் காணாய்!
தரும் கேதீஸ் வரநாதன் இவனின் நாமம்!

## கேதாரவல்லி இரங்கல்
## பதம்

**ராகம்: கமாஸ்** **தாளம்: ஆதி**

**பல்லவி**

இன்னும் ஒருக்கால் இயம்பாயோ? - தோழி
இதயம் உருக்கும் அந்த திருக்கேதீஸ்வரன் நாமம்

**அனுபல்லவி**

கன்னல் கனி ரஸமோ கற்கண்டோ தேனமுதோ?
மன்னவன் திருநாமம் சொன்னநன் நாவினிக்கும்

**சரணம்**

1. வடிவேறு திரிசூலம் - ஏந்தி - கையில்
வளரனல் மழுமானும் - தாங்கி - சாம்பல்
பொடிபூசி விடைமீதில் - ஓங்கி - வந்த
புனிதன் புகழைப்பாடு - பாங்கி - நீயே
2. நன்னகர் மாதோட்ட நாதன் - திரு
நயனவிழி யின்ப - மோதல் - நெஞ்சை
என்னவோ செய்யுதே - மாதே - புவியில்
இதுதானோ தெய்வீகக் காதல்? - எனக்கு

## கேதாரவல்லியிடம் திருக்கேதீஸ்வரனைக் கேலி செய்து தோழியர் கூறுதல்

**ராகம்: செஞ்சுருட்டி** **தாளம்: ஆதி**

**பல்லவி**

கேதீஸ்வரன் பெருமை சொல்லவா? - தேவி
கேதாரவல்லியுந்தன் காதல் மன்னன் அல்லவா?

**அனுபல்லவி**

ஆதியும் அந்தமில்லான் அன்னைபிதா யாருமில்லான்
சாதிகுலமுமில்லான் சர்ப்பமதைச் சூடும் (திருக்கேதீஸ்)

**சரணம்**

பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படிபட்டான் முதுகில்
பித்தனென்றும் பேயனென்றும் பிச்சைக்காரப் பேரெடுத்தான்
கட்டுவிறகு விற்றான் காண்டீபனும் அடித்தான்
கண்ணப்பன் என்ற வேடன் காலினாலுதையும் பட்டான்

அம்பலத்திலோரணங்கின் ஆசையினால் தலையில் வைத்து
ஆனந்தத் தாண்டவங்கள் ஆடிடுவான் உன் தலைவன்
நம்ப முடியாக் கவிதை நற்றமிழில் பாடிடுவான்
நக்கீரன் குற்றமென நெற்றிக்கண்ணைக் காட்டிடுவான்.

மன்மதனைச் சுட்டெரித்தான் மறலியைக் காலாலுதைத்தான்
மாதர்கையில் பூணும்வளை மாணிக்கமும் விற்றுவந்தான்
வன்னிமரம் கிணறுலிங்கம் வரவழைத்தான் சாட்சி சொல்ல
வாதவூ ரடிகளுக்கு வந்து உபதேசம் செய்தான்

பன்றியின் குட்டிகளில் பரிந்துவந்து பால் கொடுத்தான்
பாணபத்திரன் வேண்டப் பாடியிசை வாதில்வென்றான்
நன்றியிலான் பிள்ளைக்கறி நாடிக்கேட்டவன் சுவைப்பான்
நன்னகர்மா தோட்டந்தனில் நல்லருள் புரியுமந்த

பாற்கடலில் விடத்தையளளிப் பருகிநீல கண்டனானான்
பாதியிரவிற் சுடலைப் பயங்கரத்தி லாடிடுவான்
நாற்றிசையும் கபாலமேந்தி நாடியே யிரந்திடுவான்
நங்கை கேதாரவல்லி நன்மனம் கவர்ந்து சென்ற.

## நிந்தாஸ்துதி கேட்ட கேதாரவல்லி தோழியரிடம் கூறுதல்
## (பதம்)

**ராகம் : பெஹாக் தாளம் : ஆதி**

**பல்லவி**

என்ன இருந்தாலும் அவரைக் குறை சொல்ல
என் மனம் ஏவாதடி ஸகியே!

**அனுபல்லவி**

மன்னன் திருக்கேதீசன் மாதோட்டத்தின் அதிபன்
சொன்னபோது வராமல் சோதனை செய்தபோதும்

**சரணம்**

பித்தனைப் போலலைந்து பிச்சையெடுத்தாலும்
சித்தனைப் போலிருந்து சிவபோதம் சொன்னாலும்
நித்தமெனை மறந்து பக்தரிடம் போனாலும்
இத்தனைக்கும் அவரை இடித்துரைத்தல் ஞாயமோ?

கட்டுவிறகு விற்றுக் கண்ணியம் இழந்தாலும்
பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படி பட்டாலும்
விட்டுப் பிரிந்தவரால் வேதனை கொண்டபோதும்
மட்டுப்படுத்தலாமோ மணவாளன் அவனன்றோ!

## நிந்தாஸ்துதி கேட்ட கேதாரவல்லி தோழியரிடம் கூறுதல்

**விருத்தம்**

**ராகம்: பெஹாக்**

நிந்தித்துத் துதிபாடி நீவிரென் காதலரை
வந்தித்துப் புகழ்பாடும் வாசகம் நானறியேனோ?
அந்திப்பிறை யணியும் அழகன் கேதீஸ்வரனை
சந்தித்துப் பொன்னடிகள் சரணடைவதென்னாளோ?

## கேதாரவல்லி கேதீஸ்வரனின் காதலினால் உருகுவதைக் கட்டியக்காரன் கூறுதல்

**ராகம்: நாதநாமக்ரியா** **பண்: நட்டராகம்**

மாவின்கனி தூங்கும் பொழில் மாதோட்டநன்நகரில்
தேவன் திருக் கேதீஸ்வர நாதன்தரு மையல்
காமன்கணை சொரிய மதி கனலையள்ளிப் பொழிய
பூவில் அனல் பட்டாற்போல்கே தாரவல்லி நொந்தாள்.

## கேதாரவல்லி சந்திரனைப் பழித்துரைப்பதைக் கட்டியக்காரன் கூறுதல்

### விருத்தம்

**ராகம்: செஞ்சுருட்டி**

நொந்தனள் மையலென்னும் நோயாற்கே தாரவல்லி
வந்தனள் நிலாமுற்றத்தில் வருந்தினள் மதியைக்கண்டு
சந்திரன் நெருப்பைக் கொட்ட சஞ்சலம் கொண்டகன்னி
அந்தவெங் கொடுமையாலே அல்லலுற் றலம்புவாளே.!

### கேதாரவல்லி சந்திரனைப் பழித்தல்

**ராகம்: செஞ்சுருட்டிதாளம்: ஆதி**

முழுமதியே மோஹன வெண்ணிலாவே! - எந்தன்
முகமுனக் கெதிரோ? - வெண்ணிலாவே!
அழகினில் நீ குறைந்தால் - வெண்ணிலாவே! - என்மேல்
அனலைச் சொரியலாமோ? - வெண்ணிலாவே!

கன்னியென் காதல் கண்டு - வெண்ணிலாவே! - நீயும்
கனலெனக் காயலாமோ? - வெண்ணிலாவே! -
உன்னிடம் உள்ள கறை - வெண்ணிலாவே! - என்போல்
உள்ளமுடைந்தார் சாபம் வெண்ணிலாவே!

செஞ்சடையில் எந்தலைவன் - வெண்ணிலாவே! சூட்டச்
செருக்குனக் கழகாமோ? - வெண்ணிலாவே!
கெஞ்சுமெனை மிஞ்சலாமோ வெண்ணிலாவே! - காதல்
கொஞ்சுமொழி கூறிடாயோ? - வெண்ணிலாவே!

மாதருடன் நீயுதித்தாய் - வெண்ணிலாவே - காதல்
மங்கையுள்ள மறியாயோ? - வெண்ணிலாவே
நாதரவர் காதருகில் - வெண்ணிலாவே! - இந்த
நங்கைநிலை நீயுரைப்பாய் வெண்ணிலாவே!

பொங்கரவ மென்றெண்ணாதே! - வெண்ணிலாவே! - இது
பூங்குழலின் பின்னலன்றோ! - வெண்ணிலாவே!
படம் வெங்கனலாய் ஆகலாமோ? - வெண்ணிலாவே! - காதல்
வேதனையில் சோதனையோ? - வெண்ணிலாவே!

உருக்காதே என்னுள்ளத்தை - வெண்ணிலாவே! - கண்ணீர்
பெருக்காவதைப் பாராயோ! - வெண்ணிலாவே!
திருக்கேதீஸ் வரனிடம் - வெண்ணிலாவே! - சொல்வாய்!
ஒருக்காலமும் மறவேன் வெண்ணிலாவே!

## கேதாரவல்லி மன்மதனைப் பழித்துரைப்பதைக் கட்டியக்காரன் கூறுதல்

**விருத்தம்**

**ராகம்: சுபபந்துவராளி**

திங்கள் நதி புனைந்த திருக் கேதீஸ்வரநாதர் திலகச் செவ்வாய்
மங்களமாய்ப் புரிந்த நகை மன்மதன் கண்டம்புதன்னை மங்கை மீதில்
வெங்கணையாய்ச் சொரிய அவள் வியாழனொடு வெள்ளிமலை ஆசனிக்கும்
சங்கரனார் முன்புகதிர் ஞாயிறுபோல் சரமாரி பொழிகவென்றாள்.!

## கேதாரவல்லி மன்மதனைப் பழித்தல்

**இராகமாலிகை**

**ராகம்: சுபபந்துவராளி** **தாளம்: ரூபகம்**

1. கையில் கரும்புவில்லை - எடுத்து
 கணைமலரால் தொடுத்து
 எய்துஎன் அங்கமெல்லாம் - நலிய
 ஏனோ வருத்துகின்றாய்?
 தையலென் தாபமெல்லாம் - அறிந்தும்
 தனிமை நிலை தெரிந்தும்
 மையலினால் வருந்த - மன்மதா
 மாய்த்திடுதல் தகுமோ?

2. கன்னலின் வில்லினிலே - அழகுக்
கருவண்டு நாணேற்றி
வன்னமலரைந்தை - மன்மதா
வடித்துக் கணையாக்கி
முன்னம் மலர் அம்பு - தொடுத்து
முக்கண்ணனால் எரிந்தாய்
இன்னும் மறக்கலாமோ? - அதுவும்
ஏட்டுச்சுரக்காயோ!

3. தண்ண முத நிலவும் - குயிலும்
தவழ்தென்றலும் - பகைக்கும்
பெண்ணுடன் போர் புரிந்தால் - உன்னையே
பேடியென்றிகழாரோ?
மண்ணதில் மாதோட்டம் - மருவும்
மன்னன் கேதீசனிடம்
வண்ண மலரம்பை - மன்மதா
வாரியள்ளிச் சொரிவாய்!

**கேதாரவல்லி மீது தோழி இரங்கிக் கூறுதல்**
**விருத்தம்**

**ராகம்: கூஷண்முகப்ரியா**

நன்னகர் மாதோட்டத்து நாதர்கே தீசர்மீது
உன்னகம் வைத்தாய்தேவீ உலகினைமறந்து அந்தப்
பன்னக மணிவான் மையல் பாவையே உனை உருக்க
என்னதான் நானும் செய்வேன் எழிலுடல் வாடலாமோ?

**கேதாரவல்லி தோழியைத் திருக்கேதீஸ்வரனிடம்**
**தூதனுப்புதல்**
**பதவர்ணம்**

**ராகம் : ஷண்முகப்ரியா** **தாளம் : ஆதி**

**பல்லவி**

மாதே நீ தூது சொல்லடி! - இள மாதோட்ட நன்னகரில்
மருவியே அமர்ந்தருள் திருக்கேதீஸ்வரனிடம்.

**அனுபல்லவி**

பாதார விந்தமலர் ஆதார மென்றுலகில்
கேதார வல்லியிவள் கெஞ்சுகிறாள் என்று

**(முக்தாயிஸ்வரம் - ஸாஹித்யம்)**

ஸரிஸரிஸ ஸரிஸநீதபம்
வாரானோ பருவப் பாவையெனைப்
பாபாப பதபமகரிஸநி
பாரானோ பசுபதி தருமையல்
ஸாஸாஸ ஸரிகரிகரிஸநி

தீரானோ திருவடிதனை நினைந்
ஸரிகமரிஸநி ஸரிகபதநி
தனுதின முருகிடும் எனையணைத்திடவே
ஸ்ரிக்ரிஸ்நிதா நிரிஸ்நிதபமா
மயிலொடுகுயிலும் மதியொடும்தனும்

பஸ்நிதிபமகா மநிதபமகரிஸ
மலரணையதுவும் மாதெனை வருத்த
கரிஸநி ஸரிகமப த நிஸ்ரீ
கயிலையின் பதியவன் திருக்கேதீஸ்
க்ரிஸ்நிதா ரிஸ்நித பாமகரிஸரிக
வரன்தனையே இதுதருணம் அழைத்துவரவே

**முக்தாயிஸ்வரம்**

ஸ்ாஸ்ாஸ் ஸ்ரிஸ்நீதபம பாபாப பதபமகரிஸநி
ஸாஸாஸ ஸரிகரிகரிஸநி ரிகமகரிஸநி ஸரிகமபதநி
ஸ்ரிக்ரி ஸ்நிதா நிரிஸநிதபமா பங்நிதபமகா மநிதபமகரீ
கரிஸநிஸரிகம பதநிஸ்ரிக்ரிஸ்நிதபாமகரி ஸரிக.

**(ஸ்வரஸாஹிதயம்)**

வாரானோ பருவப் பாவையெனப் பாரானோ பசுபதிதருமையல்
தீரானோ திருவடிதனை நினைந் தனுதினமுருகிடும் எனையணைத்திடவே
மயிலொடுகுயிலும் மதியொடுமதனும் மலரணையதுவும் மாதெனைவருத்த
கயிலையின் பதியவன்திருக்கேதீஸ் வரன்தனையே இது தருணம் அழைத்துவரவே.

## சரணம்
## ஆயிரம் தூதுவிட்டேன் அவனைக் காணேன்
## (எத்துக்கடை ஸ்வரஸாஹித்யம்)

1. ஸ்ா நீ தா பம பாமா கரிகம
மானே நீ தூது போவா யென்றுநான்

2. பமகரிகம தம கரிஸநி ஸரிகம
அஞ்சுகமே என்று கெஞ்சி கெஞ்சிநானும் அவனிடம்

3. பாதமபத மபததபமகரி கம
பமகரி . நிஸரி கமபமகரிகம
பதமபதநிஸ்ரிக்ஸா ரிஸ்நீ
ஸ்நிதா நிதபா தபமா பமகா

மகரீ கரிஸநி ஸரிகம பதநி
ஸ்ரிக்ஸ்ாஸ்ா ஸ்நிதபா பா
மகரிஸாஸா க்ரிஸ்நிதாரிஸ
நிதபா ஸ்நிதபா மகரிஸரிகம

## கேதாரவல்லி கூடலிழைத்தல்

**ராகம்: பந்துவராளி** **தாளம்: ரூபகம்**

நான்முகனொடு நாரணன் அன்று
நாதன் முடியும் அடியும் தேடி
வான்முகிலொடு கீழுலகமும்
வளர்ந்தும் மகிழ்ந்தும் வடிவுகாணா
மான்மழுவேந்தும் மலரிதழ்க்கையன்
மாதோட்டத்திரு கேதீஸ்வரன்
கூன்பிறைச்சடை யான் எனை இன்று
கூடுவரெனில் கூடல்நீ கூடாய்!

வாழையின்கனி வானரம் மாந்த
வளரிளஞ்சோலை வண்டினம்பாடத்

தாழையின் மடல் அவிழ்ந்து கமழும்
தண்வயல்சூழ் மாதோட்டநகரில்
பயன் காளையில் ஏறிக் கனல் மழுவேந்திக்
காட்சிதந்தென்மேல் காதல் கொண்டவர்
வேளையில்வந்து கூடுவரெனில்
விரைந்து சுழித்துக் கூடல்நீ கூடாய்!

**திருக்கேதீஸ்வரக்குறவஞ்சி தோன்றுவதைக்**
**கட்டியக்காரன் கூறுதல்**
**விருத்தம்**

**ராகம் : காம்போதி**

கூடலில் இளைத்துவாடும் குமரிகே தாரவல்லி
கொண்டமையல்
ஊடலில் களைத்தாளுள்ளம் உடைந்தவள் சோர்ந்து வாட
உவக்கத் தோன்றி
ஆடலில் அரம்பையன்னாள் அறிவினில் வாணியொப்பாள்
அழகு நங்கை
பாடலில் புகழ்சேர்திருக் கேதீஸ் வரக்குறத்தி
வருகின் றாளே.

**திருக்கேதீஸ்வரக் குறவஞ்சி தோன்றலைக்**
**கட்டியக்காரன் கூறுதல்**
**அகவல்**

**ராகம்: ஆரபி**

நித்திலம் கொழிக்கும் நீண்டிரை சூழும்
இத்தல மீதில் இலங்கிடு மீழ
வளநிறை நாட்டின் வாசனை கமழும்
இளமாஞ் சோலை இன்பக் கனியும்
வாழைக் குலையும் வளர்வருக் கைதானும்
தாழை மடலில் தவழ்பூங் காற்றும்
பூத்துக் குலுங்கும் புதுமலர் மணமும்
ஏத்தும் பதிகம் எழில்தரு தலமாம்

மாந்தை யென்னும் மாதோட் டத்தின்
வேந்தன் கேதீஸ் வரத்துப் பதியான்
சூலா யுதத்தான் சுந்தர முகத்தான்
பாலா வியெனும் பைந்தண் நதியான்
செந்நெல் கரும்பெனச் செழித்திடு செந்தேன்
கன்னல் கழுகென கனிவளர் நாட்டன்
நந்தியின் கொடியோன் நான்மறைப் பரியோன்
அந்தமில் லழகுக் கொன்றையந் தாரான்

படையும் மணமும் கொடைமும் முரசும்
உடையான் திருவெண் கொற்றக் குடையான்
கேதொடு ராகு கும்பிடும் அருளான்
மாதொரு பாகன் மகா லிங்கத்தின்
பக்கம் திருவருள் பாடித் திகழ்பெறநுதலில்
திருநீ றணிந்து திலகமு மிட்டே
பாசியும் குன்றியும் பச்சையும் பவளநன்
மாசிலா மணிவடம் மார்பினில் இலங்க

மந்திரக் கொங்கையின் மயக்கும் குலுக்கும்
சுந்தர விழிகளில் சிமிட்டும் பகட்டும்
துள்ளிய நடையும் துடுக்குப் பேச்சுடன்
அள்ளிய குழலினை மெள்ளவே சொருகி
ஆடவ ருள்ளம் கிள்ளியே திருகும்
நாடக நகையாள் நன்மன முடையாள்
வெற்றிலை மென்றசெவ் விதழ்க்குறும் புடனே
சிற்றிடை தனிலே செம்பா வாடையும்

மார்புக் கச்சும் மகிழ்வுட னணிந்து
கூர்பெறும் ஊசியும் குறத்திக் கூடையும்
மாத்திரைக் கோலும் மலர்க்கை யேந்தி
சாத்திரக் கலையின் சமுத்திர மன்னாள்
மொழிக்குறி கைக்குறி அகக்குறி முகக்குறி
விழிக்குறி மெய்க்குறி வருங்குறி போங்குறி
குறிமுறை யாவும் நெறிமுறை யோடு
அறியவே சொல்லும் அழகுடை நங்கை

பான மாதிருக் கேதீஸ் வரக்குற வஞ்சி
யாவரும் களிக்க வருகின் றாளே.

### திருக்கேதீஸ்வரக் குறவஞ்சி வருதலைக் கட்டியக்காரன் கூறுதல்
### (தரு)

**ராகம்: ஹம்சாநந்திதாளம் : ஆதி**

பல்லவி கேதீஸ்வரக் குறத்தி வந்தாள் - திருக்
கேதீஸ்வரக் குறத்தி வந்தாள்

**அனுபல்லவி**

வேத கானம் வேதியர் ஓதும் மாதோட்டநகர்
நாதன் திருக்கேதீசன் பாதம் பணிந்து பாடிக்

**சரணம்**

கொஞ்சும் தமிழொடு மிஞ்சும் அழகொடு
கெஞ்சி இறைவன் புகழ்பாடி
பிஞ்சுப் பிறையணி வஞ்சிப் பாகனை
நெஞ்சில் நினைவொடு மனமார
கஞ்ச விழிக்குற வஞ்சி குறி சொலத்
பதஞ்சமெனச் சிவன் தாள்போற்றி
மஞ்சு தவழ்ந்திடு மாதோட்டத்தில்
மயிலொடுகுயிலும் மானும் நாணிட

### கேதாரவல்லி திருக்கேதீஸ்வரக் குறவஞ்சியை மலைவளம் கூறும்படி வினவுதல்
### விருத்தம்

**ராகம்: மாயாமாளவகௌளை**

செந்திரு நிறைமாதோட்ட திருக்கேதீஸ் வரத்தில் வாழும்
அந்தநா தனையேபாடி அம்புலிபோலத் தோன்றி
வந்திடும் குறத்திப் பெண்ணே! வளநிறை மலையைநீயும்
எந்தனுக் கியம்புவாயே எழிற்கனியிதழின் வாயால்?

## திருக்கேதீஸ்வரக் குறவஞ்சி மலைவளம் கூறுதல்

**ராகம்: மாயாமாளவகௌளை** **தாளம் : ஆதி**
**திஸ்ரநடை**

மாமரங்கள் மீதிருந்து மாங்குயில்கள் கொஞ்சும்
மாங்குயிலின் கொஞ்சுதலைப் பூங்கிளிகள் மிஞ்சும்
பூமரங்கள் பூத்தலர்ந்த பூவினில்தேன் ஒழுகும்
பூவில் நறுந் தேன்பருகிக் கார்வண்டுகள் பழகும்
கோபுரங்கள் மீதிருந்து கோலமயில் ஆடும்
கொடும்புலியும் மானும்துள்ளி மகிழ்ந்துவிளை யாடும்
தேமலர்மா தோட்டத்திருக் கேதீஸ்வரன் வாழும்
திகழிலங்கை நாட்டுமலை எங்கமலையம்மே!

செங்கதிரோன் வந்தொளிக்கும் சிவனொளி பாதம்
சேருங்கிரி காலமலை செய்யுநதி நாதம்
திங்கள் முடிக் கோணேஸ்வரத் திருமலையும் திகழும்
திருமுருகன் பெருமைதனைக் கதிரமலை புகலும்
அங்கயலும் மாணிக்கமும் கங்கையிலே புரளும்
அழகுகாண ஆனைகளும் அலையலையாய்த் திரளும்
பொங்கரவ மணியும் திருக் கேதீஸ்வர நாதர்
போற்றுமீழ நாட்டுமலை எங்கமலை யம்மே

தென்னை மரக் குலைகளோடு தேன்கதலி சாயும்
தேன் கதலி யுண்ணமந்தி தெங்கு மரம் பாயும்
பன்னகத்தின் மணிகளெங்கும் பரவிச்சிந்தி ஒளிரும்
பாடலொடு வீணையிசைப் பரதக்கலை மிளிரும்
வன்னிவரிக் குயிலினிசை வண்டினங்கள் பயிலும்
வாரணங்கள் கோளரிக்குப் பாலூட்டித்துயிலும்
மின்னலிடைக் கௌரிவளர் மின்னிடுமா தோட்டம்
மிளிர்திருக்கே தீஸ்வரனின் மலையெங்கள் மலையே

### திருக்கேதீஸ்வரக் குறவஞ்சியை குலவளம், நிலவளம், தலவளம் கூறும்படி கேதாரவல்லி வினவுதல்
### விருத்தம்

**ராகம்: மோகனம்**

சுந்தரத் தமிழில் நீயும் மந்தர வளங்கள் யாவும்
தந்திர மாகச் சொன்னாய் அந்தமில் லுவகையுற்றேன்!
கந்துகக் கொங்கையாளே! கவின் நிலக்குலவளங்கள்

### திருக்கேதீஸ்வரக் குறவஞ்சி நாட்டுவளம் தலமகிமை கூறுதல்

**ராகம் : மோகனம் தாளம் : ஆதி**

**திஸ்ரநடை**

வெள்ளிமலை விட்டு வந்தான் - வேதபுரி ஈசன்
பாக விளங்கு திருக்கேதீஸ்வரம் வீற்றிருந்தான் நேசன்
கள்ளிருக்கும் மார்க்குழலி கௌரியும் மாதோட்டம்
கயிலைமலை நீங்கிவந்தாள் காட்டவருள் நாட்டம்
புள்ளிமயில் வேலவனும் வள்ளிமயி லோடு
புனிதக் கதிர்காமம் வந்தான் புகழ் பெறுவேலோடு
பள்ளிகொளு மாயவனும் வெண்ணைதேடி வந்த
பார்புகழும் ஈழவள நாடு எந்தன் நாடே.

### திருக்கேதீஸ்வரக் குறவஞ்சி தலைவிக்கு தலமகிமை கூறுதல்
### காவடிச்சிந்து

**ராகம்: செஞ்சுருட்டிதாளம்: ஆதி**

1. பாலாவி நதியிலே நீராடிப் பக்தரெல்லாம்
பக்தியாய்த் தீர்த்தமேந்தி வருவார் - அவர்
போர் சுத்தமாய் ஈரவாடை புனைவார்
தீராத வினைதீர்க்கும் தீர்த்தக் காவடி கொண்டு

திருமுறை பாடிவரும் காட்சி - கண்ணால்
ஒருமுறை பார்த்தாலே மாட்சி.

2. சிவனடியார் கோடி சிரத்தில் குடங்களேந்தி
சேர்ந்து சிவ புராணம் படிப்பார் - மெல்ல
ஊர்ந்து எறும்பு போல நடப்பார்
அவனிதனில் அருளும் அரன் மகாலிங்க மீது
அபிடேகம் அன்புடனே செய்வார் - இந்தப்
புவியாசை விட்டு நீங்கி உய்வார்.

3. காரோடும் முகிலன்ன கன்னியர் கூந்தலினைக்
கண்டு கலாபம் விரித் தாடும் - மூசு
வண்டு ரீங்காரம் கீதம் பாடும்
நீராடும் மங்கையரின் நேத்திர நிழல் கண்டு
சேலோடிப் பாய்ந்து தாவிப் புணரும் - பின்னர்
நீராடியென நெஞ்சில் உணரும்.

4. கேதுவும் ராகுவெனும் சேடவரவு கூடி
கேதீஸ்வரனின் பாதம் நாடும் - அதன்
நாகபடம் விரித்து ஆடும்
சேதுக்கடலலைகள் கேதீஸ்வரத்தலத்து
நாதன் புகழ் பாடியெப்போதும் - வந்து
மாதோட்டக் கரைதனில் மோதும்.

## கேதாரவல்லியின் கையைப் பார்த்துக் குறியைச் சொல்லும்படி தோழி திருக்கேதீஸ்வரக் குறவஞ்சிக்கு கூறுதல்

**ராகம் : ரஞ்சனி**

மாந்தளிர்சூழ் மாதோட்ட மன்னுதிருக்கேதீசன் மலரின் பாதம்
தீந்தமிழில் பாடியெமைத் தெவிட்டாத இன்பமதில் தேக்கிவிட்டாய்
காந்த முலைக் குறவஞ்சிக் காரிகையே! கன்னிகே தார வல்லி
பூந்தளிரின் கரம்பார்த்துப் புதியகுறி நீயின்று புகலு வாயே!

## திருக்கேதீஸ்வரக் குறவஞ்சி இறைவணக்கம் செய்து குறிசொல்லத்தொடங்குதல்

**ராகம் : ரஞ்சனி**
**தாளம் : ஆதி**

**பல்லவி**

சொல்லவா குறி சொல்லவா? - அம்மே!
மெல்லியலாம் கேதார வல்லிகரம் பார்த்து நானும்

**அனுபல்லவி**

நல்ல நல்ல ஆரூடம் நன்னிமித்தம் சொல்லவா?
பல்லிவாயின் பலன்களெல்லாம் பக்குவமாய் இக்கணமே!

**சரணம்**

1. தரைமெழுகிக் கோலமிட்டு நிறைகுடமும் தீபம்
கணபதிமுன் தாம்பூலம் கதலி பழம் வைப்பாய!
நிரைநிரையாய் சூடமேற்றி நெற்பொரியும் படைப்பாய்!
நிறைநாழி மஞ்சளுமே நிறைவு பெற வைத்தே.

2. கானகத்து முறிகண்டிக் கணபதியே சரணம்
தேனகத்துக் கதிரமலைத் தெய்வமே நீ சரணம்
மோனவடி வானகௌரி முத்துமாரி சரணம்
ஞானத் தமிழ் வீணையிசைக் கானவாணி சரணம்.

## திருக்கேதீஸ்வரக் குறவஞ்சி குறிசொல்லுதல் கண்ணிகள்

**ராகம்: தேக்ஷ்** **தாளம்: ஆதி**
**திஸ்ரநடை**

1. செந்தாமரை மலர்க் கையைக்காட்டாய் அம்மே!
செம்பொன்வளை பூணும் கையைக் காட்டாய்!
பந்தாடும் சித்திரக் கையைக் காட்டாய் அம்மே!
பாலமுதம் தரும் கையைக் காட்டாய்.!

2. இக்கரந்தனக்கு இத்தரணி மீதில்
எக்கரமுமிணை யில்லையம்மே!
சக்கரரேகைசௌ பாக்கிய ரேகையும்
சங்கரேகையுமி வைதானம்மே.!

3. நல்லறம் யாவுமே செய்யுமிந்தக் கையே!
நங்கையுன் பங்கயச் செங்கையம்மே!
இல்லறம் தர்மத்தில் வல்லதுன்கையம்மே!
இன்னும் நான் சொல்வதை கேளுமம்மே.!

4. கையனல் போலவே காய்வதனால் உந்தன்
கள்ளங்கள் யாவு மறிவேனம்மா!
மையலினால் இள மங்கையே உன் காதல்
மன்னனை நின்மனம் நாடுதம்மே.!

**கேதீஸ்வரக் குறவஞ்சியை தனது நாயகனின் நாமம் திருவூர் சொல்லும்படி கூறுதல். கண்ணிகள்**

**ராகம் : மாண்டு** **தாளம் : ஆதி**
**திஸ்ரநடை**

1. கள்ளத்தனமென்றாய் காதலென்றாயடி!
கானக்குறத்தியுன் வாய் மதமோ?
உள்ளத்தைச் சொல்லடி உண்மை ஒளிக்காமல்
உன்குறியாவு முரைப்பாயடி. !

2. புத்தம் புதுநறும் பூவெனவே நித்தம்
புனிதக் கன்னியாய் நானிருக்க
சித்தம் மயங்கி நீ செப்புகிறாயடி!
இத்தனைச் சாகசம் ஆகாதடி!

3. மாயக் குறவஞ்சி மையல் என்றாய் காதல்
மன்னவன் நாமத்தை நீ சொல்லடி?
நாயகன் வண்ணமும் நாதன் திருவூரும்
நங்கை குறவஞ்சியே சொல்லடி.?

**திருக்கேதீஸ்வரனின் நாமத்தை குறவஞ்சி**
**கேதாரவல்லிக்குக் கூறுதல்**
**தெம்மாங்கு**

**ராகம்: செஞ்சுருட்டிதாளம்: ஆதி**

மாதோட்டநன்னகரில் தேரோடும் வீதியிலே
மாதேநீ மாதருடன் மலர்ப்பந்தாடும் வேளையிலே
தென்னன்னா தானேனன்னே தன்னன்னா

பாலாவிக் கரையினிலே கேதீஸ்வரநாதர்
பாலேறும் விடைதனிலே பவனிவரும் நேரத்திலே
தன்னன்னா தானேனன்னே தன்னன்னா

சுந்தரனைக் கண்டு நீயும் சொக்கிவிட்டாய் அவனழகில்
பந்தெறியு மாடலெல்லாம் பாவையே நீ மறந்தாய்!
தன்னன்னா தானேனன்னே தன்னன்னா

அவ்விதம் அவன் எழிலில் ஆரணங்கேநீ மயங்க!
கொவ்வைச் செவ்வாயவிழ குமிழ்சிரிப்பை யரும்பவிட்டான்!
தன்னன்னா தானேனன்னே தன்னன்னா

அண்ணலும் உன்னை நோக்க அவனை நீயும் கண்டுநாண
கண்களும் ஒன்றையொன்று கவ்வியநன் நேரமுதல்
தன்னன்னா தானேனன்னே தன்னன்னா

கன்னிகே தாரவல்லி காதல் கொண்டாய் உந்தலைவன்
மன்னிடும் நாமம் திருக் கேதீஸ்வரநாதன் கண்டாய்
தன்னன்னா தானேனன்னே தன்னன்னா

**திருக்கேதீஸ்வரன் திருநாமத்தைக் கேட்ட**
**கேதாரவல்லி நாணித்தலை குனிதல்**
**விருத்தம்**

**ராகம் : ஹம்ஸாநந்தி**

திருக்கேதீஸ் வரநாதர் திருநாமத்தை
திருக்கேதீஸ் வரக்குறத்தி செப்பும்வேளை

விருப்போடு கேதார வல்லி கேட்டு
விபரிக்க வொண்ணாத நாணம் கொண்டு

திருப்பாத பெரு விரலும் நிலத்தைக் கீறி
திருநயன விழிகளிலே ஆனந்தத்தால்
பெருக்கான நீர்வழியப் புளக மெய்திப்
புதுமலரின் முகம்சிவக்கத் தலைகுனிந்தாள்.

## திருக்கேதீஸ்வரக் குறவஞ்சிக்குக் கேதாரவல்லி பரிசளித்தல்

### விருத்தம்

**ராகம்: நாதநாமக்ரியா**

**தாளம்: கண்டசாபு**

நாதனவன் நாமமதை நவின்குற வஞ்சிக்கு
ஆதரவாய் ஆபரணம் அணிவித்து ஆடைகளும்
காதலுடன் பொன்னள்ளிக் கைசிவக்க வேகொடுத்து
மாதவளாம் கேதார வல்லிமன மகிழ்ந்தனளே.

### விருத்தம்

**ராகம்: மத்யமாவதி**

திருநாமம் திருவுருவம் திருவூர் கேட்டாள்
திருக்கே தீசனிடம் உருகி நின்றாள்
பெருநாம மகிமையினால் பித்தும் கொண்டாள்
பெற்றபிதா அன்னையையும் பிரிந்தே விட்டாள்
உருவான இடத்துள்ள பண்பை யெல்லாம்
உதறினாள் ஒருவனே தெய்வம் என்றாள்
தருநாமம் தான் கெட்டாள் தனைம றந்தாள்
தாடலைப் பட்டாளெம் தலைவி தானே!

**‘சுபமங்களம்’**

**திருக்கேதீச்சரக் குறவஞ்சி நாடகம்**

**முற்றும்.**

உ

சிவமயம்

# திருக்கேதீச்சரம் திருப்பள்ளியெழுச்சி

**சோ.நடராஜன்**

01. செஞ்சுடரோன் குணதிசையில் எழுந்தான்
        சேவல்கள் கூவின செங்கமலங்கள்
    மஞ்சினைநோக்கி மலர்ந்து விரிந்த
        மாதர்கள் மங்கல மாவினை இட்டார்
    அம்சொலினால் வழிபாடிடும் அன்பர்
        அன்புடன்கேதீச் சரந்தனில் வந்தார்
    பஞ்சினை நேர்அடிக் கௌரி மகிழும்
        பண்ணவனே பள்ளி எழுந்தருளாயே.

02. ஆடினர் பாடினர் அரற்றினர் ஒருபால்
        அம்சொலினால் வழிபட்டனர் ஒருபால்
    கூடினர் உன்னடி யார்கள் குழைந்தார்
        குணதிசைக் கதிரவன் தோற்கும் மனத்தார்
    தேடினர் திருவடித் தெள்ளமுதத்தைத்
        தெய்வ மதப்பிடியாமெனுங் கௌரி
    கூடிடு கேதீச் சரமுடையானே
        கொற்றவ நற்பள்ளி எழுந்தருளாயே.

03. உன்னடியோம் பலர் உன்புகழ் பேசி
        உன்னடிமைத் தொழில் ஓம்பிட வந்தோம்
    மின்னிடை யாள்கௌரிப் பெருமாட்டி
        மேவிடப் பள்ளியில் நீமலர்ந்திடவோ
    பொன்னடி தொழுதுநின் பூசனை புரியப்
        புண்ணிய கேதீச் சரந்தனைக் கண்டோம்
    தன்னடியார் மனக்கோயிலைக் கண்ட
        தற்பரனே பள்ளி எழுந்தருளாயே.

**வேறு**

04. திங்களணி வெண்கொற்றக் குடையாய் உந்தன்
திருப்புகழை வழி அடியார் பரவி நின்றோம்
துங்கமத கரிஉரியாய்தூவெண் ணீற்றாய்
தூயதிருக்கேதீச்சரத்துத் தோன்றும் மன்னா
சங்குடையோன் சந்தனத்தோன் தேட நின்றாய்
சாசுவதம் அடியார்கள் வந்து நின்றோம்
பங்குடையாள் கௌரிதிருப் பாகத்தானே
பண்ணவனேதிருப்பள்ளி எழுந்திடாயே.

05. தூயதிருமறைநாத ஒலியாய் நிற்கும்
துய்யதிருக் கைலையை நல் இடமாய்க் கொண்டாய்
ஆயபுகழ் அம்பலத்தை ஆடக் கொண்டாய்
அழகுதிருக் கேதீச்சரத்துள் அமரும் மன்னா
சேயர்உனை வழிபடவே வந்து நின்றோம்
செயல் அறியா நிலையில் எமைச் சேய்மை வைத்தாய்
காயம் இனி எடுத்துழலோம் கவலை இல்லேம்
கனகமணித் திருப்பள்ளி எழுவாய் மன்னா.

06. மன்னவனே மாதோட்ட நகருளானே
மாமலரார் எண்மர் எமை மருவி நிற்கச்
சொன்னவனே சுடரொளியே தூயமேனிச்
சுடர்வெண்ணீ றணிந்திலங்கும் சோதியானே
முன்னவனே மும்மலம்நீ றாக்குவானே
முக்கண்ணா மூவர்தொழ நின்ற மூர்த்தி
தென்னவனே தெள்ளமுதே தேனே உந்தன்
தெய்வமலர்த் திருப்பள்ளி எழுந்திடாயே.

07. அக்காரம் கூட்டியபால் அருந்தாய் அண்ணா
அறுகொடுபூ மஞ்சன நீர் ஆட்டா நின்றோம்
தொக்கார்கள் தொகை தொகையாய் வந்து நிற்பத்
தூயமலர்ப் பள்ளிமிசைத்துயிலல் நன்றோ
திக்கில் உளார் பதுமப்பாய் கொணர்ந்தார் நன்றோ
தீயவினை அகல எமைப் பாராய் ஐயா
மிக்கார்வம் உடைக்கௌரி தாலாட்டிட்டாள்
மேன்மைபெறு திருப்பள்ளி எழுந்திடாயே.

08. கோடான கோடி சென்மம் எடுத்த பேரும்
கொடியவினைப் போகத்தி லுழலுவோரும்
வீடான பெருஞ்செல்வம் வேண்டுவோரும்
வித்தகராய்ப் பக்தர்களாய் விளங்குவோரும்
கூடான அம்மைதிருப் பாகா என்று
கும்பிட்டே நின்றிடுவேம் மாதோட்டத்தில்
நீடான மலரமளித் துயில்கை நன்றோ
நின்மலனே திருப்பள்ளி எழுந்திடாயே.

09. துங்கமணி மத்தமுடன் என்புபூண்டாய்
தூயதலை ஒட்டினுடன் கந்தை பூண்டாய்
திங்களுடன் கங்கையையும் தலையிற் பூண்டாய்
திகழ் அரவம் அரைக்கசைத்த செல்வா நீயும்
பங்குடையாள் வெண்முத்துக் குடையும் பூண்டாள்
பார்முதலாம் அண்டங்கள் படைத்தாள் மன்னா
சங்குசெறி கடல்புடைசூழ் மாதோட்டத்தாய்
சங்கரனே திருப்பள்ளி எழுவாய் மன்னா.

10. பண்ணார்ந்த பசுந்தமிழாற் பாடுவோர்க்கும்
பரவுதிருக் கேதீச்சரத்தே பணிசெய்வோர்க்கும்
எண்ணார்ந்த எழுத்தறியா இசையால் உன்னை
இரவுபக லாய்த்துதித்து வழிபட்டோர்க்கும்
கண்ணார்ந்த கதிர்ஒளிகள் செல்லாநின்ற
கனைகடல்சூழ் மாதோட்டம் கருதுவோர்க்கும்
விண்ணார்ந்த பதம் முதலாம் வீடும் ஈவாய்
வித்தகனே நற்பள்ளி எழுந்திடாயே.

**வெண்பா**

பள்ளி எழுச்சி திருத்தாண்டகப் பாடல் இவை
தெள்ளுதமிழ் ஒழுகச் செப்பினான் - உள்ளுருகி
நாகலிங்கப் புலவோன் நாகேச்சரம் மேவும்
நாகலிங்கேச் சுரனை நன்கு.

# திருக்கேதீச்சர நாதர் தோத்திரம்

சோ.நடராஜன்

**இராகம் சுருட்டி ஆதி தாளம்**

**பல்லவி**

சித்தம் தெளியத் திருக்கே தீஸ்வரம்
சேவித்திடு மனமே - சித்தம்

**அநுபல்லவி**

பக்தி பண்ணி முன்னர் சுந்தரர் செந்தமிழ்
பாடித் துதித்த தலம் - சித்தம்

**சரணம்**

ஈழத் திருமணி மண்டலத்தே முன்னாள்
எண்டிசை நாட்டவரும்
வாழத் தவஞ்செய்து வந்து பணிபுரி
மாந்தைத் துறை யருகே - சித்தம்
வண்டுகள் பாட மயிலின மாட
வரிக்குயில் பண்பாட
தொண்டர் குழாம்மறை யோதிப் பணிந்திடத்
துன்பங்கள் தீர்க்குந் தலம் - சித்தம்

*ஆத்ம ஜோதி, சோதி 1-சுடர்8.*

# திருக்கேதீஸ்வர கௌரி அம்மை தோத்திரம்

**க. இராமச்சந்திரன்**

**ஆரபி இராகம்** **ஆதி தாளம்**

**பல்லவி**

கௌரியை மறவாதீர் - உங்கள்
கடமையில் தவறாதீர்-கேதீஸ்வரக்

**அநுபல்லவி**

மௌன முடனே யன்று மணாள னுடன் கூடி
மாதோட்ட நக ரோடு மறைந்து ஒடுங்கி நின்ற (கௌரி)

**சாணம்**

அண்ணா மலையி லென்றும், உண்ணா முலையாய் நிற்பாள்
அம்பலத் தாடல் காண, அம்மை சிவகாமியாகும் (கௌரி)

ஆலவாய்ப் பதி தனில், அங்கயற் கண்ணி யாவாள்
சீலமுடன் சேவிப் போரைச், சிவகதி சேர வைக்கும் (கௌரி)

காஞ்சிமா க்ஷேத் திரத்தில், காமாட்சி யம்மை யாவாள்
வாஞ்சையுடன் வந்திப் போர்க்கு, வரமருள் தேவி யாகும் (கௌரி)

குற்றாலத் தலந் தனில், குழல்வாய் மொழி யுமையாய்
உற்றார் பெற்றா ரில்லார்க், குறு துணை தானே யாகும். (கௌரி)

*ஆத்ம ஜோதி, சோதி1-சுடர்8.*

# திருக்கேதீச்சரத் தோத்திரம்

**க. இராமச்சந்திரன்**

மூவர்க்கும் மேலான முதல்வன் கண்டீர்
    முன்னின்று வழிகாட்டும் மூர்த்தி கண்டீர்
நாவலர் முன்நினைவூட்டும் நம்பன் கண்டீர்
    நானற்றார் உளம்பிரியா நாதன் கண்டீர்
பாவங்கள்தீர்த் தெம்மை பவித்ர ராக்கும்
    பாலாவிக் கரையமர்ந்த பரமன் கண்டீர்
தேவர்க்கும் தெரிவரிய தெய்வம் கண்டீர்
    திருக்கேதீச் சரத்துறையும் தேவன் தானே. 1

சுந்தரரின் பாடல்மகிழ் சுயம்பு லிங்கம்
    சுழியலுக்கு வழிகாட்டும் சோதி லிங்கம்
கந்தருவர் கின்னரரும் போற்றும் லிங்கம்
    கௌரியிட மாகாளிர் காட்சி லிங்கம்
மந்திரமும் தந்திரமும் ஆன லிங்கம்
    மாதோட்டந் தனில்அமர் மாணிக்க லிங்கம்
பந்தமறுத்(து) அடியரையாள் பழைய லிங்கம்
    பரமலிங்கம் தனைத்தொழுதால பாவம் போமே. 2

வேதமுடன் ஆகமமும் ஆனாய் போற்றி
    வேதாந்த சித்தாந்த பொருளே போற்றி
சூதமுனி புகழ்ந்துரைத்த சிவனே போற்றி
    துவட்டாவின் கலிதீர்த்த தூயனே போற்றி
கேதுவந்து பூசித்த கோவே போற்றி
    கேட்டவரம் ஈந்தருளும் கையா போற்றி
மாதொருபா கத்தமாந்த மணாளா போற்றி
    மாதோட்ட மாமணியே போற்றி போற்றி. 3

பொங்குகடல் சூழிலங்கைப் புனிதா போற்றி
புண்ணியர்தம் கண்ணின் மணியே போற்றி
சிங்கமன்னரும் பணிசெய் சிவனே போற்றி
சிரிப்பாலே திரிபுரத்தை செற்றாய் போற்றி
வங்கமுறை மாதோட்ட மருந்தே போற்றி
வடஈழ மக்களது வாழ்வே போற்றி
தெங்குநிறை சோலைமகிழ் தேவே போற்றி
திருக்கேதீச் சரத்தானே போற்றி போற்றி. 4

முந்தி உலகம் படைத்தாய் போற்றி
மூவர் முதலாய மூர்த்தி போற்றி
அந்தரமும் அலைகடலும் ஆனாய் போற்றி
ஆருயிர்கட் காருயிரே யாவாய் போற்றி
எந்தை பெருமான் எம்ஈசா போற்றி
ஏத்துவார் இன்னல் களைவாய் போற்றி
பந்தமாப் பறிக்குமகா லிங்கா போற்றி
பாலாவித் தீர்த்தனே போற்றி போற்றி. 5

*திருக்கேதீச்சர திருத்தல வரலாறும் தேவார, திருப்பதிகங்களும்.*
*திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபை. 1990*



ISBN 978-624-6211-03-5